TNSDA
11455

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்

2

மக்கள் வெளியீடு

5.2

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்

பதிப்பாசிரியர்கள் மே. து. ராசுகுமார் – ரா. வசந்தா

சேரன் செங்குட்டுவன்

துளு நாட்டு வரலாறு

கொங்கு நாட்டு வரலாறு

தொகுதி – 2

மக்கள் வெளியீடு

பதிப்பாசிரியர்கள்

மே.து. ராசு குமார் – ரா வசந்தா

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்

தொகுதி - 2

11455
MADRAS
894.8114
N71B1

விலை ரூ. 120/-

மக்கள் வெளியீடு 77
முதற்பதிப்பு ஆகஸ்டு 2003

கோப்பு
ஓவியா ஒளி அச்சு
திருவல்லிக்கேணி சென்னை 600 005
தொலைபேசி 28447207

அச்சு
தேவா ஆப்செட் சென்னை 600 005

நூலமைப்பு
மக்கள் அச்சகம் சென்னை 600 002

மக்கள் வெளியீடு

49 உனிசு அலி சாகிப் தெரு எல்லிசு சாலை சென்னை 600 002
மின்அஞ்சல் makkalveliyeedu@yahoo.com
தொலைபேசி அலு. 28545532 இல் 28475561

உள்ளடக்கம்

தொகுதி 2

பதிப்புரை 7

சேரன் செங்குட்டுவன்

1 சங்க காலச் சூழ்நிலை 15
2 சங்க காலத்துச் சேர அரசர் 18
3 சேரன் செங்குட்டுவன் 37
4 செங்குட்டுவன் ஆட்சி 54
5 செங்குட்டுவன் வாழ்க்கை 58
6 செங்குட்டுவன் காலம் 60
7 இமயவரம்பன் – வானவரம்பன் 101
8 இரு பெருங் காவியங்கள் 107
9 இலக்கிய நூல்கள் 131
10 வஞ்சி மாநகரம் (கருவூர்) 132
பிற்சேர்க்கை
மோரியர் மோகூருக்கு வந்தனரா? 135

துளுநாட்டு வரலாறு

(கி.பி. 2ஆம் நூற்றாண்டு)

அணிந்துரை 141
முன்னுரை 143
1 துளு நாடு 145
2 நன்னர் வரலாறு 157
3 நன்னர் காலம் 174
4 நன்னரைப் பற்றிய செய்யுட்கள் 179
5 துளு மொழியும் தமிழ் மொழியும் 182

6 இணைப்பு
I சத்திய புத்திர நாடு 191
II பரசுராமன் கதை 192
III மோகூரும் மோரியரும் 194
IV ஆய் எயினன் 201
V கடம்பும் கடம்பரும் 204

கொங்கு நாட்டு வரலாறு

(பழங்காலம் – கி.பி. 250 வரையில்)

முன்னுரை 211
1 கொங்குநாடு 219
2 கொங்கு நாட்டுக் குறுநில மன்னர்கள் 245
3 கொங்கு நாட்டில் சேரர் ஆட்சி 261
4 இணைப்பு : செங்கட் சோழன் கணைக்கால் இரும்பொறை காலம் 303
5 வேறு கொங்குச் சேரர் 307
6 இரும்பொறை அரசர்களின் கால நிர்ணயம் 311
7 இரும்பொறை அரசரின் ஆட்சி முறை 315
8 கொங்கு நாட்டுச் சமயநிலை 317
9 பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிகம் 322
10 அயல்நாட்டு வாணிகம் 325
11 கொங்கு நாட்டுப் புலவர்கள் 336
12 கொங்கு நாட்டுச் சங்க நூல்கள் 352
13 சங்க காலத்துத் தமிழெழுத்து 357
14 கொங்கு நாட்டுப் பிராமி எழுத்துச் சாசனங்கள் 360

பதிப்புரை

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள் நிரலில் இந்நூல் இரண்டாவதாகும்.

மயிலையாரின் ஆய்வுக் கட்டுரைகளையடுத்து, அவர்தம் நூல்களைத் திரட்டுகளாக வெளியிடும் பணியின் ஒரு பகுதியாக இத்தொகுப்பு அமைகின்றது. *மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்* பதினொன்று அல்லது பன்னிரண்டு தொகுதிகளில் அமையலாம்.

மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் கட்டுரைகள் ஆறு தொகுதிகளாக ஏற்கனவே வெளிவந்துவிட்டன. மயிலையாரின் தனிக்கட்டுரைகள் யாவும் கிடைத்தவரை இத்தொகுப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், 2002இல் ஐந்து, ஆறாம் தொகுதிகள் வெளியான பின்னரும்கூட, பத்துக்கும் மேற்பட்ட புதிய கட்டுரைகள்—தொகுதிகளில் இடம் பெறாத கட்டுரைகள் குறித்த விவரங்கள் கிடைத்திருக்கின்றன. சில கட்டுரைகள் வெளியான இதழ்களின் விவரங்கள் கிடைத்திருந்தும் அவற்றின் படிகள் இன்னும் கைகளுக்கு வந்து சேரவில்லை. இவை யாவும் கிடைக்கப் பெற்றவுடன் ஆறாம் தொகுதியின் பகுதியாகச் சேர்க்குமாறு இவை வெளியிடப் பெறும்.

ஆனால், இதுபோன்ற நிலை மயிலையாரின் நூல்களுக்கு ஏற்படாது. மயிலையாரின் நூல்களது பெயர்கள் அனைவருக்கும் தெரிந்திருப்பதாலும் நூல்களின் படிகள் பெரும்பாலும் கிடைத்திருப்பதாலும் இவற்றை முழுமையாகப் பதிப்பிப்பதில் சிக்கல்களோ, இடையூறுகளோ, தடைகளோ ஏற்பட வாய்ப்பில்லை.

தமிழ்நாட்டு வரலாறு: சங்ககாலம் - அரசியல் (முதல் தொகுதி) நூலினையடுத்து, மயிலையாரின் *சேரன் செங்குட்டுவன், துளு நாட்டு வரலாறு, கொங்கு நாட்டு வரலாறு* ஆகிய நூல்கள் கால நிரலின் அடிப்படையில் இரண்டாம் தொகுதியாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றையடுத்து கால நிரலின் வகையால் *சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்), களப்பிரர் ஆட்சியில் தமிழகம்* ஆகிய மூன்று நூல்கள் மூன்றாம் தொகுதியாக அமையும்.

இதனையடுத்து, பல்லவர் காலம் தொடர்பான *மகேந்திரவர்மன், வாதாபி கொண்ட நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்* ஆகிய நூல்கள் நான்காம் தொகுதியாக அமையும்.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள *சேரன் செங்குட்டுவன்* நீண்ட கட்டுரையாக எழுதப்பெற்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பிலான *கீழ்த்திசை ஆய்வு அடங்கல் (Annals of Oriental Research)* எனும் இதழில் (தொகுதி 21, பகுதி 1) 1966ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. சென்னைப் பல்கலைக்கழக ஒழுகலாறுகளுக்கேற்ப இதழில் வெளியிடப்பெற்ற இந்தக் கட்டுரைப் பகுதி, தனி நூலாகவும் அமைக்கப்பெற்று விற்பனை செய்யப்பட்டது. பல்கலைக்கழக இதழ் வெளியீடாக வெளியிடப்பெற்ற நூலாக அன்றி, வேறு வகையில் *சேரன் செங்குட்டுவன்* நூல் வடிவம் பெறவில்லை. மயிலையார் தமது வாழ்நாளிலேயே இதனைப் பதிப்பு முறையிலான தனி நூலாக வெளியிடப் பெரிதும் விழைவுகொண்டிருந்தார். ஆனால், அந்த விழைவு அப்போது நிறைவுபெறும் சூழ்நிலை ஏற்படாமலேயே போய்விட்டது.

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக இந்நூல் வந்திருப்பினும் பெரும்பாலான ஆய்வாளர்களுக்கு எட்டாமல் போய்விட்டது என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை. அனைவருக்கும் எட்டக்கூடிய ஒரு ரூபாய் விலையில் இந்நூல் கிடைக்கும் வாய்ப்பிருந்தும் பரவலாக அறியப்படாமல் போய்விட்டது. இதற்கு ஒரு காரணி, பல்கலைக்கழக வெளியீடுகள் அக்காலகட்டத்தில் பொது நூலகங்களிலோ, கல்வி நிறுவன நூலகங்களிலோ இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் இல்லாமல் இருந்ததேயாகும். மயிலையாரின் படைப்புக்களுக்கான காப்புரிமை நீக்கப்பட்ட பிறகும்கூட, இந்நூலினை எவரும் முழுமையாக அச்சேற்றவில்லை. அந்த வகையில் *சேரன் செங்குட்டுவன்* இப்பொழுதுதான் முழு வடிவில் மறுஅச்சுப் பெறுகிறது என்று கூறலாம்.

துளு நாட்டு வரலாறு என்று மேல் அட்டையிலும் *துளு நாட்டு வரலாறு (சங்க காலம்)* என்று முதல் தலைப்புப் பக்கத்திலும் குறிக்கப்பெற்ற இந்நூல் சாந்தி நூலகம் சார்பாக 1966 பிப்ரவரியில் வெளிவந்தது. அக்காலகட்டத்தில் மயிலையாரின் நூல்களை சாந்தி நூலகத்தினேரே வெளியிட்டு வந்தார்கள். மயிலையாரின் வாழ்நாளில் இந்நூல் மறுஅச்சு ஏதும் செய்யப்பெறவில்லை. இறுதியில் சிறப்புப் பெயர் அகராதியினை இந்நூல் உள்ளடக்கியிருந்தது.

கொங்கு நாட்டு வரலாறு என்று மேல் அட்டையிலும் *கொங்குநாட்டு வரலாறு (பழங்காலம்—கி.பி. 2ஆம் நூற்றாண்டு)*

என்று முதல் தலைப்புப் பக்கத்திலும் குறிக்கப்பட்ட இந்நூல் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தாரால் 1974 செப்டம்பரில் முதலில் வெளியிடப்பட்டது. மயிலையார் வாழ்நாளில் இந்நூல் மறுஅச்சுப் பெறவில்லை . நூலின் இறுதியில் பொருளகராதி இடம் பெற்றிருந்தது.

இந்த மூன்று நூல்களுமே மயிலையார் உயிர்வாழ்ந்திருந்த காலத்திலேயே அங்காடியில் கிடைக்கப் பெறாதனவாக இருந்தன. குறிப்பாக, *சேரன் செங்குட்டுவன், துளு நாட்டு வரலாறு* ஆகிய நூல்கள் அவை வெளிவந்த ஒரு சில ஆண்டுகளிலேயே அங்காடியில் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், இந்த நூல்கள் மறுஅச்சு செய்யப்படாமலேயே இருந்தன. மயிலையாரின் நூல்கள் பலவற்றைப்போலவே இந்த நூல்களையும் மறுஅச்சு செய்வதில் ஏன் முனைப்புக் காட்டப்படவில்லை என்பது ஒரு தனித்த ஆய்வுக்குரியதாக அமையலாம். மயிலையாரின் வாழ்க்கையை அவர்தம் ஆய்வுப்பணிகளோடு இணைத்து எழுதும்போது இத்தகைய விவரங்கள் வெளிப்படலாம்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகுதியாகப் பார்க்கப்படாத அல்லது புறக்கணிக்கப்பட்ட பகுதிகள் குறித்த ஆய்வுகளில் மயிலையார் தனி ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை இம்மூன்று நூல்களும் உறுதிப்படுத்துகின்றன.

சேரநாடு, கொங்குநாடு, துளுநாடு ஆகிய பகுதிகள் அடுத்தடுத்து இருந்த நிலையில், ஒரு சில விவரங்கள் இம்மூன்று நூல்களிலும் திரும்பத்திரும்ப விவரிக்கப்படுவதனைப் பார்க்கலாம். இந்த மூன்று நூல்களும் வெவ்வேறு காலகட்டங்களிலும் தனித்தனியாக எழுதப்பெற்றவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தமிழ்நாட்டு வரலாறு என்ற வகையில், சில தவறான கருத்துரைகள் முன் மொழியப்பட்டு, அவையே உண்மையானவை என்று எடுத்துக்கொள்ளப்படக்கூடிய நிலை இருந்தது. இந்தக் கருத்துரைகளைச் சான்றுகளுடன் மறுத்துரைக்கவேண்டிய பொறுப்பினை மயிலையாரும் ஏற்றுக்கொண்டிருந்தார் என்றே கூறவேண்டும். தமது இந்தக் கடமையினை நிறைவேற்றும் வகையில், தமது ஆய்வு முடிவுகளை உரிய இடங்களில் வலியுறுத்துவதற்காக, தொடர்பான செய்திகளைக் கூறுமிடத்து மீண்டும்மீண்டும் அவற்றை விளக்கும் நடைமுறையினை மயிலையார் பின்பற்றி வந்தார்.

இவை கூறியது கூறலாகத் தோன்றினாலும், ஆய்வு முடிவுகளைத் தொடர்பான இடங்களில் வலியுறுத்திக் காட்டும் வகையினதாகவே அமைந்திருக்கின்றன எனலாம்.

ஆனால், அவரது நுண்ணிய ஆய்வினை யாரும் புறக்கணித்துவிட முடியாது. தரவுகளை எடுத்துக்கொண்டு பகுப்பாய்வு செய்வதிலும் தர்க்க முறையில் முடிவுகளை எட்டுவதிலும் அவரது ஆழ்ந்த அறிவு வெளிப்படுதலைப் பல இடங்களில் பார்க்க முடியும்.

எடுத்துக்காட்டாக, மோரியர் படை வருகைக்காக மலைகளில் சாலைகள் அமைக்கப்பட்டது தொடர்பான வரலாற்றுக் குறிப்புகளை அவர்தம் பார்வையில் நுணுகி ஆய்ந்திருப்பது மாறுபட்டதாக இருக்கிறது.

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள் முதல் தொகுதியில் அமைக்கப்பட்டது போன்றே மேற்கோள் குறிப்புகள் படிப்பவருக்கு இயைபாக அமையும் வகையில் அந்தந்த இடங்களிலேயே அடைப்புக் குறிக்குள் தரப்பட்டிருக் கின்றன. மேற்கோள் பகுதியில் தரப்பட்டிருந்த நீண்ட பாடல் வரிகள், நூல் விவரங்களில் சில, பிற விளக்கங்கள் ஆகியன மட்டுமே மேற்கோள் எண் தரப்பெற்று இயல் இறுதியில் நிரல் படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நூலும் தனித்தனியாக எழுதப்பெற்றது என்பதை மனத்தில் கொண்டு, ஒவ்வொரு நூலிலும் இடம்பெற்றிருந்த முகவுரை, அணிந்துரை போன்ற பகுதிகள் யாவும் உரிய இடங்களிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் வெளியீட்டின் பதிப்புக்காக *சேரன் செங்குட்டுவன்* நூலின் படியினைக் கொடுத்துதவிய என் இனிய நண்பரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பண்டைய வரலாறு - தொல்லியல் துறைத் தலைவருமான பேராசிரியர் ப. சண்முகம் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

வழக்கம் போல ஓவியா ஒளிஅச்சு உரிமையாளர் திரு. ஆ. குமார் அவர்களின் பங்களிப்பு குறித்துக் கூறத் தக்கதாகும்.

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள் பணிகளை விரைந்து நிறைவு செய்ய ஊக்கமளித்து வரும் ஒவ்வொரு வருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என் பணிகளின் பகுதியாக இருந்து அனைத்து முயற்சிகளிலும் துணைநிற்கும் மக்கள் வெளியீடு உரிமையாளர் திருமதி ரா. வசந்தா அவர்களது துணையும் தூண்டுதலுமே இப்பணிகள் நிறைவு பெறுவதற்கான வாய்ப்புகளைக் கொடுத்து வருகின்றன.

மே. து. ராசு குமார்

ஆய்வறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் நூல்கள்

1 தமிழ்நாட்டு வரலாறு : சங்க காலம் – அரசியல் (1983)
2 சேரன் செங்குட்டுவன் (1966)
3 துளு நாட்டு வரலாறு (1966)
4 கொங்குநாட்டு வரலாறு (1974)
5 சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் (1970)
6 பழங்காலத் தமிழர் வாணிகம் (1974)
7 களப்பிரர் ஆட்சியில் தமிழகம் (1976)
8 மகேந்திரவர்மன் (1955)
9 வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் (1957)
10 மூன்றாம் நந்திவர்மன் (1958)
11 சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள் (1981)
12 சாசனச் செய்யுள் மஞ்சரி (1959)
13 மகாபலிபுரத்து ஜைன சிற்பம் (1950)
14 தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் (1956)
15 இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம் (1948)
16 நுண்கலைகள் (1967)
17 பௌத்தமும் தமிழும் (1940)
18 சமணமும் தமிழும் (1954)
19 கிறித்தவமும் தமிழும் (1936)
20 பௌத்தக் கதைகள் (1952)
21 புத்தர் ஜாதகக் கதைகள் (1960)
22 இசைவாணர் கதைகள் (1977)
23 மறைந்து போன தமிழ் நூல்கள் (1959)
24 பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (1962)
25 கௌதம புத்தர் (1956)
26 உணவு நூல் (1965)
27 மனோன்மணியம் (பதிப்பு–1961)

(முடிந்த அளவு பொருள் அடிப்படையிலும் பொருளின் கால அமைவிலும் நிரல்படுத்தப்பட்டுள்ளன)

CERAN SENGUTTAVAN

BY

MAYILAI SEENI VENKATASAMY

Reprinted from the Annals of Oriental Research of the University of Madras Volume XXI Part I, 1965.

சேரன் செங்குட்டுவன்

1. சங்க காலச் சூழ்நிலை

சேரன் செங்குட்டுவனுடைய வரலாற்றை ஆராய்கிறபோது அவ்வரசன் வாழ்ந்திருந்த கால நிலை, சூழ்நிலை முதலியவை களை அறிய வேண்டியது அவசியமாகும். செங்குட்டுவனுடைய வரலாற்றுக் குறிப்புகள் சங்க நூல்களிலேதான் காணப்படு கின்றன. ஆகவே, அவன் சங்க காலத்தில் — கடைச் சங்க காலத்தில் — வாழ்ந்திருந்தான் என்பது தெரிகின்றது. அவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்தான். அக் காலத்து அரசியல் சூழ்நிலை சங்க நூல்களிலிருந்து தெரிகின்றது.

அக்காலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர் ஆட்சி செய்திருந்தார்கள். அக்காலத்தில் சேரநாடு தமிழ் நாடாக இருந்தது. மூவேந்தருக்குக் கீழடங்கி, குறுநில மன்னர்களாகிய சிற்றரசர்கள் பலர் இருந்தனர். அவர்களுக்கு அக்காலத்தில் வேளிர் அல்லது வேளரசர் என்பது பெயர். அக்காலத்தில் தமிழகம் சோழ நாடு, பாண்டி நாடு, சேர நாடு, துளு நாடு (கொங்கண நாடு), தொண்டை நாடு (அருவா நாடு), கொங்கு நாடு என்று ஆறு பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. சேர சோழ பாண்டி நாடுகளை முடியுடைய பேரரசர் மூவர் அரசாண் டனர். கொங்காண நாடாகிய துளு நாட்டை நன்னர் என்னும் பெயருடைய வேளிர் அரசாண்டனர். கொங்கு நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் பேரரசர் (முடிமன்னர்) அக்காலத்தில் இல்லை. கொங்கு நாட்டையும் தொண்டை நாட்டையும் குறு நில மன்னர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். கடைச் சங்க காலத்தின் இறுதியில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டின் மத்தியில்) மாறுதல் ஏற்பட்டது.

சோழன் கரிகால் வளவன் தொண்டை நாட்டைக் கைப்பற்றி அதைச் சோழ இராச்சியத்துடன் இணைத்துச் சேர்த் துக் கொண்டான். சேரன் செங்குட்டுவனுடைய தகப்பனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் கொங்கு நாட்டின் தெற்குப் பகுதிகள் சில சேர இராச்சியத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. செங்குட்டுவனின் தமயனான களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் காலத்தில் கொங்கண நாடாகிய துளு நாடு சேரர் ஆட்சியின் கீழடங்கியது. சேர அரசர்கள் கொங்கு நாட்டைச் சிறிதுசிறிதாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தபோது, சோழ பாண்டியர் வாளாவிருக்கவில்லை. சோழரும் பாண்டி

யரும் கொங்கு நாட்டைத் தாங்களும் பிடித்துக் கொள்ள முயற்சி செய்தார்கள். அதனால் சேர சோழ பாண்டியர்களுக்கு அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன.

சங்க இலக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறபோது சோழ அரசர்களைப் பற்றி ஒரு செய்தி தெரிகிறது. சோழ மன்னர் பரம் பரையில் ஒன்பது தாயாதிகள் இருந்தனர். அவர்கள் முடி மன்ன னாகிய பெரிய சோழ அரசனுக்குக் கீழடங்கிச் சிற்சில நாடு களையரசாண்டனர். ஆனால், அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். சோழ குலத்து அரசர் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டதைச் சங்க நூல்களில் காண்கிறோம். தாயாதிகள், சமயம் நேர்ந்தபோதெல்லாம், முடியரசனுடன் போர் செய்து கலகம் உண்டாக்கினார்கள். கரிகாற் சோழன் அரசு கட்டில் ஏறினபோது ஒன்பது தாயாதிகள் அவனுக்கு எதிராகக் கலகஞ் செய்து போரிட்டார்கள். அவர் களையெல்லாம் அவன் வென்று அடக்கிய பிறகு முடி சூடினான். கரிகாற் சோழன் இறந்த பிறகு அவன் மகனான கிள்ளி வளவன் சிம்மாசனம் ஏறியபோதும் ஒன்பது தாயாதிகள் கலகஞ் செய்து போரிட்டார்கள். அப்போது, செங்குட்டுவன், சோழரின் உள் நாட்டுப் போரில் தலையிட்டுப் போர் செய்து தன் மைத்துன னான கிள்ளிவளவனைச் சிம்மாசனம் ஏற்றினான். தாயாதிப் போர் ஒருபுறமிருக்க, சோழ, அரசர்களில் அண்ணன் தம்பிகளும் சில வேளைகளில் ஒருவருக்கொருவர் போர் செய்தனர். தகப்பனும் மகனுங்கூடத் தங்களுக்குள் போர் செய்து கொண்டதைச் சங்க இலக்கியங்களில் பார்க்கிறோம்.

ஆனால், சோழர்களுக்கு நேர்மாறாகச் சேர அரசர் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்தனர். சேர அரசர்களில் தாயாதி அரசர்கள்கூடச் சண்டையிட்டுக் கொள்ளவில்லை. சேர அரசர் தங்களுக்குள் போர் செய்துகொண்டதைச் சங்க நூல்களில் காணக்கிடைக்கவில்லை. சேர அரசர் ஒற்றுமையாக இருந்த காரணத்தினால்தான் கொங்கு நாட்டையும் துளு நாட்டையும் கைப்பற்ற முடிந்தது.

சோழர் குடியில் ஒன்பது தாயாதிகள் இருந்ததையும் அவர்கள் சோழ நாட்டின் பகுதிகளை (ஒரே சமயத்தில்) முடிபுனைந்த அரசனுக்கு அடங்கி ஆட்சி செய்ததையும் கூறினோம். அதுபோலவே, சேர அரசர் பரம்பரையில் மூத்த வழியரசர், இளையவழி அரசர் என்று இரு தாயாதிகள் இருந்தனர். இவர்களும் ஒரே காலத்தில் சேர இராச்சியத்தின் வெவ்வேறு பகுதிகளையரசாண்டார்கள். பாண்டியர்களில் மதுரைப் பாண்டியனும் கொற்கைப் பாண்டியனும் என்று இரண்டு அரசர்கள் ஒரே காலத்தில் அரசாண்டதைச் சங்க

நூல்களில் பார்க்கிறோம். பாண்டிய இளவரசன் கொற்கையில் இருந்தான். ஆனால், அவர்களில் ஐந்து கிளையினர் இருந்தனர் என்றும் அவர்கள் வெவ்வேறு இடங்களை அரசாண்டனர் என்றும் அறிகிறோம். அதனால்தான் பாண்டியருக்குப் பஞ்சவர் என்ற பெயரும் இருந்தது.

சங்க காலத்தில் வீரர்களுக்குப் பெருமதிப்பு இருந்தது. வீரச் செயல்கள் புகழ்ந்து போற்றப்பட்டன. வீரர்களின் வீரச் செயல் களைப் புலவர்கள் புகழ்ந்து பாடினார்கள். போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் அமைத்துப் போற்றினார்கள். போரும் வீரமும் ஒரு கலையாகவே மதிக்கப்பட்டன. போர்ச் செயலைப் பற்றி இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் தோன்றின. புறப் பொருள் இலக்கியங்கள் பெரிதும் போர்ச் செயலைப் பற்றியே கூறுகின்றன. சங்க காலத்தில் வாழ்க்கையின் குறிக் கோள், காதலும் போருமாக (அகமும் புறமும் ஆக) இருந்தது. சங்க காலத் தமிழகம் வீரர்களைப் போற்றியது; வீரத்துக்கு வந்த னையும் வழிபாடும் செய்தது. வெற்றிக்கும் வீரத்துக்கும் கடவுளாகக் கொற்றவைத் தெய்வம் வழிபடப்பட்டது.

சங்க காலத்தில் போர்க்களஞ் செல்லாத அரசர்கள் வீரர்களாக மதிக்கப்படவில்லை. ஆகவே, அரசர்கள் ஏதோ கார ணத்தை முன்னிட்டுப் போர் செய்துகொண்டிருந்தார்கள். சங்க இலக்கியத்தில் போர்ச் செயல்கள் அதிகமாகக் காணப்படுவதற் குக் காரணம் இந்தச் சூழ்நிலைதான். போரில் விழுப்புண்பட்ட வன் போற்றிப் புகழப்பட்டான். முதுகில் புறப்புண் படுவது இகழ்ச்சிக் குரியதாக இருந்தது. தப்பித் தவறிப் போர்க்களத் திலே முதுகில் புறப்புண்பட்டால், புண்பட்டவர்கள் பட்டினி கிடந்து உயிர்விட்டார்கள்.

அரசனுடைய படை வீரர்கள் எல்லைப் புறங்களிலே சென்று, அயல்நாட்டு எல்லைப்புற ஊர்களிலிருந்து ஆடு மாடுகளைப் பிடித்துக் கொண்டு போனார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து வந்து மாற்றரசரின் வீரர்கள் போர் செய்து ஆடு மாடுகளை மீட்டுக் கொண்டு போனார்கள். இவ்விதமாக நிகழ்ந்த போரிலே இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வீரத்தைப் போற்றினார்கள்.

தம் வாழ்க்கைக் காலத்தில் போரிடாமல், போர்க்களத்தைப் பார்க்காமல், இறந்துபோன அரசர்களைத் தருப்பைப் புல்லின் மேல் கிடத்தி அவர்களின் மார்பை வாளினால் வெட்டிப் புண் உண்டாக்கிப் பிறகு அடக்கம் செய்தனர். இந்த வழக்கம் சங்க காலத் தமிழகத்தில் இருந்ததைக் கூலவாணிகன் சாத்தனாரும் ஔவையாரும் கூறுகின்றனர். உதயகுமரன் என்னும் சோழ அரசகுமரன் இறந்தபோது, அவன் தாயாகிய இராசமாதேவி

துன்பப்பட்டதை யறிந்து வாசந்தவ்வை என்னும் முதியாள் அரசியிடஞ் சென்று ஆறுதல் கூறினாள். அப்போது அவ்வம்மையார்,

தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து
செருப்புகல் மன்னர் செல்வுழிச் செல்கென
மூத்துவிளிதல் இக்குடிப் பிறந்தோர்க்கு
நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்து

என்று கூறியதாக *மணிமேகலை* சிறைவிடுகாதையில் (13-16) கூலவாணிகன் சாத்தனார் இச்செய்தியைக் கூறுகிறார்.

அதிகமான் நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகடூர்க் கோட்டையை எதிர்த்தப் பகையரசருடன் போர் செய்து விழுப்புண்பட்டு நின்றான். அப்போது அவனுடைய வீரத்தைப் புகழ்ந்து பாடின ஔவையார், புண்படாமல் இறக்கும் அரசர் வாளினால் வெட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டதைக் கூறுகிறார்.

அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ

(*புறம்* 93 : 7-11)

என்று ஔவையார் கூறுகிறார்.

இவ்விதமாக வீரவழிபாடு போற்றப்பட்ட காலத்தில் இருந்த கண்ணகியார், தன் கணவன் கோவலனுக்கு அநீதி செய்த பாண்டியனை அவைக்களத்தில் வழக்காடி வென்று, பாண்டியன் அரண்மனையைத் தீப்பற்றி எரியச் செய்து, பிறகு உண்ணாநோன்பிருந்து உயிர்விட்ட மறக்கற்பைப் போற்றித் தான் அவருக்குப் பத்தினிக் கோட்டம் அமைக்கப்பட்டது.

பண்டைக் காலத்தில் காதலும் வீரமும் போற்றப்பட்டதைச் சரித்திரத்தில் காண்கிறோம். அந்த முறையிலே சங்க காலத் தமிழகத்திலும் காதலும் வீரமும் (அகமும் புறமும்) போற்றப் பட்டன. முக்கியமாக, வீரமும் வெற்றியும் போற்றிப் புகழப்பட் டன. அரசர்களின் வீரத்தைப் புலவர்களும் இசைவாணர்களும் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்த சூழ்நிலை தமிழகத்திலே இருந்த காலத்திலே சேரன் செங்குட்டுவன் வாழ்ந்திருந்தான். அக்காலத்துச் சூழ்நிலை அவனுடைய வாழ்க்கையை உருவாக் கிற்று. அவன் வரலாற்றை இனி ஆராய்வோம்.

2. சங்க காலத்துச் சேர அரசர்

கடைச் சங்க காலத்துச் சேர அரசர்களில் பேரும் புகழும் பெற்றவன் சேரன் செங்குட்டுவன். சங்க காலத்துத் தமிழ்நாட்டு

வரலாற்றில் செங்குட்டுவனுக்கு முக்கியமான இடம் உண்டு. சிறந்த வீரனாகவும் கொடையாளியாகவும் விளங்கியது மட்டும் அல்லாமல் தமிழ்நாட்டில் பத்தினித் தெய்வ வணக்கத்தை இவன் ஏற்படுத்தினான். மேலும், சங்க காலத்துச் சரித்திர ஆண்டு களைக் கணக்கிடுவதற்கு இவனுடைய வரலாறு துணையாக நிற்கிறது. செங்குட்டுவனும் அவனுடைய நண்பனான இலங்கை யரசன் கஜபாகுவும் சமகாலத்து அரசர் என்பதனாலே இவர்கள் காலத்தை ஆதாரமாகக் கொண்டு சங்க காலத்து வரலாற்றுக் காலங்களை கணித்துவிடலாம். சேரன் செங்குட்டுவனும் கஜபாகு அரசனும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இருந்தவர்கள் என்பதைப் பின்னர் விளக்குவோம்.

சேரன் செங்குட்டுவனுடைய வரலாற்றை ஆராய்வதற்கு முன்பு அவனுடைய முன்னோர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், சேரன் செங்குட்டுவன் வீரமும் முயற்சியும் ஆள்வினையும் உடைய பேரரசனாக இருந்தாலும், அவன் தானாகவே உயர் நிலையைப் பெறவில்லை. அவனுடைய பாட்டன், தந்தை, சிற்றப்பன், அண்ணன் தம்பியர் முதலிய சுற்றத்தார்களும் சேர இராச்சியத்தை வளர்த்து மேன்மைப் படுத்தியுள்ளனர். செங்குட்டுவனும் இளமைக் காலத்திலிருந்தே தந்தை, தமயன், தம்பி முதலியவர்களுடன் உடனிருந்து உழைத்துச் சேர இராச்சியத்தை வளர்த்திருக்கிறான். செங்குட் டுவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் சேர நாடு சிறப்புப் பெற்றிருந் ததற்கு இவனுடைய முன்னோரும் காரணமாக இருந்தனர். ஆகவே, செங்குட்டுவன் வரலாற்றைக் கூறும்போது அவனுடைய முன்னோர்களின் வரலாறுகளையும் அறிய வேண்டுவது முறையாகும். சங்க காலத்துச் சேர மன்னர்களின் முறையாக எழுதப்பட்ட வரலாறு கிடையாது. சங்க இலக்கியங்களில் அங் கும் இங்குமாகச் சில வரலாறுகள் சிதறிக் கிடக்கின்றன. *பதிற்றுப்பத்து* என்னும் தொகை நூலில் எட்டுச் சேர அரசர் களின் வரலாறு கிடைக்கிறது. கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு செங்குட்டுவன் வரலாற்றையும் அவனுடைய உறவினர் வரலாற்றையும் ஆராய்ந்து காண்போம்.

பாட்டன் (உதியன் சேரல்)

செங்குட்டுவனுடைய பாட்டன் உதியன்சேரல் என்பவன். உதியன் சேரலின்மேல் பாடப்பட்டது *பதிற்றுப்பத்து* முதலாம் பத்து என்று தெரிகிறது. முதலாம் பத்து இப்போது கிடைக்க வில்லை. ஆகையால் உதியன் சேரலினுடைய முழு வரலாற்றை அறிந்துகொள்ள முடியவில்லை. 'நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல்' என்று இவனை மாமூலனார் என்னும் புலவர் கூறுகிறார்

(*அகம்* 65 : 5; நாடு கண் அகற்றிய நாட்டை விசாலப் படுத்திய). இதனால் இவன். சுற்றுப்புற நாடுகளை வென்று சேர இராச்சி யத்தின் எல்லையை விரிவுபடுத்தினான் என்பது தெரிகிறது.

உதியஞ்சேரலின் அரசியின் பெயர் நல்லினி. நல்லினி, வெளியன் வேண்மான் என்னும் அரசனுடைய மகள். இவர்களுக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். மூத்த மகன் நெடுஞ்சேரலாதன். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்றும் கூறப்படுகிறான் (*பதிற்றுப்பத்து* 2ஆம் பத்து, பதிகம்). இளையமகன் பெயர் குட்டுவன். இவனைப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்று கூறுவர் (*பதிற்றுப்பத்து* 3ஆம் பத்து, பதிகம்).

உதியஞ்சேரலும் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனும் ஒருவரே என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர், இவர்கள் வெவ் வேறு அரசர்கள் என்று கூறுகின்றனர். இந்த ஆராய்ச்சியில் இப் போது நாம் புக வேண்டுவதில்லை.

தாயாதிப் பாட்டன் (அந்துவன்)

சேரன் செங்குட்டுவனுக்குத் தாயாதிப் பாட்டன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அந்துவன் என்று பெயர். சேர அரசர் பரம்பரையில் இளைய கால்வழியில் வந்தவன் அந்துவன். அந்துவனுக்குப் பொறையன் என்றும் பெயர் உண்டு. அவன், 'ஒருதந்தை' என்னும் அரசனின் மகளைத் திருமணஞ் செய்திருந் தான். அவளுக்குப் 'பொறையன் பெருந்தேவி' என்பது பெயர்.

> மடியா உள்ளத்து மாற்றார்ப் பிணித்த
> நெடுநுண் கேள்வி யந்துவற் கொருதந்தை
> ஈன்றமகள், பொறையன் பெருந்தேவி
>
> (*பதிற்றுப்பத்து* 7ஆம் பத்து, பதிகம்)

பழைய உரையாசிரியர் 'ஒருதந்தை' என்பதற்கு இவ்வாறு விளக்கங் கூறுகிறார்: "இதன் பதிகத்து 'ஒருதந்தை' என்றது பொறையன் பெருந்தேவியின் பிதாவுடைய பெயர்" என்று அவர் எழுதுகிறார். அந்துவன் பொறையனுக்கும் பொறையன் பெருந்தேவிக்கும் பிறந்த மகன் செல்வக் கடுங்கோ வாழியாதன் (*பதிற்றுப்பத்து* 7ஆம் பத்து, பதிகம்).

இந்த அந்துவன்பொறையன், 'மடியா உள்ளத்து மாற்றார்ப் பிணித்தவன்' என்று சொல்லப்படுகிறபடியினாலே, பகையர சருடன் போர் செய்து வென்றவன் என்று தெரிகிறான். எனவே, செங்குட்டுவனுடைய பாட்டனான உதியஞ்சேரலும், தாயாதிப் பாட்டனான அந்துவன் பொறையனும் ஒத்துழைத்துச் சேர நாட்டின் எல்லையை விரிவுபடுத்தினார்கள் என்பது தெரிகிறது.

தந்தை (நெடுஞ்சேரலாதன்)

சேரன் செங்குட்டுவனுடைய பாட்டன் உதியஞ் சேரலுக்கு இரண்டு மக்கள் இருந்தனர் என்றும் அவர்கள் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்றும் கூறினோம். பாட்டனான உதியஞ்சேரல் எத்தனை ஆண்டு அரசாண்டான் என்பது தெரியவில்லை. அவன் இறந்த பிறகு மூத்த மகனான நெடுஞ்சேரலாதன் சேர நாட்டையரசாண்டான். இவனுக்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் பெயரும் உண்டு. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்றும் இவனைக் கூறுவர். குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் இவ்வரசன்மீது *பதிற்றுப்பத்து* இரண்டாம் பத்துப் பாடினார். 2ஆம் பத்திலிருந்து, இவ்வரசனைப் பற்றிய சிறப்புக்களையும் செய்திகளையும் அறிந்து கொள்கிறோம்.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் (இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்) இரண்டு மனைவியரை மணஞ் செய்திருந்தான். ஒவ்வொரு மனைவிக்கும் இரண்டிரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். வேள் ஆவிக்கோமான் மகள் பதுமன்தேவி என்னும் மனைவி வயிற்றில் பிறந்தவர் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும் (4ஆம் பத்து, பதிகம்) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் (6ஆம் பத்து, பதிகம்) ஆவர். சோழன் மணக்கிள்ளி மகள் (நற்சோணை) வயிற்றில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனும் (சேரன் செங்குட்டுவனும்) இளங்கோ அடிகளும் பிறந்தனர் (5ஆம் பத்து, பதிகம்; *சிலம்பு*, வரந்தருகாதை 170-183).

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மனைவியர் இருவரில் ஒருத்தி வேள் ஆவிக்கோமான் பதுமன் தேவி என்று அறிந்தோம். அவளுடைய தங்கையை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தாயாதித் தம்பியாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன் மணஞ் செய்திருந்தான். அவளுக்கும் வேளாவிக் கோமான் பதுமன்தேவி என்று பெயர் (8ஆம் பத்து, பதிகம்). எனவே, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவனுடைய தாயாதித் தம்பி செல்வக்கடுங்கோ வாழியாதனும் முறையே தமக்கை தங்கையரைத் திருமணஞ் செய்திருந்தனர் என்பது விளங்குகிறது. செல்வக்கடுங்கோ வாழியாதன் அந்துவன் பொறையனின் மகன் என்பதை முன்னமே கூறினோம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் செய்த போர் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை மூன்று. அவை: மேற்கடல் தீவில் இருந்து குறும்பு செய்தவர்களை வென்று அடக்கி அவர்களுடைய கடம்ப மரத்தை வெட்டியது. ஆரிய மன்னரை வென்றது. யவன அரசரை வென்று சிறைப்பிடித்தது. மேலும்

இவன், சேர மன்னரின் அடையாளமாகிய வில்லின் அடையாளத்தை இமயமலையின் பாறையில் பொறித்து வைத்தான். இவற்றை விளக்கிக் கூறுவோம்.

1. சேர நாட்டுக்கு வடமேற்கே மேற்கடலில் (அரபிக் கடலில்) துளு நாட்டுக்கு உரியதான ஒரு கடல் துருத்தி (துருத்தி-தீவு) இருந்தது. அந்தத் தீவில் துளு நாட்டு நன்னனுக்கு அடங்கிய குறும்பர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்கள் காவல் மரமாகக் கடம்ப மரத்தை வளர்த்து வந்தார்கள். அந்தக் குறும்பர்கள் சேர மன்னருக்கு மாறாக நெடுங்காலமாகக் குறும்பு செய்துகொண்டிருந்தார்கள். வாணிகத்தின் பொருட்டுச் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வந்துகொண்டிருந்த யவனக் கப்பல்களை வராதபடி இவர்கள் இடை மறித்துத் தடுத்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு பல காலமாகக் குறும்பு செய்துகொண்டு வந்தார்கள் என்று தெரிகிறது. கி.பி. 80இல் இருந்த பிளினி (Pliny) என்னும் யவனர் (கிரேக்கர்) தாம் எழுதியுள்ள யவன வாணிகக் குறிப்பிலிருந்து இச்செய்தி தெரிகிறது. சேர நாட்டுக்கு வந்து கொண்டிருந்த யவன வாணிகக் கப்பல்களை இங்கிருந்த கடற்கொள்ளைக்காரர் துன்புறுத்திக் கொள்ளையடித்தனர் என்று அவர் எழுதியுள்ளார்.

இவ்வாறு குறும்பு செய்துகொண்டு சேர நாட்டுக் கப்பல் வாணிகத்தைத் தடைசெய்து கொண்டிருந்த இக்குறும்பர்களை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தன்னுடைய கடற் சேனையைச் செலுத்தி வென்று அவர்களின் காவல் மரமாக இருந்த கடம்ப மரத்தை வெட்டினான். இச்செய்தியை இவனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் 2ஆம் பத்தில் கூறுகிறார்:

பவர் மொசிந்து ஒல்கிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பின்
போரடு தானைச் சேரலாத! (2ஆம் பத்து 1 : 12-16)

துளங்கு பிசிருடைய மாக்கடல் நீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
ஆடுநர் பெயர்த்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோள் இயவ
(*2ஆம் பத்து* 7 : 4-7)

இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் (*2ஆம் பத்து* 10 : 2-5)

நெடுஞ்சேரலாதன் கடம்பறுத்த செய்தியை மாமூலனார் என்னும் புலவரும் கூறுகிறார்.

வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து (அகம் 127 : 3-4)

சால்பெருந் தானைச் சேரலாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன (அகம் 347 : 3-5)

கடல் தீவில் குறும்பு செய்து கொண்டிருந்த கப்பற் கொள்ளைக்காரர்களை வென்றவன் சேரலாதன்தான். ஆனால், அந்தக் கடற்போரை நேரில் சென்று நடத்தியவன் அவன் மகனான செங்குட்டுவனே. இதனைப் பின்னர் விளக்கமாகக் கூறுவோம். செங்குட்டுவன் இளமையிலிருந்தே தன் தந்தை, சிறிய தந்தை, தமயன் முதலியவர்களுடன் சேர்ந்து பகைவருடன் போர் செய்திருக்கிறான்.

2. நெடுஞ்சேரலாதன் மற்றும் பல போர்களைச் செய்து வென்றான் என்று குமட்டூர்க் கண்ணனார் 2ஆம் பத்தில் கூறுகிறார். இப்போர்கள் எங்கெங்கு யாருடன் நிகழ்ந்தன என்பதைக் கூறவில்லை. ஆரிய அரசரை வென்றான் என்பதை, 'பேரிசைமரபின் ஆரியர் வணக்கி' என்னும் பதிகத்தின் அடியினால் அறிகிறோம். தமிழகத்தின் வடக்கிலிருந்த கன்னடத்தாரையும் தெலுங்கரையும் வடவர் அல்லது வடுகர் என்றும் அவர்களுக்கப்பால் வடக்கே இருந்தவர்களை ஆரியர் என்றும் கூறுவது சங்க காலத்து மரபு. நெடுஞ்சேரலாதன் 'ஆரியரை வணக்கினான்' என்று கூறப்படுவதால், தக்காண தேசத்துக்கப்பால் இருந்த ஆரிய அரசருடன் போர் செய்து வென்றான் என்று அறிகிறோம். அவன் காலத்தில் தக்கண தேசத்தைச் சதகர்ணி (நூற்றுவர் கன்னர்) அரச பரம்பரையார் அரசாண்டார்கள். தக்காணத்துச் சதகர்ணியரசர்களுக்கும் சேர நாட்டுச் சேர மன்னர்களுக்கும் நெடுங்காலமாக நட்புறவு இருந்திருக்கிறது. சதகர்ணியரசன் வடநாட்டு ஆரிய அரசருடன் போர் செய்தபோது அப்போரில் அவனுக்குத் துணையாக இச்சேரன் சென்று போரை வென்றிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. எனவே, நெடுஞ்சேரலாதன் ஆரிய அரசருடன் செய்த போர் சதகர்ணியரசருக்குச் சார்பாக வடநாட்டில் செய்த போராக இருக்க வேண்டும். அக்காலத்தில் வடநாட்டைச் சிறுசிறு மன்னர்கள் ஆண்டனர்; பேரரசர் இருந்திலர்.

வடநாட்டு அரசரை வென்றதற்கு அடையாளமாக நெடுஞ்சேரலாதன் இமயமலையில் தன்னுடைய வில் அடையாளத்தைப் பொறித்து வைத்தான். இதனை,

ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்று முதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் (அகம் 396 : 16-19)

என்று பரணரும்

வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
(*அகம்* 127 : 3-5)

என்று மாமூலனாரும்

அமைவரல் அருவி இமயம் விற்பொறித்து. என்று 2 ஆம் பத்துப் பதிகமும் கூறுவது காண்க. இவனைச் *சிலப்பதிகாரம்,*

கடற்கடம் பெறிந்த காவலன்வாழி
விடர்ச்சிலை பொறித்த வேந்தன்வாழி (சிலம்பு 23 : 81-82)

என்றும்,

மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய வானவன்
(*சிலம்பு* 25 : 1-2)

என்றும் கூறுகிறது.

3. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை வென்றுச் சிறைப் பிடித்து அவர்கள் தலையில் நெய்யை யூற்றிக் கைகளைப் பின் கட்டாகக் கட்டிக் கொண்டு வந்து அவர்களிடமிருந்து வயிரம் முதலிய பெருஞ்செல்வங்களைப் பெற்றுக்கொண்டான் என்று 2ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்த்தலை பெய்து கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி

என்று கூறுகிறது.

இதற்குப் பழைய உரையாசிரியர் இவ்வாறு விளக்கங் கூறுகிறார்: "இதன் பதிகத்து யவனர்ப் பிணித்தென்றது யவனரைப் போருள் அகப்படுத்தியென்றவாறு. நெய்த்தலைப் பெய்து கைபிற் கொளீஇ யென்பதற்கு அக்காலத்துத் தோற்றாரை நெய்யைத் தலையிற் பெய்து கையைப் பிறகு பிணித்தென்றுரைக்க. அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டென்றது அந்த யவனரைப் பின்தண்ட மாக அருவிலை நன்கலமும் வயிரமுங் கொண்டென்றவாறு."

நெடுஞ்சேரலாதன் யவனரை வென்ற செய்தி பதிகத்தில் மட்டுங் கூறப்படுகிறபடியால், குமட்டூர்க் கண்ணனார் இவன்மீது 2ஆம் பத்துப் பாடிய பிறகு, அந்த யவனப் போர் நிகழ்ந் திருக்க வேண்டும் என்று கருதலாம். இவன் யவனருடன் போர் செய்தது கிரேக்க நாட்டுக்கோ அல்லது உரோமாபுரிக்கோ சென்று போர் செய்தான் என்று கருதக்கூடாது. தக்காணத்து மேற்குக் கரைப் பக்கமாகச் சில ஊர்களை யரசாண்டிருந்த யவன அரசர்களுடன் போர் செய்து அவர்களைச் சிறைப் பிடித்தான் என்பதே சரித்திர உண்மையாகும். இந்தியாவுக்கு வெளியே இருந்து இந்தியாவுக்குள் வந்த சாகர்கள் பையப்பையத் தெற்கே மேற்குக்கரைப் பக்கமாக வந்து, சதகர்ணி (நூற்றுவர் கன்னர்) அரசர்களுக்குரியதாக இருந்த தக்காண தேசத்தின் மேற்குக் கரைப் பகுதிகளையும் மாளவம் முதலிய இடங்களையும் கைப் பற்றிக்கொண்டு அரசாண்டார்கள். அது காரணமாகச் சதகர்ணி யரசர்களுக்கும் சாக அரசர்களுக்கும் நெடுங்காலம் போர் நடந்தது. அப்போரில் சில சமயம் சதகர்ணிகளும் சில சமயம் சாக அரசர்களும் வெற்றி பெற்றார்கள். இப்போர் தொடர்ந்து நெடுங்காலம் நடந்தது. இந்தப் போர்களில் சேர மன்னர் சத கர்ணிகளுடன் நட்பாக இருந்து அவர்களுடன் சேர்ந்து சாக அரசர்களுடன் போர் செய்தார்கள். சாக அரசர் யவனர் (கிரேக்கர்) அல்லர். ஆனாலும், அவர்களுக்கு யவனர் என்னும் பெயர் வழங்கிவந்தது. அவர்கள் விந்தியமலைப் பிரதேசத்தில் அரசாண்டனர். நெடுஞ்சேரலாதன் யவனரை வென்று சிறைப்பிடித்தான் என்பது, இந்தச் சாக யவனரைத்தான். சதகர்ணியரசர் (நூற்றுவர் கன்னர்) சார்பாக நெடுஞ்சேரலாதன் சாக யவனருடன் போர் செய்து அவர்களைச் சிறைப் பிடித்ததை இச்செய்தி கூறுகிறது.

சாக யவனர் விந்தியமலைப் பிரதேசத்தில் கி.பி. முதலாவது இரண்டாவது நூற்றாண்டுகளில் அரசாண்டார்கள் என்று இந்திய சரித்திரங் கூறுகிறது. அந்தச் சாகர்கள் தக்காண இராச்சியத்தை யரசாண்ட சதகர்ணி (நூற்றுவர் கன்னர்) உடன் அடிக்கடி போர் செய்துகொண்டிருந்தார்கள். சேர மன்னர்கள் சதகர்ணியரசருக்கு நண்பர்களாகையால், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் நூற்றுவர் கன்னர் சார்பாகச் சாக அரசர் களுடன் விந்தியப் பிரதேசத்தில் போர் செய்து அவர்களைச் சிறைப்பிடித்தான். இதற்குச் சான்று பதிற்றுப்பத்து 9ஆம் பத்தில் காணப்படுகிற, இளஞ்சேரல் இரும்பொறையின் முன்னோர்களைக் கூறும்போது, நெடுஞ்சேரலாதனைக் கூறுகிற இடத்தில்,

கடவுட் பெயரிய கானமொடு கல்லுயர்ந்து
தெண்கடல் வளைஇய மலர்தலை யுலகத்துத்
தம்பெயர் போகிய ஒன்னார் தேயத்து
துளங்கிருங் குட்டம் தொலைய வேலிட்டு
அணங்குடைக் கடம்பன் முழுமுதல் தடிந்து

என்று (9ஆம் பத்து 8 : 2-6) கூறுகிறது.

இதற்குப் பழைய உரைகாரர் "கடவுட்பெயரிய கானம் என்றது விந்தாடவியை" என்று எழுதுகிறார். விந்தாடவி என்றது விந்தியமலைப் பிரதேசம். இதற்குக் தண்டார்ரணியம் என்றும் பெயர் உண்டு. அக்காலத்தில் இப்பிரதேசத்தைச் சாகயவன அரசர்கள் ஆண்டனர். இந்த அரசர்களைத்தான் நெடுஞ்சேரலாதன் வென்று சிறைப்பிடித்தான். இவன் மகனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் யவனரின் வருடைப் பசுக்களைக் கவர்ந்துகொண்டு வந்தான் என்று 6ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

சில ஆராய்ச்சிக்காரர்கள், நெடுஞ்சேரலாதன் சிறைப்பிடித்த யவனர், கிரேக்க நாட்டிலிருந்து வாணிகத்தின் பொருட்டு வந்து சேர நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களில் குடியேறியிருந்த யவனராக இருக்கக் கூடும் என்று கருதுகின்றனர் (K.N. Sivaraja Pillai, *The Chronology of the Early Tamils*, 1932, p. 117; K.G. Sesha Aiyar, *Cera Kings of the Sangam Period*, 1937, p. 18; K.A. Nilakanta Sastri, *A Comprehensive History of India Vol. II*, 1957, p. 519). இது தவறான கருத்து. தங்கள் நாட்டில் வாணிகம் செய்யவந்த யவனரைச் சிறைப்பிடித்தான் என்பது அசம்பாவிதமானது. அவன் விந்தியமலைப் பிரதேசத்தில் அரசாண்டுகொண்டிருந்த சாக யவனரைச் சிறைப்பிடித்தான் என்பது மேலே கூறப்பட்டது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை 2ஆம் பத்துப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் பெற்ற பரிசில், "உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயமும் முப்பத்தெட்டி யாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகமும்" பெற்றார் என்று பதிகக் குறிப்புக் கூறுகிறது. உம்பற்காடு, இவ்வரசனுடைய தம்பியாகிய பல்யானைச் செல் கெழுகுட்டுவனால் புதிதாகக் கைப்பற்றப் பட்டது. இது கொங்கு நாட்டைச் சேர்ந்த ஊர்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டு யாண்டு வீற்றிருந்தான் என்று கூறப்படுகிறான். இவன் எப்படி இறந்தான் என்பது கூறப்படவில்லை. ஆனால், இவன் சோழ அரசனுடன் போர் செய்து போர்க்களத்தில் இறந்துபோனான் என்னும் செய்தியை வேறு இடத்திலிருந்து அறிகிறோம். இவன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியுடன் போர் செய்தான்.

அந்தப் போர், போர் என்னும் இடத்தில் நடந்தது. அப்போரில் இருதரத்து வீரர்களும் யானைகளும் குதிரைகளும் மாண்டனர். அன்றியும் இரண்டு அரசர்களும் புண்பட்டுப் போர்க் களத்திலேயே விழுந்து சிலகாலம் உயிர் போகாமல் கிடந்தனர். இந்த நிகழ்ச்சியை நேரில் கண்ட கழாத்தலையார் என்னும் புலவர் மறக்களவழி பாடினார் (*புறம்* 368). அந்தப் பாட்டின் கீழ்க்குறிப்பு, "சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃற டக்கைப் பெருநற்கிள்ளியோடு போர்ப்புறத்துப் பொருது, வீழ்ந்தார் அழுங்கத் தன்னதாக உயிர் போகாது கிடந்தானைக் கழாத்தலையார் பாடியது" என்று கூறுகிறது (இதில், வீழ்ந்தார் அழுங்க என்பதற்கு நண்பரும் உறவினரும் மனம் வருந்த என்பது பொருள். வீழ்ந்தார்-விரும்பினவர், அன்புடையவர்).

போர்க்களத்தில் உயிர் போகாமல் கிடந்த சேரன் பிறகு போர்க்களத்திலேயே இறந்துபோனான். அப்போதும் கழாத்தலை யார் அவனைப் பாடினார் (*புறம்* 62). அப்பாட்டின் கீழ்க் குறிப்பு, "சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக் கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தா ரைப் பாடியது" என்று கூறுகிறது. இவ்விரு அரசரும் போர்க் களத்தில் புண்பட்டு விழுந்து கிடந்த தைப் பரணரும் நேரில் பாடினார் (*புறம்* 63). இதனால் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் சமகாலத்தவர் என்பதும் இருவரும் ஒருங்கே போர்க்களத்தில் இறந்தனர் என்பதும் தெரிகின்றன.

(குறிப்பு: *சிலப்பதிகாரத்தை* ஆங்கிலத்தில் எழுதிய திரு. வி. ஆர். இராமச்சந்திர தீக்ஷிதர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பெருஞ்சேரலாதன் என்னும் இரண்டு வெவ்வேறு அரசர்களை ஒருவர் என்று எண்ணிக்கொண்டு தவறான செய்தியைக் கூறியுள்ளார். பெருஞ்சேரலாதன் (இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன்) கரிகால் சோழனுடன் வெண்ணி என்னும் இடத்தில் போர் செய்து இறந்தான் என்று எழுதுகிறார் (*சிலம்பு* ஆங்கில மொழிபெயர்ப்பு, 13). சேரலாதன் என்னும் பெயர் ஒற்றுமையைக் கொண்டு இருவரையும் ஒருவராகக் கருதிவிட்டார்).

சிறிய தந்தை (பல்யானைச் செல்கெழு குட்டுவன்)

சேரன் செங்குட்டுவனின் தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பியொருவன் இருந்தான் என்று முன்னமே கூறினோம். அவன் பெயர் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பது. அவன் செங்குட்டுவனின் சிறிய தந்தை. அவன்மீது பாடப்பட்டது 3ஆம் பத்து. அவன் கொங்கு நாட்டுப் பகுதியை வென்றான்.

மாகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல் கெழுதானை வெருவரு தோன்றல்

என்பதானல் (3ஆம் பத்து 2 : 15-16) இதனையறியலாம்.

மதில் அரண் உடைய அகப்பா என்னும் நகரத்தை இவன் வென்று அதைத் தீயிட்டுக் கொளுத்தினான்.

துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை
ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்
கடிமிளைக் குண்டு கிடங்கின்
நெடுமதில் நிறையப் பதணத்து
அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா வெறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ

(3ஆம் பத்து 2 : 21-27)

இதனையே, 'அகப்பா எறிந்து பகற்றீ வேட்டு' என்று பதிகம் கூறுகிறது.

இவனிடம் பல யானைப் படைகள் இருந்தன. அதனால் இவன் கோட்டைகளை யெளிதில் வென்றான்.

அமர்கோள் நேரிகந்து ஆரெயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன் (3ஆம் பத்து 9 : 13-14)

கொங்கு நாட்டைப் பிடிப்பதற்கு முன்பு இவன் உம்பல் காட்டைக் கைப்பற்றினான் (உம்பல் - யானை). உம்பல் காடு என்பது இப்போது யானைமலை என்று வழங்கும் பிரதேசம். இது, சேர நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் இடையில் உள்ளது. உம்பல் காட்டையும் கொங்கு நாட்டையும் வென்ற இவன் தன் மரபில் உள்ள முதியவர்களைத் தான் வென்ற அந்த நாட்டுப் பகுதிகளின் தலைவராக்கினான்.

மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்து

(3ஆம் பத்து, பதிகம்)

என்று இச்செய்தி கூறப்படுகிறது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்னும் பெயருக்கு ஏற்ப இவனிடம் பெரிய யானைப் படை இருந்தது என்று கூறினோம். அந்த யானைகளைக் கீழ்க்கடல் முதல் மேற்கடல் வரையில் வரிசையாக ஆங்காங்கே நிறுத்தி அந்த யானைகளின் மூலமாகக் கீழ்க்கடல் நீரையும் மேற்கடல் நீரையும் ஒரே நாளில் கொண்டு வரச் செய்து அந்நீரினால் இவன் திருமுழுக்குச் செய்து கொண்டான்.

கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி (3ஆம் பத்து, பதிகம்)

என்று இச்செய்தி கூறப்படுகிறது.

கொற்றவை, வீரர் வணங்கும் வெற்றிக்கடவுள். சேர நாட்டையடுத்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி அயிரைமலை என்று பெயர் பெற்றிருந்தது. அந்த மலை மேல் கொற்றவையின் கோவில் இருந்தது. அயிரைமலைக் கொற்றவை, சேரர்களின் குல தெய்வமாக இருந்தபடியால் வெற்றிவீரனாகிய இவன் அத்தெய்வத்தை வணங்கி வழிபட்டான்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் 3ஆம் பத்துப் பாடினார். அதற்குப் பரிசாக அப்புலவரும் அவருடைய மனைவியாகிய பார்ப்பனியும் சுவர்க்கம் பெற்றார்கள் என்று மூன்றாம் பத்து அடிக்குறிப்பு கூறுகிறது. "பாடிப் பெற்ற பரிசில்: நீர் வேண்டிய கொண்மின்" என, "யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்" என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் (பாலைக் கௌதமனாரையும்) பார்ப்பனியையும் காணாராயினார்" என்று மூன்றாம் பத்தின் அடிக்குறிப்பு கூறுகிறது.

இவன், பாலைக் கௌதமனாருக்குச் சுவர்க்கங் கொடுத்ததைச் சோழ நாட்டிலிருந்த பராசரன் என்னும் பார்ப்பான் அறிந்து, சேர நாட்டுக்குச் சென்று, இவனுடைய அவைக்களத்தில் பார்ப்பனருடன் வேதம் ஓதி வெற்றிகொண்டு பார்ப்பன வாகை பெற்றான். இவனுக்கு இச்சேரன் செல்வங்களைப் பரிசாகக் கொடுத்தான். இதனைச் *சிலப்பதிகாரக்* கட்டுரை காதை கூறுகிறது.

குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு
வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேல் சேரலற் காண்கெனக்
காடும் நாடும் ஊரும் போகி
நீடுநிலை மலையம் பிற்படச் சென்றாங்கு
ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியுஞ் செய்தொழி லோம்பு
மறுதொழி லந்தணர் பெறுமுறை வகுக்க
நாவலங் கொண்டு நண்ணார் ஓட்டிப்
பார்ப்பன வாகை சூடி யேற்புற
நன்கலங் கொண்டு தன்பதி பெயர்வோன்

(*சிலம்பு* 23 : 62-73)

இவ்வரசன் இருபத்தைந்து ஆண்டு ஆட்சி செய்தான். தெய்வ பக்தியுள்ள இவ்வரசனுடைய புரோகிதர் நெடும்பாரதாயனார் என்பவர். அவர் இல்வாழ்க்கையைத் துறந்து தவஞ்செய்யக்

DEPARTMENT OF ARCHAEOLOGY MADRAS 11455

காட்டுக்குப் போனார். அதுகண்டு இவ்வரசன் அரசையும் மனையையும் துறந்து அவருடன் காட்டுக்குச் சென்றான்.

ஒடுங்கா நல்லிசை யுயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனார் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவன்

என்று இச்செய்தியைப் பதிகம் கூறுகிறது. இதற்குப் பழைய உரைகாரர் கூறும் விளக்கம் இது: "நெடும்பார தாயனார் முந்துறக் காடுபோந்த வென்றது தன் புரோகிதராகிய நெடும்பாரதாயனார் தனக்கு முன்னே துறந்து காடுபோக அது கண்டு தானும் துறவுள்ளம் பிறந்து துறந்து காட்டிலே போன என்றவாறு."

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவன் தம்பியாகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் உம்பற்காட்டையும் கொங்கு நாட்டின் சில பகுதிகளையும் கைப்பற்றிச் சேர இராச்சியத்தோடு சேர்த்து இராச்சியத்தை விரிவுபடுத்தினார்கள்.

வேறு சிறிய தந்தை (செல்வக்கடுங்கோ வாழியாதன்)

சேரன் செங்குட்டுவனுக்கு அந்துவன் பொறையன் என்னும் தாயாதிப் பாட்டன் ஒருவன் இருந்ததை முன்னமே கூறினோம். அந்தப் பாட்டனுக்குச் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்று ஒரு மகன் இருந்தான். எனவே, அவனும் செங்குட்டுவனுக்குச் சிறிய தந்தை முறையினன் ஆவான். மேலும் செல்வக்கடுங்கோ, செங்குட்டுவனுடைய மாற்றாந்தாயாகிய (தன் தந்தையின் மூத்த மனைவியாகிய) வேளாவிக்கோமான் பதுமன் தேவி என்பவளின் தங்கையை மணஞ்செய்திருந்தான். அவளுக்கும் வேளாவிக் கோமான் பதுமன் தேவி என்பது பெயர். இச்செய்தியை எட்டாம் பத்துப் பதிகத்தினால் அறிகிறோம்.

செல்வக்கடுங்கோவை 7ஆம் பத்துப் பாடியவர் கபிலர். பாரி வள்ளலால் ஆதரிக்கப்பட்ட கபிலர், அவன் இறந்த பிறகு இச் சேரனிடம் வந்து இவனைப் பாடினார்.

செல்வக்கடுங்கோ வாழியாதன் பல போர்க்களங்களைக் கண்டவன். போர்க்களத்தில் பல புண்பட்ட இவனுடைய மார்பு, இறைச்சியைக் கொத்தும் (ஊனம்) மரக்குறடுபோல வடுக்கள் உள்ளதாக இருந்தது. அந்த வடுக்களை இவன் சந்தனம் பூசி மறைத்திருந்தான்.

எஃகா டூனங் கடுப்ப மெய்சிதைந்து
சாந்தெழில் மறைத்த சான்றோர் பெருமகன்

(7ஆம் பத்து 7 : 17-18)

(ஊனம்-இறைச்சியைக் கொத்துவதற்கு உள்ள மரக்குறடு; சான்றோர்-(இங்கு) வீரர்.)

இவன் பல போர்களைச் செய்து நாடுகளைக் கைப்பற்றினான்; களவேள்வி செய்தான்.

நாடுபல படுத்து நண்ணார் ஓட்டி
வெருவரு தானைகொடு செருப்பல கடந்து
ஏத்தல் சான்ற இடனுடைவேள்வி ஆக்கி

என்று 7ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

மேலும், இவன் அறநெறியறிந்து தன் புரோகிதனைவிட அறிவிற்சிறந்திருந்தான் என்று கூறப்படுகிறான்.

புரோசு மயக்கி
மல்லல் உள்ளமொடு மாசற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழியாதன் *(7ஆம் பத்து, பதிகம்)*

"புரோசு மயக்கி யென்றது தன் புரோகிதனிலும் தான் அற நெறியறிந்தென்றவாறு" என்று பழைய உரை விளக்குங் கூறுகிறது.

இவன்மீது 7ஆம் பத்துப் பாடிய கபிலருக்கு இவன் பல ஊர்களைப் பரிசாக வழங்கினான். "பாடிப்பெற்ற பரிசில்: சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து நன்றா வென்னுங் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ" என்று 7ஆம் பத்தின் பதிக அடிக் குறிப்புக் கூறுகிறது.

கபிலர் அனேக ஊர்களைப் பரிசு பெற்ற செய்தியை இவ்வரசனின் பேரனாகிய இளஞ்சேரல் இரும்பொறையை 9ஆம் பத்துப் பாடின பெருங்குன்றூர் கிழாரும் கூறுகிறார். இளஞ்சேரல் இரும்பொறையுடன் போர் செய்து தோற்று ஓடிய சோழனின் வீரர்கள் போர்க்களத்தில் விட்டுச் சென்ற வேல்களின் எண்ணிக்கையானது கபிலன், செல்வக்கடுங்கோ வாழியாதனிடம் பரிசாகப் பெற்ற ஊர்களைவிட அதிகமாக இருந்தது என்று அவர் கூறுகிறார்.

தீஞ்சுனை நிலைஇய திருமா மருங்கிற்
கோடுபல விரிந்த நாடுகாண் நெடுவரைச்
சூடா நறவின் நாண்மகிழ் இருக்கை
யரசவை பணிய வரம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே (9ஆம் பத்து 5 : 6-13)

(இதில் நன்றா என்னும் குன்று, நாடுகாண் நெடுவரை என்று கூறப்பட்டுள்ளது காண்க.)

குண்டுகட் பாலியாதனார் என்னும் புலவர் 'இது கனவா நனவா' என்று ஐயுறும்படி இவ்வரசன் அவருக்குப் பெருந் தொகையைப் பரிசிலாக வழங்கினான். அப்போது அப்புலவர் இவ்வரசன்மீது ஒரு செய்யுளைப் பாடி வாழ்த்தினார் (*புறம்* 387)

செல்வக்கடுங்கோ இருபத்தைந்து யாண்டு ஆட்சிசெய்தான். இவன் சிக்கற்பள்ளி என்னும் இடத்தில் இறந்தான். ஆனது பற்றி இவன், சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன் என்று கூறப்படுகிறான்.

அண்ணன் (களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு இரண்டு மனைவியரும் நான்கு மக்களும் இருந்தனர் என்றும் அவர்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், இளங்கோ அடிகள் என்பவர் என்றும் கூறினோம். நெடுஞ்சேரலாதன் இறந்த பிறகு, அவனுடைய மூத்த மகனும் செங்குட்டுவனுடைய அண்ணனுமாகிய களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் அரசனானான். இவனுக்கு வானவரம்பன் என்னும் சிறப்புப் பெயர் உண்டு.

இவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்று பெயர் பெற்றதற்குக் காரணங் கூறுகிறார் *பதிற்றுப்பத்தின்* பழைய உரையாசிரியர்: "களங்காய்க்கண்ணி நார்முடி யென்றது களங்காயாற் செய்த கண்ணியும் நாராற் செய்த முடியுமென்றவாறு. தான் முடி சூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும் உதவாமையிற் களங்காயால் கண்ணியும் நாரால் முடியும் செய்து கொள்ளப்பட்டன வென்றவாறு" என்று அவர் விளக்கங் கூறுகிறார்.

இதைச் சான்றாகக் கொண்டு திரு. மு. இராகவையங்கார் அவர்கள் தாம் எழுதிய *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலில் இவ்வாறு கற்பித்து எழுதுகிறார்: "முடிசூடுகின்ற சமயத்தில் முடித்தற்குரிய கண்ணியும் கிரீடமும் பகைவர் கவர்ந்ததனால் உதவாமை பற்றி, அவற்றுக்குப் பிரதியாகக் களங்காயாற் கண்ணியும் நாரால் முடியுஞ் செய்து புனைந்துகொண்டு பட்டம் பெற்றமையின் 'களங்காய்க் கண்ணி நார்முடிச்ரேல்' என்னும் பெயர் பெற்றான்" என்று எழுதியுள்ளார்.

இவர் கூறும் காரணத்தைத் திரு. கே. என். நீலகண்ட சாஸ்திரியார் உடன்படாமல் மறுக்கிறார். முடிசூடுஞ் சமயத்தில் பகைவர் வந்து கிரீடத்தைக் கவர்ந்திருக்க முடியாது என்று சாஸ்திரியார் சுட்டிக்காட்டுகிறார் (K.A. Nilakanta Sastri, *A Comprehensive History of India, Vol. II*, p. 521). ஆனால், சாஸ்திரியாரும் முடியும் கண்ணியும் உதவாமற் போனது ஏன் என்பதற்குக் காரணம் கூறவில்லை.

பொன்முடியும் கண்ணியும் முடிசூட உதவாமற் போனதற்குத் தகுந்த காரணம் உண்டு. அக்காரணம் என்னவென்றால், இவனுடைய தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெரு விறற்கிள்ளியோடு போர் செய்து போர்க்களத்தில் புண்பட்டு விழுந்து கிடந்து பிறகு உயிர் நீங்கினான் என்பதை முன்பு கூறினோமல்லவா? அவன் போர்க்களத்தில் விழுந்த சமயத்தில் அவன் புனைந்திருந்த முடியும் கண்ணியும் சிதைந்துபோயிருக்கக்கூடும். அல்லது, கெட்டுப்போயிருக்கக்கூடும். ஆகையினாலே, திடீரென்று முடி சூட்டுவிழா ஏற்பட்ட காரணத்தினால், அவ்வமயம் பொன் முடியும் கண்ணியும் உதவாமற் போகவே, அச்சமயத்துக்கு வாய்ப்பாகக் களங்காயாற்கண்ணியும் நாரினால் முடியும் புனைந்து முடிசூட்டப்பட்டான். இதுவே களங்காய்க் கண்ணியும் நார்முடியும் சூடியதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், இவன் எக்காலமும் நார்முடியையே தரித்திருக்கவில்லை. நவமணிகள் பதித்த முத்துவடங்கள் சூழ்ந்த மணிமுடியைத் தரித்துக் கொண்டிருந்தான்.

இலங்கு மணிமிடைந்த பசும்பொற் படலத்து
அவிரிழை தைஇ மின்னுமிழ் பிலங்கச்
சீர்மிகு முத்தந் தைஇய
நார்முடிச் சேரல்........ (4ஆம் பத்து 9 : 14-17)

என்று இவன் கூறப்படுகிறான். ஆனாலும், நார்முடிச் சேரல் என்ற பெயரே இவனுக்கு நிலைத்துவிட்டது.

சேரமன்னர் கொங்கு நாட்டைச் சிறிதுசிறிதாகக் கைப்பற்றிச் சேர இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டு வருவதைக் கண்ட கொங்கு நாட்டுத் தகடூர் மன்னனாகிய நெடுமிடல் எழினி என்பவன் பாண்டியனுடைய உதவியுடன் இச்சேரனை எதிர்த்தான். அவனை நார்முடிச்சேரல் தோல்வியுறச் செய்தான்.

நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து
(4ஆம் பத்து 2 : 10-11)

நார்முடிச்சேரல் பல போர்களைச் செய்யவேண்டியிருந்தது. அந்தப் போர்களில் கடுமையானது துளு நாட்டு நன்னனுடன் செய்த போர். இந்தப் போர்களில் இவனுடைய தம்பியராகிய சேரன் செங்குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும், பெருஞ்சேரல் இரும்பொறையும் உதவியாக இருந்தார்கள்.

சேர நாட்டுக்கு வடக்கேயிருந்த துளு நாட்டு நன்னன், சேர நாட்டின் வட பகுதியிலிருந்த பூழி நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். மேலும், நன்னன் கொங்கு நாட்டின் வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தான். நன்னனுடைய

வளர்ச்சி சேர நாட்டின் வீழ்ச்சியாக இருந்தது. ஆகையால், நார் முடிச்சேரல் நன்னன்மேல் படையெடுத்தான். வலிமை மிக்க நன்னனும் பின்வாங்கவில்லை. இந்தப் போர் நிலைச்செருவாகச் சில காலம் நடந்தது. கடைசியில் நார்முடிச்சேரல் வெற்றி பெற் றான். தான் இழந்த பூழி நாட்டை மீட்டுக்கொண்டு பிறகு நன்னனுடைய துளு நாட்டிலும் புகுந்து போர் செய்தான். இப் போரில் சேரன் செங்குட்டுவன் நன்னனுடைய நாட்டில் கடற் கரைப் பக்கமாகப் புகுந்து அவனுடைய நாட்டைத் தாக்கிப் போர் செய்து வியலூர், கொடுகூர், நறவு முதலிய ஊர்களைக் கைப்பற்றினான். நார்முடிச் சேரல் மற்றொரு பக்கமாக நன்னனைத் தாக்கினான். இவன் தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் மற்றொரு புறத்தில் தாக்கிப் போரிட்டான். இவர் களை எதிர்த்த நன்னன் கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந் துறை என்னும் இடங்களில் போர் செய்தான். கடைசியில் நன்னன் தோல்வியுற்றுப் போர்க்களத்தில் இறந்துபோனான். துளு நாடு (கொங்கண நாடு) சேரருக்குக் கீழ்ப்படிந்தது. இச் செய்தியை,

எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்துப்
பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்

(4ஆம் *பத்து* 10 : 13-16)

என்றும்,

ஊழின் ஆகிய உயர்பெருஞ் சிறப்பில்
பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டு

(4ஆம் பத்து, பதிகம்)

என்றும் *பதிற்றுப்பத்து* 4ஆம் பத்து கூறுகிறது.

கல்லாடனார் என்னும் புலவரும் இந்த வெற்றியைத் தம்முடைய செய்யுளில் போற்றுகிறார்.

குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன வளம் (*அகம்* 199 : 18-24)

இவ்வாறு, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் காலத்தில் கொங்கண நாடாகிய துளு நாடு சேர இராச்சியத்துக்கு அடங்கியது. நன்னனுடைய மகன் சேர அரசருக்குக் கீழடங்கித் துளு நாட்டையரசாண்டான். அவன் ‘நன்னன் உதியன்’ என்று பெயர் பெற்றான். பரணர் என்னும் புலவர், தாம் பாடிய *அகநானூற்றுச்* செய்யுளில்,

> நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
> தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த பொன்
>
> (*அகம்* 258 : 1-3)

என்று நன்னன் உதியனைக் கூறுகிறார். நன்னன் என்பது துளு நாட்டு அரசர் குடிப்பெயர். உதியன் என்பது சேர நாட்டு அரசர் குடிப்பெயர். சேரனுக்கு அடங்கியவன் என்பதற்காக இவன் தன் பெயருடன் உதியன் என்னும் பெயரைச் சூடிக்கொண்டான்.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் இருபத்தை யாண்டு அரசாண்டான். இவன்மீது நான்காம் பத்துப் பாடிய புலவர் காப்பியாற்றுக் காப்பியனார் என்பவர். “பாடிப்பெற்ற பரிசில்: நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதில் பாகங்கொடுத்தான் அக்கோ.”

பெருஞ்சேரல் இரும்பொறை (தாயாதி அண்ணன்)

இவன் செங்குட்டுவனின் தாயாதி அண்ணன். இளைய கால் வழியில் வந்த செல்வக்கடுங்கோ வாழி யாதனின் மகன் இவன். இவனும் நார்முடிச் சேரலின் காலத்தில் இருந்தவன். இடையர் குலத்தில் பிறந்த கழுவுள் என்பவன் குறும்பு செய்து கொண்டிருந்ததை இவன் அடக்கினான்.

> ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
> பதிபாழாக வேறுபுலம் படர்ந்து (8ஆம் பத்து 1 : 17-18)

அந்தக் கழுவுள் எந்த நாட்டில் இருந்தான் என்பது தெரியவில்லை. இவன் யாகங்களைச் செய்தான் என்று கூறப்படுகிறான் (8ஆம் பத்து 4). தன்னுடைய புரோகிதனாகிய நரைமூதாளனைத் துறவு கொள்ளும்படிச் செய்தான்.

> முழுதுணர்ந் தொழுக்கும் நரைமூ தாளனை
> வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
> தெய்வமும் யாவதும் தவமுடையோர்க் கென
> வேறுபடு நனந்தலைப் பெயரக்
> கூறினை பெருமநின் படிமை யானே
>
> (8ஆம் பத்து 4 : 24-28)

கொங்கு நாட்டில் அதிகமான் அரசர்கள் ஆண்டுவந்த தகடூரை இவன் வென்றான்.

வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பிற் றகடூர் நூறி (8ஆம் பத்து 8 : 8-9)

இவன் காலத்தில் தகடூரை ஆட்சி செய்தவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன். நெடுமான் அஞ்சி, அதிகமான் நெடுமிடல் அஞ்சியின் மகன். நெடுமிடல் அஞ்சி, பெருஞ்சேரல் இரும்பொறையின் தமயனான நார்முடிச்சேரலினால் வெல்லப் பட்டவன். பிறகு அவன் துளு நாட்டு நன்னனுடன் போர் செய்து மாண்டான். அவன் மகனான நெடுமான் அஞ்சியுடன் பெருஞ் சேரல் இரும்பொறை போர் செய்து தகடூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். அஞ்சிக்கு உதவியாகச் சோழனும் பாண்டியனும் இருந்தனர். தகடூர்ப் போரில் கடைசியாக வெற்றி பெற்றவன் பெருஞ்சேரல் இரும்பொறை.

பல்வேற் றானை யதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடனிலே வென்று
முரசுங் குடையும் கலனுங் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை

என்று இவனை எட்டாம் பத்துப் பதிகம் கூறுகிறது.

இவனை 8ஆம் பத்துப் பாடியவர் அரிசில்கிழார். இப் பத்தைப் பாடியதற்குப் பரிசிலாக இவர் இவனுக்கு அமைச்சராக அமர்ந்தார். "பாடிப்பெற்ற பரிசில்: தானும் கோயிலாளும் (அரசனும் அரசியும்) புறம்போந்து நின்று கோயிலுள்ள வெல்லாம் கொண்மினென்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசுகட்டில் (சிம்மாசனம்) கொடுக்க அவர் யான் இரப்ப இதனை ஆள்க வென்று அமைச்சுப்பூண்டார்" என்று 8ஆம் பத்தின் அடிக் குறிப்புக் கூறுகிறது.

தகடூரை வென்ற பிறகு இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்று பெயர் பெற்றான். தகடூர்ப் போரைப் பற்றித் *தகடூர் யாத்திரை* என்னும் ஒரு நூல் இயற்றப்பட்டது. அந்நூல் இப்போது மறைந்துவிட்டது. அந்நூலின் சில செய்யுட்களைத் *தொல்காப்பியப் புறத்திணையியலின்* உரையில் நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டியுள்ளார். *புறத்திரட்டி* லும் சில செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை புலவர் களிடத்தில் பெரு மதிப்புக்கொண்டு அவர்களைப் போற்றினான். இவனுடைய முரசு வைக்கும் கட்டிலிலிருந்த முரசைக் கழுவதற்குக் கொண்டு போயிருந்தார்கள். அவ்வமயம் மோசிகீரனார் என்னும் புலவர், அது முரசுகட்டில் என்பதை

அறியாமல் அதன்மேல் படுத்து உறங்கிவிட்டார். முரசுகட்டில் சிம்மாசனம் போன்று மதிப்புக்குரியது. அதில் யாரும் அமர்வதும் படுப்பதும் கூடாது. மோசிகீரனார் அதில் படுத்து உறங்குவதைக் கண்ட பெருஞ்சேரல் இரும்பொறை இவர் செயலுக்காக வருந்தாமலும் சினங்கொள்ளாமலும் இருந்ததோடு தன் கையினால் விசிறிகொண்டு அவருக்கு வீசிக்கொண்டிருந்தான். புலவர் விழித்தெழுந்து நடந்ததை யறிந்து அரசனுடைய தமிழன்பை வியந்து பாடினார் (*புறம்* 50).

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பதினேழு யாண்டு அரசாண்டான்.

3. சேரன் செங்குட்டுவன்

இவன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகன் என்பதையும் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலின் தம்பி என்பதையும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கும் இளங்கோவடிகளுக்கும் தமயன் என்பதையும் முன்னமே யறிந்தோம். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை இவனுடைய தாயாதி அண்ணன் என்பதையும் அறிந்தோம், நெடுஞ்சேரலாதனின் இரண்டு மனைவியரில் சோழன் மணக்கிள்ளியின் மகளான நற்சோணை இவனுடைய தாய். இளமையிலேயே இவன் சிறந்த வீரனாக விளங்கினான். இவன் தன் தந்தை, தமயன்மார்களின் ஆட்சிக் காலத்தில், இளவரசனாக இருந்த போதே, அவர்கள் செய்த போர்களில் இவனும் கலந்துகொண்டு பகைவருடன் போர் செய்திருக்கிறான். இவன் அரசாட்சிக்கு வந்தபோதும் பல போர்களைச் செய்து வெற்றிபெற்றான்.

செங்குட்டுவனுடைய தந்தையான நெடுஞ்சேரலாதன், தன் நாட்டுக்கு அருகிலே கடலில் இருந்த தீவு ஒன்றில் இருந்துகொண்டு, தனக்கு எதிராகக் குறும்பு செய்துகொண்டிருந்த பகைவரை வென்று அவருடைய காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டி அதனால், முரசு செய்தான் என்று முன்னமே கூறினோம் (*அகம்* 127 : 3-5. 347 : 3-6; *பதிற்றுப்பத்து* 2ஆம் பத்து 1 : 2-16, 2 : 2-3, 7 : 4-7, 10 : 2-5; *சிலம்பு* 28 : 135-136). இந்தக் கடல்தீவுப் போர், நெடுஞ்சேரலாதன் காலத்தில் நிகழ்ந்தது. ஆனால், இந்தப் போரை முன்நின்று நடத்தி வெற்றிபெற்றவன், அக்காலத்தில் இளைஞனாக இருந்த செங்குட்டுவனே. இதற்குப் பல சான்றுகள் உள்ளன. இதனால், நெடுஞ்சேரலாதனுக்காக அவன் மகன் செங்குட்டுவன் இந்தப் போரை நடத்தி வென்றான் என்பது தெரிகின்றது.

பதிற்றுப்பத்து 5ஆம் பத்து 5ஆம் செய்யுளில் பரணர் என்னும் புலவர் இக்கடற்போர்ச் செய்தியை இவ்வாறு கூறுகிறார்:

தானைமன்னர்
இனியா ருளரோ நின் முன்னும் இல்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி யிமைப்பின் வேல்இடுபு
முழங்கு திரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே

என்று அவர் கூறுகிறார்.

"கடல் மறுத்திசினோராகிய தானைமன்னர் இனிவு யாருளரோ. நின் முன்னும் இல்லையெனக் கூட்டி வினைமுடிவு செய்க. கடல் மறுத்தல் என்றது கடலிற் புக்கு ஒருவினை செய்தற்கு அரிதென்பதனை மறுத்தலை" என்று இதற்கு விளக்கங் கூறுகிறது *பதிற்றுப்பத்தின்* பழைய உரை.

செங்குட்டுவன் காலத்திலும் அவனுடைய தந்தை நெடுஞ்சேரலாதன் காலத்திலும் இருந்த பரணரே, செங்குட்டுவன்தான் முதல்முதல் கடற்போர் செய்தான், அவனுக்கு முன்பு கடற்போர் செய்தவர் இலர் என்று கூறுகிறபடியினாலே செங்குட்டுவன் இந்தக் கடற் போரைத் தன் தந்தை ஏவியபடி செய்தான் என்பது தெரிகின்றது. நெடுஞ்சேரலாதனை 2ஆம் பத்துப் பாடிய குமட்டூர்க் கண்ணனாரும் இக்கருத்தையே கூறுகிறார்.

பவர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுரை முழுமுதல் துமிய ஏஎய்
வென்றெறி முழங்குபனை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பின்
போரடு தானைச் சேரலாத (2ஆம் பத்து 1 : 12-16)

என்று அவர் கூறுகிறார். இதில் 'கடம்பின் கடியுடை முழு முதல் துமிய ஏஎய்' என்று கூறுவது காண்க (ஏய்=ஏவி). தந்தை ஏவியபடி செங்குட்டுவன் இப்போரைச் செய்து வென்றான். இதனால்தான், கடற்போரை முதல்முதலாகச் செய்தவன் செங்குட்டுவன் என்று பரணர் கூறினார். கடற்போரைச் செய்த காலத்தில் செங்குட்டுவனுக்கு வயது 20 அல்லது 25 இருக்கும்.

அரபு நாட்டிலிருந்தும் எகிப்து, ரோமாபுரி முதலிய நாடுகளிலிருந்தும் வாணிகத்தின் பொருட்டுக் கடல் வழியாக வந்த மரக்கலங்களைச் சேர நாட்டின் துறைமுகப்பட்டினங்களுக்கு வராதபடி இடைமறித்துத் தடுத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த குறும்பர்களை அடக்குவதற்காக இப்போர் நடந்தது என்று கருதலாம். பிளினி என்னும் யவனர் இவ்விடத்தில் கடற்கொள்ளைக்காரர் இருந்தனர் என்று எழுதியுள்ளார். கடற்றீவிலிருந்த இந்தக் குறும்பர்கள் தங்களுக்குக் காவல் மரமாகக் கடம்ப மரத்தை வளர்த்திருந்தார்கள். அந்தக் காவல் மரத்தைத்தான் செங்குட்

டுவன் வெட்டினான். அந்தக் குறும்பர்கள், துளு நாட்டு நன்னனுக்கு அடங்கியிருந்த துளுவர் எனத் தோன்றுகின்றனர்.

தந்தையும் மகனும் சேர்ந்து நடத்திய போர் ஆகையினாலே, கடம்பறுத்த செய்தி இருவர் மேலும் கூறப்படுகிறது. *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலில் திரு. மு. இராகவையங்கார் அவர்கள், நெடுஞ்சேரலாதன் செய்த கடற்போர் வேறு, செங்குட்டுவன் செய்த கடற்போர் வேறு என்று பொருள்பட எழுதியிருப்பது தவறாகும்.

> கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
> படர்ந்த நிலம் போர்த்த பாடலேபாடல்
>
> (*சிலம்பு* 29, வள்ளைப்பாட்டு, 3)

என்றும்,

> பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
> கங்கைப் பேரியாற் றுக் கரை போகிய
> செங்குட்டுவன் (*சிலம்பு* 30, *கட்டுரை* 12-14)

என்றும் செங்குட்டுவன் செய்த கடற்போர்ச் செய்தி *சிலப்பதிகாரத்தில்* கூறப்படுகிறது.

செங்குட்டுவனின் கடற்போரைப் பரணர் ஒரு செய்யுளில் உயர்வு நவிற்சியாக நயம்படக் கூறுகிறார். நிலத்திலே போர் செய்வதற்குப் பகையரசர் கிடைக்காத படியாலே செங்குட்டுவன் கடலில் சென்று போர் செய்தான் என்று அவர் கூறுகிறார்.

> படைநிலா விலங்கும் கடல்மருள் தானை
> மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
> பொருமுரண் பெறாஅது விலங்குசினஞ் சிறந்து
> செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
> ஓங்குதிரைப் பௌவம் நீங்கவோட்டிய
> நீர் மாண் எஃகம் (*அகம்* 212 : 15-20)

என்று அவர் கூறுகிறார்.

செங்குட்டுவனுடைய கடற்போர் அவனுக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று,

> கடம் பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்
>
> (*சிலம்பு* 29, ஊசல்வரி)

என்றும்,

> பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
> கங்கைப் பேரியாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன்
>
> (*சிலம்பு* 30, கட்டுரை, 12-14)

என்றும்,

நீர்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ
(5ஆம் பத்து 8 : 3-4)

என்றும் இவன் புகழப்படுகிறான். கடற்போரில் வெற்றிபெற்ற படியால் இவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்றும் 'சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்' என்றும் சிறப்புப் பெயர் பெற்றான்.

செங்குட்டுவனின் தமயனான களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் அரசாட்சிக் காலத்தில் கொங்காணத்து (துளு நாட்டு) நன்னனுடன் போர் நடந்தது. அப்போர் நிலைச் செருவாகப் பல காலம் நடந்தது. அந்தப் போரிலும் செங்குட்டுவன் தன் தமயன் சார்பாகப் போர் செய்து வெற்றிபெற்றான்.

கொங்காணத்து (துளு நாட்டு) நன்னனுடன் இவர்கள் போர் செய்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், சேரர்களுக்கு உரியதாயிருந்த பூழி நாட்டை நன்னன் கைப்பற்றிக் கொண்டது. இரண்டாவது காரணம், சேரர், கொங்கு நாட்டின் தென் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டிருக்கும்போது, நன்னன் கொங்கு நாட்டின் வடபகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தான். நன்னனின் ஆக்கமும் உயர்வும் சேரர்களுக்கு ஆபத்தாக இருந்தது. இக்காரணங்களினால் நார்முடிச் சேரல் துளு நாட்டு நன்னனுடன் போர் செய்தான். சேரர், துளு நாட்டை மூன்று பக்கங்களிலிருந்து தாக்கினார்கள். துளு நாட்டின் தெற்குப் பக்கத்திலிருந்து நார்முடிச்சேரல் தாக்கினான். கிழக்குப் பக்கத்திலிருந்து அவன் தம்பி ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தாக்கினான். மேற்குப் பக்கத்தில் கடற்கரையோரமாகச் செங்குட்டுவன் தாக்கினான். துளு நாட்டு நன்னனும் சேனைப் பலமுள்ளவன். ஆகையால் அவன் இவர்களைக் கடுமையாக எதிர்த்தான். இப்போர் நிலைச்செருவாகப் பலகாலம் நடந்தது என்பதை முன்னமே கூறினோம். மேற்குக் கடற்கரைப் பக்கமாகப் போர் செய்த செங்குட்டுவன் துளு நாட்டுக் கடற்கரைப் பக்கத்திலிருந்த வியலூர், கொடுகூர் என்னும் ஊர்களை வென்று கைப்பற்றினான்.

உறுபுலி அன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து
(*பதிற்று.* 5 ஆம் பத்து, பதிகம்)

என்று பரணரும்,

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின் (*சிலம்பு* 28 : 114-115)

என்று இளங்கோவடிகளும் இச்செய்தியைக் கூறுகிறார்கள்.

சேர அரசர் பரம்பரை

(*பதிற்றுப்பத்துப்* பதிகத்தின்படி)

மூத்த வழி

- உதியன் சேரல் (வானவரம்பன்) = வெளியன் வேண்மாள் நல்லினி
  - வேளாவிக் கோமான் பதுமன் தேவி I = குடக்கோ நெடுஞ் சேரல் ஆதன் (இமயவரம்பன்) 2ஆம் பத்து 58 ஆண்டுகள் = சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணை
    - (வேளாவிக் கோமான் பதுமன் தேவி I வழி)
      - களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் (வானவரம்பன்) 4ஆம் பத்து 25 ஆண்டுகள்
      - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (வானவரம்பன்) 6ஆம் பத்து 38 ஆண்டுகள்
    - (சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணை வழி)
      - இளங்கோ வேண்மாள் = கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் (இமயவரம்பன்) 5ஆம் பத்து 55 ஆண்டுகள்
        - குட்டுவன் சேரல்
      - இளங்கோ அடிகள் (*சிலப்பதிகாரக்* காவிய ஆசிரியர்)
  - பல்யானைச் செல்கெழு குட்டுவன் (3ஆம் பத்து) 25 ஆண்டுகள்

இளைய வழி

- அந்துவன் பொறையன் = பொறையன் பெருந்தேவி
  - செல்வக்கடுங்கோ வாழியாதன் (7ஆம் பத்து) 25 ஆண்டுகள் = வேளாவிக் கோமான் பதுமன் தேவி II
    - தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறை (8ஆம் பத்து) 17 ஆண்டுகள் = மையூர் கிழான் மகள் அந்துவஞ் செள்ளை
      - இளஞ்சேரல் இரும்பொறை (9ஆம் பத்து) 16 ஆண்டுகள்

வியலூர் துளு நாட்டில் இருந்தது என்பதை மாமூலனார் என்னும் புலவர்,

> அகவுநர்ப் புரந்த அன்பிற் கழல்தொடி
> நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான்
> வயலை வேலி வியலூர்
>
> (*அகம்* 97 : 11-13)

என்று கூறினார்.

சேர அரசர்கள் கொங்கு நாட்டைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கைப்பற்றினார்கள் என்று முன்னமே கூறினோம். கொங்கு நாட்டில் பேரரசன் இல்லாமல் சிறுசிறு குறுநில மன்னர்கள் இருந்தபடியால் அவர்களைச் சேரர் எளிதாக வென்று அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது சோழ பாண்டிய அரசர் வாளா இருக்கவில்லை. கொங்கு நாட்டுச் சிற்றரசர்களுக்கு உதவியாக இருந்து சோழரும் பாண்டியரும், சேரர் கொங்கு நாட்டைக் கைப்பற்றாதபடி தடுத்து வந்தார்கள். அதனால் சோழ பாண்டியருடன் சேர அரசர் போர் செய்ய வேண்டியதாயிற்று. செங்குட்டுவனுடைய பங்காளித் தமயனான தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறை கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டிருந்தபோது, சோழ பாண்டியர் கொங்கருடன் ஒன்று சேர்ந்து அவனை எதிர்த்தார்கள். அப்போது செங்குட்டுவன், அண்ணனான பெருஞ்சேரலிரும் பொறைக்கு உதவியாகச் சென்று சோழ பாண்டியருடன் போர் செய்து வென்றான். இச்செய்தியை இளங்கோவடிகள்,

> நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
> கொங்கர் செங்களத்துக் கொடுவரிக் கயற்கொடி
> பகைபுறத்துத் தந்தனர் ஆயினும் ஆங்கவை
> திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன
>
> (*சிலம்பு* 25 : 152-158)

என்றும்,

> கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
> பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
> வடவாரிய ரொடு வண்டமிழ் மயக்கத்துன்
> கடமலை வேட்டம் கட்புலம் பிரியாது
>
> (*சிலம்பு* 25 : 156-159)

என்றும் அமைச்சனாகிய வில்லவன் கோதை கூறியதாகச் *சிலப்பதிகாரம்* கூறுவது காண்க. இப்போரில் கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர், ஆரியர் ஆகிய பல நாட்டு வீரர்கள் போர் செய்தது கூறப்படுகிறது. இதில் கூறப்

பட்ட பங்களர், கட்டியர், கங்கர் என்பவர்கள் அக்காலத்துத் தமிழகத்தின் எல்லைப்புறத்தில் இருந்தவராவர். பங்களர் என்பவர் பங்கள நாட்டவர். பங்கள நாடு, வேங்கடமலைக்கு மேற்கே இருந்த தமிழகத்தின் எல்லைப்புற நாடு. பங்கள நாட்டைப் பற்றிய சாசன எழுத்துக்கள் சில தமிழில் கிடைத்துள்ளன. இந்தப் பங்களரைப் பங்காளர் (வங்காளர்) என்று தவறாகக் கருதிக்கொண்டு பங்காளர் என்னும் பெயரைக் கூறுகிற *சிலப்பதிகாரம்* பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல், சங்ககாலத்து நூல் அன்று என்று பிழையான கருத்தைத் திரு. வையாபுரிப் பிள்ளை, நீலகண்ட சாஸ்திரி போன்ற அறிஞர்கள் தவறாக எழுதியுள்ளார்கள் (இவர்களின் தவறான முடிபை முன்பு ஒரு கட்டுரையில் மறுத்து எழுதியிருக்கிறேன்).

செங்குட்டுவன் செய்த போர்களில் மற்றொரு போர், பேர்பெற்ற மோகூர்ப் போர். மோகூர் என்பது பாண்டி நாட்டில் மதுரைக்கு வடகிழக்கே 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இது பிற்காலத்தில் வைணவத் திருப்பதிகளில் ஒன்றாகத் திருமோகூர் என்று பெயர் பெற்று விளங்குகிறது. மோகூரைப் பழையன் என்னும் குடிப் பெயரையுடைய சிற்றரசர் பரம்பரையாக ஆண்டுகொண்டிருந்தார்கள். அவர்கள் பாண்டிய அரசர்களின் சேனைத்தலைவராக இருந்தவர்கள். அந்தப் பழையர்களில் ஒருவன் அறுகை என்னும் வீரனை வென்று புகழ்பெற்றிருந்தான். தோல்வியடைந்த அறுகையின் சார்பாகச் செங்குட்டுவன் மோகூரின்மேல் படையெடுத்துச் சென்று, பழையனுடன் போர் செய்து வென்று, அவனுடைய காவல்மரமாக இருந்த வேப்ப மரத்தை வெட்டி, அதனால் முரசு செய்தான். செங்குட்டுவனுடைய இந்த மோகூர்ப் போர் வெற்றியை 5ஆம் பத்தில் பரணர் பாடுகிறார்:

> நுண்கொடி யுழிஞை வெல்போர் அறுகை
> சேணன் ஆயினும் கேள்என மொழிந்து
> புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
> அரண்கள் தாவுநீஇ யணங்குநிகழ்ந் தன்ன
> மோகூர் மன்னன் முரசங் கொண்டு
> நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
> முரசுசெய முரற்சிக் களிறுபல பூட்டி
> ஒழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி
>
> (5ஆம் பத்து 4 : 10-17)

என்றும்,

> வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
> மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்

வலம்படு குழூஉநிலை அதிர மண்டி
....
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவட் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவன் (5ஆம் பத்து, 9 : 7-17)

என்றும்,

பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முரரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி
(5ஆம் பத்து, பதிகம் 13-17)

என்றும் இப்போர்ச் செய்தி கூறப்படுகிறது.

(பழைய உரை: "வாலிழை கழிந்த பெண்டிர் என்றது அப் பழையன் பெண்டிரை; கூந்தல் முரற்சி என்றது, அவர் கூந்தலை அரிந்து திரித்த கயிற்றினை; குஞ்சர ஒழுகை பூட்டியது அப்பழையன் வேம்பினை ஏற்றிக் கொண்டு போதற்கு").

பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்பு முதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணி பொறைய (*சிலம்பு* 27 : 124-126)

என்று இப்போர்ச் செய்தியை இளங்கோவடிகள் கூறுகிறார். செங்குட்டுவனுடைய மோகூர்ப் போர் இவ்வளவு பெருமை யடைந்ததற்குக் காரணம் என்ன வென்றால், மோகூர் பழையனுக்கு உதவியாகப் பாண்டியனும் சோழனும் வேறு சில வேளிர்களும் வந்து செங்குட்டுவனுடன் போர் செய்தபடியால் தான். ஆகவே, செங்குட்டுவன் பலமான எதிர்ப்பைத் தாங்கி வெல்ல வேண்டியதாயிருந்தது.

குறிப்பு: மோகூரின் மேல் மோரியர் படையெடுத்து வந்து போர் செய்தனர் என்றும் கூறப்படுகிறது. வம்பமோரியர், மோகூரின் மேல் படையெடுத்து வந்ததற்குச் சான்று மாமூலனாரின் அகப்பாட்டு (*அகம்* 251). இச்செய்யுளில் மாமூலனார்,

வெல் கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்

தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய் உம்பர்
(*அகம்* 251 : 6-14)

என்று கூறுகிறார். மோரியர் (மௌரியர்) மோகூரின் மேல் படையெடுத்து வந்ததைப் பற்றி (*அகம்* 281 : 7-12, 69 : 10-12, 62 : 10-11; *புறம்* 175 : 6-8) வேறு சில செய்யுட்களும் கூறுகின்றன. ஆனால், இச்செய்யுட்கள் மௌரியரைக் கூறுகின்றன; மோகூரைக் கூறவில்லை. மோரியர், மோகூரின் மேல் படையெடுத்து வந்த செய்தியைக் கூறுவது மாமூலனாரின் ஒரே ஒரு செய்யுள் மட்டுந்தான். அச்செய்யுட் பகுதி மேலே காட்டப்பட்டது.

மோரியர் மோகூரின்மேல் படையெடுத்து வந்தது பற்றிப் பல அறிஞர்கள் ஆராய்ந்து பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். பி. டி. சீநிவாச அய்யங்கார், டாக்டர் எஸ். கிருஷ்ண சாமி அய்யங்கார், மு. இராகவையங்கார், K.A. நீலகண்ட சாஸ்திரியார், இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர், இராமச்சந்திர தீக்ஷிதர் முதலிய பல அறிஞர்கள் இதுபற்றி எழுதியிருக்கிறார்கள். திரு மு. இராகவையங்கார் அவர்கள் தாம் எழுதிய *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலில், மோகூர்-மௌரியர் போரைப்பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்: "மோரியவரசர் திக்குவிசயஞ் செய்து கொண்டு தென்றிசை நோக்கி வந்தபோது, இப்பழையன் அவர்களுக்குப் பணியா மையால், அவர்க்கும் இவனுக்கும் பெரும்போர் நிகழ்ந்ததென்று தெரிகின்றது" என்று எழுயிருக்கிறார். மற்றும் பல அறிஞர்கள் இது பற்றிப் பல கருத்துக்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அவை எல்லாம் தவறானவை. மாமூலனார் செய்யுளில் ஒரே ஒரு எழுத்துப் பிழை ஏடெழுதுவோரால் நிகழ்ந்துவிட்டது என்று நான் கருதுகிறேன்.

மோகர் என்று எழுதப்படவேண்டியது மோகூர் என்று எழுதியதுதான் அந்தப் பிழை என்று கருதுகிறேன்.

தெம்முனை சிதைத்த ஞான்றை மோகர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழுதானை வம்ப மோரியர்

என்று அது இருக்கவேண்டும். மோகர் பணியாமையின் என்று இருக்கவேண்டிய சொல் மோகூர் பணியாமையின் என்று ஏடெழுதுவோரால் பிழையாக எழுதப்பட்டிருக்கவேண்டும். மோகர் என்பவர் கொங்கண நாட்டின் (துளு நாட்டின்) கடற்

கரையோரத்தில் வாழ்ந்திருந்த போர்ப் பிரியராகிய ஓர் இனத்தார். அவர்கள் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்திருந்தனர். அவர்களுடைய சந்ததியார் இன்றும் மோகர் என்னும் அந்தப் பெயருடனே துளு நாட்டில் (தென் கன்னட மாவட்டம்) இருக்கிறார்கள் (see Thurston's *Caste and Tribes of South India*). பாண்டி நாட்டிலும் பரதவர் என்னும் இனத்தார் போர் விருப்பமுடையவராகப் பாண்டியனுக்கு அடங்காமல் குறும்பு செய்து கொண்டிருந்தபோது அவர்களை நெடுஞ்செழியன் வென்று அடக்கினான் என்பதை அறிகிறோம். இதை *மதுரைக் காஞ்சி* 'தென்பரதவர் மிடல்சாய' என்று கூறுகிறது. அது போன்று, துளு நாட்டு மோகர் பணியாமையினால் அவர்களை வெல்வதற்கு மோரியப் படை வந்தது. இச்செய்தியைத்தான் மாமூலனார் தம் செய்யுளில் கூறினார். மோகர் என்னுஞ் சொல் மோகூர் என்று தவறாக எழுதப்பட்டபடியால், அது பல ஆராய்ச்சிக்கு இடங் கொடுத்துப் பலப்பல முடிவுக்கு இடமா யிற்று. இதுபற்றி விரிவாக எழுதுவதற்கு இது இடமன்று.

சோழ நாட்டிலும் செங்குட்டுவன் ஒரு போரை வென்றான் என்று 5ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

வெந்திறல்
ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறத்து
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்து (பதிகம் 17-20)

(குடிக்குரியோர் என்றது அரசிற்குரியாரை என்று பழைய வுரை விளக்கங்கூறுகிறது). சோழன் கரிகாலன் இறந்த பிறகு அவன் மகனான கிள்ளிவளவன் முடி சூடியபோது சோழ அரசர் குடியில் பிறந்த தாயாதிகள் ஒன்பது பேர் முன்வந்து தங்களுக்கு ஆட்சியுரிமையுண்டென்று குழப்பம் உண்டாக்கினார்கள். அதனால் சோழ நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்தது. அது நிலைச்செருவாக நீண்டு நடந்தது. அப்போது செங்குட்டுவன், தன் மைத்துனனான கிள்ளிவளவன் சார்பாக ஒன்பது அரசரு டனும் போர் செய்து வென்று ஆட்சியைக் கிள்ளிவளவனுக்குக் கொடுத்தான். இதனைச் *சிலப்பதிகாரமும்* கூறுகிறது.

மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் அழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்
(*சிலம்பு*, நீர்ப்படை 118-123)

என்றும்,

ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரிவாயில் நிலைச்செரு வென்று

(*சிலம்பு*, நடுகல் 116-117)

என்றும் கூறுவது காண்க. (நேரிவாயில்-உறையூர் தெற்கில் வாயிலதோர் ஊர்: அரும்பதவுரை).

செங்குட்டுவன் வடநாடு சென்றபோது கங்கைக் கரையிலே போர் செய்திருக்கிறான். கங்கைக் கரையில் இவன் இரண்டு போர்களைச் செய்தான் என்பதைச் *சிலப்பதிகாரத்தினால்* அறியலாம். ஒன்று செங்குட்டுவன் தன் தாயைக் கங்கை நீராட்டக் கொண்டு போனபோது நிகழ்ந்தது. மற்றொரு போர், அவன் கண்ணகிக்கு இமயத்தில் கல்லெடுக்கச் சென்றபோது நிகழ்ந்தது. அவற்றைப் பற்றி யாராய்வோம்.

கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை யாட்டிய அந்நாள்
ஆரியமன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்
கொருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்

(*சிலம்பு*, காட்சி 160-165)

என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

இதனால், தன் தந்தை நெடுஞ்சேரலாதன் போர்க் களத்தில் புண்பட்டுக் கிடந்து இறந்த பிறகு, இவன் தன் தாயைக் கங்கைக் கரைக்கு அழைத்துச் சென்றதும் அவ்வமயம் அங்கிருந்த அரசர்களுடன் போர் செய்ய நேரிட்டுப் போர் செய்து வென்றதும் அறியப்படுகிறது. இந்தச் செய்தியைப் பற்றி திரு. மு. இராகவையங்கார் தாம் எழுதிய *சேரன்செங்குட்டுவன்* என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்: "இனிச் செங்குட்டுவன் தந்தை நெடுஞ்சேரலாதன், முற்கூறியபடி பெருவிறற்கிள்ளியுடன் பொருது இறந்தபோது, அவன் மனைவியரும் உடனுயிர் நீத்தனர் என்பது *புறநானூற்றின்* 62ஆம் பாடலாற் புலப்படுகின்றது. இதனால், செங்குட்டுவன் தாய் நற்சோணையும் தன் கணவன் சேரலாதனுடன் சககமனஞ் செய்தவள் என்பது பெறப்படும்; ஆயின், அத்தாயின் பொருட்டு அமைத்த பத்தினிப் படிமத்தை (உடன் கட்டையேறிய பத்தினியின் உருவம் வரைந்த சிலை) செங்குட்டுவன் கங்கை நீராட்டச் சென்றவனாதல் வேண்டும். கங்கைக்கரையில் செங்குட்டுவன் நிகழ்த்திய இவ்வரிய செயல் அவனது கன்னிப் போராகக் கருதப்படுகின்றது."

ஐயங்கார் அவர்கள் கூறுவதுபோல உடன்கட்டை ஏறித் தீக்குளித்த செய்தி *புறம்* 62ஆம் செய்யுளில் கூறப்படவில்லை. குடக்கோ நெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருநற் கிள்ளியும் போரில் பொருது இருவரும் புண்பட்டு விழுந்து

சிலகாலம் உயிர் போகாமல் கிடந்தனர். அப்போது அம்மன்ன ரின் மனைவியர் அவர்களைத் தழுவிக்கொண்டு வருந்தினார்கள் என்பதே அச்செய்யுளின் வாசகம்.

இடங்கெட ஈண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோர் இன்றித் தெருவர
உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்க மைந்தனரே (*புறம்* 62 : 11-15)

என்று அச்செய்யுள் கூறுகிறது. இதில், அவர் மனைவியர் தீக் குளித்த செய்தி கூறப்படவில்லை. அக்காலத்தில், அரசியர், இறந்த கணவருடன் உடன்கட்டை ஏறவேண்டும் என்னும் கட்டாயமும் இல்லை. விரும்பினால் தீப்பாயலாம் என்பதே அக் காலத்து வழக்கம். ஐயங்கார் அவர்கள் கூறுவதுபோல, செங்குட் டுவன் தாய் தீப்பாய்ந்து இறக்க, அவருடைய எலும்பை அல்லது உருவச்சிலையைச் செங்குட்டுவன் கங்கையில் கொண்டுபோய் நீராட்டினான் என்று கொண்டாலும் இழுக்கில்லை. ஆனால், இதுபற்றித் திரு. நீலகண்ட சாஸ்திரியார் கூறுவதுதான் வியப்பாக இருக்கிறது.

மேலே காட்டிய *புறம்* 62ஆம் செய்யுள், நெடுஞ்சேரலாதன் இறந்தபோது அவன் மனைவியும் உடன்கட்டை ஏறி இறந்தார் என்று கூறுவதாகச் சாஸ்திரியாரும் கருதுகிறார். கருதுவதோடு அமையாமல், *சிலப்பதிகாரம்* கூறுகிற செய்தி, அதாவது செங்குட்டுவன் தன் தாயைக் கங்கைக்கு நீராட்டச் சென்ற செய்தி பொய்யான கட்டுக்கதை என்று கூறுகிறார். அதற்கு இவர் அரும்பதவுரையாசிரியர் எழுதியதை ஆதாரம் காட்டுகிறார்.

கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோமகளை யாட்டிய அந்நாள்

என்று *சிலம்பு* (காட்சிக்காதை 160-161) அடிகளுக்கு உரை எழுதுகிற அரும்பத உரையாசிரியர், "எங்கோமக ளென்றது, செங்குட்டுவன் மாதாவை; அவளை இவன் கொண்டுபோய்த் தீர்த்தமாட்டினதொரு கதை" என்று எழுதுகிறார். அரும்பத உரையாசிரியர், தீர்த்தமாட்டின தொருகதை என்று எழுதி யிருப்பதை நீலகண்ட சாஸ்திரியார், அது பொய்க் கதையென்று அரும்பத உரையாசிரியர் கூறியதாகப் பொருள் செய்து கொண்டார் (A Comprehensive History of India, Vol. Two, 1957, p.524). சரித்திரங்களையும் கதை என்று கூறுவது அக்காலத்து வழக்கம். தேசிங்குராஜன் கதை, கட்டபொம்மன் கதை, முத்துப்பட்டன் கதை, மதுரைவீரன் கதை என்றுதான் கூறப்படுகிறதே தவிர, தேசிங்குராஜன் சரித்திரம், கட்டபொம்மன் சரித்திரம்,

முத்துப்பட்டன் சரித்திரம் என்று கூறப்படவில்லை. கதை என்று கூறப்படுவதனாலே தேசிங்குராஜன், கட்டபொம்மன் முதலியவர்களைப் பொய்யாகப் புனைந்துரைக்கப்பட்ட கதாபாத்திரங்கள் என்று சாஸ்திரியார் கருதுகிறாரா? இராமாயணக் கதை, பாரதக் கதை என்றுதான் வழங்கப்படுகின்றன. அவையும் இந்தியச் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளன. அரும் பதவுரையாசிரியர் கதை என்று எழுதியதன் கருத்து 'ஒரு வரலாறு' என்னும் பொருளுடையது. சாஸ்திரியார் கருதுவதுபோல பொய்க்கதை என்று பொருள் கொள்வது தவறு. அது உண்மைச் செய்தியே.

செங்குட்டுவன் தன் தாயை உயிருடன் கங்கைக் கரைக்கு நீராட்ட அழைத்துச் சென்றிருந்தாலும் அல்லது இறந்துபோன அவள் எலும்புகளைக் கங்கையில் போடச் சென்றிருந்தாலும் அவன் அதன் பொருட்டுக் கங்கைக்குச் சென்றது உண்மையே. செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ அடிகளே இதனைக் கூறுவதனால் இதை உண்மை என்றே கொள்ளலாம். சாஸ்திரியார், *சிலப்பதிகாரத்தைப்* புனைகதை என்று கூறுவதற்கு எத்தனையோ தவறான சான்றுகளைக் காட்டுகிற வகையில் இதையும் ஒரு சான்றாகக் கொண்டார். எனவே, செங்குட்டுவன் கங்கையில் நீராட்டினான் என்பது நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்ச்சியே. இது செங்குட்டுவன் இளவரசனாக இருந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி.

செங்குட்டுவன் தன் முதிர்ந்த வயதில் இரண்டாம் முறையாகக் கங்கைக்குச் சென்றது கண்ணகி சிலை செய்யக் கல் கொண்டுவருவதற்காக வடநாடு சென்ற போது. இச்செய்தியை இவன்மேல் பாடப்பட்ட 5ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

> கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
> கானவில் கானங் கணையிற் போகி
> ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
> இன்பல் அருவிக் கங்கை மண்ணி (5ஆம் பத்து, பதிகம்)

என்று பதிகம் கூறுகிறது.

இதிலும் திரு. கே. எ. நீலகண்ட சாஸ்திரியார் குறை காண்கிறார். *சிலப்பதிகாரம்* நிகழ்ச்சிகளை அழகுபடுத்தி அலங்கரித்துக் கூறுகிறது என்று இவர் குறை கூறுகிறார். ஒரு ஆரிய அரசனை வென்றதை ஆயிரம் அரசரை வென்றதாகச் *சிலப்பதிகாரம்* கூறுகிறது என்று சுட்டிக் காட்டுகிறார். *சிலப்பதிகாரம்* சரித்திர வரலாற்றைக் கூறுகிற காவிய நூல் என்பதைச் சாஸ்திரியார் மறந்துவிட்டு, அதைச் சரித்திரத்தை மட்டும் கூறுகிற தனிவரலாற்று நூல் என்று கருதிக்கொண்டு இவ்வாறெல்லாம் குறை காண்கிறார். காவிய நூலில் அலங்காரங்களும் கற்பனைகளும் இல்லாமற்போனால் அழகுபடுமோ? சரித்திர

ஆராய்ச்சி செய்கிறவர் காவிய நூலிலே கற்பனைகளைத் தள்ளி விட்டு வரலாற்றை மட்டுங் கொள்ளவேண்டும்.

செங்குட்டுவன் கண்ணகிச் சிலைக்காக வடநாடு சென்றதும் கங்கையில் அச்சிலையை நீராட்டியதும் முதலிய செய்திகள், அவனைப் பரணர் பாடிய 5ஆம் பத்தில் கூறப்படவில்லை. பதிகம் மட்டும் கூறுகிறது. ஏன் பரணர் கூறவில்லையென்றால், அவர் செங்குட்டுவன் மேல் 5ஆம் பத்துப் பாடியபோது இந்நிகழ்ச்சிகள் நிகழவில்லை. அப்புலவர் செங்குட்டுவனுடைய தந்தை, பாட்டன் காலத்திலும் இருந்தவர். அவர் செங்குட்டு வனைப் பாடியபோது மிகுந்த வயதுள்ளவராக இருந்தார். இந்நிகழ்ச்சிகள் செங்குட்டுவனுடைய பிற்கால வாழ்க்கையில் நிகழ்ந்தவை. அப்போது பரணர் இறந்து போனார்.

சேர அரசர் தக்காண தேசத்தை யாண்ட சதகர்ணி அரசரு டன் நட்புக் கொண்டிருந்தார்கள் என்பதை முன்னமே கூறி னோம். செங்குட்டுவனும் சதகர்ணி (நூற்றுவர் கன்னர்) அரச ருடன் நட்பாக இருந்தான். அவன் பத்தினிச்சிலைக்குக் கல் கொண்டுவர வடநாடு செல்லவிருப்பதைக் கேள்விப்பட்ட சதகர்ணியரசர் (நூற்றுவர் கன்னர்) 'நீர் இமயம் போக வேண்டாம். உமக்கு வேண்டியதை நாங்கள் செய்து தருகிறோம்' என்று தங்கள் தூதுவர் மூலம் சொல்லியனுப்பினார்கள்.

வேற்றுமை இன்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும் கோற்றொழில் வேந்தே
வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவுள் எழுதவோர் கற்கே யாயின்
ஓங்கிய விமயத்துக் கற்கால் கொண்டு
வீங்கு நீர்க் கங்கை நீர்ப்படை செய்தாங்கு
யாந்தரும் ஆற்றலம் என்றனர் என்று
வீங்குநீர் ஞாலம் ஆள்வோய் வாழ்களன

(*சிலம்பு*, கால்கோள் 148-155)

அதுகேட்ட செங்குட்டுவன் தான் மற்றொரு காரியத்துக்காகவும் வடநாடு போவதாக அவர்களுக்குத் தெரிவித்துக் கங்கையாற் றைக் கடந்துபோவதற்குத் தோணிப்பாலம் முதலியன செய்து தரும்படித் தூதுவர் மூலம் சதகர்ணியரசருக்குக் கூறினான்.

நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி யாங்குக்
கங்கைப் பேர்யாறு கடத்தற் காவன
வங்கப் பெருநிரை செய்தாம்

(*சிலம்பு*, கால்கோள் 164-165)

என்று தூதுவர் மூலம் நூற்றுவர்கன்னர்க்குச் செய்தி சொல்லி யனுப்பியதாகச் *சிலம்பு* கூறுகிறது.

இவன் விரும்பியவாறே நூற்றுவர்கன்னர் கங்கை யாற்றில் தோணிப்பாலம் அமைத்துத் தந்தனர்; இவன் தன் சேனைகளுடன் அப்பாலத்தைக் கடந்து இமயஞ் சென்றான்.

> பாடி யிருக்கை நீங்கிப் பெயர்ந்து
> கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற்பெற்ற
> வங்கப் பரப்பின் வடமருங் கெய்தி
> (*சிலம்பு*, கால்கோள் 175-177)

என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

எனவே, செங்குட்டுவன் இமயமலைக்குச் சென்றபோது பேரரசராகிய சதகர்ணியரசரின் உதவிபெற்றுச் சென்றான் என்பதும், அவ்வரசர்கள் இவனுடன் நட்பினராக இருந்தார்கள் என்பதும் தெரிகின்றன.

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தைந்து ஆண்டு வீற்றிருந்தான். இவன் இளவரசுப் பட்டங் கொண்டது முதல் இவ்வாண்டுகள் கணக்கிடப்பட்டன என்று தோன்றுகின்றது.

செங்குட்டுவன்மீது 5ஆம் பத்துப் பாடிய புலவர் பரணர் என்பவர். இதன்பொருட்டு இவர் பெற்ற பரிசில், உம்பற்காட்டு வாரியையும் செங்குட்டுவனுடைய மகனான குட்டுவன் சேரலையும் பெற்றார். செங்குட்டுவன் தன் மகனான குட்டுவன் சேரலைப் பரணருக்குக் கொடுத்தான் என்றால், அவனை அவருடைய மாணவனாகக் கொடுத்தான் என்பது பொருள். எனவே, பரணரிடம் செங்குட்டுவன் மகன் குட்டுவன் சேரல் கல்வி பயின்றான் என்பது தெரிகின்றது.

பரணர் உம்பர்காட்டு வாரியைப் பரிசிலாகப் பெற்றார் என்று கூறப்படுகிறார். செங்குட்டுவனுடைய தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை 2ஆம் பத்துப் பாடிய குமட்டூர்க் கண்ணனாரும் உம்பற்காட்டில் ஐஞ்ஞூறூர்ப் பிரமதாயம் பரிசிலாகப் பெற்றார் என்பதை இங்கு நினைவுகூரவேண்டும்.

இளஞ்சேரல் இரும்பொறை

இவனுக்குக் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்றும், சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை என்றும் பெயர்கள் உண்டு. இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பியான குட்டுவன் இரும்பொறையின் மகன். அதாவது, செங்குட்டுவனுடைய தாயாதித் தமயனின் மகன். இவனும் செங்குட்டுவன் காலத்தில் இருந்தவன். பொலத்தோப் பொறையன் என்றும் பல்வேற் பொறையன் என்றும் இவன் கூறப்படுகிறான். இவன், சேரநாட்டின் ஒரு பகுதியையரசாண்டான். எந்தப் பகுதி என்பது திட்டமாகத் தெரியவில்லை. சேர இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்த கொங்கு நாட்டையரசாண்

டிருக்கக் கூடும். வானியாற்றின் நீர்போன்று மென்மையான உள்ளம் உடையவன் என்று இவன் கூறப்படுகிறான் (*பதிற்று* 9ஆம் பத்து 6 : 12-13). வானியாறு கொங்கு நாட்டில் ஓடுகிறது.

இளங்சேரல் இரும்பொறையைப் *பதிற்றுப்பத்து* 9ஆம் பத்தில் பாடினவர் பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவர். இப் புலவர் இவ்வரசனிடம் பரிசு பெறச் சென்றார். ஆனால், இவன் பரிசு கொடுக்கக் காலந் தாழ்த்தினான். அதனால் அவர் மனம் வருந்திப் பாடினார். இப்பாடல்களில் அவருடைய வறுமைத் துன்பம் நன்கு புலப்படுகிறது (*புறம்* 210, 211). பரிசு கொடுக்கக் காலந்தாழ்த்திய இளஞ்சேரல் இரும்பொறை, இப்புலவர் அறியாமல் இவருக்கு வீடும் மனையும் ஊரும் அமைத்துப் பிறகு அவற்றைக் கொடுத்தான். "அவர் அறியாமை ஊரும் மனையும் வளமிகப் படைத்து ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி எண்ணற்கு ஆகா அருங்கல வெறுக்கையொடு பன்னூறாயிரம் பாற்படவகுத்துக்" கொடுத்தான் என்று *பதிற்றுப்பத்து* ஒன்பதாம் பத்தின் கீழ்க்குறிப்புக் கூறுகிறது.

பிறகு பெருங்குன்றூர்கிழார் இவ்வரசன் மேல் 9ஆம் பத்துப் பாடினார். இதற்குப் பரிசாக "மருளிலார்க்கு மருளக்கொடுக்க வென்று உவகையின் முப்பத்தீராயிரங் காணம்" (காணம்-பொற்காசு) கொடுத்தான்.

இளஞ்சேரல் இரும்பொறை சென்னியர் பெருமான் (சோழன்) ஒருவனை வென்றான்.

> நன்மரந் துவன்றிய நாடுபல தரீஇப்
> பொன்னவிர் புனைசெயல் இலங்கும் பெரும்பூண்
> ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
> இட்ட வெள்வேன் முத்தைத் தம்மென
> ....
> நனவிற் பாடிய நல்லிசைக்
> கபிலன் பெற்ற ஊரினும் பலவே (9ஆம் பத்து 5)

இதற்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர் இதனை இவ்வாறு விளக்குகிறார்: "இளஞ்சேர லிரும்பொறை சென்னியர் பெருமானுடைய நாடுகள் பலவற்றையும் எமக்குக் கொண்டு தந்து அச்சென்னியர் பெருமானை எம்முன்னே பிடித்துக் கொண்டு வந்து தம்மினெனத் தம் படைத் தலைவரை ஏவச் சென்னியர் பெருமான் படையாளர் பொருது தோற்றுப் போகட்ட வெள்வேல் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன் நாடுகாண் நெடுவரையின் நாள் மகிழிருக்கைக் கண்ணே தன்முன் திணைமுதல்வரைப் போல அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய மறம்புரி கொள்கையைப் பாடின கபிலன் பெற்ற ஊரினும் பலவென மாறிக்கூட்டி வினைமுடிவு செய்க."

இதனால், இவனுடைய படைவீரர் சென்னியர் பெருமான் (சோழன்) உடன் போர் செய்தனர் என்பதும் அப்போரில் சோழனுடைய படைவீரர் தங்கள் வேல்களைப் போர்க்களத்தில் போட்டுவிட்டு ஓடினார்கள் என்பதும், அந்த வேல்களின் எண்ணிக்கை, செல்வக்கடுக்கோ வாழியாதனைப் (*பதிற்றுப்பத்து* ஏழாம் பத்து) பாடின கபிலர் பரிசாகப் பெற்ற ஊர்களின் தொகையைவிட அதிகமாக இருந்தன என்பதும் தெரிகின்றன. இவ்வாறு தோற்றுப்போன சோழன் பெயர் கூறப்படவில்லை. ஆனால், அச்சோழன் பெயர் 'பொத்தியாண்ட பெருஞ்சோழன்' என்று (9ஆம் பத்துப் பதிகம்) கூறுகிறது. இந்தப் போரைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

மேலும், இளஞ்சேரல் இரும்பொறை ஐந்தெயில் என்னும் கோட்டையை முற்றுகையிட்டுச் சோழன், பாண்டியன், விச்சி, இளம்பழையன் மாறன் என்பவர்களையும் வென்று அவர்களிட மிருந்து கொண்டுவந்த பொருள்களை வஞ்சிமூதூரில் வைத்துப் பலருக்கும் வழங்கினான் (9ஆம் பத்து, பதிகம் 3-9).

பூதர் என்னும் தெய்வங்களைக் கொண்டுவந்து வஞ்சி மூதூரில் அமைத்து அவற்றிற்குச் சாந்தியும் சிறப்பும் செய்தான். இதனை,

> அருந்திறல் மரபிற் பெருஞ்சதுக் கமர்ந்த
> வெந்திறல் பூதரைத் தந்திவண் நிறீஇ
> ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு (9ஆம் பத்து 13-15)

என்பதனாலும்

> சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
> மதுக்கொள் வேள்வி வேட்டோன்
> (*சிலம்பு*, நடுகல் 147-148)

என்பதனாலும் அறியலாம்.

இளஞ்சேரல் இரும்பொறைக்கு அமைச்சனாக இருந்தவர் மையூர்கிழார் என்பவர். மையூர்கிழாரை இவ்வரசன் அறநெறி யில் வல்லவனாகச் செய்தான்.

> மெய்யூர் அமைச்சியல் மையூர்கிழானைப்
> புரையறு கேள்விப் புரோசு மயக்கி

என்று 9ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது. இதற்குப் பழைய உரை, "அமைச்சியல் மையூர்கிழானைப் புரோசு மயக்கி யென்றது தன், மந்திரியாகிய மையூர்கிழானைப் புரோகிதனிலும் அறநெறி அறிவானாகப் பண்ணி யென்றவாறு" என்று விளக்கம் கூறுகிறது.

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை பதினான்கு ஆண்டு வீற்றிருந்தான் என்று 9ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது.

இளஞ்சேரல் இரும்பொறை செங்குட்டுவனுக்கு முன்னமே, செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைப்பதற்கு முன்னமே இறந்துபோனான் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ னாயினும்
மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்

என்று *சிலம்பு* நடுகற்காதை (147-150) கூறுகிறது காண்க.

(வஞ்சிமா நகரத்தில் சதுக்கப்பூதரை அமைத்தவன் இளஞ் சேரல் இரும்பொறை என்று முன்னமே கூறினோம்). இதனையறி யாமல் திரு. நீலகண்ட சாஸ்திரியார், செங்குட்டுவனுக்குப் பிறகும் இளஞ்சேரல் இரும்பொறை உயிர்வாழ்ந்திருந்தான் என்று கூறுகிறார். செங்குட்டுவன் உத்தேசம் கி.பி. 180-லும் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை உத்தேசம் கி.பி. 190-லும் இருந்தனர் என்று இவர் கூறுவதானல் இது தெரிகிறது (*A Comprehensive History of India*. Vol II, K.A. Nilakanta Sastri, 1957, pp.522, 589). செங்குட்டுவன் உயிரோடு இருக்கும் போதே இறந்துபோன இளஞ்சேரல் இரும்பொறை அவனுக்குப் பிறகு எப்படி உயிர் வாழ்ந்திருக்க முடியும்? இளஞ்சேரல் இரும்பொறை இளமையிலேயே போர்க்களத்தில் இறந்து போனான்போலும்.

4. செங்குட்டுவன் ஆட்சி

செங்குட்டுவன் காலத்தில் சேர இராச்சியம் பெரியதாக இருந்தது. சேர நாடும் கொண்கான (துளு) நாடும், கொங்கு நாட் டின் பெரும்பகுதியும் இவனுடைய சேர இராச்சியத்தில் அடங்கியிருந்தன. இவனுடைய பாட்டன்மார், தந்தை, சிறிய தந்தை, தமயன் ஆகியோர் சேர இராச்சியத்தைப் பெரிதாக்கி வளர்த்ததை முன்னமே கூறினோம். மூத்த கால்வழியில் வந்தவன் ஆகையால் சேர இராச்சியத்தின் பேரரசனாகச் செங்குட்டுவன் இருந்தான். இவனுக்குக் கீழடங்கி இவனுடைய தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் இளஞ்சேரல் இரும்பொறை யும் சேர நாட்டுப் பகுதிகளையரசாண்டனர்.

செங்குட்டுவனுக்கு ஆட்சித்துணையாக ஐம்பெருங் குழு இருந்தது. ஐம்பெருங் குழு என்பது அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர் என்பவர். செங்குட்டுவ னுடைய தலைமை அமைச்சன் பெயர் வில்லவன் கோதை என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

பல்யாண்டு வாழ்கநின் கொற்றம் ஈங்கென
வில்லவன் கோதை வேந்தற்கு உரைக்கும்
(*சிலம்பு* காட்சி, 150-151)

("பல்யாண்டு வாழ்க என்று இனிச் சொல்லு கின்றான், வில்லவன் கோதை யென்னும் மந்திரி" என்பது அரும்பதவுரை.) இந்த வில்லவன் கோதை, செங்குட்டுவன் பத்தினிக்குக் கல் எடுக்க வட நாடு சென்றபோது அவனுடன் சென்றான்.

வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த
பல்வேற் றானைப் படைப்பல ஏவி
(*சிலம்பு*, கால்கோள், 251-252)

கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து விழாச் செய்த பிறகு செங்குட்டுவன், விழாவுக்கு வந்திருந்த அரசர்களுக்கு ஏற்றபடி வகைகளைச் செய்து கொடுக்கும்படி அமைச்சனாகிய வில்லவன் கோதையை ஏவினான் என்று *சிலம்பு* சொல்லுகிறது.

மன்னவர்க் கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவி
(*சிலம்பு*, நடுக்கல் 201-202)

சிலப்பதிகாரம் செங்குட்டுவனுடைய புரோகிதனைக் கூறுகிறது. ஆனால், அவன் பெயரைக் கூறவில்லை. அவன் ஆசான் என்று கூறுகிறது. ஆசான் என்பதற்குப் புரோகிதன் என்று அரும்பத உரையாசிரியர் உரை கூறுகிறார். வடநாட்டு வேந்தர் தமிழக வேந்தரை இகழ்ந்து கூறியதற்காகச் செங்குட்டுவன் வஞ்சினங் கூறியபோது, அருகிலிருந்த ஆசான் (புரோகிதன்) அவனுடைய கோபம் தணியும்படிச் சில வார்த்தை கூறினான் (*சிலம்பு*, கால்கோள் 19-24). பத்தினிக் கோட்டத்துக்குச் செங்குட்டுவன் போனபோது ஆசானாகிய புரோகிதனும் உடன் போனான் (*சிலம்பு*, .நடுகல் 222-223).

செங்குட்டுவனுடைய சேனைத் தலைவன் பெயர் அழும்பில்வேள் என்று தெரிகிறது. பத்தினிக் கடவுளுக்குக் கல் எடுக்கச் செங்குட்டுவன் வடநாடு செல்லக் கருதியபோது, அமைச்சனாகிய வில்லவன் கோதை, இதற்காகத் தாங்கள் செல்லவேண்டாம், வட நாட்டரசருக்குக் கடிதம் எழுதினால் அவர்கள் கல் எடுத்து அனுப்புவார்கள் என்று கூற, சேனைத் தலைவனாகிய அழும்பில்வேள், வடநாட்டுச் செலவுபற்றி வஞ்சிமாநகரத்தில் பறையறைந்து தெரிவித்தால் இச்செய்தியை ஒற்றர் மூலமாக வடநாட்டரசர் அறிவார்கள் என்று கூறினான். அதைச் செங்குட்டுவன் ஏற்று அவ்விதமே செய்தான் (*சிலம்பு*, காட்சி 173-178). கண்ணகிக்கு விழாத் தொடங்கியபோது, சிறைப்

பட்டிருந்த அரசர்களைச் சிறையிலிருந்து விடும்படி சேனாபதியாகிய அழும்பில்வேளை ஏவினான்.

> சிறையோர் கோட்டம் சீமின் யாங்கணும்
> கறைகெழு நாடு கறைவீடு செய்ம்மென
> அழும்பில் வேளோடு ஆயக் கணக்கரை
> முழங்குநீர் வேலி மூதூர் ஏவி (*சிலம்பு*, நடுகல் 203-206)

செங்கட்டுவனுக்குத் தூதர் பலர் இருந்தார்கள். அத்தூதர்களின் தலைவன் பெயர் சஞ்சயன். அவர்கள் தலைக்கீடு (தலைப்பாகை?) கட்டிச் சட்டையணிந்திருந்தனர்.

> சஞ்சயன் முதலா தலைக்கீடு பெற்ற
> கஞ்சுக முதல்வர் ஈரைஞ் ஞூற்றுவர்
> (*சிலம்பு*, கால்கோள் 137-138 143-145)

கங்கையாற்றில் தோணிப்பாலம் அமைக்கும்படி செங்குட்டுவன் சதகர்ணியரசனுக்குக் கூறும்படி சஞ்சயனைத் தூது அனுப்பினான் (*சிலம்பு*, கால்கோள் 163-166).

சாரணர்கள் (ஒற்றர்) பலர் இருந்தனர். அவர்கள் சட்டை யணிந்திருந்தனர். அவர்களின் தலைவன் நீலன். போரில் சிறைப் பிடிக்கப்பட்ட கனக விசயரைச் சோழனிடத்திலும் பாண்டிய னிடத்திலும் சென்று காட்டிவரும்படி செங்குட்டுவன், நீலன் தலைமையில் ஒற்றர்களை யனுப்பினான் (*சிலம்பு*, நீர்ப்படை 187-191). அவன் அவர்களை அழைத்துப்போய்க் காட்ட, அவர்களைக் கண்ட சோழனும் பாண்டியனும் சொன்ன செய்தியை நீலன் வந்து செங்குட்டுவனுக்குக் கூறினான் (*சிலம்பு*, நடுகல் 80-109).

செங்குட்டுவன் அவையில் 'பெருங்கணி' என்னும் நிமித்திகன் இருந்தான். செங்குட்டுவனின் வடநாட்டு யாத்திரையிலும் இவன் உடன் சென்றிருந்தான். இவன் முழுத்தம் (முகூர்த்தம்) கணித்து அரசனுக்குரிய நல்ல முழுத்தத்தை அவ்வப்போது கூறிக்கொண்டிருந்தான். இவன்,

> ஆறிரு மதியினும் காருக வடிப்பயின்று
> ஐந்து கேள்வியும் அமைந்தோன் (*சிலம்பு*, கால்கோள் 25-26)

(ஆறிருமதியினும்-இராசி பன்னிரெண்டினும்; ஐந்து கேள்வி-நட்பு ஆட்சி எச்சம் பகை நீசக்கோள்; திதி வாரம் நக்ஷத்திரம் யோகம் கரணமுமாம்–அரும்பதவுரை).

செங்குட்டுவன் வடநாட்டுக்குப் புறப்படும் நல்ல வேளை யைக் கணித்துக் கூறியவன் இவனே (*சிலம்பு*, கால்கோள் 27-31).

செங்குட்டுவன் வடநாட்டில் வெற்றி பெற்றுக் க்ண்ணகிக்குக் கல் எடுத்து நீர்ப்படை செய்த பிறகு அவன் பாசறையில் அமர்ந்திருந்தபோது இப்பெருங்கணியன்,

எண்ணான்கு மதியம் வஞ்சிநீங்கியது
மண்ணாள் வேந்தே வாழ்க

(*சிலம்பு*, நீர்ப்படை 149-150)

என்று புறப்பட்டு வந்த காலத்தைக் கூறினான். செங்குட்டுவன், கண்ணகிக் கோட்டத்தைக் காணச் சென்றபோது இவனும் உடன் சென்றான் (*சிலம்பு*, நடுகல் 222).

செங்குட்டுவன் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் பேரரசனாக இவன் இருந்தான். பத்தினிப் படிவம் அமைப்பதற்குக் கல் கொண்டு வர இமயம் போகவேண்டியதில்லை, வடநாட்டர சருக்குத் திருமுகக் கடிதம் எழுதினால் அவர்கள் கல்லை எடுத்து அனுப்புவார்கள் என்று செங்குட்டுவனுக்குக் கூறிய அவன் அமைச்சனான வில்லவன் கோதை, சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தரின் முத்திரைகளை இட்டுக் கடிதம் எழுதும்படி கூறினான்.

வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்தமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி
மண்தலை யேற்ற வரைக ஈங்கென

(*சிலம்பு*, காட்சி 170-172)

(மண்தலை ஏற்ற-இலச்சினை மண் (முத்திரை) ஏற்ற ஓலைகளை.)

இவ்வாறு இவன் கூறியது, சோழ பாண்டியருக்கும் மேம் பட்ட சிறப்பைச் செங்குட்டுவன் பெற்றிருந்தான் என்பதைத் தெரிவிக்கிறது. இது வெற்றுப் புகழ்ச்சியன்று, உண்மை நிலையே என்பது சரித்திரத்தை யாராய்ந்து பார்த்தால் தெரிகிறது.

துளு நாடாகிய கொங்கண நாடு இவன் ஆட்சிக்கு அடங்கியிருந்தது. மோகூர்ப் பழையனுடன் செங்குட்டுவன் செய்த போரில் மோகூர்ப் பழையனுக்குத் துணையாகச் சோழ அரசனும் பாண்டிய அரசனும் வந்து செங்குட்டுவனை எதிர்த்துத் தோற்றார்கள். மேலும், சோழன் கிள்ளிவளவன் ஆட்சி ஏற்ற போது, சோழர் குடியிற் பிறந்த ஒன்பது அரசர் அவனை எதிர்த் துப் போராடி உள்நாட்டுக் குழப்பத்தை உண்டாக்கிச் சோழ நாட்டின் அமைதியைக் கெடுத்தார்கள். அப்போதும் செங்குட் டுவன், கிள்ளிவளவன் சார்பாக ஒன்பது அரசருடன் போர் செய்து வென்று கிள்ளிவளவனுக்குச் சோழ ஆட்சியைக் கொடுத் தான் (இவைகளை முன்னமே கூறியுள்ளோம்). இவையெல்லாம், செங்குட்டுவன் சோழ பாண்டிய அரசரைவிட மேம்பட்டிருந் தான் என்பதைத் தெரிவிக்கின்றன. மேலும் இவன், அக்காலத்துப் பேரரசனாக விளங்கிய நூற்றவர் கன்னர், (சதகர்ணி) என்னும் அரசனின் நண்பனாகவும் இருந்தான். எனவே, இவையெல்லாம்

செங்குட்டுவன் தமிழகத்தின் பேரரசனாக இருந்தான் என்பதைத் தெரிவிக்கின்றன அல்லவா?

5. செங்குட்டுவன் வாழ்க்கை

செங்குட்டுவன், இளங்கோ வெண்மாள் என்னும் அரசியைத் திருமணஞ் செய்திருந்தான் (*சிலம்பு*, காட்சி 5). அவளுக்கு வேண் மாள் என்றும் பெயர் உண்டு. 'வதுவை வேண்மாள் மங்கல மடந்தை' (*சிலம்பு*, நடுகல் 51). இவர்களுக்குப் பிறந்த மகன் குட்டுவன் சேரல். குட்டுவன் சேரலைப் பரணருக்குச் செங்குட் டுவன் கொடுத்தான் (5ஆம் பத்துப் பதிகம்). கல்வி கற்பிப்பதற் காகக் கொடுத்தான் போலும்.

செங்குட்டுவன் வாழ்ந்த அரண்மனை 'இலவந்தி வெள்ளி மாடம்' என்று பெயர் பெற்றிருந்தது.

விளங்கில வந்தி வெள்ளி மாடத்து
இளங்கோ வேண்மாள் உடனிருந் தருளி
(*சிலம்பு*, காட்சி 4-5)

வஞ்சிமா நகரத்துக்கு வெளியே கடற்கரைக்கு அருகில் 'வேளாவிக் கோ மாளிகை' என்னும் அரண்மனை இருந்தது.

பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக்கோ மாளிகை (*சிலம்பு*, நடுகல் 196-198)

என்பதனால் இதையறியலாம்.

வேனிற்காலத்தில் செங்குட்டுவன் அரண்மனையில் வசிப்பது இல்லை. பேராற்றங்கரை யோரத்தில் இருந்த மரச்சோலைகளில் கூடாரம் அமைத்து அதில் சுற்றத்தோடு தங்கியிருப்பது வழக்கம். இச்செய்தியைப் பரணர் இவனைப் பாடிய 5ஆம் பத்துச் செய்யுளில் கூறுகிறார்.

நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவிற்
பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோடு உண்டினிது நுகரும்
தீம்புனல் ஆயம். (5ஆம் பத்து 8 : 13-17)

("பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கை யென்றது வேனிற் காலத்து மனையில் வைகாது பொழில்களிலே வதியும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கை யென்றவாறு ...... இச்சிறப்பானே, இதற்குப் (இச்செய்யுளுக்கு) 'பேரெழில் வாழ்க்கை' என்று பெயராயிற்று"–பழைய உரை.)

இவனுடைய வேனிற்காலப் பொழில் வாழ்க்கையை இளங்கோவடிகளும் கூறுகிறார்.

வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங் கிலவந்தி வெள்ளி மாடத்து
இளங்கோ வேண்மாள் உடனிருந் தருளித்
துஞ்சா முழவின் அருவி யொலிக்கும்
மஞ்சுசூழ் சோலை மலைகாண்குவ மெனப்
பைந்தொடி ஆயமொடு பரந்தொருங் கீண்டி
வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன்'
....
நெடியோன் மார்பில் ஆரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
இடுமணல் எக்கர் இயைந்தொருங் கிருப்ப
(*சிலம்பு*, காட்சி 3-23)

வழக்கம்போல ஓராண்டு வேனிற் காலத்தில் இவ்வாறு பொழிலில் தங்கியிருந்தபோதுதான் செங்குட்டுவன் கண்ணகியின் செய்தியைக் குன்றம் வாழும் மக்கள் சொல்லக் கேட்டறிந்தான். அப்போதுதான் அவனுக்குக் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைக்கும் எண்ணம் தோன்றியது.

இசைவாணர்களையும் ஆடற் கலைஞர்களையும் இவன் ஆதரித்தான்.

ஆடுசிறை யறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக
துய்வீ வாகை நுண்கொடி யுழிஞை
வென்றி மேவ லுருகெழு சிறப்பிற்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே யென்று
மிகல்வினை மேவலை (5ஆம்பத்து, 3 : 21-29)

இவன், வடநாட்டு யாத்திரையிலிருந்து திரும்பி வந்து 'வெள்ளி மாடம்' என்னும் மாளிகையில் நிலா முற்றத்தில் அரசி வேண்மாளுடன் இருந்தபோது, பறையூர் கூத்தச் சாக்கையன் வந்து கொட்டிச் சேதம் என்னும் கொடுகொட்டிச் சேதக் கூத்தைப் பாடியபோது அதனைக் கண்டு மகிழ்ந்தான் என்பது *சிலப்பதிகாரம்* படித்தவர் அறிந்ததே.

பத்தினித் தெய்வ வழிபாட்டை இவன் உண்டாக்கினான். இவன் உண்டாக்கிய பத்தினித் தெய்வ வழிபாடு தமிழ்நாடு முழுவதும் பரவியது அல்லாமல் இலங்கையிலும் பரவிற்று.

போரில் வீரங்காட்டி இறந்தவருக்கு நடுகல் நட்டுப் போற்றுவது அக்காலத்து வழக்கம். பாண்டிய அரசனிடம் வழக்குத் தொடுத்து அவன் செய்த அநீதியை எடுத்துக்காட்டி வெற்றி பெற்ற கண்ணகி, தன் கற்பு ஆற்றலினால் பாண்டியனின் அரண்மனையையும் எரித்துத் தன் உயிரை உண்ணா விரதமிருந்து மாய்த்துக் கொண்ட வீரச்செயலைப் பாராட்டி அப்பத்தினிக்கு வழிபாடு அமைத்தான் செங்குட்டுவன். ஆண் மகனுடைய வீரம், பெண் மகளுடைய கற்புக்குச் சமானமானது என்று போற்றினான் செங்குட்டுவன்.

6. செங்குட்டுவன் காலம்

பதிற்றுப்பத்து, சேர அரசர்கள் ஒவ்வொருவரும் எத்தனை ஆண்டு ஆட்சி செய்தார்கள் என்பதைக் கூறுகிறது. ஆனால், சகாப்த ஆண்டினைக் கூறவில்லை. ஆகவே அவர்கள் அரசாண்ட காலத்தைச் சகாப்த ஆண்டுப்படி அறிய வாய்ப்பு இல்லை. ஆனால், நற்காலமாக ஒரு காலக் குறிப்புக் கிடைத்திருக்கிறது. அந்தக் குறிப்பைக் கொண்டு இவ்வரசர்களின் காலத்தை ஒருவாறு கணித்துவிடலாம். செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தபோது, அவ்விழாவுக்கு வந்திருந்த அயல்நாட்டு அரசர்களில் இலங்கையரசனான கஜபாகுவும் (முதலாவன்) ஒருவன். இவனைக் ‘கடல்சூழ் இலங்கைக் கயவாகு’ என்று *சிலப்பதிகார* நூல் கூறுகிறது. இதனால் செங்குட்டுவனும் கஜபாகுவும் (முதலாவன்) சமகாலத்து அரசர்கள் என்பது தெரிகின்றது. முதலாம் கஜபாகு கி.பி. 173 முதல் 191 வரையில் அரசாண்டான் என்று *மகாவம்ச* நூலின் ஆதாரத்தைக் கொண்டு சரித்திர ஆசிரியர்கள் எல்லோரும் முடிவு செய்து ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

கஜபாகு, பத்தினிக் கோட்ட விழாவுக்கு வந்திருந்த ஆண்டு தெரியவில்லை. அவன் ஆட்சிக் காலத்தில் இடைப்பகுதியில், உத்தேசமாகக் கி.பி. 180இல் வந்தான் என்று சொல்லலாம். அதாவது, கி.பி. 180இல் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்தான் என்று கொள்ளுவோம். அது செங்குட்டுவனின் 50ஆவது ஆட்சி ஆண்டு. எப்படி எனில்,

வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை

(*சிலம்பு*, நடுகற் காதை 129-132)

என்றும்,

நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை (*சிலம்பு*, நடுகல் 158)

என்றும் *சிலப்பதிகாரம்* கூறுகிறபடியினாலே, செங்குட்டுவன் தனது 70ஆம் வயதில் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தான் என்று கொள்ளலாம். ஐந்து ஆண்டுக்குப் பிறகு தன்னுடைய 75ஆம் வயதில் இவன் காலமாயிருக்க வேண்டும். இவன் இளவரசுப் பட்டம் பெற்றது ஏறத்தாழ கி.பி. 130இல் ஆகும். இவன் 55 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று 5ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுவது, இவனுடைய இளவரசுக் காலத்தையும் சேர்த்தேயாம். எனவே செங்குட்டுவன் ஆண்ட காலம் ஏறத்தாழ கி.பி. 130 முதல் 185 வரையில் என்று உத்தேசமாகக் கொள்ளலாம்.

செங்குட்டுவனுடைய தமயனான நார்முடிச் சேரல் இவனுக்குப் பத்து ஆண்டு மூத்தவன் என்று கொள்ளலாம். அவன் 25 ஆண்டு ஆட்சி செய்தான் என்று 4ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. எனவே, நார்முடிச்சேரல் உத்தேசமாகக் கி.பி. 120 முதல் 145 வரையில் அரசாண்டான் என்று கொள்ளலாம்.

இவர்களுடைய தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செங்குட்டுவனுக்கு ஏறத்தாழ ஐந்து ஆண்டு இளையவன் என்று கொண்டால் அவன் ஆட்சி செய்த 38 ஆண்டுகள் உத்தேசம் கி.பி. 140 முதல் 178 வரையில் ஆகும்.

செங்குட்டுவனுடைய தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58ஆண்டு ஆட்சிசெய்தான் என்று 2ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. எனவே அவன், உத்தேசம் கி.பி. 72 முதல் 130 வரையில் ஆட்சி செய்தான் என்று கொள்ளலாம். செங்குட்டுவனின் சிறிய தந்தையாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவன் 25 ஆண்டு ஆட்சிசெய்தான் என்று கூறப்படுகிறபடியால், அவன் உத்தேசமாகக் கி.பி. 82 முதல் 107 வரையில் ஆட்சிசெய்தான் என்று கொள்ளலாம்.

செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்ததும் அக்கோட்டத்துக்குக் கஜபாகு வந்திருந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் உத்தேசம் கி.பி. 180இல் நிகழ்ந்தன என்று கொண்டு கணித்தால் இந்த முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. இதில் சேர அரசர்கள் ஆண்ட காலம் என்பது அவர்கள் இளவரசுப் பட்டம் பெற்ற ஆண்டையும் சேர்த்துக் கணிக்கப்பட்டது. இவ்வாறு கணித்தால் ஏறத்தாழ மேலே கூறிய முடிவுக்கு வருகிறோம்.

இளையவழி பரம்பரையில் வந்த சேர அரசர்கள் மூத்தவழி அரசரின் சம காலத்தில் சேர நாட்டின் வேறு பகுதிகளை யரசாண்டார்கள். ஆகவே, அவர்கள் ஆட்சிக்காலமும் மேலே கூறிய மூத்தவழி அரசர் ஆட்சிக் காலத்தில் அடங்கியிருக்

கின்றன. அவர்களில் செல்வக் கடுங்கோ வாழியாதன், செங்குட்டுவனுடைய தந்தையாகிய நெடுஞ்சேரலாதன் காலத்தில் 25ஆண்டு ஆட்சிசெய்தான். நெடுஞ்சேரலாதனும் செல்வக்கடுங்கோ வாழியாதனும் வேளாவிச் சேரமான் பதுமன்தேவி என்னும் பெயருள்ள தமக்கை தங்கையரை மணஞ் செய்திருந்தார்கள் (4ஆம் பத்து. 8ஆம் பத்துப் பதிகங்கள்) செல்வக்கடுங்கோ வாழியாதனுடைய மகனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையும், நெடுஞ்சேரலாதனின் மூத்தமகனான நார்முடிச் சேரலும் சமகாலத்தில் இருந்தவர்கள். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனான இளஞ்சேரல் இரும்பொறையும் சேரன் செங்குட்டுவனும் சம காலத்தில் இருந்தவர்கள். ஆனால், செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைப்ப தற்கு முன்னமே இளஞ்சேரல் இரும் பொறை இறந்துவிட்டான். இச்செய்தியைச் *சிலப்பதிகாரத்* தினால் அறிகிறோம்.

சதுக்கப் பூதரை வஞ்சியுள்மதந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோன்

அதாவது இளஞ்சேரல் இரும்பொறை முன்னமே இறந்து போனான் என்று *சிலம்பு,* நடுகற்காதை (147-148) கூறுகிறது.

எனவே, சேர வேந்தர் காலத்தைத் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூற முடியாமற் போனாலும் உத்தேசமாக ஏறத்தாழ சரியான ஆண்டுகளைப் பெற முடிகிறது. இதன்படி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கி.பி. 72 முதல் 130 வரையிலும், அவன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் கி.பி. 82 முதல் 107 வரையிலும், நெடுஞ்சேரலாதனின் மூத்த மகனான நார்முடிச் சேரல் கி.பி. 120 முதல் 145 வரையிலும், மற்றொரு மகனான சேரன் செங்குட்டுவன் (கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்) கி.பி. 130 முதல் 185 வரையிலும், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் கி.பி. 140 முதல் 178 வரையிலும் அரசாண்டார்கள்.

சேர மன்னன் செங்குட்டுவன் ஏறத்தாழக் கி.பி. 130 முதல் 185 வரையில் ஆட்சி செய்தான் என்று கூறினோம். ஆனால், திரு. கே.ஜி. சேஷையர் அவர்கள் தாம் எழுதிய *சங்ககாலத்துச் சேரர்* என்னும் ஆங்கில நூலில் செங்குட்டுவன் கி.பி. 125இல் ஆட்சி செய்யத் தொடங்கினான் என்று கூறுகிறார். ஐந்து ஆண்டு வித்தி யாசத்தை ஒருவாறு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர், செங் குட்டுவனை நெடுஞ்சேரலாதனின் பேரன் என்று கூறுவதுதான் வியப்பாக இருக்கிறது. *பதிற்றுப்பத்து* 5ஆம் பத்தின் பதிகம், ‘குடவர்கோமான் நெடுஞ்சேரலாதற்கு, சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்’ செங்குட்டுவன் என்று தெளிவாகக் கூறுகிறது. சேஷையர் அவர்கள், நெடுஞ்சேரலாதன் என்பதற்குக் களங்காய்க்

கண்ணி நார்முடிச் சேரல் என்று பொருள் கற்பித்துக்கொண்டு, நார்முடிச்சேரலின் மகன் செங்குட்டுவன் என்று மாற்றிக் கூறுகிறார். ஆனால் *பதிற்றுப்பத்து*, நெடுஞ்சேரலாதனின் மகன் செங்குட்டுவன் என்றும் நார்முடிச்சேரலின் தம்பி என்றும் கூறுகிறது. சேஷையர் அதனை மாற்றி நார்முடிச் சேரலின் மகன் செங்குட்டுவன் என்று கூறுகிறார். இதற்கு இவர் காட்டும் காரணம் வியப்பாக இருக்கிறது. இவர் கணிக்கும் காலக் கணக்குக்குப் பொருத்தமாக செங்குட்டுவன் ஆட்சிக்காலம் அமையாதபடியால் இவ்வாறு மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். இதைத் தம்முடைய நூலில் இவ்வாறு விளக்கிச் சொல்கிறார் (K.G. Sesha Aiyar, *Cera Kings of the Sangam Period*, 1937, pp. 123-126).

> செங்குட்டுவன் ஆட்சிக்கு வந்தது கி.பி. 125 என்று கொண்டால், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கி.பி.17இல் ஆட்சிக்கு வந்திருத்தல் வேண்டும். அவன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் உத்தேசமாக கி.பி. 75இல் ஆட்சி தொடங்கியிருக்க வேண்டும். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் ஆட்சிக்கு வந்தது கி.பி. 100ஆக இருக்க வேண்டும். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டு ஆண்டான் என்றால், அவனுடைய தம்பி எப்போது ஆட்சி செய்திருக்க முடியும்? தம்பியாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆட்சி ஏற்கும்போது அவன் 60 வயது சென்றவனாக இருக்க வேண்டும். அவன் இறந்தபோது 85 வயது இருக்க வேண்டும். ஆகவே, செங்குட்டுவன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னின் மகனாக இருந்தால், அவன் ஆட்சி ஏற்றபோது அவனுக்குக் குறைந்தபட்சம் 50வயது இருக்கும். அவன் 55 ஆண்டு ஆட்சி செய்தான் என்பதை ஏற்றுக்கொண்டால் அவன் இறந்தபோது அவனுக்கு நூறு வயதுக்கு மேல் இருக்கும். 5ஆம் பத்துப் பதிகம் அவன் 55 யாண்டு வீற்றிருந் தான் என்று கூறுவதற்கு, 55 யாண்டு உயிர் வாழ்ந்திருந்தான் என்று பொருள் கொள்ள முடியாது. அப்படிப் பொருள் கொண்டால் அவன் 5 ஆண்டுதான் ஆட்சி செய்தான் என்று கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, 5ஆம் பத்தின் பதிகம் 'நெடுஞ்சேரலாதன்' என்று கூறுவதற்குப் பெரிய சேரலாதன் என்றும் அது நார்முடிச் சேரலைக் குறிப்பிடுகிறது என்றும் நான் பொருள் கொள்கிறேன். ஆகவே, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய பிள்ளைகள் நால்வரில் ஒருவனாகச் செங்குட்டுவன் இருக்க முடியாது. இப்படிக் கொள்வோ மானால், இந்தக் காலக்கணிப்புச் சிக்கல் எளிதாகச் சரிப்பட்டு விடுகிறது.

இவ்வாறு, தாம் கணிக்கும் காலக்கணக்கு சரியாக அமைவதற்குப் பொருத்தமாகப் பழைய வரலாற்றை மாற்றியமைக்க வேண்டும் என்று நீதிபதியாக இருந்த சேஷையர் தீர்ப்புக் கூறுகிறார். இவருடைய தீர்ப்பு சரித்திரத்துக்கு ஏற்கத்தக்கது அன்று. பழைய வரலாற்றுக்குத் தக்கபடி காலத்தைக் கணிக்க வேண்டுமேயல்லாமல், இவருடைய தவறான கணக்குக்குத் தக்கபடி சரித்திர ஆதாரத்தையே மாற்றுவது சரியன்று.

இவர், தவறான கணக்குப் போட்டு அதற்குத் தக்கபடி சரித்திரச் சான்றை மாற்றுவதற்குக் காரணம் நன்றாகத் தெரிகிறது. ஒருவருக்குப் பின் ஒருவராகத் தந்தை, சிறிய தந்தை, தமயன், தம்பியர் அரசாண்டார்கள் என்று (பிற்காலத்துச் சரித்திர முறையைப் பின்பற்றி) இவர் காலத்தைக் கணித்த படியால் சிக்கல் ஏற்பட்டு இடர்ப்பட்டு அதைத் தீர்க்க மகனைப் பேரன் என்று முறை மாற்றுகிறார். இளவரசுப் பட்டம் ஏற்றது முதல் இவர்கள் ஆட்சி தொடங்கிற்று என்று கொண்டு இவர்கள் ஆட்சிக் காலத்தைக் கணக்கிட்டால் இப்படிப்பட்ட சிக்கலும் இடர்ப்பாடும் நேர்ந்திராது. மேலே நாம் கணித்து முடிவுசெய்த ஆட்சிக் காலங்களில் இவ்விதச் சிக்கல்கள் இல்லாதிருப்பது காண்க. எனவே, செங்குட்டுவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஏறத் தாழக் கி.பி. 130 முதல் 185 வரையில் அரசாண்டான் என்று கொள்ளலாம்.

இனி, *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலை எழுதிய திரு. மு. இராகவையங்கார் அவர்கள் 'செங்குட்டுவன் கால ஆராய்ச்சி' என்னுந் தலைப்பில் சில செய்திகளைக் கூறிச் செங்குட்டுவன் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கூறுகிறார். சமுத்திர குப்தன் என்னும் அரசன் மாந்தராசன் என்பவனை வென்றான் என்று ஒரு சாசனம் கூறுவதைச் சான்று காட்டி, அதில் கூறப்படுகிற மாந்தராசன் மாந்தரஞ் சேரல் என்றும், ஆகவே சமுத்திரகுப்தனால் வெல்லப்பட்ட மாந்தராசா (மாந்தரஞ் சேரல்) காலத்தில் இருந்த செங்குட்டுவன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்று இவர் கூறுகிறார். இவர் கூறுவது வருமாறு:

> *வடநாட்டில் மகத நாடாண்ட ஆந்திர சக்கரவர்த்திகளது வீழ்ச்சிக்குப் பின் பிரபலம் ஏற்று விளங்கிய குப்த வமிச சக்கரவர்த்திகளுள்ளே சமுத்திரகுப்தன் என்பான் திக்விஜயஞ் செய்து, இப்பரத கண்ட முழுவதையும் தன் வெற்றிப்புகழைப் பரப்பினான் என்பது சாசன மூலம் அறியப் படுகின்றது. இம்மன்னர் பெருமான் கி.பி. 326இல் பட்ட மெய்தியவன். இவனது தென்னாட்டுப் படையெழுச் சியில் ஜயிக்கப்பட்ட வேந்தருள்ளே கேரள தேசத்து மாந்த*

ராஜா ஒருவனென்று கூறப்படுகின்றது. இம்மாந்தராஜா என்பவன் சங்க நுல்களிற் கூறப்படும் மாந்தரன் என்பவனா கவே தோற்றுகின்றான். ஆனால், இப்பெயர் கொண்டவரி ருவர் இருந்தன ரென்பதும், அவருள் ஒருவன் செங்குட்டு வனுக்குச் சிறிது முன்னும், மற்றொருவன் அவனுக்குச் சிறிது பின்னும் இருந்தவனென்பதும் முன்னமே குறிப்பிட்டோம். இவருள் முன்னவனே சமுத்திர குப்தனால் வெல்லப்பட்ட வனாகக் கருதினும், அச்சேரன் 4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவனாதல் வேண்டும். அம்மாந்தரனைப் பாடிய பரணரே செங்குட்டுவனையும் பாடியிருத்தலால், நம் சேரன் (சேரன் செங்குட்டுவன்) அம்மாந்தரனுக்குச் சிறிது பிற்பட்டவனென்பது பெறப்படும். அஃதாவது, 5ஆம் நூற்றாண்டின் முற்பாகமென்க (*சேரன் செங்குட்டுவன்*, முதல் பதிப்பு 1915, பக். 171-172).

இவ்வாறு எழுதிய திரு மு. இராகவையங்கார் அந்த நூலில் மேலும் சிலவற்றைக் கூறுகிறார். *அகம்* 181ஆம் செய்யுளில் 'வம்பமோரியர்' வந்தனர் என்று கூறப்படுவதையும், *அகம்* 215ஆம் செய்யுளில் மோகூர் பணியாமையால் வம்பமோரியர் படையெடுத்து வந்தனர் என்று கூறப்படுவதையும் சுட்டிக் காட்டி, அவ்வாறு வந்த 'வம்ப மோரியர்' என்பவர் குப்தவம்சத்து அரசன் என்று கூறுகிறார். பிறகு, மோகூர் வேந்தனைச் செங்குட்டுவன் வென்றதைச் சுட்டிக் காட்டிக் கடைசியாக இவ்வாறு முடிக்கிறார்:

> இச்சமுத்திர குப்தன் கி.பி. 375 வரை ஆட்சிபுரிந்தவன் எனப்படுகிறான். எனவே, இவனால் வெல்லப்பட்ட மாந்தரன், மேற்கூறியபடி செங்குட்டுவனுக்குச் சிறிது முற்பட்டவனாகவும், பழையன்மாறன் செங்குட்டுவனுக்குச் சமகாலத்தவனாகவும் தெரிதலின், நம் சரித்திர நாயகனான சேரன் (செங்குட்டுவன்) காலமும் 4ஆம் நூற்றாண்டின் முற்பகுதி அல்லது 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகக் கொள்ளல் பொருத்தமாம். ஆயின், சமுத்திரகுப்தன் மகனான சந்திரகுப்த விக்கிரமாதித்தன் (கி.பி. 375-413) அல்லது அவன் மகனான குமாரகுப்தன் (413-455) காலங்களும், நம் சேரர் பெருமான் காலமும் ஒன்றாகச் சொல்லலாம் (*சேரன் செங்குட்டுவன்*, முதல் பதிப்பு 1915, பக். 177-178).

மு. இராகவையங்கார் அவர்கள் ஆதாரமாகக் காட்டும் சான்று சமுத்திரகுப்தனின் அலகாபாத் சாசனமாகும். அந்தச் சாசனத்தில் 'கௌராளக-மாந்த ராஜா' என்னும் ஒரு வாசகம்

காணப்படுகிறது. டாக்டர் பிஃளீட் அவர்கள் அந்தச் சாசனத்தை வெளியிட்ட போது, கௌராளக என்பது கைரளக என்றிருக்க வேண்டும் என்று கூறிக் கைராளிக மாந்தராஜா என்பது கேரளமாந்தராஜா என்று எழுதினார். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஐயங்கார் அவர்கள் மேலே காட்டியபடி மனம் போனபடியெல்லாம் எழுதிவிட்டார். பிறகு, 1898ஆம் ஆண்டில் டாக்டர் கில்ஹார்ன் என்பவரும் டாக்டர் பிஃளீட் என்பவரும் சேர்ந்து அந்தச் சாசனத்தை மறுபடியும் ஆராய்ந்து பார்த்ததில் அச்சாசனத்தின் சரியான வாசகம் குணலமாந்தராஜா என்றும் (கௌரள மாந்தராஜா அன்று), சமுத்திர குப்தன் வென்ற குணல மாந்தராஜா கொல்லோர (கொல்லேர்) ஏரிக்கருகில் இருந்தவன் என்றும் அறிந்து வெளியிட்டனர். ஆகவே, மு. இராகவையங்கார் (மாந்தராஜா-மாந்தரன்) இட்டுக்கட்டி முடிவு செய்தது (சமுத்திர குப்தன் காலமும் செங்குட்டுவன் காலமும் ஒன்றே என்ற முடிவு) சரிந்துவிழுந்து நொறுங்கிப் போயிற்று. அதனால், ஐயங்கார் அவர்கள் தம்முடைய *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலின் 2ஆம் பதிப்பு முதலிய மற்றப் பதிப்புகளில் சமுத்திர குப்தன் காலம் என்பதை அடியோடு மறைத்துவிட்டார். ஆனாலும், தகுந்த காரணம் காட்டாமலே செங்குட்டுவன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்றே பிற்பதிப்புகளிலும் விடாப்பிடியாக எழுதியுள்ளார்.

சேரன் செங்குட்டுவன் என்னும் நூலின் 2ஆம் பதிப்பு 1929இல் வெளிவந்தது. சந்திரகுப்த விக்கிரமாதித்தன் காலத்தில் செங்குட்டுவன் இருந்தான் என்று இவர் முதற்பதிப்பில் எழுதியது ஆதாரமற்ற பொய்ச் சான்று என்று இவர் அறிந்த பிறகு, அச்சான்றை 2ஆம் பதிப்பில் வெளியிடாமல் மறைத்து விட்டார். மறைத்துவிட்ட பிறகும், 2ஆம் பதிப்பு முதலிய மற்றப் பதிப்புகளில் எல்லாம், தக்க சான்று காட்டாமலே செங்குட்டுவன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்று எழுதிக்கொண்டே வந்தார். பிற்பதிப்புக்களில் எல்லாம், "5ஆம் நூற்றாண்டே செங்குட்டுவனும் சங்கத்துச் சான்றோரும் வாழ்ந்த காலமாதல் வேண்டும் என்று தக்க காரணங் காட்டி இந்நூலின் முதற்பதிப்பில் முடிவுகட்டலானேன்...... இவற்றுள்ளே கண்டு நோக்குமிடத்து யான் கண்டு வெளியிட்ட 5ஆம் நூற்றாண்டுக் கொள்கையே பெரிதும் பொருத்தமுடையது என்று சொல்லத் தடையில்லை. அது பற்றி யான் புதியவாக அறிந்த செய்திகளுடன் வைத்து ஆராய்ந்து கண்ட முடிவினை அறிஞரது ஆராய்ச்சிக்குரியதாகத் தனியே வெளியிட விரும்புவதனால், இப்போது அதனை இந்நூலுட் சேர்க்காது நிறுத்திக்

கொள்ளலாயிற்று" என்று எழுதியுள்ளார் (*சேரன் செங்குட்டுவன்*, 6ஆம் பதிப்பு. 1947, பக். 199, 200).

இவர் கண்ட 'புதிய முடிவு' 37ஆண்டுகளாகியும் வெளிவரவில்லை. அவரும் காலமாய்விட்டார். சான்று காட்டாமலும் காரணம் கூறாமலும் 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்னும் பழமொழிக்கு ஏற்ப இவர் பிடிவாதமாக இருந்து கொண்டு, செங்குட்டுவன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்று பதிப்பித்துக்கொண்டே தாம் கண்ட 'புதிய முடிவு' இன்னதென்பதைக் கூறாமலே போய்விட்டார். இவர் போக்கை என்னென்பது!

ஆனால், முதற் பதிப்பில் கூறாத ஒரு கருத்தைப் பிற்பதிப்புகளில் சேர்த்துவிட்டார். இது 1830இல் இலங்கையில் கண்டெடுக்கப்பட்டு இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பட்ட கண்ணகியின் வெண்கலச்சிலை யுருவத்தைப் பற்றிய செய்தி. இது பற்றி அவர் எழுதுவது இது:

> இச்சரித்திர நாயகனால் (சேரன் செங்குட்டுவனால்) தெய்வமாக வணங்கப்பெற்ற பத்தினி தேவியின் (கண்ணகி) செப்புத்திருமேனி யொன்று (லண்டன் பிரிட்டிஷ் *மியூஸியத்தில்*) இருந்ததை டாக்டர் ஆனந்த குமாரசுவாமியவர்கள் பிரதிசாயை யெடுத்துப் பிரகுரித்திருக்கிறார்கள். அப்பிரதிமை இலங்கையினின்று 1830ஆம் வருஷம் இங்கிலாந்துக்குக் கொண்டு போகப்பட்டதாம். அப் பத்தினித் தேவி படிவத்துக்கு ஒரு பிரதியெடுத்து இந்நூலுட் சேர்த்திருக்கின்றேன். இளங்கோவடிகள் கூறியபடி செங்குட்டுவன் காலத்தே இலங்கையிற் கயவாகுவால் பிரதிஷ்டிக்கப்பட்ட பத்தினியின் சரியான சாயலை இது காட்டுவதுபோலும்.

இவ்வாறு முகவுரையில் கூறிய ஐயங்கார், 'சமகாலத்தவர்' என்னுந் தலைப்பில் அந்நூலில் இப்பத்தினி உருவம் பற்றிக் கீழ்க் காணுமாறு எழுதுகிறார் (இவ்விஷயம் முதற்பதிப்பில் எழுதப் படவில்லை. பிற்பதிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளது):

> கயவாகு என்பான் இலங்கா தீவத்தை ஆண்டுவந்த அரசன். இவன் செங்குட்டுவனது பத்தினிப் பிரதிஷ்டைக்கு வந்திருந்து, தன்னாட்டிலும் எழுந்தருளி அருள்புரிய வேண்டுமென்று அத்தேவியைப் பிரார்த்தித்தும், அவட்குத் தன் தலைநகரில் கோட்டமெடுத்து வழிபட்டும் போந்தவனென்பது *சிலப்பதிகாரத்தால்* அறியப்பட்டது. இலங்கையின் இன்ன கோயிற்கு உரியதென்று அறியப்படாத படிவம் ஒன்று கிடைத்துள்ளது. அப்படிவத்தின் படம் இந்நூலின்

முகப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இப்படிவம் 5ஆம் நூற்றாண்டுக் குப்த சக்கரவர்த்திகள் காலத்துச் சிற்பவமைதி யுடையதாகும் என்று அத்துறை வல்லோர் கருதுவர் (*Medieval and Modern Sculpture* by V.A. Smith, p. 248). இதனால், இலங்கைப் படிவம் செங்குட்டுவன் காலத்தில் அந்நாட்டார் களால் அமைக்கப்பட்டவையாக வேண்டும் என்று கருதுதல் பொருத்தமேயாகும்.

இவ்வாறு ஐயங்கார் அவர்கள் கூறுவதன் கருத்து இது: இலங்கையில் கிடைத்த கண்ணகியின் (பத்தினித் தெய்வத்தின்) உருவம் குப்த அரசர் காலத்துச் சிற்ப அமைப்பு உடையது. குப்தர் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு. ஆகவே, இந்தப் பத்தினித் தெய்வ உருவமும் அதையமைத்த கஜபாகு அரசனும் அவன் காலத்தவனான செங்குட்டுவனும் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்பதாம்.

ஐயங்கார் அவர்கள் கூறுவதுபோல, இலங்கையில் கிடைத்த பத்தினித் தெய்வ உருவப்படிவம் குப்தர் காலத்துச் சிற்ப அமைப்பு உடையதென்றே ஒப்புக்கொண்டாலும், இவர் காட்டுவது தவறான சான்றாக இருக்கிறது. இந்தப் படிவத்தைக் கஜபாகு அரசன் அமைத்தான் என்றாவது, அவன் காலத்தில் அமைக்கப்பட்ட சிற்பம் இது என்றாவது சொல்ல முடியாது. ஏனென்றால் கஜபாகு, கண்ணகிக்கு உருவம் அமைக்கவில்லை. அக்காலத்தில் பெரும்பாலும் கோவில்களில் இருந்ததுபோலக் கஜபாகு அரசன் பீடிகை மட்டும் (பலிபீடம்) அமைத்தான் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது. *சிலப்பதிகாரத்தை* ஊன்றிப் படித்தவர் இதனை நன்கு அறிவர். *சிலப்பதிகாரம்* கூறுவதைப் பாருங்கள். "அது கேட்டுக் கடல் சூழிலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலிபீடிகைக் கோட்ட முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்களகவை யினாங்கோர் பாடி விழாக்கோள் பன்முறையெடுப்ப மழைவீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையாவிளையுள் நாடாயிற்று" (*சிலம்பு,* உரைபெறு கட்டுரை 3).

"நாட்புலி பீடிகைக் கோட்டம் - நித்தலும் பலியிடு மிடத்தையுடைய கோட்டம்" என்று அரும்பதவுரையாசிரியர் கூறுகிறார்.

எனவே, கஜபாகு அரசன் இலங்கையில் கண்ணகிக் கோட்டம் அமைத்து அதில் பலிபீடம் மட்டும் ஏற்படுத்தினான் என்பது தெரிகிறது. கண்ணகியின் உருவம் அமைக்கவில்லை. கண்ணகிக்கு அடையாளமாகச் சிலம்பு வைத்திருக்க வேண்டும். அந்தக் காலத்தில் கோவில்களில் தெய்வங்களின் உருவம் அமைக்கப்படவில்லை. அந்தந்தத் தெய்வங்களின் அடையாளக்

குறிகள் அமைக்கப்பட்டிருந்தன. முருகனுக்கு வேலும், இந்திரனுக்கு வெள்ளை யானை அல்லது வச்சிரமும், புத்தருக்குப் பாதமும் இவை போன்று அடையாளங்கள் மட்டும் வைத்து வழிபடப்பட்டன. அந்த முறையிலேதான் கஜபாகு அரசனும் தான் அமைத்த கண்ணகியின் கோவிலில் பலிபீடம் மட்டும் அமைத்தான் என்று *சிலப்பதிகாரம்* உரைபெறு கட்டுரை கூறுகின்றது.

(குறிப்பு: இலங்கையில் கிடைத்த இந்தச் செப்புத் திருமேனி இதுகாறும் கண்ணகியின் உருவம் என்று கருதப்பட்டு வந்தது. இப்போது, அவ்வுருவம் தாராதேவி என்னும் பௌத்தத் தெய்வத்தின் உருவம் என்று கருதப்படுகிறது.)

எனவே, இராகவையங்கார் அவர்கள், பிற்காலத்துக் கண்ணகி உருவம் ஒன்றைச் சான்றாகக் காட்டி அது கஜபாகு காலத்து உருவம் என்று தவறாகக் கருதிக்கொண்டு, அவ்வுருவம் குப்த அரசர்கள் கால முறைப்படி அமைந்தது என்று கூறி, ஆகவே கஜபாகுவும் செங்குட்டுவனும் கி.பி. 5ஆம் நூற்றாண்டினர் என்று முடிவு கூறுவது தவறான பிழையுள்ள கருத்தாகும். ஆகவே, ஐயங்கார் அவர்கள் காட்டும் சான்று ஒப்புக்கொள்ளக் கூடாதது. அவர் கூறும் முடிவாகிய கி.பி. 5ஆம் நூற்றாண்டுக் காலமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று.

எனவே நாம் மேலே கூறிய கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியே சேரன் செங்குட்டுவனும் கஜபாகு அரசனும் வாழ்ந்திருந்த காலம் என்பது பொருத்தமாகத் தெரிகிறது.

மகாவம்சம் என்னும் நூல் கூறுகிற இலங்கையரசனான கஜபாகு கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தான் என்று சரித்திரக்காரர்கள் எல்லோரும் ஆராய்ந்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, சேரன் செங்குட்டுவன் இருந்த காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பதில் ஐயம் இல்லை.

இனிச் சேர நாட்டைச் சூழ்ந்திருந்த ஏனைய இராச்சியங்களின் அக்காலத்து நிலையை யாராய்வோம்.

கொங்கணத்து நன்னர்

துளு நாட்டுக்குக் கொங்கண நாடு என்றும் பெயர் உண்டு. கொங்கணம், கொண்கானம் என்றும் கூறப்படும். சேர நாட்டுக்கு வடக்கே துளு நாடாகிய கொங்கண நாடு இருந்தது. இதன் வடக்கு எல்லை கோகர்ணம், தெற்கு எல்லை சேர நாடு, மேற்கில் மேல்கடல் (அரபிக் கடல்) இருந்தது. கிழக்கில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் இருந்தன. துளு நாட்டையும் அதற்குக் கிழக்கில் இருந்த கன்னட நாட்டையும் இடையில் இருந்த

உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகள் பிரித்து வைத்தன. துளு நாட்டின் கடற்கரைப் பகுதிகள் சமநிலமாகவும் கிழக்குப் பகுதிகள் மலைகள் உள்ள மேட்டு நிலமாகவும் இருந்தன. இப்போதைய தென் கன்னட மாவட்டமும் வட கன்னட மாவட்டத்தின் தெற்குப் பகுதியும் சேர்ந்ததுதான் பழைய துளு நாடாகிய கொங்கண நாடு (இது, இப்போது மகாராட்டிர தேசத்தில் உள்ள கொங்காண நாடு அன்று). சங்க காலத்தில் துளு நாடாகிய கொங்கண நாடு, தமிழ் வழங்கிய தமிழ் நாடாக இருந்தது. கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் பேசப்பட்ட சேர நாட்டில், தமிழ் மொழி சிதைந்து வேறுபட்ட மலையாள மொழியாக மாறிப்போனதுபோல, தமிழ் மொழி பேசப்பட்ட துளு நாட்டிலும் பிற்காலத்தில் தமிழ் மொழி சிதைந்து துளு மொழியாக மாறிவிட்டது.

நமது ஆராய்ச்சிக்குரியதான கி.பி. 2ஆம் நூற்றாண்டில் துளு நாட்டை நன்னர் என்னும் பெயருள்ள வேள்குல மன்னர் அரசாண்டார்கள். துளு நாட்டுக்குக் கொங்கண நாடு என்னும் பெயரும் உண்டாகையால், நன்னர்களுக்குக் '*கொங்காணங் கிழார்*' என்னும் பெயரும் வழங்கி வந்தது. கொங்காணங் கிழாராகிய நன்னர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றி ஆதரித்தார்கள். அக்காலத்துத் தமிழ் புலவர்களும் நன்னர் களைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

நன்னன்-1

நம்முடைய ஆராய்ச்சிக்குரிய கி.பி. 2ஆம் நூற்றாண்டில் துளு நாட்டை அரசாண்ட நன்னனை முதலாம் நன்னன் என்று கூறுவோம். இந்த நன்னன், செங்குட்டுவனுடைய தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் இருந்தவன் என்று தெரிகிறான். இவன் 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்று கூறப் படுகிறான்.

இந்த நன்னனுக்குரியதாக மாமரம் ஒன்று இருந்தது. இந்த மாமரத்தை இவன் தன்னுடைய காவல் மரமாக வளர்த்திருந் தான் போலும். அந்த மாமரத்தின் பக்கமாக ஒரு சிற்றாறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த மாமரத்திலிருந்த மாங்கனியொன்று சிற்றாற்றில் விழுந்து நீரில் அடித்துக்கொண்டுபோயிற்று. ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த ஒரு பெண் அந்த மாங்கனியை எடுத்துத் தின்றாள். இச்செய்தியை அறிந்த நன்னன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். அரசருக்குரிய பொருள் களைக் களவு செய்வது அக்காலத்தில் கொலைத் தண்டனைக் குரிய குற்றமாகக் கருதப்பட்டது. அரசனுக்குரிய மாங்கனி என்பதையறியாமல் நீரில் மிதந்து வந்த மாங்கனியை அப்பெண்

எடுத்துத் தின்றாள். ஆயினும், அவளுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத் தருளவேண்டுமென்றும் அக்குற்றத்துக்குத் தண்டமாகத் தொண்ணூற்றொன்பது யானைகளையும் அப்பெண்ணின் எடையுள்ள பொன்னையும் கொடுப்பதாகவும் அப்பெண்ணின் பெற்றோர் கூறி அவளைக் கொல்லாமல் விடும்படி வேண்டினார் கள். நன்னன் அவ்வேண்டுகோளுக்கு உடன்படாமல் அவளைக் கொன்றுவிட்டான். இதனால் அவன் மக்களின் வெறுப்புக்கு ஆளாகிப் 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்று தூற்றப் பட்டான்.

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ

(*குறுந்தொகை* 292 : 1-5)

என்று பரணர் என்னும் புலவர் இச்செய்தியைக் கூறுகிறார்.

இவனுடைய கொடுஞ்செயலைக் கண்டு இவன்மீது சினங்கொண்ட கோசர் என்னும் செல்வாக்குள்ள ஒரு இனத்தார் ஏதோ சூழ்ச்சி செய்து இவனுடைய மாமரத்தை அடியோடு வெட்டிவிட்டார் என்னும் செய்தியைப் பரணரே கூறுகின்றார்..

நன்னன்
நறுமா கொன்று ஞாட்பிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே

(*குறுந்தொகை* 73 : 2-5)

நன்னனுடைய மாமரத்தைக் கோசர் வெட்டினார்கள் என்பதைச் சரித்திர ஆசிரியர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், நன்னனுடைய பட்டத்து யானையைக் கொன்றார்கள் என்று கூறுகிறார் (S. Krishnaswamy Ayyangar, *Beginnings of South Indian History*, pp. 84, 85). மா என்பதற்கு மாமரம் என்றும் மிருகம் (யானை) என்றும் பொருள் உண்டு. ஆனால், இங்குக் கோசர் கொன்றது யானையை யன்று, மா மரத்தையே யாகும்.

இந்த நன்னன் பிண்டன் என்பவனுடன் போர் செய்து வென்றான் (*அகம்* 152 : 9-12). தன் பகைவரைப் போரில் கொன்று அவர்களுடைய மனைவியரின் கூந்தலைச் சிரைத்து அதனால் கயிறு திரித்தான் (*நற்.* 270 : 8-10).

இவனுடைய கொங்கு நாட்டுக்கு அருகிலே கடலிலே சிறு தீவு ஒன்று இருந்தது. அத்தீவு இவனுடைய ஆட்சிக்கு உரியது.

அத்தீவில் இருந்தவர்களைக் கொண்டு, யவன வாணிகக் கப்பல்கள் சேர நாட்டுக்குப் போகாதபடி இவன் தடுத்தான். இந்தத் தீவைக் கடந்துதான் யவனக் கப்பல்கள் சேர நாட்டுக்கு வரவேண்டும். வருகிற கப்பல்களை இத்தீவில் இருந்தவர் கொள்ளையடித்துத் தடுத்தனர். அதனால் யவன வாணிகக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு வருவது தடைப்பட்டது. அந்தக் கடற் கொள்ளைக்காரர்கள் அத்தீவில் கடம்ப மரத்தைத் தங்கள் காவல் மரமாக வளர்த்து வந்தார்கள்.

செங்குட்டுவனுடைய தந்தையான நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் தலைமையில் ஒரு கடற் படையை அத்தீவுக்கு அனுப்பி, அங்கிருந்த கடற் கொள்ளைக்காரருடன் போர் செய்து அவர்களை வென்றான். அத்தீவில் அவர்கள் வளர்த்து வந்த காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தி, அத்தீவில் உள்ளவர்களின் குறும்பை யடக்கினான் (2ஆம் பத்து 1 : 12-16, 10 : 2-6).

அத்தீவில் இருந்த கடற்கொள்ளைக் கூட்டத்தார் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வளர்த்து வந்தது உண்மையே. ஆனால், அவர்கள் கடம்பர் அல்லர். அவர்களைக் கடம்பர் என்று சங்க நூல்கள் கூறவில்லை. இக்காலத்துச் சிலர், கடம்ப மரத்தைக் காவல் மரமாக வளர்த்த அவர்களைக் கடம்பர் என்று தவறாகக் கூறுகின்றனர். சங்க காலத்தில் மாமரம், புன்னைமரம், வேப்பமரம், வாகைமரம் முதலிய மரங்களை அரசர் தங்கள் காவல் மரமாக வளர்த்து வந்தார்கள். இக்காலத்தில் கொடி மரங்களை நாட்டுவதுபோல அக்காலத்தவர் காவல் மரங்களை வளர்த்து வந்தார்கள். கொடிகளைப் பகைவர் கைப்பற்றிக் கொண்டால் கொடிக்குடையவர் தோற்றனர் என்று கருதப் படுவது போல, காவல் மரங்களைப் பகைவர் வெட்டிவிட்டால் வெட்டுண்ட காவல் மரத்துக்குரியவர் தோற்றவராகக் கருதப் பட்டனர்.

ஆனால், காவல் மரத்தின் பெயரை அம்மரத்துக்குரியவர் சூட்டிக்கொள்வதில்லை. புன்னை மரத்தையுடையவர் புன்னையர், வேப்ப மரத்தையுடையவர் வேம்பர் (மோகூர் மன்னன் வேம்பைக் காவல் மரமாக வளர்த்தான்), வாகை மரத்தை வளர்த்தவர் வாகையர் என்று பெயர் பெறவில்லை. அதுபோன்று துளு நாட்டுத் தீவில் இருந்தவர் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்ததனாலே அவர்கள் கடம்பர் என்று பெயர் பெறவில்லை.

இதனையறியாமல் இக்காலத்துச் சிலர் அத்தீவிலிருந் தவரைக் கடம்பர் என்று தவறாகக் கூறுவதோடு அமையாமல் அக்கடம்பர், பிற்காலத்தில் சரித்திரத்தில் கூறப்படுகிற கடம்ப

அரசர்களின் முன்னோர்கள் என்றும் எழுதியுள்ளனர் (K.N. Sivaraja Pillai, *The Chronology of the Early Tamils*, 1932, p.111, Foot note, 124,176, Footnote 1; P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, 1929, p.501; K.G. Sesha Aiyar, *Cera Kings of the Sangam Period*, 1937, p.19). ஆனால், பிற்காலத்துக் கடம்ப அரசர் பரம்பரையை உண்டாக்கினவன் மயூரசர்மன் என்னும் பிராமணன் என்று சரித்திரம் கூறுகிறது. இந்த மயூரசர்மன் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் இருந்தவன். காஞ்சீபுரத்துப் பல்லவ அரசர்களுடன் பகைத்து அவர்களுக்கு எதிராக பனவாசி இராச்சியத்தை ஏற்படுத்தினவன். ஏறத்தாழ கி.பி. 360இல் முடிசூடிக் கொண்டவன். எனவே, கடம்ப அரசர் பரம்பரை ஏற்பட்டதே கி.பி. 4ஆம் நூற்றாண்டில். அப்படியிருக்கக் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்த துளு நாட்டுத் தீவிலிருந்தவர்களுக்கு (அவர்கள் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த காரணத்தினாலே) கடம்பர் என்று அவருக்கு இல்லாத பெயரைப் புதிதாகக் கொடுத்து அவரைக் கடம்ப அரசரின் முன்னோர் என்று கூறுவது பொருந்தாது. இது சரித்திர உண்மைக்கு ஒவ்வாத தவறு ஆகும். இவ்வாறு சரித்திரத்துக்கு மாறுபடக் கூறி, துளு நாட்டுத் தீவிலிருந்த கடம்ப மரத்தைப் பிற்காலத்துக் கடம்ப குல அரசருடன் இணைத்து முடிபோட்டு, கி.பி. 2ஆம் நூற்றாண்டிலிருந்த நெடுஞ்சேரலாதனைக் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்த கடம்ப அரசர்கள் காலத்தில் அமைத்துக் கூறுகிறார் சீநிவாச அய்யங்கார் (P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, p. 501). ஆனால், கடம்ப அரசர்களின் முன்னோர் இத்தீவில் இருந்தவர் என்று தாம் கூறியதை இவரே தாம் எழுதிய *இந்திய தேச சரித்திரத்தில்* கூறாமல் மறைத்துவிட்டார். 1929ல் இவர் எழுதிய *தமிழர் சரித்திரத்தில்* துளு நாட்டுத் தீவில் இருந்தவர்கள் கடம்ப குலத்து அரசரின் முன்னோர் என்று கூறிய இவர், 1942இல் தாம் எழுதிய *அட்வான்ஸ் ஹிஸ்டரி ஆப் இண்டியா* (P.T. Srinivasa Iyengar, *Advanced History of India* (*Hindu Period*),. Revised Edition, 1942, p.264) என்னும் நூலில் இச்செய்தியை அறவே மறைத்துவிட்டுக் கடம்ப அரசர்களின் ஆதி புருஷன் மயூரசர்மன் என்று எழுதியிருக்கிறார். இதனால் இவர் முன்பு கூறியது தவறு என்று இவர் பிறகு உணர்ந்துகொண்டார் என்பது தெரிகிறது.

நன்னன்–2

முதலாம் நன்னனுக்குப் பிறகு துளு நாட்டை யரசாண்டவன் அவன் மகனான நன்னன் என்பவன். இவனை இரண்டாம் நன்னன் என்று கூறுவோம். இவன், செங்குட்டுவனின் காலத்தில் இருந்தவன். இந்த நன்னன் தன்னுடைய துளு இராச்சியத்தைப்

பெரிதாக்க முயற்சி செய்தான். துளு நாட்டுக்குத் தெற்கே இருந்த சேர நாட்டின் வடபகுதியான பூழி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். மேலும், கொங்கு நாட்டின் வடக்குப் பகுதியைச் சேர்ந்திருந்த புன்னாட்டையும் கைப்பற்றினான். புன்னாடு அக் காலத்தில் நீலக் கல்லுக்குப் பேர் போனது. அங்கு அக்காலத்தில் நீலக்கல் சுரங்கம் இருந்தது. புன்னாட்டு நீலக்கற்கள் உரோமாபுரி முதலிய அயல் நாடுகளிலும் புகழ்பெற்றிருந்தது. தென்னாட் டுக்கு அக்காலத்தில் வந்த யவன வாணிகர் அந் நீலக்கற்களையும் வாங்கிக்கொண்டு போனார்கள்.

அக்காலத்தில் சேர அரசர்கள் தங்கள் நாட்டை யடுத்திருந்த கொங்கு நாட்டின் தென் பகுதிகளைக் கைப்பற்றிச் சேர இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டனர். மேலும், கொங்கு நாட்டு வேறு பகுதிகளைக் கைப்பற்றவும் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் இந்த நன்னன், சேர நாட்டுக்குரிய பூழி நாட்டையும் வட கொங்கிலிருந்த புன்னாட் டையும் கைப்பற்றிக் கொண்டபடியினாலே சேர அரசர் இந்த நன்னனைப் பகைத்து இவனை ஒடுக்க எண்ணினார்கள். ஆகவே, இந்நன்னன்மேல் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் போர் தொடுத்தான்.

நன்னனுடைய மறவன் (சேனைத் தலைவன்) மிஞிலி என்பவன். மிஞிலி துளு நாட்டில் பாரம் என்னும் ஊரில் இருந்தான். அவன் சிறந்த வீரன்.

> விளை அம்பின் வில்லோர் பெருமகன்
> பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும் பாரம்

என்று *நற்றிணைச்* செய்யுள் (265 : 3-5) கூறுகிறது.

இந்த நன்னன் காலத்திலும் நார்முடிச்சேரல் காலத்திலும் பாண்டி நாட்டை அரசாண்டவன் பசும்பூட் பாண்டியன் என்பவன். பசும்பூட் பாண்டியனுடைய மறவன் (சேனைத் தலைவன்) அதிகமான் நெடுமிடல் என்னும் சிற்றரசன். அதிகமான் நெடுமிடல் கொங்கு நாட்டுத் தகடூரின் அரசன். நெடுமிடல் நன்னனுடைய துளு நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். இவனை, நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி வாகைப் பறந்தலை என்னும் இடத்தில் எதிர்த்துப் போரிட்டான். அப்போரில் அதிகமான் நெடுமிடல் இறந்துபோனான்.

> கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
> பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
> களிறொடு பட்ட ஞான்றை (*குறுந்தொகை* 393 : 3-5)

அதிகமான் இந்தப் போரில் இறந்ததைப் பரணர் *அகம்* 142ஆம் செய்யுளிலும் கூறுகிறார். பாழி என்னும் இடத்தில் அவன் இறந்த

தாகக் கூறுகிறார். வாகைப் பறந்தலை, பாழி என்னும் இடங்கள் ஒன்றே. இவை வெவ்வேறு இடங்கள் என்று கூறுவது பிழையாகும்.

சேர அரசனான களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலும் நன்னன் மேல் போர் தொடுத்தான். நார்முடிச்சேரல், தன்னுடைய மறவன் (சேனைத் தலைவன்) ஆன வெளியன் வேண்மான் ஆய் எயினன் என்பவனைப் புன்னாட்டின் சார்பாக நன்னன்மேல் போர் செய்யத் துளு நாட்டுக்கு அனுப்பினான். ஆய்எயினன் துளு நாட்டுக்குப் படையெடுத்துச் சென்றபோது மேலே கூறிய மிஞிலி அவனைப் பாழி என்னும் இடத்தில் எதிரிட்டுப் போர் செய்தான். கடுமையாக நடந்த அந்தப் போரில் சேரனுடைய சேனைத் தலைவனான ஆய்எயினன் இறந்துபோனான்.

> பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
> யாழிசை மறுகில் பாழி யாங்கண்
> அஞ்சல் என்ற ஆய் எயினன்
> இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
> தன்னுயிர் கொடுத் தனன் (*அகம்* 396 : 2-6)

> கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
> நெடுந்தேர் மிஞிலியொடுபொருது களம்பட்டென
> (*அகம்* 148 : 7-8)

வேறு இரண்டு அகப்பாட்டிலும் இச்செய்தி கூறப்படுகிறது (*அகம்* 181 : 3-7; 208 : 5-9).

நார்முடிச்சேரல் தன்னுடைய சேனாபதி தோல்வியடைந்து இறந்ததற்காகத் தான் தொடுத்த போரை நிறுத்தவில்லை. அவன் தொடர்ந்து துளு நாட்டின்மேல் சில காலம் போர் செய்தான். அப்போர் 'நிலைச்செரு'வாக நீண்டது. நார்முடிச்சேரல் ஒரு புறமும் அவன் தம்பியாகிய செங்குட்டுவன் இன்னொரு புறமும் மற்றொரு தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் வேறொரு புறமும் சென்று துளு நாட்டைத் தாக்கிப் போர் செய்தார்கள். செங்குட்டுவன், கடற்கரைப் பக்கமாகப் போய்த் துளு நாட்டைத் தாக்கிப் போர் செய்து வியலூர், கொடுகூர், நறவு முதலிய ஊர்களைக் கைப்பற்றினான். நார்முடிச்சேரல் நடுப்பகுதியில் சென்று போர் செய்து தான் முன்பு இழந்துவிட்ட பூழிநாட்டை மீட்டுக்கொண்டதல்லாமல், நன்னனுடைய நாட்டுக்குள் புகுந்து போர் செய்தான். நன்னன், நார்முடிச் சேரலை எதிர்த்துப் போரிட்டான். பெருவாயில், வகைப் பெருந் துறை என்னும் இடங்களில் போர் நடந்தது. கடைசியில் நன்னன் தோற்று இறந்துபோனான். வெற்றி பெற்ற நார்முடிச்சேரலுக்குத் துளு நாடு அடங்கிற்று.

குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்தநாடு தந்தன்ன வளம் (அகம் 199 : 18-24)

இவ்வெற்றியைப் *பதிற்றுப்பத்து* 4ஆம் பத்துங் கூறுகிறது (4ஆம் பத்து 4 : 14-16, பதிகம்).

நன்னன் போரில் இறந்த பிறகு துளு நாடு நார்முடிச்சேரலுக்குக் கீழடங்கிற்று. துளு நாட்டின் பேர்பெற்ற துறைமுகப் பட்டினமாகிய நறவு என்னும் பட்டினத்தில், நார்முடிச்சேரலின் தம்பியும் செங்குட்டுவனின் தம்பியுமாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தங்கி அரசாண்டான்.

பொங்குபிசிர்ப் புணரி மங்குலோடு மயங்கி
வருங்கடல் ஊதையில் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தாளே (6ஆம் பத்து 10 : 10-12)

நன்னன்–3

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் துளு நாட்டை வென்ற பிறகு இரண்டாம் நன்னனின் மகனான நன்னன் என்பவன் சேர அரசருக்குக் கீழடங்கித் துளு நாட்டை யரசாண்டான். இவனை மூன்றாம் நன்னன் என்று கூறுவோம். இந்த மூன்றாம் நன்னன், நன்னன் உதியன் என்று பெயர்பெற்றான். நன்னன் என்பது இவன் குடிப்பெயர். உதியன் என்பது சேர அரசனின் குடிப்பெயர். சேர ஆட்சிக்குக் கீழடங்கியபடியால் இவன், சேரனின் குடிப் பெயராகிய உதியன் என்னும் பெயரையும் தன் பெயருடன் இணைத்து நன்னன் உதியன் எனப்பட்டான். இவன் இருந்த ஊர் பாழி என்பது. 'நன்னன் உதியன் அருங்கடிப் பாழி' என்று அகப் பாட்டுக் கூறுகிறது (*அகம்* 358 : 1).

பெரும்பூட் சென்னி என்னும் சோழன், சேரருக்கு உரியதான கொங்கு நாட்டுக் கட்டூரின்மேல் தன் சேனைத் தலைவனான பழையன் என்பவனை அனுப்பினான். பழையன் கட்டூரின் மேல் படையெடுத்தும் சென்றான். அவனைச் சேர அரசன் சார்பாக இந்த மூன்றாம் நன்னனும் (நன்னன் உதியன்), ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்னும் வேறு சிற்றரசர்களும் எதிர்த்துப் போர் செய்து போர்க்களத்தில் கொன்றுவிட்டார்கள் (*அகம்* 44 : 7-11). இச்சிற்றரசர்கள் சேரர்களுக்குக் கீழடங்கியவர் எனத் தோன்றுகின்றனர்.

குறிப்பு: நன்னன் என்னும் பெயருள்ள வேறு சில அரசர்களும் அக்காலத்தில் இருந்தார்கள். பல்குன்றக் கோட்டத்துச்

செங்கண்மா என்னும் ஊரை (இப்போதைய தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம்) நன்னர் என்னும் பெயருள்ள அரச குடும்பத்தார் அரசாண்டனர். அந்த நன்னர்களில் ஒரு நன்னன் மேல் பாடப்பட்டதுதான் *மலைபடுகடாம்* என்னும் *கூத்தராற்றுப்படை*. இந்தச் செங்கண்மாத்து நன்னர் வேறு, துளு நாட்டு மன்னர் வேறு. பெயர் ஒற்றுமை காரணமாக இரு வரையும் ஒரே குலத்தவராகக் கருதுவது தவறு.

பாண்டிய மன்னர்

பசும்பூட் பாண்டியன்

செங்குட்டுவன் காலத்தில் பாண்டிய நாட்டை அரசாண்ட மன்னர் யாவர் என்பது பற்றி ஆராய்வோம். செங்குட்டுவனின் தமயனான களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் காலத்தில் பாண்டி நாட்டை அரசாண்ட அரசன் பசும்பூட் பாண்டியன் என்பது தெரிகிறது. பசும்பூட் பாண்டியனைப் பரணர் என்னும் புலவர் தமது செய்யுள்களில் குறிப்பிடுகிறார் (பரணர், நார்முடிச்சேரல், செங்குட்டுவன் ஆகியோர் காலத்தில் இருந்த புலவர். செங்குட்டுவன்மீது 5ஆம் பத்துப் பாடியவர். செங்குட்டு வன் இமயம் சென்றதற்கு முன்பு காலமானார்). பரணர், பசும்பூட்பாண்டியனும் கொங்கு நாட்டுத் தகடூர் அதிகமானும் நண்பர் என்றும் பாண்டியன் கொடி அதிகமானுடைய மலையில் பறந்தது என்றும் கூறுகிறார் (*அகம்* 162 : 17-23). அதிகமான், பசும்பூட்பாண்டியனுடைய சேனைத் தலைவன் என்றும் கூறுகிறார். 'பசும்பூட்பாண்டியன் வினைவல் அதிகன்' (*குறுந்*. 393 : 4) (வினை-போர்).

பசும்பூட்பாண்டியன் காலத்திலிருந்த மதுரைக் கணக்காயனார் என்னும் புலவர், இவன் செங்கோலாட்சியும் அறநெறியும் உடையவன் என்று கூறுகிறார்.

> அறங்கடைப் பிடித்த செங்கோ லுடனமர்
> மறஞ்சாய்த் தெழுந்த வலனுயர் திணிதோள்
> பலர்புகழ் திருவின் பசும்பூட் பாண்டியன்
>
> (*அகம்* 338 : 3-5)

பசும்பூட் பாண்டியன் கொங்கு நாட்டிலிருந்த கொங்கரை ஓட்டி அவர்களுடைய நாட்டைக் கைப்பற்றினான் என்றும் அவ்வெற்றியை மதுரை மக்கள் ஆரவாரத்தோடு கொண்டாடி னார்கள் என்றும் நக்கீரர் கூறுகிறார்.

> வாடாப் பூவிற் கொங்கர் ஓட்டி
> நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
> பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
> இன்னிசை ஆர்ப்பு (*அகம்* 253 : 4-7)

(நக்கீரனார் இப்பாண்டியனுடைய காலத்துக்குப் பின் இருந்தவர். இச்செய்தியை இவர் தமது தகப்பனாராகிய மதுரைக் கணக்காயனாரிடமிருந்து தெரிந்துகொண்டார் போலும்.) இதனால், பசும்பூட் பாண்டியன் கொங்கு நாட்டின் சில பகுதிகளை வென்றுகொண்டான் என்பது தெரிகின்றது. பேரரசன் இல்லாமல் சிற்றரசர்கள் மட்டும் ஆட்சி செய்துகொண்டிருந்த கொங்கு நாட்டைச் சேர அரசர்கள் சிறிதுசிறிதாகக் கைப்பற்றிச் சேர இராச்சியத்தைப் பெருகச் செய்து கொண்டபோது, பாண்டியரும் சோழரும் வாளா இருக்கவில்லை. அவர்களும் கொங்கு நாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். அவ்வாறு முயற்சி செய்தவர்களில் பசும்பூட் பாண்டியனும் ஒருவன். இவன், கொங்கு நாட்டின் ஒரு பகுதியை யரசாண்ட தகடூர் மன்னர் பரம்பரையில் வந்த அதிகமான் நெடுமிடல் என்பவனைத் துணையாகக் கொண்டு கொங்கு நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றினான். அதிகமான் நெடுமிடல், சேர மன்னர் கொங்கு நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு வருவதையறிந்து, தனக்கு ஆபத்து ஏற்படும் என்பதை யுணர்ந்து, தனக்கு உதவியாகப் பசும்பூட் பாண்டியனுடன் நட்புக் கொண்டான் என்பது தெரிகிறது. பசும்பூட் பாண்டியனுக்குப் பகைவராகிய சில அரசர்கள் இப்பாண்டியனுடைய துணைவனாகிய நெடுமிலுடன் போர் செய்து ஒரு போரில் அவனைத் தோற்கச் செய்தனர். இதனை,

> *யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்*
> *வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்*
> *நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தலர்*
>
> (*அகம்* 266 : 10-12)

என்றும் பரணர் கூறுகிறார்

பசும்பூட் பாண்டியனுடைய சேனாபதியாகிய அதிகமான் நெடுமிடலினை, நார்முடிச்சேரல் (செங்குட்டுவனின் தமயன்) வென்றான் என்று காப்பியாற்றுக் காப்பியனார் கூறுகின்றார்.

> நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
> பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து
>
> (4ஆம் பத்து 2 : 10-11)

இதன் பழைய உரையாசிரியர் நெடுமிடல் என்பதற்கு இவ்வாறு விளக்கங் கூறுகிறார்: "நெடுமிடல்-அஞ்சி. இற்(இயற்) பெயராம்."

இவனுடைய சேனாபதியாகிய நெடுமிடல் துளு நாட்டில் போர் செய்து அப்போரில் உயிர் துறந்தான் (பரணர், *குறுந்.* 373 : 3-6). பசும்பூண் பாண்டியனைப் பற்றி வேறு செய்திகள்

தெரியவில்லை. இவன் எத்தனை ஆண்டு அரசாண்டான் என்பதும் தெரியவில்லை

நெடுஞ்செழியன்–1

இவனுக்குப் பிறகு பாண்டி நாட்டை யரசாண்டவன் நெடுஞ்செழியன் என்பவன். வேறு சில நெடுஞ்செழியர் இருந்த படியால் அவர்களில் இருந்து பிரித்தறிவதற்காக இந்நெடுஞ் செழியனை 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' என்று கூறுவர். இவன், ஆரியப் படையை வென்ற செய்தி விபரமாகத் தெரியவில்லை. அப்போர் எங்கு நடந்தது என்பதும் தெரிய வில்லை. இந்நெடுஞ்செழியன் கவி பாடும் புலமையுடையவன். இவன் இயற்றிய 'உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' என்று தொடங்கும் செய்யுள் கல்வியின் சிறப்பைக் கூறுகின்றது. இச்செய்யுள் *புறநானூற்றில்* (183) தொகுக்கப்பட்டிருக்கிறது.

நெடுஞ்செழியன் மதுரையிலிருந்து அரசாண்ட காலத்தில், இவனுடைய தம்பியாகிய வெற்றிவேற் செழியன், பாண்டி நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய கொற்கைப்பட்டினத்தில் இருந்து அரசாண்டான். இந்த நெடுஞ்செழியனை எதிர்த்துச் சோழனும் சேரனும் போர் செய்தனர் என்றும் அப்போர் மதுரைக்கு அருகில் நடந்தது என்றும் அப்போரில் நெடுஞ் செழியன் வெற்றிபெற்றான் என்றும் பரணர் கூறுகிறார் (அகம் 116 : 13-19).

நெடுஞ்செழியன் ஆட்சிக் காலத்தில் கோவலன் மதுரையில் தவறாகக் கொலையுண்டான். பெரும் பொருளைச் செலவு செய்து வறுமையடைந்த கோவலன் பொருள் ஈட்டுவதற்காகக் கண்ணகியுடன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குச் சென்றான். சென்று கண்ணகியின் காற்சிலம்பை விற்கப் பொற்கொல்லனிடம் விலை கூறியபோது, அப்பொற்கொல்லன், நாட்டுக்குப் புதியவனாகிய கோவலன்மீது களவுக் குற்றஞ் சாற்றிக் கொல்வித்தான். கண்ணகியார், பாண்டியன் சபைக்கு நேரில் சென்று வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பித்தார். தான் தவறு செய்து அநியாயமாகக் கோவலனைக் கொன்றதை யுணர்ந்த நெடுஞ்செழியன் இதய அதிர்ச்சியினால் சிம்மாசனத்தில் இருந்தபடியே உயிர்விட்டான். ஆகவே, இவனுக்கு 'அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்' என்றும் பெயர் ஏற்பட்டது (அரசு கட்டில் - சிம்மாசனம்.; துஞ்சிய - இறந்த).

வட வாரியர் படை கடந்து
தென்றமிழ் நாடொருங்கு காணப்

புரைநீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலிற் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ் செழியன்

என்று இப்பாண்டியனைச் *சிலப்பதிகாரம்* (மதுரைக் காண்டம், கட்டுரை) கூறுகின்றது. இவன் எத்தனை ஆண்டு அரசாண்டான் என்பது தெரியவில்லை. இவனும் சேரன் செங்குட்டுவனும் சம காலத்தவர்.

வெற்றிவேற் செழியன்

'ஆரியப்படை கடந்த,' 'அரசுகட்டிலில் துஞ்சிய' பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிறகு, கொற்கைப் பட்டினத்தில் இளவரசனாக இருந்த வெற்றிவேற் செழியன், பாண்டி நாட்டின் அரசனானான் (*சிலம்பு* 27 : 127-138). இப்பாண்டியன் ஆட்சிக்கு வந்த உடனே, கோவலன் தவறாகக் கொலை செய்யப்பட்ட காரணத்தை விசாரித்து உண்மையறிந்து, அரச நீதி தவறுவதற்குக் காரணமாக இருந்த பொற்கொல்லனையும் அவனுக்கு உதவியாயிருந்தவர்களையும் தண்டித்தான் (*சிலம்பு* 27 : 127-130, உரைபெறு கட்டுரை 1). இவன் கண்ணகிக்கு மதுரையில் விழாச் செய்தான் என்று *சிலப்பதிகாரம்* உரைபெறு கட்டுரை கூறுகிறது.

கங்கைக் கரையிலே போர் செய்து தோல்வியடைந்த கனகவிசயரைச் செங்குட்டுவன் சிறைப்பிடித்து வந்து, அவர் களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டும்படித் தன் உத்தியோகஸ்தனான நீலனை அனுப்பினான். நீலன் பாண்டி நாடு சென்று வெற்றிவேற் செழியனுக்குக் கனகவிசயர்களைக் காட்டியபோது வெற்றிவேற்செழியன், செங்குட்டுவனின் வெற்றியைப் போற்றவில்லை. 'போர் செய்யமுடியாமல் துறவி வேடம் பூண்டு போர்க்களத்திலிருந்து ஓடிய இவர்களைச் சிறைப்பிடித்து வந்தது புதுமையாக இருக்கிறது!' என்று கூறினான் (*சிலம்பு* 28 : 97-197). செழியன் பாண்டி நாட்டின் அரசனான பிறகு நன்மாறன் என்று பெயர் பெற்றான் என்பர். பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்பவன் இவனே. இப்பாண்டியன் எத்தனை ஆண்டு அரசாண்டான் என்பதும் இவனைப் பற்றிய வேறு செய்திகளும் தெரியவில்லை. இவனும் சேரன் செங்குட்டுவன் காலத்தில் இருந்தவன். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் உயிர் நீத்ததும் வெற்றிவேற் செழியன் மதுரையில் வந்து முடி சூடியதும் ஏறக்குறைய கி.பி. 175ஆம் ஆண்டில் ஆகும்.

நெடுஞ்செழியன்–2

வெற்றிவேற் செழியனுக்குப் பிறகு பாண்டி நாட்டை அரசாண்டவன் மற்றொரு நெடுஞ்செழியன். இந்த நெடுஞ்செழியன், இவனுக்கு முன்பு இருந்த ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலிற் துஞ்சிய நெடுஞ்செழியனின் வேறு என்பதைத் தெரிவிக்க இவனைத் 'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்று கூறுவர். இந்த நெடுஞ்செழியன்மீது பாடப் பட்டதுதான் *மதுரைக்காஞ்சி.* இப்பாண்டியன், சேரன் செங்குட்டுவன் இறந்த பிறகு பாண்டி நாட்டை யரசாண்டான். இவன் செங்குட்டுவன் காலத்துக்குப் பின் இருந்தவனாகலின் இவனைப் பற்றிய ஆராய்ச்சி இங்கு வேண்டுவதில்லை. ஆனால், ஒரு முக்கியமான செய்தியை இங்குக் கூறவேண்டும். அதென்னவெனில்,

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் வேறு, தலையாலங் கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன் வேறு. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூடல் (மதுரை) பறந்தலையில் சேர, சோழ அரசர்களை வென்றான். இச்செய்தியைப் பரணர் தம் செய்யுளில் (*அகம்* 116 : 12-18) கூறுகிறார். தலையாலங்கானத்துப் பறந்தலைப் போரில் சேர சோழர்களை வென்ற நெடுஞ் செழியனைக் கல்லாடனார் பாடியுள்ளார் (*புறம்* 25). இவர்கள் வெவ்வேறு காலத்தில் இருந்த வெவ்வேறு நெடுஞ்செழியர்கள். இதனை அறியாமல், இவ்விரு நெடுஞ்செழியரும் ஒருவரே என்று தவறாகக் கருதிக்கொண்டார் திரு. பி. டி. சீநிவாச ஐயங்கார். இருவரையும் ஒருவர் என்றே தவறாகக் கருதிக்கொண்டு, தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தமிழர் சரித்திரம்* என்னும் நூலில் தவறாக எழுதிவிட்டார் (P.T. Srinivasa Aiyangar, *History of the Tamils*, 1924, p. 444). மேலும், ஐயங்கார் மற்றொரு தவற்றையும் செய்து விட்டார். செங்குட்டுவன் காலத்திலும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்திலும் இருந்த பரணரைப் பிற்காலத்தில் இருந்த தலையாலங்கானத்துப் போர் வென்ற நெடுஞ்செழியன் காலத்துக்கும் பிற்பட்டவர் என்று மற்றொரு தவறான செய்தியை எழுதிவிட்டார். செங்குட்டுவனைப் *பதிற்றுப்பத்திலும்* (5ஆம் பத்து), ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனை அகப் பாட்டிலும் (*அகம்* 116 : 12-18) குறிப்பிட்டுப் பாடிய பரணர், செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைப்பதற்கு முன்பே கால மானார். இதனை அறியாமல், சீநிவாச ஐயங்கார், செங்குட்டு வனுக்குப் பிறகு இருந்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் பிற்காலத்தில் பரணர் இருந்தார் என்று எழுதியுள்ளார். இவ்வாறெல்லாம் தவறாகக் கூறுவதன் காரணம் என்னவென்றால் வெவ்வேறு நெடுஞ்செழியரை ஒரே நெடுஞ் செழியன் என்று பிழையாகக் கருதிக்கொண்ட தவறேயாம்.

மோகூர் மன்னன்

பாண்டியர்களுக்குக் கீழடங்கிப் பாண்டி நாட்டு மோகூரில் சிற்றரசர் பரம்பரை ஒன்று இருந்தது. மோகூர் சிற்றரசருக்குப் பழையர் என்னும் குடிப்பெயர் உண்டு. மோகூர்ப் பழையர்கள் பாண்டியர், படைக்குச் சேனைத் தலைவராக இருந்தவர்கள்.

மோகூர், இப்போதுள்ள மதுரைக்கு வடகிழக்கே ஏழு மைல் தூரத்திலும், அழகர்மலைக்குத் தெற்கே பத்து மைல் தூரத்திலும் இருக்கிறது (இவ்வூர், பிற்காலத்தில் திருமோகூர் என்று பெயர் பெற்று வைணவர்களின் 108 திருப்பதிகளில் ஒன்றாகத் திகழ்ந் தது. இவ்வூர்க் காளமேகப் பெருமானைப் பிற்காலத்திலிருந்த நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளனர்). மோகூர்ப் பழையர்கள் தங்கள் ஊரில் வேப்பமரத்தைக் காவல் மரமாக வளர்த்து வந்தனர்.

சேரன் செங்குட்டுவன் காலத்தில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்), இருந்த மோகூர்ப் பழையனுக்கும் அறுகை என்பவனுக்கும் பகை ஏற்பட்டுப் பழையன், அறுகையைப் போரில் வென்றான். அதனால் அறுகை, பழையனுக்கு அஞ்சி ஒடுங்கினான். அறுகையின் நண்பனான சேரன் செங்குட்டுவன், மோகூர்ப் பழையன் மேல் படையெடுத்துச் சென்று அவனுடைய காவல் மரத்தை வெட்டி வீழ்த்திப் பழையனையும் போரில் கொன்றான் (*பதிற்று.* 5ஆம் பத்து ; 4 : 10-17, 9 : 7-17; பதிகம் 13-17; *சிலம்பு* 27 : 124-126). இந்தப் பழையன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் (அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியன்) காலத்தில் இருந்தவன்.

மோகூர்ப் பழையன் இறந்த பிறகு அவனுடைய மகன் 'பழையன்' என்னும் குடிப்பெயருடன் மோகூரை யரசாண்டான். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்திலும் இருந்தான். *மதுரைக் காஞ்சியில்,*

> பழையன் மோகூர் அவையகம் விளங்க
> நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன (*மதுரை.* 508, 509)

என்று கூறப்படுகிற மோகூர்ப் பழையன் இவனே,

மோகூர்ப் பழையர்களின் முன்னோன் ஒருவன் கி.மு. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்குச் சென்று, இலங்கையரசனை வென்று அநுராதபுரத்தில் சில ஆண்டுகள் அரசாண்டான் என்னும் செய்தியை *மகாவம்சம்* என்னும் பாலி மொழி நூலில் அறிகிறோம். அவனை, அந்நூல் பிளயமாரன் என்று கூறுகிறது (*Mahavamsa* xxxiii, 58-59.).

அகம் 251ஆம் செய்யுளில் மாமூலனார் என்னும் புலவர், வம்பமோரியர் மோகூரின் மேல் படையெடுத்து வந்தனர் என்று

கூறுகிறார். இது பற்றிப் பல ஆராய்ச்சிக்காரர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர், வம்பமோரியர் மோகூரின் மேல் படையெடுத்து வந்ததாக எழுதியுள்ளனர். மோரியர், மோகூரின்மேல் படையெடுத்து வரவில்லை. அவர்கள் துளு நாட்டுக் கடற்கரையோரத்தில் வசித்திருந்த 'மோகூர்' என்னும் இனத்தார் மீது படையெடுத்துச் சென்றனர். இதுபற்றி இந்நூல் தொடர்புரை காண்க.

பாண்டிய அரசர்

|

பசும்பூண் பாண்டியன்

|

நெடுஞ்செழியன் - 1

(ஆரியப்படை கடந்தவன், அரசுகட்டிலிற் றுஞ்சியவன்)

|

வெற்றிவேற் செழியன்

(சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்)

|

நெடுஞ்செழியன் - 2

(தலையாலங்கானத்துச் செரு வென்றவன்)

சோழ அரசர்

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் சோழ அரசர் குடியில் பிறந்த சில அரசர்கள் சோழ நாட்டின் வெவ்வேறு பகுதிகளை யரசாண்டனர். அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் போர் செய்து கொண்டிருந்தார்கள். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற் பகுதியில் இருந்த பேர்பெற்ற சோழ அரசன் உருவப் பஃறே ரிளஞ் சேட் சென்னி என்பவன். இளஞ்சேட் சென்னியும் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனும் (இவன் செங்குட்டுவனின் தந்தை) சமகாலத்தில் இருந்த அரசர்கள். இவ்விருவரும் போர் என்னும் இடத்தில் போர் செய்தார்கள். அந்தப் போர்க்களத்தில் இவ்விரு வரும் புண்பட்டு விழுந்து சிலகாலம் உயிர் போகாமல் கிடந்து பிறகு இறந்துபோனார்கள். அப்போது அவர்களைப் போர்க் களத்தில் கழாத்தலையார், பரணர் என்னும் புலவர்கள் பாடினார்கள் (*புறம்* 62, 63, 368).

வேற்பஃறடக்கைப் பெருவிற்கிள்ளிக்குப் பிறகு கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன், முடிசூடி அரசாண்டான். அவன் ஆட்சிக்கு வராதபடி அவனுடன் சோழகுலத்து அரசர் ஒன்பது பேர் போர் செய்தார்கள் (*பட்டினப்பாலை* 220, 227). அவர்களைக் கரிகாலன் வாகைப் பெருந்தலை என்னும் இடத் தில் வென்றான். அந்த ஒன்பது தாயாதியரசர்களைக் கரிகாலன்

வென்று சோழநாட்டை யரசாண்டான் (*அகம்* 125 : 16-21). கரிகாற் பெருவளத்தான் தொண்டை நாட்டை யரசாண்ட தொண்டைமான் இளந்திரையன் என்பவனையும் வென்று தொண்டை நாட்டைச் சோழ இராச்சியத்தோடு இணைத்துக் கொண்டான். இதைப் *பட்டினப்பாலை,*

பல்லொளியர் பணிபு ஒடுங்கத்
தொல் அருவாளர் தொழில் கேட்ப (*பட்டினப்.* 274, 275)

என்று கூறுகிறது (அருவாளர் என்பது தொண்டை நாட்டார்).

தொண்டை நாட்டை யரசாண்ட தொண்டைமான் இளந்திரையன்மேல் *பெரும்பாணாற்றுப்படை* பாடின கடியலூர் உருத்திரங் கண்ணனாரே கரிகாற் சோழன்மீது *பட்டினப்பாலை* பாடினார். இளந்திரையன்மீது *பெரும்பா ணாற்றுப்படை* பாடிய பின்னர், கரிகாற் சோழன் தொண்டை நாட்டை வென்றிருக்க வேண்டும். ஏனென்றால், கடியலூர் உருத்திரங்கண்ணனாரே கரிகாலன் அருவா நாட்டை (தொண்டை நாட்டை) வென்றதாகக் கூறுகிறார். எனவே, உருத்திரங்கண்ணனார் காலத்திலேயே தொண்டை நாடு, சோழ இராச்சியத்துக்குக் கீழடங்கிற்று.

அக்காலத்தில் தக்ஷிணபதம் என்னும் தக்காண நாட்டைச் சதகர்ணி (சாதவாகனர்) அரசர் ஆட்சி செய்தார்கள். சேர அரசர், சதகர்ணியரசருடன் நண்பராக இருந்ததுபோலவே கரிகாற் சோழனும் அவர்களுடன் நண்பனாக இருந்தான். அக்காலத்தில் தக்காணத்துக்கு அப்பாலிருந்த வட இந்தியாவில் பேரரசர் இல்லை. வட இந்தியாவில் சிறுசிறு நாடுகளைச் சிற்றரசர்கள் பலர் அரசாண்டார்கள். கரிகாற் சோழன் வட இந்தியாவின் மேல் திக்குவிசயஞ்செய்து சில அரசர்களை வென்றான். வென்று அவர்களிடமிருந்து சில பொருள்களைப் பெற்றான் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்

இவன் பெற்றுக்கொண்டான் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது (*சிலம்பு* 5 : 99-104). இவர்களில் அவந்தி வேந்தன் கரிகாலனுக்கு நண்பன் என்று அரும்பதவுரையாசிரியர் கூறுகிறார். "உவந்தனன் கொடுத்த - மித்திரனாய்க் கொடுத்த" என்று அவர் உரை கூறுவது காண்க. அவந்தி தேசத்தின் தலைநகரம் உஞ்சை என்னும் உச்ச

யினி நகரம். அவந்தி தேசம் அக்காலத்தில் சதகர்ணியரசன் ஆட்சியிலிருந்தது. அவன் கரிகாலனுக்குத் தோரண வாயிலை உவந்து (மகிழ்ச்சியோடு) கொடுத்தான் என்று இளங்கோவடிகள் கூறுவது பொருத்தமேயாகும்.

கரிகால்சோழன்மேல் *பட்டினப்பாலையைக்* கடியலூர் உருத்திரன் கண்ணனார் பாடினார். இவன் மேல் *பொருநர் ஆற்றுப்படையை* முடத்தாமக்கண்ணியார் பாடினார்.

இசை நாடகக் கலையில் பேர்பெற்றிருந்த மாதவி என்பவள் கரிகாற் சோழன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவன் அவையில் அரங்கேறித் தலைக்கோலிப் பட்டத்தைப் பெற்றாள். சோழன் கரிகாலன், நார்முடிச்சேரல் ஆட்சிக் காலத்திலும் செங்குட்டுவன் ஆட்சிக் காலத்திலும் சோழ நாட்டை அரசாண்டான்.

கரிகாலனுக்குப் பிறகு சோழ நாட்டை யரசாண்டவன் கிள்ளி வளவன் என்பவன். இவன் ஆட்சிக்கு வந்தபோது வழக்கம்போல சோழ அரச குலத்துத் தாயாதிகள் ஒன்பது பேர் இவனை எதிர்த்தார்கள். அவர்கள் அரசுரிமைக்காக நாட்டில் குழப்பம் உண்டாக்கி உள்நாட்டுப் போரை நடத்திக்கொண்டிருந்தார்கள். கிள்ளிவளவன் செங்குட்டுவனுக்கு மைத்துனன் ஆகையால், செங்குட்டுவன் சோழரின் உள்நாட்டுப் போரில் தலையிட்டுக் கிள்ளிவளவன் சார்பாகப் போர் செய்து பகைவரை வென்று தன் மைத்துனனுக்கு முடிசூட்டினான். இச்செய்தி *சிலப்பதிகாரத்தி* லிருந்து கிடைக்கிறது.

> மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
> ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
> இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
> வளநா டழிக்கும் மாண்பினர் ஆதலின்
> ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
> பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்
>
> (*சிலம்பு*, நீர்ப்படை 116, 123)

என்றும்

> ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
> நேரிவாயில் நிலைச்செரு வென்று
>
> (*சிலம்பு*, நடுகல் 116,117)

என்றும் *சிலம்பு* கூறுவது காண்க. மேலும், *பதிற்றுப்பத்து* 5ஆம் பத்துப் பதிகமும், இச்செய்தியை

> ஆராச் செருவின் சோழர்குடிக் குரியோர்
> ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
> நிலைச் செருவின் ஆற்றலை யறுத்து

என்று கூறுகிறது. கிள்ளிவளவன் தம்பி இளங்கிள்ளி என்பவன் தொண்டை நாட்டைக் காஞ்சிபுரத்திலிருந்து அரசாண்டான் (*மணிமேகலை* 18 : 172-176).

எனவே, செங்குட்டுவன் காலத்தில் சோழ நாட்டை யரசாண்ட சோழர்கள் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியும் சோழன் கரிகாலனும் கிள்ளிவளவனும் ஆவர். இவ்வரசர் காலத்திலேயே இவர்களுக்கு அடங்கி வேறு சில சோழர்களும் அரசாண்டார்கள்.

இலங்கை அரசர்கள்

இளநாகன்

நமது ஆராய்ச்சிக்குரிய கி.பி. 2ஆம் நூற்றாண்டில், இலங்கையை அரசாண்ட அரசர்களைப் பற்றி ஆராய்வோம். இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இளநாகன் என்னும் அரசன் (கி.பி. 91 முதல் 101 வரையில்) அரசாண்டான். இவன் ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டில் திஸ்ஸ ஏரிக்குச் சென்றபோது இவனுடன் இருந்த லம்பகர்ணர் என்பவர் இவனை விட்டு அநுரைக்கு வந்து விட்டார்கள். லம்பகர்ணர் அக்காலத்தில் செல்வாக்குள்ள உயர் தரத்தவர். அவர்கள் தன்னைவிட்டுப் போய்விட்டதற்காகச் சினங்கொண்ட இளநாகன், அவர்களை மகாதூப சேதியத்துக்குப் பாதை அமைக்கும்படி தண்டித்தான். அவர்கள் தங்கள் கைகளாலே வேலை செய்து பாதையமைக்குமாறும் தாழ்ந்த இனத்தவரான சண்டாளர்களை அவர்களின் மேற்பார்வையாளராக இருக்கவும் கட்டளையிட்டான். இவ்வாறு தங்களை இழிவு படுத்தியதற்காகச் சினங்கொண்ட லம்பகர்ணர் ஒன்று சேர்ந்து அரசனைப் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டு அரசாட்சியைத் தாங்களே நடத்தினார்கள். சிறைப்பட்ட இளநாகன் தன்னுடைய கொற்றயானையின் உதவியினால் சிறையிலிருந்து தப்பித்துத் தன் மகனான சந்தமுகசிவனுடன் மகாதிட்டைத் துறைமுகத்தில் கப்பல் ஏறி எதிர்க்கரையில் இருந்த நாட்டுக்குப் (தமிழ் நாட்டுக்கு) போய்விட்டான் (*Mahavamsa* xxxv, 16-26).

தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்த இளநாகன் எங்குத் தங்கினான், யார் உதவியைப் பெற்றான் என்பது தெரியவில்லை. மூன்று ஆண்டு தமிழ்நாட்டில் தங்கியிருந்து தமிழச் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு மீண்டும் இலங்கைக்கு வந்தான். இலங்கையின் தென்பகுதியான உரோகண நாட்டின் துறைமுகமாயிருந்த 'சக்கரகொப்ப' என்னும் இடத்தில் கரையிறங்கினான். பிறகு, ஹங்காரப்பிட்டி என்னும் இடத்துக்கு அருகில் கபல்லக்கண்ட என்னும் இடத்தில் லம்பகர்ணருடன் போர் செய்து வென்று மீண்டும் தன் அரசாட்சியைக் கைப்பற்றினான்.

போரை வென்ற பிறகு இவன் திஸ்ஸ ஏரிக்குப் போனபோது லம்பகர்ணர்களைத் தன் தேரில் பூட்டி இழுக்கச் செய்தான். இவன், முன்பு கூறியபடி ஆறு ஆண்டு அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்தான் (*Mahavamsa* xxxv, 27-45).

சந்தமுகசிவன்

இளநாகன் இறந்த பிறகு அவன் மகனான சந்தமுகசிவன் (சந்திரமுக சிவன்) ஏழு ஆண்டு எட்டுத் திங்கள் (கி.பி. 101-110) இலங்கையை யரசாண்டான். இவன், தன் தந்தை இளநாகன் அரசு இழந்து தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்திருந்தபோது, அவனுடன் தமிழ்நாட்டில் தங்கியிருந்தான் என்பது தெரிகிறது. எங்கே எவரிடத்தில் தங்கினான் என்பது தெரியவில்லை. இவனுடைய அரசி தமிளாதேவி (தமிழத்தேவி) என்று கூறப்படுகிறாள். எனவே, இவன் தமிழ்நாட்டு அரசகுடும்பத்தில் திருமணஞ் செய்துகொண்டான் என்பது தெரிகிறது. எந்த அரச குடும்பத்தில் மணந்தான் என்பது தெரியவில்லை. மணிகாரகாம என்னும் ஊரில் இந்த அரசன் நிலங்களுக்கு நீர் பாய ஒரு ஏரியை உண்டாக்கி அந்த ஏரியையும் நிலங்களையும் இஸ்ஸரசமண என்னும் இடத்திலிருந்த பௌத்தப் பிக்குகளுக்குத் தானமாகக் கொடுத்தான். இவனுடைய அரசியான தமிளாதேவி, மணிகார காமத்திலிருந்து தனக்குக் கிடைத்த வரிப் பணத்தைப் பௌத்தப் பிக்குகளுக்குத் தானமாகக் கொடுத்து விட்டாள் (*Mahavamsa* xxxv. 46-48).

யஸலாலக திஸ்ஸன்

திஸ்ஸ ஏரியில் நிகழ்ந்த நீர்விளையாட்டு விழாவின்போது, சந்தமுகசிவனை அவன் தம்பியான யஸலாலக திஸ்ஸன் கொன்று இலங்கையை யரசாண்டான். அவன் ஏழு ஆண்டு எட்டுத் திங்கள் வரையில் (கி.பி. 110-118) அரசாண்டான் (*Mahavamsa* xxxv, 49-50). ஆனால், இவனும் தன்னுடைய வாயிற் காவலனான சுபன் என்பவனால் கொல்லப்பட்டான்.

யஸலாலக திஸ்ஸனுடைய வாயிற்காவலன் சுபன் என்பவன். அந்தச் சுபன் உருவத்தில் இவ்வரசனைப் போலவே இருந்தான். ஆகவே, அரசன் சுபனுக்குத் தன்னைப்போல ஆடையணிவித்து விளையாட்டாக வேடிக்கை பார்ப்பது வழக்கம். காவற் காரனாகிய சுபன் அரச ஆடைகளுடன் சிம்மாசனத்தில் அமர்ந் திருக்கும்போது அமைச்சர்கள் சென்று, அவனை அரசன் என்று எண்ணிக்கொண்டு வணங்கும்போது காவல்காரன் வேஷத்தில் வாயிலில் இருக்கும் உண்மையான அரசன் நகைத்து வேடிக்கை

பார்ப்பான். அடிக்கடி இப்படி நிகழ்ந்தது. ஒரு நாள் காவற்கார சுபன் சிம்மாசனத்தில் அமர்ந்து இருந்தபோது காவற்காரன் வேஷத்தில் வாயிலில் இருந்த அரசன் உரத்துச் சிரித்தான். அதனைக் கண்ட சுபன் சினந்து, 'இந்தக் காவலன் ஏன் இப்படிச் சிரிக்கிறான். இவனைக் கொண்டுபோய்ச் சிரச்சேதம் செய்யுங்கள்' என்று கட்டளையிட்டான். அக்கட்டளைப்படியே அவனைக் கொன்றுவிட்டார்கள். பிறகு காவலாளியாயிருந்த சுபன், சுபராசன் என்னும் பெயருடன் இலங்கையை யரசாண்டான் (*Mahavamsa*, xxxv. 51-56).

சுபராசன்

சுபராசன், கி.பி. 118 முதல் 124 வரையில், ஆறு ஆண்டு அநுராதபுரத்திலிருந்து இலங்கையை யரசாண்டான். சுபராசன் ஆட்சிக்கு வந்தபோது, அவனை வசபன் என்னும் பெயருள்ள ஒருவன் கொன்று ஆட்சியைக் கைப்பற்றுவான் என்று நிமித்திகர் கூறினர். ஆகவே, சுபராசன் தன் இராச்சியத்தில் உள்ள வசபன் என்னும் பெயருள்ளவர்களையெல்லாம் கொன்றுவிடும்படி கட்டளையிட்டான். இவனுடைய சேனைத்தலைவனுக்கு உறவினன் ஒருவன் வசபன் என்னும் பெயர் படைத்திருந்தான். அந்தச் சேனைத்தலைவன், அரசன் கட்டளைப்படி தன் உறவினனான வசபனை அரசனிடம் கொடுக்க எண்ணினான். அவனுடைய எண்ணத்தை அவனுடைய மனைவியாகிய பொத்தா என்பவள் மூலமாக அறிந்த வசபன் தப்பி ஒடி உரோகண நாட்டுக்குச் சென்றான். சென்று தனக்கு ஆக்கந் தேடிக்கொண்டு சேனையைத் திரட்டினான். பிறகு, அரசன்மேல் படையெடுத்து வந்து போர்செய்து வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். இவனுடைய உறவினனான சேனைத்தலைவன் போரில் இறந்துவிட்டான்.

வசபன்

வசபன் அரசாட்சியைக் கைப்பற்றிய பிறகு தான் தப்பிப்போக உதவியாயிருந்த பொத்தாவை அரசியாக்கினான் (Mahavamsa xxxv, 59-70). இவன் நீண்டகாலம் ஆட்சிசெய்தான். கி.பி. 124 முதல் 168 வரையில் நாற்பது ஆண்டு அரசாண்டான். இவன் தன் மகனான வங்க நாசிக திஸ்ஸன் என்பவனுக்குச் சுபராசனின் மகளான மஹாமத்தா என்பவளைத் திருமணஞ் செய்துவைத்தான் (*Mahavamsa* xxxv, 69-70). வசபன், செங்குட்டுவனின் தமயனான நார்முடிச்சேரலின் ஆட்சிக்காலத்திலும் செங்குட்டுவன் ஆட்சிக்காலத்திலும் இருந்தவன் என்று தெரிகிறான்.

வங்கநாசிக திஸ்ஸன்

வசபன் நெடுங்காலம் அரசாண்டபடியால், அவன் மகனான வங்கநாசிக திஸ்ஸன் வயதுசென்ற பிறகு ஆட்சிக்கு வந்தான். கி.பி. 168 முதல் 171 வரையில், மூன்று ஆண்டு இவன் ஆட்சி செலுத்தினான். இவன் மகன் கஜபாகு காமணி என்பவன். இவன் செங்குட்டுவன் காலத்தில் இருந்தவன்.

கஜபாகு காமணி

வங்கநாசிக திஸ்ஸன் இறந்த பிறகு அவன் மகனான கஜபாகு காமணி என்பவன் இலங்கையின் அரசனானான். இவன் கி.பி. 171 முதல் 193 வரையில், இருபத்திரண்டு ஆண்டு ஆட்சி செய்தான். *சிலப்பதிகாரம்* கூறுகிற 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' என்பவன் இவனே. செங்குட்டுவன் வஞ்சிமா நகரத்தில் கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்துக் குடமுழுக்குச் செய்தபோது அந்த விழாவுக்கு இவன் வந்திருந் தான். பத்தினி வழிபாட்டை இலங்கையில் உண்டாக்கியவனும் இவனே (*சிலம்பு* 30 : 160, உரைபெறு கட்டுரை 3). (பிற்காலத்து நூலாகிய *பூஜாவலி*, சோழ அரசன் ஒருவன் இலங்கைக்குச் சென்று போர்செய்து சிங்களவரைச் சிறைப்பிடித்துவந்து காவிரியாற்றுக்குக் கரை கட்டுவித்தான் என்றும், பிறகு கஜபாகு அரசன் சோழ நாட்டுக்குப் போய்ச் சிங்களவரைச் சிறை மீட்டுக்கொண்டு வந்தான் என்றும் கூறுகிறது. இச்செய்தியை *மகாவம்சம்* கூறவில்லை. பழைய தமிழ் இலக்கியங்களும் கூறவில்லை. எனவே, இச்செய்தி நம்பத்தக்கதன்று).

மகாவம்சம் கூறுகிற கஜபாகுவும், *சிலப்பதிகாரம்* கூறுகிற 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு'வும் ஒருவரே என்பதையும் இந்தக் கஜவாகு, சேரன் செங்குட்டுவனின் காலத்தில் இருந்தவன் என்பதையும் சரித்திரக்காரர் எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ள னர். ஆனால், ஒருவர் இருவர் கஜபாகுவும் செங்குட்டுவனும் சம காலத்தவர் அல்லர் என்று கூறி மறுக்கின்றார். இவர் மறுப்பை ஆராய்ந்து பார்ப்போம்.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தமிழ் மொழி - இலக்கிய வரலாறு* (S. Vaiyapuri Pillai, *History of Tamil Language and Literature*, 1956. p. 144) என்னும் நூலில் 144ஆம் பக்கத்தில் இவ்வாறு பொருள் படும்படி எழுதுகிறார்:

> *இலங்கையரசன் கஜபாகு என்பவன் செங்குட்டுவனுடைய அவைக்கு வந்திருந்தான் என்பதற்குச் சான்று இல்லாதது சரித்திர நோக்குக்கு முக்கியமானதாகும். உரைபெறு*

கட்டுரையில் *சிலப்பதிகாரமே* இதை மறுக்கிறது. *பதிற்றுப்பத்தின்* 5ஆம் பத்து இலங்கையைப் பற்றியாவது கஜபாகுவைப் பற்றியாவது ஒன்றுமே சொல்லவில்லை. உண்மையில் *பதிற்றுப்பத்து* முழுவதிலும் இலங்கையைப் பற்றியாவது அதன் அரசர்களைப் பற்றியாவது யாதொரு குறிப்பும் இல்லை. செங்குட்டுவனையும் அவன் தன் தலைநகரில் அமைத்த கண்ணகிக் கோவிலையும் கூறுகிற *மணிமேகலை* காவியமுங்கூட கஜபாகுவைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. கடைசியாக, சேர அரசன் கண்ணகிக்குக் கோவில் அமைத்து விழா செய்தபோது கஜபாகு அரசன் அங்குச் சென்றிருந்தான் என்பது பற்றியாவது, அவன் தன் நாடாகிய இலங்கையில் கண்ணகி வழிபாட்டை ஏற்படுத்தியதைப் பற்றியாவது *மகாவம்சம்* என்னும் நூல் ஒன்றுமே கூறவில்லை.

இவ்வாறு வையாபுரியார் காரணங்களைக் காட்டி மறுப்புக் கூறுகிறார். இவர் கூறும் காரணங்களையும் மறுப்புக்களையும் ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

1. சேர மன்னன் செங்குட்டுவன் தன் தலைநகரில் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தபோது இலங்கைக் கஜபாகு வேந்தன் அங்கு வந்திருந்தான் என்று *சிலப்பதிகாரம்* வரந்தருகாதையில் கூறியிருப்பதை, *சிலம்பு* உரைபெறு கட்டுரை மறுக்கிறது என்று வையாபுரியார் கூறுகிறார். பி.டி. சீநிவாச ஐயங்காரும், இவர் கூறுவதுபோலவே, கஜபாகு, கண்ணகிக் கோட்டத்துக்கு வந்திருந்தான் என்று *சிலப்பதிகாரம்* வரந்தரு காதை கூறுவதை *சிலம்பு* உரைபெறு கட்டுரை மறுக்கிறது என்று தாம் எழுதிய *தமிழர் சரித்திரம்* (P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, 1929, p. 380) என்னும் நூலில் எழுதுகிறார். இவர்கள் கூறுவதை ஆராய்ந்து பார்ப்போம். உரைபெறு கட்டுரையின் வாசகம் இது:

> *அது கேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென ஆடித்திங்கள் அகவையினாங்கோர் பாடிவிழாக் கோள் பன்முறை யெடுப்ப மழைவீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.*

இதில் 'அது கேட்டு' என்றிருப்பதை இவர்கள் சுட்டிக் காட்டி, கஜபாகு வேந்தன் யாரோ ஒருவர் கண்ணகி தெய்வத்தைப் பற்றிக் கூறக் கேட்டுப் பத்தினித் தெய்வத்துக்குக் கோயில் அமைத்தான் என்றும், ஆகவே, அவன் வஞ்சிமாநகரத்துக்

கண்ணகிக் கோவிலுக்கு வந்திருந்தான் என்று *சிலம்பு* வரந் தருகாதை கூறுவதை உரைபெறு கட்டுரை மறுக்கிறது என்றும் கூறுகிறார்கள். இவர்கள் கூறுவது உண்மைபோலக் காணப் பட்டாலும் நன்கு ஆராய்ந்து பார்த்தால், இது *சிலப்பதிகாரத்தை* மறுக்கவில்லை என்பதும் *சிலப்பதிகாரத்தை* ஆதரிக்கிறது என்பதும் விளங்கும். இவர்கள் *சிலப்பதிகாரத்தை* நன்கு படிக் காமல் அவசரப்பட்டுத் தவறான முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

'அது கேட்டு' என்று உரைபெறு கட்டுரை கூறுவதன் பொருள் என்னவென்றால், கண்ணகியார் இவர்களுக்கு அசரீரி யாகக் கூறிய வாக்கைக் கேட்டு என்பது. இதற்குச் சான்று *சிலப்பதிகாரத்திலேயே* இருக்கிறது.

குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
என்னாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்
ஆங்கது கேட்ட அரசனும் அரசரும்
ஓங்கிருந் தானையு முறையோ டேத்த

என்று *சிலம்பு* வரந்தரு காதை (159-166) கூறுகிறது.

இந்த அகச் சான்றை அறியாமல், சீநிவாச ஐயங்காரும் வையாபுரிப்பிள்ளையும் உரைபெறு கட்டுரை 'மறுக்கிறது' என்று எழுதியது உண்மைக்கு மாறான தவறு ஆகும். எனவே, உரைபெறு கட்டுரை 'மறுக்க'வில்லை; ஆதரிக்கிறது என்பது தெரிகிறது. ஆகையால், உரைபெறு கட்டுரையும் வரந்தரு காதை யும் கஜபாகு வேந்தன், செங்குட்டுவன் வஞ்சி மாநகரத்தில் அமைத்த பத்தினிக்கோட்டத்துக்கு வந்திருந்தான் என்பதை வலியுறுத்துகின்றன. ஆகவே இவர்கள் கூறுவது வெறும் போலியுரை எனத் தள்ளுக.

2. "*பதிற்றுப்பத்தின்* 5ஆம் பத்து இலங்கையைப் பற்றியாவது கஜபாகுவைப்பற்றியாவது ஒன்றுமே பேசவில்லை. உண்மையில் *பதிற்றுப்பத்து* முழுவதிலும் இலங்கையைப் பற்றியாவது அதன் அரசர்களைப் பற்றியாவது யாதொரு குறிப்பும் இல்லை" என்று வையாபுரியார் சுட்டிக்காட்டுகிறார்.

ஆம். இவர் சுட்டிக்காட்டுவது உண்மையே. செங்குட்டு வனின் புகழையும் சிறப்பையும் பேசுகிற *பதிற்றுப்பத்து* ஐந்தாம் பத்து இலங்கை மன்னன் கஜபாகுவைக் குறிப்பிடவில்லைதான். அது மட்டுமா? செங்குட்டுவன் கங்கைக் கரையில் கனகவிசய ருடன் போர்செய்து அவர்களைச் சிறைப்பிடித்ததையும் கண்ணகி சிலையமைக்க இமயமலையிலிருந்து கல் எடுத்து

வந்ததையும் பத்தினிக் கோட்டம் அமைத்ததையும் கூறவே இல்லை (பதிகம் மட்டும், செங்குட்டுவன் கல் எடுத்துக் கங்கை யில் நீராட்டியதைக் கூறுகிறது). இவ்வளவு முக்கியச் செய்தி களை 5ஆம் பத்து ஏன் கூறவில்லை? இதை வையாபுரியார் அறியாமற் போனதுதான் வியப்பாக இருக்கிறது! இதன் காரணத்தை விளக்குவோம்.

செங்குட்டுவன்மீது 5ஆம் பத்துப் பாடியவர் பரணர் என்னும் புலவர். அவர் செங்குட்டுவன்மேல் 5ஆம் பத்துப் பாடியபோது அதிக வயது சென்றவராக இருந்தார். கண்ணகிக் குக் கோட்டம் அமைத்தது முதலிய நிகழ்ச்சிகள் செங்குட்டுவ னின் பிற்கால வாழ்க்கையில் நிகழ்ந்தவை. ஆகவே, தாம் 5ஆம் பத்துப் பாடிய காலத்தில் செங்குட்டுவன் செய்திருந்த புகழ்ச் செய்திகளை மட்டும் அவர் பாடினார். ஆகவே, பிற்காலத்தில் நிகழ்ந்த கண்ணகிக் கோட்டம் அமைத்தது, கஜபாகு விழாவுக்கு வந்திருந்தது முதலிய செய்திகள் ஐந்தாம் பத்தில் இடம் பெறவில்லை.

எனவே, தாம் 5ஆம் பத்துப் பாடிய காலத்தில் நிகழாத செய்திகளை (கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து அந்த விழாவுக்குக் கஜபாகு வந்தது முதலான பிற்காலத்தில் நிகழ்ந்தவற்றை) பரணர் எவ்வாறு பாடக்கூடும்? ஆகவேதான், 5ஆம் பத்தில் இச்செய்திகள் இடம் பெறவில்லை. இதனை அறியாமல் வையாபுரியார் கூறுவது போலி மறுப்பு என விடுக.

5ஆம் பத்துப் பதிகத்தில், செங்குட்டுவன் கங்கைக் கரைக்குச் சென்றதும் பத்தினிக் கடவுளுக்குக் கல் கொண்டு வந்ததும் கூறப்படுகின்றன. பதிகச் செய்யுளைப் பரணர் பாடவில்லை. *பதிற்றுப்பத்துப்* பதிகச் செய்யுட்களைப் *பதிற்றுப்பத்தைப்* பாடிய புலவர்கள் பாடவில்லை. அந்தந்த அரசர்கள் இறந்த பிறகு பதிகச்செய்யுட்கள் அரண்மனைப் புலவர்களால் பாடிச் சேர்க்கப்பட்டவை. ஆகவேதான், 5ஆம் பத்தின் பதிகத்தில் மட்டும் கண்ணகிக்குக் கல்கொண்டு வந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

3. "செங்குட்டுவனையும் அவன் தன்னுடைய தலைநகரில் அமைத்த கண்ணகிக் கோவிலையும் கூறுகிற *மணிமேகலைக்* காவியம் கஜபாகுவைப் பற்றி ஒன்றும் கூறவில்லை" என்று வையாபுரியார் கூறுகிறார்.

செங்குட்டுவன் கண்ணகிக்கு அமைத்த பத்தினிக் கோட்ட வரலாற்றினை *மணிமேகலை* காவியம் கூறவில்லை. கூற வேண்டிய அவசியமும் அக்காவியப் போக்குக்கு ஏற்படவில்லை. *மணிமேகலை* 26ஆம் காதையில் 77 முதல் 90ஆம் அடி வரையில் செங்குட்டுவனின் வீரத்தை *மணிமேகலை* சிறப்பித்துக்

கூறுகிறது. அங்கேயும் கண்ணகிக்கோட்டம் அமைத்த விவரத்தைக் கூறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் அமைத்ததை *மணிமேகலைக் காவியம்* கூறியிருப்பது போலவும் அதில் கஜபாகுவைப் பற்றிக் கூறாமல் விட்டிருப்பதுபோலவும் வாசகர்கள் நினைக்கும்படி வையாபுரியார் இச்செய்தியைப் புனைந்துரைக்கிறார். இது போலி மறுப்பு. செங்குட்டுவன் பத்தினிக்கோட்டம் அமைத்த வரலாற்றை விளக்கமாகக் கூறவேண்டிய சந்தர்ப்பமே *மணிமேகலைக்கு* ஏற்படாதிருக்கும்போது, அக்காவியம் ஏன் கஜபாகுவைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்று கேட்பது விதண்டாவாதமாக இருக்கிறது. எனவே, இதுவும் போலி மறுப்பு என விடுக.

4. சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரத்தில் கண்ணகிக்குக் கோவில் அமைத்துத் திருவிழாச் செய்தபோது கஜபாகு அரசன் அங்கு வந்திருந்தான் என்றாவது, அவன் தன் சொந்த நாடாகிய இலங்கையில் கண்ணகி வழிபாட்டை ஏற்படுத்தினான் என்றாவது இலங்கை நூலாகிய *மகாவம்சம்* ஒன்றுமே கூறவில்லை என்று கூறுகிறார்.

மகாவம்சம் இதுபற்றி ஒன்றும் கூறாதது உண்மைதான். மேல் போக்காக *மகாவம்சத்தைப்* படித்தவர்கள் இது முக்கியமான மறுப்பு என்றும் கருதுவார்கள். ஆனால், *மகாவம்சத்தை* ஆராய்ந்து படித்தவர் இந்தக் காரணத்தை உண்மை என்று கொள்ளமாட்டார்கள். *மகாவம்சம்* ஏன் எழுதப்பட்டது, யாரால் எழுதப்பட்டது, எந்த நோக்கத்தோடு எழுதப்பட்டது என்பதை அறிந்தவர்கள், கஜபாகு பத்தினிக் கடவுள் வழிபாட்டைப் பற்றி *மகாவம்சம்* சொல்லாத காரணத்தை அறிவார்கள். *மகாவம்சம்*, பௌத்த மத பிக்ஷுவினால் எழுதப்பட்ட நூல். இலங்கையில் பௌத்த மதம் எப்படி வந்தது, அது எப்படி வளர்ந்தது, எந்தெந்த அரசர்கள் எந்தெந்தவிதமாக அந்த மதத்தை வளர்த்தார்கள், என்பதைக் கூறுவதே *மகாவம்சம்* எழுதப்பட்டதன் முக்கிய நோக்கமாகும்.

எந்தெந்த அரசர்கள் எந்தெந்தப் பிரிவேணைகளை (பௌத்தப் பல்கலைக்கழகங்களை) அமைத்தார்கள், எந்தெந்த தாகோபாக்களை (தாதுகர்ப்பங்களைக்) கட்டினார்கள், எந்தெந்த பௌத்த விகாரைகளை ஏற்படுத்தினார்கள், பௌத்தப் பிக்குகளை எந்தெந்த விதத்தில் ஆதரித்தார்கள், எந்தெந்த மானியங்களைப் பௌத்த விகாரைகளுக்குத் தானஞ் செய்தார்கள் என்பதை விளக்கமாகக் கூறுவதே *மகாவம்சத்தின்* முக்கியமான நோக்கமாகும். இச்செய்திகளைத்தான் இந்நூலில் சிறப்பாகக் காண்கிறோம். பௌத்த மதத்துக்குப் புறம்பான வேறு சமயத் தெய்வங்களைப் பற்றி இந்நூல் கூறவில்லை, ஆதரிக்கவும்

இல்லை. இத்தகைய நோக்கமுள்ளதும் பௌத்த மதச் சிறப்பை மட்டுங் கூறுகிறதுமான *மகாவம்சத்தில்* அம்மதத்துக்குப் புறம்பான சமயச் செய்திகளை எதிர்பார்க்க முடியுமா? எனவே, கஜபாகு பௌத்த மதத்துக்குச் செய்தவைகளைப் பற்றி மட்டும் கூறிய *மகாவம்சம்*, அவன் பத்தினிக்கடவுள் வழிபாட்டை இலங்கையில் ஏற்படுத்தியதைக் கூறாமல் விட்டதில் அதிசயம் இல்லை. இந்த உண்மையை யறியாத வையாபுரியார், *மகாவம்சம்* இலங்கைச் சரித்திரத்தைக் கூறுகிற பொது சரித்திர நூல் என்று கருதிக்கொண்டு இவ்வாறு குறை காண்கிறார். பிற்காலத்து இலங்கை நூலாகிய *இராஜாவளி*, கஜபாகு பத்தினிக்கோட்டம் அமைத்ததைக் கூறுகிறது.

பௌத்த மதத்தை முதன்மையாகக் கொண்ட சிங்கள அரசர்களும் சிங்களப் பொதுமக்களும் இந்து மதத் தெய்வங்களையும் வணங்கி வழிபட்டார்கள். அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையில் இலங்கை அரசர்களும் இலங்கைப் பொதுமக்களும் ஸ்கந்தன் (முருகன்), விஷ்ணு (திருமால்), பத்தினித் தெய்யோ (பத்தினித் தெய்வம், கண்ணகி) முதலிய தெய்வ வழிபாடுகளைச் செய்துகொண்டு வந்தார்கள், செய்து வருகிறார்கள் (ஆனால், பௌத்த மதச் சந்நியாசிகளாகிய பிக்ஷுக்கள் இத்தெய்வங்களை வணங்குவதில்லை). இப்போது இலங்கையின் பிரதம அமைச்சராக இருக்கும் ஸ்ரீமதி பண்டாரநாயிகா அம்மையார், பௌத்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தும், தாம் அமைச்சர் பதவியை ஏற்பதற்கு முன்பு கதிர்காமத்துக்குப் போய்க் கதிர்காமத் தெய்வத்தை வழிபட்ட செய்தி யாவரும் அறிந்ததே. இப்பொழுது மட்டும் அல்ல, ஆதிகாலம் முதல் சிங்கள அரசரும் சிங்கள மக்களும் கந்தன், திருமால், பத்தினிக் கடவுள் முதலிய தெய்வ வழிபாடு செய்துவந்ததைச் சான்று காட்டி நிறுவ முடியும். இடம் பெருகும் என்று அஞ்சி இதனோடு நிறுத்துகிறோம்.

இந்தச் சரித்திர உண்மையை அறியாத சிலர், கஜபாகு அரசன் வஞ்சிமா நகரத்துக்குப் போனதையும் அங்கிருந்து பத்தினித் தெய்வ வணக்கத்தை இலங்கையில் ஏற்படுத்தியதையும் *மகாவம்சம்* கூறாதபடியால், *சிலப்பதிகாரம்* கூறுகிற செய்தியை (கஜபாகு, வஞ்சி நகரத்துக்கு வந்ததும் பத்தினித் தெய்வ வழி பாட்டை இலங்கையில் ஏற்படுத்தியதும்) சரித்திர உண்மை என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறுவது சரியான காரணம் ஆகாது. இந்து மதச் செய்திகளைப் பௌத்த மதத்தார் மறைத்து விடுவதும் பௌத்த மதச் செய்திகளை இந்து மதத்தார் மறைத்துவிடுவதும், ஜைன மதச் செய்திகளைப் பௌத்தர் மறைத்துவிடுவதும் பௌத்த மதச் செய்திகளை ஜைனர்

மறைத்துவிடுவதும் நமது நாட்டில் நடந்த உண்மைதானே. இந்தச் சரித்திர உண்மைகளையறியாமல் கஜபாகுவின் பத்தினித் தெய்வ வழிபாட்டை *மகாவம்சம்* கூறவில்லை என்று கூறுவது போலிக் காரணம் என விடுக.

தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் காலங்களை அறிவதற்கு அடிப்படையாகவும் முக்கியமாகவும் இருப்பது கஜபாகு-செங்குட்டுவன் சமகாலச் சான்று. தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் உண்மையான உயர்வையும் பழமையையும் விரும்பாதவர் களுக்கு இந்தக் கஜபாகு - செங்குட்டுவன் சான்று இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டுச் சரித்திரக் காலத்தைப் பின் தள்ளிப்போட விரும்புகிறவர்கள் கஜபாகு சான்றைச் சீர்குலைத்து விடப் பலவாறு முயற்சி செய்துள்ளார்கள். அதற்காக என்னென் னவோ போலிக் காரணங்களைக் கூறி இந்தச் சான்றைப் புறக்கணிக்கப் பார்த்தும், இந்தச் சான்றை அவர்களால் ஒதுக்க முடியவில்லை. அவர்களில் ஒருவரான பி.டி. சீநிவாச ஐயங்கார், *சிலப்பதிகாரத்தில்* கஜபாகு என்னும் பெயரே கூறப்படவில்லை என்றுங்கூட எழுதிவிட்டார். ஐயங்கார், தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தமிழர் சரித்திரம்* என்னும் நூலில் இதைச் சுட்டிக் காட்டுகிறார் (P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, 1927, p. 381).

சிலப்பதிகாரம் வரந்தரு காதை 160ஆம் அடியில் உள்ள 'கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்' என்னும் வாசகத்துக்கு ஒரு பாடபேதத்தை அதன் பதிப்பாசிரியர் காட்டியுள்ளார். அது 'இலங்கைக் காவல் வேந்தன்' என்பது. *சிலப்பதிகாரப்* பதிப்பா சிரியர் ஆங்காங்குப் பாடபேதங்களைக் குறித்திருப்பதுபோல இதிலும் இந்தப் பாடபேதத்தைக் குறித்திருக்கிறார். இதை ஐயங்கார் சுட்டிக்காட்டி, கஜபாகு என்னும் பெயரைக் கூறவில்லை என்று ஐயப்படுகிறார். ஆனால், பதிப்பாசிரியரே இதன் சரியான வாசகம் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு', என்பது தான் என்று ஒப்புக்கொண்டு அப்படியே பதிப்பித்திருக்கிறார். 'காவல் வேந்தன்', என்றிருப்பது ஏடெழுதுவோரின் கைப்பிழை என்பது தெளிவாகத் தெரிகிறது. கயவாகு வேந்தன் என்பதுதான் சரியான பாடம் என்பதற்குச் *சிலப்பதிகாரத்திலேயே* அசைக்க முடியாத சான்று இருப்பதை ஐயங்கார் அறியவில்லை. *சிலப்பதி காரம்* உரைபெறு கட்டுரை, அதுகேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு வென்பான், என்று ஐயத்துக்கு இடமில்லாமல் கூறுகிறது. இந்த வாசகத்துக்குப் பாடபேதம் இல்லை. எனவே, *சிலம்பு* வரந்தருகாதை 160ஆம் அடியில் வருகிற 'கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்' என்னும் வாசகம் சரியான வாசகம் என்பதும் அதில் சிறிதும் ஐயமில்லை என்பதும் உறுதியாகின்றது. எனவே, ஐயங்கார் கூறும் ஐயம் ஆதாரமற்ற

வெற்றுரை என விடுக. *தமிழர் சரித்திரம்* எழுதின ஐயங்கார் அப்புத்தகத்தில் பல தவறான செய்திகளையும் போலி ஆதாரங்களையும் கூறியிருப்பது போலவே இந்தப் போலி ஐயத்தையும் கூறி வைத்திருக்கிறார். இவரே, *சிலம்பு* உரைபெறு கட்டுரையில் வரும் 'அதுகேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு வென்பான்' என்னும் அடியில் வருகிற 'கேட்டு' என்பதற்கு உண்மைப்பொருள் அறியாமல் எழுதிய தவற்றை முன்னமே காட்டியுள்ளோம்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய சான்றுகளினாலே, இலங்கைக் கஜபாகுவும் சேரன் செங்குட்டுவனும் சமகாலத்தவர் என்பதும், கஜபாகு வேந்தன், செங்குட்டுவன் அமைத்த கண்ணகிக் கோட்டத்துக்கு வந்திருந்தான் என்பதும் அவன் தன் நாட்டில் பத்தினித்தெய்வ வழிபாட்டை ஏற்படுத்தினான் என்பதும் இவை சரித்திர நிகழ்ச்சிகள் என்பதும் அறிகிறோம்.

தக்கண தேசத்து அரசர்கள்

சேரன் செங்குட்டுவன் காலத்தில் இருந்த தக்கண தேசத்து அரசர்களைப் பற்றிக் கூறுவோம். வடஇந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் இடை நடுவிலே தக்கண தேசம் இருந்தது. தக்கண தேசத்தை அக்காலத்தில் அரசாண்டவர் சதகர்ணி அரசர். சதகர்ணி அரசர்களுக்குச் சாதகர்ணி என்றும் சாதவாக னர் என்றும் பெயர்கள் உண்டு. சதகர்ணி அரசர்களைத் தமிழர் நூற்றுவர் கன்னர் என்று கூறினார்கள். நூற்றுவர் கன்னர் என்று *சிலப்பதிகாரம்* கூறுவது சதகர்ணி அரசர்களையே.

சதகர்ணி அரசர்களின் தக்கண இராச்சியம் கிழக்கே வங்காளக் குடாக்கடல் முதல் மேற்கே அரபிக்கடல் வரையிலும், வடக்கே விந்திய மலை முதல் தெற்கே கிருஷ்ணா நதி வரையிலும் பரவியிருந்தது. சில சமயங்களில் சதகர்ணி அரசர்கள் கங்கைக் கரை வரையிலும் அரசாண்டார்கள். அப்பெரிய தக்கண இராச்சியத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு தலைநகரங்கள் இருந்தன. கிழக்கே கிருஷ்ணா நதிக் கரையில் தான்ய கடகம் என்னும் தலைநகரம் இருந்தது. அது இப்போ துள்ள விஜயவாடாவுக்கு அருகில் இருந்தது. மேற்கே கோதாவிரி நதிக்கரையில் பிரஷ்டானம் என்னும் பெயருள்ள தலைநகரம் இருந்தது. அது இப்போது, பைதான் நகரம் என்று கூறப்படு கிறது. தக்கண இராச்சியத்தின் கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் துறைமுகப்பட்டினங்கள் இருந்தன.

தமிழகத்துக்கு வடக்கே வடுக நாடும் (கன்னட நாடும் தெலுங்கு நாடும்; இவை தக்கண இராச்சியத்தில் அடங்கியிருந் தன), அதற்கு வடக்கே ஆரிய நாடும் (வடஇந்தியா) இருந்தன.

தக்கணத்துச் சதகர்ணி அரசர்களுடன் தமிழ்நாட்டு அரசர்கள் நட்பு முறையில் இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. முக்கியமாகச் சேர அரசர்கள் சதகர்ணி (நூற்றுவர் கன்னர்) அரசர்களுடன் நெருங்கிய நட்புடையவர்களாக இருந்தார்கள். சதகர்ணி அரசர்களுக்கும் தமிழ் அரசர்களின் நட்பு வேண்டியதாக இருந்தது. ஏனென்றால், சதகர்ணி அரசர்களுக்குச் சாகர் என்னும் அரசர்கள் பகைவராகத் தோன்றி அடிக்கடி தக்கணத்தின் மேல் படையெடுத்து வந்து போராடிக் கொண்டிருந்தார்கள்.

சாகர் என்பவர் இந்தியா தேசத்துக்கு வெளியிலிருந்து வந்தவர். அவர்கள் இந்தியாவில் புகுந்து வடமேற்கில் தங்கி ஆட்சி செய்தார்கள். வடமதுரையும் தக்ஷசீலமும் அவர்களின் தலைநகரங்களாக இருந்தன. அந்தச் சாகர்களில் ஒரு பிரிவினர் தெற்கே வந்து கத்தியவார், விந்தியமலைப் பிரதேசங்களைக் கைப் பற்றி அரசாண்டார்கள். இவர்கள் சிறுசிறு இராச்சியங்களை அமைத்துக்கொண்டு அரசாண்டனர். இருபதுக்கு மேற்பட்ட சிறுசிறு சாக மன்னர்கள் இருந்தார்கள். இவர்கள் சத்ராப் என்று பெயர் பெற்றிருந்தனர். சத்ராப் என்றால் பிரதிநிதி என்பது பொருள். இவர்கள் எந்தச் சக்கரவர்த்திக்குப் பிரதிநிதிகள் என்பது தெரியவில்லை. ஆனால், சத்ராப் என்னும் பெயருடன் அரசாண்டார்கள் என்று இந்திய வரலாறு கூறுகிறது.

விந்தியமலைப் பிரதேசங்களில் தங்கி அரசாண்ட சாக சத்ராப்களுக்கு யவனர் என்ற பெயரும் உண்டு. ஆனால், இவர்கள் கிரேக்கரும் ரோமரும் ஆகிய யவனர் அல்லர். எக்காரணத்தினாலோ சாக சத்ராப்புகளுக்கு யவனர் என்னும் பெயரும் வழங்கிவந்தது. இந்தச் சத்ராப்களுக்கு மேற்குச் சத்ராப்புகள் என்று இந்தியச் சரித்திரத்தில் பெயர் கூறப்படுகிறது.

தக்ஷண இராச்சியத்துக்கு வடக்கே விந்தியமலைப் பிரதேசத்தை யரசாண்ட சாகசத்ராப்புகள், சதகர்ணி யரசர்களின் இராச்சியத்தின் மேற்குப் பக்கங்களில் படையெடுத்துவந்து போர்செய்து நாடுகளைப் பிடித்துக்கொண்டார்கள். ஆகவே, அவர்களுடன் சதகர்ணி அரசர்கள் அடிக்கடி போர் செய்ய வேண்டியதாயிற்று. சதகர்ணி அரசர்களின் மேற்குக் கரைத் துறைமுகப்பட்டினங்களுடன் அக்காலத்தில் கிரேக்கர், ரோமர், அராபியர் முதலிய மேற்கு நாட்டினர் கப்பல்களில் வந்து வாணிகம் செய்துகொண்டிருந்தார்கள். ஆகவே, அந்தப் பட்டி னங்கள் பொருள்வளம் செழித்தவைகளாக இருந்தன. அதனால், அந்தக் கடற்கரைப்பட்டினங்களைச் சாகசத்ராப்பர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். மாளவ நாட்டையும் பிடித்துக் கொண்டார்கள். அப்பட்டினங்களை மீட்டுக்கொள்ளச்

சதகர்ணியரசர்கள் போரிட்டார்கள். இவ்வாறு சாகசத்ராப்-சதகர்ணி போர்கள் அடிக்கடி நிகழ்ந்துகொண்டிருந்தன. மேற்கு சத்ராப் அரசர்களின் முழு வரலாறும் சதகர்ணி யரசர்களின் முழு வரலாறும் தொடர்ச்சியாகக் கிடைக்கவில்லை.

நமது ஆராய்ச்சிக்குரிய கி.பி. 2ஆம் நூற்றாண்டில் நாகபாணன் என்னும் சத்ராப் அரசன் இருந்தான். அவன் ஏறத்தாழ கி.பி. 119 முதல் 125 வரையில் அரசாண்டான். அவன் சதகர்ணியரசரின் மகாராஷ்டிர நாட்டை வென்றான். அக்காலத்தில் இருந்த சதகர்ணியரசன் கௌதமிபுத்திர சதகர்ணி என்பவன். அவனுக்கு விலிவாயகுர II என்னும் பெயரும் உண்டு. அவன் ஏறத்தாழ கி.பி. 113 முதல் 131 வரையில் அரசாண்டான். கி.பி. 125இல், கௌதமிபுத்திர சதகர்ணி நாகபாணனுடன் போர் செய்து அவன் கைப்பற்றியிருந்த நாடுகளை மீட்டுக் கொண்டான். அப்போரில் நாகபாணன் இறந்துபோனான். கௌதமிபுத்திர சதகர்ணி தன் நாடுகளை மீட்டுக்கொண்டது அல்லாமல் குஜராத்து, இராஜபுதனம் முதலிய நாடுகளையும் கைப்பற்றினான். இவனுடைய தாயார் பெயர் கௌதமீ பலஸ்ரீ என்பது. அவர் எழுதியுள்ள சாசனத்தில், இவன் சாகர், யவனர் முதலியவர்களையும் வென்றான் என்றும் அபராந்தம் (வடகொங்கணம்), சௌராஷ்டிரம் (கத்தியவார்), ஆகர அவந்தி (கிழக்கு மேற்கு மாளவம்) முதலிய நாடுகளை அரசாண்டான் என்றும் கூறப்படுகிறான் (இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை வென்று, அவரைப் பின்கட்டாகக் கட்டிக் கொண்டு வந்தான் என்று கூறப்படுகிறது போலவே கௌதமிபுத்திர சதகர்ணியும் யவனரை வென்றான் என்று கூறப்படுவது இங்குக் கருதத்தக்கது).

நாகபாணனுக்குப் பிறகு கஷ்டனன் என்னும் சாகசத்ராப் அரசன் அரசனானான். டாலமி என்னும் யவன ஆசிரியர் தாம் கி. பி. 140இல் எழுதிய பூகோள நூலில் கஷ்டனனை தியஸ் தெனஸ் (Tiastenes) என்றும் அவனுடைய தலைநகரம் ஊஸெனி என்றும் கூறுகிறார். ஊஸெனி என்று இவர் கூறுவது உஜ்ஜைனி நகரத்தை. உஜ்ஜைனியைத் தமிழர் உஞ்சை என்பர். கஷ்டனன் தன் காலத்தில் இருந்த சதகர்ணி யரசனுடன் போர் செய்து அவனிடமிருந்து நருமதை யாற்றுக்கு வடக்கே இருந்த நாடுகளை மீட்டுக்கொண்டான்.

கஷ்டனனுடைய பேரன் சரித்திரப் புகழ்பெற்ற ருத்திரதாமன் என்பவன். இவன் மகாஷத்ரபன் என்னும் சிறப்புப் பெயர் உடையவன். இவன் காலத்திலிருந்த சதகர்ணியரசன் புலிமாயி என்பவன். புலிமாயியைப் புலுமாயி என்றுங் கூறுவர். இவனுடைய முழுப்பெயர் வாசிஷ்ட புத்திர புலிமாயி என்பது.

இவன் கி.பி. 138இல் அரசனானான் என்பர். இவன் ருத்திரத்தாம னுடைய மகளை மணஞ்செய்திருந்தான். இவ்வளவு நெருங்கிய உறவு இருந்தும் புலிமாயியும் ருத்திரதாமனும் இரண்டு முறை போர் செய்தார்கள். இரண்டு போரிலும் புலிமாயி தோல்வி யடைந்தான். தோல்வியடைந்து தன் இராச்சியத்தின் மேற்குப் பகுதி நாடுகளை இழந்து விட்டான்.

ருத்திரதாமனுக்குப் பிறகு அவன் மகனான தாமஜத ஸ்ரீ என்பவன் அரசனானான். இவனும் மகாக்ஷத்ரபன் என்னும் சிறப்புப்பெயர் பெற்றிருந்தான். இவனுக்குப் பிறகு இவன் தம்பிக்கும் இவன் மகனுக்கும் ஆட்சி உரிமை பற்றி உள்நாட்டுப் போர் நடந்தது. அப்போரின் காரணமாக அவர்கள் பலம் குறைந்தது. அப்போது சதகர்ணியரசன் அவர்கள்மேல் படை யெடுத்துச் சென்று அவர்களின் நாடுகள் சிலவற்றைப் பிடித்துக்கொண்டான்.

இவ்வாறு கி.பி. 2ஆம் நூற்றாண்டில் சாகசத்ரப-சதகர்ணி போர்கள் நடந்துகொண்டிருந்தன. இந்தப் போர்கள் சிலவற்றில் சேர அரசர்கள் சதகர்ணி யரசர்களுடன் சேர்ந்து சாக அரசர்களுடன் போர் செய்தார்கள். சேரன் செங்குட்டுவனுடைய தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், யவனர்களுடன் போர்செய்து, 'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து, நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ' கொண்டுவந்தான் என்று 2ஆம் பத்துப் பதிகம் கூறுவது இந்தச் சாகயவனர்களைத்தான். சில சரித்திரக்காரர் நெடுஞ்சேரலாதன் வென்ற யவனர் சேர நாட்டுக் கரையில் குடியேறியிருந்த யவன வணிகரை என்று கூறுவது தவறு. ஏனென்றால், 'கடவுட் பெயரிய கான'த்தில் இவன் போர் செய்து யவனரை வென்றான் என்று ஒன்பதாம் பத்து (8 : 2) கூறுகிறது. கடவுட் பெயரிய கானம் என்பது விந்தாட வியை என்று பழைய உரையாசிரியர் கூறுகிறார். விந்தாடவி என் பது விந்தியமலைக் காடுகள். அதற்குத் தண்டகாரணியம் என் றும் பெயர் வழங்கிவந்தது. அந்தப் பகுதியை அந்தக் காலத்தில் சாகசத்ராப்பர்கள் ஆட்சி செய்திருந்தார்கள். அவர்களைத்தான் நெடுஞ்சேரலாதன் வென்றிருக்கக்கூடும்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மக்களில் ஒருவனும் நார்முடிச்சேரலுக்கும் சேரன் செங்குட்டுவனுக்கும் தம்பியும் ஆகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தண்டாரணியத்தில் (விந்தியமலைப் பிரதேசத்தில்) போய் ஆடுமாடுகளைக் கவர்ந்துகொண்டு வந்தான். "தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையத் தொண்டியுட்டந்து கொடுப்பித்து" என்று 6ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது. அதன் பழைய உரை, "தண்டாரணிய மென்றது ஆரிய நாட்டிலே உள்ளதோர் நாடு" என்று கூறுகிறது.

தண்டாரணியம் என்பதும் தண்டகாரணியம் என்பதும் ஒன்றே. அதாவது விந்தியமலைப்பிரதேசம். தண்டகாரணியமாகிய விந்தியமலைப் பிரதேசத்தை யரசாண்ட சாகசத்ராப் அரசர்களின் ஆனிரைகளை ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் கவர்ந்து கொண்டு வந்தான்போலும். இவன் சதகர்ணியரசர்களுக்கு உதவியாகச் சாகசத்ராப்புகளுடன் போர் செய்த காலத்தில் இது நிகழ்ந்திருக்கக்கூடும். பகையரசர்களுடைய காடுகளில் புகுந்து பகையரசரின் ஆனிரைகளைக் கவர்ந்துகொள்வது அக்காலத்து வழக்கம். அந்த வழக்கப்படி இச்சேரன் தண்டகாரணியத்தி லிருந்து ஆனிரைகளைக் கவர்ந்துகொண்டு வந்தான்போலும். *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலை எழுதிய திரு. மு. இராகவையங்கார் அவர்கள் இதுபற்றி இவ்வாறு எழுதியுள்ளார்: "இவனது (ஆடுகோட்பாட்டுச் சேரலாதனது) வீரச் செயல் களிலே தண்டாரணியத்துள்ளவரால் கவரப்பட்ட ஆட்டு நிரைகளை மீட்டுத் தொண்டியிற் கொணர்ந்து சேர்ப்பித்ததே சிறப்புடையது" என்று எழுதியுள்ளார். இது ஏற்கத்தக்கது அன்று. இவர் கூறுவதுபோலே, தண்டாரணியத்து அரசர் சேர நாட்டுக்கு வந்து ஆடுமாடுகளைக் கொண்டுபோக, அவற்றை இவன் சென்று மீட்டுக்கொண்டு வரவில்லை. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தண்டகாரணிய அரசர்களின் ஆடுமாடுகளைத்தான் கொண்டு வந்தான் என்று 6ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது.

எனவே, தக்காணத்துச் சதகர்ணி யரசர்களுக்கும் சேர மன்னர்களுக்கும் நெருங்கிய நட்புறவு இருந்ததென்பதும் சதகர்ணியரசர் சார்பாகச் சேர அரசரும் சாகசத்ராப் அரசராகிய யவன அரசருடன் போர் செய்திருக்கின்றனர் என்பதும் அறிகிறோம். மேலும், சேரன் செங்குட்டுவனும் சதகர்ணி (நூற்றுவர்கன்னர்) அரசரும் நட்பாக இருந்தனர் என்றும், அவன் இமயமலைக்குச் சென்றபோது சதகர்ணியரசர் கங்கையாற்றில் படகுப்பாலம் அமைத்துக் கொடுத்தனர் என்பதும் *சிலப்பதிகாரத்தினால்* அறியப்படுகின்றன. கரிகாற்சோழன் வடநாட்டுக்கு யாத்திரை சென்றபோது, அவனுக்குத் தோரணவாயிலைக் கொடுத்த அரசன் அவனுக்கு நண்பனான சதகர்ணி அரசனாக இருக்கவேண்டும்.

அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்

என்று *சிலம்பு* இந்திரவிழவூரெடுத்த காதை (103-104) கூறுகிறது. இதற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், 'அவந்தி-உஞ்சை' என்று உரை எழுதுகிறார். உஞ்சை என்பது உச்சயினி நகரத்தின் தமிழ்ப் பெயர். பெரிபிளஸ் என்னும் யவன ஆசிரியர் தாம் கி.பி. 140இல் எழுதிய நூலில், தியஸ்தெனஸ் என்னும் சத்ராப்

அரசனின் தலைநகரம் ஊஸெனி என்று எழுதியிருப்பதை முன்னமே கூறினோம். தியஸ்தெனஸ் என்பது கஷ்டனன் என்னும் சாக அரசன் பெயர் என்பதும் ஊஸெனி என்பது உச்சயினி (உஞ்சை) நகரம் என்பதும் முன்னமே விளக்கப் பட்டன. கரிகாற் சோழனுக்குத் தோரண வாயிலைக் கொடுத் தவன் சதகர்ணி என்னும் அரசன் என்பது தெரிகின்றது. ஏனென் றால், 'அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த' என்பதற்கு அரும் பதவுரையாசிரியர் 'உவந்தனன் கொடுத்த-மித்திரனாய்க் கொடுத்த' என்று உரை எழுதுகிறார். எனவே, கரிகாற் சோழனுடன் நடப்புக் கொண்டிருந்த சதகர்ணி அப்போது அவந்தி நாட்டை யரசாண்டிருக்க வேண்டும்.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தக்கண தேசத்துக்கு வடக்கே இருந்த ஆரிய நாட்டில் சிற்றரசர்கள் சிறுசிறு இராச்சியங்களை ஆண்டுவந்தார்கள். பேரரசர்கள் இருக்கவில்லை. இந்திய வரலாற்றில் அக்காலம் இருண்ட காலம் என்று சரித்திரம் கூறுகிறது.

7. இமயவரம்பன் – வானவரம்பன்

இவை சேர மன்னர்களின் சிறப்புப் பெயர்கள். சேர நாட்டு அரசர்கள் இமயவரம்பன், வானவரம்பன் என்னுஞ் சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்ததைச் சங்க நூல்களிலிருந்து அறி கிறோம். மாமூலனார் என்னும் புலவர் ஒரு வானவரம்பனைக் குறிப்பிடுகிறார் (*அகம்* 359 : 6). வெள்ளிவீதியார் என்னும் புலவர் ஒரு வானவரம்பனைக் கூறுகிறார் (*அகம்* 45 : 17). நக்கீரர் என்னும் புலவர் ஒரு வானவரம்பனைக் கூறுகிறார் (*அகம்* 389 : 16). வானவன், வானவர் என்பது சேர அரச குலத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் உரிய பொதுப்பெயர். வானவன் வேறு வானவரம்பன் என்பது வேறு.

இமயவரம்பன், வானவரம்பன் என்னும் பெயர்கள் சேர அரசர்களுக்கு மாறிமாறி வழங்கப்பட்டுள்ளன. குடக்கோ நெடுஞ்சேரலாதன், இமயவரம்பன் என்று கூறப்படுகிறான் (*பதிற்று*. 2ஆம் பத்து, பதிகம்). அவனுடைய மூத்த மகனான களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் வானவரம்பன் என்று கூறப்படுகிறான் (4ஆம் பத்து 8 : 12). நார்முடிச் சேரலின் தம்பியாகிய சேரன் செங்குட்டுவன், இமயவரம்பன் என்று கூறப்பட்டுள்ளான் (*சிலம்பு* 26 : 23, 30 : 161). இவர்களின் தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், வானவரம்பன் என்று கூறப்பட்டான் (6ஆம் பத்து 8 :12). சேர அரசர் பரம்பரையில் மூத்த குடியில் வந்த அரசர் மட்டும்

இப்பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். இளைய குடி மரபில் வந்த அரசர்கள் இப்பெயர்களைச் சூட்டிக்கொள்ளவில்லை என்பது தெரிகின்றது.

உதியஞ் சேரல்
(வானவரம்பன்)
|
குடக்கோ நெடுஞ்சேரலாதன்
(இமயவரம்பன்)
|
களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்
(வானவரம்பன்)
|
கடல்பிறக்கோட்டிய
சேரன் செங்குட்டுவன்
(இமயவரம்பன்).
|
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
(வானவரம்பன்)

இச்சிறப்புப் பெயர்களைச் சேர அரசர் மட்டுமே சூட்டிக் கொண்டார்கள். ஏனைய சோழ, பாண்டிய மன்னர்கள் இப் பெயர்களைச் சூட்டிக்கொள்ளவில்லை. இமயவரம்பன் என் றால் இமயமலையை எல்லையாக வுடையவன் என்றும் வானவரம்பன் என்றால் வானத்தை எல்லையாகவுடையவன் என்றும் பொருள் கூறப்படுகிறது. மேலோட்டமாகப் பார்க்கும் போது இப்பொருள்கள் சரியானவை என்று தோன்றுகின்றன. ஆனால், சிந்தித்து ஆராய்ந்து பார்க்கும்போது இப்பொருள்கள் தவறானவை என்று தெரிகின்றன.

இமயவரம்பன், இமயமலையைத் தன்னுடைய இராச் சியத்திற்கு எல்லையாகவுடையவன் என்று பொருள் கொண்டால், மற்ற மூன்று திசைகளில் எல்லை என்ன என்னுங் கேள்வி எழுகின்றது. ஒரு நாட்டுக்கு எல்லை கூறும்போது அதன் நான்கு திசைகளுக்கும் எல்லை கூறவேண்டுமல்லவா? வடக்கு எல்லையாக இமயமலையை மட்டுங் கூறினால் போதுமா? இமயமலையை வட எல்லையாகவுடையவன் மற்ற மூன்று திசைகளிலும் கடலை எல்லையாகக் கொண்டிருந்தான் என்று கொள்ளவேண்டும். அப்படியானால், வடக்கே இமயத்தையும் மற்றக் கிழக்கு மேற்குத் தெற்குத் திசைகளில் கடல்களையும் எல்லையாகவுடைய அரசன் பாரத நாட்டின் சக்கரவர்த்தியாக அல்லவா இருக்கவேண்டும்! சேர நாட்டுச் சேர மன்னர்களில்

ஒருவரேனும் இந்தியா தேசத்தின் சக்கரவர்த்தியாக இருந்து இமயம் முதல் குமரி வரையில் ஆட்சி செய்ததாகச் சரித்திரத்தில் காணப்படவில்லை. ஆகவே, 1500 மைல் நீளமுள்ள இமய மலையை வட எல்லையாகக் கொண்டிருந்தபடியால் சேரன், இமயவரம்பன் என்று பெயர் பெற்றான் என்று கூறுவது பொருந் தாது. அது பொருளற்ற வெற்றுரையாகும்.

சேர மன்னர் தங்களுடைய அடையாளமாகிய வில்லின் உருவத்தை இமயமலைப் பாறையில் செதுக்கி வைத்தபடியால் அவர்களுக்கு இமயவரம்பர் என்னும் பெயர் ஏற்பட்டதென்று சிலர் சொல்லக்கூடும். இக்கருத்தும் ஏற்கத்தக்கதன்று. ஏனென் றால், இமயமலைப் பாறையில் சேர அரசர்கள் மட்டும் தங்கள் அடையாளத்தைப் பொறித்து வைக்கவில்லை. ஏனைய சோழ பாண்டியர் களும் தங்கள் அடையாளமாகிய புலி, கயல்களின் உருவங்களைப் பொறித்துவைத்துள்ளனர் என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

செருவெங் காதலில் திருமா வளவன்
....
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
(*சிலம்பு* 5 : 90-98)

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து
மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்!
(*சிலம்பு, ஆய்ச்சியர் குரவை, உள்வரி வாழ்த்து* 2)

வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன் யார் அம்மானை
....
கொற்றவன் பூம்புகார் பாடேலோ ரம்மானை!
(*சிலம்பு,* வாழ்த்துக்காதை, அம்மானை, வரி *2)*

கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும் (*சிலம்பு* 17 : 1-2)

எனவே, சேர அரசர் இமயமலையில் தங்கள் அடையாளமாகிய வில்லைப் பொறித்தபடியால் இமயவரம்பர் என்று சிறப்புப் பெயர் பெற்றனர் என்று கூறுவது பொருந்தாது, அக்காரணம் பற்றியே ஏனைய சோழ பாண்டியருக்கும் இமயவரம்பன் என்னும் பெயர் பொருந்துமாகையினால். ஆனால், சோழ பாண் டிய அரசர்கள், இமயவரம்பன் என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொண்டதேயில்லை. சேர நாட்டு அரசர் மட்டுந்தான் இமயவரம்பன் என்னுஞ் சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொண் டனர். ஆகவே, இமயவரம்பன் என்னும் பெயர் சேர மன்ன

ருக்கேயுரிய தனிச் சிறப்புப் பெயராகத் தெரிகின்றது. ஆனால், அப்பெயரின் காரணம் தெரியவில்லை.

இமயவரம்பன் என்பதற்கு, இமயமலையை எல்லையாக உடையவன் என்னும் பொருள் ஏற்கத்தக்கது அன்று; அதற்கு வேறு ஏதோ பொருள் இருக்க வேண்டும்.

அதுபோலவே, வானவரம்பன் என்றால் வானத்தை எல்லையாக யுடையவன் என்னும் பொருளும் பொருந்தாது. நிலத்துக்கு எல்லை கூறும்போது நிலத்தில் உள்ள பொருள் களையே எல்லையாகக் கூற வேண்டும். நிலவுலகத்துக்கு அப்பாற் பட்ட வானத்தை எல்லையாகக் கூறுவது பைத்தியக்காரர் கூற்றாகும். ஆகவே, வானவரம்பன் என்றால், வானத்தை எல்லை யாக வுடையவன் என்று பொருள் கூறுவது பொருந்தாது. அது ஏற்கத்தக்கது அன்று. வானவரம்பன் என்பதற்கு வேறு பொருள் இருக்க வேண்டும்.

[தமிழ் மரபை யறியாத இக்காலத்து மலையாளிகள் சிலர் வானவரம்பன், இமயவரம்பன் என்னும் பெயர்களை வான (பாண)வர்மன், இமயவர்மன் என்று கூற முற்பட்டுள்ளனர். வர்மன் என்னும் பெயரைப் பிற்காலத்தில் அரசர்கள் தங்கள் பெயருடன் அமைத்துக்கொண்டது உண்மையே. உதாரணமாக மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், நந்திவர்மன், மார்த் தாண்டவர்மன் முதலியன. ஆனால், சங்க காலத்தில், தமிழர சர்கள் வர்மன் என்னும் பெயரைச் சூட்டிக்கொள்ளவில்லை. இந்தச் சரித்திர உண்மையை யறியாத சிலர் இமயவர்மன், வான (பாண)வர்மன் என்று திரித்துக்கூறுவது தவறானது.]

இமயவரம்பன், வானவரம்பன் என்னுஞ் சொற் களின் உண்மையான உருவம் இமையவரன்பன், வானவரன்பன் என்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது (இமையவர்+ அன்பன்=இமையவரன்பன், வானவர்+அன்பன்=வானவரன்பன்). இமயவர் என்றால் தேவர். வானவர் என்றாலும் தேவர் என்பது பொருள். இமையவரன்பன், வானவரன்பன் என்னுஞ் சொற்கள் பிற்காலத்தில் ஏடெழுதுவோரின் கைப்பிழையால் இமய வரம்பன் வானவரம்பன் என்று மருவிவிட்டன என்று கருதலாம். வானவர் அல்லது இமையவர் ஆகிய தேவர்களுக்குப் பிரிய மானவன் என்னும் பொருளில் இப்பெயர்கள் சேர மன்னருக்கு வழங்கப்பட்டுப் பிற்காலத்தில் பூதேவராகிய பிராமணருக்கு அன்பன் என்னும் பொருளில் வழங்கப்பட்டன. தேவர் என்னும் பொருள் உள்ள இமையவர், வானவர் என்னுஞ் சொற்கள் பிற்காலத்தில் பிராமணர் என்னும் பொருளில் வழங்கப்பட்டன. பிராமணர் தங்களைப் பூதேவர் என்று கூறிக்கொண்டனர். 'பொய்யகமில்லாப் பூசுரர் வாழும் புறவம்மே' என்றும் 'பூவால்

நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே' என்றும் 'தரைத்தேவர் பணிசண்பை தமிழ்க்காழி' என்றும் பிற்காலத்துத் திருஞான சம்பந்தர் தமது தேவாரத்தில் கூறியிருப்பது காண்க. மற்றத் தமிழ் வேந்தர்களைவிட சேர நாட்டு மன்னர்கள் பிராமணர்களை அதிகமாகப் போற்றி அவர்களுக்குத் தான தருமங்களை அதிகமாகச் செய்திருப்பதைச் சங்க நூல்களில் நன்கு காணலாம்.

பிராமணரிடம் அதிக அன்புள்ளவராக இருந்தது பற்றியே சேர மன்னர் இமையவரன்பர், வானவரன்பர் என்று பெயர் பெற்றிருக்கக்கூடும் என்பதற்குச் சான்றும் இருக்கிறது. பதிற்றுப்பத்து ஆறாம் பத்தின் பதிகத்தில் இதற்குச் சான்று காணப்படுகிறது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், வான வரம்பன் என்று சிறப்புப்பெயர் பெற்றிருந்தான் என்றும், அவன் பார்ப்பார்க்குக் கபிலைப் பசுக்களைத் தானங்கொடுத்துக் குடநாட்டிலே ஒரூரையும் பிரமதேயமாகத் தானஞ் செய்தான் என்றும், இவ்வாறு செய்தபடியினாலே அவன் தனக்குள்ள வானவரம்பன் என்னும் பெயரை விளங்கச் செய்தான் என்றும் அது கூறுகின்றது.

பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட்டு ஒரூர் ஈத்து
வான வரம்பனெனப் பெயரினிது விளக்கி

என்பது 6ஆம் பத்துப் பதிகம்.

பிராமணர்களுக்குத் தான தருமஞ் செய்தபடியினாலே அவன், வானவரம்பன் என்னும் தன் பெயரை விளங்கச் செய்தான் என்று இச்செய்யுள் திட்டமாகக் கூறுகிறது.

இச்செய்யுளில் 'வானவரன்பன்' என்றிருக்க வேண்டிய சொல் 'வானவரம்பன்' என்று தவறாக இருப்பது காண்க. பிராமணருக்குக் கபிலைப் பசுக்களையும் ஊரையும் தானஞ் செய்ததால் வானவரன்பன் [(பூ) தேவர்களின் அன்பன்] என்னும் பெயர் பொருந்துமல்லாமல், வானத்தை எல்லையாகயுடையன என்னும் பொருளுள்ள வானவரம்பன் என்பது பொருந்தா தன்றோ? எனவே, இச்செய்யுளின் கருத்தையும் பொருளையும் நோக்கும்போது இதில் உள்ள 'வானவரம்பன்' என்பது பொருந்தாது என்பதும் 'வானவரன்பன்' என்பதே பொருந்தும் என்பதும் தெரிகின்றது. ஆகவே, 'வானவரம்பன்' என்பது பிழை யான பாடம் ஆகும். மேலே காட்டிய சான்றினால் கடைச்சங்க காலத்தின் இறுதியிலே, அதாவது கி.பி. முதல் இரண்டாவது நூற்றாண்டுகளிலே பிராமணரின் அன்பன் என்னும் பொருளில் வானவரன்பன், இமயவரன்பன் என்னும் பெயர்கள் சேர அரசர் களுக்கு வழங்கப்பட்டதைக் கண்டோம். ஆனால், இச்சொற்கள் இப்பொருளைப் பெறுவதற்கு முன்பு கி.மு. முதலாவது

இரண்டாவது நூற்றாண்டுகளிலே வேறு பொருளுள்ளனவாக இருந்தன என்றும் கூறினோம். அந்த வேறு பொருள் யாது என்பதைக் காண்போம்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே தமிழிந்தியாவைத் தவிர ஏனைய இந்தியா தேசம் முழுவதையும் அரசாண்ட அசோகச் சக்கரவர்த்தி *தேவனாம்பிய* (*தேவனாம்பிரிய*) என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தார் என்பது சரித்திரம் அறிந்தவர்கள் நன்கறிவார்கள். *தேவனாம்பிய* என்னும் பாலி மொழிச் சொல் சமஸ்கிருத மொழியில் *தேவனாம்பிரிய* என்றாகும். *தேவனாம் பிரியன்* என்றால் தேவர்களுக்குப் பிரியமானவன் என்பது பொருள். அசோகச் சக்கரவர்த்தியின் சாசனங்களிலே *தேவனாம் பிய* என்னும் பெயர் அவருக்கு வழக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இலங்கையில் வழங்குகின்ற *மகாவம்சம்* என்னும் நூலிலும் அசோகச் சக்கரவர்த்தி *தேவனாம்பிய* என்று கூறப்பட்டிருக்கிறார். அசோகச் சக்கரவர்த்தி, பௌத்தப் பிக்குகளைத் தமிழகம், இலங்கை முதலிய தேசங்களிலே அனுப்பிப் பௌத்த மதத்தைப் பரவச்செய்தார் என்பது சரித்திர உண்மை. அசோகச் சக்கரவர்த்தியின் பாறைக்கற் சாசனங்களில் இரண்டாவதும் பதின்மூன்றாவதும் (*Inscriptions of Asoka*, Rock Edicts II and XIII) இச்செய்தியைத் தெளிவாகச் சந்தேகம் இல்லாமல் கூறுகின்றன. இந்தச் சாசனங்களில் *தேவனாம் பிரியராகிய* அசோகச் சக்கரவர்த்தி, சேர அரசர்களைக் கேரள புத்த (கேரள புத்திரர்) என்று கூறுகிறார்.

அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் இலங்கையை யரசாண்ட அரசன் திஸ்ஸன் என்பவன். இவன் அசோகருடன் நட்பு உடைய வன். இவன் அசோகரைப் போலவே தானும் *தேவனாம்பிய* (*தேவனாம்பிரியன்*) என்று பெயர் சூட்டிக்கொண்டான். அவனுக்குப் பிறகு வந்த சில இலங்கையரசர்களும் தங்கள் பெயருடன் *தேவனாம்பிய* என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டிக் கொண்டனர். அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் இந்தச் சேர வேந்தர்களும் அவருடன் நட்புக்கொண்டிருந்தார்கள் என்பது, அசோகச் சாசனங்கள் அவர்களைக் '*கேரள புத்திரன்*' என்று கூறுவதிலிருந்து அறியலாம். அசோகச் சக்கரவர்த்தியுடன் நட்புமுறையில் இருந்த சேர மன்னர்கள் அவரைப் போலவே தங்களையும் *தேவனாம்பிரியா* என்று கூறிக்கொள்ள விரும்பி, அப்பெயரைத் தமிழாக்கி இமயவரன்பன், வானவரன்பன் (=*தேவனாம்பிரியன்*) என்று வைத்துக்கொண்டார்கள் போலும் (சோழ, பாண்டியர் இப்பெயரைச் சூட்டிக்கொள்ளவில்லை).

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் சேர அரசர் தங்களுக்குச் சிறப்புப் பெயராகச் சூட்டிக்

கொண்ட வானவர் அன்பன், இமயவர் அன்பன் என்னும் பெயர்கள், இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு (கடைச்சங்க காலத்தின் இறுதியில்) அவற்றின் உண்மையான பொருள் மறக்கப்பட்டு, பிராமணரின் அன்பன் என்னும் பொருளில் வழங்கப்பட்டன என்று தோன்றுகிறது. இதற்குச் சான்று, மேலே காட்டப்பட்டது. அதாவது "பார்ப்பார்க்குக் கபிலையொடு குடநாட்டு ஒரூர் ஈத்து, வானவரம்பன் எனப் பெயரினிது விளக்கி" என்னும் பதிக (6ஆம்பத்து) அடிகளினால் விளங்குகின்றது.

பிற்காலத்தில் இச்சொற்கள் ஏடெழுதுவோரின் கைப்பிழையால் வானவரம்பன், இமயவரம்பன் என்று தவறாக எழுதப்பட்டு, அதற்கு வானத்தை எல்லையாகவுடையவன் இமயமலையை எல்லையாகவுடையவன் என்று பொருள் கூறப்பட்டது.

சேர அரசர் 'இமயவரம்பன்' என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொண்டதை அறிந்தோம். திரு. P.T. சீனிவாச ஐயங்கார், புலவர்கள் 'இமயவரம்பன்' (இமயமலையை எல்லையாக வுடையவன்) என்று கற்பித்துத் தாங்களாகவே நெடுஞ்சேர லாதனுக்கும் செங்குட்டுவனுக்கும் இப்பெயரைச் சூட்டி னார்கள் என்று புலவர்களின்மேல் பழிபோடுகிறார் (P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, 1929, p. 503). இது சிறிதும் பொருந்தாது. இப்பெயர்கள் புலவர்களால் தங்கள் விருப்பப்படி சூட்டியவையல்ல. சேர அரசர்களே தங்களுக்குப் பரம்பரைப் பெயராகச் சூட்டிக்கொண்ட பெயர்கள் என்பதை மேலே விளக்கினோம்.

8. இரு பெருங் காவியங்கள்

சேரன் செங்குட்டுவனின் இறுதிக் காலத்தில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டின் கடைசியில்) *சிலப்பதிகாரம், மணிமேகலை* என்னும் இரண்டு சிறந்த காவியங்கள் முறையே இளங்கோ அடிகளாலும் மதுரைக் கூலவாணிகன் சாத்தனாராலும் இயற்றப்பட்டன. *சிலப்பதிகாரம்* இயற்றிய இளங்கோ அடிகள், சேரன் செங்குட்டுவனுடைய தம்பியார். சமண சமயத்தை மேற்கொண்டு துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் துறவிகளுடன் வசித்து வந்தார். *மணிமேகலைக்* காவியத்தை இயற்றிய கூலவாணிகன் சாத்தனார் மதுரையில் தானிய வாணிகம் செய்தவர். இவர் இளங்கோ அடிகளுக்கும் சேரன் செங்குட்டுவ னுக்கும் நண்பர். அக்காலத்தில் தமிழில் அகப்பொருள், புறப்பொருள் பற்றிய தனிச் செய்யுட்களும் பரிபாடல் முதலிய இசைத் தமிழ் நூல்களும் இருந்தன. தமிழ்நாட்டுக்கே உரிய காவிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இல்லை. *பாரதம்,*

இராமாயணம் போன்ற நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தொடர்நிலைச் செய்யுளாகச் *சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும்* இவ்விரு பெரும் புலவர்கள் முதன்முதலாக இயற்றினார்கள்; இவர்கள் தங்கள் நூல்களுக்கு இதிகாசப் புராணக் கதைகளையோ புனை கதைகளையோ பொருளாகக் கொள்ளாமல், தங்கள் காலத்தில் நிகழ்ந்த, நாட்டு மக்களின் மனத்தை ஈர்த்த, இரண்டு நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு இவ்விரண்டு காவியங் களை இயற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காவிரிப்பூம்பட்டினத்தில் பெருஞ்செல்வனாக இருந்த கோவலன் தன் பெருஞ் செல்வத்தைச் செலவு செய்து வறுமையடைந்து தன் மனைவியாகிய கண்ணகியுடன் மதுரைக்குச் சென்று, வாணிகஞ் செய்து பொருள் ஈட்ட முயன்றான். அவன் தன் மனைவியின் காற் சிலம்பை விற்கச் சென்றபோது களவுக் குற்றஞ் சாற்றிக் கொல்லப்பட்டான். அவன் மனைவி கண்ணகி பாண்டியனிடஞ் சென்று, தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிறுவினாள். பாண்டியன் நீதி தவறி, நல்லவன் ஒருவனை அநியாயமாகக் கொலை செய்ததற்காக, ஆத்திரங்கொண்ட நகர மக்கள் அவனுடைய அரண் மனைக் குத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். பிறகு, கண்ணகி வாழ்க்கையை வெறுத்துப் பட்டினியுடன் பதினான்கு நாட்கள் வழி நடந்து கடைசியில் ஒரு வேங்கைமர நிழலில் இருந்து உயிர்விட்டார். பத்தினியாகிய கண்ணகியாருக்குச் சேரன் செங்குட்டுவன் கோட் டம் அமைத்துச் சிறப்புச் செய்தான். இந்நிகழ்ச்சியை ஆதார மாகக் கொண்டு *சிலப்பதிகாரக்* காவியம் இயற்றப்பட்டது.

மற்றொரு நிகழ்ச்சி மணிமேகலையின் துறவு. கோவலனுக்கும் புகழ்பெற்ற நாடகக் கணிகையாகிய மாதவிக் கும் பிறந்த மகள் மணிமேகலை. அவள் மங்கைப் பருவமடைந்த போது அவளைக் காதற் கிழத்தியாகப் பெறச் சோழ அரசன் மகனான உதயகுமரன் விரும்பினான். இந்தக் காதல் முயற்சியில் அவ்விளவரசன் தற்செயலாகக் கொலை செய்யப்பட்டு இறந் தான். பிறகு மணிமேகலை வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டு பௌத்த மதத்தை மேற்கொண்டு துறவு பூண்டு, அறச்செயல் களைச் செய்துகொண்டிருந்தாள். பிறகு காஞ்சீபுரத்தில் வீடுபேறடைந்தாள். இந்நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டது *மணிமேகலை* என்னும் காவியம்.

சிலப்பதிகாரம்

மேலே கூறியபடி *சிலப்பதிகாரம்,* கோவலன் கண்ணகியின் வரலாற்றைக் கூறுகிறது. இது அவலச் சுவையுடைய வரலாறு.

செல்வச் சீமானாகப் பிறந்த கோவலன், செல்வச் சீமான் மகள் கண்ணகியை மணந்து வாழ்ந்து வந்தான். சில காலத்துக்குப் பிறகு அவன், மாதவி என்னும் நாடகக் கணிகையின் ஆடல் பாடல்களில் ஈடுபட்டுக் கண்ணகியைத் துறந்து மாதவியின் இடத்திலேயே தங்கித் தன் செல்வங்களையெல்லாம் செலவு செய்து வறுமையடைந்தான். பிறகு, தான் செய்த தவற்றை உணர்ந்து, கண்ணகியிடஞ் சென்றான். கண்ணகியிடம் அவளு டைய காற்சிலம்புகள் மட்டும் இருந்தன. அதை விற்று அப் பணத்தை முதலாக வைத்து வாணிகஞ் செய்து இழந்த செல்வத் தைச் சம்பாதிக்க எண்ணி அவனும் கண்ணகியும் உற்றார் உறவினருக்குச் சொல்லாமலே மதுரைக்குப் போனார்கள். கவுந்தியடிகள் என்னும் சமண சமயப் பெண்பால் துறவியார், வழியில் எதிர்ப்பட்டு அவர்களுடன் மதுரைக்குச் சென்றார். இவர்கள் மூவரும் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து கால்நடையாகவே நடந்து மதுரைக்குச் சென்றார்கள்.

மதுரையை யடைந்ததும் கவுந்தியடிகள், துறவிகள் தங்கி யிருந்த இடத்தில், நகரத்துக்கு வெளியே தங்கினார். அவர் களுடன் சென்ற கோவலன் கண்ணகியர், துறவிகளுடன் தங்கி யிருக்கக்கூடாதாகையால், மதுரை நகரத்தில் தங்க ஒரு இடத் தைக் கண்டு வரும்படி கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூற, கோவலன் நகரத்துக்குள் சென்று நகரத்தைச் சுற்றிப் பார்த்துத் தங்கியிருக்க இடம் ஏற்படுத்தாமலே திரும்பி வந்துவிட்டான். செல்வச் சீமானாக வாழ்ந்திருந்த தான், இப்போது வறுமையடைந்த நிலையிலும், பிறர் இல்லத்தில் சென்று தங்குவது தன்னுடைய தன்மானத்துக்குத் தாழ்ந்ததாக அவன் கருதினான். தான் இன்னான் என்பதை மதுரை வணிகரிடம் இவன் கூறியிருந்தால் அவர்கள் இவன் குலப்பெருமை காரண மாக இவனைத் தங்கள் விருந்தினனாக விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பார்கள். கோவலன் அவ்வாறு பிறர் ஆதரவில் தங்கியிருக்க விரும்பவில்லை.

தங்க இடந் தேடாமல் திரும்பிவந்த கோவலனையும் தன்னுடன் இருந்த அவன் மனைவி கண்ணகியையும் கவுந்தி யடிகள், மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அடைக் கலமாகக் கொடுத்து அவள் வீட்டுக்கு அனுப்பினார். கோவல னும் கண்ணகியும் மாதரியின் குடிலில் தங்கினார்கள். மாதரியின் மகள் ஐயை என்னுஞ் சிறுமி கண்ணகிக்குத் தோழியாக இருந்தாள்.

அடுத்த நாள் கோவலன், கண்ணகியின் காற்சிலம்பை விற்கப் போனான். போகும்போது வீதியில் பாண்டியனுடைய பொற்கொல்லன் தற்செயலாக வருவதைக் கண்டு அவனிடம்

சிலம்பை விற்பதற்குக் காட்டினான். அயல்நாட்டான் ஒருவன் வறுமையான நிலையில் அதிக விலைமதிப்புள்ள பொற் சிலம்பை விலை கூறுவதைக் கண்டு பொற்கொல்லன், தான் முன்பு பாண்டிமாதேவியின் காற் சிலம்பைச் செப்பனிடுவதற் காகக் கொண்டு வந்தவன் அதனைத் திருப்பிக் கொடுக்காமல் களவாடிக் கொண்டவனாதலின், தன் களவுக் குற்றத்தை இப்புதியவன் மேல் சுமத்த இதுவே தக்க சமயம் என்று கருதினான். ஆகவே, கோவலனைத் தன் இல்லத்தின் அருகில் இருத்தித் தான் சிலம்பை விலைபேசி வருவதாகச் சொல்லிப் போனான்.

போனவன், அரசியின் பொற்சிலம்பைக் களவாடிய கள்ளன் தன்னிடம் வந்து அதை விலைபேசி விற்க வந்திருக்கிறான் என்று கூறி அரசனை நம்பச் செய்தான். அரசன், அக்காலத்துச் சட்டப் படிக் கள்ளனைக் கொல்ல வேண்டிய முறைப்படி வீரர் சிலரை அனுப்பிக் கள்ளனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். வீரர்களை அழைத்து வந்த பொற் கொல்லன் கோவலனைக் கள்ளன் என்று காட்ட, அவர்கள் அவனை வெட்டிவிட்டனர்.

பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய குற்றத் துக்காக அயல்நாட்டான் ஒருவன் கொலை செய்யப்பட்ட செய்தி நகரம் முழுவதும் பரவியது. அச்செய்தி கண்ணகியின் செவிக்கும் எட்டியது. களவுக் குற்றஞ் சாற்றிக் கொலை செய்யப் பட்டவன் தன் கணவனே என்று அறிந்ததும் அவள் மனம் துடித்தது. துன்பமும் துயரும் அவள் மனத்தைச் சூழ்ந்து கொண்டன. பெருந்துக்கத்தில் மூழ்கினாள். பதை பதைத்துப் புலம்பிக்கொண்டு கோவலன் வெட்டுண்டு கிடந்த இடத்துக்குச் சென்று அவனைத் தழுவிக்கொண்டாள். வாய் விட்டு அலறிப் புலம்பினாள். அந்த நிலையில் தன் கணவனுக்குச் செய்யவேண்டிய முக்கியமான கடமையொன்று தன்மீது இருப்பதையுணர்ந்தாள். தன் கணவன் கள்வன் அல்லன், அத்தகைய இழி செயல் செய்தவன் அல்லன், அவன் பொய்யாகக் களவுக் குற்றம் சாற்றப் பட்டு அநியாயமாகக் கொல்லப்பட்டான் என்பதை அரசனுக் கும் உலகத்துக்கும் காட்டவேண்டிய பொறுப்பு தன்மேல் இருப் பதை உணர்ந்தாள். தன் கணவனுடைய மானம் மரியாதை களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு–கடமை–தன் ஒருத்தி மேல் மட்டும் இருப்பதை உணர்ந்தாள். அக்கடமையைச் செய்ய வீறிட்டெழுந்தாள். உண்மையுள்ள இடத்தில் வீரம் பொலியு மன்றோ? நாட்டு மக்களை விளித்து அறை கூவினாள். இந்த நகரத்தில் நற்குடிப் பெண்டிர் இல்லையா? பிள்ளைகளைப் பெற்றெடுத்த சான்றோர் இல்லையா? தெய்வம் இல்லையா? நீதி

நியாயம் இல்லையா? என்று முறையிட்டாள். இதைக் கேட்ட நகர மக்கள் நீதிமுறை தவறிவிட்டதை யுணர்ந்தார்கள். அரசன் தவறாக, அநீதியாக நல்லவன் ஒருவனைக் கொன்றுவிட்டான் என்பதை யுணர்ந்தார்கள். நகரத்தில் மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், இதன் உண்மையை அவர்களால் நிச்சயமாக அறிய முடியவில்லை. அவர்களுடைய அனுதாபமும் நல்லெண்ணமும் கண்ணகிபால் சாய்ந்தது. ஆனால், உண்மை எது? தவறு யாருடையது? என்று அறியாமல் அவர்கள் மனம் ஊசலாடியது.

கண்ணகியார் அரண்மனைக்குச் சென்று அரசன் முன்பு தன் வழக்கை எடுத்துரைத்தார். அரசன் தான் தன் கடமையைச் செய்ததாகக் கூறினான். 'கள்ளனைக் கொல்வது கொடுங்கோல் அன்று, அரசருடைய கடமை, அதன்படியே நான் செய்தேன்' என்று கூறினான். 'இல்லை, என் கணவன் களவு செய்யவில்லை' என்று வாதாடினாள் கண்ணகி. பாண்டியன், தன் அரசியின் சிலம்பில் முத்துக்கள் பரலாக இருந்தன என்றான். கண்ணகி, தன் சிலம்பில் மாணிக்கக் கற்கள் பரலாக இருந்தன என்றாள். சான்று காண்பதற்காகக் கண்ணகியின் சிலம்பு அவைக்குக் கொண்டு வரப்பட்டது. அதை உடைத்தபோது அதனுள்ளிருந்து மாணிக் கப் பரல்கள் வெளியே விழுந்தன. ஆம்! இது கண்ணகியின் காற்சிலம்புதான். பாண்டிமாதேவியின் சிலம்பு அன்று என்பது நிறுவப்பட்டது.

அரசன் திடுக்கிட்டான். தான் பெரிய தவறு செய்து விட்டதை உணர்ந்தான். அவன் மனம் என்ன பாடுபட்டது! பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், நீதிமான்; செங்கோல் வேந்தன்; கல்வி கற்ற புலவன்; 'உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும்' என்று தொடங்கும் *புறநானூற்றுப்* பாட்டைப் (*புறம்* 183) பாடியவன் அவன். இத்தகைய அறிஞ னான பாண்டியன், தீவினைப் பயனாக, இத்தகைய பெரிய தவறு செய்துவிட்டதையறிந்தபோது அவன் மனம் துடித்தது. அறிவு கலங்கியது. இருதயந் துடித்து அவன் சிம்மாசனத்தில் இருந்த படியே உயிர்விட்டான்.

அரசன் அநீதி செய்தான், கண்ணகியின் கணவன் கள்ளன் அல்லன் என்னும் செய்தி தெரிந்தவுடன் நகர மக்களின் உணர்ச்சி ஆவேசமாக மாறிவிட்டது. அவர்களில் சிலர் அரண்மனையைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டனர். அரண்மனை தீயினால் எரிந்தது.

இடைக்குல மூதாட்டி தன் வீட்டில் வந்திருந்த கோவலன் கொலை செய்யப்பட்டதையும் கண்ணகியின் துன்பத்தையும் அரசன் மனம் துடித்து இறந்ததையும் அறிந்து தீராத் துயரம் அடைந்தாள். அன்புள்ளம் படைத்த அம்மூதாட்டியினால்

இத்துயரங்களைத் தாங்க முடியவில்லை. அவள் ஒடோடியுஞ் சென்று அரண்மனை எரிந்துகொண்டிருக்கிற தீயில் விழுந்து மாய்ந்து போனாள். கண்ணகியார் தன் துயரம் ஆற்றாமல், கொற்றவைக் கோயிலின் முன்னே போய்த் தன் கைவளைகளை யுடைத்துவிட்டு வைகைக் கரைவழியே நடந்தார் (அக்காலத்துப் பெண்கள் கைம்மை யடைந்தால், கைவளைகளை உடைத்து விடுவது வழக்கம்). நடந்த கண்ணகியார் உணவும் நீரும் கொள்ளாமலும் ஒரிடத்தில் தங்காமலும் நெடுக நடந்தார். பதினான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு குன்றின்மேல் வேங்கை மரத்தின் கீழ் வந்து தங்கினார். அப்போது அவர் உயிர் அவர் உடலைவிட்டுப் பிரிந்தது.

கோவலன் கொலை செய்யப்பட்டதும், அரசன் இறந்ததும், அரண்மனை தீயிடப்பட்டதும் மாதரி அத்தீயில் விழுந்து இறந்ததும் ஆகிய துன்பச் செய்திகளைக் கேட்ட கவுந்தியடிகள் ஜைன சமயத்தவராதலின், கல்லேகனை நோன்பு (உண்ணாவிரதம்) இருந்து உயிர்விட்டார். கோவலன் மதுரையில் கொலையுண்டதும் கண்ணகி துன்புற்றதும் ஆகிய செய்திகளைக் கேட்ட கோவலன் தாய் துயரம் பொறுக்காமல் இறந்துபோனாள். அவன் தந்தையான மாசாத்துவான் தன் செல்வங்களைத் தானம் செய்துவிட்டுப் பௌத்த மதத்தை மேற்கொண்டு துறவு பூண்டான். கண்ணகியின் தாய், தன் மகளுக்கும் மருமகனுக்கும் நேரிட்ட தீராத் துயரத்தைக் கேட்டுத் தானும் துன்பம் தாங்க முடியாமல் உயிர்விட்டாள். அவள் தந்தையான மாநாய்கனும் துயரம் தாங்காமல் தன் செல்வங் களையெல்லாம் தான தருமம் செய்து ஆசீவகமத்துத் துறவியா னான். மாதவியும் கோவலன் கண்ணகியரின் துன்பத்தைக் கேட்டு நாடகத் தொழிலைவிட்டுப் பௌத்த மதத்தைச் சேர்ந்து தவம் செய்தாள். இவ்வாறு அவலச் சுவைச் செய்தியுள்ளது இந்நிகழ்ச்சி. சேரன் செங்குட்டுவன், கண்ணகியின் செய்தியை யறிந்து பத்தினியாகிய அவருக்குக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தான்.

இந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு இளங்கோவடிகள் *சிலப்பதிகாரம்* என்னும் இச்சிறந்த காவியத்தை இயற்றினார். இளங்கோ அடிகள் இதை இயற்றுவதற்கு முக்கியக் காரணமும் உண்டு. இக்காவியத் தலைவராகிய கோவலனும் கண்ணகியும் சமண சமயத்தவர். சமண சமயத்தவரான இளங்கோ அடிகள் தம் சமயத்தைச் சேர்ந்த இவர்களின் வரலாற்றை யமைத்து இக் காவியத்தை இயற்றினார். அன்றியும், நல்வினை, தீவினை என்னும் ஊழின்படி உயிர்கள் நன்மை தீமை யடைகின்றன என்னும் சமண சமயக் கொள்கையை வற்புறுத்துவதற்கு இந்நிகழ்ச்சிகள் உதவியாக இருக்கின்றன. மற்றொரு காரணம்,

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதும்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டும் என்பதூஉம்

ஆகிய செய்திகளைக் கூறுவதற்கு இக்காவியம் இயற்றப்பட்டது.

காவியக் கற்பனை

காவிய நூல் சிறப்பாக அமையவேண்டுமானால் அதில் கற்பனைகளும் உவமைகளும் வர்ணனைகளும் மெய்ப்பாட்டுச் சுவைகளும் பெரிதும் இடம்பெற வேண்டும். இவையெல்லாம் இக்காவியத்தில் இடம் பெற்று அழகுடன் மிளிர்கின்றன. இது வெறுங் காவியம் மட்டும் அன்று, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கியமும் ஆகும்.

சரித்திர நிகழ்ச்சியாக இருந்தாலும் கதையாக இருந்தாலும் அவை காவிய நிலையை யடையும்போது அதில் கற்பனைகள் இடம்பெறாவிட்டால் காவியத் தன்மை யடையாது. அந்த முறைப்படி இளங்கோ அடிகள் இக்காவியத்தில் கற்பனை களைப் புகுத்தியிருக்கிறார். உதாரணமாகச் சிலவற்றை எடுத்துக் காட்டுவோம்.

கோவலனை அநியாயமாகக் கொன்ற காரணத்துக்காக மதுரை மக்கள் சீற்றங்கொண்டு அரசனுடைய அரண்மனை யைக் கொளுத்தினார்கள் என்பதே உண்மை நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியை உள்ளது உள்ளபடியே கூறாமல் கற்பனை களைப் புனைந்து வியப்புச் சுவை புலப்படும்படி எழுது கிறார் இளங்கோ அடிகள். நகர் என்பதற்கு அரண்மனை என்றும் நகரம் என்றும் இரண்டு பொருள் உண்டாகையால் அவ்விரு பொருள்படும்படி இக்காவியத்தில் கூறுகிறார். அத்துடன் நிற்காமல், அக்கினிக் கடவுளே நேரில் வந்து கண்ணகியிடத்தில் 'எந்தெந்த இடங்களை எரிக்கவேண்டும்' என்று கேட்டதாகவும் இந்திந்த இடங்களை எரிக்கவேண்டும் என்று கண்ணகி கூறியதாகவும் கற்பிக்கிறார். உணர்ச்சி மிகுதியினால் ஆவேசங்கொண்ட நகர மக்கள் அரண்மனைக்குத் தீவைத்ததைக் கூறாமல், கண்ணகியார் தம் நகிலைப் பிய்த்து எறிந்து நகரத்தைத் தீயிட்டு எரித்ததாகவும் கற்பிக்கிறார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடக்கும் சிறப்பையும் அவ்விழாக் காலத்தில் மாதவி அரங்கம் ஏறி ஆடல் பாடல் நிகழ்த்திப் பதினோராடல்களை ஆடும் சிறப்பையும் கூறப் புகுந்தவர், விழாவையும் ஆடல்களையும் பார்ப்பதற்காக இமயமலைக்கு அப்பால் உள்ள வடசேடியிலிருந்து விஞ்சையன் ஒருவன் தன் மனைவியுடன் ஆகாய வழியே பறந்து வந்து இக்காட்சிகளைக் கண்டான் என்றும் புனைந்து கற்பிக்கிறார்.

இறந்து கிடந்த கோவலனைக் கண்ணகியார் தழுவிப் புலம்பியழுதபோது கோவலன் உயிர்பெற்று அவர் கண்ணீரைத் துடைத்து 'இங்கே இரு' என்று கூறி விண்ணுலகம் போனான் என்றும் புனைந்து கற்பிக்கிறார். இது போன்று பல செய்தி களைக் கற்பனையாகக் கூறுகிறார்.

காவிய நூல் அழகும் சிறப்பும் பெறவேண்டுமானால் இத்தகைய புனைந்துரைகளும் கற்பனைகளும் மெய்ப்பாட்டுச் சுவைகளும் இடம்பெறவேண்டும் என்பது கவிமரபு. இந்த மரபுப் படியே இளங்கோ அடிகள் இடத்துக்கேற்றபடி கற்பனை களைப் புனைந்து கற்பித் திருக்கிறார். இக்கற்பனைகளுக்கும் உண்மையான நிகழ்ச்சிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இதனை அறியும் அறிவில்லாதவர், காவியப் புலவனின் கற்பனை களையும் உண்மை நிகழ்ச்சி என்று கருதிவிடுகின்றனர். ஆகவே, இந்நிகழ்ச்சி கட்டுக்கதை என்று கூறுகின்றனர்.

கோவலன் கொலை, கண்ணகியின் முடிவு, மாதரி தீயில் விழுந்து இறந்தது, கவுந்தியார் பட்டினிகிடந்து இறந்தது, மாசாத்துவான், மாநாய்கன், மாதவி முதலியோரின் துறவு, கண்ணகி கோவலரின் தாய்மார் தீரா மனக் கவலையினால் உயிர் விட்டது முதலிய எல்லாம் சேர்ந்து துன்பியலாக முடிகிற இந்த நிகழ்ச்சியை முழுதும் துன்பியலாகக் காட்டாமல், கோவலன், பாண்டியன் இவர்கள் இறந்தமை மட்டுங் கூறி மற்ற அவலச் சுவைகளைக் குறிப்பாகக் கூறி, இடையிடையே இசை நிகழ்ச்சி, கூத்து நிகழ்ச்சிகளைப் புகுத்தி இக்காவியத்தை மிகச் சிறப்பாக முடித்திருக்கிறார் இளங்கோ அடிகள். இவர் சமண சமயத் தவராக இருந்தும், சமயக் காழ்ப்பு இல்லாமல், ஏனைய மதங்களைக் கூறுகிற இடத்தில் அந்த மதங்களைச் சிறப்பாகக் கூறுகிறார்.

மணிமேகலை

மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இயற்றிய *மணி மேகலைக்* காவியத்தைப் பார்ப்போம். இந்தக் காவியத் தலைவி மணிமேகலை. கோவலனின் காமக் கிழத்தியாகிய இசைக்கலை நாடகக் கலைகளினால் புகழ் பெற்ற மாதவியின் மகள் இவள். மாதவி இசைக்கலை, நாட்டியக்கலை, பதினோராடல் முதலிய கலைகளையெல்லாங் கற்றுச் சோழனுடைய அவையில் அரங்கேறித் 'தலைக்கோலி' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவள். புகார் நகரத்துச் சீமானாகிய கோவலன் அவளுடைய கலைகளில் ஈடுபட்டுத் தன் மனைவியாகிய கண்ணகி யையும்விட்டு இவளிடத்திலேயே தங்கிவிட்டான். இவர்களுக் குப் பிறந்த பெண் குழந்தைதான் மணிமேகலை. கோவலன்

மாதவியரின் இன்பகரமான வாழ்க்கை பன்னிரண்டு யாண்டு இனிது கழிந்தது. குமாரி மணிமேகலை வளர்ந்து பன்னிரண்டு வயதடைந்தாள். அவளும் இசைக்கலை, நாட்டியக் கலைகளைப் பயின்று அரங்கேறும் நிலையில் இருந்தாள். காவிரிப்பூம் பட்டினத்தில் ஆண்டுதோறும் நடந்த இந்திர விழாக் காலத்தில் மாதவி நகர அரங்க மேடையில் ஏறி நடன நாட்டியங்களையும் ஆடல் பாடல்களையும் நிகழ்த்துவது வழக்கம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஊழ்வினைப் பயனாகக் கோவலன், மாதவியைப் பிரிந்து மதுரைக்குப் போய்க் கொலை யுண்டிறந்தான். அவன் இறந்ததைக் கேட்டுத் துன்பமடைந்தாள் மாதவி. தான் கணிகையர் குலத்தில் பிறந்தவளாக இருந்தும் கற்புடைய மங்கையாகவே அவள் இருந்தாள். கோவலன் இறந்த பிறகு, தான் பயின்றிருந்த நாடகக் கலையை நிறுத்திவிட்டு, பக்தி வாழ்க்கையில் ஈடுபட்டாள். அதுமட்டும் தன் மகளான மணி மேகலையையும் கணிகையர் வாழ்க்கையிலிருந்து விலக்கிக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்த உறுதிகொண்டாள். ஆனால், இதற்கு இடையூறாக இருந்தாள் இவளுடைய தாயாகிய சித்திராபதி.

மாதவியின் தாயாகிய சித்திராபதி, கணிகையர் வாழ்க் கையைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்னும் கருத்துடையவள். வண்டுகளும் வண்ணத்துப்பூச்சிகளும் பூக்களில் சென்று தேனை உறிஞ்சுவது போல, கணிகையராகப் பிறந்தவர் செல்வர்களின் பொருளை உறிஞ்சி வாழவேண்டும் என்னும் கொள்கையுடை யவள். ஆகவே, சித்திராபதி தன் மகளான மாதவியை மீண்டும் கணிகையர் வாழ்க்கையில் புகுத்தவேண்டும் என்று முயற்சி செய்தாள். மேலும், தன் பேர்த்தியாகிய மணிமேகலையை நாடக அரங்கேற்றித் தலைக்கோலிப் பட்டம் பெறச் செய்து, அவளையும் கணிகையர் வாழ்க்கையில் புகுத்திப் பொருள் திரட்டவேண்டும் என்னும் விருப்பம் உடையவளாக இருந்தாள்.

அந்த ஆண்டு (கோவலன் மதுரையில் கொலையுண்ட பிறகு அடுத்த ஆண்டு), வழக்கம்போலக் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடந்தது. விழாக் காலத்தில் மாதவியின் ஆடல் பாடல்கள் நிகழாமல் இந்திரவிழா சிறப்படைவதில்லை. வழக்கம்போல நகர மக்கள் மாதவியை நாடக மேடையில் எதிர்பார்த்தனர். ஆனால், மாதவியோ 'இனி மேடை ஏறுவ தில்லை' என்று தீர்மானித்துவிட்டாள். தன் மகளான மணிமேகலையைக் கணிகையர் வாழ்க்கையில் புகுத்தாமல் அவளை நல்லவருக்கு மணஞ் செய்து கொடுத்துக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்தவும் உறுதிகொண்டாள். ஆகவே, மாதவி இந்திரவிழாவின்போது அரங்கத்துக்குப் போகாமல் இருந்துவிட்டாள்.

தாயாகிய சித்திராபதி, அரங்கம் ஏறி ஆடல் பாடல் நிகழ்த்தும்படி தன் மகளை வற்புறுத்தினாள். மாதவி போகவில்லை. சித்திராபதி மேலும் வற்புறுத்தவே, மாதவி தான் சித்திராபதியிடம் இருக்கும் வரையில் தன் எண்ணம் நிறைவேறாது என்று கருதித் தன் மகளான மணிமேகலையுடன் பௌத்தப் பள்ளிக்குப் போய்விட்டாள். பௌத்தப் பள்ளியில் இருந்த பிக்குகளின் தலைவரான பேர்பெற்ற அறவண அடிகள் இடஞ்சென்று தானும் தன் மகளும் நல்வாழ்க்கையில் ஈடுபடப்போவதைத் தெரிவித்துத் தங்களைப் பௌத்த மதத்தில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினாள். அறவண அடிகள் மாதவிக்கும் மணிமேகலைக்கும் திரிசரணம், பஞ்சசீலங்களைக் கொடுத்துப் பௌத்த மதத்தில் சேர்த்துக்கொண்டார். கடைசி முறையாகச் சித்திராபதி, வயந்தமாலை என்பவளை மாதவியிடம் அனுப்பி அரங்கமேடைக்கு வந்து ஆடல் நிகழ்த்துமாறு கேட்டாள். மாதவி கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

மாதவி தன் கருத்துக்கு இணங்காமற்போகவே, சித்திராபதி தன் பேர்த்தியாகிய மணிமேகலையை எப்படியாவது தன் வசப்படுத்தி அவளைக் கணிகையர் வாழ்க்கையில் புகுத்த வேண்டும் என்று முயன்றாள். சோழ அரசன் மகனான உதய குமரன், மணிமேகலையின் மேல் காதல்கொண்டிருப்பதை யறிந்து அவனிடஞ் சென்று மணிமேகலையைக் கைப்பற்றும்படி தூண்டினாள். ஒரு நாள் மாலை வேளையில் மணிமேகலை, சுதமதி என்பவளுடன் உவவனம் என்னும் பூஞ்சோலைக்குப் போனாள். அவள் அங்குச் சென்றதை யறிந்த உதயகுமரன் தன் தேரை ஓட்டிக்கொண்டு அங்கே போனான். அவன் வந்ததைக் கண்ட மணிமேகலை அவன் தன்னைக் கைப்பற்ற வந்திருக்கிறான் என்பதை அறிந்து அத்தோட்டத்தில் இருந்த புத்தபாத பீடிகையுள்ள பளிங்கறை மண்டபத்தில் போய் ஒளிந்து கொண்டாள். உதயகுமரன், பௌத்தர்களுடைய இத்தோட்டத்தில் தான் ஒன்றுஞ் செய்யக்கூடாது என்று எண்ணி அங்கே நின்றிருந்த சுதமதியிடம் சென்று, 'மணிமேகலை கணிகைக் குலப் பெண்; அவள் பௌத்த மதத்தில் சேர்ந்தாலும் நான் அவளை விடப் போவதில்லை; அவள் பாட்டி சித்திராபதியின் மூலமாக நான் அவளை அடைவேன்' என்று சொல்லிப் போய்விட்டான்.

அவன் போன பிறகு வெளியே வந்த மணிமேகலையிடம் சுதமதி அவன் சொல்லியவற்றைக் கூறினாள். இளம் பெண்ணாகிய மணிமேகலை, தன் மனமும் அவனை நாடுகிறது என்று சுதமதிக்குச் சொன்னாள். ஆனால், உதயகுமரனுடைய எண்ணம் அவளை மணஞ் செய்துகொள்வது அன்று. அவளைக் காமக் கிழத்தியாக, ஒரு விளையாட்டுக் கருவியாகப் பயன்படுத்துவதே

அவன் நோக்கம். மாதவியின் எண்ணமோ மணிமேகலையைக் கற்பொழுக்கமுள்ள குடும்ப வாழ்க்கையில் அமைக்கவேண்டும் என்பது. இதை மணிமேகலையும் நன்றாக அறிந்திருந்தாள்.

மணிமேகலையும் சுதமதியும் உவவனத் தோட்டத்தில் இதுபற்றி உரையாடிக்கொண்டிருந்தபோது அவ்விடம் வாசந்தவை என்னும் மூதாட்டி வந்தார். அவர் நகர மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர். அவர் மணிமேகலைத் தெய்வத்தின் அருள்பெற்றவர் என்று அவரை எல்லோரும் மதித்து அஞ்சிப் போற்றினர். வந்த அவ்வம்மையார் புத்த பாதபீடிகையை வணங்கிய பிறகு இவர்களை நோக்கி இங்கு ஏன் தனியே நிற்கிறீர்கள் என்று கேட்டார். அவர்கள் நடந்த செய்தியைச் சொல்லி, வெளியே போனால், உதயகுமரன் காத்திருந்து என்ன செய்வானோ என்று அஞ்சுகிறோம் என்று கூறினார்கள்.

அப்படியானால், தெருவழியே நீங்கள் போகவேண்டாம். இத்தோட்டத்தின் மேற்கேயுள்ள மதில் சுவர் பக்கமாகச் சென்றால் அங்கு ஒரு சிறு வாயில் உண்டு. அதனுள் நுழைந்து போனால் சக்கரவாளக் கோட்டம் உண்டு. அந்த வழியாகப் போய்ச் சேருங்கள் என்று கூறினாள். இதற்குள் இருள் வந்து விட்டது. ஆனால், நிலா வெளிச்சம் பால்போல் காய்ந்தது.

சுதமதி மூதாட்டியைக் கேட்டாள், ஊரார் சுடுகாட்டுக் கோட்டம் என்று கூறுகிறார்கள், நீங்கள் மட்டும் சக்கரவாளக்கோட்டம் என்று கூறுகிறீர்கள், இதன் காரணம் என்ன என்று. ‘சரி, உட்காருங்கள் சொல்லுகிறேன்’ என்று அம்மையார் மணலில் அமர்ந்தார். மணிமேகலையும் சுதமதியும் அருகில் அமர்ந்து அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். வாசந்தவை அம்மையார் சக்கரவாளக் கோட்டத்தைப் பற்றி நீண்டதோர் கதை கூறினார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த இரண்டு பெண்களும் அப்பூஞ்சோலைக் காற்றிலே நிலாவெளிச் சத்திலே உறங்கிவிட்டார்கள்.

நள்ளிரவில் சுதமதியை வாசந்தவை மூதாட்டி எழுப்பினார். கண்விழித்துப் பார்த்தபோது நள்ளிருளும் நிலாவெளிச்சமுமாக இருந்தது. அருகில் மணிமேகலை காணப்படவில்லை. அப் போது வாசந்தவை அம்மையார் சொன்னார்: ‘மணிமேகலை, மணிமேகலா தெய்வத்தின் கட்டளைப்படி மணிபல்லவஞ் சென்றிருக்கிறாள்; ஏழு நாள் கழித்து அவள் திரும்பி வருவாள்; இச்செய்தியை அவள் தாயான மாதவிக்குச் சொல்; மணிமேகலை பழம் பிறப்புக்களை அறிந்துகொண்டு சுகமாகத் திரும்பி வருவாள்; நீ இப்போது நான் முன்பு கூறிய வழியே சக்கரவாளக் கோட்டம் போ; அங்கு உலகவறவியில் பெரியோர் பலர் இருக்கிறார்கள்; அங்குத் தங்கி விடிந்த பிறகு மாதவியிடம் போய்

இச்செய்திகளைச் சொல்லு! நீ அஞ்சாதே, போ' என்று கூறினார். நம்பிக்கையுள்ள மூதாட்டியார் கூறியபடியே சுதமதி தோட்டத்தின் மேற்குச் சுவரிலிருந்த வாயிலில் நுழைந்து சக்கரவாளக்கோட்டத்து உலகவறவிக்குப் போனாள்.

சுமதியை அனுப்பிய பிறகு வாசந்தவையார் நேரே சோழனுடைய அரண்மனைக்குச் சென்றார். அவர், அரண்மனையில் அரச குடும்பத்தாருக்கும் அரண்மனைச் சேவகருக்கும் நன்கு பழக்கம் உள்ளவர் ஆகையால், அந்நள்ளிரவில் யாதொரு தடையுமில்லாமல் உள்ளே நுழைந்தார். அரசகுமாரனான உதயகுமரன் ஆசனத்தில் அமர்ந்து தூக்கமில்லாமல் இருந்தான். விளக்குகள் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. வாசந்தவை அம்மையாரைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டு எழுந்து வணங்கினான். அம்மையார், அவன் மாதவி மகள் மணிமேகலைமேல் கொண்டுள்ள எண்ணத்தை விட்டுவிடும்படியும் அரசகுமரனாகிய அவனுக்கு அச்செயல் தகாதது என்றும் அவனுடைய அரச குலத்துக்கு ஏற்றபடி உயர்ந்த ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது மணிமேகலா தெய்வத்தின் கட்டளை என்றும் கூறிப் போய்விட்டார்.

பொழுது விடிந்த பிறகு உலகவறவியில் இருந்த சுதமதி மாதவியிடஞ் சென்றாள். மணிமேகலையும் சுதமதியும் உவவனத்திலிருந்து திரும்பி வராதபடியால் மனங் கலங்கிக் கவலையோடிருந்த மாதவியிடத்தில், பூந்தோட்டத்தில் நேர்ந்தவைகளைச் சொல்லி, வாசந்தவையம்மையார், மணிமேகலையைப் பற்றிக் கூறிய செய்திகளையும் தெரிவித்தாள். மணிமேகலையின் பிரிவு அவளுக்கு மிக்க வருத்தத்தைத் தந்தது. ஆயினும் அவள் ஒருவாறு மனந்தேறினாள். வாசந்தவையார் நகர மக்களுக்கெல்லாம் தாய் போன்ற நல்லவர் ஆகையால் அவர் சம்பந்தப்பட்டுள்ள இச்செயலில் நன்மையைத் தவிர தீமை நேரிடாது என்னும் உறுதியான நம்பிக்கை மாதவியின் துயரத்தைப் போக்கியது.

மணிபல்லவத்திற்குக் கப்பலில் பௌத்தப் பிக்குணிகளால் அழைத்துப்போகப்பட்ட மணிமேகலை அங்கிருந்த புத்த பீடிகையைக் கண்டு வணங்கினாள். பௌத்த மதத்தில் முன்னையதைவிடத் திடமான நம்பிக்கையும் உறுதியுங்கொண்டாள். அங்குக் கிடைத்த அமுதசுரபி என்னும் அருமையான பாத்திரத்தைப் பெற்று அதனை எடுத்துக்கொண்டு மீண்டும் காவிரிப்பூம்பட்டினம் வந்து தன் அன்னையைக் கண்டு வணங்கித் தன் செய்திகளையெல்லாம் கூறினாள். பிறகு, மணிமேகலை தன் தாயுடனும் சுதமதியுடனும் அறவண அடிகள் இருந்த பௌத்தப் பள்ளிக்குச் சென்று அவரை வணங்கித் தான் மணிபல்லவஞ் சென்று பாதபீடிகையை

வணங்கியதும் அங்கு அமுதசுரபி பாத்திரங் கிடைத்ததும் ஆகிய செய்திகளைக் கூறினாள். அறவண அடிகள் அப்பாத்திரத்தின் பழைய செய்திகளைக் கூறி அப்பாத்திரத்தைக் கொண்டு நகரக் குடிமக்களிடத்தில் பிச்சை ஏற்று, ஏழை எளியவருக்கும் உணவு கொடுக்கும்படி ஆசி கூறினார். அதன்படியே மணிமேகலை பிச்சை ஏற்று வந்து உலகவறவி என்னும் இடத்தில் இருந்த குருடர், முடவர், வறுமையாளர் முதலியவருக்கும் உணவு கொடுத்து வந்தாள். இதனை யறிந்த நகரத்தார் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

காவிரிபூம்பட்டினத்தில் காயசண்டிகை என்னும் ஏழைப்பெண் ஒருத்தி நோயினால் வருந்திக்கொண்டு பிச்சை ஏற்றுப் பிழைத்து வந்தாள். அவள் வட நாட்டிலிருந்து வந்த பெண். அவளுடைய கணவன் எப்போதாவது ஆண்டுக்கொரு முறை காவிரிப்பூம்பட்டினம் வந்து அவளைப் பார்த்துவிட்டுப் போவான். காயசண்டிகை உருவத்திலும் உடல் அமைப்பிலும் மணிமேகலையைப் போலவே இருந்தாள். ஆனால், சற்றுக் கரு நிறம் உடையவள். அக்காயசண்டிகை, மணிமேகலையிடம் நாள் தோறும் உணவு பெற்று அருந்திக்கொண்டிருந்தாள்.

சித்திராபதி தன் பேர்த்தி மணிமேகலை பௌத்தப் பள்ளியில் ஏழை மக்களுக்கு உணவு கொடுத்து வருவதை அறிந்து, அவளை எப்படியாவது கணிகையர் தொழிலில் புகுத்த எண்ணி, அரண்மனைக்குச் சென்று உதயகுமரனைக் கண்டு, மணிமேகலையைத் தன்வசப்படுத்திக் கொள்ளும்படி தூண்டினாள். வாசந்தவை யம்மையார் அவனுக்கு அறிவுரை கூறியதிலிருந்து ஒருவாறு மணிமேகலையை மறந்திருந்த உதயகுமரனுக்குச் சித்திராபதி கூறியது ஊக்கம் அளித்தது. வாலிபனாகிய அவன் உள்ளம், மீண்டும் மணிமேகலையைப் பெற அவாவிற்று. அவன் ஒரு நாள் உலகவறவிக்குச் சென்று ஏழை மக்களுக்கு உணவு கொடுத்துக்கொண்டிருந்த மணிமேகலையிடஞ் சென்று அவளிடம் காதல் உரையாடினான். மணிமேகலை அவன் செயலைக் கண்டித்து அவனுக்கு அறவுரை கூறினாள். ஆனால், அவள் கூறிய அறவுரைகள் அவன் மனத்தில் ஏறவில்லை. அவன் அடிக்கடி அவளிடம் வரத்தலைப்பட்டான்.

மணிமேகலை உலகவறவியில் ஏழை எளியவருக்கு நாள்தோறும் உணவு கொடுத்து வருவதைச் சோழ அரசனான மாவண்கிள்ளி அறிந்தான். அவன் மணிமேகலையை யழைத்து அவள் செயலுக்கு மெச்சிப் புகழ்ந்து 'உனக்கு நாம் செய்ய வேண்டுவது என்ன?' என்று கேட்க, மணிமேகலை சிறைக் கோட்டக் கட்டிடத்தை அறக்கோட்டமாக்கவேண்டும் என்று கூறினாள். அரசன் அவள் சிறைக்கோட்டத்தை அவளுக்குக்

கொடுத்தான். அவள் அதைப் பௌத்த மதத்தாரிடம் ஒப்படைத்து அங்கு ஏழைகளுக்கு இலவச மருத்துவச்சாலையை ஏற்படுத்தினாள். அம்மருத்துவச்சாலையில் மருத்துவம் அறிந்த புத்த பிக்ஷுக்கள் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்து நோய் தீர்த்துக்கொண்டிருந்தனர்.

இளவரசனாகிய உதயகுமரன் அடிக்கடி தன்னிடம் வந்து உரையாடுவது மணிமேகலைக்கு மனத் துன்பத்தை உண்டாக்கியது. அவன் தன்னிடம் வருதைத் தடுக்க எண்ணி, தன் முகத்தைக் கருஞ்சாயம் பூசிக் காயசண்டிகைபோலக் காணப்பட்டாள். ஆனாலும், உதயகுமரன் ஒரு நாள் மாலையில் அவளிடம் வந்து உரையாடினான். அப்போது காயசண்டிகையின் கணவன், தன் மனைவியைக் காண வெளிநாட்டிலிருந்து வந்தவன், உலகவறவியில் வந்தான். மணிமேகலையிடம் உதயகுமரன் உரையாடிக்கொண்டிருப்பதை அவன் கண்டான். மணிமேகலையைத் தன் மனைவியான காயசண்டிகை என்று அவன் கருதிக்கொண்டான். தான் வந்திருப்பதையும் கவனியாமல் தன் மனைவியான காயசண்டிகை யாரோ புதிய இளைஞனிடம் பேசிக்கொண்டிருக்கிறாள் என்று அவன் எண்ணினான். காயசண்டிகையும் மணிமேகலையும் ஒரே உருவமாக இருந்தபடியாலும் மணிமேகலை கருஞ்சாயம் பூசிக்கொண்டிருந்தபடியாலும் அவன் அவளைத் தன் மனைவியான காயசண்டிகை என்றே கருதிக்கொண்டான். தன் மனைவியின் செயலைப்பற்றி மனம் கொதித்தான். அவளுடைய காதலனான அந்த வாலிபனை (அவன் அரசகுமாரன் என்பது அயல் நாட்டவனாகிய அவனுக்குத் தெரியாது) எப்படியாவது கொன்றுவிடுவது என்று வைரங்கொண்டான். கடுஞ்சினத்தோடு அவன் அன்றிரவு உலகவறவியண்டைப் பதுங்கியிருந்தான்.

மணிமேகலை வழக்கம்போல் உலகவறவிக்கு அருகில் இருந்த சம்பாபதி கோவிலில் அன்றிரவு தங்கியிருந்தாள். ஊர் துஞ்சும் நள்ளிரவு. அப்போது ஓர் உருவம் இருட்டில் அங்கு வருவது தெரிந்தது. அவ்வுருவம் சம்பாபதிக் கோவிலில் நுழைந்தது. மங்கலாக எரிந்துகொண்டிருந்த கோவில் விளக்கு வெளிச்சத்தில் வந்த உருவம் உதயகுமரன் என்பது தெரிந்தது. அவன் அறியாமல் இருட்டில் வேறு ஓர் உருவம் அவனைப் பின்தொடர்ந்து வந்தது. பின்தொடர்ந்து வந்த உருவம் காயசண்டிகையின் கணவன். அவன் தன் கையிலிருந்த வாளை ஓங்கி உதயகுமரனை வெட்டினான். ஓ என்ற கூச்சலுடன் உதயகுமரன் தரையில் விழுந்தான். வெட்டினவன் அவ்விடத்தைவிட்டு இருட்டில் மறைந்து போனான். மணிமேகலை, ஓ என்று எழுப்பிய கூச்சலைக் கேட்டுக் கோவிலிலிருந்து வெளிவந்தாள். அப்போது ஒரு குரல்,

கண்டிப்பான ஒலியில் 'நில், போகாதே' என்று கூறியது. அவள் அச்சத்தினாலும் மனக்குழப்பத்தினாலும் ஒன்றும் செய்ய முடியாமல் பேசவும் வாய்வராமல் நடுங்கினாள்.

பொழுது விடிந்தது. சம்பாபதியை வணங்குவதற்குக் காலையில் கோவிலுக்கு வந்தவர்கள் உதயகுமரன் இரத்த வெள்ளத்தில் விழுந்து இறந்துகிடப்பதையும் அருகில் இரத்தக் கறையுடன் வாள் கிடப்பதையும் கண்டார்கள். இச்செய்தி நகரம் முழுவதும் பரவியது. சம்பாபதி கோவில் பௌத்தக் கோவிலாகையால் பௌத்த பிக்ஷுக்கள் வந்து பார்த்து அரசனிடஞ் சென்று செய்தியைக் கூறினார்கள். உதயகுமரனை வெட்டியவன் யார் என்பது தெரியாமற்போனாலும் அரசகுமரன் செய்தது தகாத செயல் என்பது மட்டும் விளக்கமாகத் தெரிந்தது. அரசன், நடந்த நிகழ்ச்சியை ஆய்ந்தறிந்து, இறந்த மகனை அடக்கஞ் செய்யும்படியும், மணிமேகலைக்கு மக்கள் துன்பஞ் செய்யாதபடி அவளைக் காவலில் வைக்கவும் கட்டளையிட்டான்.

இராசமாதேவி தன் மகனான உதயகுமரன் இறந்ததற்குக் காரணமாக இருந்தவள் மணிமேகலையே என்று கருதி அவளைப் பழிவாங்கவேண்டுமென்று எண்ணினாள். சில நாட்களுக்குப் பிறகு அரசி, மணிமேகலையைத் தன்னிடம் ஒப்பிக்கும்படி அரசனைக் கேட்டாள். அரசன் அவளை அரசியினிடம் அனுப்பினான். அரசி அவளிடம் அன்புள்ளவள் போல நடித்து அவளுக்குத் தீங்குகளைச் செய்தாள். ஆனால், மணிமேகலை, அரசி செய்த பெரிய தீங்கிலிருந்து தப்பினாள்.

மணிமேகலை, சோழமாதேவியின் பாதுகாப்பிலிருப்பதையறிந்து பாட்டியாகிய சித்திராபதி அவளைத் தன்னிடம் மீட்டுக்கொள்ள எண்ணி மணிமேகலையைத் தன்னிடஞ் சேர்ப்பிக்கும்படி அரசியைக் கேட்டாள். இதனை யறிந்த மாதவி திடுக்கிட்டு வருந்தினாள். தன் மகள் மணிமேகலை சித்திராபதியிடஞ் சென்றால் அவளை அவள் கணிகைத் தொழிலுக்குப் பழக்கி விடுவாள்; ஆகவே அவளைச் சித்திராபதியிடஞ் செல்லாமல் மீட்டுக்கொள்ளவேண்டும்; அவளை மீட்டுக் கொடுப்பதற்கு அறவண அடிகள் ஒருவரால்தான் முடியும் என்று கருதிய மாதவி, சுதமதியுடன் அறவண அடிகளிடம் சென்று வணங்கிச் செய்தியைத் தெரிவித்தாள். உடனே அடிகள் புறப்பட்டு அரண்மனைக்கு வந்தார். இராசமாதேவியார் அடிகளை வணங்கி ஆசனத்தில் இருத்தினார்.

அறவண அடிகள், மணிமேகலையை மாதவியிடம் அனுப்பும்படி அரசியிடங் கூறினார். அப்பெரியவரின் வார்த்தையை மறுக்காமல் இராசமாதேவியார் அவ்விதமே அவளை

மாதவியுடன் அனுப்பினார். அரசகுமரனின் கொலைக்குக் காரணமாக இருந்தவள் என்று மணிமேகலைமேல் நாட்டு மக்கள் பழிச்சொல் கூறினார்கள். ஆகவே, அவளை வெளியூருக்குச் சில காலம் அனுப்பிவைப்பதென்று தீர்மானித்து, பௌத்த மதம் பரவியிருந்த சாவகத்தீவுக்குப் போய்ச் சிலகாலம் இருந்து பிறகு திரும்பிவருமாறு ஏற்பாடு செய்து அவளைச் சாவகத் தீவுக்கு அனுப்பினார்கள். அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத் துக்கும் சாவகத்தீவுக்கும் கப்பல் வாணிகம் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. தமிழ்நாட்டிலிருந்து வாணிகக் கப்பல்கள் அடிக்கடி சாவகநாடு சென்று வந்தன. அக்கப்பல்கள் ஒன்றில் மணிமேகலை சாவகம் சென்றாள்.

சில காலத்துக்குப் பிறகு காவிரிப்பூம்பட்டினத்தில் புயல் அடித்து அப்பட்டினம் வெள்ளத்தில் மூழ்கியது. கடல் கொந்தளிப்பும் காற்று மழையும் ஏற்பட்டுக் காவிரியாற்றில் வெள்ளம் புரண்டு வந்து நகரத்தில் புகுந்தது. நகர மக்கள் உயிர் தப்பி ஓடினார்கள். சோழ அரசன் குடும்பத்துடன் உறையூருக்குப் போய் விட்டான். அறவணவடிகளும் மாதவி, சுதமதி முதலியவர்களுடன் காஞ்சிபுரத்துக்குப் போய்விட்டார். நகர மக்கள் வெவ் வேறிடங்களுக்குப் போனார்கள்.

சாவகத்தீவுக்குப் போன மணிமேகலை அங்கு வீடுகள் தோறும் பிச்சை ஏற்று ஏழை எளியவர்களுக்கு உணவு கொடுத்துப் பௌத்த மதப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தாள். சில காலங் கழித்து மணிமேகலை மீண்டும் காவிரிப்பூம்பட்டினத் துக்குத் திரும்பிவந்தாள். வரும் வழியில் கப்பல் மணிபல்லவத்தில் தங்கியது. அங்குக் காவிரிப்பூம்பட்டினம் வெள்ளத்தில் முழுகியதையும் அறவணஅடிகளும் மாதவியும் அந்நகரத்தை விட்டுப் போய்விட்டதையும் சேர நாட்டு வஞ்சிமா நகரத்தில் சேர அரசன் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்ததையும் கேள்விப்பட்டாள். ஆகவே, அவள் அங்கிருந்து வஞ்சிமா நகரஞ் சென்றாள்.

வஞ்சிமா நகரஞ் சென்ற மணிமேகலை, கண்ணகியின் கோட்டத்துக்குச் சென்று வணங்கினாள். பிறகு கோவலன் தந்தையான மாசாத்துவான் பௌத்தப் பிக்குவாய் இருப்பதைத் தற்செயலாகக் கண்டு அவரை வணங்கினாள். அவர், அறவண அடிகளும் மாதவியும் காஞ்சீபுரத்தில் இருப்பதைக் கூறினார். மணிமேகலை வஞ்சிமா நகரத்தில் இருந்த பல சமயவாதி களையும் கண்டு அவர்களிடம் அந்தந்தச் சமயங்களின் கொள்கை களைக் கேட்டறிந்தாள். பிறகு, அங்கிருந்து காஞ்சீபுரம் வந்து அறவண அடிகளையும் மாதவியையும் வணங்கி, அவர்களுடன் தங்கியிருந்து சமய ஊழியமும் மக்களுக்குத் தொண்டும் செய்து கொண்டிருந்தாள். இதுதான் மணிமேகலையின் வரலாற்றுச் செய்தி.

***மணிமேகலை* (நூல்)**

இந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு கூலவாணிகன் சாத்தனார் *மணிமேகலை* என்னும் காவியத்தை இயற்றினார். பௌத்த மதச் சார்பான இந்த நிகழ்ச்சிகள் பௌத்தராகிய இவருக்கு உகந்ததாக இருந்தன. ஆகவே, பௌத்த மதக் கொள்கைகளை இந்த வரலாற்று நிகழ்ச்சிகளுடன் இணைத்துப் பௌத்த மதக் கற்பனைகளையும் பொருத்திப் புகுத்தியிருக்கிறார். அதனோடு, பௌத்த மதப் பிரசாரத்துக்காகவும் இந்நூலைப் பயன்படுத் திக்கொண்டார். பௌத்த மதக் கொள்கைகளை அந்தந்த நாட்டுத் தாய்மொழியில் எல்லோருக்கும் விளங்கும்படி எளிதாகக் கூறவேண்டும் என்பது பகவன் புத்தருடைய கட்டளை. பௌத்த மதத்தார் இக்கட்டளையைப் பொன் போலப் போற்றினார்கள். இந்தக் கட்டளையைப் பின்பற்றித்தான் சாத்தனாரும் இக்காவியத்தை எளிய நடையில் எல்லோருக்கும் விளங்கும்படி யாகவும் அதே சமயத்தில் மதப் பிரசாரத்தின் பொருட்டும் இயற்றினார்.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் அக்காவியத் தைக் கலைக்காகவே, கலைஞருக்காகவே இயற்றினார். *மணிமேகலையை* இயற்றிய சாத்தனார் அக்காவியத்தைப் பௌத்த மதப் பிரசாரத்துக்காகவே இயற்றினார். இவைதான் *சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்கும்* உள்ள வேறுபாடுகள்.

மேலும், சாத்தனார் தமிழ் மொழியை மட்டுங் கற்றவரல்லர். அக்காலத்து பௌத்த மத வழக்கப்படி பௌத்த மதத்தின் 'தெய்வ மொழி'யாகிய பாலி மொழியை நன்கு கற்றவர். வட மொழியையும் அறிந்தவர். பௌத்த மதத்தை மேற்கொண்டிருந் தவர். இந்தச் சூழ்நிலைகள் எல்லாம் இவர் இயற்றிய *மணிமேகலை* யில் இடம் பெற்றுள்ளன. பாலி, வடமொழிகளைக் கற்றிருந்த படியால், பிராகிருத மொழிச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும் பௌத்த மதச் சம்பிரதாயச் சொற்களையும் அவர் இந்நூலில் வழங்கும்படி செய்துவிட்டார். அதே சமயத் தில் பிரசார நோக்கத்தோடு பண்டித நடையை மேற்கொள்ளா மல் எளிய நடையைக் கையாண்டார்.

இளங்கோ அடிகளும் தாம் மேற்கொண்ட சமண சமயத்துக்கு ஏற்ப பிராகிருத பாஷையையும் வட மொழியையும் கற்றவராக இருந்தும், கலையின் பொருட்டே *சிலப்பதிகாரக்* காவியத்தை இயற்றியபடியால், அவருடைய நூலில் அதிகமாகப் பிராகிருத, வடமொழிச் சொற்கள் காணப்படவில்லை. ஆனால், அக்காலத்து ஏனைய தமிழ் நூல்களைவிட இவர் நூலில் அதிக பிராகிருத, வடமொழிச் சொற்கள் அமைந்து இருக்கின்றன.

பௌத்த மதப் பிக்குகளும் சமண சமயத் துறவிகளும் தங்கள் தவ வலிமையினால் சித்தி (*ரித்தி*) பெற்று, தாங்கள் நினைக்கிற இடங்களுக்கு ஆகாய வழியாகப் பறந்து போனதாக அந்த மத நூல்கள் கூறுகின்றன. இது அந்த மதங்களின் நம்பிக்கைகளில் ஒன்று. பௌத்த மத, சமண மத நூல்களில் இவைகளைக் காணலாம். இந்தக் கருத்தைச் சமண, பௌத்த சமயத்தவராகிய இளங்கோ அடிகளும் சாத்தனாரும் தங்கள் காவியங்களில் புகுத்தியிருக்கிறார்கள். சமண முனிவராகிய சாரணர்களும் பௌத்தத் துறவிகளாகிய தேரர்களும் ஆகாய வழியில் பறந்துபோனார்கள் என்று இவர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும், மறுபிறப்பைப் பற்றிப் பௌத்தர்களும் சமணர்களும் அதிக ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்கள். அவர்களின் சமய நூல்களில் மறுபிறப்புக் கதைகளை அதிகமாகக் காணலாம். ஆகவே, சாத்தனாரும் இளங்கோ அடிகளும் தங்கள் நூல்களில் மறுபிறப்பைப் பற்றி அதிகமாகக் கூறியுள்ளனர். *மணிமேகலைக்* காவியத்தின் தலைவியாகிய மணிமேகலை, மணிமேகலா தெய்வத்தின் வரம் பெற்று ஆகாய வழியே பறந்து சென்றாள் என்றும் விரும்பியபடி எல்லாம் உருவத்தை மாற்றிக் கொண்டாள் என்றும் கற்பித்திருக்கிறார். அமுதசுரபி பாத்திரம், எடுக்களடுக்கக் குறையாமல் உணவைத் தானாகவே சுரந்து கொண்டிருந்தது என்றும், தூண்களில் இருந்த பாவைகள் பேசின என்றும், மணிமேகலா தெய்வத்தின் சாபத்தினால் காவிரிப்பூம்பட்டினம் வெள்ளத்தினால் அழிந்தது என்றும் பல கற்பனைகள் இக்காவியத்தில் இடம் பெற்றுள்ளன. காவிய நூலுக்குக் கற்பனைகள் அவசியம் தேவை. கற்பனைகளும் உவமைகளும் இல்லாத காவியம் சுவைபடாது. வியப்புச் சுவைக்காகக் கற்பனைகள் காவிய நூல்களுக்குத் தேவை. ஆகவே, காவிய நூல்களை இயற்றின சாத்தனாரும் இளங்கோ அடிகளும் தங்கள் காவியங்களில் கற்பனைகளைப் புகுத்தியுள்ளனர். சரித்திர ஆராய்ச்சிக்காரர் கற்பனைகளை ஒதுக்கிவிட்டுச் சரித்திர நிகழ்ச்சிகளை மட்டும் கொள்ளவேண்டும். அமாநுஷிகமான நம்பத்தகாதவை என்று அடியோடு ஒதுக்கித் தள்ளுவது கூடாது.

அசோகச் சக்கரவர்த்தி காலத்தில், அவருடைய உறவினரான மகேந்திரர் பௌத்த மதத்தை இலங்கையில் பிரசாரஞ் செய்வதற்காக அனுப்பப்பட்டார். அவர் இலங்கைக்குச் சென்று அங்குப் பௌத்த மதத்தை நிறுவினார். வடஇந்தியாவிலிருந்து மகேந்திரர் இலங்கைக்குச் சென்றது கடலில் கப்பல்வழியாகத் தான். ஆனால், இந்தச் செய்தியைக் கூறுகிற *மகாவம்சம்* என்னும் பௌத்த மத நூல், மகேந்திரர் ஆகாயவழியாகப் பறந்து இலங்கைக்கு வந்தார் என்று கூறுகிறது. 'இது அமானுஷிகச்

செயல்; இதை ஒப்புக்கொள்ள முடியாது; மகேந்திரர் என்று ஒரு ஆள் இருந்தது பொய்' என்று சரித்திரக்காரர் யாவரும் இவரை ஒதுக்கிவிடவில்லை. மகேந்திரர் இலங்கைக்குச் சென்று அங்குப் பௌத்த மதத்தைப் பரப்பினார் என்றுதான் சரித்திரம் எழுதியிருக்கிறார்கள். சரித்திரப் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியும் பி.டி. சீனிவாச ஐயங்காரும் வையாபுரிப் பிள்ளையும் போன்ற சரித்திர ஆசிரியரும் ஆராய்ச்சிக்காரரும் இதைச் சரித்திர உண்மை என்றுதான் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்களே தமிழ் நூல்களை ஆராயும்போது, கற்பனைகளை நீக்கி வரலாற்றை மட்டுங் கொள்ளாமல் *மணிமேகலையும் சிலப்பதிகாரமும்* கட்டுக்கதைகள் என்று கூறுகிறார்கள். *பாரத, இராமாயணக்* கதைகளைக் கட்டுக்கதை என்று ஒதுக்காமல் சரித்திரங்கள் என்று கொள்ளுகிற இந்த அறிஞர்கள், இந்தத் தமிழ் நூல்களை மட்டும் கட்டுக்கதைகள் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். ஏன் மற்ற நூல்களுக்கு ஒரு நீதியும் தமிழ் நூல்களுக்கு ஒரு அநீதியும் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. சரித்திரக்காரர்களுக்கும் ஆராய்ச்சிக்காரருக்கும் துவேஷபுத்தியும் விருப்பு வெறுப்பும் இருக்கக்கூடாது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும், அவற்றிலுள்ள கற்பனைகளைக் களைந்துவிட்டால், அவற்றில் கூறப்படும் நிகழ்ச்சிகள் உண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளே என்பது விளங்கும். சங்க காலத்துச் சமுதாய நிலை, அக்காலத்துப் பழக்க வழக்கங்கள், அரசியல் நிலை, கலை பண்பாடு முதலியவைகளை ஆராய்வதற்கு *மணிமேகலையும் சிலப்பதிகாரமும்* பெருந் துணையாக இருக்கின்றன. கற்பனைகளையும் உவமைகளையும் களைந்து சரித்திர நிகழ்ச்சிகளை மற்றச் சான்றுகளோடு ஒத்திட்டுப் பார்த்து, ஏற்கத்தக்கவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், கட்டுக்கதை என்று அடியோடு ஒதுக்குவது கூடாது. மற்றக் காவிய நூல்களிலுள்ள சரித்திரங்களை எவ்வாறு பயன்படுத்திக்கொள்கிறோமோ அவ்வாறே இந்தக் காவியங்களையும் சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சாத்தனார் காலம்

மணிமேகலை காவியத்தில் அதிக வடசொற்கள் ஆளப்பட்டிருப்பதைக்கொண்டு அந்நூலை இயற்றிய சாத்தனார் சங்க காலத்தில் இருந்தவர் அல்லர் என்றும் அவர் மிகப் பிற்காலத்தில் இருந்தவர் என்றும் சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். திரு. சிவராச பிள்ளை, வையாபுரிப்பிள்ளை, மு. இராகவையங்கார், பி.டி. சீநிவாச ஐயங்கார் போன்றவர்கள் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். சரியானபடி விஷயத்தை

உணர்ந்துகொள்ளாமலே வெறும் சொல்லை மட்டும் ஆதார மாகக் கொண்டு முற்காலம், பிற்காலம் என்று வரையறுப்பது சரியான ஆராய்ச்சி ஆகாது (சொல் ஆராய்ச்சி ஓரளவுதான் பயன் படும்). வேறு சான்றுகள் இருக்கும்போது அவைகளை யெல்லாம் பயன்படுத்தாமல், வெறும் சொல்லைக் காட்டிக் காலங் கணிப்பது தவறான முடிவுக்குக் கொண்டு போய்விடும். இதற்குச் சான்றாக ஒன்றைக் காட்டுவோம்.

அரசர் போர்க்களத்தில் போய்ப் போர் செய்து மார்பில் புண்தழும்பு (விழுப்புண்) படாமல் இறந்து போவார்களானால், அவர்களை அடக்கஞ் செய்வதற்கு முன்பு, தருப்பைப்புல்லில் கிடத்திப் பிராமணர் கத்தியால் மார்பில் வெட்டிப் புண் உண்டாக்கிப் பிறகு அடக்கம் செய்யும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது. இந்த வழக்கத்தைச் சங்க காலத்தில் இருந்த ஔவையாரும் அவர் காலத்திலிருந்த கூலவாணிகன் சாத்த னாரும் கூறியுள்ளனர்.

அதிகமான் நெடுமான் அஞ்சியின் தகடூரின்மேல் பெருஞ் சேரலாதன் படையெடுத்து வந்து போர் செய்தான். அந்தப் போரில் நெடுமான் அஞ்சி மார்பில் புண்பட்டான். அதனைக் கண்ட ஔவையார், அவன் விழுப்புண் பட்டதைச் சிறப்பித்துப் பாடினார் (*புறம்* 93). அந்த பாட்டில், விழுப்புண் பெறாமல் இறந்தவர் தருப்பையில் கிடத்தி மார்பை வெட்டப்படுவர் என்பதைக் குறிப்பிடுகிறார்.

அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வழிச் செல்கென
வாள் போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ

(*புறம்* 93 : 7-11)

என்று அவர் கூறியுள்ளார்.

இதே செய்தியைக் கூலவாணிகன் சாத்தனாரும் தமது *மணிமேகலை* நூலில் கூறுகிறார். *மணிமேகலை* சிறை விடுகாதையில்,

கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச்
செற்ற தெவ்வர் தேஎந்தம தாக்கியும்
தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து
செருப்புகல் மன்னர் செல்வுழிச் செல்கென
மூத்து விளிதல்இக் குடிப்பிறந் தோர்க்கு
நாப்புடை பெயராது தாணுத்தக வுடைத்தே

(*மணி.* 23 : 11-16)

இச்செய்யுள்களில் ஔவையார் தர்ப்பைப்புல்லைப் பசும்புல் என்றும் சாத்தனார் தருப்பை என்றும் கூறியுள்ளனர். இதைச் சுட்டிக்காட்டி திரு. பி.டி. சீநிவாச அய்யங்கார், புல் என்னுஞ் சொல்லையாளும் ஔவையார் காலத்தினால் முந்தியவர் என்றும் தருப்பை என்னும் வடமொழிச் சொல்லை யாளுகிற சாத்தனார் காலத்தினால் பிற்பட்டவர் என்றும் தாம் எழுதிய *தமிழர் சரித்திரத்தில்* கூறியிருக்கிறார் (P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, 1929, pp.480-481). மேற்போக்காகப் பார்க்கிறவர்களுக்கு இது உண்மை போலத் தோன்றும். ஆனால், இது உண்மைக்கு மாறான தவறுள்ள முடிவு. வெறுஞ் சொல்லை மட்டும் ஆராய்ந்து முடிவுகட்டுவது, வழுக்கு நிலத்தில் சருக்கி விழுவது போன்ற ஆபத்தானதாகும்.

முறைப்படி நேர்மையாக ஆராய்ந்து பார்த்தால், ஔவையாரும் சாத்தனாரும் சம காலத்தில், சங்க காலத்தில் வாழ்ந்திருந்தவர் என்பது தெரிகிறது. ஔவையார், தகடூர் அரசன் அதிகமான் நெடுமான் அஞ்சியால் ஆதரிக்கப் பெற்றவர். தகடூரின் மேல் பெருஞ்சேரலிரும்பொறை படையெடுத்து வந்தபோது அப்போரில் நெடுமான் அஞ்சி புண்பட்டதை நேரில் கண்டு பாடினவர். தகடூர்ப் போர் செய்த பெருஞ் சேரலிரும்பொறை, சேரன் செங்குட்டுவனுடைய தாயாதியண்ணன். செங்குட்டுவனுக்கும் அவன் தம்பியாகிய இளங்கோவடிகளுக்கும் சாத்தனார் நெருங்கிய நண்பர். எனவே, ஔவையாரும் சாத்தனாரும் இளங்கோவடிகளும் செங்குட்டுவனும் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறையும் அதிகமான் நெடுமான் அஞ்சியும் சமகாலத்தில் இருந்தவர் என்பது தெளிவான ஆராய்ச்சி காட்டும் முடிவு. ஆனால், பி.டி. சீநிவாச ஐயங்கார் தருப்பை, புல் என்னும் சொல்லாராய்ச்சியில் புகுந்து சருக்கி விழுந்து இரு புலவரும் (ஔவையாரும் சாத்தனாரும்) வெவ்வேறு காலத்திலிருந்தவர் என்று முடிவு கட்டுகிறார். சொல்லாராய்ச்சி எவ்வளவு ஆபத்தானது பாருங்கள்.

நம்முடைய கண்ணெதிரிலே இக்காலத்தில் சிலர் திங்கள் என்னும் சொல்லையும் சிலர் மாதம் என்னும் சொல்லையும் வழங்கி வருவதைப் பார்க்கிறோம். இவ்வாறு வழங்கும் இச்சொற்களை எடுத்துக்கொண்டு காலத்தை ஆராய்ந்து பார்த்தால், சீநிவாச அய்யங்காரின் ஆராய்ச்சிப்படி, திங்கள் என்னும் சொல்லை வழங்குகின்றவர் முற்காலத்தில் இருந்தவர் என்றும் மாதம் என்னும் சொல்லை வழங்குகிறவர் பிற்காலத்தில் இருந்தவர் என்றும் முடிவு கட்டவேண்டும். அப்படிக் கூறுவது, அய்யங்கார் வழுக்கி விழுந்தது போன்ற தவறான முடிவாகும். ஏனென்றால், இச்சொற்களை யெல்லாம் வழங்குகிறவர்கள் நம் காலத்தில் வாழ்கிறவர்களே.

சமீபகாலத்தில் இருந்த மறைமலை அடிகளும் வடுவூர் துரைசாமி அய்யங்காரும் சம காலத்தில் இருந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களுடைய நூல் நடையைக்கொண்டு அவர்கள் காலத்தை, சீநிவாச அய்யங்கார் ஆராய்ச்சியைப் பின்பற்றி ஆராய்ந்து மறைமலையடிகள் சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவர், துரைசாமி அய்யங்கார் சில நூற்றாண்டு களுக்குப் பின் இருந்தவர் என்று முடிவு கட்டினால் அது உண்மைக்கு மாறுபட்ட தவறான முடிவாகும் அல்லவா?

சீநிவாச அய்யங்காரின் இத்தகைய சொல்லாராய்ச்சி ஏற்கத் தக்கதன்று. காலத்தை ஆராய்வதற்கு வேறு நல்ல சான்றுகளைக் கைக்கொண்டு ஆராயாமல், வழுக்கி விழச் செய்கிற சொல் லாராய்ச்சியைக் கொள்வது இவ்வாறு பிழைபட்ட முடிவுக்குத் தான் கொண்டுபோய்விடும். வையாபுரிப்பிள்ளை போன்ற வேறு சில ஆராய்ச்சிக்காரர்களும் நல்ல சான்றுகளை விட்டுவிட்டுச் சொற்களை மட்டும் ஆராய்ந்து இலக்கியக் காலத்தைத் தவறாக முடிவு கட்டியுள்ளனர்.

ஔவையாரும் சாத்தனாரும் புல், தருப்பை என்னும் சொற்களைக் கையாண்டதற்கு வேறு தக்க காரணம் உண்டு. அதுவென்னவென்றால், ஔவையார் தமிழை மட்டும் கற்றுத் தமிழ் மரபு வழுவாமல் நூல் இயற்றியவர். சாத்தனாரோ, பௌத்த மத்தைத் தழுவிய தமிழர். அவர் தமிழுடன், அக்காலத்துப் பௌத்தரின் வழக்கப்படி பாலி மொழியையும் அதனுடன் சமஸ்கிருத மொழியையும் கற்றவர். அன்றியும், பழைய முறையைக் கடந்து தமிழ் இலக்கியத்தில் காவியம் இயற் றும் புதிய மரபை யுண்டாக்கியவர் (இவர் காலத்திலேயே இவரு டைய நண்பரான இளங்கோவடிகள் *சிலப்பதிகாரக்* காவியத்தை இயற்றினார்). தமிழில், காவியம் இல்லாத காலத்தில், முதன் முதலாகச் சாத்தனாரே *மணிமேகலைக்* காவியத்தை இயற்றி னார். வெறுங் காவியத்தை மட்டும் இயற்றுவது சாத்தனாரின் நோக்கம் அன்று. அதில் பௌத்த மதப் பிரசாரத்தையும் கருதி எல்லோருக்கும் விளங்கவேண்டு மென்னும் நோக்கத்தோடு எளிய நடையிலும் *மணிமேகலையை* இயற்றினார்.

புல், தருப்பை என்னும் சொற்களை ஔவையாரும் சாத்த னாரும் கையாண்டதன் உண்மை இதுவாகும். புல் என்பதைவிட தருப்பை என்று கூறினால் எளிதில் கருதப்பட்ட பொருள் இனிது விளங்கும். சீநிவாச அய்யங்கார் கூறுவதுபோல முற் காலம், பிற்காலம் என்னும் வேறுபாட்டினால் அன்று. எனவே, ஔவையாரைப் போலவே, *மணிமேகலையை* இயற்றிய சாத்தனாரும் சங்க காலத்தில் இருந்தவரே.

வடமொழிக் கலப்பு

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பதை எடுத்துக்காட்டி இவ்விரு காவியங்களும் சங்க காலத்துக் காவியங்கள் அல்ல, பிற்காலத்தவை என்று வையாபுரிப்பிள்ளை, நீலகண்ட சாஸ்திரி போன்ற சிலர் கூறுகின்றனர். இவர்கள் கூறுவது மேற்பார்வைக்கு உண்மைபோலத் தோன்றுகிறது. *அகநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, ஐங்குறுநூறு,* பதிற்றுப்பத்து முதலிய சங்க இலக்கியங்களுக்கும் *மணிமேகலை, சிலப்பதிகார* நூல்களுக்கும் மொழிநடையில் அதிக வேற்றுமை காணப்படுகின்றன என்பதும் *மணிமேகலை, சிலப்பதிகாரக்* காவியங்களில் பிராகிருதச் சொற்களும் வடமொழிச் சொற்களும் அதிகமாகக் காணப்படுகின்றன என்பதும் உண்மை தான். இக்காரணம் பற்றி இவர்கள் கூறுவதுபோல, இந்நூல்கள் பிற்கால நூல்கள் என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

சொற்களை மட்டுங் கொண்டு ஆராய்ந்து காலங் கணிப்பது வழுக்கு நிலத்தில் போய்ச் சருக்கி விழுவதற்குச் சமானமாகும் என்று முன்னமே கூறினோம். சரித்திரத்தைத் துணையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், வையாபுரியார்களின் முடிவு கள் பெருந் தவறுடையன என்பது தெரியும்.

கடைச்சங்க காலத்திலே பௌத்த மதமும் ஜைன (சமண) மதமும் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டன. கி.மு. மூன்றாம் நூற் றாண்டில் இருந்த அசோகச் சக்கரவர்த்தியின் சாசனங்களில் இரண்டு சாசனங்கள், அவர் காலத்தில் பௌத்த மதத்துப் பிக்குகள் தமிழ்நாட்டுக்கு வந்ததைத் திட்டமாகக் கூறுகின்றன. அசோகச் சக்கரவர்த்தியுடைய பாட்டனான சந்திரகுப்த மௌரியன் காலத்தில் சமண மதத் (ஜைன மதத்) துறவிகள் தமிழ் நாட்டுக்கு வந்த செய்தியையும் சரித்திரத்தினால் அறிகிறோம். இந்த வரலாற்று உண்மையில் சிறிதும் ஐயமில்லை.

கடைச்சங்க காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டோடு முடி வடைகிறது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அசோகச் சக்கரவர்த்தி காலமாகிய கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கடைச்சங்க இறுதிக் காலமாகிய கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில், அதாவது ஏறத்தாழ 500 ஆண்டுக்காலம், சங்ககாலத் தமிழகத்தில் பௌத்த, ஜைன மதங்கள் வாழ்ந்திருக்கின்றன. அந்த 500 ஆண்டுகளாக அந்த மதத்தவர் தங்கள் மதக் கொள்கை களை மக்களுக்குப் போதித்துக் கொண்டுதான் இருந்திருப் பார்கள். அத்தனை நூற்றாண்டுக் காலம் அவர்கள் வாளா இருந்திருக்கமாட்டார்கள். ஏனென்றால், பௌத்தப் பிக்குகளும்

சமணத் துறவிகளும் தங்கள்தங்கள் மதக் கொள்கைகளை நாடெங்கும் பரவச் செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தவர்கள். அதையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்கள். ஆகவே, அவர்கள் தங்கள் மதக் கொள்கை களைச் சங்க காலத் தமிழகத்தில் பிரசாரஞ் செய்து கொண்டு தான் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. வையாபுரியார் கருதுவதுபோல, அல்லது அவர் நம்மைக் கருதச் செய்வதுபோல, கி.மு. 3ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்கு வந்த பௌத்த சமணர்கள் 'சங்க காலம் போகட்டும், பிறமொழிக் கலப்புக் காலம் வரட்டும்' என்று வாளா இருந்திருக்கமாட்டார்கள். அவர்கள் வந்த காலம் முதற்கொண்டே தங்கள் மதப் பிரசார வேலையைத் தொடங்கினார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை. அவ்வாறு மதப் பிரசாரம் செய்யப்பட்டபோது அவர்களுடைய தெய்வ பாஷையாகிய பாலி மொழியும் அர்த்தமாகதி மொழியும் சங்க காலத் தமிழிலும் கலக்கத்தானே செய்திருக்கும்? பாலி மொழியிலே பௌத்த மத நூல்களும் அர்த்தமாகதி (சூரசேனி) மொழியிலே ஜைன சமய நூல்களும் எழுதப்பட்டிருந்த படியினாலே, அந்த மொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு மத போதனை செய்தபோது, அம்மொழி, நாட்டு மொழியில் கலக்கத்தானே செய்யும்? அதைத் தடுக்க முடியுமா?

தமிழ் மொழி இன்றுள்ளதுபோலவே அன்றும் பேச்சு வழக்கில் இருந்த மொழி. பேச்சு வழக்கில் இருக்கும் மொழிகள், மதங்களின் தொடர்பினாலோ வாணிகத் தொடர்பினாலோ பிற மொழியினருடன் பழகும்போது பிற மொழிச் சொற்கள், பேச்சு மொழியில் கலந்துவிடுவது இயற்கை. இந்த இயற்கையைத் தடுக்க முடியாது. ஆனால், கட்டுப்பாட்டுக்கு அடங்கி வரம்பு மீறாதபடி பார்த்துக்கொள்வது மொழிப் பற்றுள்ளவரின் கடமை. அதை அக்காலத்துத் தமிழர் செய்திருக்கிறார்கள். ஆனால், அடியோடு பிற மொழிச் சொற்களைக் கலக்காமல் இருக்கச் செய்ய முடியாது. பேச்சு வழக்கற்றுப்போன ஏட்டு மொழிகளிலேயும் பிற மொழிச் சொற்கலப்பு ஏற்படுகிறது என்றால், பேச்சு வழக்கில் உள்ள மொழிகளில் பிற மொழிச் சொற்கள் கலப்பதைத் தடுக்க இயலுமோ? ஆகவே, சங்க காலத் தமிழகத்திலேயும் பிற மொழிக் கலப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது, வையாபுரியார்கள் கூறுவது போலக் 'கலப்புக் காலம்' வரட்டும் என்று காத்துக் கொண்டிருந்து, சில நூற்றாண்டுகள் கழிந்த பிறகு பிற மொழிக் கலப்பு நுழையவில்லை.

ஆனால், மேலே கூறியபடி, சங்கத் தொகை நூற்செய்யுள் களில் பிற மொழிக் கலப்பு வெகு குறைவாகவும் *மணிமேகலை*, *சிலப்பதிகாரக்* காவியங்களில் கலப்பு அதிகமாகவும் இருப்

பதைக் காண்கிறோம். தொகை நூல்களில் பிற மொழிச் சொற்கள் மிகக் குறைவாக இருப்பதன் காரணம் என்ன வென்றால், அச்செய்யுட்கள் பிற மொழிச் சொற்கள் இல்லாமலே தாய்மொழியிலேயே கருத்துக்களைத் தெரிவிக்கும் விஷயங் களைக் கொண்டவை. மேலும், பிற மொழிகளைக் கற்காமல் தாய்மொழியை மட்டும் கற்றவர்களால் பாடப்பெற்றவை. *மணிமேகலை, சிலப்பதிகார* நூல்கள் அவ்வாறில்லாமல் பிற மதச் சார்புள்ள கருத்துக்களைக் கூறவேண்டியிருந்தபடியாலும் புதுமைக் கருத்துக்களைக் கூறவேண்டியிருந்தபடியாலும், இந்நூல்களில் பிராகிருத மொழிச் சொற்களும் வடமொழிச் சொற்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இதுவே, வரலாற்று முறைப்படி நாம் அறியக் கிடக்கும் உண்மை.

எனவே, வையாபுரியார்கள் கூறுவதுபோல, சங்ககாலம் கழிந்து வேறு காலம் வந்தபிறகு இயற்றப்பட்ட நூல்கள் இவை என்று கருதுவது பெரிய தவறாகும். ஆகையால், *சிலப்பதிகார, மணிமேகலை* நூல்கள் கடைச்சங்க காலத்தின் இறுதியில் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில்), செங்குட்டுவன் காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

9. இலக்கிய நூல்கள்

சேரன் செங்குட்டுவன் வாழ்ந்திருந்த காலத்தில் தமிழிலக் கியத்தில் புதுவகையான நூல்கள் தோன்றின. சிறுசிறு குறும் பாடல்கள் பாடப்படுவது இவனுக்கு முன்பிருந்த வழக்கம். இவன் காலத்தில் சிறுசிறு பாடல்களும் அவற்றோடு நெடும் பாடல்களும் பாடப்பட்டன. சேர அரசர்கள்மீது பாடப்பட்ட *பதிற்றுப்பத்து* அக்காலத்தில் புதுமையானது. *பதிற்றுப்பத்து*, செங்குட்டுவனுடைய பாட்டன், தந்தை, சிறியதந்தை, தாயாதித் தந்தை, தமயன், தாயாதித்தமயன், தம்பியர் ஆகியவர்கள்மீது பாடப்பட்டது. 5ஆம் பத்து இச்செங்குட்டுவன்மேல் பாடப் பட்டது. இது அக்காலத்தில் புதுவகையான இலக்கியப் படைப்பு. ஒவ்வொரு அரசன் மேலும் பத்துப்பத்துச் செய்யுளைக் கொண்ட புது இலக்கியம் இது.

செங்குட்டுவன் காலத்திலே நீண்ட செய்யுள்களும் புதுமையாக இயற்றப்பட்டன. சோழன் கரிகால்வளவன் மீது பாடப்பட்ட *பட்டினப்பாலையும் பொருநர் ஆற்றுப்படையும்*, தொண்டைமான் இளந்திரையன் மேல் பாடப்பட்ட *பெரும்பாணாற்றுப்படையும்*, ஆரியவரசன் பிரகத்தனுக்கு அகப்பொருள் அறிவித்தற் காகப் பாடப்பட்ட *குறிஞ்சிப் பாட்டும்* செங்குட்டுவன் காலத்துப் புதுவகையான நெடும் பாடல்கள். (இவனுக்கு அடுத்த தலைமுறையில் பாடப்பட்டவை

சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் (கூத்தராற்றுப் படை, முல்லைப்பாட்டு என்பவை.)

இவற்றுக்கெல்லாம் மேலாக செங்குட்டுவன் காலத்தில் இயற்றப்பட்ட புதுமையான இலக்கியங்கள் இரண்டு. அவை, செங்குட்டுவனின் தம்பியாரான இளங்கோ அடிகள் இயற்றிய *சிலப்பதிகாரமும்*, இவனுடைய நண்பரான கூலவாணிகன் சாத்தனார் இயற்றிய *மணிமேகலையும்* ஆகும். இவ்விரண்டு காவியங்களைப் பற்றி வேறு இடத்தில் கூறியுள்ளோம். *சிலப்பதிகாரமும் மணிமேகலையும்* இரட்டைக் காவியங்கள். அதாவது ஒன்றோடொன்று தொடர்புடைய காவியங்கள். இவ்விரண்டு காவியங்களும் தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல, இந்தியா தேசத்துக்கே சிறப்பான காவியங்கள் ஆகும். ஏனென்றால், இந்தியாவில் உள்ள எல்லா மொழிக் காவியங்களும் *பாரத, இராமாயணக்* கதைகளை அடிப்படை யாகக் கொண்டு எழுதப்பட்டவை. ஆனால், இவ்விரண்டு காவியங்களும் வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட காவியங்கள். இந்த வகையில் இந்தியாவி லுள்ள எல்லா மொழிக் காவியங்களுக்கும் முதலில் தோன்றிய காவியங்கள் இவை என்பதில் ஐயமில்லை. சங்க காலத்தில் *பாரதம், இராமாயணம்* ஆகிய நூல்களும் தமிழில் இயற்றப் பட்டிருந்தன என்று கூறப்படுகின்றன. அந்தப் *பாரத, இராமாயண* நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. அவைகளின் சில செய்யுள்கள் மட்டும் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஆனால், முழு உருவத்தில் இப்போது கிடைக்கிற பழைய காவிய நூல்கள் *சிலப்பதிகாரமும் மணி மேகலையுமே*. இந்த வகையில், சேரன் செங்குட்டுவனுடைய காலம் தமிழிலக்கியத்தின் பொற்காலம் என்று கூறலாம்.

10. வஞ்சிமாநகரம் (கருவூர்)

சேர நாட்டின் தலைநகரமாக இருந்தது வஞ்சிமாநகரம். அதற்குக் கருவூர் என்றும் வேறு பெயர் இருந்தது. கருவூர் வஞ்சி மாநகர் எங்கிருந்தது என்பது பற்றி இருவேறு கருத்துக்கள் ஏற்பட்டு அறிஞர்கள் பலரின் வாதப் பிரதிவாதங்களுக்குக் காரணமாயிற்று. சேர நாட்டின் கடற்கரையோரத்தில் ஒரு வஞ்சிக் கருவூரும் கொங்கு நாட்டில் ஒரு வஞ்சிக் கருவூரும் இருந்தன. இந்த இரண்டு கருவூர்களில் எது சேரர்களின் தலைநகரமாயிருந்தது என்பது பற்றித்தான் மேலே கூறப்பட்ட விவாதங்கள் எழுந்தன. இது பற்றிப் பல கட்டுரைகளும் வெளி வந்துள்ளன. நானும் இது பற்றிச் சொந்த முறையில் ஆராய்ந்து,

பெரியாற்றங்கரையில் சேர நாட்டுக் கடற்கரை யோரத்தில் இருந்த வஞ்சிக்கருவூர்தான் சேர நாட்டின் பழைய தலைநகரம் என்னும் கருத்துள்ளவனாக இருந்தேன். ஆனால், அந்தக் கருத்தை உறுதிப்படுத்தாதபடி, டாலமி என்னும் யவன ஆசிரியரின் குறிப்பு தடைசெய்துகொண்டிருந்தது. டாலமி தம்முடைய நூலிலே கரவ்ர (Karoura), அதாவது கருவூர் உள் நாட்டிலிருந்த நகரம் என்று எழுதியிருக்கிறார். இந்தக் காரணத்தினால் என்னுடைய கருத்தை உறுதிப்படுத்த முடியாமல் ஐயங்கொண்டிருந்தேன். கொங்கு நாட்டு வஞ்சிமா நகரந்தான் சேரர்களுடைய தலைநகரம் என்று கூறுகிற, திரு. ரா. இராகவையங்காரின் *வஞ்சிமாநகர்* என்னும் நூலும், திரு. மு. இராகவையங்கார் எழுதிய *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலும் வஞ்சிமா நகரத்தைப் பற்றித் தெளிவாகக் கூறாமல் குழப்பம் கொடுப்பதாக இருக்கின்றன. சங்க காலச் சேர மன்னர்களைப் பற்றி ஆராய்ந்தபோதுதான் வஞ்சிமா நகரத்தைப் பற்றிய உண்மையான கருத்து எனக்குப் புலனாயிற்று.

சங்க காலத்துச் சேரர் தலைநகரம் ஆதிகாலம் முதல் கடற்கரை யோரத்திலிருந்த வஞ்சிக்கருவூர்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால், சேர அரசர்கள், முக்கியமாக இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய அண்ணன் தம்பியரசர்கள் கொங்கு நாட்டின் தென்பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைச் சேர இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டார்கள். சேர்த்துக்கொண்ட கொங்கு நாட்டுச் சேர அரச மரபில் ஒரு சேரன் ஆட்சிசெய்யத் தொடங்கினான். அவன் கொங்கு நாட்டில் தான் இருந்த ஊருக்குப் பழைய தலைநகரத்தின் பெயராகிய வஞ்சி (கருவூர்) என்னும் பெயர் சூட்டினான். எனவே, பழைய வஞ்சிமா நகரமும் புதிய வஞ்சிமா நகரமும் சேர அரசர்களுக்குத் தலைநகரங்களாகச் சங்க காலத்திலேயே அமைந்தன.

சேர மன்னன் செங்குட்டுவனை 5ஆம் பத்துப் பாடிய பரணர் 10ஆவது செய்யுளில்,

வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇச்
செங்குணக் கொழுகும் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூடல் அனையை

என்று புகழ்கிறார். இதில், கொங்கு நாட்டிலே பாய்கிற காவிரியாற்றும் அதனுடன் கலக்கிற ஆன்பொருநை, குடவனாறு ஆகிய மூன்று ஆறுகள் ஒன்றுசேருகிற முக்கூடலுக்குச் செங்குட்டுவனை உவமை கூறுகிறார். இந்த மூன்று ஆறுகளும் பாய்கிற இடம் சேரனுக்கு உரியதாக

இருந்தபடியினாலே இந்த ஆறுகளை அவனுக்கு உவமை கூறினார் என்பது தெளிவு.

புறநானூறு 13ஆம் செய்யுளை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியிருக்கிறார். அச்செய்யுளின் அடிக்குறிப்பு, "சோழன் முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு, சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறையோடு வேண்மாடத்து மேலிருந்து பாடியது" என்று கூறுகிறது. இந்தக் கருவூர் கொங்கு நாட்டுக் கருவூர் என்பது திட்டமாகத் தெரிகின்றது. ஏனென்றால், சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி தன் யானை மேல் ஏறித் தன் சோழ நாட்டு எல்லைக் கருகில் வந்தபோது, அவன் ஏறியிருந்த யானை கருவூரில் போனதை இச்செய்யுள் கூறுகிறது. ஆகவே, சோழ நாட்டுக்கு அருகில் இருந்த கருவூர், கொங்கு நாட்டுக் கருவூர் என்பதில் ஐயமில்லை. இக்கருவூரில் வேண்மாடம் என்னும் அரண் மனையில் சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை இருந்தான் என்பதனால், இக்கொங்கு நாட்டுக் கருவூரில் இருந்துகொண்டு சேர அரசர்களின் ஒரு கிளையினராகிய இரும்பொறையரசர் ஆட்சி செய்தார்கள் என்பது தெரிகின்றது. இந்த அந்துவஞ் சேரல் இரும்பொறை, செங்குட்டுவனுடைய தாயாதிப் பாட்டன் எனத் தெரிகிறான். எனவே, கொங்கு நாட்டின் தலைநகரமும் பழைய வஞ்சி நகரத்தின் பெயரையே பெற்று இருந்தது என்பதும், ஒரே காலத்தில் இரண்டு வஞ்சிக்கருவூர்கள் சேர இராச்சியத்தில் இருந்தன என்பதும் தெரிகின்றன.

இந்தக் கொங்கு நாட்டு வஞ்சிக்கருவூரைத்தான் டாலமி உள் நாட்டுப் பட்டினம் என்று கூறினார் எனத் தெரிகிறது. இக் கருவூர் கொங்கு நாட்டைச் சேர்ந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் புதிய அமைப்பில் நாட்டை ஜில்லாக்களாகப் பிரித்தபோது, கொங்கு நாட்டைச் சேர்ந்த இவ்வூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவுடன் சேர்க்கப்பட்டது.*

---

* *கரூர் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட கரூர் மாவட்டம் (ஜில்லா), தனியாகத் திருச்சி மாவட்டத்திலிருந்து தற்போது பிரிக்கப்பட்டுள்ளது.* -பொதுப்பதிப்பாசிரியர்கள்

பிற்சேர்க்கை

மோரியர் மோகூருக்கு வந்தனரா?

கோசருக்கு மோகூர் பணியாதபடியினாலே அவரைப் பணியச் செய்வதற்குக் கோசர், மோரியருடைய உதவியை நாடினார்கள் என்றும் அவர்களின் வேண்டுகோட்படி மோரியர் மோகூரின் மேல் படையெடுத்துச் சென்றார்கள் என்றும் செல்லும் வழியில் மலைகள் குறுக்கிட்டபடியால், மலைமேல் தேர்ப்படை போவதற்காக வழிகளை உண்டாக்கிக்கொண்டு போனார்கள் என்றும் சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன.

வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர் (*அகம்* 251 : 6-14)

என்றும்,

கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந்து அவரோ சென்றனர் (*அகம்* 281 : 7-12)

என்றும் மாமூலனார் இச்செய்தியைக் கூறுகின்றார்.

வென் வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் (*புறம்* 175 : 5-8)

என்று கள்ளில் ஆத்திரையனார் இதனைக் கூறுகிறார்.

விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறை இறந்து அகன்றனர் ஆயினும்....... (*அகம்* 69 : 10-12)

என்று உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார் கூறுகிறார்.

மோரியர் என்பவர் இந்தியச் சரித்திரத்தில் பேர் பெற்ற மௌரிய அரசராவர். மோரிய அரசர்களில் சந்திரகுப்த அரசனும் அசோகச் சக்ரவர்த்தியும் பேர் பெற்றவர்கள். மோரிய வம்சம் கி.மு. 185இல் சிறப்புக் குன்றிவிட்டது. ஆனால், அவர்கள் வழியில் வந்தவர் சில நூற்றாண்டுகள் வரையில் ஆங்காங்கே சிற்சில இடங்களில் இருந்து சிற்றரசராய் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அந்த மோரியர்களில் ஒரு கிளை ஆந்திர தேசத்தில் ராய்ச்சூர் மாவட்டத்தில் மாங்கி என்னும் சுவர்ண கிரியில் அரசாண்டனர். இவர்கள் கோசரின் வேண்டுகோளின் படி மோகூரின்மேல் படையெடுத்துவந்தனர் போலும். இச் செய்தியைத்தான் மேலே காட்டிய சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன.

மோகூர் பாண்டி நாட்டில் இருந்த ஊர். அது இப்போதும் திருமோகூர் என்னும் பெயர் பெற்று இருக்கின்றது. மோகூரை யரசாண்ட மன்னர் பழையன்மாறன் என்னும் குடிப்பெயர் பெற்றுப் பாண்டியனுடைய சேனாபதியாக இருந்தார்கள். மோகூர் மன்னனாகிய ஒரு பழையன் மாறனைச் சேரன் செங்குட்டுவன் வென்ற செய்தியை முன்னமே கூறினோம்.

மோகூரின்மேல் மோரியர் படையெடுத்து வந்தபோது மலைகள் குறுக்கிட்டபடியால் அம்மலை மேல் பாதை அமைத்துக்கொண்டு அவர்கள் தேர்ப்படையைச் செலுத்திக் கொண்டு வந்தார்கள் என்று மேலே காட்டிய செய்யுள்களால் அறிகிறோம். இதுபற்றிப் பல அறிஞர்கள் ஆராய்ந்து பற்பல கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதி வெளியிட்ட கருத்துகளையெல்லாம் இங்கு நாம் ஆராய முற்பட வில்லை. ஆனால், அவர்கள் எழுதிய கட்டுரைகளை மட்டும் இங்குக் குறிப்பிடுவது அமைவுடைத்து. அவையாவன:

1 S. Krishnaswamy Aiyangar, 'Mauryan Invasaion of South India,' Ch, II, *The Beginnings of South Indian History*, 1918.

2 Somasundara Desikar, 'The Mauryan Invasion of Tamilakam', *Quarterly Journal of the Mythic Society*, Vol. xviii, pp. 155-166.

3 K. A. Nilakantan, 'The Mauryan Invasion of the Tamil Land', *Quarterly Journal of the Mythic Society*, Vol. xvi, p. 304.

4 P. T. Srinivasa Iyengar, *History of the Tamils*, pp. 520-526.

5 Somasundara Desikar, 'The Mauryan Invasion of the Tamilakam', *Indian Historical Quarterly*. Vol. iv. pp. 135-145.

6 V. R. Ramachandra Dikshitar, *The Mauryan Polity*, pp. 58-61.

7 K.G. Sankar, 'The Moriyas of the Sangam Works', *J.R.A.S.*, 1924, pp. 664-667.

8 Vincent A. Smith, *Early History of India*, 4th Edition 1957, p. 157.

9 *The Cambridge History of India*, Vol. i, p. 596.

10 K. A. Nilkanta Sastri (Edited), 'Mauryan Invasion of South India', *A Comprehensive History of India*, Vol. ii, 1957, pp. 501-503.

11 டாக்டர் கே. கே. பிள்ளை, 'தமிழகமும் மோரியர் படையெடுப்பும்', *பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை வெள்ளி விழா மலர்*, 1961, பக்கம். 359-363.

12 பண்டித. மு. இராகவையங்கார், *சேரன் செங்குட்டுவன்.*

மோரியர் மோகூரின்மேல் படையெடுத்து வந்தனர் என்று கூறப்படுகின்றனர். ஆனால், பாண்டி நாட்டு மோகூருக்கு இடையில் எந்த மலையும் வழிமறித்து நிற்கவில்லை. சேரன் செங்குட்டுவன் மோகூர் பழையன் மேல் படையெடுத்து வந்து அவனை வென்றபோது, அவன் மலையில் வழியுண்டாக்கிக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. அதே மோகூரின்மேல் மோரியர் படையெடுத்து வந்தபோது மலை குறுக்கிட்டுத் தடுத்தது என்று கூறப்படுகிறது. இதில் ஏதோ தவறு இருக்கிறதுபோலத் தோன்றுகிறது. ஏடெழுதுவோரால் மோகர் என்று எழுதப்படவேண்டிய சொல் மோகூர் என்று எழுதப் பட்டதுதான் அந்தப் பிழை என்று தோன்றுகிறது.

மோகர் என்பவர் துளு நாட்டில் (கொங்கண நாட்டில்) கடற்கரை யோரத்தில் வாழ்ந்திருந்த நெய்தல் நில மக்கள். தமிழ்நாட்டு நெய்தல் நில மக்களாகிய பரதவரைப் போலவே, அவர்களும் அடங்காமல் போர் செய்வதில் விருப்பமுள்ளவராக இருந்தனர். அவர்களுடைய சந்ததியார் இன்றும் துளு நாட்டுக் கடற்கரையில் மோகர் என்னும் பெயருடன் இருக்கிறார்கள். அந்த மோகர், கோசருக்குப் பணியாமையால், அவரை அடக்கக் கோசர், மோரியருடைய உதவியை நாடினார்கள். கோசருக்கு உதவிசெய்ய வந்த மோரியரின் தேர்ப் படைகள் செல்லாதபடி சையகிரி என்னும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் குறுக்கே இருந்தபடியால், அம்மலையைக் கடந்தாலல்லது வேறு வழி இல்லாதபடியால், அவர்கள் மலைமேல் பாதை அமைத்துக் கொண்டு அப்பாதை வழியாகத் துளு நாட்டுக்குள் சென்று,

பிறகு கடற்கரையோரத்திலிருந்த மோகருடன் போர் செய்து அடக்கினார்கள் என்பது தெரிகின்றது. இந்தச் செய்தியைக் கூறுகிற செய்யுளில் பிற்காலத்தில் ஏடெழுதினோர் மோகர் என்பதை மோகூர் என்று கைப்பிழையாக எழுதினார்கள் போலும். ஏடெழுதுவோர் செய்த சிறுபிழை இக்காலத்து அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு அதிக வேலை கொடுத்துவிட்டது. அந்தச் செய்யுளின் சரியான வாசகம் இவ்வாறு இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது:

தெம்முனை சிதைத்த ஞான்றை மோகர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய் உம்பர்

எனவே, மோகூர் என்பது தவறான பாடம் என்பதும் மோகர் என்பதே சரியான பாடம் என்பதும் தெரிகின்றது.

இதுகாறும் கூறியவற்றால், மோரியர் மோகூரின்மேல் படையெடுத்து வரவில்லை என்பதும், அவர்கள் துளு நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றனர் என்பதும், அவ்வாறு செல்லும் வழியில் குறுக்கே இருக்கிற சையகிரிமலைகள் ஆகிய மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கடக்கவேண்டியிருந்தது என்பதும், ஆகவே அவர்கள் அந்த மலைமேலே வழியுண்டாக்கிக் கொண்டு போனார்கள் என்பதும் விளக்கப்பட்டன.

DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
MADRAS

துளு நாட்டு வரலாறு

மயிலை சீனி. வேங்கடசாமி

துளு நாட்டு வரலாறு

(கி.பி. 2ஆம் நூற்றாண்டு)

அணிந்துரை

(டாக்டர் கே.கே. பிள்ளை, டி.லிட்., டி.பிஃல்(ஆக்ஸ்போர்டு), சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் எழுதியது)

திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தமிழ் இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளில் ஆராய்ச்சிகள் செய்து நூல்களை வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் எழுதிய *சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்* என்ற நூல்களை நான் படித்திருக்கிறேன். இவை எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும், இவ்வாசிரியர் தகுந்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே தம்முடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்; எதையும் மிகைப்படுத்திக் கூறவில்லை. நமது நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வாறு ஆதாரங்களைச் சீர்தூக்கிப் பார்த்து விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலைமையோடு கருத்துக்களை வெளியிடுவது மிகமிகத் தேவையாகும்.

துளு நாட்டு வரலாறு என்னும் இப்புத்தகத்தில் இவ்வாசிரியர் சங்க நூல்களில் துளு நாட்டைப் பற்றியுள்ள குறிப்புகளைத் தொகுத்து அந்த நாட்டின் பண்டைய வரலாற்றை உருவாக்க முயன்றிருக்கிறார். துளு நாடு தமிழகத்தின் ஒரு பகுதியாக அக்காலத்தில் இருந்தது. *அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, சிலப்பதிகாரம்* போன்ற பல சங்க காலத்து நூல்களை ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அக்காலத்துத் துளு நாட்டின் எல்லைகள், ஆறுகள், மலைகள், நகரங்கள் முதலியவற்றையும் நன்றாகக் குறிப்பிட்டிருப்பதோடு அக்காலத்தில் துளு நாட்டை யரசாண்டிருந்த தமிழ் மன்னர்களைப் பற்றியும் இந்நூலில் விரித்துரைத்துள்ளார்.

அசோகர் சாசனங்களில் கூறப்படுகிற சத்தியபுத்திர நாடு, துளு நாடுதான் என்று இந்நூலாசிரியர் முடிவுகட்டியுள்ளார். இதுபற்றிப் பலவேறுபட்ட கருத்துக்கள் தோன்றியுள்ளனவாயினும், 'வாய்மொழிக் கோசர்' இருந்த துளு நாடே சத்தியபுத்திர நாடு என்பதுதான் என்னுடைய கருத்துமாகும். தமிழ் மொழியில் உள்ள சில சொற்கள் துளு பாஷையில் இன்றும் காணப்படுவதையும் இந்நூலில் விளக்கியிருக்கிறார்.

உயர்தரக் கல்வியையும் தாய்மொழியிலேயே கற்பிக்க வேண்டுமென்று கருதுகிற இந்நாளில் இது போன்ற பல நூல்கள் தேவைப்படுகின்றன.

இந்நூலாசிரியர், மேலும் இது போன்ற பல ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவார் என்று நம்புகிறேன்.

சென்னை
27-1-1966

கே. கே. பிள்ளை

முகவுரை

துளு நாடு என்றும் கொங்கண நாடு என்றும் தமிழ்ச் சங்க காலத்துத் தமிழ் இலக்கியங்களில் கூறப்படுகிற நாடு அக்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக இணைந்திருந்தது. இன்றைய கேரள நாடாகிய பழைய சேர நாட்டுக்கு வடக்கே தென் கன்னட மாவட்டம் என்னும் பெயருடன் இருப்பதுதான் பழைய துளு நாடு. தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்த பழைய சேர நாடு பிற்காலத்திலே மலையாள நாடாக மாறித் தனியாகப் பிரிந்து போய்விட்டது போலவே பழைய தமிழகத்துடன் இணைந்திருந்த துளு நாடும் பிற்காலத்திலே பிரிந்து தனியாகப் போய்விட்டது. ஆனால், பழைய சங்கத் தமிழ் இலக்கியங்கள் துளு நாடு தமிழகத்துடன் கொண்டிருந்த உறவை நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன.

அகநானூறு, புறநானூறு, நற்றிணைநானூறு குறுந்தொகை நானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலே சில செய்யுள்களில் துளு நாட்டைப் பற்றிய செய்திகள் தற்செயலாகக் கூறப்பட்டுள்ளன. அச்செய்திகள் தற்செயலாகப் புலவர்களால் கூறப்பட்டவை. ஆகவே, அக்காலத்துத் துளு நாட்டின் முழு வரலாறு அச்செய்யுள்களில் கிடைக்கவில்லை. கிடைத்துள்ளவை வரலாற்றுத் துணுக்குகளேயாகும்.

சங்கச் செய்யுள்களிலே ஆங்காங்கே சிதறிக் கிடக்கிற அவ்வரலாற்றுத் துணுக்குகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டித் தொகுத்து முறையாக வகைப்படுத்தி எழுதப்பட்டதுதான் *துளு நாட்டு வரலாறு* என்னும் இச்சிறு நூல். இந்நூலுக்கு இது தவறான பெயர். சரியாகப் பெயர் கூறவேண்டுமானால் சங்க காலத்துத் துளு நாடு அல்லது கி.பி. 2ஆம் நூற்றாண்டுத் துளு நாடு என்று இதற்குப் பெயர் சூட்டப்படவேண்டும். ஏறத்தாழ கி.பி. 100 முதல் 150 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த துளு நாட்டின் செய்தி இந்நூலில் கூறப்படுகின்றது. அக்காலத்துக்கு முற்பட்ட துளு நாட்டு வரலாறு கிடைக்கவில்லை.

அக்காலத்தில் துளு நாட்டை யரசாண்ட அரசர்கள் கொங்காணங்கிழார் என்றும் நன்னன் என்றும் பெயர் பெற்றிருந்தார்கள். அவர்கள், அக்காலத்தில் தமிழகத்தில் பல இடங்களில் இருந்த வேளிர் என்னும் குறுநில மன்னர்களைச் சேர்ந்தவர்கள். கொங்காணங் கிழாராகிய நன்னர்கள், தங்களுடைய சிறிய துளு இராச்சியத்தைப் பெரிதாக விரிவுப்படுத்தக் கருதி, சேர

நாட்டின் வடக்கிலிருந்த பூழி நாட்டையும், அதற்குக் கிழக்கில் இருந்த வட கொங்கு நாட்டையும் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆகவே, சேர அரசருக்கும் துளு நாட்டரசருக்கும் அரசியல் பகைமை ஏற்பட்டு அவ்விருவருக்கும் போர்கள் நிகழ்ந்தன. கடைசியில் சேர அரசர் துளு அரசர்களை வென்று தங்களுக்குக் கீழே அடக்கிவிட்டனர். இச்செய்திகள் இந்நூலில் கூறப்படுகின்றன. அக்காலத்துத் துளு நாட்டு மக்களின் சமூக வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலியவை யெல்லாம் தமிழகத்துப் பண்பாட்டுடன் ஒத்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால், துளு நாட்டுப் பண்பாடு, நாகரிகங்களைப் பற்றிச் சங்க நூல்கள் தனியாக ஒன்றும் கூறவில்லை. ஆகவே, அச்செய்திகள் இந்நூலில் இடம் பெறவில்லை.

இந்நூலிலே சில செய்திகள் சிற்சில இடங்களில் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. மேற்கோளுக்காகவும் அனுவாதத்தின் பொருட்டும் ஆராய்ச்சிக்குச் சான்று காட்டும் பொருட்டும் சில செய்திகள் மீண்டும்மீண்டும் கூறவேண்டுவது அவசியமாகவுள்ளன. இவற்றைக் 'கூறியது கூறல்' என்னும் குற்றமாகக் கருதக்கூடாது.

தனி இலக்கிய நூல்களுக்கே 'கூறியது கூறல்' என்னுங் குற்றம் பொருந்துமே யல்லாமல், சரித்திர ஆராய்ச்சி நூலாகிய இது போன்ற நூல்களுக்கு அக்குற்றத்தைச் சாற்றுவது கூடாது. வேண்டிய இடங்களில், கூறியதையே மீண்டும்மீண்டும் கூறாமற் போனால் தெளிவும் விளக்கமும் பெற முடியாதாகையால் அவ்வாறு கூறவேண்டுவது அவசியமாயிற்று.

இந்நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதித் தரவேண்டுமென்று வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே.கே. பிள்ளையவர்களைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி அவர்கள் அணிந்துரை எழுதியுதவினார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி.

இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட சென்னை சாந்தி நூலகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர் திரு. அ. பழ. முத்துராமன் அவர்களுக்கும் எனது நன்றியுரியதாகும்.

சென்னை
27-1-1996

மயிலை சீனி. வேங்கடசாமி

1. துளு நாடு

பழைய பெயரும் புதிய பெயரும்

சங்க காலத்தில் துளு நாடு என்றும் கொங்கண நாடு என்றும் பெயர் பெற்றிருந்த நாடு இக்காலத்தில் தென் கன்னட மாவட்டம் என்று பெயர் பெற்றிருக்கிறது. வடகன்னடம், தென்கன்னடம் என்று பெயர்பெற்ற இரண்டு மாவட்டங்கள் பாரத நாட்டின் மேற்குக் கரையோரமாக இப்போது இருக்கின்றன. இவற்றில் வடகன்னட மாவட்டம், முன்பு பம்பாய் மாகாணம் என்று பெயர் பெற்றிருந்து இப்போது மகாராட்டிர தேசம் என்று பெயர் வழங்குகிற இராச்சியத்தில் இருக்கிறது. தென்கன்னட மாவட்டமானது, பழைய சென்னை மாகாணத்தோடு இணைந்திருந்து, பாரத நாடு சுதந்தரம் பெற்ற பிறகு மைசூர் இராச்சியத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தென் கன்னட மாவட்டந்தான் பழைய துளு நாடு. துளு நாட்டுக்குக் கொங்கண நாடு என்றும் கொண்கான நாடு என்றும் கொண் பெருங்கானம் என்றும் சங்க காலத்தில் பெயர் இருந்தது.

துளு நாடாகிய கொங்கண நாடு தென் கன்னட மாவட்டம் என்று பெயர்பெற்றது மிகச் சமீப காலத்தில்தான். ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியார் தென் இந்தியாவில் வந்து வாணிகஞ் செய்துகொண்டே நாடு பிடித்த காலத்தில், துளு நாடாகிய கொங்கண நாடு கி.பி. 1799ஆம் ஆண்டில் அவர்கள் ஆட்சிக்கு வந்தது. பிறகு அவர்கள் இந்த நாட்டுக்குத் தென்கன்னட மாவட்டம் என்று தவறான பெயர் கொடுத்துச் சென்னை மாகாணத்தின் ஒரு பிரிவாக இணைத்துவிட்டனர். எனவே, இதற்குத் தென் கன்னடம் என்னும் பெயர் மிகச் சமீப காலத்தில் தவறாக ஏற்பட்டதாகும். ஆனால், அதன் பழைய பெயர் துளு நாடு அல்லது கொங்கண நாடு என்பது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பாரத நாட்டை யரசாண்ட அசோகச் சக்கரவர்த்தி தம்முடைய சாசனத்தில் கூறுகிற 'சத்தியபுத்திர நாடு' என்பது துளு நாடே. இது பற்றி வேறு கருத்துகளும் உண்டு (இணைப்பு 1 காண்க). கடைச்சங்க காலத்தின் இறுதியில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) இருந்த தாலமி (Ptolemy)

என்னும் யவனர், துளு நாட்டில் டமிரிகெ (Damirike) தொடங்கியது என்று கூறுகிறார். டமிரிகெ என்பது திராவிடகம் என்னும் தமிழகம் ஆகும். எனவே, துளு நாடு அக்காலத்தில் தமிழ்நாடாக இருந்தது என்பது தெரிகிறது. சங்கச் செய்யுள்களும் துளு நாட்டுக்கு அப்பால் மொழி பெயர்தேயம் (வேறு பாஷை பேசப்பட்ட தேசம்) இருந்ததாகக் கூறுகின்றன.

துளு என்றால் போரிடுதல், எதிர்த்தல் என்பது பொருள். பழங்கன்னட மொழியில் துளு என்னுஞ் சொல்லுக்கு இந்தப் பொருள் உண்டு. எனவே, துளு நாடு என்றால் வீரர்கள் உள்ள நாடு என்று பொருள் கொள்ளலாம். துளு நாட்டு வீரர்களைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன.

கொங்கண நாடாகிய துளு நாட்டைப் பிற்காலத்துச் சோழர் சாசனங்கள் 'குடமலை நாடு' என்று கூறுகின்றன.

துளு நாட்டுக்குக் கிழக்கில் உள்ளது குடகு நாடு என்னும் சிறு நாடு. இந்தக் குடகு நாட்டில் தலைக்காவேரி என்னும் இடத்தில் காவிரி ஆறு உண்டாகிறது. "குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி" என்று *மலைபடுகடாம்* (அடி 527) கூறுகிறது. இந்தக் காவேரி ஆறு கடைசியில் சோழ நாட்டில் புகுந்து பாய்கிறது.

துளு நாட்டு எல்லை

இப்போதுள்ள தென் கன்னட மாவட்டமே ஏறத்தாழ பழைய துளு நாடாகும். ஆனால், சங்க காலத்தில் (கி.பி. 200க்கு முன்பு) துளு நாட்டின் தென் எல்லை சற்றுத் தெற்கே இருந்தது. ஏழில் மலைக்குத் தெற்கே அதன் பழைய தெற்கெல்லை இருந்தது.

துளு நாட்டின் மேற்கில் அரபிக்கடல் எல்லையாக இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகள் (சஃயாத்திரி மலைகள்) இதன் கிழக்கு எல்லையாக அமைந்திருக்கின்றன. கிழக்கு எல்லையாக அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் சில இடங்களில் கடல் மட்டத்துக்கு 3000 அடி உயரமாகவும் வேறு சில இடங்களில் 6000 அடி உயரமாகவும் இருக்கின்றன. ஆகவே, துளு நாட்டின் கடற்கரையோரங்கள் சமநிலமாகவும் கிழக்குப் பகுதிகள் உயரமான மலைப் பிரதேசங்களாகவும் இருக்கின்றன. துளு நாடு ஏறத்தாழ வடக்குத் தெற்காக 150 மைல் நீளம் உள்ளது. இதன் அகலம், கடலுக்கும் மலைகளுக்கும் இடையே சில இடங்களில் 50 மைலும் சில இடங்களில் 25 மைலும் ஆக அமைந்திருக்கிறது. எனவே, துளு நாடு கடலுக்கும் மலைக்கும் இடையிலே உள்ள அகலம் குறைந்த நீளமான பிரதேசம் என்பது தெரிகிறது (படம் 1 காண்க).

இனி, சங்க இலக்கியங்களிலே கூறப்படுகிற துளு நாட்டு ஊர்கள் மலைகள் முதலியவற்றை ஆராய்வோம்.



படம் 1

துளு நாடு (கொண்கானம்)

'தோகைக் காவின் துளு நாடு' (அகம் 15 : 5) என்று மாமூலனார் என்னும் புலவர் துளு நாட்டின் பெயரைக் கூறுகிறார். துளு நாட்டுக் காடுகளில் தோகைகள் (மயில்கள்) இருந்தன என்று கூறுகிறார்.

துளு நாட்டை நன்னன் என்னும் பெயருள்ள வேள்குல அரசர் ஆண்டனர். அவர்கள் 'கொண்கானம் கிழான்' என்றும் பெயர் பெற்றிருந்தனர். அதாவது, கொண்கான நாட்டுக்குத் தலைவன்

என்பது பொருள். பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர அரசர் தாம் பாடிய *நற்றிணை* 391ஆம் செய்யுளில், பொன்படு கொண்கான நன்னன்' என்று கூறுகிறார். மோசிகீரனார் என்னும் புலவர் 'கொண்கானம் கிழான்' ஒருவனைப் பாடுகிறார். அதில் கொண்கான நாட்டின் மலைகளில் பல அருவிகள் பாய்வது தூய வெண்ணிற ஆடைகளை வெயிலில் உலர்த்துவதுபோல இருந்தன என்று கூறுகிறார்.

அறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல இழிதரும் அருவிநின்
கொண்பெருங் கானம் பாடல் எனக்கு எளிதே
(*புறம்.* 154 : 10-13)

என்று அவர் பாடுகிறார். கொண்கானத்து (துளு நாட்டு)க்குக் கிழக்கேயுள்ள உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இன்றும் பல அருவிகள் தோன்றிப் பாய்வதைக் காண்கிறோம். இப்புலவரே 'கொண்பெருங் கானத்துக்' கிழானைப் *புறம்* 155ஆம் பாட்டில் பாடியுள்ளார். கொண்கானங் கிழான் தன்னை நாடி வரும் இரவலருக்குப் பொருள் கொடுத்தான் என்றும் அவன் பிற வேந்தரை வென்று அவர்களிடம் திறை வாங்கினான் என்றும் *புறம்* 156ஆம் செய்யுளில் இப்புலவர் கூறுகிறார். இச்செய்யுள்களில் இவர் கொங்கண நாட்டைக் கொண்பெருங்கானம் என்று கூறுவது காண்க. கொங்கணம், கொண்கானம், கொண்பெருங்கானம் என்பன எல்லாம் ஒன்றே.

நன்னனுடைய கொங்கணக் காட்டில் (கழை) மூங்கில் அதிகமாக விளைந்தன என்று கூறுகிறார். கொங்கணத்தைக் 'கானம்' என்று சுருக்கமாகக் கூறுகிறார்.

விழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கில்
கானமர் நன்னன் (*அகம்* 392 : 26-27)

என்று அவர் கூறுவது காண்க (கான்—கானம், கொங்கானம்).

செல்லூர்

மருதன் இளநாகன் என்னும் புலவர் இவ்வூரைக் கூறுகிறார். மழுவாள் நெடியோனாகிய பரசுராமன் இவ்வூரில் யாகம் செய்த கதையை இவர் கூறுகிறார் (இணைப்பு 2 காண்க).

கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் (*அகம்* 220 : 3-8)

என்பது அப்பாட்டில் இச்செய்தியைக் கூறும் பகுதி.

இந்தச் செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்தது என்றும் அவ்வூருக்குக் கிழக்கில் கோசருடைய நியமம் (ஊர்) இருந்தது என்றும் இப்புலவரே இன்னொரு செய்யுளில் கூறுகிறார்.

அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம் (*அகம்* 90 : 9-12)

என்று இவர் கூறுகிறார்.

எனவே, துளு நாட்டுச் செல்லூரில் பரசுராமன் செய்த வேள்விக்கு நினைவாக ஒரு தூண் அமைக்கப்பட்டிருந்த தென்றும், அச்செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்ததென்றும் தெரிகின்றன.

ஐயூர் முடவனார் என்னும் சங்க காலத்துப் புலவரும் தம்முடைய செய்யுளில் இச்செல்லூரைக் கூறுகிறார். ஆனால், பரசுராமன் கதையைக் கூறவில்லை. செல்லூரை யாண்ட அரசன் ஒருவன் ஆதன்எழினி என்பவனுடன் போர் செய்து அவனைக் கொன்ற செய்தியை அப்புலவர் கூறுகிறார்.

கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி யுழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி யயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத் தழுத்திய
பெருங்களிற்று எவ்வம் (*அகம்* 216 : 8-15)

இச்செய்யுளிலும், செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்ததென்பது கூறப்படுவது காண்க.

பாரம்

துளு நாட்டில் இருந்த இன்னொரு ஊர் பாரம் என்பது. இவ்வூரில் நன்னனுடைய சேனைத் தலைவனாகிய மிஞிலி என்பவன் இருந்தான். "பாரத்துத் தலைவன் ஆர நன்னன்" (*அகம்.* 152 : 12) என்றும், "பூந்தோள் யாப்பின் மிஞிலிகாக்கும் பாரம்" (*நற்.* 265 : 4-5) என்றும் இவ்வூர் கூறப்படுகிறது.

பாழி

இவ்வூர் பாழி என்னும் மலைக்கு அருகிலே இருந்தது. ஆகவே அம்மலையின் பெயரே இவ்வூருக்கும் பெயராயிற்று. பாழிமலை, ஏழில்மலையின் ஒரு பகுதி "பாரத்துத் தலைவன் ஆர நன்னன் ஏழில்

நெடுவரைப் பாழிச்சிலம்பு" (*அகம்* 152 :12-13). இவ்வூரைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்தது என்பது, 'செம்பு உறழ் புரிசைப் பாழி' (*அகம்* 375 :13) என்பதனால் தெரிகிறது. மேலும், இவ்வூர் 'கறையடி யானை நன்னன் பாரி' (*அகம்.* 142 :9) என்றும்

> சூழி யானை சுடர்ப்பூண் நன்னன்
> பாழி யாங்கண் கடியுடை வியன்நகர் (*அகம்* 15 :10-11)

என்றும் கூறப்படுகிறது. பாழி நகரைச் சூழ்ந்து இருந்த இடம் 'பாழிப் பறந்தலை' (*அகம்* 208 : 6) என்று பெயர் பெற்றிருந்தது. பாழிமலைமேலிருந்து பார்த்தால் அதனைச் சூழ்ந்திருந்த நாடுகள் தெரிந்தன.

> அருந்தெறல் மரபிற் கடவுள் காப்பப்
> பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை
> அணங்குடை வரைப்பிற் பாழி (*அகம்* 372 :1-3)

பாழி நகரக் கோட்டையில், நன்ன அரசர் பெருநிதியைச் சேர்த்து வைத்திருந்தனர். இதனை,

> அணங்குடை வரைப்பிற் பாழியாங்கண்
> வேள் முது மாக்கள் வியன் நகர்க் கரந்த
> அருங்கல வெறுக்கை (*அகம்* 372 : 8-5)

என்றும்,

> நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
> தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
> பொன் (*அகம்* 258 : 1-3)

என்றும் வருவனவற்றால் அறியலாம். நன்னர், வேள்குல அரசராவர்.

கொடுகூர்

இவ்வூர் துளு நாட்டில் இருந்தது. நன்ன அரசருக்குரிய இவ்வூரைச் சேரன் செங்குட்டுவன் வென்றான் (*பதிற்றுப்பத்து* 5ஆம் பத்துப் பதிகம்).

வியலூர்

இதுவும் துளு நாட்டில் இருந்த ஊர்.

> நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
> வயலை வேலி வியலூர் (*அகம்* 97 :12-13)

என்று இது கூறப்படுகிறது. இது கடற்கரைப் பக்கமாக இருந்த ஊர். இவ்வூரையும் சேரன் செங்குட்டுவன் வென்றான்.

உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து
(*பதிற்றுப்பத்து* 5ஆம் பத்து பதிகம்)

என்று கூறுகிறது.

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையிற்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்
(*சிலம்பு*, நடுகல் 114-115)

நறவு

இது துளு நாட்டில் கடற்கரையிலிருந்த துறைமுகப்பட்டினம். கள்ளுக்கு (மதுவுக்கு) நறவு என்றும் ஒரு பெயர் உண்டு. ஆகவே, நறவு என்னும் பெயருடைய இந்த ஊரைத் 'துவ்வா நறவு' (உண்ணப்படாத நறவு) என்று தமிழ்ப் புலவர்கள் கூறினார்கள். துளு நாட்டைச் சேர அரசர் வென்ற பிறகு இத்துறைமுகப்பட்டினத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (இவன் செங்குட்டுவனுக்கும் நார் முடிச் சேரலுக்கும் தம்பி) தங்கியிருந்தான் (*பதிற்றுப்*. 6ஆம் பத்து 10 : 9-12). கிரேக்கரோம வாணிகர்கள் நறவை 'நவ்றா' என்று கூறினார்கள். துளு மொழியில் இது நாறாவி என்று கூறப்பட்டது. இங்கு யவனக் கப்பல்கள் வந்து வாணிகஞ் செய்ததாகத் தெரிகின்றது.

சேர நாட்டுத் தொண்டித் துறைமுகந்தான் நறவு என்று சிலர் கருதுகின்றனர். துளு நாட்டிலுள்ள மங்களூர்தான் நறவு என்று வேறு சிலர் கருதுகிறார்கள். நறவு துளு நாட்டிலிருந்த கடற்கரைப் பட்டினம் ஆகும்.

ஏழில்மலை

இது துளு நாட்டில் இருந்த மலைகளில் ஒன்று. இது துளு நாட்டின் தெற்கே இருந்தது. ஏழில் நெடுவரை என்றும், ஏழிற்குன்று என்றும் இதனைக் கூறுவர். ஏழில்மலையின் ஒரு பிரிவு பாழிமலை (பாழிச்சிலம்பு) என்று பெயர்பெற்றிருந்ததையும் அங்குப் பாழி என்னும் ஊர் இருந்ததையும் முன்னமே கூறினோம்.

பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பு (*அகம்* 152 :12-13)

என்றும்

பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம் (*நற்*. 391 : 6-7)

என்றும்

நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம் (*அகம்* 349 : 8-9)

என்றும்

ஓங்கு புகழ்க்
கானமர் செல்வி அருளலின் வெண்கால்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவல் புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற் குன்றத்து (அகம் 345 :3-7)

என்றும் இது கூறப்படுகிறது.

இதனால் ஏழில்மலையில் கானமர் செல்வியாகிய கொற்றவைக்கும் கோவில் இருந்தது என்றும், ஏழில்மலையை 'நுணங்கு நுண்பனுவல் புலவன்' ஒருவன் பாடினான் என்றும் தெரிகின்றன. ஏழில்மலையைப் பாடிய புலவன் பரணராகவோ அல்லது மோசிகீரனாராகவோ இருத்தல் வேண்டும்.

ஏழில்மலை, மேற்குக் கடற்கரையோரமாகக் கண்ணனூருக்கு வடமேற்கே 16 மைல் தூரத்தில் இருக்கிறது. ஏழில்மலை என்னும் இரயில் நிலையமும் உண்டு.

சங்க காலத்தில் துளு நாட்டைச் சேர்ந்திருந்த இந்த ஏழில்மலை இப்போது மலையாள நாட்டில், மலபார் மாவட்டத்துச் சிறைக்கல் தாலுக்காவில் சேர்ந்திருக்கிறது. ஆனால், இது முன்பு துளு நாட்டைச் சேர்ந்திருந்தது. பிற்காலத்தில், மலையாளிகள் இதனை 'ஏழிமல' என்று அழைத்தனர். ழகரத்தை உச்சரிக்கத் தெரியாத மேல்நாட்டார் முதலியோர் இதனை 'யய்முல்லை'(Yai Mullay) என்று கூறினார்கள். சிலர், ஏழில்மலையை எலிமலை என்று வழங்கினார்கள். வடமொழியாளர், எலிமலை என்பதை மூஷிகமலை என்று மொழிபெயர்த்துக்கொண்டு தங்கள் வழக்கம்போல மூஷிக வம்சம் என்னும் பெயருள்ள நூலை எழுதினார்கள். மூஷிக வம்சத்தில் ஏழில்மலையை யரசாண்ட பிற்கால அரசர்களைப் பற்றியும் அது சம்பந்தமான புராணக் கதைகளையும் எழுதி வைத்தனர்.

பிற்காலத்தில் வாணிகத்துக்காக வந்த போர்ச்சுகீசியர் இந்த மலையை எலிமலை என்றே கூறினார்கள். அவர்கள் 'மவுண்ட்-டி-எலி (Monte D' Ele) என்று கூறினார்கள். அப்பெயர் பிற்காலத்தில் 'டெல்லி' (Delli) என்று குறுகிற்று.

ஏழில்மலை, அரபிக்கடலில் 27 மைல் தூரம் வரையில் தெரிந்தது. வாஸ்கோ-டி-காமா என்னும் போர்ச்சுக்கீசியர் முதல் முதல் இந்தியாவுக்கு வந்தபோது அவருக்குக் கடலில் முதல் முதலாகக் காணப்பட்ட இடம் இந்த மலையே. 1498இல், ஏழில்மலையைக் கடலில் இருந்து கண்ட அவர் தன் கப்பலைக் கண்ணனூருக்கு அருகில் செலுத்திக் கரை இறங்கினார்.

ஏழில்மலை கடற்கரைக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. இங்குக் கடற்கொள்ளைக்காரர் இருந்தனர் என்று

முற்காலத்துப் பிற்காலத்து அயல் நாட்டார் எழுதியிருக்கிறார்கள் துளு நாட்டை யரசாண்ட நன்ன அரசர்களும் கடற் கொள்ளைக்காரருக்கு உதவியாக இருந்தனர் என்பது தெரிகின்றது.

கடம்பின் பெருவாயில்

கடம்பின் பெருவாயில் என்னும் ஊர் துளு நாட்டில் இருந்தது. இவ்வூரில் நடந்த போரில், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், நன்னனை வென்றான்.

> உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
> நிலைச் செறுவின் ஆற்றலை யறுத்தவன்
> பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
> (*பதிற்று*. 4ஆம் பத்து, பதிகம்)

வாகைப் பெருந்துறை

இதுவும் துளு நாட்டின் தெற்கில் இருந்த ஊர். இது வாகைப் பறந்தலை என்றும் பெயர்பெற்றிருந்தது. இவ்வூரில் பசும் பூட்பாண்டியனுடைய சேனைத் தலைவனான அதிகமான் என்பவன் போர் செய்து இறந்தான்.

> கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
> பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
> களிறொடு பட்ட ஞான்றை (*குறுந்* 393 : 3-5)

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் இவ்வூரில் நன்னனுடன் போர் செய்தான்.

> குடாஅது
> இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
> பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய
> வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் (*அகம்* 199 : 18-22)

கடல் துருத்தி

துளு நாட்டைச் சேர்ந்து அரபிக்கடலில் சிறுசிறு தீவுகள் சில இருந்தன. அந்தத் தீவுகள் துளு நாட்டு 'நன்ன' அரசரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. அத்தீவுகள் ஒன்றில் நன்னனுக்குக் கீழடங்கிய குறும்பத் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் கடம்ப மரத்தைத் தன்னுடைய காவல் (அடையாள) மரமாக வளர்த்து வந்தான். அவன் நன்னனுடைய தூண்டுதலின்மேல் சேர நாட்டுக்கு வாணிகத்தின் பொருட்டு வந்த யவனக் கப்பல்களைத் தடுத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். அந்தக் குறும்ப அரசனை, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் மகனான சேரன்

செங்குட்டுவனைக் கொண்டு வென்றான் (*பதிற்றுப்பத்து* 2ஆம் பத்து, 5ஆம் பத்து).

துளு நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் (இப்போதைய மலையாளதேசம்) மேற்கே அரபிக்கடலில் நூறு மைலுக்கு அப்பால் லக்ஷத்தீவு என்று பெயருள்ள தீவுகள் இருக்கின்றன. இத்தீவுகள் பவழப் பூச்சிகளால் உண்டானவை. கடல் மட்டத்துக்கு மேல் 10 அல்லது 15 அடி உயரம் உள்ளவை. வடக்குத் தெற்காக இத்தீவுகள் 1 மைல் முதல் 6 மைல் நீளமும் ஏறத்தாழ ஒரு மைல் அகலமும் உள்ளவை.

இத்தீவுகளுக்கு அருகில் கடல் அலை இல்லாமல் கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாக இருக்கிறது. புயல் அடித்தாலும் இங்குக் கப்பல்களுக்கு ஆபத்து நேரிடுவதில்லை.

இத்தீவுகளில் வடக்குப் பாகத்தில் உள்ள 8 தீவுகளுக்கு அமிந்தீவு என்று இப்போது பெயர் கூறப்படுகிறது. இவை துளு நாட்டோடு சேர்ந்தவை. இங்குப் பலாமரமும் கமுகுமரமும் பயிராகின்றன. தென்னையும் உண்டு. வரகு, கேழ்வரகு தானியங்கள் பயிராகின்றன. நெல் பயிராவதில்லை.

சங்க நூல்களில் கூறப்படுகிற கடல் துருத்தி என்பது இத்தீவுகளாக இருக்கக்கூடும். கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த குறும்பர்கள் இத்தீவுகளில் இருந்தவராதல் வேண்டும். இங்கிருந்த குறும்பர் துளு நாட்டு நன்னனுக்குக் கீழடங்கி வாணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். சேரன் செங்குட்டுவனால் வெல்லப்பட்டவர் இத்தீவினராதல் வேண்டும்.

மங்களூர்

இதற்கு மங்கலாபுரம் என்னும் பெயரும் உண்டு. இது துளு நாட்டில் நேத்திராவதி என்னும் ஆறு கடலில் கலக்கிற இடத்துக்கு அருகில் இருந்தது. இது இப்போதும் அப்பெயரோடு இருக்கிறது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலிருந்த தாலமி (Ptolemy) கூறுகிற மகனூர் என்பது இந்த மங்களூரே. இங்குள்ள மங்களாதேவியின் பெயரே இவ்வூருக்கு அமைந்து மங்களூர் என்று பெயர் பெற்றது. மங்களாதேவி என்பது பௌத்த மதத் தெய்வம். மங்களா தேவிக்கு ஆதிதேவி என்றும் தாராதேவி என்றும் வேறு பெயர்கள் உண்டு (*J.R.A.S.*, 1894, p. 85). இக்கோவில் இப்போதும் கிராம தேவதைக்கோவிலாக இருந்து வருகிறது. இதற்குச் சிறிது தூரத்தில் 'துர்க்கை' கோயில் ஒன்று இருக்கிறது. அது வேறு கோவில்.

மங்களூருக்குத் தெற்கே 2 ½ மைல் தூரத்தில் கதிரி என்னும் பேர் பெற்ற இடம் இருக்கிறது. இங்கு மஞ்சுநாதர் கோவில் இருக்கிறது. இது அக்காலத்தில் பேர்போன பௌத்தக் கோவிலாக இருந்தது. பௌத்தக் கோவில்களாகையால் இந்தக் கதிரிக் கோவிலுக்கும்

மங்களாதேவி கோவிலுக்கும் ஆதிகாலத்தில் தொடர்பு இருந்தது. *சிலப்பதிகாரத்தில்* கூறப்படுகிற மங்கலாதேவி கோவிலும் பாசண்டச் சாத்தன் கோவிலும் முறையே மங்கலாதேவி கோவிலும் கதிரிக் கோவிலும் ஆகும். கதிரிக் கோவில் இப்போது மஞ்சுநாதர் கோவில் என்று கூறப்படுகிறது. மஞ்சுநாதர் என்பது பௌத்தரின் போதி சத்துவருக்குப் பெயர். இக்கோவிலில் இப்போதுள்ள லோகேசுவரர் உருவம் பௌத்தரின் அவலோகீஸ்வரர் உருவமே. மகாயான பௌத்தத்தில், லோகேசுவரர் என்னும் லோகநாதர் தாரைதேவியின் கணவன் என்று கூறப்படுகிறார். *சிலப்பதிகாரத்தில்* கதிரிநாதர், பாசாண்டச்சாத்தன் என்று கூறப்படுகிறார்.

கதிரி மஞ்சுநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள மலையில் இயற்கையாக அமைந்த குகைகள் உள்ளன. அவை பௌத்தப் பிக்குகள் தங்கியிருந்த குகைகளாகும். அக்குகைகள் இப்போது பாண்டவ குகைகள் என்று கூறப்படுகின்றன.

மங்களூரில் உள்ள மங்கலாதேவியின் கோவிலைப் பற்றியும் அதன் அருகில் உள்ள கதிரிக் கோவிலைப் பற்றியும் *சிலப்பதிகாரத்தில்* இவ்வாறு கூறப்படுகிறது: "மங்கல மடந்தை கோட்டம்" (*சிலம்பு*, வரந்தருகாதை 88). 'ஆயிழைக் கோட்டம்' (*சிலம்பு*, வரந். 61. ஆயிழைக் கோட்டம்—மங்கலா தேவி கோயில். அரும்பதவுரை)

மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரை சேணுயர் சிலம்பில்

(*சிலம்பு*, வரந்தரு. 153-154)

(இதில் மங்கல மடந்தை என்பதற்கு மங்கல தேவி என்று அரும்பதவுரையாசிரியர் உரை எழுதுவது காண்க. இதன் அடிக்குறிப்பில் *சிலப்பதிகாரப்* பதிப்பாசிரியராகிய டாக்டர் உ.வே. சாமிநாதையர், "மங்கலா தேவி என்றது, கண்ணகியை; மங்கலாபுரம் அல்லது மங்களூர் என்பது இத்தேவி காரணமாக வந்த பெயர்" என்று குறிப்பு எழுதியிருப்பது தவறு என்பது சொல்லாமலே தெரிகிறது. இதுபற்றி இங்கு விளக்கம் தேவையில்லை.)

மங்கலாதேவியின் கோட்டத்துக்கு அருகில் இருந்ததாகச் *சிலம்பு* கூறுகிற 'செங்கோட்டுயர் வரை சேணுயர்சிலம்பு' கதிரிக்கு அருகில் உள்ள மலையாகும். இங்குப் பௌத்த முனிவர் தங்கியிருந்த இயற்கைக் குகைகள் இருந்தன என்று முன்னமே கூறினோம். இங்குள்ள சுனைகளில் வெள்ளைக்கடுகு போன்ற கற்களும் முருக்கம்பூ நிறம் போன்ற சிறுகற்களும் இருந்தன என்றும் மாவைக் கரைத்தது போன்ற நீர் இங்கு இருந்தது என்றும் *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

மங்கல மடந்தை கோட்டகத் தாங்கண்
செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பில்

பிணிமுக நெடுங்கல் பிடர்ச்சிலை நிரம்பிய
அணிகயம் பலவுள. ஆங்கவை யிடையது
கடிப்பகை நுண்கலும் கவிரிதழ்க் குறுங்கலும்
இடிக்கலப் பன்ன இழைந்துகு நீரும்
உண்டோர் சுனை அதனுள்புக் காடினர்
பண்டைப் பிறவியர் ஆகுவர் (*சிலம்பு,* வரந்தரு. 53-60)

(கடிப்பகை நுண்கல்—வெண் சிறு கடுகு போன்ற நுண்ணியல் கல். கவிர் இதழ்க் குறுங்கல்—முருக்கம்பூப் போன்ற நிறத்தையுடைய குறிய கல். இடிக் கலப்பன்ன—மாவைக் கரைத்தா லொத்த. அரும்புதவுரை.)

சங்க இலக்கியங்களிலிருந்து அறியப்படுகிற துளு நாட்டு ஊர்களையும் இடங்களையும் இதுகாறும் அறிந்தோம். இனி, சங்க இலக்கியங்களிலிருந்து அறியப்படுகிற நன்ன அரசருடைய வரலாற்றைப் பார்ப்போம்.

2. நன்னர் வரலாறு

அரசியல் சூழ்நிலை

நம் ஆராய்ச்சிக்குரிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலே துளு நாட்டின் அரசியல் சூழ்நிலை எப்படி இருந்தது என்பதைக் கூறுவோம். துளு நாட்டின் மேற்கில் அரபிக் கடல் இருந்தது. இக்கடல் வழியாக யவன, அராபிய வாணிகக் கப்பல்கள் துளு நாட்டுத் துறைமுகப்பட்டினங்களாகிய மங்களூர், நறவு முதலிய ஊர்களுக்கு வந்துபோயின. துளு நாட்டுக்கு அருகிலே அரபிக் கடலிலே 'கடல் துருத்தி' என்னும் சிறு தீவுகள் இருந்தன. அவை துளு நாட்டுக்குரியவாக இருந்தன.

துளு நாட்டின் தெற்கே சேர நாடு இருந்தது. (சேர நாடு, இப்போது மலையாளம் எனப்படும் கேரள நாடாக மாறிப் போயிற்று.) சேரர் என்னும் தமிழரசர்கள் சேர நாட்டையரசாண்டார்கள். சேர மன்னருக்கும் துளு நாட்டு அரசருக்கும் எப்போதும் பகை. அவர்கள் அடிக்கடி ஒருவர்க்கொருவர் போர் செய்துகொண்டிருந்தார்கள்.

துளு நாட்டின் கிழக்கே வடகொங்கு நாடும் கன்னட நாடும் இருந்தன. இப்போதுள்ள மைசூர் இராச்சியத்தில் பாய்கிற காவிரி ஆற்றின் தென்கரை வரையில் வடகொங்கு நாடு அக்காலத்தில் பரவியிருந்தது. வடகொங்கு நாட்டில் அக்காலத்தில் பேரரசர் இல்லை. புன்னாடு, எருமை நாடு, அதிகமான் நாடு (தகடூர்) முதலிய சிறுசிறு நாடுகளைச் சிற்றரசர்கள் அரசாண்டனர். ஆகவே, சேர சோழ, பாண்டிய அரசர்களும் துளு நாட்டு அரசரும் வட கொங்கு நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள அடிக்கடி போர் செய்துகொண்டிருந்தார்கள். அக்காலத்தில் வடகொங்கு நாடு இவ்வரசர்களின் போர்க்களமாக இருந்தது.

துளு நாட்டின் கிழக்கே (வடகொங்கு நாட்டுக்கு வடக்கே) கன்னட நாடு இருந்தது. அது அக்காலத்தில் சதகர்ணி யரசரின் தக்காணப் பேரரசுக்கு உள்ளடங்கியிருந்தது. (சதகர்ணியரசருக்குச் சாதகர்ணி என்றும் சாதவாகனர் என்றும் நூற்றுவர் கன்னர் என்றும் பெயர்கள் வழங்கின.)

துளு நாட்டின் வடக்கே மேற்குக் கடற்கரையைச் சார்ந்திருந்த நாடுங்கூட அக்காலத்தில் சதகர்ணியரசரின் தக்காண இராச்சியத்துக் குட்பட்டிருந்தது. ஆனால், சாகர் என்னும் மேற்கு சத்ராப்



படம் 2

அரசர்கள் அப்பகுதிகளைக் கைப்பற்றினார்கள். அவர்கள் கைப்பற்றிய அப்பகுதிகளைச் சதகர்ணியரசர் போரிட்டு மீட்டுக்கொண்டனர். மறுபடியும் சத்ராப் அரசர் அப்பகுதியைக் கைப்பற்றினர். மீண்டும் அதைச் சதகர்ணியரசர் மீட்டுக் கொண்டனர். இவ்வாறு அவ்வடபகுதி அடிக்கடி சத்ராப்—சதகர்ணி யரசரின் போர்க்களமாக இருந்தது. ஆகவே, துளு நாட்டரசருக்கு அக்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் போர் செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கவில்லை. தெற்கே சேர அரசருடனும் தென் கிழக்கே வடகொங்கு நாட்டுடனும் அவர்கள் அடிக்கடி போர் செய்யவேண்டியிருந்தது.

துளு நாட்டரசர்

துளு நாட்டு (கொங்கணத்து) நன்னருடைய வரலாறு சங்க இலக்கியங்களிலிருந்து சிறிது கிடைக்கிறது. கொங்கணத்து அரசர் கொங்காணங் கிழார் என்று பெயர் பெற்றிருந்தனர். துளு நாடு கொங்கணம் என்றும் கொண்கானம் என்றும் கொண் பொருங்காணம் என்றும் கூறப்பட்டது. அவர்கள் குடும்பப் பெயர் நன்னன் என்பது. அவர்கள் நன்னன் வேண்மான் என்றும் கூறப்பட்டனர். நன்னன் குடும்பப் பெண்டிர் 'நன்னன் வேண்மாள்' என்று பெயர் கூறப்பட்டனர் (*சிலம்பு*, காட்சிக்காதை 5ஆம் அடி. அரும்பதவுரை காண்க).

கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் துளு நாட்டை அரசாண்ட நன்ன அரசரைப் பற்றித் தமிழில் சங்க இலக்கியங்களில் மட்டும் கிடைக்கின்றன. வேறு மொழி நூல்களில் இவ்வரலாறு கிடைக்கவில்லை.

நன்னர்களில் மூன்று அரசரைப் பற்றிச் சில செய்திகள் சங்க நூல்களிலிருந்து தெரிகின்றன. அந்த மூன்று அரசரும் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர் எனத் தெரிகின்றனர். இவர்களுக்கு முன்பிருந்த நன்னர்களைப் பற்றியும் பின்பு இருந்த நன்னர்களைப் பற்றியும் ஒன்றுந் தெரியவில்லை. இந்த மூன்று நன்னர்களை முதலாம் நன்னன், இரண்டாம் நன்னன், மூன்றாம் நன்னன் என்று பெயர் இட்டு ஆராய்வோம்.

முதலாம் நன்னன் (ஏறத்தாழ கி.பி. 100 முதல் 125)

இவன் போரில் சிறந்த வீரனாக இருந்தான். பிண்டன் என்னும் வலிமிக்க சிற்றரசனுடன் போர் செய்து அவனை வென்றான். அந்தப் போர் எங்கு நடந்தது, அந்தப் பிண்டன் என்பவன் யார் என்பன தெரியவில்லை. பரணர் என்னும் புலவர் இச்செய்தியைக் கூறுகிறார்.

உறுபகை தரூஉம் மொய்ம்மூசு பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்

பாரத்துத் தலைவன் ஆர நன்னன் (*அகம்* 152 : 9-12)

இந்த நன்னன் வேறு அரசர்களுடனும் போர் செய்து அவர்களை வென்றான் என்று கூறப்படுகிறான். இவன் வென்ற வேறு அரசர் பெயர் கூறப்படவில்லை. தான் போரில் வென்ற அரசருடைய மனைவியரின் கூந்தலை மழித்து அக்கூந்தலினால் கயிறு (முரற்சி) திரித்தான் என்று கூறப்படுகிறான். இச்செய்தியை பரணர் என்னும் புலவரே கூறுகிறார்.

விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே (நற். 270 : 8-10)

இவன் இரவலருக்கு யானைகளைப் பரிசு வழங்கினான்.

இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன் (அகம் 152 : 11-12)

இவன் பெண் கொலை புரிந்த நன்னன் என்றுங் கூறப்படு கிறான். அச் செய்தி இது:

இவனுக்குரிய தோப்பு ஒன்றில் மாமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் ஓரமாகச் சிற்றாறு ஒன்று பாய்ந்துகொண்டிருந்தது. அந்த மரத்திலிருந்த மாங்கனியொன்று சிற்றாற்றில் விழுந்து நீரில் மிதந்து கொண்டு போனதைச் சிறிது தூரத்தில் நீராடிக்கொண்டிருந்த ஒரு பெண்மகள் எடுத்துத் தின்றாள். அப்பெண் அக்கனியைத் தின்ற செய்தியை நன்னன் அறிந்தான். சினங்கொண்டு அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான்.

அரசருக்குரிய பொருள்களைக் களவு செய்தவருக்கு அக் காலத்தில் கொலைத் தண்டனை விதிப்பது வழக்கம். பாண்டியனுடைய பொற்சிலம்பைக் களவு செய்தான் என்று (பொய்யாகக்) குற்றஞ்சாட்டப்பட்ட கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது, அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த இந்தச் சட்டங் காரணமாகத்தான்.

அரசனாகிய நன்னனுடைய மாங்கனி என்பதை யறியாமல், நீரில் மிதந்து வந்த மாங்கனியை எடுத்துத் தின்ற குற்றத்துக்காக அப்பெண்ணுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்பெண்ணின் தந்தை நன்னனை வேண்டிக்கொண்டான். அப்பெண் அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்றும், அந்தக் குற்றத்துக்குத் தண்டமாகத் தொண்ணூற்றொன்பது யானைகளையும் அப்பெண்ணின் எடையளவு பொன்னையுங் கொடுப்பதாகவும் அப்பெண்ணைக் கொல்லாமல் விடவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டான். நன்னன் அவ்வேண்டுகோளுக்கு உடன்படாமல் அப்பெண்ணைக் கொன்றுவிட்டான். இக்கொடுஞ்செயலினால் மக்கள் அவனை வெறுத்துப் 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்று தூற்றினார்கள். இச்செய்தியைப் பரணர் என்னும் புலவர் கூறுகிறார்.

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றொடு அவள் நிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇ யரோ (குறுந்தொகை 292 : 1-5)

இக்கொடுஞ்செயலினால் இவன் மீது வெறுப்படைந்தனர் கோசர் என்னும் இனத்தார். கோசர் போர்த்தொழில் செய்பவர். அவர்கள் ஏதோ சூழ்ச்சி செய்து நன்னனுடைய மாமரத்தை வெட்டி விட்டனர்.

அரசனுடைய மாமரத்தை அவனுடைய ஆட்சிக்குட்பட்ட மக்கள் வெட்டினார்கள் என்றால், அச்செயல் அரசனை அவமானப்படுத்தும் செயலாகும். கோசர் ஏதோ காரணத்தைக் கண்டுபிடித்து அக்காரணத்தை ஆதாரமாகக் கொண்டு நன்னனுடைய மாமரத்தை வெட்டிவிட்டனர். இச்செய்தியையும் பரணரே கூறுகிறார்.

நன்னன்
நறுமா கொன்று ஞாட்பிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே
(குறுந்தொகை 73 : 2-5)

(குறிப்பு: இச்செய்யுளில் 'நறுமாகொன்று' என்று இருப்பதைத் தவறாகப் பொருள் செய்துகொண்டார் சரித்திரப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள். கோசர், நன்னனுடைய பட்டத்து யானையைக் கொன்றுவிட்டனர் என்று அவர் எழுதியுள்ளார்.[1] மா என்பதற்கு விலங்கு (யானை) என்றும் பொருள் உண்டாகையால் அவ்வாறு அவர் எழுதிவிட்டார். அது தவறு. மா என்பது இங்கு மாமரத்தையே குறிக்கும்.)

கடல் துருத்திக் குறும்பர்

நன்னனுடைய துளு நாட்டுக்கு அருகிலே கடலிலே ஒரு சிறு தீவு இருந்தது. (இத்தீவைப் பற்றி முன்னமே கூறியுள்ளோம்.) அத்தீவில் குறும்பனாகிய ஒரு வீரன் இருந்தான். அவன் அந்தத் தீவில் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வைத்துக்கொண்டிருந்தான். அவன் தன்னைச் சார்ந்த வீரர்களுடன் சேர்ந்து, அக்காலத்தில் ரோமாபுரியிலிருந்து வாணிகத்தின் பொருட்டுச் சேர நாட்டுக்கு வந்துகொண்டிருந்த யவனக் கப்பல்களைக் கொள்ளையடித்து அக்கப்பல்கள் சேர நாட்டுக்கு வருவதைத் தடுத்துக்கொண்டிருந் தான். இவ்வாறு பல ஆண்டுகளாக நடந்துகொண்டிருந்தது. இந்தத் தீவிலிருந்த குறும்பச் சிற்றரசன் நன்னனுக்குக் கீழடங்கியவன். நன்னனுடைய தூண்டுதலினாலே அக்குறும்பன் யவனக் கப்பல்களைச் சேர நாட்டுத் துறைமுகங்களுக்கு வராதபடி கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். கி. பி. முதல் நூற்றாண்டின்

இறுதியில் இருந்த பிளைனி என்னும் யவனர், இவ்விடத்தில் கடற் கொள்ளைக்காரர் இருந்ததை எழுதியிருக்கிறார்.

கடல் துருத்தியில் (கடல் தீவில்) இருந்துகொண்டு யவன வாணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த படியால், யவன வாணிகக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வருவது தடைப்பட்டது. யவனக் கப்பல்கள் துளு நாட்டுக் கடற்கரையைக் கடந்துதான் சேர நாட்டுக்கு வரவேண்டும். யவனக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு வருவது தடைப்பட்டபடியால் சேர நாட்டு வாணிகம் பெரிதும் குறையத் தொடங்கிற்று. இதனால், கடல் துருத்தியில் (தீவில்) இருந்த குறும்பரை அடக்க வேண்டியது சேர அரசனின் கடமையாக இருந்தது.

கடற் போர்

அக்காலத்தில் சேர நாட்டை யரசாண்ட சேர அரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன். இந்த நெடுஞ் சேரலாதனுக்கு நான்கு மக்கள் இருந்தனர். அவர்கள் களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் (சேரன் செங்குட்டுவன்), ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இளங்கோ அடிகள் என்பவராவர். இதனைப் *பதிற்றுப்பத்து* 4ஆம் பத்து, 5ஆம் பத்து, 6ஆம் பத்துப் பதிகங்களினாலும் *சிலப்பதிகாரம்* வரந்தருகாதை (171-181) பதிகம் இவற்றின் உரைகளினாலும் அறிகிறோம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடல் தீவிலிருந்த குறும்பனை அடக்குவதற்காக அவன் மேல் படையெடுத்தான். இவன், கடற்படை யொன்றைத் தன் மகனாகிய செங்குட்டுவன் தலைமையில் அனுப்பினான். அக்காலத்தில் இளவரசனாக இருந்த செங்குட்டுவன் கடற்படையோடு சென்று கடல்தீவிலிருந்த குறும்பருடன் போர் செய்து அவர்களை வென்று அவர்கள் காவல் மரமாக வளர்த்து வந்த பேர் போன கடம்ப மரத்தைத் துண்டு துண்டாக வெட்டி அதனால் முரசு செய்தான். கடல் குறும்பர்கள் அடியோடு ஒழிந்தனர். அதன் பிறகு யவனக் கப்பல்கள் வாணிகத்தின் பொருட்டுச் சேர நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து வாணிகஞ் செய்தன.

கடல் துருத்திப் போர் இமயவரம்பன் நெடுஞ்சேரலான் காலத்தில், அவன் மகனான சேரன் செங்குட்டுவன் இளவரசனாக இருந்த காலத்தில் நிகழ்ந்தது. அதனால் கடற்போரை வென்றவர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்றும் சேரன் செங்குட்டுவன் என்றும் *பதிற்றுப்பத்து* 2ஆம் பத்தும் 5ஆம் பத்தும் கூறுகின்றன. செங்குட்டுவன், கடற்போரைத் தானே முன்னின்று நடத்தி வெற்றி

பெற்றபடியால் அவன் 'கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்' என்று பெயர்பெற்றான்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடற்போரை வென்ற செய்தியைப் *பதிற்றுப்பத்து* 2ஆம் பத்து இவ்வாறு கூறுகிறது:

பவர் மொசிந்து ஓம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பின்
போரடு தானைச் சேர லாத (2ஆம் பத்து 1 : 12-16)

என்று கூறுகிறது.

இதில், 'திரள் பூங்கடம்பின் கடியுடை முழு முதல் துமிய ஏய்' என்று கூறப்படுவது காண்க (ஏய்—ஏவி). நெடுஞ்சேரலாதன் கடற்போரைச் செய்யத் தன் மகனை ஏவினான் என்பதும் தான் நேரில் அப்போரைச் செய்யவில்லை என்பதும் இதனால் தெரிகின்றன.

இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சே ரலாதன் வாழ்க அவன் கண்ணி'
(2ஆம் பத்து 10 : 2-5)

என்று நெடுஞ்சேரலாதன் கடற்போர் வென்ற செய்தி கூறப்படுகிறது.

நெடுஞ்சேரலாதனுடைய மகனான கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் இக்கடற்போரை நேரில் சென்று நடத்தி வெற்றிபெற்றதைப் *பதிற்றுப்பத்து* 5ஆம் பத்துச் செய்யுட்கள் கூறுகின்றன.

தானை மன்னர்
இனி யாருளரோ நின்முன்னு மில்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்கு திரைப் பனிக்கடல் மறுத்திசினோரே
(5ஆம் பத்து 5 : 17-22)

இதில், கடற்போரைச் செய்தவர் செங்குட்டுவனுக்கு முன்னர் ஒருவருமிலர் என்று கூறப்படுவது காண்க. இதனால், கடற்போரைத் தன் தந்தையின் பொருட்டு முன்னின்று நடத்தியவன் செங்குட்டுவனே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

செங்குட்டுவன் கடற்போரைச் செய்ததைக் கூறுகிற செய்யுட்கள் வேறு சில உள்ளன. அவற்றையெல்லாம் இங்குக் காட்ட வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

சேர அரசர் கடல் தீவிலிருந்த குறும்பரை வென்றதற்கும் துளு நாட்டு நன்னருக்கும் என்ன பொருத்தம், என்ன தொடர்ப்பு என்று வாசகர்கள் கருதக்கூடும்.

கடல் தீவில் இருந்த குறும்பருக்கும் துளு நாட்டு நன்னனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.[2] இரண்டு காரணங்களைக் கொண்டு இருவருக்கும் தொடர்புண்டென்பதை யூகிக்கலாம். கடல்தீவு மிகச் சிறியது. அத்தீவிலிருந்தவர் தங்கள் தீவுக்கு அடுத்திருந்த நாட்டினரின் உதவி இல்லாமல் தனித்து இயங்கும் வாய்ப்பு உடையவர் அல்லர் என்பது முதல் காரணம். அந்தக் கடல்தீவு துளு நாட்டுக்கு அருகில் இருந்தபடியால் துளு நாட்டு அரசரின் ஆதிக்கத்தில் அது இருந்திருக்க வேண்டும் என்பது இரண்டாவது காரணம்.

எனவே, துளு நாட்டு நன்னனின் ஆதிக்கத்திலிருந்த கடல்தீவுக் குறும்பர், நன்னனுடைய ஏவுதலின்மேல், யவனக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகங்களுக்குப் போகாதபடி குறும்பு செய்திருக்க வேண்டும், இக்காரணம் பற்றித்தான் சேர மன்னர் கடல் தீவுப் போரைச் செய்தது பற்றி இங்குக் கூறவேண்டியதாயிற்று.

முதலாம் நன்னனுடைய வரலாறு முழுமையும் தெரியவில்லை. ஆனால், அவனுக்கும் சேர அரசருக்கும் பரம்பரையாகப் பகைமை இருந்தது என்பது தெரிகிறது. இவன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் சமகாலத்தவனாதலால், அவன் இருந்த காலமாகிய கி. பி. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இருந்தவனாதல்வேண்டும். அதாவது உத்தேசமாகக் கி.பி 100 முதல் 125 வரையில் முதலாம் நன்னன் இருந்தான் என்று கொள்ளலாம்.

இரண்டாம் நன்னன் (ஏறத்தாழ கி. பி. 125–150)

முதலாம் நன்னனுக்குப் பிறகு அவன் மகனான நன்னன் இரண்டாமவன் துளு நாட்டை யரசாண்டான். இவன் துளு இராச்சியத்தின் எல்லையை விரிவுபடுத்த முயன்றான். அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியையுங் கண்டான். சேர இராச்சியத்தின் வடக்கிலிருந்த சேரருக்கு உரிய பூழி நாட்டை வென்று அதைத் தன் துளு நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். மேலும், இவனுடைய துளு நாட்டுக்குக் கிழக்கே இருந்த கொங்கு நாட்டின் வடபகுதிகளைக் கைப்பற்றவும் முயற்சி செய்தான்.

இவனுடைய சேனைத் தலைவன் மிஞிலி என்பவன். மிஞிலி சிறந்த போர் வீரன். இவன் பாரம் என்னும் ஊரில் இருந்தான்.

முதலாம் நன்னன் காலத்துக்கு முன்பிருந்தே சேர அரசர் தென் கொங்கு நாட்டைச் சிறிதுசிறிதாகக் கைப்பற்றித் தங்கள் சேர இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டனர். அக்காலத்தில் கொங்கு நாட்டைச் சிறுசிறு குறுநில மன்னர் ஆண்டனர். சேர, சோழ,

பாண்டிய நாடுகளில் பேரரசர் இருந்ததுபோலக் கொங்கு நாட்டில் பேரரசன் இல்லை. சிற்றரசர்கள் ஆட்சி செய்த கொங்கு நாட்டை சேர அரசரும் துளு நாட்டு அரசரும் முறையே தென் கொங்கு நாட்டையும் வடகொங்கு நாட்டையும் சிறிதுசிறிதாகக் கைப்பற்றிக்கொண்டிருந்தார்கள். சேர அரசரும் துளு மன்னரும் கொங்கு நாட்டைக் கைப்பற்றுவதைக் கண்ட சோழ, பாண்டிய அரசர்களும் கொங்கு நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சி செய்தார்கள். இவ்வாறு, கொங்கு நாடு கடைச்சங்க காலத்தின் இறுதியில் (கி. பி. 2ஆம் நூற்றாண்டில்) தமிழ் அரசர்களின் பொதுப் போர்க்களமாக இருந்தது.

கொங்கு நாட்டைச் சேர்ந்த உம்பற்காடு (யானை மலைப் பிரதேசம்) என்னும் பிரதேசத்தைச் சேரர் முதலில் கைப்பற்றினர். உம்பர் காட்டை வென்று அங்குத் தன் ஆட்சியை நிறுவினவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் (3ஆம் பத்து, பதிகம்). கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கொல்லிக் கூற்றத்தை அக்காலத்தில் ஓரி என்னும் சிற்றரசன் அரசாண்டான். அப்போது, சேர அரசன், மலையமான் திருமுடிக்காரி என்பவனைத் தன் சேனைத் தலைவனாகக் கொண்டு அவன் மூலமாக ஓரியைக் கொன்று ஓரியின் கொல்லிக் கூற்றத்தைக் கைப்பற்றினான். இவ்வாறு சேரர் கொங்கு நாட்டில் ஆதிக்கம் பெறுவது சோழ, பாண்டியருக்கு விருப்பமில்லை. மேலும், கொல்லிக் கூற்றத்துக்கு அருகில் இருந்த கொங்கு நாட்டின் மற்றொரு சிற்றரசனாகிய தகடூர் அதிகமான், சேரரும் துளு நாட்டு நன்னரும் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கடைசியில் தன்னையும் வென்றுவிடுவார்கள் என்று அஞ்சினான். இவ்வாறிருந்தபோது பசும்பூண் பாண்டியன் என்னும் பாண்டிய மன்னன், தென்கொங்கு நாட்டில் சேர அரசர் முன்னமே கைப்பற்றியிருந்த ஊர்களைத் தவிர ஏனைய ஊர்களைக் கைப்பற்றிக்கொண்டான்.

பசும்பூண் பாண்டியன்

பசும்பூண் பாண்டியனைத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்று சிலர் தவறாகக் கருதுகிறார்கள். பசும்பூண் பாண்டியன் வேறு, நெடுஞ்செழியன் வேறு. தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்குப் பசும் பூண் செழியன் என்னும் பெயரும் உண்டு (*புறம்* 76 : 9). பசும்பூண் செழியன் வேறு, பசும்பூண் பாண்டியன் வேறு. நெடுஞ்செழியனுக்கு மூன்று தலைமுறைக்கு முன்பு இருந்தவன் பசும்பூண் பாண்டியன். இதற்குச் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. இச்சான்றுகளைக் காட்டி விளக்குவதற்கு இது இடம் அன்று.

பசும்பூண் பாண்டியன், சேரன் செங்குட்டுவனுடைய தமயனான களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரலின் காலத்திலிருந்த

பாண்டியன். பசும்பூண் பாண்டியன், கொங்கு நாட்டில் சில இடங்களை வென்று கைப்பற்றிக்கொண்டதனால், கொங்கு நாட்டுச் சிற்றரசர் சிலர் அவனுக்குக் கீழடங்கினார்கள். அவர்களில் முக்கியமானவன், தகடூரை யரசாண்ட அதிகமான் பரம்பரையைச் சேர்ந்த நெடுமிடல் அஞ்சி என்பவன். பாண்டியனுக்குக் கீழடங்கிய நெடுமிடல் அஞ்சி அப்பாண்டியனுடைய சேனைத் தலைவனாக அமைந்தான். பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டின் சில பகுதிகளை வென்று கைப்பற்றிக் கொண்டதை,

வாடாப் பூவிற் கோங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்

என்று *அகநானூறு* (செய்யுள் 253 : 4-5) கூறுகிறது.

கொங்கு நாட்டுச் சிற்றரசர்களில் முதன்மையானவர் தகடூர் அரசரான அஞ்சி யரசர்கள். அவ்வரச பரம்பரையில் வந்த நெடுமிடல் அஞ்சி, பசும்பூண் பாண்டியனுக்குக் கீழடங்கியதோடு அப்பாண்டியனுடைய சேனாபதியாகவும் அமைந்துவிட்டது கண்டு கொங்கு நாட்டார் அவனை வெறுத்தார்கள்.

அக்காலத்தில் சேர நாட்டு மன்னர் கொங்கு நாட்டில் சில இடங்களைக் கைப்பற்றியிருந்ததோடு அமையாமல் மேலும் ஊர்களைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்துகொண் டிருந்தார்கள். சங்க காலத்திலே கொங்கு நாட்டைச் சிற்றரசர் பலர் ஆட்சி செய்திருந்தார்களே தவிர முடியுடைய பேரரசர் ஒருவரும் ஆட்சி செய்யவில்லை. ஆகவே, சேர, சோழ, பாண்டிய அரசர் அச் சிற்றரசர்களை எளிதில் வென்று கொங்கு நாட்டைச் சிறிதுசிறிதாகக் கைப்பற்றிக்கொண்டிருந்தார்கள்.

கொங்கு நாட்டைக் கொஞ்சங்கொஞ்சமாகச் சேர அரசர் கைப்பற்றிக் கொண்டிருக்கும்போது, பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டில் புகுந்து அந்நாட்டு ஊர்கள் சிலவற்றைப் பிடித்துக் கொண்டது காரணமாகச் சேரர், பாண்டியன் மேல் பகை கொண்டனர். ஆகவே, அது காரணமாகச் சேர அரசர், பசும்பூண் பாண்டியனோடு போர் செய்ய நேரிட்டது. பாண்டியன் சேனையை அவன் சேனைத் தலைவனான நெடுமிடல் அஞ்சி தலைமை தாங்கி நடத்தினான். அவ்வாறு நடந்த சில போர்களில் நெடுமிடல் அஞ்சி தோல்வியும் அடைந்தான். இச்செய்தியைச் சங்கச் செய்யுட்களி லிருந்து அறிகிறோம்.

நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பொருமலை யானையொடு புலங்கடை இறுத்து
(*பதிற்றுப்பத்து* நாலாம் பத்து 2 : 10-11)

என்றும்,

நெடுமிடல் சாய்த்த பசும் பூண்பொருந்தலர்
(*அகம்* 266 : 12.)

என்றும் கூறுவது காண்க.

பாண்டியனின் துளு நாட்டுப் போர்

துளு நாட்டு நன்ன அரசர் தங்கள் நாட்டுக்கு அருகில் இருந்த வடகொங்கு நாட்டில் ஆதிக்கம் பெற முயன்றார்கள் என்று கூறினோம். அதனால், வடகொங்கு நாட்டைக் கைப்பற்ற முயன்ற பசும்பூண் பாண்டியனுக்குத் துளு நாட்டரசர் பகைவராயினர். பசும்பூண் பாண்டியன் துளு நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். பாண்டியன் சேனையை, அவனுடைய சேனைத் தலைவனான அதிகமான் நெடுமிடல் அஞ்சி நடத்திச் சென்று துளு நாட்டில் புகுந்தான். அவனை நன்னன் (இரண்டாவன்) உடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் பாழி என்னும் ஊருக்கருகில் எதிர்த்துப் போர் செய்தான். அப்போரில் அதிகமான் நெடுமிடல் அஞ்சி கொல்லப்பட்டு இறந்தான். இதை

கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி,
புள்ளிற் கேம மாகிய பெரும் பெயர்
வெள்ளத் தானை அதிகன் கொன்று உவந்து
ஒள்வான் அமலை ஆடிய ஞாட்பு (*அகம்* 142 : 9-14)

என்று அகப்பாட்டுக் கூறுகிறது.

அதிகமான் நெடுமிடல் அஞ்சி துளு நாட்டில் பாழிப் போரில் இறந்த செய்தியைக் கேட்டு அவன் மேல் வெறுப்புக் கொண்டிருந்த கொங்கர் மகிழ்ச்சி கொண்டாடினார்கள் என்று குறுந்தொகைச் செய்யுள் கூறுகிறது.

கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவான் கொங்கர் ஆர்ப்பு (*குறுந்.* 393 : 3-6)

என்று அச்செய்யுள் கூறுவது காண்க.

பசும்பூண் பாண்டியனுடைய துளு நாட்டுப் போர் தோல்வி யாக முடிந்தது. துளு நாட்டரசன் நன்னன் இரண்டாவன் வெற்றி பெற்றான். அதன் பிறகு பசும்பூண் பாண்டியனுடைய செய்தி ஒன்றும் தெரியவில்லை.

பாண்டியன் போர் முடிந்த பிறகு துளு நாட்டின் மேல் சேரன் போர் தொடுத்தான். சேரன் செங்குட்டுவனுடைய தமயனான களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல், தனக்கு அடங்காமலும்

தனக்கு எதிராகப் போர் செய்துகொண்டுமிருந்த நன்னனை அடக்குவதற்காகத் துளு நாட்டின் மேல் போர் தொடுத்தான்.

சேரன் போர்

நன்னன் இரண்டாவன் தன் மேல் படையெடுத்து வந்த சேரனுடன் போர் செய்யவேண்டியவனானான். இந்தப் போர் மிகக் கடுமையாக இருந்தது. சேரன் நன்னனை அடியோடு அழிக்க வேண்டும் என்னும் உறுதியுடன் படையெடுத்துப் போய்ப் போர் செய்தான். சேரன் நன்னனை அழிக்கவேண்டிய காரணங்கள் மூன்று இருந்தன.

முதலாவது, நன்ன அரசர், சேர நாட்டுக்கு வரும் யவன வாணிகக் கப்பல்களைச் சேர நாட்டுக்கு வராதபடி தடுத்துக் குறும்பு செய்து கொண்டிருந்தார்கள். இந்தக் குறும்பை நார்முடிச்சேரலின் தந்தையராகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (முதலாம் நன்னன் காலத்தில்) வென்றான் என்பதை மேலே கூறினோம்.

இரண்டாவது காரணம், நன்னன் இரண்டாவன் சேர நாட்டுக்கு உரிய பூழி நாட்டைப் பிடித்துக் கொண்டான். இது களங்காய்க் கன்னி நார்முடிச்சேரலின் காலத்தில் நடந்தது. ஆகவே, இழந்த பூழி நாட்டை மீட்டுக்கொள்ள வேண்டியது சேரனுடைய கடமையாக இருந்தது.

மூன்றாவது காரணம், நன்னன் வடகொங்கு நாட்டிலிருந்த புன்னாட்டைக் கைப்பற்றிக்கொண்டதாகும். அக்காலத்தில் புன்னாடு நீலக்கல் சுரங்கங்களுக்குப் பேர் பெற்றிருந்த செழிப்பான நாடாக இருந்தது. புன்னாட்டு நீலக் கற்களை உரோம தேசத்தார் விரும்பி வாங்கினார்கள். தமிழகத் துறைமுகங்களுக்கு வந்த யவனக் கப்பல் வாணிகர் சேர நாட்டு மிளகையும் புன்னாட்டு நீலக்கற்களையும் அதிக விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போனார்கள். கி.பி. 140க்கும் 169க்கும் இடையில் இருந்த தாலமி என்னும் யவனர் தமது நூலில் புன்னாட்டு நீலக்கற்களைப் பற்றியும் எழுதியுள்ளார். அவர் புன்னாட்டைப் பௌன்னாட என்று கூறுகிறார். புன்னாடு உள்நாட்டிலிருந்தது என்றும் அங்கு நீலக்கற்கள் கிடைத்தன என்றும் அந்நாட்டைக் கடற்கொள்ளைக்காரர் அரசாண்டனர் என்றும் அவர் எழுதியுள்ளார்.

கடற்கொள்ளைக்காரர் அரசாண்டனர் என்று தாலமி கூறுவது, துளு நாட்டு நன்னர்களையாகும். நன்ன அரசர்கள் கடற்கொள்ளைக்காரரை ஆதரித்தவர்கள். யவனக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வராதபடி கடற் கொள்ளைக்காரர்களைக் கொண்டு அவர்கள் தடுத்து வந்தார்கள். கடற்கொள்ளைக்காரரை ஆதரித்த நன்னன் புன்னாட்டைக் கைப்பற்றி யிருந்தபடியால், புன்னாட்டைக் கடற்கொள்ளைக்காரர் அரசாண்டனர் என்று தாலமி கூறினார் போலும்.

புன்னாட்டின் தலைநகரம் கிட்டூர் என்பது. அதைச் சங்கச் செய்யுள் கட்டூர் என்று கூறுகிறது (அகம் 44 : 10; 9ஆம் பத்து; 2 : 2; 10 : 30). பாசறைக்கும் கட்டூர் என்பது பெயர். ஆனால் இந்தக் கட்டூர் பாசறை அன்று. கட்டூராகிய கிட்டூர் பிற்காலத்தில் கிட்டிபுரம் என்று வழங்கப்பட்டது. அவ்வூர், காவிரி ஆற்றின் கிளை நதியாகிய கப்பணி ஆற்றின் கரைமேல் இருந்தது. புன்னாடு பிற்காலச் சரித்திரத்தில் 'புன்னாடு ஆறாயிரம்' என்று பெயர் பெற்றிருந்தது. (சங்க காலத்தில் வடகொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த புன்னாடு இப்போது மைசூர் இராச்சியத்துடன் இணைந்திருக்கிறது.)

நீலக்கல் சுரங்கத்துக்குப் பேர் போன புன்னாட்டைத் துளு நாட்டு நன்னன் கைப்பற்றிக்கொண்டபடியால், கொங்கு நாட்டில் அவனுடைய ஆதிக்கம் பெருகும் என்றும் அதனால் தன்னாட்டுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அறிந்தான் சேர மன்னன். ஆகவே, களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல், நன்னனை அடக்கத் துளு நாட்டின் மேல் படையெடுத்தான். நன்னனுடைய பிடியிலிருந்து புன்னாட்டை விடுவிப்பதற்காகப் புன்னாட்டின் காப்பாகச் சேரன் நன்னன்மேல் படையெடுத்துச் சென்றான்.

முதற் போர்

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், தன்னுடைய உறவினனும் சேனைத் தலைவனும் ஆகிய வெளியன் வேண்மான் ஆய்எயினன் என்பவன் தலைமையில் தன் சேனையைத் துளு நாட்டின் மேல் போர் செய்ய அனுப்பினான். வெளியன் வேண்மான் ஆய்எயினன், நன்னன் மேல் படையெடுத்துச் சென்றான். அவனை நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் பாழி என்னும் இடத்தில் எதிர்த்தான். கடுமையாக நடந்த அந்தப் போரில் ஆய்எயினன் இறந்துபோனான். அதனால், சேரன் தோல்வியடைந்தான். இதனை,

பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லிய தமையாது
(அகம் 396 : 2-6)

என்பதனாலும்,

வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவிற் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தென (அகம் 208 : 5-9)

என்பதனாலும்,

ஒன்னார்
ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவேல் கடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென (*அகம்* 181 : 3-7)

என்பதனாலும்,

கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டென
(*அகம்* 148 : 7-8)

என்பதனாலும் அறிகிறோம்.

இரண்டாம் நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் இப்போர்களை வென்றான். இந்த மிஞிலி, பாரம் என்னும் ஊரின் தலைவன் என்று முன்னமே கூறினோம். இவன், பாண்டியன் சேனாபதியாகிய அதிகமான் நெடுமிடல் அஞ்சியையும், சேரன் படைத் தலைவனான வெளியன் வேண்மான் ஆய் எயினனையும் போரில் வென்றதை மேலே கூறினோம்.

இரண்டாம் போர்

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் துளு நாட்டின் மேல் செய்த முதற் போரிலே தோல்வியடைந்தான். ஆனாலும், அவன் போர் முயற்சியை விட்டுவிடவில்லை. தானும் தன்னுடைய தம்பியாகிய சேரன் செங்குட்டுவனும் இளையதம்பியாகிய ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும் முனைந்து நின்று இரண்டாம் முறையாகத் துளு நாட்டின் மேல் போர் செய்தார்கள். இது மும்முனைப் போராக இருந்தது. நார்முடிச்சேரல் துளு நாட்டின் தென் பகுதியில் நன்னனை எதிர்த்தான். சேரன் செங்குட்டுவன் துளு நாட்டின் மேற்குக் கடற்கரையோரமாகச் சென்று துளு நாட்டை எதிர்த்தான். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் துளு நாட்டின் கிழக்குப் பக்கத்தை வடகொங்கு நாட்டில் (புன்னாட்டில்) இருந்து எதிர்த்தான்.

இப்போர் நிலைச்செருவாகச் சிலகாலம் நடந்தது. இந்த மும்முனைப் போரில் நன்னன் இரண்டாவன் தோல்வியடைந்தான். நன்னனும் அவனுடைய சேனாபதியாகிய மிஞிலியும் போரில் இறந்துபோனார்கள். இப்போர் கடம்பின் பெருவாயில் (வாகைப் பெருந்துறை) என்னும் இடத்தில் நடந்தது. இரண்டாம் போர் நார்முடிச்சேரலுக்கு முழுவெற்றியாக இருந்தது. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், தான் இழந்திருந்த பூழி நாட்டை மீட்டுக்கொண்டதோடு துளு நாட்டையும் தனக்குக் கீழ்ப்படுத்தினான். நார்முடிச் சேரல் துளு நாட்டுப் போரில்

அடைந்த வெற்றியைப் *பதிற்றுப்பத்து* 4ஆம் பத்து இவ்வாறு கூறுகிறது.

ஊழின் ஆகிய உயர்பெருஞ் சிறப்பிற்
பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யழித்துஅவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டு (பதிகம் 5-11)

பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதற் றடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்
(4ஆம் பத்து 10 : 14-16)

நார்முடிச் சேரலின் தம்பியாகிய சேரன் செங்குட்டுவன், இப்போரில் துளு நாட்டின் கடற்கரைப் பகுதியில் இருந்த வியலூர், கொடுகூர் என்னும் ஊர்களைக் கைப்பற்றிய செய்தியைக் கீழ்க்கண்ட செய்யுள்களினால் அறிகிறோம்:

உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து (5ஆம் பத்து : 10-12)

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்
(*சிலம்பு*, நடுகல். 114-115)

இப்போரின்போது செங்குட்டுவன், துளு நாட்டின் துறை முகப்பட்டினமான நறவு என்னும் பட்டினத்தையும் பிடித்தான்.

இவ்வாறு களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் தன் தம்பியருடன் சேர்ந்து துளு நாட்டை வென்று அடக்கினான். இவ்வெற்றியைக் கல்லாடனார் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன வளம் (*அகம்* 199: 18-23)

பிறகு, துளு நாடு சேரரின் ஆட்சிக்குட்பட்டது.

நன்னன் மூன்றாவன் (ஏறத்தாழ கி. பி. 150–180)

இரண்டாம் நன்னனுடைய மகனான மூன்றாம் நன்னன் சேரருக்கு அடங்கித் துளு நாட்டை யரசாண்டான். அவன், தான் சேரனுக்கு அடங்கியவன் என்பதற்கு அடையாளமாக நன்னன் உதியன் என்று பெயர் பெற்றிருந்தான். நன்னன் என்பது துளு நாட்டு அரசரின் குடிப்பெயர். உதியன் என்பது சேர நாட்டு அரசரின் குடிப்பெயர். எனவே, நன்னன் உதியன் என்பதற்குச் சேரர் ஆட்சிக்கு உட்பட்ட நன்னன் என்பது பொருள். 'நன்னன் உதியன் அருங்கடிப்பாழி' (அகம் 258 : 1)

சேரர் துளு நாட்டைத் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்த பிறகு புன்னாடும் அதன் தலைநகரமான கட்டூரும் சேரர் ஆட்சிக்குட் பட்டன.

நன்னன் மூன்றாவன் சேர அரசர்களுக்கு அடங்கித் துளு நாட்டை யரசாண்டான். பெரும்பூட்சென்னி என்னும் சோழன் வடகொங்கு நாட்டிலிருந்த புன்னாட்டின் தலைநகரமான கட்டூரின் மேல் படையெடுத்துச் சென்றபோது, சேர அரசன் சார்பாக அக் கட்டூர்ப் போரில் சோழனை எதிர்த்த சிற்றரசர்களில் இந்த நன்னன் உதியனும் ஒருவன் என்று தெரிகிறான். கட்டூரின்மேல் படை யெடுத்துவந்த பெரும்பூட்சென்னியின் சேனைத்தலைவனாகிய பழையன் என்பவனை எதிர்த்தவர்கள் இந்த நன்னனும் ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்பவர்களும் ஆவர்.

நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்னருங் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன்னணி வல்விற் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டென (அகம் 44 : 7-11)

நன்னன் மூன்றாவனுக்குப் பிறகு துளு நாட்டை யரசாண்டவர் யார் என்பது தெரியவில்லை. மூன்றாம் நன்னனுடைய பரம்பரையினரே தொடர்ந்து ஆண்டிருக்கக்கூடும். துளு நாட்டை வென்ற பிறகு நார்முடிச் சேரல் செங்குட்டுவன் இவர்களின் தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், துளு நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய நறவு (நாறாவி) என்னும் பட்டினத்தில் தங்கியிருந்தான் என்று கூறப்படுகிறான்.

அறாஅ விளையுள் அறாஅ யாணர்த்
தொடைமடி களைந்த சிலையுடை மறவர்
பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கடல் ஊதையிற் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே (6ஆம் பத்து 10 : 8-12)

துளு நாட்டு நன்னரைப் பற்றிச் சங்க நூல்களில் இவ்வளவுதான் காணப்படுகின்றன. நன்னருடைய வரலாறு இவ்வளவோடு முற்றுப் பெறுகிறது.

குறிப்பு: நன்னன் என்னும் பெயருள்ள வேறு சிற்றரசர்களும் இதே காலத்தில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) இருந்தனர். அவர்களைத் துளு நாட்டு நன்ன அரசர்கள் என்று தவறாகச் சிலர் கூறுகிறார்கள். தொண்டை நாட்டில் பல்குன்றக் கோட்டத்தில் செங்கண்மா என்னும் ஊரின் அரசனான செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன்மீது பாடப்பட்டது *மலைபடுகடாம்* என்னும் கூத்தர் ஆற்றுப்படை. இந்த நன்னன் வேறு, துளு நாட்டு நன்னன் வேறு. நன்னன் ஆஅய் (அகம் 356 : 19) என்பவனுந் துளு நாட்டு நன்னன் அல்லன். நன்னன் என்னும் பெயர் ஒற்றுமையினால் அப்பெயருள்ளவர் எல்லோரையும் துளு நாட்டு வேள் அரசராகிய நன்னருடன் சேர்த்தல் கூடாது.

குறிப்புகள்

1 *Beginnings of South Indian History*, S. Krishnaswamy Ayyangar. pp. 84, 85.

2 நன்னனுடைய ஏழில்மலை கடற்கரைக்கு அருகிலே ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த மலை, கடலில் 27 மைல் தூரம் தெரிகிறது. இம்மலைமேலிருந்து பார்த்தால் கடலில் தூரத்தில் வருகிற கப்பல்களைக் காணலாம். சங்க காலத்துக்கு மிகப் பிற்காலத்திலே, இன்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னே போர்ச்சுகல் தேசத்திலிருந்து இந்தியாவுக்கு முதல்முதல் வந்த வாஸ்கோ-ட-காமா என்பவன், இந்தத் துளு நாட்டு ஏழில் மலையைக் கடலில் தூரத்தில் வரும்போதே கண்டு இதன் அடையாளத்தைக் கொண்டு இதன் அருகில் கண்ணனூரில் வந்து தங்கினான். ஏழில் மலைக் கருகில் கடல் கொள்ளைக் காரர்கள் இருந்தார்கள் என்று பிற்காலத்தில் இந்தியாவுக்கு வந்த மேல்நாட்டு யாத்திரிகர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே, கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து (கடைச்சங்க காலத்திலிருந்து) துளு நாட்டில் கடற்கொள்ளைக்காரர் இருந்தனர் என்று கருதலாம்.

3. நன்னர் காலம்

துளு நாட்டு அரசர்களைப் பற்றிய வரலாறு, கி. பி. 4ஆம் நூற்றண்டுக்குப் பிறகு கிடைக்கின்றன. ஆனால், அவ்வரசர்கள் நன்ன அரசர் பரம்பரையினர் அல்லர்; வேறு அரச பரம்பரையினர். ஆனால், சங்க காலத்துத் துளு நாட்டின் பழைய வரலாறு சங்க நூல்களைத் தவிர வேறெங்கும் கிடைக்கவில்லை. சங்க நூல்களிலே துளு நாட்டைப் பற்றியும் துளு மன்னர்களைப் பற்றியும் கூறியுள்ளவற்றை மேலே விளக்கிக் கூறினோம். மூன்று நன்னர் இருந்ததையும் அவர்கள் ஏறத்தாழக் கி. பி. 100 முதல் 180 வரையில் இருந்தார்கள் என்பதையும் கூறினோம். இதுவே ஏறத்தாழச் சரியான காலம் என்பதை இங்கு விளக்குவோம்.

I. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சேர நாட்டை யரசாண்ட காலத்தில் துளு நாட்டை முதலாம் நன்னன் அரசாண்டான் என்று கூறினோம். நன்னன் ஆட்சிக் காலத்திலே அவனுடைய மகனான இரண்டாம் நன்னன் இளவரசனாக இருந்தான் என்பது சொல்லாமலே அமையும். முதலாம் நன்னனுடைய ஆட்சிக் காலத்தில் அவன் ஆட்சிக்குட்பட்டிருந்த கடல் துருத்தியில் (கடல் தீவில்) குறும்ப அரசன் ஒருவன் நெடுஞ்சேரலாதனுக்கு எதிராகக் குறும்பு செய்தான் என்றும் அவனை நெடுஞ்சேரலாதன் கடற்போரில் வென்று அடக்கினான் என்றும் கூறினோம். அந்தக் கடற்போரை நேரில் சென்று நடத்தியவன் அவனுடைய இளைய மகனான சேரன் செங்குட்டுவன் (கடல் பிறக்கோட்டிய குட்டுவன்) என்றுங் கூறினோம். அப்போது செங்குட்டுவன் இளவரசனாக இருந்தான் என்பதையும் தெரிவித்தோம். ஆகவே, முதலாம் நன்னனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் சமகாலத்தினர் என்பது தெரிகின்றது.

II. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இறந்த பிறகு சேர நாட்டை யரசாண்டவன் அவனுடைய மூத்த மகனான களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். இவன் காலத்தில் துளு நாட்டை யரசாண்டவன் நன்னன் இரண்டாவன். களங் காய்க்கண்ணி நார்முடிச் சேரல் அரசாண்ட காலத்தில் அவனுடைய தம்பியாகிய சேரன் செங்குட்டுவனும் இளைய தம்பியாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் சேர நாட்டின் வெவ்வேறிடங் களை ஆட்சி செய்தனர்.

நார்முடிச் சேரலின் காலத்தில் பாண்டி நாட்டையர சாண்டவன் பசும்பூண் பாண்டியன். பசும்பூண் பாண்டியனுடைய

சேனைத் தலைவனாக இருந்தவன் தகடூர் அரசனாகிய அதிகமான் நெடுமிடல் என்பவன். அதிகமான் நெடுமிடலை நார்முடிச்சேரல் போரில் வென்றான். பிறகு, அதிகமான் நெடுமிடல் துளு நாட்டில் சென்று போர் செய்தான். அவனை நன்னன் இரண்டாவனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் போரில் கொன்றுவிட்டான்.

நார்முடிச் சேரல் தன் சேனாபதியாகிய வெளியன் வேண்மான் ஆய்எயினன் என்பவனைத் துளு நாட்டின் மேல் போர் செய்ய அனுப்பினான். அவனை நன்னனுடைய சேனாபதி மிஞிலி போரில் கொன்றுவிட்டான். பிறகு, நார்முடிச்சேரலும் அவன் தம்பியராகிய செங்குட்டுவனும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் துளு நாட்டின்மேல் போர் செய்து நன்னன் இரண்டாவனைப் போரில் கொன்று துளு நாட்டைக் கைப்பற்றினார்கள் என்பதைக் கூறினோம்.

நன்னன் இரண்டாவன் இறந்த பிறகு அவனுடைய மகனான நன்னன் மூன்றாவன் சேரருக்குக் கீழடங்கி நன்னன் உதியன் என்று பெயர் சூட்டிக்கொண்டு அரசாண்டான் என்பதையும் கூறினோம்.

மூன்று நன்னர்களும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், அவன் மக்களான களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், செங்குட்டுவன் (கடல் பிறக்கோட்டிய குட்டுவன்), ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்பவர்களின் சமகாலத்தவர் என்பதை மேலே விளக்கிக் கூறினோம்.

துளு நாட்டுப் போர்களில் சேரன் செங்குட்டுவன் முக்கியமான பங்கு கொண்டிருந்தான். தன் தந்தை நெடுஞ்சேரலாதன் காலத்தில் நிகழ்ந்த கடற்போரில் தானே முன் நின்று போரை நடத்தி வெற்றி பெற்றான். தன் தமயனான நார்முடிச் சேரல் செய்த துளு நாட்டுப் போரில் இவன் முக்கியப் பங்கு கொண்டு போரை வென்றான். இவைகளைப் பற்றி முன்பே விளக்கிக் கூறியுள்ளோம்.

இந்தப் போர்கள் எல்லாம் செங்குட்டுவனின் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியிலேயே முடிந்துவிட்டன. அவன் இளவரசனாக இருந்தபோது அரசாட்சி பெற்ற உடனே முடிவடைந்துவிட்டன.

சோழன் கரிகாலன் இறந்த பிறகு செங்குட்டுவனின் மைத்துனனான கிள்ளிவளவனுக்கும் ஒன்பது தாயாதிகளுக்கும் நடந்த அரசாட்சி உரிமைப் போரில், செங்குட்டுவன் தன் மைத்துனனுக்காகச் சோழமன்னர் ஒன்பது பேருடனும் போர் செய்து வென்று சோழ ஆட்சியைத் தன் மைத்துனனுக்குக் கொடுத்ததும், கங்கைக் கரைக்குச் சென்று கனகவிசயரை வென்று சிறைப் பிடித்துக் கொண்டுவந்ததும், கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்ததும் ஆகியவை எல்லாம் செங்குட்டுவனின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் துளு நாட்டுப் போர்கள் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்தன.

III. இது வேறு விதமாகவும் தெளிவாகிறது. பரணர் என்னும் புலவர், மேலே கூறிய சேர அரசர், நன்ன அரசர்களின் சமகாலத்தில் இருந்தவர். அவர் நெடுஞ்சேரலாதன், நார்முடிச் சேரல், செங்குட்டுவன் ஆகிய சேர அரசர் காலத்திலும் நன்னன் முதலாவன், நன்னன் இரண்டாவன், நன்னன் மூன்றாவன் என்னும் மூன்று துளுவ அரசர் காலத்திலும் இருந்தவர் என்பது அவருடைய பாடல்களினால் தெரிகின்றது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆரிய அரசரை வென்றதையும் யவனரைச் சிறப்பிடித்து வந்ததையும் இமயத்தில் வில் பொறித்ததையும் பரணர் கூறுகின்றார் (*அகம்* 396 : 16-18). நெடுஞ்சேரலாதன் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியுடன் போர் என்னும் இடத்தில் போர் செய்து இருவரும் புண்பட்டுப் போர்க்களத்தில் விழுந்து சில காலம் உயிர் போகாமல் கிடந்தபோது அவர்களைப் பரணர் நேரில் பாடியுள்ளார் (*புறம்* 63). இச்செய்யுளின் அடிக்குறிப்பு இவ்வாறு கூறுகிறது: "சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரை அக்காலத்திற் பரணர் பாடியது" என்று அக்குறிப்புக் கூறுகிறது.[1]

நெடுஞ்சேரலாதன் காலத்தில் இருந்த முதலாம் நன்னனையும் பரணர் தம்முடைய செய்யுட்களில் குறிப்பிட்டுள்ளார். அந்த நன்னன் பெண் கொலை புரிந்தவன் என்றும் (*குறுந்.* 292 : 1-5) அவனுடைய மாமரத்தைக் கோசர் சூழ்ச்சி செய்து வெட்டிவிட்ட செய்தியையும் (*குறுந்* .73 : 2-4) பரணர் கூறுகின்றார்.

இதனால் பரணரும் நெடுஞ்சேரலாதனும் முதலாம் நன்னனும் சமகாலத்திலிருந்தவர் என்பது தெரிகின்றது.

நெடுஞ்சேரலாதன் இறந்த பிறகு அவன் மகனான நார்முடிச்சேரல் சேர நாட்டை யரசாண்டான். நார்முடிச்சேரல் அதிகமான் நெடுமிடல் என்பவனை வென்றான் என்று *பதிற்றுப் பத்து* (4ஆம் பத்து 2 : 10) கூறுகிறது. நார்முடிச் சேரல் வென்ற நெடுமிடல் என்பவனைப் பரணருங் கூறுகிறார். பசும்பூண் பாண்டியனின் சேனாபதி அதிகமான் நெடுமிடல் என்றும் அவனை அவனுடைய பகைவர் அரிமணவாயில் உரத்தூர் என்னும் ஊரில் வென்றனர் என்றும் (*அகம்* 266 : 10-14), பிறகு அவன் துளு நாட்டு வாகைப் பறந்தலைப் போரில் இறந்து போனான் என்றும் (*குறுந்*. 393 : 3-6) அவன் நன்னன் (இரண்டாவன்) உடைய சேனாபதியாகிய மிஞிலியால் கொல்லப்பட்டான் என்றும் கூறுகிறார் (*அகம்* 142 : 9-13).

நார்முடிச் சேரலின் சேனாபதியாகிய வெளியன் வேண்மான் ஆய்எயினன் என்பவன் நன்னன் (இரண்டாவன்) உடைய

சேனாபதியாகிய மிஞிலியால் கொல்லப்பட்ட செய்தியையும் பரணர் கூறுகிறார் (*அகம்* 148 : 7-8, 181 : 4-7, 208 : 5-9, 396 : 2-6).

இதனால், பரணர் நார்முடிச்சேரல், அதிகமான் நெடுமிடல், நன்னன் இரண்டாவன், அவனுடைய சேனாபதி மிஞிலி ஆகியோர் காலத்தில் இருந்தவர் என்பது தெரிகின்றது.

நெடுஞ்சேரலாதனின் இரண்டாவது மகனும் நார்முடிச் சேரலின் தம்பியுமாகிய சேரன் செங்குட்டுவனைப் பரணர் *பதிற்றுப் பத்து* 5ஆம் பத்துப் பாடினார். அதில் செங்குட்டுவனுடைய ஆட்சியின் முற்பகுதி நிகழ்ச்சிகளை மட்டும் கூறுகின்றார். செங்குட்டுவன் கடலில் சென்று கடற் போர் செய்து குறும்பரை அடக்கியதையும் மோகூர் மன்னனை வென்றதையும் சிறப்பித்துக் கூறுகிறார்.

(செங்குட்டுவன் காலத்துப் பிற்கால நிகழ்ச்சிகளான மைத்துன வளவனுக்காக ஒன்பது சோழரை வென்றதும், கங்கைக் கரையில் கனகவிசயரை வென்று சிறைப்பிடித்ததும், கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்ததும் முதலிய பிற்கால நிகழ்ச்சிகளைப் பரணர் 5ஆம் பத்தில் கூறவில்லை. எனவே, இந்நிகழ்ச்சிகள் நிகழ்வதற்கு முன்னே 5ஆம் பத்துப் பாடினார் என்பது தெரிகிறது).[2]

நன்னன் மூன்றாவனாகிய நன்னன் உதியனைப் பரணர் தம் செய்யுளில் கூறுகிறார் (*அகம்* 258 : 1-3). எனவே பரணர், செங்குட்டுவன், நன்னன் மூன்றாவன் காலத்திலும் இருந்தவர் என்பது தெரிகின்றது.

இதனால், மூன்று நன்னர் காலத்திலும் நெடுஞ்சேரலாதன், அவன் மக்களாகிய நார்முடிச்சேரல், செங்குட்டுவன் ஆகியோர் காலத்திலும் பரணர் இருந்தார் என்பது சந்தேகமில்லாமல் தெரிகின்றது. பரணர், சேரன் செங்குட்டுவன் ஆட்சியின் முற்பகுதியிலே காலஞ்சென்றிருக்க வேண்டும்.

IV. சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரத்தில் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தபோது அவ்விழாவுக்குக் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' (முதலாம் கஜபாகு) வந்திருந்தான் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது. கஜபாகு அரசன் கி. பி. 173 முதல் 195 வரையில் அரசாண்டான். செங்குட்டுவனின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் கஜபாகு ஆட்சிக்கு வந்தான். செங்குட்டுவன் ஐம்பத்தைந்து ஆண்டு அரசாண்டான் என்று 5ஆம் பத்தின் பதிகக் குறிப்புக் கூறுகிறது. இது அவனுடைய இளவரசு ஆட்சிக் காலமும் சேர்ந்ததாகும்.

செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்த காலத்தில் அவன் தலை நரைத்து முதிர்ந்த வயதுடையவனாய் இருந்தான் என்று கூறப்படுகிறான். செங்குட்டுவன் உத்தேசம் கி. பி. 180இல் காலஞ்சென்றிருக்கவேண்டும். அவன் பத்தினிக் கோட்டம் அமைத்தது ஏறத்தாழ கி.பி. 175இல் இருக்கலாம். அவன் 55 ஆண்டு

ஆட்சி செய்தான் என்பதனால், அவன் ஏறத்தாழ கி. பி. 125 முதல் 180 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

கி.பி. 125இல் இளவரசுப் பட்டம் பெற்றபோது செங்குட்டுவனுக்கு ஏறத்தாழ இருபது வயதிருக்கலாம். அவனுடைய தந்தையான நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டாண்டு அரசாண்டான் என்று கூறப்படுகிறான். எனவே, அவன் ஏறத்தாழக் கி.பி. 72 முதல் 130 வரையில் அரசாண்டிருக்கக்கூடும். அவனுடைய மூத்த மகனான நார்முடிச்சேரல் இருபத்தைந்து ஆண்டு அரசாண்டான் என்பதனால் (இளவரசுக் காலத்தையும் சேர்த்து) ஏறக்குறைய கி.பி. 120 முதல் 145 வரையில் அரசாண்டிருக்க வேண்டும். சேரன் செங்குட்டுவன் ஏறத்தாழ கி.பி. 125 முதல் 180 வரையில் அரசாண்டிருக்கக்கூடும்.

எனவே, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் சமகாலத்தவனாகிய முதலாம் நன்னன் ஏறத்தாழ கி. பி 100 முதல் 125 வரையிலும் அவன் மகனான இரண்டாம் நன்னன் ஏறத்தாழ கி. பி. 125 முதல் 150 வரையிலும் அவன் மகனான மூன்றாம் நன்னன் ஏறத்தாழ கி. பி. 150 முதல் 180 வரையிலும் அரசாண்டிருக்கக்கூடும் என்றும் கருதலாம்.

குறிப்புகள்

1 இந்தச் சேரனும் சோழனும் போர்ப் புறத்தில் புண்பட்டு விழுந்து உயிர் போகாமல் கிடந்தபோது கழாத்தலையார் என்னும் புலவரும் இவர்களை நேரில் பாடினார் (*புறம்* 368).

2 வயது முதிர்ந்தவரான பரணர் செங்குட்டுவன்மேல் 5 ஆம் பத்துப் பாடிய பிறகு சில காலத்துக்குப் பின்னர் இறந்துபோனார். இந்த வரலாற்றை யறியாத சிலர், செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்ததும் இமயம் சென்றதும் முதலிய செய்திகளை அவனைப் பாடிய 5ஆம் பத்தில் கூறாதபடியால் இவை பிற்காலத்தில் கட்டப்பட்ட கதைகள் என்று கூறுகிறார்கள். பிற்காலத்தில் நிகழ்ந்த செய்திகளை முன்னமே இறந்துபோன பரணர் எவ்வாறு கூறமுடியும்? செங்குட்டுவன் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் நடந்த இச்செய்திகளைச் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோவடிகள் *சிலப்பதிகாரத்தில்* கூறினார். செங்குட்டுவன் காலத்துக்குப் பிறகு, அவனைப் பரணர் பாடிய 5ஆம் பத்தின் பதிகத்தில் அவனுடைய பிற்கால நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்தனர். ஆழ்ந்து ஆய்ந்தோய்ந்து பாராமல் மேற்புல்லை மேய்கிற 'ஆராய்ச்சிக்காரர்'களுக்கு உண்மைச் செய்திகள் புலப்படா. பரணர், செங்குட்டுவன் ஆட்சியின் முற்பகுதியிலேயே காலமானார் என்பதை உணராமல், அவர் செங்குட்டுவனின் இறுதிக் காலத்தில் 5ஆம் பத்துப் பாடினார் என்று தவறாகக் கருதிக்கொண்டு இவ்வாறெல்லாம் எழுதிவிட்டனர்.

4. நன்னரைப் பற்றிய செய்யுட்கள்

நன்ன அரசரையும் அவர்களின் துளு நாட்டையும் பற்றிய செய்யுட்கள் சங்கச் செய்யுட்களில் காணப்படுகின்றன. அப்பாடல்களில் சரித்திர சம்பந்தமான பாடல்களை இந்நூலுள் ஆங்காங்கே மேற்கோள் காட்டினோம். மேற்கோள் காட்டப்படாத வேறு செய்யுள்களை இங்கே காட்டுகிறோம்.

நன்னனுடைய பாரம் என்னும் ஊரையும் அவனுடைய ஏழில் மலையைச் சார்ந்த பாழிக் குன்றையும் பரணர் பாடியுள்ளார்.

இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயில் கலாவத் தன்ன (*அகம்* 152 : 11-14)

நன்னனுடைய பிறந்த நாள் விழா, ஊரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட செய்தியை மாங்குடி மருதனார் தமது *மதுரைக்காஞ்சியில்* கூறுகிறார்.

பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரிவிழவின் ஆர்ப்பெழுந் தாங்கு (*மதுரைக்காஞ்சி* 618 : 619)

நன்னனுடைய துளு நாட்டில் பாழி என்னும் நகரத்தில் பெருநிதி சேமித்து வைக்கப்பட்டிருந்ததை மாமூலனார் கூறுகிறார்.

மெய்ம்மலி பசும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவின் துளு நாட்டன்ன

சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர் (*அகம்* 15 : 2 - 11)

நன்னனுடைய துளு நாட்டில் உள்ள உயரமான மலைகளிலே வளர்ந்த மூங்கிற் காடுகளில் முதிர்ந்த மூங்கில் வெடித்து அதிலிருந்து முத்து (வேய் முத்து) சிதறுவதை முள்ளியூர்ப் பூதியார் கூறுகிறார்.

பல புரி
வார்கயிற் றொழுகை நோன்சுவற் கொளீஇப்
பகடுதுறை யேற்றத் துமண்விளி வெரீஇ

உழைமான் அம்பிணை யினனிரிந் தோடக்
காடுகவின் அழிய உரைஇக் கோடை
நின்றுதின விளிந்த அம்பணை நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கு மண்ணா முத்தம்
கழங்குறழ் தோன்றல பழங்குழித் தாஅம்
இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலை (*அகம்* 173 : 8-18)

நன்னனுடைய துளு நாட்டிலிருந்த ஒரு கோட்டையின் மேல் பகைமன்னன் ஒருவன் படையெடுத்து வந்து கோட்டையை முற்றுகையிட்டான் கோட்டையிலிருந்த நன்னனுடைய வீரர்கள் எதிர்த்துப் போராடினார்கள். ஆனால், அவர்கள் தோற்றுப்போகும் நிலையில் இருந்தார்கள். அதனையறிந்த நன்னன் உடனே தன் சேனைகளுடன் வந்து முற்றுகையிட்ட மன்னனை ஒட்டிக் கோட்டையைக் காப்பாற்றினான். இந்தச் செய்தியை மோசிகீரனார் என்னும் புலவர் கூறுகிறார்.

வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
முனைகொல் தானையொடு முன்வந் திறுப்பத்
தன்வரம் பாகிய மன்னெயில் இருக்கை
ஆற்றா மையிற் பிடித்த வேல்வலித்
தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கிற்
கானமர் நன்னன் (*அகம்* 392 : 21-27)

(குறிப்பு: படையெடுத்துவந்த மன்னன் சேர, சோழ, பாண்டியர்களில் யார் என்று கூறப்படவில்லை. முற்றுகை யிடப்பெற்ற கோட்டையின் பெயருங் கூறப்படவில்லை. இவை கூறப்பட்டிருந்தால் துளு நாட்டுச் சரித்திரத்தில் ஒரு நிகழ்ச்சியைப் பெற்றிருப்போம். ஆனால் இதனைக் கூறிய மோசிகீரனார் சரித்திர நிகழ்ச்சியைக் கூறக் கருதியவர் அல்லர். அகப் பொருட்செய்தி யொன்றுக்கு உவமை கூறவந்தவர் தற்செயலாக இந்நிகழ்ச்சியைக் கூறியுள்ளார்.)

நன்னன் தன் பகையரசரை வென்று அவரிடமிருந்து பெற்ற பொருளைப் புலவருக்கு வழங்கினான் என்னும் செய்தியை மாமூலனார் கூறுகிறார்.

ஞெமன்ன்
தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே
உரன்மலி உள்ளமொடு முனை பாழாக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன் (*அகம்* 349 : 3-8)

மோசிகீரனார் என்னும் புலவர் நன்னனைப் (கொண்கானங் கிழானைப்) பாடிய செய்யுட்கள் *புறநானூற்றில்* தொகுக்கப் பட்டுள்ளன. அவை:

திரைபொரு முந்நீர்க் கரை நணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர் அதுபோல்
அரசர் உழைய ராகவும் புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவர் அதனால்,
யானும்,
பெற்ற தூதியம் பேறியா தென்னேன்
உற்றனென் ஆதலின் உள்ளிவந் தனனே,
ஈயென விரத்தலோ வரிதே நீயது
நல்கினு நல்கா யாயினும் வெல்போர்
எறிபடைக் கொடா வாண்மை, யறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல இழிதரும் அருவிநின்
கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே (*புறம்.* 154)

திணை: பாடாண்டினை, துறை: பரிசிற்றுறை.
கொண்கானங் கிழானை மோசிகீரனார் பாடியது.

வணர்கோட்டுச் சீரியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யாரென் இடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண! கேளினி, நயத்தில்
பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை, விளங்கு புகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
தண்டார் அகலம் நோக்கின மலர்ந்தே (*புறம்* 155)

திணை: பாடாண்டினை, துறை: பாணாற்றுப்படை
கொண்கானங் கிழானை மோசிகீரனார் பாடியது.

ஒன்றுநன் குடைய பிறர்குன்றம், என்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் காணம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடைக்கும் அஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலும் உடைத்தே
(*புறம்* 156)

திணை: பாடாண்டினை, துறை: இயன்மொழி.
கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது.

5. துளு மொழியும் தமிழ் மொழியும்

கன்னட நாடு, ஆந்திர நாடு, மலையாள நாடுகளைப் போலவே துளு நாடும் திராவிட நாட்டைச் சேர்ந்தது. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளைப் போலவே துளு மொழியும் திராவிட இன மொழியாகும். அசோகச் சக்ரவர்த்தியின் சாசனங்களிலே கூறப்படுகிற சத்திய புத்திர நாடு என்பது துளு நாடே என்பதை முன்னமே கூறியுள்ளோம்.

சங்க காலத்திலே துளு நாட்டில் வழங்கி வந்த மொழி தமிழ் என்பதையும் துளு நாட்டு அரசர் தமிழ்ப் புலவரை ஆதரித்ததையும் துளு நாட்டையும் துளு நன்னர்களையும் தமிழ்ப் புலவர் பாடிய செய்யுள்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதையும் இந்நூலில் ஆங்காங்கே எடுத்துக்காட்டினோம். சங்க காலத்துக்குப் பிறகு, துளு நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பு அற்றுப் போனபடியினாலே, பிற்காலத்திலே துளு நாட்டுத் தமிழ் தனித்து நின்றது. பிறகு, தமிழ்நாடாக இருந்த சேர நாடு, மொழி மாறுபட்டுக் கேரள நாடாகவும் மலையாள மொழியாகவும் மாறிப் போன காலத்தில், துளு நாட்டுத் தமிழுக்கும் தமிழ்நாட்டுத் தமிழ் மொழிக்கும் இருந்த தொடர்பு முழுவதும் அற்றுப் போய்விட்டது. அதனால், துளு நாட்டிலே வழங்கி வந்த தமிழ் மொழி பிற்காலத்திலே சிதைந்தும் திரிந்தும் மருவியும் உருமாறிவிட்டது. இவ்வாறு துளு மொழி தமிழினின்று அகன்று தன்னந்தனியே வளர்வதாயிற்று.

நெடுங்காலம் தனித்து ஒதுங்கி யிருந்தபோதிலும், இலக்கியம் படைக்காத வெறும் பேச்சு மொழியாகவும் கொச்சை மொழியா கவும் இருந்தபோதிலும், அது திராவிட மொழிகளிலிருந்து அதிக மாக மாறுபடவில்லை. இந்தியா தேசத்தின் வடமேற்கில் ஆப்கானிஸ் தானத்தில் அயல் மொழிகளுக்கு இடையிலே தன்னந்தனியே அகப்பட்டுக்கொண்ட 'ப்ருஃகூயி' என்னும் திராவிட மொழியைப் போல, வேற்று மொழிகளுக்கிடையே அகப்பட்டுக்கொள்ளாமல் துளு மொழி திராவிட இனமொழிகளின் சூழ்நிலையிலே இருந்தபடியால் அதன் மொழி அதிகமாக மாறுபடவில்லை. அயல் மொழி பேசும் மக்கள் துளு நாட்டிலே வராதபடி அதன் இயற்கைச் சூழ்நிலை இருந்தபடியாலும் அயல் மொழிக்காரர் துளு நாட்டில் நுழைந்து அந்த மொழியைக் கெடுக்கவில்லை.

ஒரு மொழி இலக்கிய வளமும் கலை வளமும் பெற வேண்டுமானால், அம்மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கையும் கணிசமான அளவு இருக்க வேண்டும். அதிக அளவு மக்கள் தொகை இல்லாதபடியாலும் இருந்த மக்கள் தொகையில் பெரும்பகுதி மக்களைக் கன்னட மொழியும் மலையாள மொழியும் கவர்ந்து கொண்டபடியாலும், துளு நாட்டிலே துளு மொழி பேசுவோரின் தொகை குறைந்து போயிற்று. சேர நாட்டில் வழங்கிய தமிழ் மொழி பிற்காலத்தில் மலையாள மொழியாக மாறிப் போன பிறகு, அந்த மலையாள மொழி தன் நாட்டுக்கு அருகிலிருக்கும் துளு நாட்டின் தென்பகுதியில் ஆதிக்கம் செலுத்திற்று. அவ்வாறே, துளு நாட்டின் வடக்குப் பகுதியில் கன்னட மொழி ஆதிக்கம் பெற்றது. மலையாளமும் கன்னடமும் திராவிட மொழியாக இருந்த போதிலும் துளு மொழிக்கு அம்மொழிகள் வேற்று மொழிகள் தானே. துளு நாட்டின் தெற்கிலும் வடக்கிலும் முறையே மலையாளமும் கன்னடமும் இடம்பெற்றபடியால், துளு நாட்டின் நடுப்பகுதியில் மட்டும் துளு மொழி நிலைபெறுவதாயிற்று.

சங்க காலத்திலும் அதன் பிற்காலத்திலும் ஏறக்குறைய கி.பி. 4 ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் பேசும் நாடாக இருந்த துளு நாடு, பிறகு, அரசியலினால் தமிழ்நாட்டிலிருந்து பிரிந்து தனித்தியங்கிற்று. பிறகு துளு நாட்டுத் தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டுத் தமிழ் மொழிக்கும் தொடர்பற்றுப் போன காரணத்தினால் துளு நாட்டுத் தமிழ் சிதைந்தும் மருவியும் மாறுபட்டுக் கொச்சை மொழியின் நிலைக்குக் குன்றிப்போயிற்று. இப்போது துளு மொழி பழைய மொழியிலிருந்து பெரிதும் மாறுபட்டுச் சிதைந்து இருக்கிறது. துளு நாடு தன் பழைய இலக்கியத்தைக் கைவிடாமலிருந்தால் இந்தத் தாழ்ந்த நிலையை யடைந்திருக்காது.

சென்ற 19ஆம் நூற்றாண்டிலே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே, மேல் நாட்டுக் கிருஸ்துவப் பாதிரிமார் துளு நாட்டு மக்களை மதமாற்றஞ் செய்ய முற்பட்டார்கள். அவர்கள் துளு மொழியிலே கிருஸ்து மத நூல்களை எழுதத் தொடங்கினார்கள். துளு மொழிக்குத் தனி எழுத்து இல்லாதபடியால், அவர்கள் அடுத்த நாடாகிய கன்னட நாட்டில் வழங்கிய கன்னட எழுத்தையே துளு மொழிக்கும் வழங்கினார்கள்.

துளு நாட்டின் தலைநகரமான மங்களூரில் கிருஸ்துவ மிஷனரிமார் பெஸல் மிஷன் பிரஸ் (The Basel Mission Press) என்னும் அச்சகத்தை அமைத்து அதன் மூலமாகத் துளு மொழியில் கிருஸ்து மத நூல்களை வெளியிட்டார்கள். அந்த அச்சகத்தில் முதல்முதலாக *மத்யூ அப்போஸ்தலரின் சுவிசேஷம்* (Gospell of St. Mathew) என்னும் நூல் 1842ஆம் ஆண்டில் வெளிவந்தது. இது லித்தோகிராப் என்னும் எழுத்தினால் அச்சிடப்பட்டது. புதிய ஏற்பாடு என்னும்

விவிலிய நூல் 1859இல் அச்சிடப்பட்டது. பிரிகல் பாதிரியார் துளு மொழி இலக்கண நூலை (*A Grammar of the Tulu Language* by Rev. J. Brigal) ஆங்கில மொழியில் எழுதி 1872ஆம் ஆண்டில் அச்சிட்டார் மவ்னர் பாதிரியார் துளு ஆங்கில அகராதியை (*Tulu— English Dictionary* by Rev. Mauner) எழுதி அச்சிட்டார். இவ்வாறு 19ஆம் நூற்றாண்டில் துளு மொழியில் இலக்கியம் தோன்றிற்று. ஆனால், மேன் மேலும் துளு மொழி இலக்கியம் வளரவில்லை. இது வருந்தத்தக்கது.

பழைய காலத்திலிருந்தே துளு மொழியில் இலக்கிய நூல்கள் ஏற்பட்டிருக்குமானால், அவ்விலக்கிய நூல்கள், பழந்தமிழ்ச் சொற்களை ஒத்திட்டு ஆராய்வதற்குப் பெரிதுந் துணையாக இருந்திருக்கும். சங்க காலத்து இலக்கியங்களில் வழங்கப்பட்டு இப்போது வழக்கிழந்து போன பல தமிழ்ச் சொற்கள் இன்றும் துளு மொழியில் சிதைந்தும் மருவியும் உருமாறி வழங்குகின்றன. பழமையான இலக்கியம் இல்லாத நிலையிலும் துளு மொழியில் பல தூய தமிழ்ச் சொற்கள் சிதைந்து காணப்படுகின்றன என்றால், பழைய இலக்கியங்களைத் துளு மொழி பெற்றிருக்குமானால், அத்துளு இலக்கியம் பழந்தமிழ்ச் சொற்களை ஆராய்வதற்கு எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்.

தமிழ் மொழியில் இப்போது வழக்கிழந்து போன பழைய சொற்கள் இப்போதும் துளு மொழியில் சிதைந்து காணப்படுவதை இங்கு எடுத்துக் காட்டுவோம். அதற்கு முன்பு துளு நாட்டு ஊர்ப்பெயர்கள் பல தமிழ்ச் சொல்லாக அல்லது திராவிட இனச் சொல்லாக இருப்பதைக் காட்டுவோம்.

கல்

கல்[1] என்னுஞ் சொல் சங்க இலக்கியங்களில் மலை அல்லது குன்று அல்லது மலைச் சிகரம் என்னும் பொருளில் வழங்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம். இச்சொல் இப்பொருளில் பிற்காலத் தமிழில் வழக்கிழந்துவிட்டது. ஆனால், துளு நாட்டிலே கல் என்னுஞ் சொல் பழைய பொருளில் இன்னும் வழங்கிவருகிறது. கார்க்கல் என்பது கருநிறமுள்ள மலை என்னும் பொருளுடைய சொல் (கார்—கருமை; கல்—மலை). துளு நாட்டிலே கருநிறப் பாறைக் குன்றுகள் உள்ள ஒரு ஊர் இருக்கிறது. அவ்வூருக்குக் கார்க்கல் என்று பழைய பெயர் உண்டு. இப்போது அப்பெயர் சிதைந்து கார்கள என்று வழங்குகிறது (கார்க்கல்—கார்கல—கார்கள). இவ்வூரில் உள்ள கோமட்டேசுவரர் உருவம் பேர்போனது. 41 அடி 5 அங்குலம் உயரமுள்ள ஒரே கல்லினால் செய்யப்பட்ட இந்தக் கோமட்டேசுவரர் உருவம் கார்க்கல் நகரத்துக்குச் சிறப்பைத் தருகின்றது. கார்க்கல் (கார்கள) நகரத்தின் பெயரே இந்தத் தாலுக்காவுக்குப் பெயராக அமைந்திருக்கிறது.

துளு நாட்டின் கிழக்கெல்லையாக அமைந்திருப்பது உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்று கூறினோம். அந்த மலைகளில் உயரமான சிகரங்கள் கல் என்று பெயர் கூறப்படுகின்றன (கல்—மலை). ஆனெ கல்லு (ஆனைக்கல்), ஏர்கல்லு, அம்மெதி கல்லு, கடாயி கல்லு என்று அச்சிகரங்கள் பெயர் பெற்றுள்ளன.

அங்காடி

அங்காடி என்னும் சொல் பழைய தமிழ்ச் சொல். இதன் பொருள் கடை, கடைத் தெரு என்பது. அல்லங்காடி, நாளங்காடி முதலிய அங்காடிகளைச் சங்க நூல்களில் காண்கிறோம். இச்சொல் இப்பொருளிலே இன்றும் தமிழ்நாட்டில் வழங்குகிறது. தெலுங்கிலே இச்சொல் 'அங்கடி' என்று வழங்கி வருகிறது.

துளு நாட்டிலும் இப்பெயரையுடைய ஊர்கள் இருக்கின்றன. உப்பினங்கடி, பெள்தங்கடி, ஹொசங்கடி (புதிய அங்காடி) என்னும் பெயருள்ள ஊர்கள் துளு நாட்டில் இப்போதும் உள்ளன.

ஊர்

ஊர்[2] என்னும் சொல் திராவிட இனச் சொற்களுக்குப் பொதுவான ஒரு பழைய சொல். துளு நாட்டிலேயும் ஊர் என்னும் பெயருள்ள பல ஊர்கள் இன்றும் உள்ளன. பைந்தூரு, பெர்டூரு, பார்கூரு, மங்களூரு, பாணெமங்களூரு, பசரூரு, கொல்லூரு, ஸீரூரு, பைலூரு, சங்வத்தூரு, ஜால்சூரு, புத்தூரு, வேணூரு என்னும் ஊர்கள் துளு நாட்டில் இப்போதுள்ள ஊர்கள்.

வெதிரி

வெதிரி என்னும் சொல் மூங்கில் என்னும் பொருளில் தமிழ்ச் சங்க நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. இச்சொல் தமிழுக்கு மட்டு மல்லாமல் திராவிட இனமொழிகளுக்குப் பொதுச் சொல்லாக இருந்தது. கன்னட மொழியிலும் துளு மொழியிலும் இச்சொல் பயிலப்படுகிறது. மூங்கில் காடாக இருந்த இடங்கள் வெதிரி என்று வழங்கிப் பிறகு பெதிரி என்று திரிந்துள்ளன. துளு நாட்டிலே மூடுபதிரி, படுபத்ரி என்று இரண்டு ஊர்கள் உள்ளன. இவை மூடபத்ரி படுபத்ரி என்றும் மூடபதிரெ, படுபதிரெ என்றும் வழங்கப்படுகின்றன. மூடுவெதிரி, படுவெதிரி, என்னும் பெயர்களே இவ்வாறு மருவி வழங்கப்படுகின்றன (மூடு, மூடல்—கிழக்கு, வெதிரி—மூங்கில் காடு, படு—மேற்கு, வெதிரி—மூங்கிற்காடு). மூங்கிற்காடாக இருந்து பிறகு ஊராக மாறிய இடம் என்பது இவற்றின் பொருள்.

துளு நாட்டில் சுப்பிரமணியம் என்னும் பெயருள்ள ஒரு மலையுண்டு. அதற்கு அடுத்த ஊருக்கும் சுப்பிரமணியம் என்று

பெயர் வழங்குகிறது. முருகனை மலைமேல் வைத்து வழிபட்டனர் பழந்தமிழர். குன்றுகளிலும் மலைகளிலும் முருகனை வழிபட்ட தமிழரைப் போன்றே துளு நாட்டினரும் முருகனை மலைமேல் வைத்து வழிபட்டனர். அந்த மலை அக்காலத்தில் முருகன் மலை என்று பெயர் இருந்திருக்கும். இப்போது முருகன், சுப்பிரமணியன் என்று பெயர் பெற்ற பிறகு, அந்த மலைக்குச் சுப்பிரமணியம் என்றே பெயர் கூறுகின்றனர். அந்த வழியாகப் பாயும் ஆற்றுக்குக் குமார தாரி என்று பெயர் கூறுகின்றனர். குமரன்—முருகன். குமாரதாரி என்பது முருகன் ஆறு என்னும் பொருள் உடையது.

இவ்வாறு துளு நாட்டின் இடப்பெயர்கள் பல தமிழ்ச் சொல்லாகவே அமைந்துள்ளன.

இனி, சங்க காலத்தில் வழங்கிப் பிறகு மறைந்துபோன தமிழ்ச் சொற்கள் இக்காலத்திலும் துளு மொழியில் சிதைந்தும் மருவியும் வழங்குவதைக் காட்டுவோம். விரிவஞ்சி சில சொற்களை மட்டும் ஆராய்வோம்.

தாழை

தாழை என்னுஞ் சொல் கைதை என்னும் தாழைப் புதருக்குப் பெயராக வழங்கப்படுகிறது. சங்க இலக்கியங்களிலே தாழை என்னுஞ் சொல் தென்னை மரத்துக்கும் பெயராக வழங்கப்பட்டிருந்தது. சங்க காலத்துக்குப் பிறகு தென்னை என்னும் பொருளில் தாழை என்னுஞ் சொல் வழக்கிழந்துவிட்டது. *திருமுருகாற்றுப்படை*, *பொருநராற்றுப்படை*, *பெரும் பாணாற்றுப்படை*, *குறிஞ்சிப்பாட்டு*, *நற்றிணை* முதலிய சங்க இலக்கியங்களிலே தென்னைமரம், தாழை என்று கூறப்பட்டிருக் கிறது. பிற்காலத்தில் இந்தச் சொல் வழக்கிழந்து போயிற்று. ஆனால், துளு மொழியிலே இச்சொல் இன்றும் வழங்கி வருகிறது. துளு மொழி, பிற்காலத்தில் ழகர எழுத்தை இழந்துவிட்டபடியால், ழகரத்துக்குப் பதிலாக றகர எழுத்தை வழங்குகிறது. எனவே, தாழை என்னும் பழைய சொல் இப்போதைய துளு மொழியில் தாறெ என்று கூறப்படுகிறது. தாறெ என்றால் துளு மொழியில் (தாழை) தென்னை மரம் என்பது பொருள். இதனால் துளு மொழி மிகப் பழைய சொற்களைக் கொண்டிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா?

அறிவர்

அறிவன், அறிவர் என்னுஞ் சொற்கள் *தொல்காப்பியத்திலும்* ஏனைய சங்க இலக்கியத்திலும் பயின்று வருகின்றன. அறிவன், அறிவர் என்னுஞ் சொல்லுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், இளம்பூரண அடிகள் முதலியோர் முனிவர் என்றும் இருடிகள் என்றும் பொருள் எழுதியுள்ளனர். ஆனால், இவர்கள் கூறும் உரை

பொருத்தமாகத் தோன்றவில்லை. அறிவர் என்னும் பெயருள்ளவர் வானசாத்திரத்தை யறிந்தவர் என்னும் பொருளே சரியானதென்று தோன்றுகிறது. [சங்க காலத்திலேயே (சங்க காலத்தின் இறுதியில்) அறிவன் என்னுஞ் சொல் மறைந்து கணிவன் என்னுஞ் சொல் வழங்கப்பட்டது.]

அறிவன் என்பது முனிவரையும் ரிஷிகளையுங் குறிக்கிறதா அல்லது மக்கள் சமூகத்தில் வானசாத்திரத்தை யறிந்தவரைக் குறிக்கிறதா என்னும் ஐயப்பாடு உண்டாகிறது. அந்த ஐயப்பாட்டைத் தீப்பது போல துளு மொழிச் சொல் உதவிசெய்கிறது. துளுவிலும் குடகு மொழியிலும் அறிவர் என்னுஞ் சொல் அருவர் என்று வழங்கப்படுகிறது. அருவர் என்பது அறிவர் என்பதன் திரிபு. அருவர் என்பவர் குடகு நாட்டில் திருமணம் முதலிய சடங்குகளைச் செய்யும் புரோகிதராக இன்றும் இருக்கின்றனர். இவர்கள் பிராமணர் அல்லாதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, வான நூலையறிந்து திருமணத்திற்குரிய நன்னாளைக் குறிக்கும் கணிவருக்கு அறிவர் என்னும் பெயர் இருந்த தென்பதும், அப்பெயர் மறைந்து போன பிறகும், குடகு மொழியில் அச்சொல் இன்றும் திருமணம் செய்யும் குருமாருக்குப் பெயராக வழங்கிவருகிறதென்பதும் தெரிகின்றன. இதனால், *தொல்காப்பியம்* முதலிய சங்க நூல்களில் கூறப்படுகிற அறிவர் என்பவர் அக்காலத்துத் தமிழ்ச் சமூகத்தில் வான நூல் பயின்றவரென்பது தெரிகின்றது.

பூதம்

சங்க காலத்திலே பூதம் என்னும் தெய்வ வணக்கம் இருந்ததை அறிகிறோம். *பதிற்றுப்பத்து*, *சிலப்பதிகாரம்* முதலிய சங்க இலக்கியங்களில் பூதவணக்கம் கூறப்படுகிறது. அந்தப் 'பூதங்கள்' திருமால், சிவன் போன்ற உயர்ந்த தெய்வங்களைப் போன்ற நிலையில் இல்லாவிட்டாலும் இந்திரன், முருகன் போன்ற உயர்ந்த நிலையில் வைத்து வணங்கப்பட்டன. பிற்காலத்தில் பூதம் என்பதற்குக் கொடிய துர்த்தேவதை, சிறுதேவதை என்னும் பொருள் கற்பிக்கப்பட்டதுபோல, சங்க காலத்தில் 'பூதம்' என்னும் தெய்வம் இழிவான நிலையில் வைத்து எண்ணப்படவில்லை. பூதம் என்னும் தெய்வம் உயர்நிலையில் வைத்து அக்காலத்தில் கருதப்பட்ட படியால்தான் அக்காலத்து மக்களும் அப்பெயரைத் தங்கள் பெயராகக் கொண்டிருந்தார்கள்.

பூதபாண்டியன், பூதனார், சேத்தம் பூதனார், குன்றம் பூதனார், இளம் பூதனார், கரும்பிள்ளைப் பூதனார், காவன் முல்லைப் பூதனார், கோடை பாடிய பெரும் பூதனார், வெண் பூதனார், காவிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் நப்பூதனார் முதலிய

புலவர்கள், அரசர்களின் பெயரைக் காணும்போது அக்காலத்தில் பூதம் என்னும் தெய்வம் உயர்ந்த நிலையில் வைத்துக் கருதப்பட்ட சிறந்த தெய்வமாக இருந்தது என்பது தெரிகின்றது. பிற்காலத்திலே பூதத்தாழ்வார் என்னும் வைணவ ஆழ்வார் ஒருவர் இருந்ததையும் அறிவோம். ஆனால், பிற்காலத்தில் பூதம் என்னுஞ் சொல் இழிந்த பொருளில் சிறு தெய்வம் துஷ்ட தெய்வம், என்று கருதப்பட்டது. நாற்றம் என்னுஞ் சொல், மணம் என்னும் சிறந்த பொருளில் வழங்கிப் பிற்காலத்தில் துர்நாற்றம் என்னும் இழிந்த பொருள் பெற்றது போல, பூதம் என்னும் சொல்லும் முற்காலத்தில் உயரிய பொருளில் வழங்கிப் பிறகு இழிந்த பொருள் பெற்றுவிட்டது.

ஆனால், துளு நாட்டில் அந்தப் பழைய பெயர் உள்ள கோவில்கள் இன்றும் இருக்கின்றன. பூதகோட்ய (பூதகோட்டம்), பூதஸ்தானம் (ஸ்தானம்—இடம், ஸ்தலம்) என்னும் பெயருள்ள பூதக்கோவில்கள் இன்றும் துளு நாட்டில் உள்ளன. பூதசதுக்கம் என்றும் தமிழில் கூறப்பட்டவையே பூதகோட்ய என்றும் யூதஸ்தானம் என்றும் வழங்கப்படுகின்றன. ஆனால், இப்பூத வணக்கத்தில் பல வேறுபாடுகளும் மாற்றங்களும் காலப்போக்கில் ஏற்பட்டிருக்கக்கூடும். என்றாலும் பழைய பூதம் என்னும் பெயரைத் துளு நாட்டினர் இன்றும் விடாமல் வழங்கி வருவது கருதத் தக்கது.

இது போன்று பல பழந்தமிழ்ச் சொற்களின் திரிபுகளைத் துளு மொழியில் காணலாம். உப்பாடு, (உப்பில் அடப்பட்டது— ஊறுகாய்), நுடி (பேச்சு), நுடிகட்டு (குறிசொல்லுதல்), நின்னி (எதிரொலி), கோறி (கோழி), பிலிநாயி (புலிநாய்—கழுதைப் புலி), நாகு (பெண் எருமை), கேரி (கேரி—சேரி, சேரிதெரு. உதாரணமாக துளு நாட்டுப் பாரகூரில் மூடுகேரி—கிழக்குச் சேரி—கிழக்குத் தெரு, கோட்டெகேரி—கோட்டைத் தெரு, மணிகார கேரி முதலியன), நீர்நாள் (ஒரு மாதத்தின் பெயர்), கார்தெல் (ஒரு மாதத்தின் பெயர்), பொந்தேல், புயிந்தேல், பேரார்தெ (மாதங்களின் பெயர்கள்) முதலிய சொற்கள் பழைய திராவிட மொழியின் தொன்மையைக் காட்டுகின்றன. விரிவஞ்சி இதனோடு நிறுத்துகிறேன்.

துளு மொழியில் பழைய இலக்கியம் இல்லாதது பற்றி அம்மொழியைப் புறக்கணிப்பது தவறாகும். பழைய திராவிடச் சொற்களை ஆராய்வதற்குத் துளு மொழி பெரிதும் பயன்படுகிறது. முக்கியமாகப் பழைய தமிழ்ச் சொற்களை ஆராய்வதற்குத் துளு மொழி மிகமிகப் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தமிழ் மொழியை நன்றாகக் கற்ற பேரறிஞர் துளு மொழியையும் பயின்று அதிலுள்ள பழைய திராவிடச் சொற்களை ஆராயவேண்டும். துளு மொழியிலுள்ள சொற்கள் சிதைந்தும் திரிந்தும் உருமாறியும் இருக்கும். அவற்றையெல்லாம் செம்மைப்படுத்தி, பழந்தமிழ்ச் சொற்களுடன் ஒப்பிட்டு ஆராயவேண்டுவது தமிழரின் கடமையல்லவா?

குறிப்புகள்

1 தமிழ் நாட்டிலே ஒரு மலை 'திண்டுக்கல்' என்று பெயர் பெற்றிருக்கிறது. ஆந்திர நாட்டிலும் 'தோர்ணக்கல்' என்னும் பெயருள்ள ஒரு மலையுண்டு. இலங்கைத் தீவில் உள்ள சில மலைகள் கல (gala) என்று பெயர் கூறப்படுகின்றன. கல என்பது கல் என்பதன் மரூஉ. இலங்கையில் உள்ள மலையுச்சிகளில் தட்டையான பாறைக் கல்லின் மேல் அக் காலத்து வேடர் ஆண்டுக்கு இரு முறை கலெயெக்க (கல் இயக்கன்—முருகன்) என்னும் தெய்வத்துக்கு ஆடல் நிகழ்த்தி வணங்கினர். அதனை வேலனின் வெறியாடலுடன் ஒப்பிடலாம். அந்த மலைப் பாறைகள் கல (கல்) என்று பெயர் பெற்றிருந்தன. ஆண்டிய கல, நெல்லியா கல, கணெமுல்லெ கல, கோபல்லவெ கல முதலியன.

2 திராவிட இனத்தார் வாழ்கிற நாடுகள் பலவற்றில் ஊர் என்னும் பெயருள்ள ஊர்கள் பல உண்டு. ஆனால், பாரசீகக் குடாக் கடலின் கரைமேல் யூபிரிடிஸ், தைகிரிஸ் என்னும் ஆறுகள் பாய்கிற பழைய சுமெரிய நாட்டிலே ஊர் என்னும் பெயருள்ள ஊர்கள் சில இருந்தன. அவை ஊர், நிப்பூர், எரிதூர் (எருதூர்), ஊருக், அஸ்ஸூர் என்று பெயர் பெற்றிருந்தன. இப்பெயர்களும், வேறு சில காரணங்களும் சுமெரிய நாட்டுக்கும் திராவிட மக்களுக்கும் மிகப் பழைய காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்ததைக் காட்டுகின்றன என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகிறார்கள்.

STATE DEPARTMENT OF ARCHIVES MADRAS



படம் 3

6. இணைப்பு

I. சத்தியபுத்திர நாடு

தேவனாம் பிரியன் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்த அசோகச் சக்கரவர்த்தி பாரத நாட்டைக் கி. மு. 275-234 வரையில் அரசாண்டார். இவருடைய இராச்சியத்தில், தெற்கே இருந்த தமிழகம் அடங்கவில்லை என்பது இவருடைய சாசனங்களிலிருந்து தெரிகின்றது. அசோகச் சக்கரவர்த்தியுடைய இரண்டாவது, பதின் மூன்றாவது சாசனங்கள் (Rock Edicts II and XIII) இச்செய்தியைத் திட்டவட்டமாகக் கூறுகின்றன.

சோழ பாண்டிய சத்தியபுத்திர கேரளபுத்திர தம்பபாணி (இலங்கை) ஆகிய நாடுகள் அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்டவையல்ல என்பது இச்சாசனங்களினால் தெரிகின்றது. பிராகிருத மொழியில் பிராமி எழுத்தினால் எழுதப்பட்ட இந்தச் சாசனங்களின் வாசகம், *சோடா பாடா ஸதியபுதொ கேத புதோ ஆ தம்ப பம்ணி* என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது, சோழ பாண்டிய சத்தியபுத்திர கேரள புத்திர தம்பபாணி நாடுகள் என்பது இதன் பொருள். கேரளபுத்திர நாடு என்பது சேர நாட்டைக் குறிக்கிறது. சத்திய புத்திர நாடு என்பது துளு நாட்டைக் குறிக்கிறது.

சத்திய புத்திர நாடு என்று அசோகச் சக்கரவர்த்தியின் சாசனம் கூறுவது துளு நாடு என்று கருதப்பட்டாலும் வேறு சில ஆராய்ச்சிக்காரர்கள் வேறு கருத்தைத் தெரிவிக்கிறார்கள். அதிகமான் அரசர் ஆண்ட தகடூர், சத்தியபுத்திர நாடு என்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் தாலுகாவே சத்தியபுத்திரநாடு என்றும், சத்தியவிரத க்ஷேத்திரம் என்று பெயர் பெற்ற காஞ்சிபுரமே சத்தியபுத்திரநாடு என்றும் வெவ்வேறு கருத்தைத் தெரிவித்துள்ளனர். 'வாய்மொழிக் கோசர்' இருந்த துளு நாடே சத்தியபுத்திரநாடு என்பது இந்நூலாசிரியருடைய கருத்து.

இதுபற்றி எழுதப்பட்டுள்ள கருத்துக்களை வாசகரின் ஆராய்ச்சிக்காகக் கீழே தருகிறேன்.

Asoka, V. A. Smith. 3rd Edition, p. 161.

Ancient Karnataka, Vol. I. 'Tuluva,' B. A. Saletore, p. 43.

Cera Kings of the Sangam Period, K. G. Sesha Aiyer, 1937, pp. 18-19.

'Satyaputra', Govinda Pai, *Krishnaswami Iyenger Commemoration Volume*, pp. 33-47.

History of the Tamils, P. T. Srinivasa Iyengar. 1929, p. 327.

The Early History of India, (4th Edition), Vinicent A. Smith, 1957, pp. 171, 194.

'The identification of Satiyaputra', B.A. Saletore, *Indian Culture*, Vol. I, pp. 667-674.

The Chronology of the Early Tamils, K. N. Sivaraja Pillai, 1932, pp. 168-169.

'Who are Satyaputras?', V. R. Ramachandra Dishitar, *The Indian Culture*. Vol. I, Pt. III.

Indian Review. June. 1909.

Journal of the Royal Asiatic Society, 1918, p. 54.

Indian Antiquary, Vol. XVIII, p. 24.

Journal of the Royal Asiatic Society, Bombay Branch (New Series), Vol. XX, p. 398.

II. பரசுராமன் கதை

துளு நாட்டிலும் சேர (கேரள) நாட்டிலும் பழைய புராணக் கதையொன்று வழங்கி வருகிறது. ஒரு காலத்தில் சேர நாடும் துளு நாடும் கடலாக இருந்ததென்றும் பரசுராம முனிவன் சஃயாத்திரி (மேற்குத் தொடர்ச்சி மலை) மலைமேல் இருந்து தன் கையிலிருந்த கோடாலியைச் சுழற்றி எறிந்தான் என்றும் அந்தக் கோடாலி சென்ற இடம் நிலமாக மாறிப் போயிற்று என்றும் அவ்வாறு புதிதாக உண்டான நிலம் துளு நாடும் கேரள நாடும் என்றும், அந்நிலங்களில் பரசுராமன் பிராமணரைக் குடியேற்றினான் என்றும் செவிவழிச் செய்தி கூறுகிறது. தமிழ்நாட்டில் பிற்காலத்திலே அகஸ்திய முனிவருக்கு முதன்மை கொடுக்கப்பட்டது போலத் துளு நாட்டிலும் கேரள நாட்டிலும் பரசுராமனுக்கு முதலிடங் கொடுக்கப்பட்டது.

சேர நாடாகிய கேரள நாடும் துளு நாடாகிய கொங்கண நாடும் பரசுராமனால் உண்டாக்கப்பட்டன என்னும் கதையை வடமொழிப் புராணங்களும் *கேரளோற்பத்தி* என்னும் பிற்காலத்து மலையாள நூலும் துளு நாட்டுச் செவிவழிச் செய்திகளும் கூறுகின்றன. இச்செய்தியைச் சங்க நூல்கள் கூறவில்லை. ஆனால், பரசுராமன் துளு நாட்டுச் செல்லூரில் அரியதோர் யாகம் செய்தான் என்றும் அந்த நினைவுக்குறியாக அவ்வூரில் ஒரு தூண் அமைக்கப்பட்டிருந்தது என்றும் ஒரு சங்கச் செய்யுள் கூறுகிறது. ஆனால், செல்லூரில் யாகத்தூண் இருந்த செய்தியை வடமொழிப்

புராணங்களும் துளு நாட்டுக் கேரள நாட்டுச் செவிவழிச் செய்திகளும் கூறவில்லை. சங்கச் செய்யுள் மட்டும் கூறுகிறது.

மருதன் இளநாகனார் என்னும் புலவர் இச்செய்தியைத் தமது செய்யுளில் கூறியுள்ளதை முன்னமே கூறினோம். மழுவாள் நெடியோன் (பரசுராமன்) செல்லூரில் அரிதாக முயன்று ஒரு வேள்வி செய்தான் என்றும் அதன் அறிகுறியாக அந்த இடத்தில் நெடுந்தூண் ஒன்று (யாகத்தூண்) நிறுத்தப்பட்டிருந்ததென்றும் அத்தூணின் அடிப்புறத்தில் வடக்கயிறு சுற்றிக் கட்டப்பட்டிருந்த தென்றும் இப்புலவர் கூறியுள்ளார். அச்செய்யுளின் வாசகம் இது:

> கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
> கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
> மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
> முன்முயன்று அரிதினின் முடித்த வேள்விக்
> கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
> அருங்கடி நெடுந்தூண் (*அகநானூறு*. 220 : 3-8)

இந்தச் செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்தது என்றும் அவ்வூருக்குக் கிழக்கில் கோசருடைய நியமம் இருந்தது என்றும் இப்புலவரே இன்னொரு செய்யுளில் கூறுகிறார்.

> அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
> பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
> இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
> கருங்கட் கோசர் நியமம் (*அகநானூறு* 90 : 9-12)

துளு நாட்டுச் செல்லூரில் பரசுராமன் செய்த வேள்விக்கு நினைவுக் குறியாக ஒரு யாகத்தூண் அமைக்கப் பட்டிருந்த தென்றும், அச்செல்லூர் கடற்கரைக்கு அருகில் இருந்ததென்றும் மருதன் இளநாகனார் கூறுகிற இச்செய்தி கேரள நாட்டாரும் துளு நாட்டாரும் அறியாத ஓர் புதிய அரிய செய்தியாகும்.

இந்தச் செல்லூர் மேற்குக் கடற்கரையோரத்தில் துளு நாட்டில் இருந்தது. பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், இச் செல்லூர், கிழக்குக் கடற்கரை யோரத்தில் சோழ நாட்டில் இருந்த தென்று கூறுகிறார். ஐயர் அவர்கள் தாம் உரை எழுதி அச்சிட்ட *நற்றிணைப்* பதிப்பிலே பாடினோர் வரலாற்றிலே 'மதுரை மருதன் இளநாகனார்' என்னுந் தலைப்பிலே இவ்வாறு எழுதுகிறார்.

"திருவழுந்தூர்த் திதியனுக்குரிய செல்லூரில் பரசுராம முனி வேள்வி செய்தது கூறுவதுடன் தழும்பனது ஊணூரும் சாயாவனமும் (திருச்சாய்க்காடு) இவராற் கூறப்பட்டுள்ளன."

இவ்வாறு இவர் கூறுவது தவறு. திதியன் என்பவனுக்குச் செல்லூர் உரியதென்று சங்க இலங்கியத்தில் எங்குமே கூறப்படவில்லை. ஐயரவர்கள், சோழ நாட்டிலிருந்த திதியனுக்குச்

செல்லூர் உரியதென்று கூறுவது புதுமையாக இருக்கிறது. எனவே இவர் செல்லூர் சோழநாட்டிலிருந்ததாகக் கருதுவது தவறானது. இந்தச் செல்லூர், துளு நாட்டிலே மேற்குக் கடற்கரைப் பக்கமாக இருந்ததும் கோசர் என்னும் இனத்தார் வாழ்ந்திருந்ததுமான ஊர்.

கந்த புராணம் சஃயாத்திரி காண்டத்திலும் வேறு வடமொழிப் புராணங்களிலும் மேற்குக் கடற்கரையுடன் பரசுராமனைத் தொடர்புபடுத்திக் கூறியுள்ளன. துளு நாட்டுச் சேர நாட்டுச் செவிவழிச் செய்திகளும் பரசுராமனை மேற்குக் கடற்கரை நாடுகளுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றன. எனவே, மருதன் இளநாகனார் கூறுகிற பரசுராமன் யாகஞ் செய்த செல்லூர் துளு நாட்டுச் செல்லூரே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கேரள நாட்டில் முப்பத்திரண்டு கிராமங்களையும் துளு நாட்டில் முப்பத்திரண்டு கிராமங்களையும் பரசுராமன் உண்டாக்கி அக்கிராமங்களைப் பிராமணருக்குத் தானஞ்செய்தான் என்னும் கதை, பிற்காலத்தில் நம்பூதிரிப் பிராமணர் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்ற கி. பி. 14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்ட கதை என்று தோன்றுகிறது. பரசுராமனைப் பற்றிய இக்கதைகள் பிற்காலத்தில் தோன்றியவை.

சங்க காலத்திலே பரசுராமனைப் பற்றி வழங்கப்பட்ட கதை, அவன் துளு நாட்டுச் செல்லூரில் செய்த யாகத்தின் அறிகுறியாகத் தூண் ஒன்று நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது ஒன்றே. அக்காலத்துச் சேர நாடாகிய கேரள நாட்டில் பரசுராமன் கதை வழங்கப்படவில்லை. பரசுராமன் கோடரியைக் கடலில் வீசி எறிந்து கேரள நாட்டையும் துளு நாட்டையும் உண்டாக்கினான் என்னும் கதையும் அந்நாடுகளில் கிராமங்களை உண்டாக்கிப் பிராம ணருக்குத் தானஞ் செய்தான் என்னும் கதையும் பிற்காலத்தில் கட்டப்பட்ட கதைகளே.

செல்லூர் செல்லி என்றும் கூறப்பட்டது.

மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான் (*அகம்* 316 : 12)

என்று கூறுவது காண்க.

III. மோகூரும் மோரியரும்

சங்கச் செய்யுட்கள் சிலவற்றிலே, கோசர் என்னும் கூட்டத்தாருக்கு மோகூர் பணியாதபடியினாலே (அடங்காத படியினாலே) அவர்களைப் பணியச் செய்வதற்குக் கோசர் மோரியருடைய உதவியை நாடினார்கள் என்றும், அவர்களுக்கு உதவி செய்ய விரும்பிய மோரியர், வடுகச் சேனையை முதலில் அனுப்பி அச்சேனையைப் பின்தொடர்ந்து தங்கள் தேர்களைச் செலுத்திக்கொண்டு போனார்கள் என்றும் போகும் வழியில்

மலைகள் குறுக்கிட்டபடியால், மலைமேல் தேர்கள் போவதற்காக மலையிலே வழிகளை உண்டாக்கிக்கொண்டு போனார்கள் என்றும் சரித்திரச் செய்திகள் கூறப்படுகின்றன (*அகம்* 69, 251, 281; *புறம்* 175).

அகம் 69ஆம் செய்யுளில் இச்செய்தி கூறப்படுகிறது. காதலன் ஒருவன் தன் காதலியை விட்டுப் பிரிந்து பொருள் சம்பாதிப்பதற்காக அயல்நாடு சென்றான். சென்றவன், தான் திரும்பி வருவதாகச் சொன்ன காலம் வந்தும் அவன் திரும்பி வராததைக் குறித்து அவன் மனைவி மனக்கவலையடைந்தாள். அப்போது அவளுடைய தோழி, அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். மோரியருடைய தேர்ச் சக்கரங்கள் தடையில்லாமல் போவதற்காகச் செப்பனிட்டு அமைத்த மலைப் பாதையைக் கடந்து அயலூருக்குச் சென்ற தலைவர் அங்கே நெடுநாள் தங்கமாட்டார் என்று தோழி கூறுகிறாள். இந்த வாசகம் இது:

விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந்து அகன்றனர் ஆயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி (*அகம்* 69 : 10- 13)

அகநானூறு 151ஆம் செய்யுளும் இச்செய்தியையே கூறுகிறது. தலைவன் ஒருவன் தன் மனைவியைத் தனியே விட்டு அயல்நாட்டுக்குப் பொருள் சம்பாதிக்கச் சென்றான். அவன் திரும்பி வருவதாகச் சொன்ன காலம் வந்தும் அவன் திரும்பி வராதபடியால் அவன் மனைவி கவலையடைந்தாள். அப்போது அவனுடைய தோழி அவளுக்குத் தேறுதல் கூறினாள். நந்த அரசர்கள் சேர்த்து வைத்திருந்த பெருஞ்செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் அவர் அதிக நாள் வெளியே தங்கமாட்டார். கோசர் தம் பகைவருடைய ஊரை வென்ற காலத்தில் அவர்களுக்குப் பணியாத மோகூரைப் பணியச் செய்வதற்காக அவர்களுக்கு உதவியாக வந்த மோரியர், தங்கள் தேர்கள் போவதற்காக அமைத்த மலைப்பாதையைக் கடந்து வெளிநாட்டுக்குச் சென்ற அவர் (தலைவர்) அதிக காலம் தங்க மாட்டார், விரைவில் வந்து விடுவார்" என்று தோழி கூறினாள். அந்த வாசகம் இது:

நந்தன் வெறுக்கை எய்திலும் மற்றவண்
தங்கலர், வாழி தோழி! வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூதாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பா

நிரம்பா நீளிடைப் போகி
அரம்போழ் அவ்வளை நிலைநெகிழ்த் தோரே!
(*அகம்* 251 : 5-20)

அகம் 281ஆம் செய்யுளும் இதே செய்தியைக் கூறுகிறது. அயல்நாடு சென்ற தலைவன் நெடு நாள் சென்றும் திரும்பி வராததற்கு மனக்கவலை கொண்ட மனைவியை அவளுடைய தோழி தேற்றுகிறாள். "வடுகச் சேனை முன்வர அதனைத் தொடர்ந்து பின்னே வந்த மோரியரின் தேர்ப்படையின் தேர்ச்சக்கரங்கள் தடையில்லாமல் செல்வதற்காக மலைமேல் அமைத்த வழியைக் கடந்து அயல் நாடு சென்ற தலைவர் அதிக நாள் தங்கமாட்டார். விரைவில் வந்து விடுவார், நீ வருந்தாதே" என்று கூறுகிறாள்.

முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பணியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறை யிறந்தவரோ சென்றனர் (*அகம்* 281 : 8-12)

புறநானூறு 175ஆம் செய்யுளும் இச்செய்தியைக் கூறுகிறது. கள்ளில் ஆத்திரையனார் என்னும் புலவர் தன்னை யாதரித்த ஆதனுங்கன் என்பவனை ஒருபோதும் மறக்கமாட்டேன் என்று இச்செய்யுளில் கூறுகிறார். "மோரியர் தம்முடைய தேர் உருளை தடையில்லாமல் செல்வதற்காக மலைப்பாறைகளை வெட்டி அமைத்த பாதையில் சூரியன் இயங்குவது போன்ற உன் அறத்துறையாகிய நல்வழியில் நடக்கும் உன்னை மறக்க மாட்டேன் "என்று கூறுகிறார். இதன் வாசகம் இது:

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன (*புறம்* 175 : 6 - 9)

(குறிப்பு: இப்புறப்பாட்டின் பழைய உரையாசிரியர் மோரியர் என்பதை ஓரியர் என்று தவறாகப் பிரித்துப் பொருள் கூறுகிறார். அவர் கூறுவது தவறான உரை என விடுக)

இந்த நான்கு சங்கச் செய்யுள்களிலே மோரியர் தென்னாட்டுக்கு வந்தனர் என்பதும் அவர்களின் தேர்கள் தடையில்லாமல் வருவதற்கு இடையிலிருந்த மலைப் பாறைகள் குறைத்துச் செப்பனிடப்பட்டன என்பதும் இச்செய்யுள்களில்

கூறப்படுகின்றன. மோரியர் என்பவர் மௌரியராகிய அரச குலத்தார். மோரிய (மௌரிய) அரசர் பாரத (இந்திய) நாட்டின் பேரரசராக இருந்து அரசாண்டவர்கள். அவர்கள் ஏறத்தாழ கி.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 2ஆம் நூற்றாண்டு வரையில் அரசாண்டனர். (சந்திரகுப்த மௌரியன் கி.மு. 322இல் மகத இராச்சியத்தை ஏற்படுத்தினான். இவன் வம்சத்தின் கடைசி அரசனான பிருகத்ரதன் கி.மு. 185இல் தன் சேனைத் தலைவனான புஷ்யமித்திரனால் கொல்லப்பட்டு இறந்தான். பிறகு சுங்க இராஜ பரம்பரை நிறுவப்பட்டது.)

பேர்போன மோரிய அரசர் சங்கச் செய்யுளில் கூறப்படுகிறது பற்றிச் சரித்திர ஆராய்ச்சிக்காரரும் மற்ற அறிஞரும் ஆராயத் தொடங்கினார்கள். மோரிய அரசர் மோகூர்மேல் படையெடுத்து வந்ததை இச்செய்யுள்கள் கூறுகிறபடியால் இத்தொடர்பு பற்றி அவர்கள் ஆராய்ந்தார்கள். (பாண்டியனுடைய சேனைத் தலைவனாகிய பழையன் என்பவன் மதுரைக்கு அருகில் மோகூர் என்னும் ஊரை யரசாண்டபோது, சேரன் செங்குட்டுவன் மோகூரின் மேல் படையெடுத்துப் போய் மோகூர்ப் பழையனை வென்ற செய்தி *பதிற்றுப்பத்து* ஐந்தாம் பத்திலும் *சிலப்பதி காரத்திலும்* கூறப்படுகின்றது.)

மோரியர்—மோகூர் ஆராய்ச்சியைப் பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். அவர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவைகளைப் பற்றியெல்லாம் இங்கு ஆராய்ந்தால் இடம் விரியும். ஆனால், அவ்வறிஞர்களின் கட்டுரைகளையும் நூல்களையும் இங்குக் குறிப்பிடுகிறேன்.

1. 'Mauryan Invasion of South India,' Ch. I, *The Beginnings of South Indian History*, Krishnaswamy Aiyangar, 1918.
2. *Bombay Gazetteer*, 1896, Vol, Part II, pp. 202-4.
3. 'The Mauryan Invasion of Tamilakam', Somasundara Desikar, *Quarterly Jounral of the Mythic Society*, Vol. XVIII, pp. 155-166.
4. 'The Mauryan Invasion of the Tamil Land', K.A. Nilakantam, *Quarterly Journal of the Mythic Society*, Vol. XVI, p. 304.
5. *History of the Tamil*, P.T. Srinivasa Iyangar, 1929, pp. 520-526.
6. 'The Mauryan Invasion of the Tamilakam', Somasundara Desikar , *Indian Historical Quarterly*, Vol. IV, pp. 135-145,
7. *The Mauryan Invasion Polity*, V.R. Ramachandra Dikshidar, pp. 58-61
8. 'Kosar and Vamba Moriyar', *Quarterly Journal of the Mythic Society*, 1924.
9. 'The Moriyar of the Sangam Works,' K.G. Sankar, *J.R.A.S.*, 1924, pp. 664-667

10. 'Kosar of the Tamil Literature and the Satyaputra of Asoka Edicts', *J.R.A.S.*, 1923, pp. 609-613.
11. 'Satyaputra of Asoka's Edict', *J.R.A.S.*, 1922, No. 2, pp. 84-86.
12. *Early History of India*, Vincent A. Smith, 4th Edition, 1957, p.157.
13. *The Cambridge History of India*, Vol. I. p. 596
14. 'Maurya Invasion of South India', *A Comprehensive History of India*, Vol. II, Edited by K.A. Nilakanta Sastri, 1957, pp. 501-503.
15. 'தமிழகமும் மோரியர் படையெடுப்பும்,' டாக்டர் கே.கே. பிள்ளை. *பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர்,* 1961, பக்கம் 359-363.

பண்டித மு. இராகவையங்கார் தாம் 1915ஆம் ஆண்டில் எழுதிய *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலில் இதுபற்றிக் கூறியுள்ளார். இச்செய்யுளில் கூறப்படுகிற மோரியரை ஐயங்கார், சமுத்திர குப்தன் என்று கூறுகிறார். இது மிகவும் பிழைபட்ட செய்தியாகையால் இவர் கூற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ளவில்லை.

பி.தி. ஸ்ரீநிவாச அய்யங்கார், 1929இல் தாம் எழுதிய *தமிழர் சரித்திரம்* என்னும் நூலில் (*History of the Tamils*, P.T. Srinivasa Ayengar, 1929, p. 520-526) இது பற்றி ஆராய்கிறார். இவர் ஆராய்ச்சியும் உண்மை நாடுவதாக இல்லை.

மேற்கண்ட மூன்று சங்கச் செய்யுட்கள் மோரியர் படையெடுத்து வந்த செய்தியைக் கூறுகின்றன. ஆனால், யார் மேல் படையெடுத்து வந்தனர் என்பதைக் கூறவில்லை. *அகம்* 251ஆம் செய்யுள் மட்டும் மோரியர் மோகூர் மேல் படையெடுத்து வந்தனர் என்பதைக் கூறுகின்றது.

மோகூர் என்னும் ஊர் பாண்டி நாட்டில் இருந்தது என்பதையும் அவ்வூரையாண்ட பழையன் என்னும் அரசனைச் சங்க காலத்திலிருந்த சேரன் செங்குட்டுவன் வென்றான் என்றும் *பதிற்றுப்பத்து* 5ஆம் பத்தினாலும் *சிலப்பதிகாரத்திலிருந்தும்* அறிகிறோம். ஆனால், மோரியர் இந்த மோகூரின்மேல் படையெடுத்து வந்தனரா? மோரியருக்கும் மோகூருக்கும் என்ன பகை? மோகூர் மன்னன் ஒரு சிற்றரசன்தானே. நெடுந் தொலைவிலிருந்த மோரியருக்கும் தென் கோடியிலிருந்த மோகூருக்கும் என்ன பகை?

இதில் ஏதோ தவறு இருக்கும் போலத் தோன்றுகின்றது. மோகூர் என்னும் சொல்லில் பிழை இருக்கிறது போலத் தோன்றுகிறது. மோகர் என்று இருக்கவேண்டிய சொல் மோகூர் என்று தவறாக எழுதப்பட்டது என்று தோன்றுகிறது. இது பிற்காலத்தில் ஏடெழுதுவோரால் நிகழ்ந்த பிழை என்று தோன்றுகிறது. 'மோகர் பணியாமையின்' என்றிருக்க வேண்டிய வாசகம் 'மோகூர் பணியாமையின்' என்று பிற்காலத்தில் தவறாக எழுதப்பட்டும் படிக்கப்பட்டும் வந்தது என்று தோன்றுகிறது.

மோகர் என்பவர் கொங்கண (துளு) நாட்டின் கடற்கரைப் பக்கத்தில் இருந்த போர்ப்பிரியமுள்ள மீன்பிடிக்குந் தொழில் செய்த மக்கள். அவர்களுடைய சந்ததியார் துளு நாட்டுக் கடற்கரைப் பக்கத்தில் இன்றும் மோகர் என்னும் பெயருடன் இருக்கிறார்கள். அந்த மோகர், போர் விருப்பமும் அஞ்சாமையுமுடையவராக இருந்தபடியால் கோசருக்கு அடங்காமலிருந்தனர். அவர்கள் பணிந்து போகாதபடியால் அவர்களைப் பணியச் செய்வதற்காகக் கோசர், மோரியருடைய உதவியை வேண்டினார்கள். ஆகவே, மோகரை அடக்குவதற்காக மோரியர் படையெடுத்து வந்தார்கள்.

துளு நாட்டுக் கடற்கரையோரத்தில் வசித்திருந்த மோகர்மேல் போர் செய்ய வந்த மோரியர், துளு நாட்டுக்கு அப்பால் இருந்து வந்தபடியால், அவர்கள் இடையில் இருந்த உயரமான மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து துளு நாட்டுக்குள் செல்ல வேண்டியவராயினர். மலையிலே கணவாய்கள் இல்லாதபடியாலும் கடல் மட்டத்துக்கு மேல் 3000 அடி முதல் 6000 அடி வரையில் உயர்ந்திருக்கிற மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கடக்க வேண்டியிருந்தபடியாலும் மோரியர் மலைமேல் ஏறிச்செல்வதைத் தவிர வேறுவழியில்லை. அக்காலத்தில் மனிதர் நடந்து செல்லக்கூடிய ஒற்றையடிப் பாதை (காலடிப்பாதை) தவிர வண்டிகள் செல்வதற்கு அகலமாக பாதைகள் மலைமேல் இல்லை. மோரியர் தேர்ப்படையுடன் வந்தபடியால், மலைவழியில் உள்ள ஒற்றையடிப் பாதைகள் அவர்களின் தேர்கள் செல்வதற்குப் பயன்படவில்லை. ஆகவே, வண்டிகளும் தேர்களும் செல்வதற்குரிய அகலமான பாதையை அமைக்க வேண்டியிருந்தது.

மோகூர் மேல் படையெடுத்துச் சென்ற மோரியர், தங்கள் தேர்ப்படையைச் செலுத்திக்கொண்டு போவதற்கு, மலைமேல் சென்ற காலடிப்பாதைகளை அகலமாக அமைத்துத் தெருவுண்டாக்கினார்கள். அவருக்கு முன்னே சென்ற காலாட் படையினர், குறுக்கே கிடந்த பாறைகளையும் கற்களையும் உடைத்துச் சமப்படுத்தி அகலமான பாதைகளையுண்டாக்கிக் கொண்டே போனார்கள். காலாட்படையினர் அமைத்த அகலமான பாதையைப் பின்பற்றி மோரியரின் தேர்ப்படை சென்றது. முன்னே வழி அமைத்துச் சென்ற காலாட்படையினர் வடுகர். இதைத்தான் 'முரண்மிகு வடுகர் முன் உற மோரியர்' தேர்களின் சக்கரம் பின்னால் உருண்டு சென்றது என்று கூறப்பட்டது.

(இக்காலத்திலுங்கூட துளு நாட்டின் கிழக்கிலுள்ள மைசூர் நாட்டிலிருந்து துளு நாட்டுக்குப் போகவேண்டுமானால், மேற்குத் தொடர்ச்சி மலைமேல் உள்ள (Ghat) 'காட் சாலை'கள் வழியாகத் தான் போகவேண்டும். இந்த மலைச்சாலைகள் அகலமாகவும் நன்றாகவும் செம்மையாகவும் இருக்கின்றன. இச்சாலைகள்

அண்மைக் காலத்தில் இருந்த ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டவை. ஆனால், கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் இந்த மலைகளின்மேல் காலடிப் பாதையைத் தவிர வேறு நல்ல சாலைகள் இல்லை. மோரியர் தேர்ப்படை செல்வதற்காக அக்காலத்தில் முதல்முதலாக அகலமான சாலை மலைமேல் உண்டாக்கப்பட்டது.

சில ஆராய்ச்சிக்காரர்கள், மோரியர் மலையைக் குடைந்து வழியுண்டாக்கிச் சென்றார்கள் என்றும், வேறு சிலர் மலையை வெட்டி வழியுண்டாக்கிக்கொண்டு போனார்கள் என்றும் எழுதியுள்ளனர். இது தவறு எனத் தெரிகிறது. முன்னமே காலடிப் பாதையாக இருந்த அறை (மலை) வழியின் இடையே இருந்த பாறைகள் கற்கள் முதலியவை அப்புறப்படுத்தியும் செம்மைப்படுத்தியும் தேர்ப்படை போவதற்கு ஏற்றபடி அகலமான வழியையுண்டாக்கிக்கொண்டு மோரியப் படை துளு நாட்டுக் கடற்கரைப் பக்கத்திலிருந்த மோகர் மேல் போருக்குச் சென்றது என்பதே நாம் இங்கே கூறுகிற செய்தியாகும். இதுவே பொருத்தமானதாகும். எனவே, செய்யுளில் இப்போதுள்ள மோகூர் என்னும் பாடம் பிழையானதென்றம் அது மோகர் என்றிருக்க வேண்டும் என்றும் கொள்ளத்தகும். ஆகவே,

> தெம்முனை சிதைத்த ஞான்றை மோகர்
> பணியா மையிற் பகைதலை வந்த
> மாகெழுதானை வம்ப மோரியர்
> புனைதேர் நேமி யுருளிய குறைத்த
> இலங்குவெள் ளருவிய அறைவாய்

என்று மோகூர் என்பதை மோகர் என அமைத்துக் கொள்வது சரியெனத் தோன்றுகிறது.

துளு நாட்டு மோகர்மேல் வெளிநாட்டார் செல்வதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், பாண்டி நாட்டு மோகூர் மேல் செல்வதற்கு மலைகளின் மேல் வழியுண்டாக்காமலே செல்ல வழிகள் இருந்தன. எனவே, மோரியர் படையெடுத்துச் சென்றது மோகூர் மேலன்று என்பதும் மோகர் மேல் சென்றனர் என்பதும் தெளிவாகின்றது. இதைத்தான் மேலே காட்டிய சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன.

மோகர் மேல் படையெடுத்துச் சென்ற மோரியர் என்பவர் யார், அவர்கள் மகத இராச்சியத்தை யரசாண்ட மோரியர் (மௌரியர்) அல்லர் என்பது வெளிப்படை. மோரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி கி.மு. 2ஆம் நூற்றாண்டிலேயே மறைந்து போயிற்று என்று முன்னமே கூறினோம். இச்சங்கச் செய்யுட்கள் இயற்றப்பட்ட காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு. ஆகவே, இச்சங்கச் செய்யுட்கள்

பாடப்பட்ட காலத்தில் (ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன்பு) இந்த வம்ப மோரியரின் துளு நாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும். அப்படியானால், இந்த வம்பமோரியர் கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்தவராதல்வேண்டும். இவர் யார்?

மௌரிய இராச்சியம் மேற்குக் கடற்கரை வரையில் பரவியிருந்தது. மௌரிய அரசரின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்களின் கீழ் ஆங்காங்கே இராச்சியப் பகுதிகளை யரசாண்டிருந்த சிற்றரசர் அவ்வப்பகுதிகளின் அரசராகச் சுதந்தரம் பெற்று அரசாண்டார்கள். அவர்களில் ஒரு சாரார், இந்தியாவின் மேற்குப் பக்கத்தில் நிலைத்து நெடுங்காலம் மோரியர் என்னும் பெயருடன் இருந்தனர். அவர்களே 'வம்பமோரியர்' ஆக இருக்கக்கூடும். அந்த வம்பமோரியர் கி.பி. முதல் நூற்றாண்டில் துளு நாட்டு மோகர் மேல் படையெடுத்து வந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. இந்த மோரியர் படையெடுப்பின் முழு வரலாறு தெரியவில்லை.

இந்த வம்பமோரியரின் சந்ததியார் பிற்காலத்திலுங்கூட (கி.பி. 6ஆம் நூற்றாண்டில்) சாளுக்கிய அரசர் காலத்தில் இந்தியாவின் மேற்குப் பக்கத்தில் இருந்து அரசாண்டு வந்தனர் என்பது தெரிகின்றது.

மௌரிய ஆட்சிக் காலத்தில், அவர்களின் இராச்சியத்தின் தெற்குப் பகுதியை யரசாண்ட இராசப் பிரதிநிதி சுவர்ணகிரி என்னும் நகரத்தில் இருந்து அரசாண்டார் என்று தெரிகின்றது. சுவர்ணகிரி என்பது, இப்போதுள்ள ஆந்திர தேசத்தில் ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள மாங்கி என்னும் ஊர். இங்கிருந்த மோரிய இராசப் பிரதிநிதிகளின் சந்ததியார் பிற்காலத்தில் மோரியர் என்னும் பெயருடன் இருந்தார்கள் போலும். இவர்களைத்தான் இச்சங்கச் செய்யுட்கள் வம்பமோரியர் என்று கூறுகின்றன போலும்.

IV. ஆய் எயினன்

சேரர் சார்பாக அவர்களின் சேனைத் தலைவனான ஆய் எயினன் நன்னனுடன் போர் செய்தான் என்று இந்நூலில் கூறினோம். அவனைப் பற்றிய செய்தியை இங்குக் கூறுவோம்.

இவன் வெளியம் என்னும் ஊரை யாண்ட சிற்றரசன். ஆகவே, இவன் 'வெளிய வேண்மான் ஆய் எயினன்' (அகம் 208 : 5). என்று கூறப்படுகிறான். வெளியன் என்பது சேர நாட்டில் இருந்த ஊர் என்பதை 'வானவரம்பன் வெளியம்' (அகம் 359 : 5). என்பதனால் அறிகிறோம் (வானவரம்பன்-சேர அரசன்). வெளியன் வேண்மான் ஆய் எயினன் சேர அரசர்களின் சேனைத் தலைவன் என்று தெரிகிறான். ஆய் எயினனுக்கு நல்லினி என்னும் பெயருள்ள ஒரு மகள் இருந்தாள். அவளை உதியஞ் சேரல் மணஞ் செய்திருந்தான்.

இவர்களுக்குப் பிறந்த மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இதனை,

> மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
> இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
> வெளியன் வேண்மான் நல்லினி ஈன்றமகன்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று பதிற்றுப்பத்து இரண்டாம் பத்துப் பதிகத்தினால் அறிகிறோம்.

எனவே, ஆய்எயினனின் மகளாகிய நல்லினி, சேரன் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலுக்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கும் பாட்டி என்று தெரிகிறது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் ஆய் எயினன்.

அக்காலத்தில் துளு (கொங்கண) நாட்டை யரசாண்ட நன்னன் என்பவன், வடகொங்கு நாட்டைச் சேர்ந்த புன்னாடு என்னும் ஊரைக் கைப்பற்ற முயற்சி செய்தான். அது, சேர அரசர் தென் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக்கொண்டிருந்த காலம். ஆகவே, கொங்காணத்து நன்னன் புன்னாட்டைக் கைப்பற்றிக் கொள்வது சேரர்களுக்கு ஆபத்தாக இருந்தது. அன்றியும் அக்காலத்தில் புன்னாடு நீலக்கல்லுக்குப் பேர் பெற்றிருந்தது. புன்னாட்டில் நீலக்கல் சுரங்கங்கள் இருந்தன. அங்குக் கிடைத்த நீலக்கற்களை யவனர், ரோமர் முதலிய மேல் நாட்டவர் வாங்கிக்கொண்டு போனார்கள். ஆகவே புன்னாடு, துளு நாட்டு நன்னன் ஆட்சியின்கீழ்ப் போவதைச் சேர அரசன் விரும்பவில்லை. ஆகவே, சேர அரசன் புன்னாட்டின் சார்பாக நன்னனுடன் போர் தொடுத்தான்.

சேர அரசனின் சேனைத் தலைவனான ஆய்எயினன் புன்னாட்டின் சார்பாக நன்னனுடன் போர் தொடுத்தான்.

சேர அரசனின் சேனைத் தலைவனான ஆய்எயினன் புன்னாட்டின் சார்பாகத் துளு நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். துளு நாட்டுப் பாழி என்னும் இடத்தில் நன்னனுடைய சேனைத் தலைவனான மிஞிலி என்பவன் அவனை எதிர்த்துப் போர்செய்தான். இச்செய்திகளைப் பரணர் என்னும் புலவர் கூறுகிறார். இதனை,

> பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
> யாழிசை மறுகில் பாழி யாங்கண்
> அஞ்ச லென்ற ஆஅய் எயினன்
> இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
> தன்னுயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது
>
> (அகம் 396 : 2-6)

என்றும்,

> ஒன்னார்
> ஓம்பரண் கடந்த வீங்கு பெருந்தானை
> அடுபோர் மிஞிலி செருவேல் கடைஇ
> முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
> ஆஅய் எயினன் வீழ்ந்தென (*அகம்* 181 : 3-7)

என்றும்,

> கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
> நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டென
> (*அகம்* 148 : 7-8)

என்றும் பரணர் கூறுகிறார்.

ஆய்எயினன் இறந்த பிறகு அவனுடைய உடம்பை அவனுடைய மனைவியரிடம் கொடுக்காமல் இருந்தான் நன்னன். அதனால் அவர்கள் பூசல் உண்டாக்கினார்கள். அப்போது அகுதை என்னும் சிற்றரசன் பூசலை நீக்கி அவன் உடம்பை அவர்களுக்குக் கொடுத்தான்.

> வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
> அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
> இழையணி யானை இயல்தேர் மிஞிலியோடு
> நண்பகல் உற்ற செருவிற் புண் கூர்ந்து
> ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
> அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
> ஒண்கதிர் தெறாமைச் சிறகரிற் கோலி
> நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
> படுகளங் காண்டல் செல்லான் சினஞ் சிறந்து
> உருவினை நன்னன் அருளான் கரப்பப்
> பெருவிதுப் புற்ற பல்வேள் மகளிர்
> குரூஉப் பூம் பைந்தார் அருக்கிய பூசல்
> வசைவிடக் கடக்கும் வயங்கு பெருந்தானை
> அகுதை களைதந் தாங்கு (*அகம்* 208 : 5-18)

என்று இச்செய்திகளைப் பரணர் தமது செய்யுள்களில் கூறுகிறார். பரணர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், அவன் மகன் நார்முடிச்சேரல், மற்றொரு மகன் சேரன் செங்குட்டுவன் ஆகியோர் காலத்தில் இருந்தவர். சேரன் செங்குட்டுவன் மீது 5ஆம் பத்துப் பாடியவர். அப்போது அவர் வயது முதிர்ந்தவராக இருந்தார். அவர் காலத்துக்குப் பின் செங்குட்டுவன் செய்த போர்களும் நிகழ்ச்சிகளும் அவனைப் பாடிய ஐந்தாம் பத்தில் இடம்பெற வில்லை.

V. கடம்பும் கடம்பரும்

கடல் துருத்தி என்னுந் தீவில் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வைத்திருந்த குறும்பரைச் சேரர் வென்று அடக்கியதை இந்நூலில் கூறினோம். அந்தக் கடம்ப மரத்தையும் பிற்காலத்தில் இருந்தவரான கடம்ப குல அரசரையும் இணைத்து இக்காலத்தில் சிலர் சரித்திரம் எழுதுகிறார்கள். அத்தவறான கருத்தை இங்கே விளக்குவோம்.

கடல் துருத்தியில் இருந்தவர் துளு நாட்டைச் சேர்ந்தவர். அவர்கள் துளு நாட்டு நன்னனுக்கு அடங்கியிருந்தவர்கள். அவர்கள் அத்தீவில் தங்கள் காவல் மரமாகக் கடம்ப மரத்தை வளர்த்து வந்தார்கள். ஆனால், அவர்களுக்குக் கடம்பர் என்று பெயர் இருந்ததில்லை. இக்காலத்து ஆராய்ச்சிக்காரர்களில் சிலர் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த இத்தீவினரைக் கடம்பர் என்று தவறாகக் கருதிக்கொண்டனர். இவ்வாறு தவறாகக் கருதிக்கொண்டு, பிற்காலத்தில் பனவாசி (வனவாசி) நாட்டையரசாண்ட கடம்ப அரசர்களின் முன்னோர்கள் இத்தீவில் இருந்தவர் என்று எழுதிவிட்டார்கள். கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த காரணத்தினாலே அவர்களைக் கடம்பர் என்று கூறுவது தவறு. சங்க நூல்களில் அவர்கள் கடம்பர் என்று கூறப்படவில்லை. இதனை இவர்கள் சிறிதும் அறியவில்லை.

மோகூரிலிருந்த பழையன் சந்ததியார் வேப்பமரத்தையும் குறுக்கை என்னும் ஊரில் இருந்த திதியன் பரம்பரையினர் புன்னை மரத்தையும் நன்னன் பரம்பரையார் பாழி என்னும் ஊரில் வாகை மரத்தையும் காவல் மரமாக வளர்த்து வந்தார்கள் என்பதைச் சங்க நூல்களில் காண்கிறோம். ஆனால், இவர்கள் வேம்பர், புன்னையர், வாகையர் என்று பெயர் கூறப்படவில்லை. அது போலவே கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்தவர் கடம்பர் என்று பெயர் பெறவில்லை. இதனையறியாமல், இக்காலத்து ஆராய்ச்சிக்காரர்களில் சிலர், இத்தீவிலிருந்தவரைக் கடம்பர் என்று தவறாகக் கருதிக்கொண்டு, பிற்காலத்திலிருந்த கடம்ப அரசரின் முன்னோர்கள் இவர்கள் என்று பிழையான கருத்தைத் தவறாக எழுதிவைத்துள்ளனர்.

பனவாசி அரசராகிய கடம்பர் கடம்ப மரத்தின் பெயரைக் கொண்டவர் என்றும் அந்தக் கடம்பமரம் கடற்றுருத்தியில் இருந்த கடம்ப மரம் என்றும், ஆகவே இக்கடம்ப மரத்தை வெட்டிய நெடுஞ்சேரலாதன் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரபலமாக இருந்த கடம்ப அரசர் காலத்தில் இருந்தவன் என்றும் தம் மனம் போனபடிஎல்லாம் சான்று இல்லாமல் எழுதிவிட்டார், *தமிழர் சரித்திரம்* என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய பி.டி.. சீநிவாச ஐயங்கார் (*History of the Tamils*, P.T. Srinivasa Iyengar, 1927,

p. 501). காவல் மரமாக இருந்த கடம்ப மரத்துக்கும் பிற்காலத்தில் இருந்த கடம்ப அரசருக்கும் என்ன உறவு? அந்த உறவுக்கு என்ன சான்று? யவனக் கப்பல்களைத் தங்கள் நாட்டுத் துறைமுகத்துக்கு வராதபடி தடுத்ததற்காகக் கடல் தீவில் இருந்தவர்களை வென்று அவர்கள் வளர்த்திருந்த கடம்பமரத்தை வெட்டி அடக்கினான் நெடுஞ்சேரலாதன். அது நிகழ்ந்தது கி.பி. 2ஆம் நூற்றாண்டில், யவன வாணிபம் தமிழ்நாட்டுடன் நடந்து வந்த காலத்தில். ஏறத்தாழ கி.பி. 250இல் தமிழ்நாட்டுடன் நடைபெற்ற யவன வாணிபம் நின்றுவிட்டது. நின்றுவிட்ட பிறகு, கி.பி. 5ஆம் நூற்றாண்டில் நெடுஞ்சேரலாதன் இருந்தான் என்று சரித்திரம் எழுதுகிறார் சீனிவாச ஐயங்கார்!

கே.ஜி. சேஷையரும் இந்தத் தவற்றைச் செய்கிறார். நெடுஞ்சேரலாதன் வென்ற இத்தீவின் மக்கள் பிற்காலத்தில் இருந்த கடம்ப குல அரசரின் முன்னோராக இருக்கலாம் என்று இவர் கூறுகிறார் (*Cera Kings of the Sangam Period*, K.G. Sesha Aiyar, 1937, p.11,12). ஆனால், சீனிவாச ஐயங்கார் எழுதியது போல இவர், நெடுஞ்சேரலாதன் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று எழுதவில்லை. அவன் கி.பி. 2ஆம் நூற்றாண்டினன் என்பதே இவர் கருத்து.

சேரன் செங்குட்டுவன் என்னும் நூலை எழுதிய மு. இராகவையங்காரும், கடல் துருத்தியில் இருந்தவருக்கும் பிற்காலத்தில் இருந்த கடம்ப அரசருக்கும் தொடர்பு கற்பிக்கிறார். 'சேரலாதன் பகைவர் (கடல் துருத்தியில் கடம்ப மரத்தைக் காவல் மரமாக வளர்த்திருந்தவர்) கடம்பைத் தம் குலமரமாகக் கொண்டு மைசூர் தேசத்தின் மேல் பாலை ஆண்ட கதம்ப வேந்தராகக் கருதப்படுகின்றனர்' என்று அவர் எழுதுகிறார்.

கடல் துருத்தியில் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்தவர் வேறு. அவர்கள் கடம்பர் அல்லர். அவர்களுக்குக் கடம்பர் என்ற பெயர் இருந்ததில்லை. பிற்காலத்தில் பனவாசி நாட்டையரசாண்ட கடம்ப அரசர் வேறு. இவர்களையும் அவர்களையும் தொடர்புபடுத்துவது தவறு.

கடம்ப அரசர் குலத்தை உண்டாக்கிய மூல புருஷன் மயூரசர்மன் என்னும் பிராமணன். இவன் ஏறத்தாழ கி.பி. 360இல் முடிசூடினான். இவனுடைய பிற்காலச் சந்ததியார் கடம்பர் என்று பெயர் பெற்றிருந்தனர். கடம்ப அரசர் குலத்தின் ஆதிபுருஷன் மயூரசர்மன் என்பதை அடியோடு மறந்துவிட்டு, கடல் துருத்தித் தீவில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர் கடம்ப அரசரின் முன்னோர் என்று இவர்கள் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

பதிற்றுப்பத்து 2ஆம் பத்திலும் 5ஆம் பத்திலும் *சிலப்பதிகாரத்திலும்* சேரர் கடம்ப மரத்தை வெட்டிய செய்தி

கூறப்படுகிறது. இந்நூல்களில் ஓரிடத்திலேனும் இவர் கடம்பர் என்று கூறப்படவில்லை. கடம்ப மரந்தான் கூறப்படுகிறது. இதை யாராயாமல் காவல் மரமாகிய கடம்ப மரத்தையும் பனவாசிக் கடம்ப குலத்து அரசரையும் பொருத்துவது தவறான செய்தியாகும்.

கொங்கு
நாட்டு
வரலாறு
மயிலை
சீனி வேங்கடசாமி
NCBH

கொங்கு நாட்டு வரலாறு

(பழங்காலம் – கி.பி. 250 வரையில்)

காணிக்கை

இந்த நூலை எழுதுவதற்கு
ஊக்கமளித்துத் தூண்டுகோலாக இருந்த
பொள்ளாச்சிப் பெருந்தகை
திரு. நா. மகாலிங்கம் அவர்களுக்கு

முன்னுரை

கொங்கு நாடு ஆதிகாலம் முதல் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. அதனால் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் கொங்கு நாடும் முக்கிய இடம் பெற்றுள்ளது. கொங்கு நாட்டுச் சரித்திரம் இல்லாமல் தமிழ்நாட்டுச் சரித்திரம் பூர்த்தியடைய முடியாது. தமிழ்நாட்டின் சரித்திரம் ஆதிகாலம் முதல் இன்றைய காலம் வரையும் தொடர்ந்து முழுமையாக எழுதப்படாதது போலவே கொங்கு நாட்டின் சரித்திரமும் முறையாகவும் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் இதுவரையில் எழுதப்படவில்லை. அங்கும் இங்குமாகச் சில சரித்திரப் பகுதிகள் புத்தகமாக வெளிவந்துள்ளன. அவ்வளவு தான். பழங்காலத்துக் கொங்கு நாட்டின் வரலாறு எழுதப்படுவது இதுவே முதல் முறையாகும்.

தமிழகத்தின் வரலாறு சங்க காலத்திலிருந்து தொடங்குகிறது. சங்க காலத்துத் தமிழகம் ஆறு உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. அந்தப் பிரிவுகள் துளு நாடு, சேர நாடு, பாண்டி நாடு, சோழ நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு என்பவை. துளு நாடு, அரபிக் கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இடையே சேர நாட்டுக்கு வடக்கே இருந்தது. இப்போது அது தென் கன்னட வட கன்னட மாவட்டங்களில் அடங்கி மைசூர் (கன்னட) தேசத்தில் சேர்ந்து இருக்கிறது. துளு நாட்டுக்குத் தெற்கே அரபிக் கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இடையே சேர நாடு இருக்கிறது. பழைய சேர நாடு இப்போது மலையாள நாடாக மாறிக் கேரள இராச்சியமாக அமைந்திருக்கிறது. துளு நாடும் சேர நாடும் பிற்காலத்தில் தமிழகத்திலிருந்து தனியாகப் பிரிந்துபோய்விட்டன. பாண்டி நாடு தமிழகத்தின் தெற்கே, வங்காளக் குடாக் கடல், இந்துமா கடல், அரபிக் கடல் ஆகிய மூன்று கடல்களுக்கிடையே இருக்கிறது. பாண்டி நாட்டுக்கு வடக்கே, வங்காளக்குடாக் கடல் ஓரமாகச் சோழ நாடு இருக்கிறது. சோழ நாட்டுக்கு வடக்கே வங்காளக்குடாக் கடலை யடுத்துத் தொண்டை நாடு இருக்கிறது. தொண்டை நாடு வடபெண்ணை ஆறு வரையில் இருந்தது. இவ்வாறு துளு நாடும்

சேர நாடும் பாண்டிய நாடும் சோழ நாடும் தொண்டை நாடும் கடற்கரை யோரங்களில் அமைந்திருந்தன. ஆறாவது பிரிவாகிய கொங்கு நாடு கடற்கரை இல்லாத உள் நாடு. அது இப்போதைய பழனிமலை வட்டாரத்திலிருந்து வடக்கே கன்னட நாட்டில் பாய்கிற காவிரி ஆறு வரையில் (ஸ்ரீரங்கப்பட்டணம் வரையில்) பரந்திருந்தது, அதனுடைய மேற்கு எல்லை, மேற்கு தொடர்ச்சி மலைகள். கிழக்கு எல்லை, சோழ தொண்டை நாடுகளின் மேற்கு எல்லைகள். சங்க காலத்திலே பெரிய நிலப்பரப்பாக இருந்த கொங்கு நாடு பிற்காலத்திலே குறைந்து குறுகிவிட்டது.

சங்க காலத்திலே, பெரிய பரப்புள்ளதாக இருந்த கொங்கு நாட்டைச் சிறுசிறு குறுநில மன்னர்கள் அரசாண்டார்கள். சேர, சோழ, பாண்டியரைப் போல முடிதரித்து அரசாண்ட பெருமன்னர் அக்காலத்தில் கொங்கு நாட்டில் இல்லை. சிறுசிறு ஊர்களைச் சிற்றரசர் பலர் அரசாண்டு வந்தனர். அந்தச் சிற்றரசர்களை வென்று கொங்கு நாட்டைக் கைப்பற்றி அரசாளச் சேரரும் பாண்டியரும் சோழரும் முயன்றார்கள். ஆகவே, சங்க காலத்தில் கொங்கு நாட்டிலே பல போர்கள் நடந்தன. கடைசியில், சேர அரசர் கொங்கு நாட்டில் கால் ஊன்றினார்கள். பிறகு அவர்கள் கொஞ்சங்கொஞ்சமாகக் கொங்கு நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொங்கு இராச்சியத்தை யமைத்து அரசாண்டார்கள். கொங்கு நாட்டை யரசாண்ட சேரர், இளைய கால்வழியினரான பொறையர். அவர்களுக்கு இரும்பொறை என்றும் பெயர் உண்டு. மூத்த கால் வழியினரான சேரர் சேர நாட்டையும், இளைய கால்வழியி னரான பொறையர் கொங்கு நாட்டையும் அரசாண்டார்கள். சில வரலாற்று ஆசிரியர்கள் சேர நாட்டையாண்ட சேர அரசரே கொங்கு நாட்டையும் அரசாண்டனர் என்று தவறாகக் கருதிக்கொண்டு அவ்வாறே சரித்திரம் எழுதியுள்ளனர். அவர் கூற்று தவறானது. ஒரே குலத்தைச் சேர்ந்த மூத்த வழி, இளைய வழியினராக இருந்தாலும், சேர நாட்டை யாண்ட சேர அரசர் வேறு, கொங்கு நாட்டை யரசாண்ட பொறைய அரசர் வேறு.

கொங்கு நாட்டு வரலாற்றின் சரித்திரக் காலம், இப்போது கிடைத்துள்ள வரையில், ஏறத்தாழக் கி.பி. முதல் நூற்றாண்டில் தொடங்குகிறது. கி.பி. முதல் நூற்றாண்டில் தொடங்குகிற கொங்கு நாட்டுச் சரித்திரம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் (ஏறத்தாழ கி.பி. 250இல்) முடிகிறது. அதாவது, தமிழ்நாடு களப்பிர அரசருக்குக் கீழடங்கியபோது கொங்கு நாட்டுச் சரித்திரத்தின் பழைய வரலாறு முடிவடைகிறது.

ஒரு நாட்டின் வரலாறு எழுதுவதற்கு நல்ல சான்றுகளாக இருப்பவை *ஆர்க்கியாலஜி* (பழம்பொருள் அகழ்வாராய்ச்சி),

எபிகிராபி (சாசன எழுத்துக்கள்), *நூமிஸ்மாட்டிக்ஸ்* (பழங்காசுகள்), இலக்கியச் சான்றுகள் முதலானவை. கொங்கு நாட்டுப் பழைய சரித்திரம் எழுதுவதற்கு இந்தச் சான்றுகளில், இலக்கியச் சான்றுகளைத் தவிர, ஏனைய சான்றுகள் மிகமிகக் குறைவாக உள்ளன.

அகழ்வராய்ச்சி (*ஆர்க்கியாலஜி*) கொங்கு நாட்டில் தொடங்கவில்லை என்றே கூறவேண்டும். தமிழ் நாட்டின் ஏனைய மண்டலங்களில் *ஆர்க்கியாலஜி* முறையாகவும் தொடர்ந்தும், முழுமையுமாகச் செயற்படாமலிருப்பது போலவே, கொங்கு மண்டலத்திலும் *ஆர்க்கியாலஜி* அதிகமாகச் செயற்படவில்லை. ஆகவே, *ஆர்க்கியாலஜி* சான்றுகள் நமக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை.

எபிகிராபி (பழைய சாசன எழுத்துச் சான்று) ஓரளவு கிடைத்துள்ளன. அவை பிராமி எழுத்துகளில் எழுதப் பட்டிருக்கிறபடியால் நம்முடைய கொங்கு நாட்டுப் பழைய சரித்திரத்துக்கு ஓரளவு உதவியாக இருக்கின்றன. பிராமி எழுத்துச் சாசனங்கள், கொங்கு நாட்டில் உள்ளவை, முழுமையும் இன்னுங் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளன. கிடைத்திருக்கிற பிராமி எழுத்துச் சாசனங்களும் அக்காலத்து அரசரைப் பற்றிய செய்திகளைக் கூறவில்லையாகையால் இவையும் நமக்கு அதிகமாகப் பயன்படவில்லை. ஆனால், இந்தச் சாசன எழுத்துகள் அக்காலத்துச் (மத) சமயங்கள் சம்பந்தமாகவும் சமூக வரலாறு சம்பந்தமாகவும் நமக்குப் பயன்படுகின்றன. கொங்கு நாட்டில் கிடைத்துள்ள பெரும்பான்மையான பிற்காலத்து வட்டெழுத்துச் சாசனங்கள் நம்முடைய பழங்கால ஆராய்ச்சிக்குப் பயன்படவில்லை.

நூமிஸ்மாட்டிக்ஸ் என்னும் பழங்காசுச் சான்றுகள் கிடைத்திருக்கிற போதிலும், இவை கொங்கு நாட்டுக்கேயுரிய பழங்காசுகளாக இல்லாமல், உரோமாபுரி நாணயங்களாக இருக்கின்றன. எனவே, இந்தப் பழங்காசுகளிலிருந்து கொங்கு நாட்டின் பழைய சரித்திரத்தையறிய முடியவில்லை. ஆனால், இந்த ரோமாபுரிப் பழங்காசுகள் அக்காலத்துக் கொங்கு நாட்டின் வாணிக வரலாற்றை யறியப் பயன்படுகின்றன.

இவ்வளவு குறைபாடுகள் உள்ள நிலையில் கொங்கு நாட்டின் பழைய சரித்திரத்தை எழுத வேண்டியிருக்கிறது. இப்போது கிடைத்துள்ள ஒரே கருவி சங்க இலக்கியங்கள் மட்டுமே. சங்க இலக்கியம் என்பவை எட்டுத்தொகை நூல்களாகும்.

அகநானூறு, புறநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை என்பவை எட்டுத்தொகை நூல்களாம். எட்டுத் தொகையில்

பதிற்றுப்பத்தும், புறநானூறு, அகநானூறும், நற்றிணையும் ஆகிய நான்கு நூல்கள் கொங்கு நாட்டுப் பழைய சரித்திர ஆராய்ச்சிக்குப் பயனுள்ளவையாக இருக்கின்றன. இந்த நான்கு நூல்களின் உதவியும் சான்றும் இல்லாமற்போனால் கொங்கு நாட்டின் பழைய வரலாறுகள் கொஞ்சமும் தெரியாமல் அடியோடு மறைந்து போயிருக்கும். நற்காலமாக இந்த நூல்களில் கொங்கு நாட்டின் பழைய வரலாற்றுச் செய்திகள் அங்கும் இங்குமாகக் காணப்படுகின்றன. அவை முறையாக அமையாமல் அங்கும் இங்குமாக ஒவ்வோரிடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. வரலாறு கூறுவது என்பது இந்தப் பழைய இந்நூல்களின் நோக்கம் அன்று. தங்களைப் போற்றிப் புரந்த அரசர், சிற்றரசர் முதலானோரைப் புகழ்ந்து பாடிய செய்யுள் களாக அமைந்துள்ள இந்தப் பழைய நூல்களில் சரித்திர வரலாற்றுச் செய்திகளும் தற்செயலாக இடம் பெற்றிருக்கின்றன. இந்த வரலாற்றுச் செய்திகளைத் தக்க முறையில் ஏனைய செய்திகளுடன் பொருத்தி ஆராய்ந்து, வரலாற்றை அமைக்க வேண்டியது சரித்திரம் எழுதுவோரின் கடமையாகிறது.

கொங்கு நாட்டுப் பழைய வரலாறு எழுதுவதற்குப் பெருந்துணையாக இருக்கிற இந்த நூல்களைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

பதிற்றுப்பத்து

சங்க இலக்கியங்களில் ஒன்றான *பதிற்றுப்பத்து*, சங்க காலத்துச் சேர அரசர்கள் மேல் பாடப்பட்டது. ஒவ்வொரு அரசன் மேலும் பத்துப்பத்துச் செய்யுளாகப் பத்து அரசர் மேல் பாடப்பட்டபடியால் இது *பதிற்றுப்பத்து* என்று பெயர் பெற்றது. இப்போது கிடைத்துள்ள *பதிற்றுப்பத்தில்* முதல் பத்தும் பத்தாம் பத்தும் காணப்படாதபடியால் எட்டுப் பத்துக்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஆகவே, *பதிற்றுப்பத்தில்* எட்டு அரசர்களைப் பற்றிய வரலாறு மட்டும் கிடைக்கின்றது.

சேர நாட்டு அரசர்களைப் பற்றிக் கூறுகிற *பதிற்றுப்பத்துக்* கும் கொங்கு நாட்டு வரலாற்றுக்கும் என்ன சம்பந்தம் உண்டு என்று கேட்கலாம்; இப்போது பெரும்பான்மையோர் கருதிக் கொண்டிருக்கிறபடி, *பதிற்றுப்பத்து* சேர நாட்டு வரலாற்றை மட்டுங் கூறவில்லை; கொங்கு நாட்டு வரலாற்றையுங் கூறுகிறது. முதல் ஆறு பத்துகள் சேர நாட்டுச் சேர அரசர்களைப் பற்றிக் கூறுகின்றன. அடுத்த நான்கு பத்துகள், கொங்கு நாட்டை யாண்ட கொங்குச் சேர அரசர்களைப் பற்றிக் கூறுகின்றன. இந்த உண்மையை இது வரையில் சரித்திரக்காரர்கள் உணரவில்லை.

பதிற்றுப்பத்து அரசர்களை மூத்தவழியரசர் என்றும் இளையவழியரசர் என்றும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். மூத்த வழியரசர்கள் சேர நாட்டை யரசாண்டார்கள். இளையவழி யரசர்கள் கொங்கு நாட்டையரசாண்டார்கள். கொங்கு நாட்டை யரசாண்ட இளையவழி யரசர்களுக்குக் கொங்குச் சேரர் என்று பெயர் கூறலாம். சங்க இலக்கியங்களில் அவர்கள் பொறையர் என்று கூறப்பட்டுள்ளனர். ஆனால், மூத்தவழிப் பரம்பரையாருக் கும் இளையவழிப் பரம்பரையாருக்கும் கொங்கு நாட்டுச் சரித்திரத்தில் பெரும் பங்கு உண்டு. மூத்தவழியைச் சேர்ந்த சேர அரசர் கொங்கு நாட்டைச் சிறிதுசிறிதாகக் கைப்பற்றிச் சேர சாம்ராச்சியத்தோடு (சேரப் பேரரசோடு) இணைத்துக்கொள்ள பல காலம் முயன்றனர். கொங்கு நாடு, சேர இராச்சியத்துக்கு அடங்கிய பிறகு சேர அரசர்களின் இளைய பரம்பரையார் கொங்கு நாட்டில் வந்து தங்கி கருவூரைத் தலைநகரமாக அமைத்துக்கொண்டு கொங்குச் சேரர் என்னும் பெயர் பெற்றுக் கொங்கு நாட்டை யரசாண்டார்கள். இந்த வரலாற்றை அறிவதற்குப் பெருந்துணையாக இருப்பது *பதிற்றுப்பத்து*. முக்கியமாக 7, 8, 9ஆம் பத்துகள் கொங்கு நாட்டுப் பழைய வரலாற்றை அறிவதற்கு உதவியாக உள்ளன.

புறநானூறு

புறநானூறு சங்க காலத்திலிருந்த சேர, சோழ, பாண்டிய அரசர்கள் மேலும், சிற்றரசர்கள் மேலும் புலவர்கள் அவ்வப் போது பாடிய செய்யுள்களின் தொகுப்பு ஆகும். *புறநானூற்றுச்* செய்யுள்களில் சேர அரசரைப் பற்றிய செய்யுள்களும் உள்ளன. கொங்குச் சேரர்களைப் பற்றிப் *பதிற்றுப்பத்தில்* கூறப்பட்ட வரலாறுகள் சில *புறநானூற்றுச்* செய்யுள்களிலும் கூறப்படு கின்றன. *பதிற்றுப்பத்தில்* கூறப்படாத கொங்கு நாட்டு அரசர் செய்திகளும் *புறநானூற்றில்* கூறப்படுகின்றன. மேலும், கொங்கு நாட்டை அக்காலத்தில் அரசாண்ட சிற்றரசர்கள் (*பதிற்றுப் பத்தில்* கூறப்படாதவர்) சிலர் *புறநானூற்றில்* கூறப்படுகின்றனர். ஆகவே, *புறநானூறு* கொங்கு நாட்டுச் சரித்திரத்தை அறிவதற்கு இன்னொரு முக்கியக் கருவி நூலாக இருக்கிறது.

அகநானூறு

அகநானூறு, அகப்பொருளாகிய காதற்செய்திகளைக் கூறுகிற நூல். ஆகையால் அதில் பொதுவாகச் சரித்திரச் செய்திகளும் வரலாற்றுச் செய்திகளும் இடம்பெறுவதில்லை. ஆனால், அச்செய்யுள்களைப் பாடிய புலவர்களில் சிலர், தங்களை ஆதரித்த அரசர், சிற்றரசர்களைப் பற்றிய வரலாற்றுச்

செய்திகளை இந்தக் காதற் செய்யுள்களில் புகுத்திப் பாடியுள்ளனர். இப்படிப்பட்ட வரலாற்றுச் செய்திகள் சில, கொங்கு நாட்டு வரலாற்றை அறிவதற்கு உதவியாக இருக்கின்றன. எனவே, *அகநானூற்றுச்* செய்யுள்களும் நமது சரித்திர ஆராய்ச்சிக்கு உதவியாக இருக்கின்றன.

நற்றிணை நானூறு

அகநானூற்றைப் போலவே, *நற்றிணை நானூறும்* அகப் பொருளைக் கூறுகிறது. *அகநானூற்றுச்* செய்யுள்கள் சில அரசர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதுபோல *நற்றிணைச்* செய்யுட்கள் சிலவற்றிலும் வரலாற்றுச் செய்திகள் கூறப்படுகின்றன. அதனால், *நற்றிணைச்* செய்யுள்களில் சில கொங்கு நாட்டு வரலாற்றுக்குத் துணைசெய்கின்றன. *குறுந்தொகை, ஐங்குறுநூறு* போன்ற வேறு சில அகப்பொருள் நூல்களிலும் ஆங்காங்கே சில இடங்களில் காணப்படுகிற வரலாற்றுச் செய்திகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

சிலப்பதிகாரம்

இளங்கோ அடிகள் இயற்றிய *சிலப்பதிகாரமும்* இந்த நூலை எழுதுவதற்குத் துணையாக இருந்தது. *பதிற்றுப்பத்தில்* கூறப் படுகிற சேரர்களைப் பற்றிய குறிப்புகள் *சிலப்பதிகாரத்திலும்* காணப்படுகின்றன. ஆகவே, இந்த வரலாறு எழுதுவதற்கு இது துணை செய்கின்றது. மேலும், கொங்கு நாட்டுப் பொறை அரசர்களின் காலத்தைக் கணித்து நிறுவுவதற்கும் *சிலம்பு* பெரிய உதவியாக இருக்கிறது.

இது கொங்கு நாட்டின் முழு வரலாறு அன்று; சங்க காலத்துக் கொங்கு நாட்டின் வரலாறு ஆகும். கொங்கு நாட்டின் புகழூரை அடுத்த மலைப்பாறையில் எழுதப்பட்ட பிராமி எழுத்துச் சாசனம், கொங்கு நாட்டை யாண்ட பெருங் கடுங்கோன், இளங் கடுங்கோன், இளங்கோன் என்னும் மூன்று அரசர்களைக் கூறுகிறது. அவர்களைப் பற்றிய வரலாறு தெரியவில்லை. நமக்குக் கிடைத்த வரையில் உள்ள சான்றுகளையெல்லாம் தொகுத்து வரன்முறையாக எழுதப்பட்ட சங்க காலத்துக் கொங்கு நாட்டுச் சரித்திரம் இது.

இவ்வாறு சங்க காலத்துக் கொங்கு நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு என்னென்ன சாதனங்களும் கருவிகளும் சான்றுகளும் கிடைத்திருக்கின்றனவோ (அவை மிகச் சில) அவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு இந்தக் கொங்கு நாட்டுப் பழைய வரலாற்றினை எழுதுகிறேன். இதைச் சரியாகச் செய்திருக்கிறேனா என்பதை வாசகர்தான் கூறவேண்டும்.

இந்த நூலை நான் எழுதுவதற்குக் காரணமாக இருந்தவருக்கு நன்றி செலுத்துகிறேன். பொள்ளாச்சிப் பெருந்தகையார் திரு. நா. மகாலிங்கம் அவர்கள், இந்நூலை எழுதுமாறு என்னைத் தூண்டி ஊக்கப்படுத்தினார்கள். அவர்களின் தூண்டுகோல் இல்லாமற்போனால் இந்நூலை நான் எழுதியிருக்க முடியாது. அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

இந்நூலை அழகாக அச்சிட்டு வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நிலையத்தாருக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த வரலாற்று நூலைப் பொதுமக்கள் ஆதரித்து எனக்கு மேன்மேலும் ஊக்கம் அளிக்குமாறு வேண்டுகிறேன். இது போன்ற பணிகளில் என்னைச் செலுத்தித் தமிழகச் சமய வரலாறு, மொழி வரலாறு, சமுதாய வரலாறு, நுண்கலை வரலாறுகளை எழுத உதவியருள வேண்டுகிறேன்.

சென்னை—4
19—9—74 **மயிலை சீனி. வேங்கடசாமி**

கொங்கு நாடு

கடைச் சங்க காலத்திலே, 1,800 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழகம் ஆறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. அந்தப் பிரிவுகள், துளு நாடு, சேர நாடு, பாண்டி நாடு, சோழ நாடு, அருவா நாடு, கொங்கு நாடு என்பவை. இந்த ஆறு நாடுகளில் துளு நாடும் சேர நாடும் மேற்குக் கடற்கரையோரத்தில் இருந்தன. துளு நாடு இப்போது தென்கன்னடம் வடகன்னடம் என்று பெயர் பெற்று மைசூர் இராச்சியத்தோடு இணைந்திருக்கின்றது. சேர நாடு இப்போது கேரள நாடு என்று பெயர் பெற்று மலையாளம் பேசும் நாடாக மாறிப் போயிற்று. தமிழகத்தின் தென்கோடியில் பாண்டி நாடு மூன்று கடல்கள் சூழ்ந்த நாடாக இருந்தது. சோழ நாடும் அருவா நாடும் (தொண்டை நாடு) கிழக்குக் கடற்கரையோரமாக அமைந்துள்ளன. கொங்கு நாடு தமிழகத்தின் இடை நடுவே கடற்கரை இல்லாத உள்நாடாக அமைந்திருந்தது (படம் காண்க).

கொங்கு நாடு இப்போது சேலம் வட்டம், கோயம்புத்தூர் வட்டங்களில் அடங்கியிருப்பதாகக் கூறுவர். பிற்காலத்திலே சுருங்கிப்போன கொங்கு நாட்டைத்தான் அதாவது கோயம்புத்தூர் சேலம் வட்டங்களைத்தான், இக்காலத்தில் கொங்கு நாடு என்று கூறுகின்றோம். ஆனால், சங்க காலத்திலிருந்த கொங்கு நாடு இப்போதுள்ள கொங்கு நாட்டைவிட மிகப் பெரியதாக இருந்தது. பிற்காலத்துச் செய்யுள்கள் கொங்கு நாட்டின் எல்லையைக் குறுக்கிக் கூறுகின்றன.

வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்கு வெள்ளிப் பொருப்பு குன்று—கிழக்கு
கழித்தண்டலை சூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவே கொங்கு

என்றும்

வடக்கு பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—கிடக்கும்



படம் 1

களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையனவே கொங்கு

என்றும் கூறுகின்றன பழம் பாடல்கள்.

கொங்கு மண்டல சதகம் கொங்கு நாட்டின் எல்லைகளை இவ்வாறு கூறுகிறது.

மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளிமலை பெரும்பாலை கவின்வடக்கு

விதித்துள்ள நான்கெல்லை சூழ வளமுற்றும்
மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே

இவ்வாறு கூறுவன எல்லாம் பிற்காலத்து எல்லைகள். ஆனால், மிக முற்காலத்திலே, கடைச்சங்க காலத்தில் கொங்கு நாடு பரந்து விரிவாக இருந்தது.

அதன் தெற்கு எல்லைக்கு அப்பால் பாண்டி நாடு இருந்தது. அதன் மேற்கு எல்லை, சையகிரி (மேற்குத் தொடர்ச்சி) மலைகள். மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மேற்கே சேர நாடும் துளு நாடும் இருந்தன. கொங்கு நாட்டின் கிழக்கு எல்லைக்கப்பால் சோழ நாடும் தொண்டை நாடும் இருந்தன. அதன் வடக்கு எல்லை, மைசூரில் பாய்கிற காவிரியாறு (சீரங்கப்பட்டணம்) வரையில் இருந்தது. இவ்வாறு பழங்கொங்கு நாட்டின் பரப்பும் எல்லையும் மிகப் பெரியதாக இருந்தன.

இப்போது பாண்டி நாட்டுடன் இணைந்து இருக்கிற (மதுரை மாவட்டம் மதுரை தாலுகாவில் சேர்ந்திருக்கிற) வையாவி நாடு (பழனிமலை வட்டாரம்) அக்காலத்தில் கொங்கு நாட்டின் தென்பகுதியாக இருந்தது. பழனிமலை சங்க காலத்தில் பொதினி என்று வழங்கப் பெற்றது. பொதினி பிற்காலத்தில் பழனியாயிற்று. கொங்கு நாட்டின் தென்கோடியாகிய வையாவி நாட்டை அக்காலத்தில் வையாவிக்கோ என்னும் அரச பரம்பரையார் அரசாண்டார்கள். சேர நாடு, துளு நாடுகளின் கிழக்கே, வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கிற சைய மலைகள் (மேற்குத் தொடர்ச்சி மலைகள்) கொங்கு நாட்டின் மேற்கு எல்லைகளாக அமைந்திருந்தன. யானைமலைப் பிரதேசம் கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தது. அது அக்காலத்தில் உம்பற்காடு என்று பெயர் பெற்றிருந்தது (உம்பல்-யானை). மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பாலைக்காட்டுக் கணவாய், சேர நாட்டையும் கொங்கு நாட்டையும் இணைத்துப் போக்குவரத்துக்கு உதவியாக இருந்தது. மற்ற இடங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் உயரமாக அமைந்து இரண்டு நாடுகளுக்கும் போக்குவரத்து இல்லாதபடி தடுத்துவிட்டன. பாலைக்காட்டு அருகில் மலைகள் தாழ்ந்து கணவாயாக அமைந்து இருப்பதால் அது சேர நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் போக்குவரத்துக்கு ஏற்றதாக இருக்கின்றது. இந்தக் கணவாய் வழியாகச் சேர அரசர் படையெடுத்து வந்து கொங்கு நாட்டைக் கைப்பற்றினார்கள்.

இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சேர்ந்திருக்கிற கரூர் தாலுகாவும் வேறு சில பகுதிகளும் பழங்காலத்தில் கொங்கு

நாட்டில் சேர்ந்திருந்தன. அக்காலத்தில் கருவூர், கொங்கு நாட்டின் தலைநகரமாக இருந்தது. கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த அந்தப் பகுதிகள், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கும்பினியார் நாடு பிடித்து அரசாளத் தொடங்கிய பிற்காலத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இணைக்கப்பட்டன.

பழங்கொங்கு நாட்டின் வடக்கெல்லை மைசூரில் பாய்கிற காவிரி ஆற்றுக்கு அப்பால் நெடுந்தூரம் பரவியிருந்தது என்று கூறினோம். இக்காலத்தில் மைசூர் இராச்சியத்தின் தென்பகுதிகளாக இருக்கிற பல நாடுகள் அக்காலத்தில் வடகொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தன. பேர்போன புன்னாடு, கப்பிணி ஆற்றங்கரை மேல் உள்ள கிட்டூரைத் (கட்டூர்) தலைநகரமாகக் கொண்டிருந்தது. அது சங்க காலத்தில் வட கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தது. எருமை ஊரை அக்காலத்தில் அரசாண்டவன் எருமையூரன் என்பவன். எருமை ஊர் பிற்காலத்தில் மைசூர் என்று பெயர் பெற்றது. (எருமை-மகிஷம். எருமையூர்-மைசூர். எருமை ஊர், மைசூர் என்றாகிப் பிற்காலத்தில் கன்னட நாடு முழுவதுக்கும் பெயராக அமைந்துவிட்டது.)

இப்போதைய மைசூர் நாட்டில் உள்ள ஹளேபீடு (ஹளே —பழைய, பீடு—வீடு) அக்காலத்தில் துவரை என்று வழங்கப்பட்டது. துவரை, இக்காலத்தில் துவார சமுத்திரம் என்று பெயர் பெற்றுள்ளது. இங்கு ஒரு பெரிய ஏரியும் அதற்கு அருகிலே உள்ள மலையடிவாரத்தில் அழிந்து போன நகரமும் உள்ளன. இந்த நகரம் சங்க நூல்களில் கூறப்படுகின்ற அரையம் என்னும் நகரமாக இருக்கக்கூடும். துவரையையும் அதற்கு அருகில் இருந்த அரையத்தையும் புலிகடிமால் என்னும் அரச பரம்பரை யரசாண்டது. மிகப் பிற்காலத்தில் மைசூரை யரசாண்ட ஹொய்சளர், பழைய புலிகடிமால் அரச பரம்பரையார் என்று தோன்றுகின்றனர். ஹொய்சள என்பது புலிகடிமால் என்பதன் மொழிப்பெயர்ப்பாகத் தெரிகின்றது.

கொங்கு நாட்டின் வடஎல்லை பழங்காலத்தில் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு முன்பு மைசூர் நாட்டில் பாய்கிற காவிரி ஆற்றுக்கு அப்பால் இருந்தது என்று கூறுவது வெறும் கற்பனை யன்று, சரித்திர உண்மையே. அக்காலத்தில் கன்னட நாடு (வடுக நாடு) வடக்கே வெகுதூரம் கோதாவரி ஆறு வரையில் பரவியிருந்தது. இப்போது மகாராட்டிர நாடாக இருக்கிற இடத்தின் தென் பகுதிகள் அக்காலத்தில் கன்னடம் பேசப்பட்ட கன்னட நாடாக இருந்தன. பிற்காலத்தில் மகாராட்டிரர், வடக்கே இருந்த கன்னட நாட்டில் புகுந்து குடியேறினார்கள். காலஞ்செல்லச்செல்ல அந்தப் பகுதி மகாராட்டிர நாடாக மாறிப்

போயிற்று. இதன் காரணமாக, மகாராட்டிர பாஷையில் பல கன்னட மொழிச் சொற்கள் கலந்திருப்பதைக் காண்கின்றோம்.

இக்காலத்தில் உள்ள கன்னட (மைசூர்) நாட்டின் தென் பகுதிகள் அப்பழங் காலத்தில், தமிழ் நாடாக (வடகொங்கு நாட்டின் பகுதியாக) இருந்தன. வடக்கேயிருந்த கன்னட நாட்டில் மராட்டியர் புகுந்து குடியேறியபோது, கன்னடர் தெற்கே வடகொங்கு நாட்டு எல்லையில் புகுந்து குடியேறினார்கள். மைசூரில் பாய்கிற காவிரி ஆற்றுக்கு வடக்கிலிருந்து வடக்கே கோதாவிரி ஆறு வரையில் பழங்காலத்தில் கன்னட நாடு பரவியிருந்தது என்று கூறுவதற்குக் கன்னட இலக்கண நூல் சான்று கூறுகின்றது. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த நிருபதுங்க அரசன் (கி.பி. 850இல்) இயற்றிய *கவிராஜ மார்க்கம்* என்னும் கன்னட இலக்கண நூலில், பழங் கன்னட நாட்டின் எல்லை கூறப்படுகின்றது. அதில் கன்னட நாட்டின் அக்காலத் தென் எல்லை மைசூரில் பாய்கிற காவிரி ஆறு என்று கூறப்படுகின்றது.

காவேரியிந்த மா கோதாவரி வரமிர்ப நாடதா
கன்னட தொள்
பாவிஸித ஜனபதம் வஸுதாவளய விலீன விஸத
விஷய விஸேஷம்

(*கவிராஜ மார்க்கம்* 1-36)

இதனால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கன்னட நாட்டின் தென் எல்லை காவிரி ஆறு (மைசூர் நாட்டில் பாயும் காவிரி ஆறு) என்று தெளிவாகத் தெரிகின்றது. 9ஆம் நூற்றாண்டிலே இது கன்னட நாட்டின் தென் எல்லையாக இருந்தது என்றால் அதற்கு முற்பட்ட சங்க காலத்தில் (கி.பி. 200க்கு முன்பு) பழைய கன்னட நாட்டின் தென் எல்லை காவிரி ஆற்றுக்கு வடக்கே இருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயம் என்ன? கன்னடர், தமிழகமாக இருந்த வடகொங்கு நாட்டில் வந்து பரவியதும், பிற்காலத்தில் அந்தப் பகுதிகள் கன்னட மொழியாக மாறிப் போனதும் பிற்காலத்தில் (கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு) ஏற்பட்டவையாகும். எனவே, நமது ஆராய்ச்சிக்குரிய கடைச் சங்க காலத்தில் கொங்கு நாடு, மைசூர் நாட்டுக் காவிரி ஆற்றுக்கு அப்பால் வடக்கே வெகுதூரம் பரவியிருந்தது என்பதும் அந்த எல்லைக்குள் இருந்த புன்னாடு பகுதியும் கொங்கு நாட்டில் அடங்கியிருந்தது என்பதும் நன்கு தெரிகின்றன.

கொங்கு நாடு நெய்தல் நிலமில்லாத (கடற்கரையில்லாத) உள்நாடு என்று கூறினோம். அங்கு மலைகள் அதிகம். எனவே, அங்கே குறிஞ்சி நிலம் அதிகமாயிருந்தது. காடும் காட்டைச் சேர்ந்த முல்லை நிலங்களும் அதிகம். நெல்பயிரான மருத

நிலங்களும் இருந்தன. கொங்கு நாட்டிலிருந்த ஊர்கள், மலைகள், ஆறுகள் முதலியவற்றின் முழு விபரங்கள் சங்க நூல்களில் கிடைக்கவில்லை; சில பெயர்கள் மட்டும் தெரிகின்றன. நமக்குக் கிடைத்துள்ள வரையில், சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்ற கொங்கு நாட்டின் இடங்களைக் கீழே தருகிறோம்.

உம்பற் காடு (யானை மலைக்காடு)

இது கொங்கு நாட்டின் தென்மேற்கிலுள்ள யானை மலைப் பிரதேசம் (உம்பல்—யானை). இது கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சித் தாலுக்காவை அடுத்திருக்கின்றது. யானை மலைகள் சராசரி 7,000 அடி உயரமுள்ளவை. யானைமுடி மிக உயரமானது. அதன் உயரம் 8,837 அடி. இங்குள்ள காடுகளில் யானைகள் அதிகமாக இருந்தது பற்றி யானை மலைக்காடு (உம்பற் காடு) என்று பெயர் பெற்றது.

சேர நாட்டு அரசர் கொங்கு நாட்டைப் பிடிக்கத் தொடங்கினபோது முதல்முதலாக யானை மலைப் பிரதேசத்தைப் பிடித்தார்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னுடைய தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உம்பற் காட்டை வென்று கைப்பற்றினான். இவன், 'உம்பற் காட்டைத் தன்கோல் நிரீஇயினான்' என்று *பதிற்றுப்பத்து* மூன்றாம் பத்துப் பதிகங் கூறுகின்றது. அவனுடைய தமயனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (செங்குட்டுவனுடைய தந்தை) தன்மீது 2ஆம் பத்துப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு உம்பற் காட்டில் ஐஞ்ஞூறூர் பிரமதாயங் கொடுத்தான் (இரண்டாம் பத்துப் பதிகம் அடிக்குறிப்பு). சேரன் செங்குட்டுவன் தன்மீது ஐந்தாம் பத்துப் பாடிய பரணர்க்கு உம்பற் காட்டு வாரியைக் (வருவாயை) கொடுத்தான் (ஐந்தாம் பத்துப் பதிகம் அடிக்குறிப்பு). இதனால் யானை மலைப் பிரதேசங்களைச் சேர மன்னர் கைப்பற்றி இருந்தார்கள் என்பது தெரிகின்றது. உம்பற் காட்டில் பல ஊர்கள் அடங்கியிருந்தன.

ஒகந்தூர்

இது கொங்கு நாட்டிலிருந்த ஊர். இது இருந்த இடம் தெரியவில்லை. கொங்கு நாட்டையரசாண்ட செல்வக் கடுங்கோ வாழியாதன் இந்த ஊரைத் திருமால் கோயிலுக்குத் தானஞ் செய்தான் என்று *பதிற்றுப்பத்து* ஏழாம் பத்துப் பதிகங் கூறுகிறது.

கருவூர்

இது கொங்கு நாட்டில் மதிலரண் சூழ்ந்த ஊர். ஆன் பொருநையாற்றின் கரைமேல் அமைந்திருந்தது. இது சேரரின்

கொங்கு இராச்சியத்தின் தலைநகரமாகவும் இருந்தது. சேரர் இந்த நகரத்தைக் கைப்பற்றிய பிறகு, தங்கள் சேர நாட்டுத் தலைநகரமான கருவூரின் பெயரையே இதற்கு இட்டனர் என்று தோன்றுகிறது. இதற்கு வஞ்சி என்றும் வேறு பெயர் உண்டு. இவ்வூரில் வேண்மாடம் என்னும் பெயருள்ள அரண்மனையை யமைத்துக்கொண்டு 'இரும்பொறையரசர்' கொங்கு நாட்டை யரசாண்டனர். இப்போது இந்தக் கருவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர் தாலுகாவில் இருக்கிறது.

ஏறத்தாழக் கி.பி. 150இல் இருந்த தாலமி (Ptolemy) என்பவர் தம்முடைய நூலில் இதைக் கரொவுர(Karoura) என்று கூறுகின்றார். இவ்வூர் உள்நாட்டில் இருந்தது என்றும் கேரொபொத்ரருக்கு (கேரளபுத்திரர்க்கு) உரியது என்றும் கூறுகின்றார். இக்கருவூர் உள்நாட்டில் இருந்ததென்று கூறுகிறபடியால், கடற்கரைக்கு அருகில் இருந்த சேர நாட்டுக் கருவூர் அன்று என்பதும், கொங்கு நாட்டுக் கருவூரைக் குறிக்கின்றது என்றும் தெரிகின்றன. மேலும், இக்கருவூரில் உரோம் தேசத்துப் பழங்காசுகள் கிடைத்திருப்பது இவ்வூரில் யவன வாணிகத் தொடர்பு இருந்ததைத் தெரிவிக்கின்றது.

சங்க காலத்தின் இறுதியில் கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டு கருவூர்கள் இருந்தன. ஒன்று மேற்குக் கடற்கரையில் சேரரின் தலைநகரமாக இருந்த கருவூர். இன்னொன்று கொங்கு நாட்டில் இருந்த இந்தக் கருவூர். இவ்விரண்டு கருவூருக்கும் வஞ்சி என்று வேறு பெயரும் உண்டு. இரண்டு கருவூர்களையும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இரண்டு கருவூர்கள் இருந்ததையறியாமல், ஒரே கருவூர் இருந்ததாகக் கருதிக்கொண்டு, சேரர் தலைநகரமாகிய கருவூர் வஞ்சி, சேர நாட்டிலிருந்ததா கொங்கு நாட்டிலிருந்ததா என்று சென்ற தலைமுறையில் அறிஞர்களுக்குள் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இதுபற்றிக் கட்டுரைகளும் நூல்களும் இரு தரத்தாராலும் எழுதப்பட்டன. ஒரே காலத்தில் இரண்டு (கருவூர்) வஞ்சி மாநகர்கள் சேர நாட்டிலும் கொங்கு நாட்டிலும் இருந்தன என்பதை அறியாதபடியால் இந்த ஆராய்ச்சி நடந்தது. கொங்கு நாட்டையாண்ட சேர அரசர் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் கருவூர் கொங்கு நாட்டின் தலைநகரமாக இருந்தது. இது ஒரு பெரிய வாணிக நகரமாகவும் இருந்தது. சங்கப் புலவர்களில் சிலர் இவ்வூரினராவர்.

கண்டிரம்

இப்பெயரையுடைய ஊர் கொங்கு நாட்டிலிருந்தது. அது எந்த இடத்திலிருந்தது என்பது தெரியவில்லை. கண்டிர நாட்டில்

பெரிய மலையொன்று தோட்டிமலை என்று பெயர் பெற்றிருந்தது. அந்நாட்டை யரசாண்ட மன்னர்கள் கண்டீரக் கோ என்று பெயர் பெற்றிருந்தார்கள். அவர்களில் ஒருவன் நள்ளி என்றும் பெயருடையவன். தோட்டிமலையையும் அதன் அரசனாகிய நள்ளியையும் வன்பரணர் கூறுகின்றார்.[1]

கண்டிர நாட்டின் சோலைகளிலே காந்தள் முதலிய மலர்கள் மலர்ந்தன என்று பரணரும் கபிலரும் கூறுகின்றனர் (*அகம்* 152 : 15-17, 238 : 14-18). நள்ளியின் கண்டிர நாட்டுக் காடுகளில் இடையர் பசு மந்தைகளை வளர்த்தனர் என்றும், அவ்வூர் நெய்க்குப் பேர் போனது என்றும் காக்கைபாடினியார் கூறுகிறார்.[2] கண்டிரத்துக் காட்டில் யானைகளும் இருந்தன. கண்டிர நாட்டில் நள்ளியின் பெயரால் நள்ளியூர் என்று ஓர் ஊர் இருந்ததைக் கொங்கு நாட்டுச் சாசனம் ஒன்று கூறுகின்றது.

கட்டி நாடு

கட்டி நாடு என்பது தமிழகத்தின் வடக்கேயிருந்தது. அது கொங்கு நாட்டைச் சேர்ந்தது. கட்டி நாட்டையாண்ட அரசர் பரம்பரையார் 'கட்டியர்', 'கட்டி' என்று பெயர் பெற்றிருந்தனர். கட்டி நாட்டின் வட எல்லை வடுக (கன்னட) நாட்டின் எல்லை வரையில் இருந்தது. கட்டி நாட்டுக்கு அப்பால் மொழி பெயர் தேயம்[3] (வேறு மொழி கன்னட மொழி) பேசும் தேசம் இருந்தது. கட்டி நாடு வடகொங்கு நாட்டில் இருந்தது. கட்டியரசு பரம்பரை விசயநகர அரசர் காலத்திலும் இருந்தது.

காமூர்

இதுவும் கொங்கு நாட்டிலிருந்த ஊர். இங்கு இடையர் வாழ்ந்து வந்தனர். அவர்களின் தலைவன் கழுவுள்.[4] கழுவுளின் காமூரில் பலமான கோட்டையிருந்தது. அது ஆழமான அகழியையும் உயரமான கோட்டை மதிலையுங் கொண் டிருந்தது. கொங்கு நாட்டையரசாண்ட பெருஞ்சேரலிரும் பொறை காமூரை வென்று அதைத் தன்னுடைய இராச்சியத் துடன் சேர்த்துக்கொண்டான் (*பதிற்று*. 9ஆம் பத்து 8 : 7-9). பெருஞ்சேரலிரும்பொறை காமூரை முற்றுகையிட்டபோது பதினான்கு வேளிர்கள் (சிற்றரசர்) அவனுக்கு உதவியாக இருந்தார்கள் (*அகம்* 135 : 11-14).

குதிரைமலை

இது கொங்கு நாட்டிலிருந்த மலை. இதை 'ஊராக்குதிரை' என்று கூறுகிறார் கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார் (ஊராக்குதிரை - சவாரி செய்யமுடியாத குதிரை. அதாவது

குதிரைமலை). 'மைதவழ் உயர்சிமைக் குதிரை மலை' என்று இம்மலையை ஆலம்பேரி சாத்தனார் கூறுகிறார் (*அகம்* 143 : 13). குதிரை மலையையும் அதனைச் சார்ந்த நாட்டையும் பிட்டங்கொற்றன் அரசாண்டான். இம்மலையில் வாழ்ந்த குறவர்கள் மலைச்சாரலில் தினையரிசியைப் பயிர் செய்து அந்த அரிசியைக் காட்டுப் பசுவின் பாலில் சமைத்து உண்டார்கள் (*புறம்* 168 : 1-14). குதிரைமலை, உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் இருந்ததென்று கருதுகின்றனர்.

நன்றாமலை

இது கொங்கு நாட்டில் இருந்த மலை. இந்த மலையின் மேலிருந்து பார்ப்பவர்களுக்கு இதைச் சூழ்ந்துள்ள ஊர்கள் தெரிந்தன. ஆகையால் இது 'நாடுகாண் நெடுவரை' என்று (*பதிற்று*. 9ஆம் பத்து 5:7) கூறப்படுகின்றது. "நாடுகாண் நெடுவரை யென்றது தன்மேல் ஏறி நாட்டைக் கண்டு இன்புறுவதற்கு ஏதுவாகிய ஒக்கமுடைய" மலை என்று இதற்குப் பழைய உரையாசிரியர் விளக்கம் கூறுகின்றார்.

செல்வக்கடுங்கோ வாழியாதன் மேல் கபிலர் 7ஆம் பத்துப் பாடியபோது அவருக்கு அவ்வரசன் இந்த மலைமேலிருந்து கண்ணிற் கண்ட நாடுகளைக் காட்டி அந்நாடுகளின் வருவாயை அவருக்குப் பரிசாக அளித்தான் என்று 7ஆம் பத்து அடிக்குறிப்புக் கூறுகின்றது. "பாடிப் பெற்ற பரிசில், சிறுபுறமென நூறாயிரங் காணங்கொடுத்து நன்றா வென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாங் காட்டிக் கொடுத்தான் அக்கோ" என்று அடிக்குறிப்புக் கூறுகின்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில், திருஞானசம்பந்தர் காலத்தில் இவ்வூர் திருநணா என்று பெயர் வழங்கப்பட்டது.

விச்சி நாடு

சங்க காலத்துக் கொங்கு நாட்டிலே இருந்த ஊர்களில் விச்சி என்பதும் ஒன்று. பச்சைமலை என்று இப்போது பெயர் வழங்குகிற மலை அக்காலத்தில் விச்சி மலை என்று பெயர் பெற்றிருந்தது. சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் விச்சிமலை (பச்சைமலை) இருக்கின்றது. இந்த மலை ஏறக்குறைய 200 மைல் நீளம் உள்ளது. இதன் உயரம் கடல் மட்டத்துக்குமேல் ஏறத்தாழ 2000 அடி உயரம் உள்ளது. மலையின் மேலே வேங்கை, தேக்கு, கருங்காலி, சந்தனம், முதலிய மரங்கள் உள்ளன. விச்சி நாட்டு மலைப் பக்கங்களில் பலா மரங்கள் இருந்தன என்று கபிலர் கூறுகிறார் (*புறம்* 200 : 1-2). விச்சி மலைமேல் 'ஐந்தெயில்' என்னும் கோட்டையிருந்தது. அது காட்டரண் உடையதாக

இருந்தது. விச்சி நாட்டையரசாண்ட பரம்பரையாருக்கு விச்சிக்கோ என்று பெயர் இருந்தது. கொங்குச் சேரனாகிய இளஞ்சேரல் இரும்பொறை, ஐந்தெயில் கோட்டையை வென்று விச்சி நாட்டைக் கைப்பற்றினான் என்று 9ஆம் பத்துப் பதிகங் கூறுகின்றது.

வெள்ளலூர்

கோயம்புத்தூருக்குத் தென்கிழக்கில் ஐந்து மைல் தூரத்தில் இவ்வூர் இருக்கின்றது. இங்குப் 'பழங்காலத்துப் பாண்டு குழிகள்' உள்ளன. இந்தப் பண்டவர் குழிகளிலிருந்து முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. 1842ஆம் ஆண்டில் இவ்வூரில் பழங்காசுப் புதையல் ஒரு மண்பாண்டத்தில் கிடைத்தது. அப்புதையலில் 522 உரோம் தேசத்து நாணயங்கள் இருந்தன. அந்தக் காசுகளில் உரோமாபுரிச் சக்கரவர்த்திகளான அகஸ்தஸ், தைபீரியர், கலிகுல்லா, கிளாடியஸ் ஆகியோரின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இவை கி.பி. முதல் நூற்றாண்டில் வழங்கப்பட்ட காசுகள். இதிலிருந்து அக்காலத்தில் இந்த ஊரில் யவனருடன் வியாபாரத் தொடர்பு இருந்தது என்பது தெரிகின்றது.

வையாவி நாடு

இது கொங்கு நாட்டின் தென்கோடியில் இருந்தது. ஆவி நாடு என்றும் வையாவி நாடு என்றும் பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்தில் வைகாவூர் என்றும் வையாபுரி என்றும் பெயர் வழங்கப்பட்டது. இது இப்போது மதுரை மாவட்டத்து மதுரை தாலுகாவில் இருக்கின்றது. பழனி மலை வட்டாரம் பழைய வையாவி நாடாகும். வையாவி நாட்டின் தலைநகரம் பொதினி. ஆவி (வையாவி) நாட்டையாண்ட அரசர் 'வேள் ஆவிக்கோமான்' என்று பெயர் பெற்றனர்.[5] பொதினி என்னும் பெயர் இப்போது பழனி என்று மருவி வழங்குகிறது. வேள் ஆவி அரசர்கள் சேர அரசர் பரம்பரையில் பெண்கொடுத்து உறவு கொண்டார்கள். வையாவிக்கோப்பெரும்பேகனும் வேள்ஆவிக் கோமான் பதுமனும் இவ்வூரை ஆண்ட அரசர்கள். வையாவிக் கோப்பெரும் பேகனை அவன் மனைவி கண்ணகி காரணமாகப் பரணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார், நல்லூர் நத்தத்தனார் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர். இதனால் இவர்கள் சம காலத்தில் இருந்தவர்கள் என்பது தெரிகின்றது. வேளாவிக்கோமான் பதுமனுடைய மகள் ஒருத்தியைக் குடக்கோ நெடுஞ்சேரலன் மணஞ் செய்திருந்தான் (4ஆம் பத்துப் பதிகம், 6ஆம் பத்துப் பதிகம்). இன்னொரு மகளைச்

செல்வக் கடுங்கோ வாழியாதன் (குடக்கோ நெடுஞ்சேரலாதனின் தாயாதித்தம்பி) மணஞ் செய்திருந்தான் (8ஆம் பத்துப் பதிகம்).

கொல்லி மலையும் கொல்லிக் கூற்றமும்

கொங்கு நாட்டுப் பேர்போன கொல்லிமலையைச் சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன. கொல்லி மலையை இந்தக் காலத்தில் சதுரகிரி என்று பெயர் கூறுகிறார்கள். பார்வைக்குச் சதுர வடிவமாக அமைந்திருப்பதனால் சதுரகிரி என்று பெயர் பெற்றது. கொல்லிமலை, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுகாவிலும் நாமக்கல் தாலுகாவிலும் அடங்கியிருக்கின்றது. ஏறக்குறைய 180 சதுர மைல் பரப்புள்ளது. கொல்லிமலைகள், கடல் மட்டத்துக்கு மேலே 3500 அடி முதல் 4000 அடி வரையில் உயரம் உள்ளன. கொல்லி மலைகளில் வேட்டைக்காரன்மலை (ஆத்தூர் தாலுகா) உயரமானது; அது கடல்மட்டத்துக்கு மேலே 4663 அடி உயரமாக இருக்கிறது.

கொல்லி மலைகளில் ஊர்கள் உள்ளன. பல அருவிகளும் உள்ளன. மலையிலேயே தினை, வரகு, ஐவன நெல் முதலிய தானியங்கள் பயிரிடப்பட்டன. மலைகளில் மூங்கிற் புதர்களும், சந்தனம், கருங்காலி, தேக்கு முதலிய மரங்களும் வளர்ந்தன. அக்காலத்தில் தேக்கு மரம் இல்லை. பலா மரங்கள் இருந்தன.[6] கொல்லிமலைத் தேன் பேர் போனது.

பிற்காலத்து நூலாகிய கொங்கு மண்டல சதகமும் கொல்லிமலையைக் கூறுகிறது.

> முத்தீட்டு வாரிதி சூழுல கத்தினின் மோகமுறத்
> தொத்தீட்டு தேவர்க்கு மற்றுமுள்ளோர்க்குஞ்
> சுவைமதுரக்
> கொத்தீட் டியபுதுப் பூத்தேனும் ஊறுங்
> குறிஞ்சியின் தேன்
> வைத்தீட் டியகொல்லி மாமலை யுங்கொங்கு
> மண்டலமே

கொங்கு நாட்டிலே மற்ற இடங்களில் கிடைத்தது போலவே கொல்லி மலையிலும் விலையுயர்ந்த மணிகளும் கிடைத்தனவாம்.[7]

கொல்லி மலையின் மேற்குப் பக்கத்தில் பேர் போன 'கொல்லிப் பாவை' என்னும் உருவம் அழகாக அமைந்திருந்ததாம். பெண் வடிவமாக அமைந்திருந்த அந்தப் பாவை தெய்வத்தினால் அமைக்கப்பட்டதென்று கூறப்படுகிறது.[8] இயற்கையாக அமைந்திருந்த அழகான அந்தக் கொல்லிப் பாவை, காற்றடித்தாலும் மழை பெய்தாலும் இடியிடித்தாலும்

பூகம்பம் உண்டானாலும் எதற்கும் அழியாததாக இருந்தது என்று பரணர் கூறுகிறார்.[9]

கொல்லி மலையில் கொல்லிப் பாவை இருந்ததைப் பிற்காலத்துக் *கொங்கு மண்டல சதகமும்* கூறுகிறது.

தாணு முலகிற் கடன் முர சார்ப்பத் தரந்தரமாய்ப்
பூணு முலைமட வார்சேனை கொண்டு பொருது மலர்ப்
பாணன் முதலெவ ரானாலுங் கொல்லியம் பாவை முல்லை
வாணகை யாலுள் ளுருக்குவதுங் கொங்கு மண்டலமே

இப்படிப்பட்ட கொல்லிப் பாவை இப்போது என்ன வாயிற்று என்பது தெரியவில்லை. இப்போதுள்ள பொய்ம்மான் கரடு போன்று கொல்லிப் பாவையும் உருவெளித் தோற்றமாக இருந்திருக்கக்கூடும்.

கொல்லிமலை வட்டாரம் 'கொல்லிக்கூற்றம்' என்று பெயர் பெற்றிருந்தது. சங்க காலத்தில் கொல்லிக் கூற்றத்தையும் கொல்லி மலைகளையும் ஓரி என்னும் அரச பரம்பரையார் ஆட்சி செய்து வந்தார்கள். கடை எழுவள்ளல்களில் ஓரியும் ஒருவன். ஓரி அரசருக்கு உரியதாக இருந்த கொல்லிக் கூற்றத்தைப் பிற்காலத்தில் கொங்கு நாட்டுச் சேரர் கைப்பற்றிக் கொண்டு அரசாண்டனர். இந்த வரலாற்றை இந்நூலில் வேறு இடத்தில் காண்க.

திருச்செங்கோடு

கொங்கு நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள மலை இது. செங்கோட்டு மலையில் நெடுவேளாகிய முருகனுக்குத் தொன்று தொட்டுக் கோவில் உண்டு. அக்காலத்தில் முருகன் எழுந்தருளியிருந்த இடங்களில் செங்கோடும் ஒன்று என்று *சிலப்பதிகாரம்* கூறுகின்றது..

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் (குன்றக் குரவை)

என்று கூறுவது காண்க. பழைய அரும்பதவுரையாசிரியர், 'செங்கோடு— திருச்செங்கோடு' என்று உரை எழுதியுள்ளார். மதுரையை விட்டு வெளிப்பட்ட கண்ணகியார் பதினான்கு நாள்களாக இரவும் பகலும் நடந்து சென்று "நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப், பூத்தவேங்கைப் பொங்கர்க் கீழ்"த் தங்கியபோது அவர் உயிர் பிரிந்தது என்று *சிலப்பதிகாரம்* (கட்டுரை காதை 190-91) கூறுகிறது. அந்த நெடுவேள் குன்றம் என்பது திருச்செங்கோடுமலை என்று பழைய அரும்பத உரையாசிரியர் எழுதுகிறார். மீண்டும் வாழ்த்துக் காதையில், கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டிய செய்யுளில்,

வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடுந் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்

என்று கூறுகின்றார். இதற்கு உரை எழுதிய பழைய அரும்பத உரையாசிரியர் "வென்வேலான் குன்று—செங்கோடு. நான் குன்றில் வந்து விளையாடுவேன்; நீங்களும் அங்கே வாருங்களென்றாள்" என்று விளக்கங் கூறுகிறார்.

இதனால், அரும்பதவுரையாசிரியர் காலத்தில் கண்ணகியார் உயிர்விட்ட இடம் திருச்செங்கோடு மலை என்ற செவிவழிச் செய்தி இருந்தது என்பது தெரிகின்றது. கொங்குச் சேரரின்கீழ் இருந்த கொங்கிளங்கோசர், செங்குட்டுவன் சேர நாட்டில் பத்தினிக் கோட்டம் அமைத்து விழாச் செய்த பிறகு தாங்களும் கொங்கு நாட்டில் கண்ணகிக்கு விழாச் செய்தார்கள் என்று *சிலப்பதிகார* உரைபெறு கட்டுரை கூறுகின்றது. கொங்கிளங் கோசர் கண்ணகிக்குக் கோயில் எடுத்ததும் திருச்செங்கோட்டு மலையில் என்று தோன்றுகிறது.

பழைய அரும்பதவுரையாசிரியருக்குச் சில நூற்றாண்டுக்குப் பிறகு இருந்த அடியார்க்குநல்லார் என்னும் *சிலப்பதிகார* உரையாசிரியர், கண்ணகியார் உயிர் நீத்த இடம் திருச்செங் கோடுமலை என்று அரும்பதவுரையாசிரியர் கூறியிருப்பதை மறுக்கிறார். *சிலப்பதிகாரப்* பதிகம் மூன்றாவது அடியில் வரும் 'குன்றக்குறவர்' என்பதற்கு உரை எழுதுகிற அவர் கண்ணகியார் உயிர்விட்ட இடம் சேர நாட்டில் உள்ள செங்குன்று என்றும், கொங்கு நாட்டுத் திருச்செங்கோடு அன்று என்றுங் கூறுகிறார். அவர் எழுதுவது: "குன்றக்குறவர் ஏழனுருபுத் தொகை. குன்றம் — கொடுங்கோளூருக்கு அயலதாகிய செங்குன்றென்னு மலை. அது திருச்செங்கோடென்பவாலெனின், அவரறியார். என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சிநகர்க்கு (சேரநாட்டு வஞ்சி நகர்க்கு) வடகீழ்த்திசைக் கண்ணதாய் அறுபதின்காதவாறு உண்டாக லானும் அரசனும் (செங்குட்டுவன்) உரிமையும் மலை காண்கு வமென்று வந்து கண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அது கூடாமையினென்க."

பழைய அரும்பதவுரையாசிரியர் கூறுவதையும் அடியார்க்கு நல்லார் கூறுவதையும் ஆராய்வதற்கு இப்போது நாம் புகவில்லை. கொங்கு நாட்டுத் திருச்செங்கோடு மலையில், கண்ணகியார் உயிர் நீத்தார் என்று பழைய செவிவழிச்செய்தி அரும்பதவுரை யாசிரியர் காலத்தில் இருந்தது என்பது மட்டும் உறுதியாகத் தெரிகின்றது. அரும்பதவுரையாசிரியர், திருச்செங்கோட்டில் கண்ணகியார் உயிர் நீத்தார் என்று கூறுதற்குக் காரணம் இருக்க வேண்டும். இல்லாமல் அவர் கூறியிருக்க மாட்டார்.

நன்றா மலை

இந்த மலையின் உச்சியிலிருந்து பார்ப்பவருக்கு இதனைச் சுற்றிலுமுள்ள ஊர்கள் நன்றாகத் தெரிந்தன. ஆனது பற்றி இது 'நாடுகாண் நெடுவரை' என்று கூறப்பட்டது. "தீஞ்சுனை நிலைஇய திருமா மருங்கில், கோடுபல விரிந்த நாடுகாண் நெடுவரை" (9ஆம் பத்து 5 : 6-7). "நாடுகாண் நெடுவரை என்றது தன்மேல் ஏறி நாட்டைக் க்ண்டு இன்புறுவதற்கு ஏதுவாகிய ஒக்கமுடைய மலை என்றவாறு, இச்சிறப்பானே இதற்கு, நாடுகண் நெடுவரை என்று பெயராயிற்று" என்று இதன் பழைய உரை கூறுகிறது.

செல்வக் கடுங்கோ வாழியாதன் மேல் 7ஆம் பத்தைப் பாடிய கபிலருக்கு அவ்வரசன் இந்த நன்றாமலை மேலிருந்து பரிசில் வழங்கினான் என்று ஏழாம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகின்றது. "பாடிப்பெற்ற பரிசில்: சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து நன்றா வென்னுங் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ" என்பது அந்த வாசகம்.

நன்றா என்னும் பெயர் பிற்காலத்தில் நணா என்று மாறி வழங்கிற்று. திருஞான சம்பந்தர் கொங்கு நாட்டுத் திருநணா என்னும் திருப்பதியைப் பாடியுள்ளார். சுவாமி பெயர் சங்கமுக நாதேசுவரர், தேவியார் வேதமங்கையம்மை. பவானி ஆறு காவிரியாற்றுடன் சேருமிடமாகையால் இந்த இடம் பவானி கூடல் என்று பெயர் வழங்கப்படுகிறது. இப்போது ஊராட்சிமலை என்று பெயர் கூறப்படுவது நன்றாமலையாக இருக்குமோ? இது ஆராய்ச்சிக்குரியது.

படியூர்

கொங்கு நாட்டிலிருந்த படியூர் விலையுயர்ந்த மணிகளுக்குப் பேர் போனது. இப்போதைய கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாராபுரம் தாலுகாவில் படியூர் இருக்கிறது. வடகொங்கு நாட்டிலிருந்த புன்னாட்டில் விலையுயர்ந்த நீலக்கற்கள் கிடைத்தது போலவே படியூரிலும் நீலக் கற்கள் (Beryl) கிடைத்தன. சங்கச் செய்யுள்களில் படியூரைப் பற்றிக் காணப்படவில்லை. ஆனால், கொங்கு நாட்டில் விலையுயர்ந்த திருமணிகள் கிடைத்ததை அக்காலத்துப் புலவர்கள் கூறுகின்றனர். கொங்கு நாட்டில் உழவர் நிலத்தை உழுகிறபோது சில சமயங்களில் திருமணிகள் கிடைத்தன என்று அரிசில் கிழார் கூறுகிறார். "கருவி வானம் தண்தளி சொரிந்தெனப் பல்விதை உழவில் சில்லேராளர்... இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்,

அகன்கண் வைப்பின் நாடுகிழவோயே" (*பதிற்று*. 8ஆம் பத்து 6 : 10-15). இதற்குப் பழைய உரைகாரர் இவ்வாறு விளக்கங் கூறுகிறார்: "தண்டளி' (மழை) சொரிந்தென ஏராளர் கதிர்த் திருமணி பெறூம் நாடெனக் கூட்டி, மழை பெய்தலானே ஏராளர் உழுது விளைத்துக் கோடலேயன்றி உழுத இடங்கள் தோறும் ஒளியையுடைய திருமணிகளை எடுத்துக் கொள்ளு நாடென வுரைக்க." கபிலரும் கொங்கு நாட்டில் மணிக்கல் கிடைத்ததைக் கூறுகிறார். "வான் பளிங்கு விரைஇய செம்பரன் முரம்பின், இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம், அகன்கண் வைப்பின் நாடுகிழ வோனே"(7ஆம் பத்து 6 : 18-20). "திருமணி பெறுவார் அந்நாட்டாராகக் கொள்க" என்பது பழைய உரை.

பொதுவாகக் கொங்கு நாட்டில் திருமணிகள் கிடைத்ததைப் புலவர் கூறினாலும் சிறப்பாகப் படியூரில் கிடைத்ததை அவர்கள் கூறவில்லை. ஆனால் அக்காலத்து யவனர்கள் எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து படியூரில் திருமணிகள் கிடைத்ததையும் அதை யவன வாணிகர் கப்பல்களில் வந்து வாங்கிக்கொண்டு போனதையும் அறிகிறோம். பிளைனி (Pliny) என்னும் யவனர் இச்செய்தியை எழுதியுள்ளார். இவர் படியூரை படொரஸ் (Paedoros) என்று கூறுகின்றார். படொரஸ் என்பது படியூரென்பதன் திரிபு. இச்சொல்லின் இறுதியில் அஸ் என்னும் விகுதியைச் சேர்த்திருக்கிறார். (படியூரைப்பற்றி *Indian Antiquary* Vol. V, p.237இல் காண்க.) இந்தப் படியூர் மணிச் சுரங்கத்தைப் பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை. மிகப் பிற்காலத்தில் கி.பி. 1798இல் இவ்வூர்வாசிகள் மறைவாக மணிக் கற்களை எடுத்தனர் என்று கூறப்படுகின்றது. இதை எப்படியோ அறிந்த ஒரு ஐரோப்பியன் கி.பி. 1819-20இல் இந்தச் சுரங்கத்தை வாடகைக்கு எடுத்துத் தோண்டியதில் அந்த ஒரே ஆண்டில் 2196 மணிகள் (Beryls) கிடைத்தனவாம். அவை, 1201 பவுன் மதிப்புள்ளவையாம். பிறகு இந்தச் சுரங்கத்தில் நீர் சுரந்து அகழ முடியாமற் போய்விட்டது (Rice, *Ep. Car.*, IV, p.4).

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வாணியம்பாடியிலும் நீலக்கற்கள் கிடைத்தன.

புகழியூர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் தாலுகாவில் புகளூர் என்னும் புகழியூர் இருக்கிறது. இவ்வூருக்கு இரண்டு கல் தொலைவிலுள்ள ஆறுநாட்டார் மலை என்னும் குன்றில் இயற்கையாயுள்ள குகையிலே கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளும் இருக்கின்றன. பிராமி எழுத்து கி.பி. முதல் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டவை. பிராமி எழுத்துச்

சாசனங்களில் ஒன்று கடுங்கோ என்னும் இரும்பொறையரசன் இளங்கோவாக இருந்த காலத்தில் செங்காயபன் என்னும் முனிவர் இந்தக் குகையில் வசிப்பதற்காகக் கற்படுக்கையை அமைத்துக் கொடுத்த செய்தியைக் கூறுகிறது. கோ ஆதன் சேரலிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் என்றும் அவனுடைய மகன் இளங் கடுங்கோ என்றும் இந்தக் கல்வெட்டெழுத்துக் கூறுகிறது. இங்கு வேறு சில பிராமிக் கல்வெட்டெழுத்துகளும் உள்ளன.

ஆறுநாட்டார் மலைக்கு ஏழு கல் தூரத்தில் அர்த்தநாரிபாளையம் என்னும் ஊர் இருக்கிறது. இவ்வூர் வயல்களுக்கு இடையில் பெரிய கற்பாறை ஐவர் சுனை என்று பெயர் பெற்றிருக்கிறது. இங்கு ஒரு நீர் ஊற்றுச் சுனையும் ஐந்து கற்படுக்கைகளும் காணப்படுகின்றன. இந்தக் கற்படுக்கைகள் கி.பி. முதல் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை. இங்கு அக்காலத்தில் முனிவர்கள் தங்கித் தவம் செய்தனர் என்பது தெரிகிறது.

புன்னாடு

புன்னாடு, சங்க காலத்தில் வடகொங்கு நாட்டில் இருந்தது. இக்காலத்தில் இது மைசூர் இராச்சியத்தின் தெற்கில் ஹெக்கட தேவன தாலுகாவில் சேர்ந்திருக்கிறது. சங்க இலக்கியங்களிலே புன்னாடும் அதன் தலைநகரமான கட்டூரும் கூறப்படுகின்றன. காவிரி ஆற்றின் உபநதியாகிய கபினி ஆற்றைச் சூழ்ந்து புன்னாடு இருந்தது. கபினி ஆறு கப்பினி என்றும் கூறப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உண்டாகிக் கிழக்குப் பக்கமாகப் பாய்ந்து (மைசூரில் நரசபூருக்கு அருகில்) காவிரியுடன் சேர்கிறது. பிற்காலத்தில் இது புன்னாடு ஆறாயிரம் என்று பெயர் பெற்றிருந்தது. சங்க காலத்தில் புன்னாட்டைச் சிற்றரசர் ஆண்டு வந்தனர். புன்னாட்டின் தலைநகரமான கட்டூர், கபினி ஆற்றங்கரைமேல் அமைந்திருந்தது. பிற்காலத்தில் கட்டூர், கிட்டூர் என்று வழங்கப்பட்டது. அது, இன்னும் பிற்காலத்தில் கித்திபுரம் என்றும் பிறகு கீர்த்திபுரம் என்றும் வழங்கப்பட்டது.

புன்னாட்டில் அந்தக் காலத்திலேயே ஒருவகையான நீலக்கல் கிடைத்தது. அந்தக் கற்கள் புன்னாட்டுச் சுரங்கத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன. நவரத்தினங்களில் ஒன்றான இந்தக் கல் அந்தக் காலத்தில் உலகத்திலேயே புன்னாட்டில் மட்டுந்தான் கிடைத்தது. அக்காலத்தில் பேர் பெற்றிருந்த உரோமாபுரி சாம்ராச்சியத்து மக்கள் இந்தக் கற்களை அதிகமாக விரும்பினார்கள். ஆகவே, தமிழ்நாட்டுக்கு வந்த யவன வாணிகர் இந்த நீலக் கற்களையும் பாண்டி நாட்டு முத்துக்களையும் சேர

நாட்டு மிளகையும் வாங்கிக்கொண்டு போனார்கள். புன்னாட்டு நீலக்கற்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் ஒரு குறிப்பும் காணப்படவில்லை. ஆனால், மேல்நாட்டவரான தாலமி (Ptolemy) என்னும் யவனர் எழுதியுள்ள பூகோள நூலில் இதைப் பற்றிக் கூறியுள்ளார். ஸிடொஸ்தொமஸ் (Psedostomse) என்னும் இடத்துக்கும் பரிஸ் (Beris) என்னும் இடத்துக்கும் இடையே நீலக்கல் (Beryl) கிடைக்கிற பொவுன்னட (Pounnata) என்னும் ஊர் இருக்கிறது என்று அவர் எழுதியுள்ளார். பொவுன்னட என்பது புன்னாடு என்பதன் கிரேக்க மொழித் திரிபு என்று அறிஞர்கள் கண்டுள்ளனர். ('Mysore and Coorg from Inscriptions', Z. Rice, *Indian Culture*, III., pp. 10, 146; 'Roman Trade with Deccan', Dr. B.A. Saletore in *Proceedings of the Deccan History Conference* First Hyderabad Session, 1945 pp. 303-317). நீலக்கல் வாணிகத்தினால் புன்னாட்டாருக்குப் பெரும் வருவாய் கிடைத்தது.

புன்னாட்டையடுத்து அதற்கு மேற்கில் இருந்தது துளு நாடு. அக்காலத்தில் துளு நாட்டை யரசாண்ட நன்னன் என்னும் அரசன் புன்னாட்டைக் கைப்பற்றிக்கொள்ள எண்ணி அதன் மேல் போர் செய்ய எண்ணினான். புன்னாட்டின் நீலக்கல் வாணிகம் நன்னனைக் கவர்ந்த காரணத்தால் அந்த வாணிகத்தின் ஊதியத்தைத் தான் பெறுவதற்கு அவன் எண்ணினான் என்று தெரிகிறது. இச்செய்தி தெரிந்தவுடன், நன்னனுடைய பகையரசனான சேர நாட்டுக் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்பவன் தன்னுடைய சேனைத் தலைவனாகிய வெளியன் வேண்மான் ஆய்எயினன் என்பவனைத் துளு நாட்டு நன்னனுக்கு எதிராகப் புன்னாட்டு அரசனுக்கு உதவிசெய்ய அனுப்பினான். ஆய்எயினன் புன்னாட்டு அரசனுக்கு உதவியாகச் சென்று, அவனை அஞ்ச வேண்டாம் என்று உறுதிமொழி கொடுத்ததோடு நன்னனுடைய துளு நாட்டின் மேல் படை எடுத்துச் சென்றான். நன்னனுடைய சேனாதிபதியான மிஞிலி என்பவன் பாழிப்பறந்தலை என்னும் இடத்தில் ஆய்எயின னுடன் போர் செய்தான். அந்தப் போரில் ஆய்எயினன் இறந்துபோனான். "பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென, யாழிசை மறுகிற் பாழியாங்கண், அஞ்சலென்ற ஆஅ யெயினன், இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித் தன்னுயிர் கொடுத்தனன் சொல்லிய தமையாது" (அகம் 396 : 2-6). "வெளியன் வேண்மான் ஆஅயெயினன், அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை, இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு, நண்பகல் உற்ற செருவிற் புண்கூர்ந்து ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தென" (அகம் 208 : 5-9). பிறகு, சேர அரசனான களங்காய்க்கண்ணி நார்முடிச்

சேரலுக்கும் நன்னனுக்கும் நடந்த போரில் நன்னன் தோற்றான். துளு நாடு, சேரன் ஆட்சிக்குக் கீழடங்கிற்று. புன்னாட்டு அரசனும் கொங்கு நாட்டுச் சேரருக்குக் கீழடங்கினான். புன்னாட்டின் தலைநகரமான கட்டூரின் மேல், பெரும்பூண் சென்னி என்னும் சோழ அரசனுடைய சேனாபதி படை யெடுத்துச் சென்றான். அந்தச் சேனாபதியின் பெயர் பழையன் என்பது. சோழ நாட்டுக் காவிரிக்கரையில் இருந்த போர் என்னும் ஊரில் பழையன் பரம்பரையார் சோழரின் படைத் தலைவராகப் பரம்பரை பரம்பரையாக இருந்தனர். (*அகம்* 326 : 9-12). பழையன் கட்டூரின்மேல் படையெடுத்து வந்தபோது, கொங்குச் சேரனுக்குக் கீழடங்கியிருந்த நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்னும் சிற்றரசர்கள் பழையனுடன் போர் செய்து அவனைப் போர்க்களத்தில் கொன்றுவிட்டனர். இவ்வாறு சோழனுடைய கட்டூர்ப் படையெடுப்பு தோல்வியாக முடிந்தது. "நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி, பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு, அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப், பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டென" (*அகம்* 44 : 7-11). இதற்குப் பிறகு புன்னாட்டின் வரலாறு தெரியவில்லை.

கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரையில் புன்னாட்டு அரசர் பரம்பரை புன்னாட்டை யரசாண்டு வந்தனர். ஸ்கந்தவர்மன் என்னும் புன்னாட்டு அரசனுக்கு ஆண்மகன் இல்லாதபடியால் அவனுடைய ஒரே மகளைக் கங்க அரசனான அவனிதனுடைய மகனான துர்விதனிதன் மணம் செய்து கொண்டான். துர் வினிதன் கி.பி. 482 முதல் 517 வரையில் கங்க நாட்டை யரசாண்டான். புன்னாட்டு அரசனுடைய மகளை மணஞ் செய்துகொண்ட இவன் புன்னாட்டைத் தன்னுடைய கங்க இராச்சியத்தோடு இணைத்துச் சேர்த்துக்கொண்டான் (Mysore and Coorg from Inscriptions by B.Leuies Rice, 1909). புன்னாட்டின் வரலாறு இவ்வாறு முடிவடைகிறது.

எருமையூர் (எருமை நாடு)

எருமையூரையும் அதனை யரசாண்ட எருமையூரனையும் சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன. இது வடகொங்கு நாட்டின் வட எல்லையில் இருந்தது. "நாரரி நறவின் எருமையூரன்" என்றும் (*அகம்* 36 : 17) "நேராவன்றோள் வடுகர் பெருமகன், பேரிசை எருமை நன்னாடு" என்றும் (*அகம்* 253 : 18-19) கூறுவது காண்க. எருமையூரன் குடநாட்டையும் (குடகு நாட்டை) அரசாண்டான் என்பது "நுண்பூண் எருமை குடநாடு" (*அகம்* 115 : 5) என்பதனால் தெரிகின்றது (எருமை—எருமையூரன்).

எருமை நாட்டில் அயிரி ஆறு பாய்ந்தது. "நேரா வன்றோள் வடுகர் பெருமகன், பேரிசை எருமை நன்னாட்டுள்ளதை, அயிரி ஆறு" (அகம் 253 : 18-20), "கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை, அயிரை யாற்றடைகரை வயிரின் நரலும் காடு" (அகம் 177 : 10 - 11). இந்த அயிரி ஆறு, சேர நாட்டில் அயிரி மலையில் தோன்றுகிற அயிரி ஆறு (பெரியாறு) அன்று.

தலையாலங்கானம் என்னும் ஊரில் பாண்டியன் நெடுஞ்செழியனுடன் சோழனும் சேரனும் போர் செய்தபோது சோழ, சேரர்களுக்குத் துணையாக இருந்த ஐந்து வேள் அரசர்களில் எருமையூரனும் ஒருவன் (அகம் 36 : 13-20). எருமையூரன் வடுகர் பெருமகன் என்று கூறப்படுகின்றான்.

ஹொய்சள அரசர் காலத்திலும் எருமை என்னும் பெயர் இவ்வூருக்கு வழங்கப்பட்டிருந்ததென்பதை அவ்வரசர்களுடைய சாசன எழுத்திலும் காண்கிறோம் (Erumai = Erumainadu of Tamil Literature and Erumainadu of the Hoysala Records, *Epi. Car.*, X c. w. 20).

எருமையூர் என்னும் பெயர் பிற்காலத்தில் மைசூர் என்று வழங்கப்பட்டது. எருமை என்பதற்குச் சமஸ்கிருதச் சொல் மகிஷம் என்பது. எருமை ஊர் மகிஷஊர் என்றாகிப் பிறகு மைசூர் என்றாயிற்று. மைசூர் (எருமையூர்) என்னும் இவ்வூரின் பெயர் மிகமிகப் பிற்காலத்தில் கன்னட தேசம் முழுவதுக்கும் பெயராக மைசூர் என்று அமைந்துவிட்டது.

துவரை (துவார சமுத்திரம்)

இதுவும் இப்போதைய தெற்கு மைசூரில் இருக்கும் ஊர். இப்போது ஹளெபீடு என்று பெயர் பெற்று இருக்கிறது. (ஹளெ—பழைய, பீடு—வீடு. அதாவது, பழைய படைவீடு என்பது பொருள். படைவீடு- பாடிவீடு, பாசறை). இப்பொழுதும் துவரையில் துவார சமுத்திரம் என்னும் பெரிய ஏரி இருக்கின்றது. இங்கு அரையம் என்னும் ஊரில் இருங்கோவேள் அரச பரம்பரையார் இருந்து அரசாண்டார்கள். அந்த அரையம் என்னும் நகரம் சிற்றரையம், பேரரையம் என்று இரண்டு பிரிவாக இருந்தது. இருங்கோவேள் அரசர் புலிகடிமால் என்று பெயர் பெற்றிருந்தார். (இந்தப் புலிகடிமால் அரசராகிய இருங்கோவேள் அரசரின் சந்ததியார் பிற்காலத்தில் ஹொய்சளர் என்று புதுப்பெயர் பெற்றுச் சிறப்பாக அரசாண்டார்கள் என்று தோன்றுகின்றது.) பாரி வள்ளல் என்னும் அரசனுடைய பரம்பு நாட்டை மூவேந்தர் வென்றுகொண்ட பிறகு, பாரியின் மகளிராகிய அங்கவை, சங்கவை என்பவரைக் கபிலர் இருங்கோவேள் அரசனிடம் அழைத்து வந்து மணஞ் செய்து கொள்ளும்படி கேட்டார். இருங்கோவேள் மறுத்துவிட்டான்.

(இச்செய்திகளையெல்லாம் *புறம்* 201, 202இல் காண்க.) தலையாலங்கானத்தில் சேரனும் சோழனும் பாண்டியன் நெடுஞ்செழியனுடன் போர் செய்தபோது சேர, சோழர்களுக்கு உதவியாக இருந்த ஐந்துவேள் அரசர்களில் இருங்கோவேளும் ஒருவன். "தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின், இருங்கோ வேண்மான்" (*அகம்* 36 : 18-19). இருங்கோவேளுடன் எருமையூர னும் அப்போரில் கலந்துகொண்டான்.

குறிப்பு: சங்கச் செய்யுள்களில் இவ்வளவு தெளிவான நல்ல சான்று இருந்துங்கூட, அதனைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், கிருஸ்து சகாப்தத்தின் தொடக்கக் காலத்தில் மைசூருக்கு எருமை நாடு என்று பெயர் இருந்ததில்லை என்று ஒரு சரித்திரக்காரர் எழுதுகிறார். *பழைய கர்நாடகம்: துளுவ நாட்டு வரலாறு* என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய பாஸ்கர் ஆனந்த சாலிதொரெ என்பவர் இதுபற்றி இவ்வாறு எழுதுகிறார்: "எருமை நாட்டுக்கு மேற்கில் துளு நாடு இருந்தது என்று *அகம்* 294ஆம் செய்யுள் கூறுகிறது. கிருஸ்து சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் மைசூருக்கு அந்தப் பெயர் (எருமை நாடு என்னும் பெயர்) இருந்தது என்பதற்குச் சான்று இல்லை என்று கூறலாம். சங்க காலத்துப் புலவர்கள் கர்நாடக தேசத்தின் பழைய பெயர்களைக் கூறாதபடியினாலே—உதாரணமாகக் கழபப்பு (இப்போதைய சந்திரகிரிமலை), புன்னாடு, குந்தளநாடு முதலியன — கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டுகளில் மைசூர் (எருமை நாடு) மகிஷ மண்டலத்தைக் குறிக்கிறது என்னும் கருத்தை ஒதுக்கிவிடலாம். ஆகவே, *அகம்* 294ஆம் செய்யுள் பழைய துளு நாட்டின் பழமையைத் தீர்மானிப்பதற்கு உதவவில்லை"[10]

இவ்வாறு இவர் நன்றாக ஆராயாமலும் விஷயத்தைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமலும் எழுதுகின்றார். முதலில் இவர் மேற்கோள் காட்டுகிற *அகம்* 294ஆம் செய்யுளில் துளு நாட்டைப் பற்றியோ எருமை நாட்டைப் பற்றியோ ஒன்றும் இல்லை. இவர் குறிப்பிட விரும்புவது *அகம்* 15ஆம் செய்யுள் என்று தோன்றுகிறது. இந்தச் செய்யுளில் துளு நாடு குறிப்பிடப்படுகிறது. கர்நாடக தேசத்தின் (கன்னட தேசத்தின்) பழைய ஊர்ப்பெயர்களைச் சங்க நூல்கள் கூறவில்லை என்று இவர் சுட்டிக்காட்டுகிறார். சங்கப் புலவர்கள் சந்தர்ப்பம் நேர்ந்தபோது சில ஊர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லா ஊர்ப்பெயர்களையும் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை. சாலித்தொரே அவர்கள் கூறுவதுபோல, புன்னாட்டின் பெயரைச் சங்கப் புலவர் கூறாமல் விடவில்லை. அந்தப் பெயரைக் கூறவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தபோது

புன்னாட்டின் பெயரைக் கூறியிருக்கிறார்கள். சேரன் செங்குட்டுவனைப் பாடிய பரணர் என்னும் சங்க காலப் புலவர், துளு நாட்டு அரசன் நன்னன் என்பவன் புன்னாட்டின் மேல் போர் செய்ததைக் கூறுகிறார் (அகம் 266:2). "பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென." சாலிதொரே அவர்கள் இதையறியாமல், சங்கச் செய்யுளில் புன்னாட்டின் பெயர் சொல்லப்படவில்லை என்று கூறுவது பொய்யாகிறது. புன்னாடு, எருமை நாடு (மைசூர்), துளு நாடு முதலிய பெயர்கள் சங்கச் செய்யுள்களில் கூறப்படுவதைச் சாலித்தொரெ அவர்கள் அறியாமல் தவறாக எழுதியுள்ளதைப் பிழையெனத் தள்ளுக.

பூழி நாடு

இது கொங்கு நாட்டைச் சேர்ந்தது அன்று. சேர நாட்டைச் சேர்ந்தது. இங்குத் தோண்டி, மாந்தை என்னும் துறைமுகப்பட்டினங்கள் இருந்தன. இத்துறைமுகங்கள் கொங்குச் சேரருக்கு உரியதாக இருந்தபடியால் இதுபற்றி இங்குக் கூறுகிறோம். பூழி நாடு, சேர நாட்டுக்கும் துளு (கொங்காணம்) நாட்டுக்கும் இடையில் கடற்கரையோரமாக இருந்தது. பூழி என்றால் புழுதிமண் என்பது பொருள். பெரும்பாலும் புழுதி மண்ணாக இருந்தபடியால் இந்த நாட்டுக்குப் பூழி நாடு என்று பெயர் கூறப்பட்டது. பூழி நாடு கடற்கரையோரமாக அமைந்திருந்ததை அம்மூவனாரின் குறுந்தொகைச் செய்யுளினால் அறிகின்றோம்.

யாரணங் குற்றனை கடலே; பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழைத் திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்டும்நின் குரலே (*குறுந்.* 163)

பூழி நாட்டின் கிழக்குப் பக்கத்தில் இருந்த மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிக்குச் செருப்பு என்பது பெயர். அந்த மலையைச் சார்ந்து காடுகளும் முல்லை நிலங்களும் புல்வயல்களும் இருந்தன. அங்கு ஆடுமாடுகளை வளர்த்துக் கொண்டு ஆயர்கள் வாழ்ந்து வந்தனர். மலைக்காடுகளில் விலையுயர்ந்த கதிர்மணிகளும் கிடைத்தன.

முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியல் செருப்பில் பூழியர் கோவே!

(3ஆம் பத்து 1 : 20-23)

(கோவலர்—ஆயர், இடையர். ஆபரப்பி — பசுக்களை மேயவிட்டு. கல்—மலை. மிதியல் செருப்பு—காலுக்கு அணியாத செருப்பு, அதாவது செருப்பு என்னும் மலை.)

மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவின் நாள்மேய லாரும்
மாரி எண்கின் மலைச் சுரம் (*நற்.* 192 : 3.5)

(துரு—ஆடு மாடுகள். எண்கு—கரடி. சுரம்—காட்டுவழி)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய தம்பியாகிய பல்யானைச் செல்கழு குட்டுவன் (நார்முடிச் சேரலுக்கும் சேரன் செங்குட்டுவனுக்கும் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனுக்கும் சிற்றப்பன்), பூழியர்கோ (பூழி நாட்டின் அரசன்) என்று கூறப்படுகிறான் (3ஆம் பத்து 1 : 20-23). இவன் பூழி நாட்டையாண்டதோடு கொங்கு நாட்டின் சில ஊர்களை வென்றான். பூழி நாட்டை 25 ஆண்டு அரசாண்ட பிறகு இவன் அரசைத் துறந்து காட்டுக்குத் தவஞ் செய்யப் போய்விட்டான் (3ஆம் பத்துப் பதிகம்).

ஆதிகாலம் முதல் சேரருக்கு உரியதாக இருந்த பூழி நாட்டை அதன் வடக்கிலிருந்த துளு நாட்டு நன்னன் கைப்பற்றிக் கொண்டான். அதனால், சேரர் தாங்கள் இழந்த பூழி நாட்டை மீட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. சேர நாட்டை யரசாண்ட களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் (சேரன் செங்குட்டுவ னுடைய தமயன்) நன்னனோடு போர் செய்து அவனை வென்று தனக்குக் கீழடக்கிக்கொண்டதோடு அவன் கைப்பற்றியிருந்த பூழி நாட்டையும் மீட்டுக்கொண்டான்.

ஊழின் ஆகிய உயர்பெருஞ் சிறப்பில்
பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்து
(4ஆம் பத்து, பதிகம்)

குடாஅது
இரும்பொன் வாகை பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன வளம் (*அகம்* 199:18-23)

பூழி நாட்டுக்குக் கொங்கானம் என்று பெயர் இருந்ததென்று சிலர் கூறுகின்றனர். இவ்வாறு கே.ஜி. சேஷ ஐயர் முதலியோர் கூறுவது தவறு.[11] கொங்கான நாட்டரசனாகிய நன்னன் பூழி

நாட்டை வென்று சில காலம் தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்தான். ஆனால், பூழி நாட்டுக்குக் கொண்கானம் என்று பெயர் இருந்ததில்லை.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் பூழி நாட்டை மீட்டுக் கொண்டதையறிந்தோம். ஆனாலும், பூழி நாடு சேர அரசர்களுக்கு இல்லாமல் கொங்குச் சேரருக்கு உரியதாக இருந்து வந்தது. ஏனென்றால், உள்நாடாகிய கொங்கு நாட்டுக்குக் கடற்கரையும் துறைமுகமும் இல்லாதபடியால், கொங்கு நாட்டையரசாண்ட கொங்குச் சேரர்களுக்குத் துறைமுகப் பட்டினம் வேண்டியதாக இருந்தது. கொங்கு நாட்டையடுத்து மேற்கிலிருந்த பூழி நாட்டிலே தொண்டி, மாந்தை என்று இரண்டு துறைமுகப்பட்டினங்கள் இருந்தபடியால் இத்துறைமுகங் களையுடைய பூழி நாட்டைச் சேர அரசர், கொங்கு நாட்டுச் சேரர்களுக்குக் கொடுத்தனர். சேரர்களின் சேர நாட்டில் பேர்போன முசிறித் துறைமுகம் இருந்தபடியால் அவர்கள் இந்தத் துறைமுகங்களையும் பூழி நாட்டையும் கொங்குச் சேரர்களுக்குக் கொடுத்தார்கள் என்று தெரிகின்றது. பிறகு, பூழி நாடும் அதன் துறைமுகப் பட்டினங்களும் கொங்குச் சேரர்களிடம் இருந்தன.

கொங்கு நாட்டரசர்கள் பூழியர்கோ என்றும் பூழியர் மெய்ம்மறை என்றும் கூறப்பட்டனர். செல்வக்கடுங்கோ வாழியாதன்,

> ஊழி வாழி பூழியர் பெருமகன்
> பிணர்மருப் பியானைச் செருமிகு நோன்றாள்
> செல்வக் கடுங்கோ வாழியாதன் (*புறம்* 387-28-30)

என்று கூறப்படுகின்றான். அவனுடைய மகனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை 'பூழியர் மெய்ம்மறை' (8ஆம் பத்து 3 : 13) என்று கூறப்படுகிறான். அவனுக்குப் பிறகு கொங்கு நாட்டையரசாண்ட இளஞ்சேரல் இரும்பொறை 'பூழியர் கோவே' என்றும் (9ஆம் பத்து 4 : 6) 'பூழியர் மெய்ம்மறை' என்றும் (9ஆம் பத்து 10 : 27) கூறப்படுகின்றான். இதனால், கொங்குச் சேரர் பூழி நாட்டையும் அதனைச் சேர்ந்த மாந்தை, தொண்டி என்னுந் துறைமுகப்பட்டினங்களையும் வைத்திருந்தனர் என்பது தெரிகின்றது.

பூழி நாடு மேற்குக் கடற்கரையோரத்தில் துளு நாட்டுக்குத் தெற்கிலும் சேர நாட்டுக்கு வடக்கிலும் அமைந்திருந்ததை யறிந்தோம். இந்த நாட்டின் இயற்கை வளத்தையும் இங்கிருந்த தொண்டித் துறைமுகத்தையும் குறுங்கோழியூர்கிழார் கூறுகின்றார்.

குலையிறைஞ்சிய கோள்தாழை,
அகல்வயல் மலைவேலி
நிவந்த மணல் வியன்கானல்
தெண்கழிமிசைத் தீப்பூவின்
தண்தொண்டியோர் அடுபொருந (*புறம்* 17 : 9-13)

கடலை மேற்கு எல்லையாகவும், மேற்குத் தொடர்ச்சி மலையைக் கிழக்கு எல்லையாகவும் கொண்ட இந்த நாடு, தாழை (தென்னை) மரச் சோலைகளும் அகன்ற நெல் வயல்களும் கடற்கரை உப்புக்கழிகளும் உடையதாய், தொண்டித் துறைமுகத்தையும் உடையதாய் இருந்தது என்று இதனால் தெரிகின்றது.

மாந்தை

பூழி நாட்டில் மாந்தை என்னுந் துறைமுகப்பட்டிணம் இருந்ததும், அது தொன்றுதொட்டுச் சேரருக்குரியதாக இருந்ததும் அறிந்தோம். துறைமுகப்பட்டினமாக இருந்த படியால் அங்கு அயல்நாட்டுக் கப்பல் வாணிகர் வந்து வாணிகம் செய்தார்கள். அதனால், சேரர்களுக்குச் சுங்க வருவாய் கிடைத்தது. இமயவர்மன் நெடுஞ்சேரலாதன் மாந்தைப் பட்டினத்தில் பொன் முதலான பெருஞ் செல்வத்தைப் புதைத்து வைத்திருந்தான் என்று மாமூலனார் கூறுகிறார்.

வலம்படு முரசிற் சேரல் ஆதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவன்
நிலந் தினத் துறந்த நிதியம் (*அகம்* 127 : 3-10)

மாந்தைப் பட்டினம் மரந்தை என்றுங்கூறப்பட்டது.

குரங்குளைப் புரவிக் குட்டுவன்
மரந்தை யன்ன என்நலம் (*அகம்* 376 : 17-18)

எதுகை நோக்கி இவ்வாறு சில பதிப்புகளில் மரந்தை என்று கூறப்பட்டது. சில பதிப்புகளில் இது 'மாந்தை' என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

குட்டுவன்........ கடல்கெழு மாந்தை (*நற்*. 395 : 4-9)

என்றும் 'குட்டுவன் மாந்தை' (*குறுந்*. 34:6) என்றும், 'துறைகெழு மாந்தை' (*நற்*. 35:7) என்றும் இது கூறப்படுகிறது. செல்வக் கடுங்கோ வாழியாதன், மாந்தரன் என்று கூறப்படுகின்றான்.

"பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல், நிறையருந் தானை வெல்போர் மாந்தரம், பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற, குறையோர் கொள்கலம்போல" (*அகம்* 142 : 3-6.) அவனுடைய பேரனான இளஞ்சேரல் இரும்பொறை 'விறல்மாந்தரன் விறல் மருக' என்று (9ஆம் பத்து 10 : 13) கூறப்படுகின்றான். இதனால், மாந்தைத் துறைமுகப்பட்டினம் செல்வக் கடுங்கோ வாழியாதன் காலத்திலிருந்து கொங்கு நாட்டுத் துறைமுகமாக இருந்தது என்று தெரிகின்றது.

தொண்டி

சங்க காலத்தில் தமிழகத்தில் இரண்டு தொண்டித் துறைமுகப்பட்டினங்கள் இருந்தன. ஒன்று, கிழக்குக் கடற்கரையில் பாண்டியருக்கு உரியதாக இருந்தது. மற்றொன்று, மேற்குக் கடற்கரையில் பூழி நாட்டில் சேரருக்கும் பொறைய ருக்கும் உரியதாக இருந்தது. கொங்கு நாட்டையரசாண்ட பொறையர்களுக்குத் துறைமுகப்பட்டினம் இல்லாதபடியால், அவர்கள் தொண்டியைத் தங்களுடைய துறைமுகப்பட் டினமாகக் கொண்டிருந்தார்கள். சங்கச் செய்யுள்கள் தொண்டிப் பட்டினத்தைக் கூறுகின்றன. "வெண்கோட்டியானை விறல் போர்க் குட்டுவன், தெண்திரைப் பரப்பில் தொண்டி முன்துறை" (*அகம்* 290, 12 : 18) என்றும், "திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை" என்றும் (*குறுந்.* 128 : 2). "வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந" என்றும் (9ஆம் பத்து 4:21), "திண் தேர்ப் பொறையன் தொண்டி" என்றும் (*அகம்* 60 : 7), "கல்லென் புள்ளியன் கானலந் தொண்டி" என்றும் (*நற்.* 195 : 5), "அகல்வயல், அரிநர் அரிந்தும் தருவநர்ப் பெற்றும், தண்சேறு தாஅய் மதனு டை நோன்றாள், கண்போல் நெய்தல் போர்விற்பூக்கும், திண்டேர்ப் பொறையன் தொண்டி" என்றும் (*நற்.* 8 : 5-9) இந்தப் பட்டினம் கூறப்படுகிறது.

தொண்டிப் பட்டினத்தைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்தது. கோட்டை வாயிலின் கதவில் மூவன் என்பவனுடைய பல்லைப் பிடுங்கிப் பதித்திருந்தது என்று நற்றிணைச் செய்யுள் கூறுகிறது. "மூவன், முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவில், கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல், தெறலருந்தானைப் பொறையன்" (*நற்.* 18 : 2-5). யவனர்கள் தொண்டியைத் 'திண்டிஸ்' (Tindis) என்று கூறினார்கள்.

குறிப்புகள்

1 இரும்பு புனைந்தியற்றாப் பெரும்பெயர் தோட்டி
அம்மலை காக்கும் அணி நெடுங்குன்றில்

பளிங்கு வகுத்தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளி (*புறம்* 150 : 25-28)

(கோட்டி — யானைப்பாகர் யானைகளை அடக்கி நடத்துகிற ஓர் ஆயுதம். இது இரும்பினால் செய்யப்படுவது. அந்தப் பெயரையுடைய இந்த மலை 'இரும்பு புனைந்து இயற்றா தோட்டி' எனப்பட்டது.)

2 'திண்தேர் நள்ளி கானத்து அண்டர் பல்லா பயந்த நெய்' (*குறுந்.* 210:1-2) (நள்ளி-கண்டிரக்கோ அரசன் பெயர். அண்டர்-ஆயர், இடையர்)

3 *குல்லைக் கண்ணி வடுகர் முனையது*
பல்வேற் கட்டி நன்னாட்டும்பர்
மொழி பெயர் தேஎம் (குறுந். 11 : 5-7)

4 '*கழுவுள் காமூர்*'—*அகம்* 365:12 ; 8ஆம் பத்து 1:12:18.

5 *முருகன் நன்பேர் நெடுவேள் ஆவி,*
அறுகோட்டி யானைப் பொதினி (*அகம்* 1 : 3-4)

முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி,
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி (*அகம்* 61 : 15-16)

6 *பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி* (*அகம்* 208 : 22)
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (*நற்.* 201 : 5)

7 *தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்*
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கியோனே விடர்ச்சிமை,

ஓங்கிருங்கொல்லிப் பொருநன் (*புறம்* 152 : 28-31);
பகல்செலப், பல்கதிர் வாங்கிய படுசுடர் அமையத்துப்,
பெருமரங்கொன்ற கால்புகு வியன்புனத்து,
எரிமருள் கதிர திருமணியிமைக்கும்,
வெல்போர்வானவன் கொல்லிக் குடவரை"(*அகம்* 213 : 11-15)

8 "*கடவுள் எழுதிய பாவை*" (*அகம்* 62 : 15);
"*தெய்வம் எழுதிய வினைமாண் பாவை*" (*நற்.* 185:10).

9 *செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்*
தெய்வங்காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு
அவ்வெள்ளருவிக் குடவரையகத்துக்
கால்பொரு திடிப்பினும் கதழுறை கடுகினும்,
உருமுடன் றெறியினும் ஊறுபல தோன்றினும்,
பெருநிலங்கிளறினுந் திருநல வுருவின்,
மாயா இயற்கைப் பாவை (*நற்றிணை* 201 : 5-11).

10 *Ancient Karnataka,* Vol.I., 'History of Tuluva', Baskar Anand Saletore, 1936.

11 *Cera Kings of the Sangam Period,* K.G. SeshaAiyar, 1937, p. 33; *சங்க காலச் சிறப்புப் பெயர்கள்*, பக்கம் 258, 335; *வேளிர் வரலாறு* பக்கம் 65.

கொங்கு நாட்டுக் குறுநில மன்னர்கள்

அதிகமான் அரசர்

கொங்கு நாட்டைச் சேர அரசர் கைப்பற்றுவதற்கு முன்பு அந்நாட்டைப் பல சிற்றரசர் பரம்பரை யரசாண்டு கொண்டிருந்தது. அச்சிற்றரசர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த வரையில் கூறுகின்றோம். கொங்கு நாட்டையரசாண்ட சிற்றரசர்களில் தகடூரை யரசாண்ட அதிகமான் அரசர் பேர்போனவர். அவர்கள் அதிகமான் என்றும், அதியமான் என்றும் கூறப்பட்டனர். தகடூர் இப்போது தர்மபுரி என்று பெயர் கூறப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள தர்மபுரி தாலுகாவே பழைய தகடூர் நாடு. தகடூர் அதிகமான் அரசர் தகடூரில் கோட்டை கட்டிக்கொண்டு அரசாண்டார்கள். அது அதிகமான் கோட்டை என்று பெயர் பெற்றிருந்தது. அதிகமான் கோட்டை என்பது பிற்காலத்தில் 'அதமன் கோட்டை' என்று சிதைந்து வழங்கப்பட்டது. இந்த அதிகமான் கோட்டை தகடூரிலிருந்து (தர்மபுரியிலிருந்து) தென்மேற்கே 5 மைல் தூரத்திலிருக்கின்றது. சேலத்திலிருந்து வடக்கே 29 மைலில் இருக்கிறது.

தகடூரை, அதிகமான் அரசர் பரம்பரைபரம்பரையாக அரசாண்டார்கள். சங்க காலத்தில் அரசாண்ட தகடூர் அதிகமான்களில் மூவர் பெயர் மட்டும் தெரிகின்றது. அதிகமான் அரசர்களின் முன்னோன் ஒருவன் தேவலோகத்திலிருந்து கரும்பைக் கொண்டு வந்து கொங்கு நாட்டில் பயிராக்கினான் என்று ஔவையார் கூறுகிறார்.[1] தேவலோகத்திலிருந்து கரும்பு கொண்டு வந்தான் என்பது மிகைபடக் கூறலாகும். வேறு ஊர் எங்கிருந்தோ அவன் கரும்பைக் கொண்டு வந்து பயிராக்கினான் என்பதே சரியாகும்.

அதிகமான் அரசர்களில் முதன்முதலாக அறியப்படுகிறவன் நெடுமிடல் அஞ்சி என்பவன். சேர நாட்டு அரசனான களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் (சேரன் செங்குட்டுவனுடைய தமயன்) நெடுமிடல் அஞ்சியை ஒரு போரில் வென்றான் என்று *பதிற்றுப்பத்துச்* செய்யுள் கூறுகிறது.[2]

இதில் கூறப்படுகிற நெடுமிடல் என்பது அதிகமான் அரசர்களில் ஒருவனுடைய பெயர் என்று பழைய உரையாசிரியர் கூறுகிறார். "நெடுமிடல் அஞ்சி இயற்பெயராம்" என்று உரையாசிரியர் தெளிவாகக் கூறுவது காண்க. பரணர், தம்முடைய செய்யுள் ஒன்றில் நெடுமிடலைக் கூறுகிறார். *பதிற்றுப்பத்து* கூறுகிற நெடுமிடல் அஞ்சியே இந்த நெடுமிடல் என்பதில் ஐயமில்லை. இந்த நெடுமிடல் பசும் பூண்பாண்டிய னுடைய நண்பனாகவும் சேனைத் தலைவனாகவும் இருந்தான். பசும்பூண் பாண்டியனுடைய பகைவர்கள் சிலர், நெடுமிடலுடன் போர் செய்து அவனை வென்றார்கள் என்று பரணர் கூறுகிறார்.[3] இந்த அதிகமான் நெடுமிடல் அஞ்சியும் பசும் பூண் பாண்டியனும் நண்பர்கள் என்பது *அகம்* 162 செய்யுளினால் தெரிகின்றது.[4]

(குறிப்பு: இந்தப் பசும்பூண்பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாகிய பசும் பூண்செழியன் அல்லன்; இவனுக்கு முன்பு களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் காலத்திருந்தவன். இரண்டு பசும்பூண்பாண்டியரில் முதல் பசும்பூண் பாண்டியன் அதிகமான் நெடுமிடல் அஞ்சியின் காலத்திலிருந்தவன்.)

பசும்பூண் பாண்டியன் துளு நாட்டு நன்னன் மேல் படையெடுத்துச் சென்றான். அவனுடைய படைக்குச் சேனாபதியாக இருந்தவன் அதிகமான் நெடுமிடல் அஞ்சி. துளு நாட்டு வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் துளு நாட்டுச் சேனாபதியாகிய மிஞிலிக்கும் நெடுமிடல் அஞ்சிக்கும் போர் நடந்தது. அந்தப் போரில் நெடுமிடல் அஞ்சி இறந்து போனான்.[5]

அதிகமான் நெடுமிடல் அஞ்சிக்குப் பிறகு தகடூர் நாட்டுக்கு அரசனானவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன். அதிகமான் நெடுமான் அஞ்சி ஔவையாரை ஆதரித்தவன். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். ஔவையார் இவனுடைய வீரத்தையும் வெற்றிகளையும் பாடியுள்ளார் (*புறம்* 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 97, 98, 315, 390). இவன் ஏழு அரசர்களோடு போர் செய்து வென்றதை ஔவையார் கூறுகிறார்.[6] இவன், மலையமான் திருமுடிக்காரியின் கோவ லூரின் மேல் படையெடுத்துச் சென்று போரில் வென்றான் என்றும் அந்த வெற்றியைப் பரணர் புகழ்ந்து பாடினார் என்றும் ஔவையார் கூறுகின்றார். இவனுடைய வெற்றியைப் பரணர் புகழ்ந்து பாடிய செய்யுள் இப்போது கிடைக்கவில்லை. கோவலூர்ப் போரை இவன் வென்றேனேயல்லாமல் கோவலூரை இவன் பிடிக்கவில்லை.

அதிகமான் நெடுமான் அஞ்சி வேறு சில போர்களில் வெற்றிபெற்றான் என்று ஔவையார் கூறுகிறார். "கடிமதில் அரண்பல கடந்த நெடுமான் அஞ்சி" (*புறம்* 92:5-6). இந்தப் போர்கள் யாருடன் எங்கு நடந்தன என்பதும் தெரியவில்லை.

உண்டவரை நெடுங்காலம் வாழச் செய்கிற கிடைத்ததற்கரிய கருநெல்லிக்கனி அதிகமான் நெடுமான் அஞ்சிக்குக் கிடைத்தது. அக்கனியை அவன் தான் உண்ணாமல் பெரும் புலவராகிய ஔவையாருக்குக் கொடுத்தான். அவர் அதையுண்ட பிறகுதான் அது கிடைத்தற்கரிய கருநெல்லிக்கனி என்பது அவருக்குத் தெரிந்தது. அப்போது அவர் இவனை வியந்து பாடினார்.[7] இந்தச் செய்தியைச் *சிறுபாணாற்றுப்படை*யுங் கூறுகின்றது.

அதிகமான் அரசர் கரும்பைக் கொண்டு வந்து பயிராக்கியதையும் ஔவைக்குக் கருநெல்லிக்கனி கொடுத்ததையும் பிற்காலத்து நூலாகிய *கொங்குமண்டல சதக*முங் கூறுகின்றது.

சாதலை நீக்கு மருநெல்லி தன்னைத்
தமிழ்சொலெளவைக்
காதர வோடு கொடுத்தவன் கன்னலை யங்குநின்று
மேதினி மீதிற் கொடுவந்து நட்டவன் மேன்மரபோர்
மாதிரஞ் சூழரண் மேவுவதுங் கொங்கு மண்டலமே

இவ்வதிகமான் ஔவையாரைத் தொண்டைமான் இளந்திரையனிடம் தூது அனுப்பினான் என்பது ஔவையார் பாடிய *புறம்* 95ஆம் செய்யுளிலிருந்து தெரிகின்றது. இந்தத் தூது எதன் பொருட்டு அனுப்பப்பட்டது என்பது தெரியவில்லை.

அதிகமான் நெடுமான் அஞ்சிக்கு ஒரு மகன் பிறந்தான். அப்போது போர்க்களத்தில் போர் செய்துகொண்டிருந்த அதிகமான் இந்தச் செய்தி அறிந்து போர்க்கோலத்தோடு விரைந்து வந்து தன் மகனைக் கண்டு மகிழ்ந்தான். அந்தக் காட்சியை ஔவையார் பாடியுள்ளார் (*புறம்* 100). அந்த மகனுடைய பெயர் பொகுட்டெழினி என்பது.

இவர்கள் காலத்தில் தென் கொங்கு நாட்டையரசாண்ட பெருஞ்சேரல் இரும்பொறை தகடூர் நாட்டின் மேல் படையெடுத்துப் போர் செய்தான். அவனை நெடுமான் அஞ்சியும் பொகுட்டொழினியும் எதிர்த்துப் போர் செய்தார்கள். பெருஞ்சேரலிரும்பொறை வெற்றி பெற்றுத் தகடூரைக் கைப்பற்றினான்.

நெடுங்காலம் சுதந்தரமாக அரசாண்டிருந்த அதிகமான் அரசர் தகடூர்ப் போருக்குப் பிறகு கொங்குச் சேரருக்குக் கீழடங்கி அரசாண்டார்கள். அதிகமான் அரசர் பரம்பரை கி.பி. 13ஆம்

நூற்றாண்டிலும் இருந்தது என்பதற்குச் சாசனச் சான்றுகள் உள்ளன.

கடைச்சங்க காலத்தில் இருந்த அதிகமான் அரசர் பரம்பரையில் கீழ்க்கண்டவர் நமக்குத் தெரிகின்றனர் :

அதிகமான் நெடுமிடல் அஞ்சி
|
அதிகமான் நெடுமான்அஞ்சி
|
அதிகமான் பொகுட்டெழினி

ஓரி

கொங்கு நாட்டைச் சேர்ந்த கொல்லி மலையையும் அதனைச் சார்ந்த கொல்லிக் கூற்றத்தையும் அரசாண்ட மன்னர் ஓரி என்று பெயர் பெற்றிருந்தனர். அவர்களுடைய வரலாறு முழுவதும் கிடைக்கவில்லை. அவர்களில் ஒருவன் ஆதனோரி. இவன் வள்ளலாக விளங்கினான். இவன் தன்னை நாடிவந்த புலவர்களுக்கு யானையையும் தானங் கொடுத்தான்.[8] இவன் கடை ஏழு வள்ளல்களில் ஒருவனாகக் கூறப்படுகின்றான். இவன் போருக்குப் போகும்போது தன்னுடைய ஓரி என்னும் பெயருள்ள குதிரைமேல் அமர்ந்து செல்வான். இவனும் இவனுடைய கொல்லி நாட்டுக்கு அடுத்திருந்த தகடூர் அரசனாகிய அதிகமான் நெடுமான் அஞ்சியும் நண்பர்களாக இருந்தார்கள்.

முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி, கொல்லிமலை ஓரியுடன் போர் செய்தான். காரி, தன்னுடைய காரி என்னும் குதிரை மேல் அமர்ந்தும் ஓரி தன்னுடைய ஓரி என்னுங் குதிரைமேல் அமர்ந்தும் போர் செய்தார்கள்.[9] போரில் ஓரி இறந்து போக, காரி ஓரியின் ஊரில் வெற்றியோடு புகுந்தான்.[10] ஓரியின் கொல்லி நாட்டை வென்ற காரி அந்நாட்டைத் தன்னுடைய அரசனாகிய பெருஞ்சேரலிரும்பொறைக்குக் கொடுத்தான்.[11] ஓரி அரசர், பரம்பரையாக ஆண்டு வந்த கொல்லி நாடு பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில், சேரரின் கொங்கு இராச்சியத்தில் சேர்ந்துவிட்டது.

கழுவுள்

கொங்கு நாட்டுக் காமூரில் வாழ்ந்த இடையர்களின் தலைவன் கழுவுள். காமூரைச் சூழ்ந்து பலமான கோட்டை மதிலும் அகழியும் இருந்தன. இவனுக்கு முன்பு காமூரையரசாண்ட இவனுடைய பரம்பரையரசர் இன்னாரென்று தெரியவில்லை. கொங்குச் சேரர் தங்களுடைய கொங்கு

இராச்சியத்தை விரிவாக்கினபோது, பெருஞ்சேரல் இரும்பொறை கழுவுள் மேல் படையெடுத்துச் சென்று போர் செய்தான். கழுவுளும் பலமுடையவனாக இருந்தபடியால் அவனை எதிர்த்துப் போர் செய்தான். பெருஞ்சேரல் இரும்பொறைக்கு உதவியாகப் பதினான்கு வேள் அரசர் கழுவுளுக்கு எதிராகப் போர் செய்து கழுவுளை வென்றார்கள்.[12] கடைசியில் கழுவுள் பெருஞ்சேரலிரும்பொறைக்குக் கீழடங்கினான். காமூர் சேரரின் கொங்கு இராச்சியத்தில் சேர்ந்தது. இந்தப் போர், பெருஞ்சேரலிரும்பொறை கொல்லிக் கூற்றத்தையும் தகடூர் நாட்டையும் பிடிப்பதற்கு முன்பு நடந்தது. கொங்குச் சேரர் தங்கள் இராச்சியத்தைப் பெரிதாக்கிய காலத்தில் அவர்களில் ஒருவனான பெருஞ்சேரலிரும்பொறை கழுவுள் மேல் படையெடுத்துச் சென்று போர் செய்தான். அவனுக்கு உதவியாகப் பதினான்கு வேளிர் வந்து கழுவுள் மேல் போர் புரிந்தார்கள். கடைசியில் கழுவுள் தோற்றுப் பெருஞ்சேரலிரும்பொறைக்கு அடங்கினான்.

குமணன்

கொங்கு நாட்டில் முதிரம் என்னும் ஊர் இருந்தது. அவ்வூரில் குமணன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். வள்ளலாக இருந்த அவன் புலவருக்கும் மற்றவர்களுக்கும் தான தருமம் செய்தான்.[13] பெருஞ்சித்திரனார் இவனைப் பாடிய செய்யுள்கள் *புறநானூற்றில்* காணப்படுகின்றன.[14]

இளவெளிமானிடஞ் சென்று பரிசு கேட்டபோது அவன் சிறிது கொடுக்கக் கொள்ளாமல் பெருஞ்சித்திரனார் குமணனிடம் வந்து யானையைப் பரிசில் கேட்டார். அவன் யானை கொடுக்க, அதைக் கொண்டுபோய் வெளிமானூர்க் காவல் மரத்தில் கட்டி ஒரு செய்யுள் பாடினார்.

குமணனுடைய தம்பி இளங்குமணன் என்பவன் தமயனாகிய குமணனைக் காட்டுக்கு ஒட்டி நாட்டைக் கைப்பற்றி யரசாண்டான். குமணன் காட்டில் தங்கியிருந்தான். அப்போது பெருந்தலைச்சாத்தனார் குமணனைக் கண்டு ஒரு செய்யுள் பாடினார். அச்செய்யுளில் அப்புலவருடைய வறுமை நெஞ்சையுருக்கும் தன்மையதாக இருந்தது. அச்செய்யுளைக் கேட்ட குமணன், தன்னுடைய துன்பத்தைவிடப் புலவரின் துன்பம் கொடியது என்று உணர்ந்து, தன் கையில் பொருள் இல்லாதபடியால், தன்னுடைய வாளைப் புலவரிடம் கொடுத்து, தன் தலையை வெட்டிக் கொண்டுபோய்த் தன் தம்பியிடங் கொடுத்தால் அவன் பரிசாகப் பொருள் கொடுப்பான் என்று கூறினான். வாளைக் கையில் வாங்கிக்கொண்டு புலவர்

இளங்குமணனிடம் வந்து குமணன் வாள்கொடுத்த செய்தியைக் கூறினார் (*புறம்* 160-163). பிறகு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. குமணனைப் பற்றி இவ்வளவுதான் தெரிகின்றது. குமணனுடைய முதிரம் என்னும் ஊர் கொங்கு நாட்டில் எவ்விடத்தில் இருந்தது என்பது தெரியவில்லை. இளங்குமண னைப் பற்றியும் ஒன்றுந் தெரியவில்லை.

விச்சியரசர்

விச்சிமலையையும் அதனைச் சார்ந்த நாட்டையும் அரசாண்டவர் விச்சிக்கோ என்று பெயர் பெற்றிருந்தனர். விச்சியூரில் விச்சிமலை இருந்தது. பச்சைமலை என்று இப்போது பெயர் பெற்றுள்ள மலையே பழைய விச்சிமலை என்று கருதுகிறார்கள். பச்சைமலை இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருக்கின்றது. விச்சியரசரைக் 'கல்லக வெற்பன்' என்றும் 'விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக்கோ' என்றும் கபிலர் கூறுகின்றார். விச்சிமலை மேல் இருந்த ஐந்தெயில் என்னும் கோட்டையில் விச்சியரசர் வாழ்ந்தார்கள். விச்சி நாட்டில் குறும்பூர் என்னும் ஊர் இருந்தது. அங்குப் பாணர் என்னும் இனத்தார் வசித்து வந்தார்கள். விச்சி மன்னன் பகைவரோடு போர் செய்தபோது, அவன் புலி போன்று வீரமாகப் போர் செய்ததைப் பாணர்கள் கண்டு ஆரவாரஞ் செய்து மகிழ்ந்தார்கள் என்று பரணர் கூறுகின்றார்.[15]

பாரி வள்ளல் போரில் இறந்த பிறகு, அவனுடைய பரம்பு நாட்டைப் பகைமன்னர் கைக்கொண்ட பின்னர், பாரியின் மகளிரான அங்கவை, சங்கவை என்பவரைக் கபிலர் அழைத்துக் கொண்டு விச்சிக்கோவிடம் வந்து அவர்களைத் திருமணஞ் செய்துகொள்ளும்படி கேட்டார். அதற்கு விச்சியரசன் இணங்க வில்லை (*புறம்* 200 அடிக்குறிப்புக் காண்க). விச்சியரசன் தம்பி இளவிச்சிக்கோ என்று பெயர் பெற்றிருந்தான்.

சுதந்தரமாக அரசாண்டுகொண்டிருந்த விச்சியரசரை இளஞ்சேரல் இரும்பொறை வென்று விச்சி நாட்டைத் தன்னுடைய கொங்கு இராச்சியத்தோடு இணைத்துக் கொண்டான். விச்சியரசனுடைய ஐந்தெயில் கோட்டையை இளஞ்சேரல் இரும்பொறை முற்றுகையிட்டபோது விச்சியரசர் களுக்குப் பாண்டியனும் சோழனும் உதவியாக இருந்தார்கள். ஆனாலும், இளஞ்சேரல் இரும்பொறை விச்சியை வென்று அவனுடைய ஐந்தெயில் கோட்டையைக் கைப்பற்றினான்.[16]

கட்டியரசர்

கொங்கு நாட்டின் ஒரு பகுதியை ஆதிகாலம் முதல் அரசாண்டவர் கட்டி என்னும் பெயர் பெற்ற பரம்பரையரசர்.

கட்டியர் அரசாண்ட பகுதி வடகொங்கு நாட்டில், வடுக தேசமாகிய கன்னட தேசத்தின் தெற்கு எல்லையைச் சார்ந்திருந்தது.[17] வடகொங்கு நாட்டின் வடமேற்கில் இருந்த புன்னாட்டின் தலைநகரமான கட்டூரின் மேல் சோழனுடைய சேனைத் தலைவனான பழையன் படையெடுத்துச் சென்று போர் செய்தபோது புன்னாட்டு அரசனுக்கு உதவியாகப் பழையனை எதிர்த்துப் போர் செய்த கொங்கு நாட்டு அரசர்களில் கட்டியரசனும் ஒருவன்.[18] ஒரு கட்டியரசன், உறையூரை யாண்ட தித்தன் வெளியன் என்னுஞ் சோழன் மேல் போருக்குச் சென்று உறையூர்க் கோட்டையை யடைந்தபோது, கோட்டைக்குள் தித்தன் வெளியனுடைய பிறந்த நாள் விழாக் கொண்டாட்டத்தில் கிணைப்பறை கொட்டப்பட்ட முழக்கத்தைக் கேட்டுப் போர் செய்யாமல் திரும்பிப் போய்விட்டான்.[19]

கட்டியரசர், கொங்கு நாட்டை யாண்ட பொறைய அரசருக்குக் கீழடங்கியிருந்தனர் என்று தோன்றுகின்றனர். கட்டி பரம்பரையார் மிகமிகப் பிற்காலத்திலும், விசயநகர ஆட்சிக் காலத்திலும் இருந்தார்கள். இக்காலத்தில் அவர்கள் கெட்டி முதலியார் என்று பெயர் பெற்றிருந்தார்கள். கட்டி என்னும் பெயரே பிற்காலத்தில் கெட்டி என்று மருவியது.

குதிரைமலைக் கொற்றவர்

கொங்கு நாட்டில் குதிரைமலையும் அதனை அடுத்து முதிரம் என்னும் ஊரும் இருந்தன. பிட்டங்கொற்றன் என்பவன் இங்குச் சிற்றரசனாக இருந்தான். இவன் சேரனுடைய சேனாபதி என்றும் வள்ளல் என்றும் ஆலம்பேரி சாத்தனார் கூறுகிறார். குதிரைமலைக் கொற்றன் ஈகைக் குணம் உடையவன் என்று கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் கூறுகிறார்.[20] இவன் வானவனுடைய (சேரனுடைய) மறவன் என்றும் போர் செய்வதில் வல்லவன் என்றும் கூறப்படுகிறான்.[21] வடம வண்ணக்கன் தமோதரனார், பிட்டங்கொற்றனையும், அவனுடைய அரசனான கோதையையும் கூறுகிறார்.[22] மாவண் ஈகைக் கோதையும் பிட்டனுடைய இறைவனும் கோதை எனப்படுகிறான். கோதை என்பது தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் சிறப்புப் பெயர் என்று தோன்றுகிறது. உறையூர் மருத்துவன் தாமோதரனாரும் (*புறம்* 170 : 6-8) இவனைப் பாடியுள்ளார்.

குதிரைமலை நாட்டை ஆண்ட எழினி என்பவன் ஒருவன் கூறப்படுகிறான். இவன் பிட்டங்கொற்றனுக்குப் பிறகு இருந்தவன் எனத் தோன்றுகிறான். (இந்த எழினி தகடூரையாண்ட அதிகமான் குலத்தில் இருந்த எழினியல்லன்.) குதிரைமலை எழினி வள்ளலாகவும் இருந்தான். "ஊராதேந்திய குதிரைக்

கூர்வேல், கூவிளங்கண்ணிக் கொடும்பூண் எழினி" என்று (*புறம்* 158:8.9) இவன் கூறப்படுகிறான்.

எழினிக்குப் பிறகு முதிரத்தையும் குதிரைமலையையும் அரசாண்டவன் குமணன் என்பவன். இவன் வள்ளல்களில் ஒருவன்.[23] குமணனைப் புகழ்ந்து பெருஞ்சித்திரனார் பாடிய செய்யுட்கள் *புறநானூற்றில்* தொகுக்கப்பட்டுள்ளன (*புறம்* 160, 161, 162, 163).

குமணனுக்குத் தம்பி யொருவன் இருந்தான். அவனுக்கு இளங்குமணன் என்று பெயர். இளங்குமணன், தமயனான குமணனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டு நாட்டைக் கைப்பற்றி யரசாண்டான். குமணன் காட்டிலே இருந்தான். புலவர் பெருந்தலைச் சாத்தனார் குமணனைக் காட்டிலே கண்டு ஒரு செய்யுளைப் பாடினார். அதில் அவர் தம்முடைய வறுமைத் துன்பத்தைக் கூறினார் (*புறம்* 164). குமணன் செய்யுளைக் கேட்டு மனம் உருகித் தன்னிடம் அப்போது பொருள் இல்லையே என்று கலங்கி தன்னுடைய போர் வாளைப் புலவரிடம் கொடுத்துத் தன்னுடைய தலையை வெட்டிக்கொண்டுபோய் இளங் குமணனிடங் கொடுத்தால் அவன் பெரும்பொருள் கொடுப்பான் என்று கூறினார். புலவர் வாளைக் கையில் வாங்கிக்கொண்டு, நேரே இளங்குமணனிடம் வந்து வாளைக் காட்டிக் குமணன் வாள் கொடுத்த செய்தியைக் கூறினார் (*புறம்* 165). பிறகு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

முதிரமலைக் குமணனும் குதிரைமலைக் குமணனும் வெவ்வேறு ஆட்கள் போலத் தோன்றினாலும் இருவரும் ஒருவரே. முதிரமலைக்குக் குதிரைமலை என்றும் பெயர்.

நள்ளி

கண்டிரம் என்னும் நாட்டை யரசாண்ட மன்னர்கள் கண்டிரக்கோ என்று பெயர் பெற்றிருந்தார்கள். அவர்களில் நள்ளி என்பவன் ஒருவன். இவனைக் கண்டிரக்கோ பெருநள்ளி என்பர். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். இவனைக் 'கண்டிரக்கோபெருநள்ளி' என்பர். தேர் (வண்டி)களையும் யானைகளையும் பரிசிலர்களுக்குக் கொடுத்துப் புகழ் படைத்திருந்தான். நள்ளி ஊரில் இல்லாதபோது இரவலர் அவனுடைய மாளிகைக்கு வந்தால் அவனுடைய பெண்டிர் அவர்களுக்கு யானைக் கன்றுகளைப் பரிசாக அளித்தார்கள் (*புறம்* 151:1-7). நள்ளியின் கொடைச் சிறப்பைச் *சிறுபாணாற்றுப் படையும்* (அடி 104-07) கூறுகிறது. பெருஞ்சித்திரனாரும் இவனுடைய வள்ளன்மையைக் கூறுகிறார் (*புறம்* 158:13-14).

வன்பரணர் என்னும் புலவர் நள்ளியின் தோட்டிமலைக் காடுகளின் வழியே பயணஞ் செய்தபோது பசியினால் சோர்ந்து

ஒரு பலாமரத்தின் அடியில் உட்கார்ந்துவிட்டார். அருகில் ஊர் இல்லாத காடாகையால் உணவு கிடைக்கவில்லை. அப்போது நள்ளி அங்கு வந்து மான் ஒன்றை வேட்டையாடிக் கொண்டு வந்து அதன் இறைச்சியை நெருப்பிலிட்டுச் சமைத்துப் புலவருக்குக் கொடுத்து அவர் பசியை நீக்கினான். இச்செய்தியை அவர் தாம் பாடிய செய்யுளில் கூறுகிறார் (*புறம்* 150). நள்ளியின் பெயரினால் நள்ளியூர் என்று ஓர் ஊர் இருந்தது. புகழூர்மலைக் குகையில் உள்ள பிராமி எழுத்துச் சாசனம் நள்ளியூரைக் கூறுகிறது (*Epi. Coll.* 296 of 1963-65).

புன்னாட்டரசர்

புன்னாடு வடகொங்கு நாட்டின் வடமேற்கில் இருந்தது. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்த தாலமி என்பவர் (Ptolemy) புன்னாட்டைத் தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார். அவர் அதை பொவுன்னாட (Pounnata) என்று கூறுகிறார். புன்னாட்டில் உலகப் புகழ் பெற்ற நீலக்கல் சுரங்கம் இருந்ததையும் அந்த நீலக்கற்களை உரோம தேசத்தவர் மதித்து வாங்கிச் சென்றதையும் முன்னமே கூறினோம். புன்னாட்டு வழியாகக் காவிரி, கப்பிணி என்னும் இரண்டு ஆறுகள் பாய்ந்தன. கப்பிணி ஆறு காவிரியின் ஒரு கிளை நதி. கப்பிணி ஆற்றங்கரையில் புன்னாட்டின் தலைநகரமான கட்டூர் இருந்தது (*Mysore Archaeological Report* for 1917, pp. 40-44). கட்டூரைப் பிற்காலத்தில் கிட்டூர் என்றும் கிட்டிபுரம் என்றும் பெயர் வழங்கினார்கள். தலைநகரமான கட்டூரில் புன்னாட்டரசர் இருந்து அரசாண்டார்கள். இது பிற்காலத்தில் புன்னாடு ஆறாயிரம் என்று பெயர் பெற்றிருந்தது. வடகொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த புன்னாடு இப்போது மைசூர் இராச்சியத்தில் ஹெக்கடதேவன் கோட்டை தாலுகாவில் சேர்ந்திருக்கிறது.

துளு நாட்டு அரசனான நன்னன் புன்னாட்டைக் கைப்பற்ற முயன்றான். அப்போது ஆய் எயினன் (வெளியன் வேண்மான் ஆய் எயினன்) புன்னாட்டு அரசனுக்கு உதவியாகத் துளு நாட்டரசனின் மேல் படையெடுத்துச் சென்றான். துளு நாட்டரசனின் சேனாபதியான மிஞிலி, பாழி என்னும் போர்க்களத்தில் ஆய்எயினனுடன் போர் செய்து அவனைக் கொன்றான்.[24] இந்த வெளியன் வேண்மான் ஆய்எயினன், சேர நாட்டரசனாகிய களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலினுடைய சேனாபதி, துளு நாட்டு நன்னன் தான் கருதியதுபோல் புன்னாட்டைக் கைப்பற்ற முடியவில்லை.

புன்னாட்டரசர் கொங்குச் சேரர்களுக்குக் கீழ் அடங்கி யிருந்தனர் என்று தெரிகின்றது. பெரும்பூண் சென்னி என்னுஞ்

சோழன் புன்னாட்டைக் கைப்பற்ற எண்ணித் தன்னுடைய சேனாபதி பழையன் என்பவன் தலைமையில் தன்னுடைய சேனையை யனுப்பினான். பழையன் புன்னாட்டுக் கட்டூரின் மேல் படையெடுத்துச் சென்றான். புன்னாட்டரசனுக்கு உதவியாகக் கங்க அரசன், கட்டியரசன், அத்தி, புன்றுறை முதலியவர்கள் இருந்து பழையனுடன் போர் செய்தார்கள். அப்போரில் பழையன் இறந்து போனான்.[25]

புன்னாட்டரசர் சங்க காலத்துக்குப் பிறகும் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் அரசாண்டனர். புன்னாட்டில் கிடைத்த ஒரு சாசன எழுத்து புன்னாட்டரசர் சிலருடைய பெயர்களைக் கூறுகின்றது (*Indian Antiquary*, xiii 13, xviii 366). இதில் கீழ்க்கண்ட அரசரின் வழிமுறை கூறப்படுகிறது. ராஷ்ட்ரவர்மன், இவன் மகன் நாகதத்தன், இவன் மகன் புஜகன் (இவன் சிங்க வர்மன் மகளை மணஞ் செய்து கொண்டான்). இவனுடைய மகன் ஸ்கந்தவர்மன், இவனுடைய மகன் இரவிதத்தன் (*Mysore and Coorg from its Inscriptions*, B. Lewis Rice, 1909, p. 146).

(புன்னாட்டரசர் பரம்பரையில் கடைசி அரசனுக்கு ஆண் பேறு இல்லாமல் ஒரே ஒரு பெண் மகள் மட்டும் இருந்தாள். கங்க நாட்டரசன் அவனிதனுடைய மகனான துர்வினிதன் (கி.பி. 482—517) புன்னாட்டரசனுடைய மகளை மணஞ் செய்து கொண்டான். அதன் பிறகு புன்னாடு கங்க நாட்டுடன் இணைக்கப்பட்டது.

கடைச் சங்க காலத்தில் புன்னாடு வடகொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தது.

சாலிதொரெ எனபவர் புன்னாடு சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை என்று தவறான, உண்மைக்கு மாறான, செய்தியைக் கூறுகிறார் (B.A. Saletore, 'History of Tuluva', *Ancient Karnataka*, Vol. I, p. 51).

சங்க இலக்கியத்தில் கூறப்படுகிற எருமையூரன் (எருமை நாடன்) என்பவனுடைய எருமையூர் பிற்காலத்தில் மைசூர் என்று பெயர் பெற்றது என்றும் (எருமை—மகிஷம், எருமை ஊர்—மகிஷ ஊர், மைசூர்) மைசூர் என்னும் பெயரே பிற்காலத்தில் கன்னட நாடு முழுவதுக்கும் வழங்கப்படுகிறது என்றும் ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிற உண்மை. இதைச் சாலிதொரெ மறுக்கிறார். மறுப்பதற்கு இவர் கூறுகிற காரணம் தவறாக இருக்கிறது. கர்நாடக தேசத்திலிருந்த பழைய பெயர்களான கழபப்பு (இப்போதைய சந்திரகிரி), புன்னாடு, குந்தளம் முதலிய பெயர்கள் சங்கச் செய்யுள்களில் கூறப்படாத படியால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த எருமையூர்

பிற்காலத்தில் மகிஷூர் (மைசூர்) என்றாயிற்று என்று கருதுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று என்று இவர் எழுதுகிறார். எருமையூரைக் கூறுகிற சங்கச் செய்யுள் புன்னாடு முதலிய வேறு ஊர்ப் பெயர்களைக் கூறவில்லை. ஆகையால் எருமையூர் என்று சங்கச் செய்யுள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார். புன்னாட்டின் பெயரைச் சங்க இலக்கியம் கூறவில்லை என்று இவர் கூறுவது வியப்பாக இருக்கிறது. புன்னாட்டின் பெயரைச் சங்கச் செய்யுள் கூறுவதை மேலே காட்டியுள்ளோம். சாலிதொரெ அவர்கள் உண்மையறியாமல் தவறாக எழுதியிருக்கிறார். எருமையூரைக் கூறுகிற சங்கச் செய்யுள் புன்னாட்டையும் கூறுகிறது.

கோசர்

கோசர் என்னும் ஓர் இனத்தவர் போர் செய்வதையே தங்களுடைய குலத்தொழிலாகக் கொண்டு வாழ்ந்திருந்தார்கள் என்பதைச் சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். அவர்களுடைய தாய்நாடு, அக்காலத்தில் தமிழ்நாடாக இருந்த துளு நாடு. துளு நாட்டைத் தாய்நாடாகக் கொண்டிருந்த இவர்கள் பாண்டி நாடு, சோழ நாடு, கொங்கு நாடு முதலிய பல நாடுகளிலும் பரவியிருந்தார்கள். இவர்கள் தமிழ்நாட்டு அரசரின் கீழே அவர்களுடைய படைகளில் சேர்ந்திருந்தார்கள். சில சமயங்களில், குடிமக்கள் அரசருக்குச் செலுத்த வேண்டிய இறைப்பணத்தை வசூல் செய்யும் சேவகர்களாகவும் இருந்தார்கள். இந்த முறையில் சில ஊர்களில் இவர்களில் சிலர் ஊராட்சியினராகவும் இருந்தனர். எண்ணிக்கையில் சிறு தொகையினராக இருந்தும் இவர்கள் தமிழகமெங்கும் பேர் பெற்றிருந்தார்கள். போருக்கு அஞ்சாத இவர்கள் ஆற்றலும் உறுதியும் கண்டிப்பும் உடையவர்களாக இருந்தனர். இவர்கள் குறுநிலமன்னர் அல்லர்; ஆனாலும், நாட்டில் இவர்களுக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது.

போர்ப் பயிற்சியே இவர்களுடைய குலத்தொழில். குறி தவறாமல் வேல் எறிவதிலும் அம்பு எய்வதிலும் கை தேர்ந்தவர்கள். கோசர் குலத்து இளைஞர்கள், உயரமான மரக்கம்பத்தை நிறுத்தி அதன் உச்சியைக் குறியாகக் கொண்டு வேல்களை (ஈட்டிகளை) எறிந்து பழகினார்கள். அம்புகளை எய்து பயின்றார்கள். ஓங்கியுயர்ந்து வளர்ந்த முருக்க மரத்தின் பக்கக் கிளைகளை வெட்டிக் களைந்து நீண்ட நடுமரத்தை மட்டும் வைத்துக்கொண்டு வேல் எறிந்தும் அம்பு எய்தும் போட்டி போட்டுப் பழகினார்கள்.[26] போர்க்களத்தில் உயிருக்கு அஞ்சாமல் போர் செய்து வெற்றியடைந்தனர்.[27] போர்க்களத்தில்

ஆயுதங்களினால் காயமடைந்ததனால் இவர்களுடைய முகத்தில் வடுக்கள் இருந்தன.[28] உடம்பு முழுவதும் நகைகளை அணிந் திருந்தார்கள். இவர்கள் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது.[29]

கோசர் தமிழ்நாட்டுக்கு அப்பால் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்தவர் என்று சிலர் கருதுகின்றனர்.[30] இது தவறு. கோசரின் தாய்நாடு துளு நாடு. "மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர், கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த பாகலார்கைப் பறைக்கட் பீலித், தோகைக் காவின் துளு நாடு" (*அகம்* 15 : 2-5). துளு நாட்டுச் செல்லூருக்குக் கிழக்கில் இவர்கள் இருந்தார்கள். "அருந்திறற் கடவுள் செல்லூர்க்குணாஅது, பெருங்கடல் முழக்கிற்றாகி யாணர் இருப்பிடம்படுத்த வடுவுடை முகத்தர், கருங்கட் கோசர் நியமம்" (*அகம்* 90 : 9-12). துளு நாட்டு நாலூரிலும் இவர்கள் இருந்தார்கள். "நாலூர்க் கோசர்" (*குறுந்.* 15 : 3). துளு நாட்டில் நால்கூர் என்னும் ஊர் இருக்கிறது (நால்கு— நான்கு).

போர் வீரர் ஆகையால் இவர்கள் கள் அருந்தினார்கள். இவர்களுடைய வீடுகளில் மதுபானம் இருந்தது. மதுவருந்திக் குரவைக் கூத்தாடினார்கள். "நனைக் கள்ளின் மனைக்கோசர், தீந்தேறல் நறவு மகிழ்ந்து, தீங்குரவைக் கொளைத்தாங்குந்து" (*புறம்*396:7-9)

கோசர் கொங்கு நாட்டிலும் இருந்தனர். அவர்கள், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்ததையறிந்து கொங்கு நாட்டிலும் கண்ணகிக்கு விழாச் செய்தனர். இதனை, "அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழிலென்றும் மாறாதாயிற்று" என்று *சிலப்பதிகாரம்* உரைபெறு கட்டுரை கூறுவதிலிருந்து அறியலாம். கொங்கு நாட்டுக் கோசர், பொறையரசருக்கு அடங்கி அவர்களின் கீழ் ஊழியஞ் செய்திருந்தனர் என்று தோன்றுகிறது.

கோயம்புத்தூர் என்பது கோசர் பெயரால் ஏற்பட்ட ஊர். கோசர் என்பது கோயர் என்றாகி கோயம்புத்தூர் என்று வழங்குகிறது. கோயன் + புத்தூர் = கோயன்புத்தூர். பிறகு இப்பெயர் கோயம்புத்தூர் என்றாயிற்று.

சோழ நாட்டில் ஓர் ஊரையரசாண்ட அஃதை என்பவன் இடத்திலும் கோசர் இருந்தனர் (*அகம்* 113 : 4-7).

குறிப்புகள்

1 *அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்*
அரும்பெறல் மரபில் கரும்பு இவண்தந்தும்

நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபின் முன்னோர் (*புறம்* 99 : 1-4).

அந்தரத்து
அரும்பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பு இவண் தந்தோன் பெரும் பிறங்கடையே
(*புறம்* 392 : 19-21)

2 நெடுமிடல் சாயக்கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து
(4ஆம் பத்து 2 : 10-1)

3 யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்
அரிமணவாயில் உறத்தூர் (*அகம்* 266 : 10-13)

4 கழல்தொடி அதிகன்
கோளற வறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்
களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்து தோன்றருவி (*அகம்* 162:18-23)

5 கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவர பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேமமாகிய பெரும்பெயர்
வெள்ளாத் தானை அதிகன் கொன்றுவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு (*அகம்* 142 : 9-14)
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண்பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடுபட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொண்கர் ஆர்ப்பு (*குறுந்*. 393:3-6)

6 செருவெட்டு
இமிழ் குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்த நின் ஆற்றல் தோன்றிய
அன்றும் பாடுநற்கரியை இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே (*புறம்* 99 : 8-14)

7 நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுகபெரும நீயே தொன்னிலைப்
பெருமலைவிடரகத் தருமிசைக் கொண்ட,
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதனின்னதத் தடக்கிச்
சாதல் நீங்க வெமக்கீத் தனையே (*புறம்* 91 : 5.11)
கமழ்பூஞ்சாரல் கவினியநெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கீந்த

உரவுச் சினங் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடற்றானை யதிகன் (*சிறுபாண்* 100-103)

8 இழையணி யானை இரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை.
அடுபோர் ஆனா ஆதனோரி,
மாரி வண்கொடை. (*புறம்* 153 : 2-5)

வெம்போர்
மழவர் பெருமகன்மாவள்ளோரி,
கைவளம் (*நற்.* 52 : 8-10)

9 காரிக்குதிரை காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் (*சிறுபாண்.* 110-111)

10 ஓரிக் கொன்ற ஒரு பெருந்தெருவில்
காரிபுக்க நேரார் புலம் போல் கல்லென்றால் ஊரே
(*நற்.* 320 : 4-7)

11 முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி,
செல்லா நல்லிசை நிறுத்த வில்வில்
ஓரிக்கொன்று சேரலர்க்கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (*அகம்* 209:12-15)

12 வீயாவிழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங்கெறிந்த
கழுவுள் காமூர் (*அகம்* 135:11-13)

13 அதிரா யாணர் முதிரத்துக் கிழவன்
இவண்விளக்கு சிறப்பின் இயல்தேர்க்குமணன்
(*புறம்.* 158 : 25-76)

14 அரிது பெறு பொலங்கலம் எளிதினின்வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே (*புறம்* 160 : 11-3)
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேற்குமணன் (*புறம்* 163 : 8-9)

15 வில்கெழுதானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநேர் குறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பு (*குறுந்.* 328 : 5-8)

16 வெருவருதானையொடு வெய்துறச் செய்து சென்று
இருபொரு வேந்தரும் விச்சியும் வீழ
வருமிளைக் கல்லகத் தைந்தெயில் எறிந்து
(9ஆம் பத்துப் பதிகம்)

17 குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழி பெயர் தேயம் (*குறுந்.* 11 : 5-7)

18 நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி

பொன் அணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றமர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணி பழையன்பட்டென (அகம் 44:7-11)

19 தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட்டஞ்சிப்
போரடுதானை கட்டி
பொராஅ தோடிய ஆர்ப்பு (அகம் 226:14-7)

20 வசையில் வெம்போர் வானவன் மறவன்
நசையில் வாழ்நர்க்கு நன்கலம் கரக்கும்
பொய்பா வாய்வாள் புனைகழல் பிட்டன்
மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்
அகலறை நெடுஞ்சுனை (அகம் 143:10-14)

21 ஊராக் குதிரைக் கிழவ கூர்வேல் ......
கைவள் ஈகைக் கடுமான் கொற்ற (புறம் 168-14:17)
(ஊராக் குதிரை-குதிரைமலை)
வானவன் மறவன் வணங்கு விற்றடக்கை
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன் (அகம் 77-15-16)

22 வன்புல நாடன் வயமான் பிட்டன்
ஆரமர் கடக்கும் வேலும் அவன்இறை
மாவள் ஈகைக் கோதையும்
மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே (புறம் 172:8-11)
உறையூர் மருத்துவன் தாமோதரனாரும் (புறம் 170:6-8) காவிரிப் பூம்பட்டிணத்துக் காரிக்கண்ணனாரும் (புறம் 169:171) இவனைப் பாடியுள்ளனர்.

23 அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண் விளங்கு சிறப்பின் இயல்தேர்க் குமணன்
(புறம் 158 : 25-26)
அரிதுபெறு பொலங்கலம் எளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத்தோனே (புறம் 160 : 11-13)

24 பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகின் பாழியாங்கண்
அஞ்சலென்ற ஆஅய் எயினன் இகலடு கற்பின்
மிஞிலி யொடு தாக்கித் தன்னுயிர் கொடுத்தனன்
(அகம் 396:2-6)
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்றசெருவிற் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தென (அகம் 208:5-9)

25 நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி

பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇ வளப்பருங்கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டென (*அகம்* 44 : 7-11)

26 வெள்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் (*புறம்* 169:8-11)

27 கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர் (*மதுரைக் காஞ்சி,* 773)

28 இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர் (*அகம்.* 90 : 11)

29 மெய்ம்மலி பெரும்பூண் செம்மல் கோசர் (*அகம்.* 15 : 2)
வாய்மொழி நிலைஇய சேண் விளங்கு நல்லிசை,
வளங்கெழு கோசர் (*அகம்* 205 : 9-10).

30 *Ancient India and South Indian History and Culture,* Vol.I, .Dr. S. Krishnaswami Aiyengar, p. 87.

MADRAS STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, LIBRARY, Acc. Date MADRAS

கொங்கு நாட்டில் சேரர் ஆட்சி

கொங்குவைச் சேரர் கைப்பற்றியது

பழங்கொங்கு நாட்டைச் சிற்றரசர்கள் அரசாண்டார்கள் என்றும் அக்காலத்தில் அந்நாட்டில் பேரரசர் இல்லை என்றும் அறிந்தோம். கொங்கு நாட்டின் சுற்றுப்புறங்களில் இருந்த சேர, சோழ, பாண்டியர் கொங்குச் சிற்றரசர்களை வென்று அந்நாட்டைத் தங்கள் தங்கள் இராச்சியத்துடன் சேர்த்துக் கொள்ளக் கருதி அவர்கள் தனித்தனியாகப் படையெடுத்து வந்து கொங்கு நாட்டில் போர் செய்தார்கள். கொங்கு நாட்டரசர் தங்கள் நாட்டை எளிதில் விட்டுவிடவில்லை. படையெடுத்துப் போருக்கு வந்த அரசர்களோடு அவர்கள் கடுமையாகப் போர் செய்து எதிர்த்தார்கள். இவ்வாறு பல காலமாகக் கொங்கு நாட்டில் போர்கள் நடந்தன. கடைசியாகச் சேர அரசர் கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் கொங்கு நாட்டின் தென்பகுதியில் சில ஊர்களைக் கைப்பற்றினார்கள். பாலைக்காட்டுக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டில் வந்து சேர அரசர், யானைமலைக் காடுகளை முதலில் கைப்பற்றி னார்கள். யானைமலைப் பிரதேசத்துக்கு அக்காலத்தில் உம்பல் காடு என்று பெயர் இருந்தது (உம்பல்-யானை). அங்குப் பல ஊர்கள் இருந்தன.

சேர மன்னர் கொங்கு நாட்டில் கால் ஊன்றுவதைக் கண்ட சோழ அரசரும் பாண்டிய மன்னரும் சும்மா இருக்கவில்லை. சேரருக்கு எதிராக அவர்கள் போர் செய்து சேரரின் ஆதிக்கத்தைத் தடுத்தார்கள். அவர்கள் கொங்குச் சிற்றரசர்களுக்கு உதவியாக இருந்து, சேர அரசரின் ஆதிக்கத்தை எதிர்த்தார்கள். இதன் காரணமாகச் சேர மன்னர் கொங்கு நாட்டை எளிதில் கைப்பற்ற முடியவில்லை. ஆனால், விடாமுயற்சியோடு போர் செய்து கொங்கு நாட்டில் சிறிதுசிறிதாகச் சேர அரசர் தங்கள் ஆட்சியை நிறுவினார்கள்.

சேர நாட்டு அரசனான உதியஞ் சேரலுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள். அவர்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் (*பதிற்றுப்பத்து* 2ஆம் பத்தின் தலைவன்) பல்யானைச் செல்கெழு குட்டுவனும் (*பதிற்றுப்பத்து* 3ஆம் பத்துத் தலைவன்) ஆவர்.

இளையனாகிய குட்டுவன் பெரிய யானைப் படையை வைத்திருந்தபடியால் அவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்று பெயர் பெற்றான். இவன் உம்பற் காட்டையும் (யானைமலைப் பிரதேசம்) அகப்பா என்னும் கோட்டையையும் வென்றான். உம்பற் காட்டை வென்ற இவன் அங்குத் தன் ஆட்சியை நிறுவினான். நிறுவித் தன்னுடைய உறவினரில் முதியவர்களுக்கு அந்நாட்டைப் பிரித்துக் கொடுத்தான். இதை

உம்பர் காட்டைத் தன்கோல் நிறீஇ
அகப்பா எறிந்து பகல்தீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்து

என்று *பதிற்றுப்பத்து* மூன்றாம் பத்துப் பதிகங் கூறுகின்றது. "முதியரை மதியுறழ் மரபிற் றழீஇ மண்வகுத்தீத்தெனக் கூட்டித் தன் குலத்தில் தனக்கு முதியரை மதியொடொத்த தன் தண்ணிளியால் தழீஇக்கொண்டு அவர்க்குத் தன் நாட்டைப் பகுத்துக் கொடுத்து என உரைக்க" என்பது பழைய உரை.

உம்பற்காடு என்னும் நாட்டை அடக்கி அதனைத் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தது இவனுடைய முக்கியச் செயலாகும். இவனுடைய தமயனான நெடுஞ் சேரலாதன், தன்னைப் பாடிய (இரண்டாம் பத்து) குமட்டூர்க் கண்ணனார்க்கு உம்பற் காட்டில் ஐஞ்ஞூறூர்களைப் பிரம தாயமாகக் கொடுத்தான் (*பதிற்றுப்பத்து* 2ஆம் பத்துப் பதிக்கக் குறிப்பு).

இதனால் உம்பற்காடு அக்காலத்தில் சேர அரசர்களுக்கு உரியதாயிற்று என்பது தெரிகின்றது.

அந்துவஞ்சேரல் இரும்பொறை

உதியஞ்சேரலுடைய தம்பி, அந்துவஞ்சேரல் இரும்பொறை என்பவன். அந்துவஞ்சேரல் இரும்பொறை உதியஞ்சேரலுடைய தாயாதித்தம்பி. இவன் தளராத ஊக்கத்தோடு போர் செய்து தென்கொங்கு நாட்டில் சில நாடுகளைக் கைப்பற்றினான். இதனால், "மடியா உள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த, நெடுநுண் கேள்வி அந்துவன்" என்று கூறப்பட்டான் (7ஆம் பத்துப் பதிகம்).

இவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினபோது இவனுக்கு உதவியாக இருந்தவன் இவனுடைய தமயன் மகனான பல் யானைச் செல்கெழு குட்டுவன். இதனை,

மாகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்

(3ஆம் பத்து 2:15-16)என்பதனால்அறிகிறோம். இவன் காலத்தில் கொங்கு நாட்டில் சேர இராச்சியத்தை அமைப்பதற்குக் கால் இடப்பட்டது என்று கருதலாம். கொங்கு நாட்டை யரசாண்ட பொறையர் அரசர்களில் இவனே முதலாவன் என்று தோன்றுகிறான்.

அந்துவஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டுக் கருவூரை வென்று அதைத் தன்னுடைய தலைநகரமாக்கிக் கொண்டான். அங்கு வேண்மாடம் என்னும் அரண்மனையை அமைத்துக் கொண்டு அங்கிருந்து அரசாண்டான். அப்போது அவன் 'சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரல் இரும்பொறை' என்று பெயர் பெற்றான். நரிவெரூஉத்தலையார் அவனை நேரில் கண்டு பாடினார் (*புறம்* 5). அச்செய்யுளின் அடிக்குறிப்பு, "சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்ட ஞான்று நின் உடம்பு பெறுவாயாகென, அவனைச் சென்று கண்டு தம்முடம்பு பெற்ற நரிவெரூஉத்தலையார் பாடியது" என்று கூறுகிறது.

இந்தக் கொங்கு நாட்டுக் கருவூர் வேறு, சேர நாட்டுக் கடற்கரையிலிருந்த கருவூர் வேறு. அந்துவன் சேரல் இரும்பொறை இந்த ஊரை வென்றபோது இதற்குச் சேர நாட்டுத் தலைநகரமாகிய கருவூரின் பெயரையே சூட்டினான். சேர நாட்டுக் கருவூருக்கு வஞ்சி என்று வேறு ஒரு பெயர் இருந்தது போலவே இந்தக் கொங்கு நாட்டுக் கருவூருக்கும் வஞ்சி என்று வேறு ஒரு பெயர் இருந்தது.[1]

கோப்பெருஞ்சேரல் இரும்பொறை கருவூர் வேண் மாடத்தில், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவருடன் இருந்தபோது, சோழன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி அவ்வூர் வழியாக யானை மேல் வந்தான். அது கண்ட பெருஞ்சேரல் இரும்பொறை, சோழன் தன் மேல் போருக்கு வருகின்றானோ என்று ஐயங்கொண்டான். அப்போது அருகிலிருந்த சோழ நாட்டுப் புலவரான உறையூர் முட மோசியார், சோழன் போருக்கு வரவில்லை என்று கூறி இவனுடைய ஐயத்தை நீக்கினார் (*புறம்* 13). இந்தச் செய்யுளின் அடிக்குறிப்பு "சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு சேரமான்அந்துவஞ் சேரல் இரும்பொறையொடு வேண்மாடத்து மேலிருந்து பாடியது" என்று கூறுகிறது.

அந்துவஞ் சேரல் இரும்பொறையும் கருவூர் ஏறிய ஒள்வாட் பெருஞ்சேரல் இரும்பொறையும் ஒருவரே. இவர்கள் வெவ்வேறு அரசர் என்று கே.ஜி. சேஷ ஐயர் கருதுகிறார்.[2] அவர் கருத்து தவறென்று தோன்றுகிறது.

அந்துவன் பொறையனுடைய அரசியின் பெயர் பொறையன் பெருந்தேவி என்பது. அவள் ஒருதந்தை என்பனின் மகள். இவர்களுக்குப் பிறந்த மகன் செல்வக் கடுங்கோவாழியாதன். இதனை

மடியா வுள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி யந்துவற்கு ஒருதந்தை
யீன்றமகள் பொறையன் பெருந்தேவி யீன்றமகன்
....
செல்வக் கடுங்கோ வாழியாதன்

என்னும் 7ஆம் பத்துப் பதிகத்தினால் அறிகிறோம்.

'இதன் பதிகத்து ஒருதந்தை யென்றது பொறையன் பெருந்தேவியின் பிதாவுடைய பெயர்' என்று பழைய உரை கூறுகிறது. சேர அரசரின் இளையபரம்பரையைச் சேர்ந்த அந்துவன் பொறையன் கொங்கு ராச்சியத்தை அமைத்தான்.

அந்துவன் பொறையன், தன்னுடைய மகனான செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு ஆவிநாட்டுச் சிற்றரசனாகிய வேளாவிக் கோமான் மகளாகிய பதுமன்தேவி என்பவளைத் திருமணஞ் செய்வித்தான். அவனுடைய தாயாதித் தமயனாகிய உதியஞ்சேரலும் தன்னுடைய மகனாகிய (இமயவரம்பன்) நெடுஞ்சேரலாதனுக்கு மேற்படி வேளாவிக் கோமானின் இன்னொரு மகளைத் திருமணஞ் செய்வித்திருந்தான். எனவே, நெடுஞ்சேரலாதனும் செல்வக் கடுங்கோ வாழியாதனும் மணஞ் செய்திருந்த மனைவியர் தமக்கை தங்கையர் என்பது தெரிகின்றது.

அந்துவன் பொறையனுக்கு அந்துவஞ்செள்ளை என்று ஒரு மகள் இருந்தாள் என்று திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி ஊகிக்கிறார்.[3] இவர் கூற்றுக்குச் சான்று இல்லை; வெறும் ஊகமாகக் கூறுகிறார்.

அந்துவஞ்சேரல் இரும்பொறை, வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியுடன் போர்செய்து இறந்துபோனான் என்று திரு. கே.ஜி. சேஷையர் கருதுகிறார். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் அந்துவஞ் சேரலும் ஒருவரே என்று அவர் கருதுகிறார்.[4] ஆனால், அந்துவஞ் சேரலும் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் ஒருவரே என்பதற்கு அவர் சான்று காட்டவில்லை. *புறம்* 62, 63ஆம் செய்யுட்களின் அடிக் குறிப்புகள், "சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப் புறத்துப் பொருது வீழ்ந்தாரைப் பாடியது" என்று கூறுகின்றன. அந்துவஞ் சேரலும் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் ஒருவரே என்பதற்குச்

சான்று இல்லை. சேஷையர் ஊகம் சரியன்று என்று தோன்றுகிறது.

செல்வக் கடுங்கோ வாழியாதன்

மாந்தரன் 1

அந்துவன் பொறையனுக்கும் பொறையன் பெருந்தேவிக்கும் பிறந்த மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன் (செ.க.வா.ஆ.). சிக்கற் பள்ளி என்னும் ஊரில் இறந்தபடியால் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன் என்று இவன் பிற்காலத்தில் பெயர் பெற்றான். செல்வக் கோமான் (7ஆம் பத்து 7:23) என்று பெயர் பெற்ற இவன் போரில் மிக்க வலியுடையவனாக இருந்தது பற்றிக் கடுங்கோ என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். "மடங்கல் வண்ணங்கொண்ட கடுந்திறல், துப்புத்துறை போகிய கொற்றவேந்தே" என்று இவனைக் கபிலர் கூறுவது காண்க (7ஆம் பத்து 2 : 8-9). (திறல்-ஆற்றல், வல்லமை.) 'செல்வக் கோவே சேரலர் மருக' என்று கபிலர் கூறுகிறார் (7ஆம் பத்து 3 : 16). ஆதன் என்பது இவனுக்குரிய பெயர்.

செ.க.வா. ஆதனுக்கு மாந்தரன், மாந்தரஞ்சேரல் என்னும் பெயரும் இருந்தது. இவ்வரசன் காலத்தில் வாழ்ந்தவரும் சேர அரசர் பரம்பரையை நன்கறிந்தவருமான பரணர் இப்பெயரைத் தம்முடைய செய்யுளில் கூறுகிறார். *அகநானூறு* 142ஆம் செய்யுளில் இப்புலவர் இவ்வரசனை 'மாந்தரம் பொறையன் கடுங்கோ' என்று கூறுகிறார். *சிலப்பதிகாரக்* காவியத்திலும் இவன் மாந்தரம் பொறையன் (கட்டுரை காதை, அடி 84) என்று கூறப்படுகிறான். இவ்வரசனுடைய பேரனான இளஞ்சேரல் இரும்பொறையை 'மாந்தரன் மருகன்' (மாந்தரனுடைய பரம்பரையில் வந்தவன்) என்று பெருங்குன்றூர்கிழார் கூறுகிறார்.

போர் செய்வதில் திறலுடைய வீரன் இவன் என்றும் அதுபற்றியே இவன் கடுங்கோ என்னும் சிறப்புப் பெயர் பெற்றான் என்றும் அறிகிறோம். ஆனால், இவன் செய்த போர்களின் விபரந் தெரியவில்லை. சேர அரசர் பரம்பரையில் இளைய வழியைச் சேர்ந்த பொறையர், கொங்கு நாட்டைச் சிறிது சிறிதாக வென்றனர். இவன் தந்தையாகிய அந்துவன் பொறையன் 'மடியா உள்ளத்து மாற்றோர்ப் பிணித்தவன்' என்று கூறப்படுகிறான். அவனைத் தொடர்ந்து கொங்கு இராச்சியத்தை விரிவுபடுத்திய இவ்வரசனும் கொங்கு நாட்டிலிருந்த பல சிற்றரசர்களுடன் போர் செய்து அவர்களுடைய நாட்டைக் கைப்பற்றியிருக்க வேண்டும். இவ்வரசன்மேல் ஏழாம் பத்துப் பாடிய கபிலர் இவ்வரசனைப் போர்க்களத்திலே பாசறையில்

சந்தித்தார். போர்க்களங்களிலே இவனுடைய உடம்பில் பல வெட்டுக் காயங்கள் பட்டிருந்தன என்றும் அந்த விழுப்புண் தழும்புகளை இவன் சந்தனம் பூசி மறைத்திருந்தான் என்றும் கபிலர் கூறுகிறார் ("எஃகா டூனங் கடுப்ப மெய்சிதைந்து, சாந்தெழில் மறைத்த சான்றோர் பெருமகன்"—7ஆம் பத்து, 7 : 17-18). ஆனால், எந்தெந்தப் போர்க்களத்தில் எந்தெந்த அரசருடன் இவன் போர் செய்தான் என்பது தெரியவில்லை. சோழ, பாண்டியர் ஒன்று சேர்ந்து வந்து இவன்மீது போர் செய்தனர் என்றும் அவர்களை இவன் வென்று ஓட்டினான் என்றும் கபிலர் கூறுகிறார்.[5] சேர அரசர் கொங்கு நாட்டுச் சிற்றரசருடன் நாடுபிடிக்கப் போர் செய்தபோதெல்லாம் சோழ பாண்டியர் கொங்கு நாட்டுச் சிற்றரசருடன் சேர்ந்து சேர அரசரை எதிர்த்தார்கள். அவ்வாறு சோழ, பாண்டியர் கொங்குச் சேரரை எதிர்த்த ஒன்றைத்தான் இது கூறுகிறது. செ.க.வா. ஆதன் கொங்கு நாட்டுச் சிற்றரசர்களோடு போர் செய்து வென்று அவர்களுடைய ஊர்களைக் கைக்கொண்டான் என்பது தெரிகின்றது. இவனுடைய கொங்கு இராச்சியம் சிறிதாக இருந்ததைப் பெரியதாக்க வேண்டும் என்று இவன் கருதிப் போர் செய்து வென்று சில நாடுகளை இவன் தன் இராச்சியத்தில் சேர்த்துக்கொண்டான் என்பதைக் கபிலர் கூறுகிறார். சேரலாதனுக்குச் சூரியனை ஒப்புமை கூறுகிறவர் சேரலாதனுக்குச் சூரியன் இணையாக மாட்டான் என்று கூறுகிறார்.[6] பல அரசர்களை வென்று இவன் அவ்வெற்றிகளுக்கு அறிகுறியாக வேள்விகளைச் செய்தான்.

செ.க.வா. ஆதனின் கொங்கு இராச்சியம் கொங்கு நாட்டின் தென்பகுதியில் மட்டும் இருந்தது. இவனுடைய இராச்சியத்தின் வடக்கிலிருந்த கொல்லிக் கூற்றம், தகடூர் முதலிய நாடுகளை இவன் வெல்லவில்லை. அவற்றை வென்று சேர்த்துக் கொண்டவன் இவனுடைய மகனான பெருஞ்சேரல் இரும் பொறையாவான்.

செல்வக் கடுங்கோ வாழி ஆதன், ஆவி நாடு என்றும் வையாவி நாடு என்றும் பெயர் பெற்றிருந்த (இப்போதைய பழநிமலை வட்டாரம்) நாட்டின் சிற்றரசனாகிய வேள்ஆவிக் கோமான் பதுமன் என்பவனுடைய பெண்களில் ஒருத்தியைத் திருமணஞ் செய்துகொண்டு வாழ்ந்தான். இவ்வரசியின் பெயர் வேள்ஆவிக்கோமான் பதுமன் தேவி என்பது (8ஆம் பத்து, பதிகம் அடி 1-2). இந்த அரசியின் தமக்கையை இவனுடைய தாயாதித் தமயனான சேரலாதன் (இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்) மணஞ்செய்திருந்தான். அந்த அரசிக்கும் 'வேள்ஆவிக் கோமான் பதுமன் தேவி' என்று பெயர் இருந்தது (4ஆம் பத்து,

பதிகம் 1-3). எனவே, செ.க.வா ஆதனும் நெடுஞ்சேரலாதனும் சமகாலத்தில் முறையே கொங்கு நாட்டையும் சேர நாட்டையும் அரசாண்டனர் என்று தெரிகின்றது. இவர்களுக்குப் பெண் கொடுத்த மாமனாராகிய வேள்ஆவிக்கோமான் பதுமன், பொதினி என்னும் வையாவி நாட்டையாண்ட சிற்றரசன் என்று கூறினோம். அந்த வையாவி நாடு அக்காலத்தில் கொங்கு நாட்டின் தென்கோடியில் இருந்தது. இக்காலத்தில் அது பழனி என்னும் பெயருடன் பாண்டி நாட்டு மதுரை மாவட்டத்து மதுரைத் தாலுக்காவில் சேர்ந்திருக்கிறது.

(மூத்தவழி) **சேரநாட்டுச் சேரர்**		(இளையவழி) **கொங்கு நாட்டுப் பொறையர்**
உதியஞ்சேரல் = வேண்மாள் நல்லினி		அந்துவன் பொறையன் = பொறையன் பெருந்தேவி
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் = வேளாவிகோமான் பதுமன்தேவி I	பல்யானைச் செல்கெழுகுட்டுவன்	செல்வக்கடுங்கோ வாழியாதன் = வேளாவிகோமான் பதுமன்தேவி II

செ.க.வா. ஆதனுக்கும் அவனுடைய அரசியாகிய பதுமன் தேவிக்கும் இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர் என்று அறிகிறோம்.[7] இவ்விரு புதல்வர்களில் ஒருவன் பெருஞ்சேரல் இரும்பொறை. (பிற்காலத்தில் தகடூரை வென்று புகழ்பெற்றவன். 8ஆம் பத்துப் பதிகம்). இளைய மகன் பெயர் குட்டுவன் இரும்பொறை என்பது.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையும் குட்டுவன் இரும்பொறையும் ஒருவரே என்று சிவராச பிள்ளை கருதுகிறார்.[8] இவர் கருதுவது தவறு. செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கு இரண்டு மக்கள் இருந்ததையறியாமல், ஒரே மகன் இருந்தான் என்று கருதிக்கொண்டு இவ்வாறு எழுதினார் என்று தோன்றுகிறது. கே.ஜி. சேஷ ஐயரும் இதே தவற்றைச் செய்துள்ளார்.[9] நானும் சில ஆண்டுகளுக்கு முன்பு இதே தவற்றைச் செய்தேன். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையும் குட்டுவன் இரும்பொறையும் ஒருவரே என்று கருதினேன்.[10] அது தவறு என்பதை இப்போது அறிந்து திருத்திக்கொண்டேன். செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குத் துணைப் புதல்வர் (இரண்டு பிள்ளைகள்) இருந்தனர் என்பது திட்டமாகத் தெரிகிறது.

செ.க.வா. ஆதன் மேல் *பதிற்றுபத்து* 7ஆம் பத்தைப் பாடியவர் கபிலர். பறம்பு நாட்டின் அரசனாக இருந்த கொடை

வள்ளல் என்று புகழ்பெற்ற பாரி மன்னனின் புலவராக இருந்த கபிலர், அம்மன்னன் இறந்த பிறகு கொங்கு நாட்டுக்கு வந்து செ.க.வா. ஆதனைப் பாசறையில் கண்டு அவன் மீது 7ஆம் பத்துப் பாடினார்.

செ.க.வா. ஆதன் இருபத்தைந்துயாண்டு அரசாண்டான் என்று ஏழாம் பத்துப் பதிகத்தின் அடிக்குறிப்பு கூறுகிறது.

இவ்வரசன் திருமாலை வழிபட்டான். அந்தத் திருமாலின் கோயிலுக்கு ஒகந்தூர் என்னும் ஊரைத் தானங்கொடுத்தான் ("மாயவண்ணனை மனனுறப் பெற்றவற்கு, ஒத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்து" 7ஆம் பத்துப் பதிகம் அடி 8-9). இவன் தன்னுடைய புரோகிதனைப் பார்க்கிலும் அறநெறி யறிந்தவனாக இருந்தான் என்று 7ஆம் பத்துப் பதிகத்தினால் அறிகிறோம்.[11]

செ.க.வா. ஆதன் சில யாகங்களை (வேள்விகளைச் செய்து பிராமணருக்குத் தானங் கொடுத்தான். இவன் வேள்வியில் பிராமணருக்குப் பொன்னை நீர்வார்த்துக் கொடுத்தபோது அந்நீர் பாய்ந்து தரையைச் சேறாக்கியது என்று கூறப்படுகிறது. இதனால் இவனுடைய தானம் மிகப் பெரிதாக இருந்தது என்பது தெரிகின்றது.[12]

புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து இவ்வரசன் போற்றினான். இசைவாணர்களையும் இவன் ஆதரித்தான். 'பாணர் புரவல, பரிசிலர் வெருக்கை' என்று இவன் புகழப்படுகிறான் (7ஆம் பத்து 5 : 11).

இவ்வரசனிடம் பரிசில் பெறச் சென்ற குண்டுகண் பாலியாதனார் என்னும் புலவருக்கு இவன் பெருஞ்செல்வம் வழங்கினான். யானை, குதிரை, ஆட்டுமந்தை, மாட்டுமந்தைகள், மனை, மனையைச் சார்ந்து வயல்கள், வயல்களில் வேலை செய்யக் களமர் (உழவர்) இவைகளையெல்லாம் இவ்வரசன் இப்புலவருக்கு வழங்கினான். இவைகளையெல்லாங் கண்ட இந்தப் புலவர் இது கனவா நனவா என்று அறியாமல் திகைத்துப் போனதாக அவரே கூறுகிறார் (*புறம்* 387).

வயிரியரை (இசைவாணரை) இவன் ஆதரித்தான். தான் ஆதரித்ததல்லாமல், தான் இல்லாதபோது அவர்கள் அரண்மனை வாயிலில் வந்தால் தன்னைக் கேளாமலே அவர்களுக்குப் பொருளையும் குதிரைகளையும் வண்டிகளையும் கொடுத்தனுப்பும்படி தன்னுடைய அரண்மனை அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தான்.[13] இவனுடைய கொடைச் சிறப்பைக் கபிலர் நன்றாக விளக்கிக் கூறுகிறார். 'என்னைப் புரந்த பாரிவள்ளல் இறந்து போனபடியால் உம்மிடம் பரிசுபெற உம்மை நாடி வந்தேன் என்று நினைக்க வேண்டாம். செல்வக் கடுங்கோ வாழியாதன் பெரிய வள்ளல், இரவலரை ஆதரிக்கும்

வண்மையன் என்று பலருங் கூறக்கேட்டு நேரில் கண்டு மகிழவந்தேன்' என்று கூறுகிறார்.

புலந்த சாந்தின் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மாவன் பாரி
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன் அளிக்கென
இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்
ஈத்த திரங்கான் ஈத்தொறும் மகிழான்
ஈத்தொறும் மாவள்ளியன் என நுவலுநின்
நல்லிசை தர வந்திசின் (7ஆம் பத்து 1:7-14)

இவன் மீது ஏழாம் பத்தைப் பாடிய கபிலருக்கு இவ்வரசன் பெரும் பொருளைப் பரிசாகக் கொடுத்தான். கைச் செலவுக் கென்று நூறாயிரங்காணம் (ஒரு லட்சம் பொற்காசு) கொடுத்து, கொங்கு நாட்டிலுள்ள நன்றா என்னும் மலைமேல் ஏறி நின்று அங்கிருந்து காணப்பட்ட நாடுகளின் வருவாயை அவருக்குக் கொடுத்தான்.[14]

செ.க.வா. ஆதனுடைய பேரனான இளஞ்சேரல் இரும் பொறையை ஒன்பதாம் பத்தில் பாடிய பெருங்குன்றூர்கிழார், செ.க.வா.ஆதன் நாடுகாண் நெடுவரை மேல் இருந்து கபிலருக்குக் காட்டிக் கொடுத்த நாடுகளைப் பற்றித் தம்முடைய செய்யுளில் குறிப்பிட்டுள்ளார்.

கோடுபல விரிந்த நாடுகாண் நெடுவரைச்
சூடா நறவின் நாண்மகிழ் இருக்கை
அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவின் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே (9ஆம் பத்து 5 : 7-13)

பொறையன் மரபைச் சேர்ந்த இந்தச் செல்வக் கடுங்கோவுக்கு மாந்தரங் கடுங்கோ என்ற பெயரும் வழங்கி வந்தது என்பது தெரிகிறது. இவன் காலத்தவராகிய பரணர் தம்முடைய செய்யுள் ஒன்றில் இப்பெயரையும் இவனுடைய வள்ளன்மையையுங் கூறுகிறார்.

இலவ மலரன்ன அஞ்செந் நாவில்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற

குறையோர் கொள்கலம் போல நன்றும்
உவவினி வாழிய நெஞ்சே (அகம் 142:1-7)

இவ்வரசனைப் பரணர் மாந்தரன் என்று கூறியது போலவே கபிலரும் இவனை மாந்தரன் என்று கூறியுள்ளார். இவ்வரசனுடைய பேரனான இளஞ்சேரல் இரும்பொறையை 9ஆம் பத்தில் பாடிய பெருங்குன்றூர்கிழார் அவனை மாந்தரனுடைய மரபில் வந்தவன் என்று கூறுகிறார் (9ஆம் பத்து 10:9-13). மாந்தரன் பெரும் புகழ் படைத்து அறம் வாழ்த்த நன்றாக அரசாண்டான் என்று கூறுகிறார்.

வாள்வலி யுறுத்துச் செம்மை பூண்டு
அறன் வாழ்த்த நற்காண்ட
விறன் மாந்தரன் விறன் மருக (9ஆம் பத்து 10 : 11-13)

செ.க.வா. ஆதனின் சமகாலத்தில் இருந்த பாண்டிய அரசன் ஆரியப் படை கடந்த, அரசுகட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியன். இவர்கள் காலத்துச் சோழ அரசன் யார் என்பது தெரியவில்லை. கொங்கு நாட்டை யரசாண்ட இவன் காலத்துச் சேர அரசர் இவனுடைய தாயாதித் தமயன்மாராகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் (இ.வ.நெ. சேரலாதன்) அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் ஆவர். இ.வ.நெ. சேரலாதன், வேளாவிக் கோமான் மகளைத் திருமணம் செய்திருந்தான். அவளுடைய தங்கையை (வேளாவிக் கோமான் பதுமனுடைய இளைய மகளை) செ.க.வா. ஆதன் மணஞ் செய்திருந்தான் என்பதை முன்னமே கூறியுள்ளோம். எனவே, இவர்கள் இருவரும் சமகாலத்திலிருந்தவர் என்பது ஐயமில்லாமல் தெளிவாகத் தெரிகின்றது. இரண்டாம் பத்தின் தலைவனான இ.வ.நெ. சேரலாதனும், மூன்றாம் பத்தின் தலைவனான பல்யானை செல்கெழுகுட்டுவனும் ஏழாம் பத்துத் தலைவனான செ.க.வா. ஆதனும் சமகாலத்திலிருந்த தாயாதிச் சகோதரர்கள்.

இ.வ.நெ. சேரலாதன் 58 ஆண்டு அரசாண்டான். இவன் தம்பி பல்யானைச் செல்செழுகுட்டுவன் 25 ஆண்டு அரசாண்டான். மாந்தரன் கடுங்கோவாகிய செ.க.வா ஆதன் 25 ஆண்டு அரசாண்டான். ஆகையால் இவன், இ.வ.நெ. சேரலாதன் காலத்திலேயே இறந்து போனான் என்பதும், இவனுக்குப் பிறகு இவன் மகனான பெருஞ்சேரலிரும்பொறை கொங்கு நாட்டை அரசாண்டான் என்பதும் தெரிகின்றன. அதாவது, இ.வ.நெ. சேரலாதன் சேர நாட்டை ஆட்சிச் செய்த காலத்திலேயே கொங்கு நாட்டைச் செல்வக்கடுங்கோ வாழியாதனும் அவன் மூத்த மகனான பெருஞ்சேரல் இரும்பொறையும் (தகடூரை எறித்தவன்) அரசாண்டார்கள்.

இவர்கள் மூவரும் (இ.வ.நெ. சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், செ.க.வா. ஆதன்) சமகாலத்தில் இருந்தவர் என்பதைச் *சிலப்பதிகாரத்திலிருந்தும்* அறிகிறோம். சோழ நாட்டிலிருந்த பராசரன் என்னும் பிராமணன் வேதம் ஓதுவதில் வல்லவனாக இருந்தான். அவன், சமகாலத்தில் சேர நாட்டையும் கொங்கு நாட்டையும் அரசாண்ட இந்த மூன்று அரசர் களிடத்தில் போய் வேதம் ஓதிப் பரிசு பெற்றான். பராசரன் முதலில், 'வண் தமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த, திண்திறல் நெடுவேல் சேரலனை'க் (பல்யானைச் செல்கெழு குட்டுவனை) காணச் சேர நாட்டுக்குச் சென்று அவனுடைய அவையில் பார்ப்பனருடன் வேதம் ஓதி அவர்களை வென்று 'பார்ப்பனவாகை' சூடினான். அப்போது அவ்வரசன் இவனுக்குப் பல பரிசுகளை வழங்கினான். பரிசுகளைப் பெற்ற பராசரன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனிடத்திலும் சென்று பரிசுகளைப் பெற்றான். பிறகு, கொங்கு நாட்டுக்கு வந்து மாந்தரஞ் சேரலாகிய செ.க.வா. ஆதனிடத்திலும் பரிசு பெற்றான். இவன் பெற்ற பரிசுகளை மூட்டை கட்டிக்கொண்டு தன்னுடைய ஊருக்குத் திரும்பி வருகிற வழியில் பாண்டி நாட்டுத் தண்கால் என்னும் ஊரில் அரசமர மன்றத்தில் தங்கி இளைப்பாறினான். தங்கியிருந்தபோது தனக்குப் பரிசுகளை வழங்கிய இம்மூன்று மன்னர்களையும் அவன் வாழ்த்தினான்.

காவல் வெண்குடை
விளைந்துமுதிர் கொற்றத்து விறலோன் வாழி
கடற்கடம் பெறிந்த காவலன் வாழி
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் வாழி
பூந்தன் பொருநைப் பொறையன் வாழி
மாந்தரஞ்சேரல் மன்னவன் வாழ்க

(*சிலம்பு*, கட்டுரை காதை 79-84)

என்று வாழ்த்தினான்.

இதில் முதல் இரண்டு அடிகள் பல்யானைச் செல்கெழுகுட்டுவனையும் மூன்றாம் நான்காம் அடிகள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும், ஐந்தாம் ஆறாம் அடிகள் மாந்தரன் கடுங்கோ ஆகிய செ.க.வா. ஆதனையுங் குறிப்பிடுகின்றன. இம்மூன்று அரசர்களிடத்திலும் பராசரன் பரிசுகளைப் பெற்றபடியால் இம்மூவரையும் வாழ்த்தினான். இதனாலும், இம்மூவரும் சமகாலத்து அரசர்கள் என்பது உறுதியாகின்றது. பராசரன் பாண்டி நாட்டில் தண்காலில் தங்கிய காலத்தில் பாண்டி நாட்டை யரசாண்டவன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன். கொற்கையில் இளவரசனாக இருந்தவன் வெற்றிவேற் செழியன்.

செல்வக் கடுங்கோ வாழியாதன் ஏறத்தாழ கி.பி. 112 முதல் 137 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

பெருஞ்சேரல் இரும்பொறை

செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குப் பிறகு அவனுடைய மூத்த மகனான பெருஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டை யரசாண்டான். இவன், தன் இராச்சியத்தில் அடங்காமல் சுதந்தரமாக இருந்த கொங்கு அரசர்களை வென்று அவர்களின் நாடுகளைத் தன்னுடைய இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டான். இவன் 'கொடித் தேர்ப் பொறையன்', 'சினப்போர்ப் பொறையன்', 'பொலந்தேர் யானை இயல்தேர்ப் பொறையன்' என்று கூறப்படுகிறான். இவன் 'புண்ணுடை எறுழ்த்தோள்' உடையவன். அதாவது, எப்பொழுதும் போர் செய்து அதனால் ஏற்பட்ட புண் ஆறாத வலிமையுடைய தோள்களை யுடையவன். தகடூர் நாட்டை வென்றபடியால் இவன், 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்று பெயர் பெற்றான். இவன் வென்ற போர்களில் மூன்று போர்கள் முக்கியமானவை. அவை காமூர்ப் போர், கொல்லிப் போர், தகடூர்ப் போர் என்பவை.

காமூர்ப் போர்

கொங்கு நாட்டில் காமூர் என்னும் ஊர் இருந்தது. அதன் அரசன் கழுவுள் என்பவன். முல்லை நிலமாகிய காமூரில் இடையர்கள் அதிகமாக இருந்தார்கள். அவர்களின் தலைவனாகிய கழுவுள், பெருஞ்சேரலிரும்பொறைக்கு அடங்காமல் சுதந்தரமாக அரசாண்டான். பெருஞ்சேரல் இரும்பொறை காமூரை வெல்ல எண்ணிக் காமூரின் மேல் போருக்குச் சென்றான். காமூர் பலமான கோட்டையுடையதாக ஆழமான அகழியையும் பலமான மதிற்சுவர்களையுங் கொண்டிருந்தது. பெருஞ்சேரல் இரும்பொறை கழுவுளுடன் போர் செய்து காமூரை வென்றான். கழுவுள் தோற்றுப் பெருஞ்சேரலுக்கு அடங்கினான்.[15]

காமூர் அரசனாகிய கழுவுள் எளிதில் பணியவில்லை. பெருஞ்சேரல் இரும்பொறைக்குச் சார்பாகப் பதினான்கு வேள் அரசர் போர் செய்து காமூரை வென்றனர். இந்த விபரத்தைப் பரணர் கூறுகிறார்.[16] அந்தப் பதினான்கு வேளிரின் பெயர்கள் தெரியவில்லை.

கொல்லிப் போர்

பெருஞ்சேரலிரும்பொறை செய்து வென்ற இன்னொரு பெரிய போர் கொல்லிப் பொர். கொல்லி மலைகளும் கொல்லி

நாடும் கொல்லிக் கூற்றம் என்று பெயர் பெற்றிருந்தன. அதை ஓரி என்னும் அரசன் சுதந்தரமாக அரசாண்டு வந்தான். ஓரி, புலவர்களை ஆதரித்த வள்ளல். பெருஞ்சேரல் இரும்பொறை ஓரியுடன் போர் செய்து வென்று அந்த நாட்டைத் தன்னுடைய இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டான், இந்தப் போரின் விபரத்தைச் சங்கப் புலவர்களின் செய்யுள்களிலிருந்தும் அறிகிறோம்.

பெருஞ்சேரல் இரும்பொறை ஓரியின் கொல்லி நாட்டின் மேல் நேரே படையெடுத்துச் செல்லவில்லை. அவன், மலையமான் திருமுடிக்காரியைக் கொண்டு ஓரியை வென்று கொல்லி நாட்டைத் தன் இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டான். கோவலூர் மன்னர்களான மலையமான் அரச பரம்பரையினர் சேர, சோழ, பாண்டியர்களில் யாரேனும் விரும்பினால், அவர்களுக்குச் சேனாபதியாக இருந்து போர் செய்வது வழக்கம். மலையமான் திருமுடிக்காரி, பெருஞ்சேரல் இரும்பொறைக்காக ஓரியுடன் போர் செய்து அவனைப் போரில் கொன்று கொல்லி நாட்டைப் (கொல்லிக் கூற்றத்தை) பெருஞ்சேரலிரும் பொறைக்குக் கொடுத்தான். கபிலர், பரணர் முதலான புலவர்கள் இச்செய்தியைக் கூறுகின்றனர்.

ஓரியின் குதிரைக்கு ஓரி என்றும், காரியின் (மலையமான் திருமுடிக்காரியின்) குதிரைக்கு காரி என்றும் பெயர். இவ்விருவரும் தத்தம் குதிரை மேல் அமர்ந்து போர் செய்தனர் என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் கூறுகிறார் ("காரிக் குதிரை காரியொடு மலைந்த, ஓரிக்குதிரை ஓரியும்"— *சிறுபாண்.* 110-111). இந்தப் போரில் ஓரி இறந்து போனான். வெற்றி பெற்ற காரி, ஓரியின் ஊரில் புகுந்தான்.[17] கல்லாடனார் இதை இன்னும் தெளிவாக விளக்கிக் கூறுகிறார். முள்ளூர் மன்னனாகிய காரி ஓரியைப் போரில் கொன்று கொல்லி நாட்டை வென்று அதைச் சேரலனுக்குக் கொடுத்தான் என்று கூறுகிறார்.[18] இங்குச் சேரலன் என்பவன் பெருஞ்சேரல் இரும்பொறையாவான்.

இப்போர் பரணரின் காலத்தில் நடந்தது. சேரன் செங்குட்டுவனை 5ஆம் பத்தில் பாடிய பரணர் இப்போர் நடந்த காலத்தில் இருந்தவர். அவர் ஓரியின் கொல்லியைப் பாடினார்.[19] அது பொறையனுக்கு (பெருஞ்சேரல் இரும்பொறைக்கு) உரியதென்று கூறுகிறார். இதனால், பரணர் காலத்திலேயே ஓரிக் குரியதாக இருந்த கொல்லிக் கூற்றம் பெருஞ்சேரலிரும் பொறைக்கு உரியதாயிற்று என்பது தெரிகிறது.

8ஆம் பத்துப் பதிகம், பெருஞ்சேரலிரும்பொறை 'கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசை' போர் வென்றான் என்று கூறுகிறது. இதற்குப் பழைய உரை இவ்வாறு விளக்கங் கூறுகிறது: "இதன்

பதிகத்துக் கொல்லிக் கூற்றமென்றது, கொல்லி மலையைச் சூழ்ந்த மலைகளையுடைய நாட்டினை. நீர்கூர்மீமிசை யென்றது அந்நாட்டு நீர்மிக்க மலையின் உச்சியை."

தகடூர்ப் போர்

கொல்லிக் கூற்றத்தைக் கைப்பற்றின பிறகு பெருஞ்சேர லிரும்பொறை தகடூர் அதிகமான் மேல் படையெடுத்துச் சென்று தகடூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். அப்பொழுது பாண்டியனும் சோழனும் அதிகமானுக்கு உதவியாகச் சேனைகளை யுதவினார்கள். தகடூர்ப் போர் நிலைச் செருவாகப் பல காலம் நடந்தது. பெருஞ்சேரலிரும்பொறைக்கு அவனைச் சார்ந்த சிற்றரசர் பலர் துணை நின்றார்கள். கொல்லி நாட்டை வென்ற மலையமான் திருமுடிக்காரி இந்தப் போரிலும் பெருஞ்சேரலிரும்பொறையின் பக்கம் இருந்து போர் செய்தான். தகடூர்க் கோட்டை பலம் பொருந்தியதாக இருந்தபடியாலும் அதன் அரசனாகிய அதிகமான் நெடுமான் அஞ்சியும் அவன் மகனான பொகுட்டெழினியும் போரில் புறங்கொடா வீரர்களாக இருந்தபடியாலும் அதை எளிதில் வெல்ல முடிய வில்லை. அதிகமானுடைய சேனைத்தலைவன் பெரும்பாக்கன் என்பவன். தகடூர்ப் போர்க்களத்தை நேரில் கண்ட புலவர்கள் அரிசில்கிழார், பொன்முடியார் முதலியவர்கள். கடைசியில் தகடூரைப் பெருஞ்சேரல் இரும்பொறை வென்றான். அந்த வெற்றியை அரிசில்கிழார் அவன்மேல் 8ஆம் பத்துப் பாடிச் சிறப்பித்தார்.[20]

தகடூர்ப் போரைப் பற்றித் *தகடூர் யாத்திரை* என்னும் நூல் இருந்தது. அது சென்ற 19ஆம் நூற்றாண்டில் மறைந்துவிட்டது.[21]

பெருஞ்சேரலிரும்பொறை தன் ஆட்சிக் காலத்தில் சில நாடுகளைக் கைப்பற்றித் தன்னுடைய இராச்சியத்தைப் பெரிதாக் கினான். அவன் தன்னை 8ஆம் பத்தில் பாடிய அரிசில்கிழாரைத் தன்னுடைய அமைச்சராக்கினான் (8ஆம் பத்துப் பதிகச் செய்யுள்).

வெற்றிகளைப் பெற்ற பெருஞ்சேரலிரும்பொறை தன்னுடைய குலதெய்வமாகிய அயிரைமலைக் கொற்றவையை வழிபட்டு வணங்கினாள். தான் வென்ற பகையரசரின் யானைகளுடைய தந்தங்களை அறுத்து அந்தத் தந்தங்களினால் கட்டில் (ஆசனம்) செய்து அதன்மேல் கொற்றவையை இருத்தித் தன்னுடைய வெற்றி வாளில் படிந்துள்ள இரத்தக் கறையைக் கழுவினான். இவ்வாறு வெற்றிவிழாக் கொண்டாடுவது அக்காலத்து வழக்கம். இச்செய்தியை இவனை 8ஆம் பத்தில் பாடியவரும் இவனுடைய அமைச்சருமாகிய அரிசில்கிழார் கூறுகிறார்.[22]

இவ்வரசன் தெய்வ பக்தியுள்ளவன், அறநெறியறிந்தவன். தன்னுடைய வயது சென்ற புரோகிதனுக்கு அறநெறி கூறி அவனைத் தவஞ் செய்யக் காட்டுக்கு அனுப்பினான்.[23]

பெருஞ்சேரலிரும்பொறைக்கு மக்கட் பேறில்லாமலிருந்து பிறகு இவனும் இவனுடைய அரசியும் நோன்பிருந்து விரதம் நோற்று வேள்வி செய்து ஒரு மகனைப் பெற்றார்கள் என்று 8ஆம் பத்து 4ஆம் செய்யுள் கூறுகிறது.[24] இதில், இவனுடைய மகன் பெயர் கூறப்படவில்லை. அவன் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை என்று கருதப்படுகிறான்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை பதினேழு ஆண்டு அரசாண்டான் என்று 8ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. இவன் ஏறத்தாழ கி.பி. 137 முதல் 154 வரையில் அரசாண்டான் என்று கருதலாம். இவன், சேரன் செங்குட்டுவன் சேர நாட்டை யரசாண்ட காலத்தில் இருந்தவன். அவனுடைய தாயாதித் தமயன் முறையினன். இவன் காலத்தில் பாண்டி நாட்டை யரசாண்டவன் ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன். சேரன் செங்குட்டுவனுடைய ஆட்சிக் காலத்திலேயே பெருஞ்சேரலிரும்பொறை இறந்து போனான்.

பெருஞ்சேரல் இரும்பொறை, தன்மேல் 8ஆம் பத்துப் பாடிய அரிசில்கிழாருக்கு அமைச்சர் பதவியைக் கொடுத்தான். (அரிசில் கிழார் காண்க.) இவன், மோசிகீரனார் என்னும் புலவரைப் போற்றினான். அப்புலவர் இவனுடைய அரண்மனையில் சென்று இவனைக் கண்டார். கண்ட பிறகு, அரண்மனையில் இருந்த முரசு வைக்கும் கட்டிலின் மேல் படுத்து உறங்கிவிட்டார். முரசு கட்டில் புனிதமாகக் கருதப்படுவது. அவர் அதன் மேல் படுத்து உறங்குவதைத் தற்செயலாகக் கண்ட அரசன், அரண்மனைச் சேவகர் இதனைக் கண்டால் புலவருக்குத் துன்பஞ் செய்வார்கள் என்று கருதி, அவ்வாறு நேரிடாதபடி தான் அவர் அருகில் நின்று கவரியினால் வீசிக்கொண்டிருந்தான். விழித்துக்கொண்ட புலவர், நடந்ததை யறிந்து தம்முடைய செயலுக்குப் பெரிதும் வருந்தினார். அரசனுடைய பெருந்தன்மையைப் புகழ்ந்து பாடினார் (*புறம்* 50). அச்செய்யுளின் அடிக்குறிப்பு, "சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை முரசுகட்டில் அறியாதேறிய மோசிகீரனாரைத் தவறு செய்யாது அவன் துயிலெழுந்துணையும் கவரிகொண்டு வீசியானைப் பாடியது" என்று கூறுகிறது.

குட்டுவன் இரும்பொறை

குட்டுவன் இரும்பொறை, பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பி. செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கும் வேளாவிக் கோமான்

பதுமன் தேவிக்கும் இரண்டு பிள்ளைகள் (துணைப் புதல்வர்) இருந்தார்கள் என்றும் அவ்விரண்டு பிள்ளைகளில் மூத்தவன் பெயர் பெருஞ்சேரல் இரும்பொறை என்றும் இளைய பிள்ளையின் பெயர் குட்டுவன் இரும்பொறை என்றும் அறிந்தோம். குட்டுவன் இரும்பொறை இளவரசனாக இருந்தபோதே இறந்து போனான். இவன் ஏதோ ஒரு போரில் இறந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இவனுக்கு ஒரு மகன் இருந்தான் என்பதும் அவன் பெயர் இளஞ்சேரல் இரும்பொறை என்பதும் *பதிற்றுப்பத்து* ஒன்பதாம் பத்தின் பதிகத்தினால் அறிகிறோம்.

குட்டுவன் இரும்பொறை, அந்துவஞ்செள்ளை (மையூர் கிழான் மகள்) என்பவளை மணஞ் செய்திருந்தான் என்றும் இவர்களுக்குப் பிறந்த மகன் இளஞ்சேரல் இரும்பொறை என்றும் 9ஆம் பத்துப் பதிகம் கூறுகிறது. *பதிற்றுப்பத்துக்* கூறுகிறபடி இவர்களின் வழிமுறை இவ்வாறு அமைகிறது:

அந்துவன் பொறையன்
(=பொறையன் பெருந்தேவி)

|

செல்வக் கடுங்கோ வாழியாதன்
(=வேளாவிக் கோமான் பதுமன் தேவி)

பெருஞ்சேரல் இரும்பொறை (தகடூரை எறிந்தவன்)	குட்டுவன் இரும்பொறை (=அந்துவஞ்செள்ளை)
|	|
யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை	இளஞ்சேரல் இரும்பொறை

செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கு இரண்டு ஆண் மக்கள் (துணைப் புதல்வர்) இருந்தார்கள் என்று 7ஆம் பத்துத் தெளிவாகக் கூறுகின்றது. இதைச் சரித்திர அறிஞர்கள் கவனிக்கவில்லை. செல்வக் கடுங்கோவுக்கு அந்துவஞ்செள்ளை என்னும் ஒரு சகோதரி இருந்தாள் என்று நீலகண்ட சாஸ்திரி ஊகமாக எழுதியுள்ளார். இதற்குச் சான்று ஒன்றும் இவர் காட்டவில்லை. இவ்வாறு கற்பனையாகக் கற்பிக்கிற இவர் அந்துவஞ் செள்ளையை யாரோ ஒரு குட்டுவன் இரும்பொறை என்னும் சேர அரசன் மணஞ் செய்துகொண்டான் என்று மேலும் கற்பனை செய்கிறார். குட்டுவன் இரும்பொறை, செல்வக் கடுங்கோவின் இளைய மகன் என்பதற்கு மேலே சான்று

காட்டியுள்ளோம். இந்த அகச் சான்றை யறியாமல், இல்லாத ஒன்றைக் கற்பனை செய்துகொண்ட நீலகண்ட சாஸ்திரி, அந்துவஞ்செள்ளை மையூர்கிழானின் மகள் என்று (9ஆம் பத்துப் பதிகம்) கூறுகிறபடியால், தான் தவறாக யூகித்துக் கொண்ட தவற்றைச் சரிப்படுத்துவதற்காக, மையூர்கிழான் என்பது அந்துவன் பொறையனுடைய இன்னொரு பெயர் என்று இன்னொரு தவற்றைச் செய்துள்ளார். இதுவும் இவருடைய கற்பனையே. பொறையனாகிய சேர அரசன் எப்படி கிழானாக இருக்க முடியும்? நீலகண்ட சாஸ்திரி இவ்வாறெல்லாம் தன் மனம் போனபடி கற்பனைகளைச் செய்துள்ளார்.[25]

அந்துவன், அந்துவஞ்செள்ளை என்பதில் 'அந்துவன்' என்னும் பெயர் ஒற்றுமையைக் கொண்டு இவர் இப்படியெல்லாம் ஊகஞ் செய்கிறார். இதற்குக் காரணம் செல்வக் கடுங்கோ வழியாதனுக்கு இரண்டு ஆண் மக்கள் இருந்தார்கள் என்பதை இவர் அறியாததுதான்.

பெருஞ்சேரல் இரும்பொறையும் குட்டுவன் இரும் பொறையும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதையறிந்தோம். குட்டுவன் இரும்பொறை அந்துவஞ்செள்ளையை (மையூர் கிழான் மகளை) மணஞ் செய்து இருந்ததையும் இவர்களுக்கு இளஞ்சேரல் இரும்பொறை என்னும் மகன் இருந்ததையும் (9ஆம் பத்துப் பதிகம்) அறிந்தோம். பெருஞ்சேரல் இரும்பொறை, தகடூர்ப் போரைச் செய்த காலத்தில் அவன் தம்பியாகிய குட்டுவன் இரும்பொறை உயிர் வாழ்ந்திருந்தான். இதைத் தகடூர் யாத்திரைச் செய்யுள்களினால் குறிப்பாக அறிகிறோம்.

> சால வெகுளிப் பொறையகேள் நும்பியைச்
> சாலுந் துணையுங் கழறிச் சிறியதோர்
> கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா வதுகண்டாய்
> நூல்கண்டார் கண்ட நெறி
>
> (புறத்திரட்டு 776, தகடூர் யாத்திரை)

இந்தச் செய்யுளில் பொறையன் என்பது பெருஞ்சேரல் இரும்பொறையை. நும்பி என்றது அவனுடைய தம்பியாகிய குட்டுவன் இரும்பொறையை. இதனால், தகடூர்ப் போர் நிகழ்ந்த காலத்தில் எக்காரணம் பற்றியோ இவ்விருவருக்கும் பிணக்கு ஏற்பட்டிருந்தது என்பதும் அப்பிணக்கைப் புலவர் தீர்க்க முயன்றனர் என்பதும் தெரிகின்றன.

பெருஞ்சேரல் இரும்பொறைக்குக் குட்டுவன் இரும்பொறை என்று ஒரு தம்பி இருந்ததையறியாதவர், தகடூர் மன்னனாகிய அதிகமான் நெடுமான் அஞ்சி, பெருஞ்சேரல் இரும்பொறைக்குத் தம்பி முறையுள்ளவன் என்றும் இச்செய்யுளில் 'நும்பி' என்றது

அதிகமான் நெடுமான் அஞ்சியைக் குறிக்கிறது என்றும் கூறுவர். அதிகமான் நெடுமான் அஞ்சிக்கும் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் யாதொரு உறவும் இல்லை. சேர மன்னருக்கும் தகடூர் மன்னருக்கும் அக்காலத்தில் உறவு முறை கிடையாது. *புறத்திரட்டுப்* பதிப்பாசிரியராகிய வையாபுரிப் பிள்ளை அவர்கள், இச்செய்யுளில் வருகிற நும்பி என்பதைச் சுட்டிக்காட்டி இதற்கு இவ்வாறு விளக்கம் எழுதுகிறார்.

"புறத்திரட்டில் வரும் செய்யுளொன்றால் (புறத். 776) சேரமானுக்கு அதிகமான் என்பவன் தம்பி முறையினன் என்பது பெறப்படுகின்றது. ஆகவே தகடூர் யாத்திரைச் சரித்திரம் பாரதம் போன்று தாயத்தாரிடை நிகழ்ந்த போரின் வரலாற்றினை விளங்கக் கூறுவதாம்."[26]

பெருஞ்சேரல் இரும்பொறைக்குக் குட்டுவன் இரும்பொறை என்னும் உடன் பிறந்த தம்பி ஒருவன் இருந்தான் என்பதை யறியாதபடியால், இவர் 'நும்பி' என்பதற்கு அதிகமான் என்று பொருள் கொண்டார். இது தவறு. நும்பி என்றது குட்டுவன் இரும்பொறையைக் குறிக்கிறது.

தகடூர் யாத்திரைச் செய்யுள் இன்னொன்றிலும் இந்தத் தமயன் தம்பியர் குறிக்கப்படுகின்றனர். *புறத்திரட்டு* 785ஆம் செய்யுளில் (*தகடூர் யாத்திரைச் செய்யுள்*) இவர்கள் இவ்வாறு குறிக்கப்படுகின்றனர். அச்செய்யுட் பகுதி இது:

நும்மூர்க்கு
நீதுணை யாகலு முளையே நோதக
முன்னவை வரூஉங் காலை நும்முன்
நுமக்குத்துணை யாகலும் உரியன்; அதனால்
தொடங்க வுரிய வினைபெரி தாயினும்
அடங்கல் வேண்டுமதி

இச்செய்யுளில் நீ என்பது குட்டுவன் இரும்பொறையையும் 'நும்முன்' என்பது இவன் தமையனான பெருஞ்சேரல் இரும்பொறையையும் குறிக்கின்றன. குட்டுவன் இரும் பொறையின் வரலாறு ஒன்றுந் தெரியவில்லை. தகடூர்ப் போர் நடந்தபோது இருந்த இவன், அப்போரிலோ அல்லது வேறு போரிலோ இறந்திருக்க வேண்டும். இவனைப் பற்றிய செய்யுள் ஒன்றும் தொகை நூல்களில் காணப்படவில்லை. இவனுடைய மகன் இளஞ்சேரல் இரும்பொறை *பதிற்றுப்பத்து* 9ஆம் பத்தில் தலைவன் என்பதை யறிந்தோம்.

கொங்கு நாட்டை அரசாண்ட இவர்கள் காலத்தில் (பெருஞ்சேரல் இரும்பொறை, குட்டுவன் இரும்பொறை) சேர நாட்டை அரசாண்டவன் சேரன் செங்குட்டுவன். அவனுக்குக்

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்றும் பெயர் உண்டு. பெருஞ்சேரல் இரும்பொறை தகடூரை வென்ற பிறகு நீண்ட காலம் அரசாளவில்லை. அவன் ஏதோ ஒரு போரில் இறந்து போனான் எனத் தோன்றுகிறது. அவன் அரசாண்ட காலம் 17 ஆண்டுகள். அவனுக்கு முன்னமே அவன் தம்பியான குட்டுவன் இரும்பொறை இறந்து போனான். பெருஞ்சேரலிரும் பொறைக்குப் பிறகு அரசாண்ட இளஞ்சேரல் இரும்பொறையும் 16 ஆண்டுதான் அரசாண்டான். இவர்கள் இருவருடைய ஆட்சிக் காலம் 33 ஆண்டுகளேயாகும். சேரன் செங்குட்டுவனோ 55 ஆண்டு அரசாண்டான் என்று 5ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. ஆகவே, இவ்விரு கொங்கு நாட்டரசரும் சேரன் செங்குட்டுவன் ஆட்சிக் காலத்திலேயே இறந்து போனார்கள். செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்து விழா எடுப்பதற்கு முன்னமே இளஞ்சேரல் இரும்பொறை இறந்து போனான் என்பதைச் *சிலப்பதிகாரத்தினால்* அறிகிறோம். அதனை இந்நூலில் இன்னொரு இடத்தில் (இரும்பொறை யரசர்களின் கால நிர்ணயம்) காண்க.

பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பிறகு, அவனுடைய தம்பி குட்டுவன் இரும்பொறையின் மகனான இளஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டை அரசாண்டான். குட்டுவன் இரும்பொறை, பெருஞ்சேரலிரும்பொறைக்கு முன்னமே இறந்து போனதை அறிந்தோம். பெருஞ்சேரலிரும்பொறையின் மகன் சிறுவனாக இருந்தபடியால், அப்போது வயதுவந்தவனாக இருந்த இளஞ்சேரலிரும்பொறை அரசனானான்.

இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் 9ஆம் பத்துப் பாடினார். 'பாடிப்பெற்ற பரிசில்' "மருளில் லார்க்கு மருளக் கொடுக்க வென்று உவகையின் முப்பத்திராயிரங் காணம் கொடுத்து அவர் அறியாமை ஊரும் மனையும் வளமிகப் படைத்து ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி எண்ணற்கு ஆகா அருங்கல வெறுக்கையொடு பன்னூறாயிரம் பாற்பட வகுத்துக் காப்புமறம் தான் விட்டான் அக்கோ" (9ஆம் பத்துப் பதிகக் குறிப்பு).

இளஞ்சேரல் இரும்பொறை போரில் வெற்றி பெற்றான் என்று பெருங்குன்றூர்கிழார் கூறுகிறார். எந்தப் போரை வென்றான் என்பதைக் கூறவில்லை. இவனுடைய முன்னோர்கள் வென்ற போர்களைச் சிறப்பித்துக் கூறி அவர்களின் வழிவந்த புகழையுடையவன் என்று கூறுகிறார். 'காஞ்சி சான்ற செருப்பல' செய்தான் என்று கூறுகிறார். இவன், 'சென்னியர் பெருமான்' (சோழன்) உடன் போர் செய்தான் என்றும் அப்போரில் சோழன் தோற்றுப் போனான் என்றும் கூறுகிறார் (9ஆம் பத்து 5).

"பொன்னவிர் புனைசெயல் இலங்கும் பெரும்பூண், ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்." இந்தச் சென்னியர் பெருமான், செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இளஞ்சேரல் இரும்பொறை தன்னுடைய முன்னோர்களைப் போலவே கொங்கு நாடு முழுவதும் அரசாண்டான். பூழியர்கோ கொங்கர்கோ, தொண்டியர் பொருநன், குட்டுவர் ஏறு, பூழியர் மெய்ம்மறை, மாந்தையோர் பொருநன், கட்டூர்வேந்து என்றும், கொங்கு நாட்டில் பாயும் 'வானி நீரினும் தீந்தண் சாயலன்' என்றும் கூறப்படுகிறான். 9ஆம் பத்தில் இவன் பலமுறை 'வல்வேற் குட்டுவன்', 'வென்வேற் பொறையன்', 'பல்வேல் இரும்பொறை' என்று கூறப்படுகிறான். 9ஆம் பத்தின் பதிகத்தில் இவன் 'விச்சியின் ஐந்தெயிலை' எறிந்தான் என்றும் அப்போரில் சோழ, பாண்டியர் தோற்றனர் என்றும் கூறப்படுகிறான். மற்றும் "பொத்தியாண்ட பெருஞ்சோழனையும் வித்தையாண்ட இளம் பழையன் மாறனையும்" வென்றான் என்று கூறப்படுகிறான்.

இளஞ்சேரல் இரும்பொறை

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பிறகு கொங்கு இராச்சியத்தை அரசாண்டவன் அவனுடைய தம்பியின் மகனான இளஞ்சேரல் இரும்பொறை என்று கூறினோம். இவன் *பதிற்றுப்பத்து* ஒன்பதாம் பத்தின் தலைவன்.

இளஞ்சேரல் இரும்பொறையைக் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்றும் சேரமான் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை யென்றும் கூறுவர். இவன் கொங்கு நாட்டின் அரசன் என்றும் பூழி நாடு, மாந்தை நகரம், கட்டூர் , தொண்டி, இவைகளின் தலைவன் என்றுங் கூறப்படுகிறான்.[27]

கட்டூர் என்பதற்குப் பொதுவாகப் பாசறை என்பது பொருள். ஆனால், இங்குக் கூறப்பட்ட கட்டூர் என்பது புன்னாட்டின் தலைநகரமான கட்டூர். பிற்காலத்துச் சாசனங்களில் இவ்வூர் கிட்டூர் என்று கூறப்படுகிறது. புன்னாடும் அதன் தலைநகரமான கட்டூரும் இப்போது மைசூருக்குத் தெற்கேயுள்ள ஹெக்கடதேவன் கோட்டை தாலுகாவில் சேர்ந்திருக்கின்றன. சங்க காலத்தில் இவை வடகொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தன. காவிரியாற்றின் ஓர் உபநதியாகிய கபிணி அல்லது கப்பிணி என்னும் ஆற்றங்கரை மேல் கட்டூர் இருந்தது. இவ்வூர் பிற்காலத்தில் கிட்டூர் என்றும் கித்திபுரம், கீர்த்திபுரம் என்றும் வழங்கப்பட்டது.

கொங்கு நாட்டில் பாயும் ஆறுகளில் வானியாறும் ஒன்று. "சாந்துவரு வானி நீரினும், தீந்தண் சாயலன்" (9ஆம் பத்து 6 : 12-

13) என்று இவன் புகழப்படுகிறான். இவன் ஆட்சிக் காலத்தில் கொங்கு நாடு முழுவதும் இவனுடைய ஆட்சியின் கீழ் இருந்தது.

இவனுடைய பெரிய தந்தையான பெருஞ்சேரலிரும்பொறை கொல்லிக் கூற்றம், தகடூர் முதலிய நாடுகளை வென்று கொங்கு இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டதை முன்னமே அறிந்தோம். இவனுடைய தந்தையாகிய குட்டுவனிரும்பொறை தகடூர்ப் போரிலோ அல்லது அதற்கு அண்மையில் நடந்த வேறு ஒரு போரிலோ இறந்து போனான் என்று அறிந்தோம். ஆகவே இவன் இளவயதிலேயே ஆட்சிக்கு வந்தான் என்பது தெரிகின்றது. இவன் கொங்கு நாட்டின் வடபகுதிகளை வென்று தன்னுடைய கொங்கு இராச்சியத்துடன் இணைத்துக்கொண்டான்.

விச்சிப் போர்

இளஞ்சேரல் இரும்பொறை விச்சியூரை வென்றான். விச்சியூர் கொங்கு நாட்டிலிருந்தது. விச்சியூரிலிருந்த விச்சிமலைக்கு இப்போது பச்சைமலை என்று பெயர் வழங்குகிறது. இங்கு விச்சியூர் என்று ஓர் ஊர் உண்டு. அதன் அரசன் விச்சிக்கோ என்று பெயர் பெற்றிருந்தான். விச்சியூர், மலை சார்ந்த நாடு (*புறம்* 200 : 1-8). விச்சிக்கோ, விச்சியர் பெருமகன் என்றுங் கூறப்படு கிறான் (*குறுந்*. 328 : 5). விச்சியூர் மலைமேல் விச்சிக்கோவுக்கு ஐந்தெயில் என்னும் பெயருள்ள கோட்டையிருந்தது.[28] இளஞ் சேரல் இரும்பொறை காலத்தில் அந்த விச்சிக்கோவின் மகனான இன்னொரு விச்சிக்கோ விச்சி நாட்டையரசாண்டான். இளஞ்சேரல் இரும்பொறை தன்னுடைய ஆட்சிக்கு அடங்கா மலிருந்த விச்சிக்கோவின் மேல் படையெடுத்துச் சென்று போர் செய்தான். விச்சிக்கோவுக்குச் சோழனும் பாண்டியனும் தங்கள் சேனைகளை உதவினார்கள். ஆனாலும், விச்சிக்கோ போரில் தோற்றான். அவனுடைய ஐந்தெயில் கோட்டையும் இளஞ்சேரலிரும்பொறைக் குரியதாயிற்று ("இருபெரு வேந்தரும் விச்சியும்வீழ, வருமிளைக் கல்லகத்து ஐந்தெயில் எறிந்து— 9ஆம் பத்து, பதிகம்).

சோழனுடன் போர்

சோழநாட்டரசன் பெரும்பூண் சென்னி என்பவன், தன்னுடைய சேனாதிபதியாகிய பழையன் என்பவன் தலைமையில் பெருஞ்சேனையை யனுப்பி வடகொங்கு நாட்டிலிருந்த புன்னாட்டின் தலைநகரமான கட்டூரின்மேல் போர் செய்தான். இளஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சியின் கீழிருந்த கட்டூரைச் சோழன் சேனாபதி பழையன் எதிர்த்தான். இளஞ்சேரல் இரும்பொறைக்குக் கீழடங்கியிருந்த சிற்றரசர்

களான நன்னன் (நன்னன் உதியன்), ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை முதலானவர் பழையனை எதிரிட்டுப் போர் செய்தார்கள். பழையன் இவர்களை யெல்லாம் எதிர்த்துத் தனி நின்று கடும்போர் செய்தான். ஆனால், பலருடைய எதிர்ப்புக்குத் தாங்காமல் போர்க்களத்தில் இறந்து போனான்.

தன்னுடைய சேனைத் தலைவனான பழையன் கட்டூர்ப் போரில் மாண்டு போனதையும் தன் சேனை தோற்றுப் போனதையும் அறிந்த சோழன் பெரும்பூண் சென்னி மிக்க சினங் கொண்டான். அவன் தன்னுடைய சேனையுடன் புறப்பட்டுக் கொங்கு நாட்டிலிருந்த இளஞ்சேரலிரும்பொறைக்கு உரியதான கழுமலம் என்னும் ஊரின் மேல் சென்று போர் செய்தான். அவ்வூரின் தலைவனான கணயன், சோழனை எதிர்த்துப் போரிட்டான். சோழன் போரில் வெற்றி கொண்டு கழுமலத்தைக் கைப்பற்றினதோடு கணயனையும் சிறைப்பிடித்தான். இந்தப் போர்ச் செய்திகளையெல்லாம் குடவாயிற் கீரத்தனார் கூறுகிறார்.[29]

சோழன் பெரும்பூண் சென்னியைச் சோழன் செங்கணான் என்று தவறாகக் கருதுகிறார் சேஷ ஐயர். இது தவறு.[30]

இளஞ்சேரல் இரும்பொறையின் கீழ் கழுமலத்தில் சிற்றரசனாக இருந்த கணையனைக் கணைக்காலிரும்பொறை என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் தவறாகக் கருதுகிறார்.[31]

கணையன் வேறு கணைக்காலிரும்பொறை வேறு.

சோழன் பெரும்பூண் சென்னியும் சோழன் செங்கணானும் வெவ்வேறு காலத்திலிருந்தவர்கள். இளஞ்சேரலிரும்பொறையும் கணைக்காலிரும்பொறையும் வெவ்வேறு காலத்திலிருந்தவர்கள். இளஞ்சேரலிரும்பொறைக்குப் பின் ஒரு தலைமுறைக்குப் பிறகு இருந்தவன் கணைக்காலிரும்பொறை. கழுமலத்தில் இரண்டு போர்கள் நடந்திருக்கின்றன. முதற்போர், சோழன் பெரும்பூண் சென்னிக்கும் இளஞ்சேரல் இரும்பொறையின் கீழடங்கின கணையனுக்கும் நடந்தது. அதன் பிறகு இரண்டாவது போர் சோழன் செங்கணானுக்கும் கணைக்காலிரும்பொறைக்கும் நடந்தது.

சோழன் பெரும்பூண் சென்னி கொங்கு நாட்டின் மேல் படையெடுத்துவந்து போர் செய்து கழுமலத்தைக் கைப்பற்றியதையறிந்த இளஞ்சேரல் இரும்பொறை சினங் கொண்டு, அந்தச் சென்னியைப் பிடித்து வந்து தன் முன்னே நிறுத் தும்படித் தன்னுடைய சேனைத் தலைவர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் போய்ப் பெரும்பூண் சென்னியோடு போர் செய்தார்கள். அந்தப் போர் பெரும்பூண் சென்னி கைப்பற்றி யிருந்த கழுமலம் என்னும் ஊரில் நடந்திருக்க வேண்டும் என்று

தோன்றுகிறது. அந்தப் போரிலே சோழனுடைய படை வீரர்கள் தோற்றுத் தங்களுடைய (வேல்களை) ஈட்டிகளைப் போர்க் களத்திலே விட்டுவிட்டு ஓடினார்கள் அவர்கள் போர்க்களத்தில் போட்டுவிட்டுச் சென்ற வேல்களின் எண்ணிக்கை, செல்வக் கடுங்கோ வாழியாதன் (இளஞ்சேரல் இரும்பொறையின் பாட்டன்) தன்னை ஏழாம் பத்தில் பாடின கபிலருக்குப் பரிசாகக் கொடுத்த ஊர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்தது.[32]

இதிலிருந்து சோழன் தோற்றுப் போன செய்தி தெரிகிறது. சோழன் பெரும்பூண் சென்னியுடன் போர் செய்து வென்ற பிறகு இளஞ்சேரல் இரும்பொறை இன்னொரு சோழனுடன் போர் செய்தான்.

இளஞ்சேரலிரும்பொறை பெருஞ்சோழன் என்பவனையும் இளம்பழையன் மாறன் என்பவனையும் வென்றான்.[33] இந்தப் பெருஞ்சோழன் என்பவன் வேறு. மேலே சொன்ன பெரும்பூண் சென்னி வேறு என்று தோன்றுகிறது. இளம்பழையன் மாறன் என்பவன், கட்டூர்ப் போரில் முன்பு இறந்து போன பழையன் என்னும் சேனாபதியின் தம்பியாக இருக்கலாம். (இந்தப் பழையன் மாறனுக்கும் பாண்டி நாட்டில் மோகூரில் இருந்த பழையன் மாறனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இவன் வேறு, அவன் வேறு.)

இளஞ்சேரல் இரும்பொறை சோழ நாட்டில் சென்று சோழனுடன் போர் செய்து வென்றான் என்றும் சோழ நாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் காவல் தெய்வங்களாக இருந்த சதுக்கப்பூதம் என்னுந் தெய்வங்களைக் கொண்டு வந்து தன்னுடைய வஞ்சிக் கருவூரில் அமைத்து விழாச் செய்தான் என்றும் அறிகிறோம்.[34] காவிரிப்பூம்பட்டினத்துச் சதுக்கப் பூதரை எடுத்துக்கொண்டுவந்து இவன் வஞ்சி நகரத்தில் வைத்து விழா கொண்டாடினதைச் *சிலப்பதிகாரமும்* கூறுகிறது.[35]

இளஞ்சேரல் இரும்பொறையின் பாட்டனாக இருந்தவன் மையூர்கிழான். மையூர்கிழான் இவனுடைய தாய்ப்பாட்டன். மையூர்கிழானின் மகளான அந்துவஞ்செள்ளை இவனுடைய தாயார். இவனுடைய அமைச்சனாக இருந்த மையூர் கிழான் இவனுடைய தாய் மாமனாக இருக்க வேண்டும். அதாவது, இவனுடைய தாயாருடன் பிறந்தவனாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அந்த அமைச்சனை இவன் புரோசு மயக்கினான் என்று 9ஆம் பத்துப் பதிகங் கூறுகிறது.

மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி

"அமைச்சியல் மையூர்கிழானைப் புரோசு மயக்கியென்றது தன் மந்திரியாகிய மையூர்கிழானைப் புரோகிதனிலும் அறநெறி அறிவானாகப் பண்ணி" என்று இதன் பழைய உரை கூறுகிறது.[36]

(புலவர் பெருங்குன்றூர் கிழார் இவ்வரசனிடம் பரிசு பெறச் சென்றார். இவன் பரிசு கொடுக்காமல் காலந் தாழ்த்தினான். பல நாள் காத்திருந்தும் பரிசு வழங்கவில்லை. அப்போது இப்புலவர் வருந்திப் பாடிய இரண்டு செய்யுட்கள் (*புறம்* 210, 211) இவருடைய வறுமைத் துன்பத்தைத் தெரிவிக்கின்றன. பரிசு கொடுக்காமல் காலந் தாழ்த்தின இவ்வரசன் இப்புலவருக்குத் தெரியாமல் ஊர், வீடு, நிலம் முதலியவற்றை அமைத்துப் பிறகு இவருக்குக் கொடுத்தான். "அவர் அறியாமை ஊரும் மனையும் வளமிகப் படைத்து, ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி எண்ணற்கு ஆகா அருங்கல வெறுக்கையொடு பன்னூறாயிரம் பாற்பட வகுத்து"க் கொடுத்தான் என்று ஒன்பதாம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது.

பெருங்குன்றூர் கிழார் இளஞ்சேரல் இரும்பொறை மீது ஒன்பதாம் பத்துப் பாடினார். அதற்கு அவன் முப்பத்தீராயிரம் பொற்காசு வழங்கினான். "பாடிப்பெற்ற பரிசில் மருளில்லார்க்கு மருளக் கொடுக்க வென்று உவகையின் முப்பத்தீராயிரம் காணம் கொடுத்தான் அக்கோ" என்று பதிகத்தின் கீழ்க் குறிப்புக் கூறுகிறது.

இளஞ்சேரல் இரும்பொறை பதினாறு ஆண்டு வீற்றிருந்தான் என்று 9ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. இளமையிலேயே ஆட்சிக்கு வந்த இவன் குறுகிய காலத்திலேயே இறந்து போனான் என்று தெரிகிறபடியால் இவன் ஏதோ போர்க்களத்தில் இறந்திருக்க வேண்டும் என்று கருதலாம். எங்கே எப்படி இறந்தான் என்பது தெரியவில்லை. ஆனால், இவனுடைய மூத்தவழித் தாயாதிப் பெரிய தந்தையாகிய சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குக் கோட்டம் அமைப்பதற்கு முன்னமே இறந்து போனான் என்பது ஐயமில்லாமல் தெரிகிறது. இதைச் *சிலப்பதிகாரத்திலிருந்து* அறிகிறோம். சேரன் செங்குட்டுவன் கண்ணகியாருக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்துகொண்டிருந்தபோது, இவனுடைய தூதனாகிய நீலன், கனக விசயரைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவிட்டுத் திரும்பி வந்தான். வந்தவன், கனகவிசையரைச் சிறைப்பிடித்து வந்ததைப் பாராட்டாமல் சோழனும் பாண்டியனும் இகழ்ந்து பேசினதைத் தெரிவித்தான். அது கேட்ட செங்குட்டுவன் சினங்கொண்டு அவர்கள் மேல் போருக்குச் செல்ல எண்ணினான்.

அவ்வமயம் அருகிலிருந்த மாடலன் என்னும் மறையோன் செங்குட்டுவனின் சினத்தைத் தணிக்கச் சில செய்திகளைக்

கூறினான். "உனக்கு முன்பு அரசாண்ட உன்னுடைய முன்னோர் பெருவீரர்களாக இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் மாய்ந்து மாண்டு போனார்கள். அது மட்டுமா? உன்னுடைய தாயாதித் தம்பியும் அத்தம்பி மகனுங்கூட முன்னமே இறந்து போனார்கள். ஆகவே, சினத்தைவிட்டு மறக்கள வேள்வி செய்யாமல், அறக்கள வேள்வி செய்க" என்று கூறினான். இவ்வாறு கூறியவன் இளஞ்சேரல் இரும்பொறை இறந்து போன செய்தியையும் கூறினான்.

சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோன் ஆயினும்
மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்!

(*சிலம்பு*, நடுகல் 147-150)

இதில், "சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து மதுக்கொள் வேள்வி வேட்டோன்" என்றது இளஞ்சேரல் இரும்பொறையை. இளஞ்சேரல் இரும்பொறை, தன்னுடைய தாயாதிப் பெரிய தந்தையான சேரன் செங்குட்டுவன் இருக்கும்போதே, அவன் பத்தினிக் கோட்டம் அமைப்பதற்கு முன்னமேயே இறந்து போனான் என்பது நன்கு தெரிகின்றது. இந்த உண்மையை யறியாமல் சேரன் செங்குட்டுவன் காலத்துக்குப் பிறகு இளஞ்சேரல் இரும்பொறை வாழ்ந்திருந்தான் என்று திரு. கே. ஏ .நீலகண்ட சாஸ்திரி கூறுவது தவறாகும். செங்குட்டுவன் உத்தேசமாக கி.பி. 180லும், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை உத்தேசம் கி.பி. 190இலும் இருந்தனர் என்று இவர் எழுதியுள்ளார்.[37] செங்குட்டுவன் காலத்திலேயே இறந்து போன குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை, செங்குட்டுவன் காலத்துக்குப் பிறகும் எப்படி வாழ்ந்திருக்க முடியும்? செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்த காலத்தில் இவன் இல்லை.

இலங்கையரசனான முதலாம் கஜபாகுவின் சமகாலத்தவனான செங்குட்டுவன், கஜபாகுவுக்கு வயதில் மூத்தவனாக இருந்தான். இவன் தன்னுடைய 50ஆவது ஆட்சியாண்டில் ஏறக்குறைய கி.பி. 175இல் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தான் என்று கருதலாம். அந்த ஆண்டுக்கு முன்பே இளஞ்சேரல் இறந்து போனான் என்று *சிலம்பு* கூறுகிறது. எத்தனை ஆண்டுக்கு முன்பு என்பது தெரியவில்லை. ஏறத்தாழக் கி.பி. 170இல் இறந்து போனான் என்று கொள்ளலாம். இவன் பதினாறு ஆண்டு ஆட்சி செய்தான் என்பதனால், உத்தேசம் (170—16 = 154) கி.பி. 154 முதல் 170 வரையில் இவன் ஆட்சி செய்தான் என்று கருதலாம்.

குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையின் சம காலத்திலிருந்த அரசர்கள், சேர நாட்டில் சேரன் செங்குட்டுவனும் பாண்டி நாட்டில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனும் (வெற்றிவேற் செழியன்) இருந்தார்கள். சோழ நாட்டில் சோழன் பெரும்பூண் சென்னி (பெருஞ்சோழன்) இருந்தான்.

ஒரு விளக்கம்

பதிற்றுப்பத்து 9ஆம் பத்தின் தலைவனும் கொங்கு நாட்டின் அரசனுமாகிய இளஞ்சேரல் இரும்பொறை, குட்டுவன் இரும்பொறையின் மகன். இவனை (தகடூர் எறிந்த) பெருஞ்சேரல் இரும்பொறையின் மகன் என்று கருதுவது தவறு. இந்தத் தவறான கருத்தைச் சரித்திரக்காரர் பலருங் கொண்டிருந்தார்கள். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் மகன் இவன் என்று கே.என். சிவராசப்பிள்ளையவர்களும்[38] கே.ஜி.சேஷையரும்[39] கருதினார்கள். மு.இராகவையங்கார் அவர்கள் தம்முடைய *சேரன் செங்குட்டுவன்* என்னும் நூலில் இவ்வாறே தவறாக எழுதியுள் ளார். மேற்படி நூலில் 'சேர வமிசத்தோர்' என்னுந் தலைப்பில், பெருஞ்சேரல் இரும்பொறையின் இராணியின் பெயர் அந்துவஞ் செள்ளை என்றும் இவர்களுக்குப் பிறந்த மகன் இளஞ்சேரல் இரும்பொறை என்றும் இவர் எழுதியுள்ளார். இவர் கூறியதையே வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதரும் கூறியுள்ளார். (தீட்சிதர் அவர்கள் மு.இராகவையங்காரின் துணைகொண்டு *சிலப்பதி காரத்தை* ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.) அவர், தம்முடைய *சிலப்பதிகார* ஆங்கில மொழிபெயர்ப்பின் முகவுரையில் 13ஆம் பக்கத்தில் 'சேரர் தாய்வழிப் பட்டியல்' என்னுந் தலைப்பில், பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் (குட்டுவன் இரும்பொறை) வேண்மாள் அந்துவஞ் செள்ளைக்கும் பிறந்த மகன் இளஞ்சேரல் இரும்பொறை என்று எழுதுகிறார். அதாவது, பெருஞ்சேரலிரும் பொறையும் குட்டுவன் இரும்பொறையும் ஒருவரே என்று கருதுகிறார். அவர் இவ்வாறு பட்டியல் எழுதிக் காட்டுகிறார்:[40]

செல்வக் கடுஞ்கோ வாழியாதன்

|

பெருஞ்சேரல் இரும்பொறை
(குட்டுவன் இரும்பொறை)
வேண்மாள் அந்துவஞ் செள்ளை (இராணி)

|

இளஞ்சேரல் இரும்பொறை

இந்நூலாசிரியரும் இவ்வாறே தவறாகக் கருதியிருந்தார்.[41] இது தவறு என்பதை இப்போதறிந்து கொண்டேன்.

டாக்டர். எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் இளஞ்சேர லிரும்பொறையைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை. "பெருஞ்சேரல் இரும்பொறையுடன் மாறுகொண்ட இப்பெயர் இவனை அவன் மகனெனக் குறிக்கும் நோக்குடன் ஏற்பட்ட தொடர் என்பது தோன்றும். அதனுடன் உண்மையில் பதிகமே (9ஆம் பத்துப் பதிகம்) அவன் குட்டுவன் இரும்பொறைக்கும் மையூர்கிழான் மகள் அந்துவஞ் செள்ளைக்கும் புதல்வன் என்று கூறுகிறது" என்று எழுதுகிறார்.[42] இளஞ்சேரல் இரும்பொறை, பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனா, குட்டுவன் இரும்பொறையின் மகனா என்று அவர் திட்டமாகக் கூறாமல் விட்டுவிட்டார்.

செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு இரண்டு புதல்வர் இருந்தனர் என்பதை இவர் அறியாதபடியால் இந்தத் தவறு நேர்ந்தது. செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள் என்று அவனைப் பாடிய ஏழாம் பத்துக் கூறுகிறது.

வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கடன் இறுத்த வெல்போர் அண்ணல்
(7ஆம் பத்து 10:20-22)

இந்த துணைப் புதல்வரில் (இரண்டு மகன்களில்) மூத்தவன் பெருஞ்சேரல் இரும்பொறை (8ஆம் பத்துப் பதிகம்), இளைய மகன் குட்டுவன் இரும்பொறை (9ஆம் பத்துப் பதிகம்). குட்டுவன் இரும்பொறையின் மகன் இளஞ்சேரல் இரும்பொறை. இதனைக் கீழ்க்கண்ட பட்டியலில் விளக்கமாகக் காண்க:

செல்வக்கடுங்கோ வாழியாதன்
(7ஆம் பத்துத் தலைவன்)

(மூத்த மகன்)
பெருஞ்சேரல் இரும்பொறை
(8ஆம் பத்துத் தலைவன்)

(இளைய மகன்)
குட்டுவன் இரும்பொறை
அந்துவஞ்செள்ளை

இளஞ்சேரல் இரும்பொறை
(9ஆம் பத்துத் தலைவன்)

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி இளஞ்சேரலிரும்பொறையைப் பற்றி விசித்திரமாக ஓர் ஊகத்தைக் கற்பிக்கிறார். செல்வக்

கடுங்கோ வாழியாதனுக்கு அந்துவஞ்செள்ளை என்று ஒரு தங்கை இருந்தாளென்றும் அவளைக் குட்டுவன் இரும்பொறை மணஞ் செய்துகொண்டானென்றும் அவர்களுக்குப் பிறந்த மகன் இளஞ்சேரல் இரும்பொறை என்றும் கற்பனையாகக் கூறுகிறார்.

அந்துவன் பொறையன், அந்துவஞ்செள்ளை என்னும் பெயர்களில் உள்ள அந்துவன் என்னும் பெயர் ஒற்றுமை ஒன்றை மட்டும் ஆதாரமாகக் கொண்டு இவர் இவ்வாறு ஊகிக்கிறார். அந்துவஞ்செள்ளை மையூர்கிழானுடைய மகள். அந்துவன் பொறையன் வேறு, மையூர்கிழான் வேறு. இருவரையும் ஒருவர் என்று சாஸ்திரி இணைப்பது தவறு. இவருடைய ஊகமும் கற்பனையும் ஆராய்ச்சிக்குப் பொருந்தாமல் வெறுங்கற்பனை களாக உள்ளன. இது பற்றி முன்னமே கூறினோம்.

யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்குப் பிறகு கொங்கு நாட்டை யரசாண்டவன் அவனுடைய- தம்பி மகனான இளஞ்சேரல் இரும்பொறை (ஒன்பதாம் பத்தின் தலைவன்). இளஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டை யரசாண்டான்.

மாந்தரன் சேரல் என்பது இவனுடைய பெயர். யானையின் கண் போன்ற கண்ணையுடையவன் (*புறம்* 22:29). ஆகையால் யானைக்கட்சேய் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். 'வேழ நோக்கின் விறல் வெஞ்சேய்' என்றும் இவன் கூறப்படுகிறான். வேழம்—யானை; நோக்கு—பார்வை. சேய்—பிள்ளை, மகன். இவனுடைய பாட்டனான செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு மாந்தரஞ் சேரல் என்னும் பெயரும் உண்டு. இவனுக்கும் மாந்தரஞ்சேரல் என்றும் பெயர் உண்டு. ஒரே பெயரைக் கொண்டிருந்த இவ்விருவரையும் பிரித்துக் காட்டுவதற்காக, 'யானைக்கட்சேய்' என்னும் அடைமொழி கொடுத்து இவன் கூறப்படுகிறான். யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை (யா.சே.மா.சே. இ.) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறான். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்கு மக்கட் பேறு இல்லாமலிருந்து வேள்வி செய்து ஒரு மகனைப் பெற்றான் என்று அறிந்தோம். அந்த வேள்வியினால் பிறந்த மகன் இவனாக இருக்கலாம் என்று தோன்றுகிறான்.[43]

யா.சே.மா.சே. இரும்பொறை தன்னுடைய ஆட்சிக் காலத்தில் சில போர்களைச் செய்தான். அப்போர்களில் இவனுக்கு

வெற்றியுந் தோல்வியுங் கிடைத்தன. விளங்கில் என்னும் ஊரில் இவன் பகைவருடன் போர் செய்து வெற்றி பெற்றான். அவ்வமயம், இந்த வெற்றியைப் பாடுவதற்கு இப்போது கபிலர் இல்லையே என்று இவன் மனவருத்தம் அடைந்தான். (இவனுடைய பாட்டனார்ன செல்வக்கடுங்கோ வாழியாதனைக் (மாந்தரஞ் சேரலைக்) கபிலர் ஏழாம் பத்துப் பாடினார். தன்னைப் பாடுவதற்கு இப்போது கபிலர் இல்லையே என்று இவன் வருந்தியதைக் கண்டு பொருந்தில் இளங்கீரனார், கபிலரைப் போலவே நான் உன்னைப் பாடுவேன் என்று கூறினார்.

செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த ழேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்றநின்
ஆடுகொள் வரிசைக் கொப்பப்
பாடுவல் மன்னால் பகைவரைக் கடப்பே (புறம் 53:11-15)

புலவர் இளங்கீரனார் இவ்வாறு கூறிய பிறகு இவன் மேல் ஒரு பத்துச் செய்யுட்களைப் பாடியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அந்தப் பத்து, *பதிற்றுப்பத்தின்* பத்தாம் பத்தாக இருக்க வேண்டும். பத்தாம் பத்து இப்போது கிடைக்கவில்லை. அது மறைந்து போயிற்று.

யா.சே.மா.சே. இரும்பொறைக்கும் சோழன் இராசசூயம் வேட்ட. பெருநற் கிள்ளிக்கும் போர் நடந்தது. அந்தப் போர் எந்த இடத்தில் நடந்ததென்று தெரியவில்லை. அந்தப் போரில் இவன் வெற்றியடைவது திண்ணம் என்று இவன் உறுதியாக நம்பினான். ஆனால், இவனுக்குத் தோல்வி ஏற்பட்டது. சோழன் வென்றான். சோழனுடைய வெற்றிக்கும் இவனுடைய தோல்விக்கும் காரணமாக இருந்தவன் மலையமான் அரசனாகிய தேர்வண்மலையன் என்பவன். போர் நடந்தபோது தேர்வண் மலையன் சோழனுக்கு உதவியாக வந்து இவனைத் தோல்வியுறச் செய்தான். இந்தச் செய்தியைப் *புறநானூறு* 125ஆம் செய்யுளினால் அறிகிறோம். இந்தச் செய்யுளின் அடிக்குறிப்பு, "சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் துப்பாகிய தேர்வண் மலையனைப் பாடியது" என்று கூறுகிறது. (பொருதவழி—போர் செய்தபோது; துப்பு—பலம்.)

இவன் காலத்தில் பாண்டி நாட்டை யரசாண்டவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன். அந்தப் பாண்டியனுடன் யா.சே.மா.சே. இரும்பொறை போர் செய்தான். போர் எந்த இடத்தில் நடந்தது என்பது தெரிய வில்லை, அந்தப் போரில் இவன் தோற்றது மட்டுமல்லாமல்

பாண்டியனால் சிறைப் பிடிக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டான். ஆனால், எவ்விதமாகவோ சிறையிலிருந்து தப்பி வெளி வந்து தன்னுடைய நாட்டையரசாண்டான். இந்தச் செய்தியைக் குறுங்கோழியூர் கிழார் இவனைப் பாடிய செய்யுளிலிருந்து அறிகிறோம் (*புறம்* 17). அந்தச் செய்யுளின் அடிக்குறிப்பு, "பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியனால் பிணியிருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை வலிதிற்போய்க் கட்டி வெய்தினானைப் பாடியது" என்று கூறுகிறது. (பிணியிருந்த—கட்டப்பட்டிருந்த, சிறைப் பட்டிருந்த. கட்டில் எய்தினானை—சிம்மாசனம் ஏறியவனை; கட்டில்— சிம்மாசனம்.)

கருவூர்ப் போர்

யானைக்கட்சேய் மாந்தரன் சேரல் இரும்பொறை தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் தோல்வியடைந்ததை யறிந்தோம். இவன் காலத்தில் சோழ நாட்டைச் சில சோழ அரசர்கள் அரசாண்டு வந்தனர். அவர்களில், உறையூரிலிருந்து. அரசாண்ட கிள்ளிவளவனும் ஒருவன். இந்தக் கிள்ளிவளவனைப் பிற்காலத்தவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்றும் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் என்றுங் கூறுவர். குளமுற்றம் குராப்பள்ளி என்னும் இரண்டு இடங்களில் இவன் இறந்து போனான் என்பது இதன் பொருள் அன்று. குளமுற்றம், குராப்பள்ளி இரண்டும் ஒரே இடத்தைக் குறிக்கின்றன. குராப்பள்ளியில் இறந்த கிள்ளிவளவன் வேறு, குளமுற்றத்தில் இறந்து போன கிள்ளிவளவன் வேறு என்று கருதவேண்டா. இரு பெயரும் ஒருவரையே குறிக்கின்றன.[44]

இந்தக் கிள்ளிவளவன் கருவூரை (கொங்கு நாட்டுக் கருவூரை) முற்றுகையிட்டான். அப்போது கருவூர்க் கோட்டைக்குள் இருந்தவன் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. இரும்பொறை, வெளியே வந்து கிள்ளிவளவனுடன் போர் செய்யாமல் கோட்டைக்குள்ளேயே இருந்தான். அப்போது ஆலத்தூர்கிழார் என்னும் புலவர் சோழனிடம் வந்து, 'போருக்கு வராமல் இருக்கிறவனுடன் நீ போர் செய்து முற்றுகை இடுவது தகுதியன்று' என்று கூறினார்.[45] கிள்ளிவளவன் புலவர் சொல்லை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து முற்றுகை செய்தான். மாந்தரஞ் சேரல், போருக்கு வராமலிருந்த காரணம், தனக்கு வெளியிலிருந்து வரவேண்டிய அரசரின் உதவியை எதிர்பார்த்திருந்ததுதான். இவன் எதிர்பார்த் திருந்த உதவி கிடைத்த பிறகு இவன் கிள்ளிவளவனுடன் போர்

செய்தான். போரின் முடிவு அவனுக்குத் தோல்வியாக இருந்தது. சோழன் கிள்ளிவளவனே வென்றான்.

போரில் கருவூர்க் கோட்டையைக் கிள்ளிவளவன் தீயிட்டுக் கொளுத்தினான். மாடமாளிகைகள் எரிந்து விழுந்தன.[46]

சோழன், கொங்கு நாட்டின் தலைநகரை வென்றபடியால் கொங்கு நாடு முழுவதையுமே வென்றான் என்பது பொருளன்று. கோவூர்கிழார் கிள்ளிவளவனுடைய வெற்றியைப் புகழ்ந்து பாடினார் ("கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே" என்றும், "வஞ்சி முற்றம் வயக்களனாக, அஞ்சாமறவர் ஆட்போர் பழித்துக் கொண்டனை பெரும குடபுலத்ததரி" என்றுங் கூறுகிறார் — புறம் 373). வஞ்சி—கருவூர், குடபுலம்—கொங்கு நாடு. இந்தச் செய்யுளின் அடிக்குறிப்பு, "சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந்தானைப் பாடியது" என்று கூறுகிறது. மாறோக்கத்து நப்பசலையாரும் சோழனுடைய கருவூர் வெற்றியைப் புகழ்ந்து பாடியுள்ளார்.[47]

கிள்ளிவளவன் கருவூரை வென்ற போதிலும் அதை அவன் ஆட்சி செய்யவில்லை. யா.க.சே. மாந்தரஞ்சேரல் இரும்பொறை அதை மீட்டுக்கொண்டிருக்க வேண்டும். கிள்ளிவளவன் கொங்கு நாட்டுக் கருவூரை முற்றுகை செய்திருந்த காலத்தில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேர நாட்டு முசிறிப் பட்டினத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த படிமம் (தெய்வ உருவம்) ஒன்றை எடுத்துக்கொண்டு போனான் என்பது தெரிகின்றது. கிள்ளிவளவன் கருவூரை முற்றுகையிட்டபோது, யா.க.சே. மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு உதவி செய்யச் சேரன் தன்னுடைய சேனைகளைக் கொங்கு நாட்டுக்கு அனுப்பியிருக்கக்கூடும். அந்தச் சமயத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் முசிறியை முற்றுகையிட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பாண்டியன் முசிறியை முற்றுகையிட்டு அங்கிருந்த படிமத்தைக் கொண்டுபோன செய்தியைத் தாயங்கண்ணனாரின் செய்யுளிலிருந்து அறிகிறோம்.[48] இந்தப் பாண்டியனின் காலத்தவரான நக்கீரரும் இவனுடைய முசிறிப் போரைக் கூறுகிறார்.[49]

பாண்டியன் முசிறியிலிருந்து கொண்டுபோன படிமம், சேரன் செங்குட்டுவன் அமைத்த கண்ணகியின் பத்தினிப் படிவமாக இருக்கக்கூடும் என்று எளங்குளம் குஞ்சன் பிள்ளை தாம் மலையாள மொழியில் எழுதிய *கேரளம் அஞ்சும் ஆறும் நூற்றாண்டுகளில்* என்னும் நூலில் எழுதுகிறார். அது கண்ணகியின் படிமமாக இருக்க முடியாது; வேறு ஏதோ படிமமாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. குஞ்சன் பிள்ளையின் கருத்தை இந்துசூடன் அவர்களும் மறுத்துக் கூறுகிறார்.[50]

குளமுற்றத்துத் (குராப்பள்ளித்) துஞ்சிய கிள்ளிவளவன் கொங்கு நாட்டின் தலைநகரத்தை முற்றுகையிட்டு வென்றதும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேர நாட்டு முசிறிப்பட்டினத்தை முற்றுகையிட்டு வென்றதும் ஆகிய நிகழ்ச்சிகள், அக்காலத்தில் சேர நாட்டிலும் கொங்கு நாட்டிலும் சேர அரசர்கள் வலிமை குறைந்து இருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. சேரன் செங்குட்டுவன் காலத்துக்குப் பிறகு சேர அரசர்கள் பலமில்லாதவர்களாக இருந்தார்கள் என்பது தெரிகின்றது.

யா.க.சே. மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு முன்பு கொங்கு நாட்டை யரசாண்ட இளஞ்சேரல் இரும்பொறை, சோழ நாட்டு இளஞ்சேட் சென்னியை வென்றான் என்றும் சதுக்கப்பூதர் என்னும் தெய்வங்களைத் தன்னுடைய தலைநகரத்தில் கொண்டுவந்து அமைத்தான் என்றும் அறிந்தோம். அந்தப் பூதங்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பேர்போன பூதங்களாக (தெய்வங்களாக) இருக்கக்கூடும். அந்தத் தெய்வ உருவங்களை இளஞ்சேரல் இரும்பொறை அங்கிருந்து கொண்டு வந்து தன் நாட்டில் அமைத்துத் திருவிழாச் செய்தான். அந்தப் பகையை ஈடுசெய்வதற்காகவே குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கொங்கு நாட்டுக் கருவூரின்மேல் படையெடுத்துச் சென்றான் என்று கருதத் தோன்றுகிறது. கிள்ளிவளவன் தன் போர் முயற்சியில் வெற்றியைக் கண்டான்.

சேர நாட்டின் மேற்குக் கடற்கரையில் இருந்த பேர் போன தொண்டித் துறைமுகப்பட்டினம் இவன் காலத்திலும் கொங்குச் சோழரின் துறைமுகமாக இருந்தது. தொண்டிப் பட்டினத்தின் கடற்கரையில் கழிகளும் தென்னை மரங்களும் வயல்களும் மலைகளும் இருந்தன.

> குலையிறை; நசிய கோட்டாழை
> அகல்வயல் மலைவேலி
> நிலவுமணல் வியன்கானல்
> தெண்கழிமிசை தீப்பூவின்
> தண்தொண்டியோர் அடுபொருந (*புறம்* 17 : 9-13)
> (*தாழை—தென்னை*)

இவன் நீதியாகச் செங்கோல் செலுத்தினான். 'அறந்துஞ்சும் செங்கோலையே' (*புறம்* 20 : 17). தேவர் உலகம் போல இவனுடைய நாடு இருந்தது. 'புத்தேளுலகத்தற்று' (*புறம்* 22 : 35). இவனுடைய ஆட்சியில் மக்களுக்கு அமைதியும் இன்பமும் இருந்தது.

குறுங்கோழியூர்கிழார் இவ்வரசனைப் பாடியுள்ளார் (*புறம்* 17 : 20, 22). பொருந்தில் இளங்கீரனார் இவனைப் பாடினார் (*புறம்*

53). இப்புலவரே இவன்மீது பத்தாம் பத்தைப் பாடியிருக்க வேண்டும் என்பதை முன்னமே கூறினோம். புலத்துறை முற்றிய கூடலூர்கிழாரை இந்த அரசன் ஆதரித்தான். இவரைக் கொண்டு இவன் *ஐங்குறுநூறு* என்னும் தொகைநூலைத் தொகுப்பித்தான். ("இத்தொகை தொகுத்தார், புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்; இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையார்" என்று *ஐங்குறுநூற்றின்* இறுதியில் எழுதப்பட்டிருக்கிறது.)

யா.சே.மா.சே. இரும்பொறை எத்தனை யாண்டு அரசாண்டான் என்பது தெரியவில்லை. புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் வானநூல் அறிந்தவர். ஒரு நாள் இரவு வானத்தில் விண்மீன் ஒன்று சுடர்விட்டு எரிந்து விழுந்ததை அவர் கண்டார். அப்போது அவர் வான நூலைக் கணித்துப் பார்த்து யா.சே.மா.சே. இரும்பொறை ஏழாம் நாள் இறந்துவிடுவான் என்று அறிந்தார். வானத்தில் விண்மீன் எறிந்து விழுந்தால் அரசன் இறந்து விடுவான் என்பது வானநூலார் நம்பிக்கை. புலவர் கணித்துக் கூறியபடியே ஏழாம் நாள் இவ்வரசன் இறந்து போனான். அப்போது அப்புலவர் இவன்மீது 'ஆனந்தப் பையுள்' பாடினார் (*புறம்* 229). இச்செய்யுளின் அடிக்குறிப்பு "கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இன்ன நாளிற்றுஞ்சுமென அஞ்சி, அவன் துஞ்சியவிடத்துப் பாடியது" என்று கூறுகிறது (துஞ்சுதல்—இறந்துபோதல்). யா.சே.மா.சே. இரும்பொறை ஏறத்தாழ கி.பி. 170 முதல் 190 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

யா.சே.மா.சே. இரும்பொறையின் காலத்தில் சோழ நாட்டை யரசாண்டவன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டி நாட்டை யரசாண்டவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சேர நாட்டை யரசாண்டவன் செங்குட்டுவனின் மகனான குட்டுவஞ்சேரல் (கோக்கோதை மார்பன்). இவர்கள் சேரன் செங்குட்டுவன் காலத்துக்குப் பிறகு (கி.பி. 180க்குப் பிறகு) அரசாண்டார்கள்.

கணைக்கால் இரும்பொறை

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறைக்குப் பிறகு கொங்கு நாட்டை யரசாண்டவன் கணைக்கால் இரும்பொறை. இவன், முன்னவனுக்கு எந்த முறையில் உறவினன் என்பது தெரியவில்லை. இவனைப் பற்றிய முழுவரலாறுந் தெரியவில்லை. கொங்குச் சேரரின் துறைமுகமாகிய தொண்டிப்பட்டினத்தின் கோட்டைக் கதவில் கணைக்காலிரும்பொறை, தனக்கு அடங்

காத மூவனுடைய பல்லைப் பிடுங்கிப் பதித்திருந்தான் என்று அப்பட்டினத்திலிருந்த கணைக்காலிரும்பொறையின் புலவர் பொய்கையார் கூறுகிறார்.[51]

இவன் காலத்தில் சோழ நாட்டை அரசாண்டவன் செங் கணான் என்பவன். செங்கட்சோழன் என்றும் இவனைக் கூறுவர். செங்கட்சோழன் பாண்டியனையும் கொங்குச் சேரரையும் வென்று அரசாண்டான். சோழ நாட்டுப் போர் (திருப்போர்ப் புரம்) என்னும் ஊரில் செங்கணானுக்கும் கணைக்காலிரும் பொறைக்கும் போர் நடந்தது. அந்தப் போரில் கணைக்காலிரும் பொறை தோல்வியடைந்ததுமல்லாமல் சோழனால் சிறைப்பிடிக்கப்பட்டுக் குடவாயில் (கும்பகோணம்) சிறையில் வைக்கப்பட்டான். அப்போது கணைக்காலிரும்பொறையின் புலவராகிய பொய்கையார் இவனை விடுவிப்பதற்காகச் செங்கட் சோழன்மேல் *களவழி நாற்பது* என்னும் நூலைப் பாடினார்.

குடவாயிற் சிறைச்சாலையிலிருந்த கணைக்காலிரும் பொறை நீர்வேட்கை கொண்டு 'தண்ணீர் தா' என்று கேட்டபோது சிறைச்சாலையிலிருந்தவர் உடனே தண்ணீர் தராமல் காலங்கழித்துக் கொடுத்தனர். கணைக்காலிரும்பொறை அந்நீரை யுண்ணாமல் ஒரு செய்யுளைப் பாடித் துஞ்சினான் (துஞ்சினான்—உறங்கினான்). அந்தச் செய்யுள் *புறநானூற்றில்* 74ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. அச்செய்யுள் இது:

குழவி பிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்.
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே

இந்தச் செய்யுளின் அடிக்குறிப்பு இவ்வாறு கூறுகிறது: "சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழன் செங்கணானொடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு."

(திருப்போர்ப்புறம்—போர் என்னும் ஊருக்கு அருகில். பொருது—போர் செய்து. பற்றுக்கோட்பட்டு—பிடிக்கப்பட்டு. பெயர்த்துப் பெற்று—காலந்தாழ்ந்துப் பெற்று. துஞ்சிய—இறந்த, தூங்கின.)

பிற்காலத்து நூலாகிய *கலிங்கத்துப் பரணி* இதைக் கூறுகிறது. பொய்கையார் *களவழி* பாடின பிறகு அதைக் கேட்டுச் சோழன் கணைக்காலிரும்பொறையை விடுதலை செய்தான் என்று அந்நூல் கூறுகிறது.[52]

களவழி நாற்பது செங்கட் சோழனைச் செங்கண்மால் (செய்யுள் 4, 5, 11) என்றும் செங்கட்சினமால் (செய்யுள் 15, 21, 29, 30, 40) என்றும் செம்பியன் (சோழன்—செய்யுள் 6, 23, 33, 38) என்றும் சேய் (செய்யுள் 13, 18) என்றும் பைம்பூட்சேய் (செய்யுள் 34) என்றும் கூறுகிறது. தோற்றுப்போன கணைக்கா லிரும்பொறையின் பெயரைக் கூறவில்லை. 'கொங்கரை அட்டகளத்து' என்றும் (செய்யுள் 14) 'புனநாடன் வஞ்சிக்கோ' என்றும் (செய்யுள் 39) கூறுகிறது.

கணைக்கா லிரும்பொறைக்கும் செங்கட் சோழனுக்கும் இரண்டு இடங்களில் போர்கள் நடந்தன. கழுமலம் என்னும் ஊரிலும் பிறகு போர் என்னும் ஊரிலும் நடந்தன. கொங்கு நாட்டுக் கழுமலத்தில் செங்கணான் போரை வென்றான். இதைக் 'காவிரி நாடன் கழுமலம் கொண்ட நாள்' (செய். 36) 'புனல் நாடன் வஞ்சிக்கோ அட்டகளத்து' (செய். 39) என்பதனால் அறிகிறோம். கழுமலப் போரில் தோற்ற கணைக்காலிரும் பொறை பிறகு சோழ நாட்டில் போர் என்னும் இடத்தில்[53] சென்று செங்கணானுடன் போர் செய்தான். அந்தப் போரில் அவன் சிறைப்பட்டான். சிறையிலிருந்தபோது பொய்கையார் *களவழி* பாடினார். இச்செய்தியைக் *களவழி நாற்பதின்* பழைய உரைகாரர் கூறுவதிலிருந்து அறிகிறோம். அவர் கூறுவது : "சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும்பொறையும் திருப்போர்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்கா லிரும்பொறையைப் பற்றிக் கொண்டு சோழன் செங்கணான் சிறை வைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடு கொண்ட களவழி நாற்பது முற்றிற்று."

புறம் 74ஆம் பாட்டின் அடிக்குறிப்பு துஞ்சினான் என்று கூறுகிறது. துஞ்சினான் என்பதற்கு இறந்து போனான், தூங்கினான் என்று இரண்டு பொருள்கள் உண்டு. *களவழி நாற்பதின்* இறுதி வாசகம் 'பொய்கையார் களம்பாடி வீடு கொண்டார்' என்று கூறுகிறது. அதாவது *களவழி நாற்பது* பாடி, சிறையிலிருந்த கணைக்காலிரும்பொறையை விடுவித்தார் என்று கூறுகிறது. எனவே, கணைக்கா லிரும்பொறை இறக்கவில்லை என்பதும் அவன் விடுதலை யடைந்தான் என்பதும் தெரிகின்றன. இதனால், கணைக்கால் இரும்பொறை செங்கணானுக்குக் கீழடங்கி இருந்தான் என்பதும் செங்கணான் கொங்கு நாட்டின் அரசனானான் என்பதும் தெரிகின்றன. சோழன் செங்கணானும்

கணைக்கால் இரும்பொறையும் ஏறத்தாழக் கி.பி. 200க்கும் 250க்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தவராகலாம்.

சங்க காலத்துக் கொங்கு நாட்டு வரலாறு கணைக்கால் இரும்பொறையோடு முடிவடைகிறது. சேர அரசர் பரம்பரையில் இளைய வழியினரான பொறையர் கொங்கு நாட்டை ஏறத்தாழக் கி.பி. முதல் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண்டிலும் ஏறத்தாழ இருநூறு ஆண்டு அரசாண்டார்கள். அவர்களில் கடைசி அரசன் கணைக்கால் இரும்பொறை. கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானுக்குக் கீழடங்கிக் கொங்கு நாட்டை யரசாண்டான். ஆனால், சோழர் கொங்கு நாட்டை நெடுங்காலம் அரசாளவில்லை. ஏறத்தாழக் கி.பி. 250இல் தமிழகத்தைக் களப்பிரர் அல்லது களப்பாளர் என்னும் பெயருள்ள அயல்நாட்டு அரசர் கைப்பற்றிக்கொண்டு அரசாண்டார்கள். களப்பிரர், சேர சோழ பாண்டிய நாடுகளைக் கைப்பற்றி ஏறத்தாழ முந்நூறு ஆண்டு அரசாண்டார்கள். அப்போது கொங்கு நாடு களப்பிரர் ஆட்சிக்குட்பட்டிருக்க வேண்டும்.

களப்பிரர் ஆட்சிக் காலம் தமிழக வரலாற்றில் இருண்ட காலமாகத் தெரிகிறது.

குறிப்புகள்

1 சங்க காலத்தில் இரண்டு கருவூர்கள் இருந்ததையறியாமல், சென்ற தலைமுறையில் சில ஆராய்ச்சிக்காரர்கள் 'கருவூர் சேர நாட்டிலிருந்ததா, கொங்கு நாட்டிலிருந்ததா' என்பது பற்றி வாதங்கள் நிகழ்த்திக் கட்டுரைகள் எழுதினார்கள். சங்க காலத்தில் சேர நாட்டிலும் கொங்கு நாட்டிலும் வெவ்வேறு கருவூர்கள் இருந்ததை அவர்கள் அறியவில்லை.

2 *Cera Kings of the Sangam Period*, K.G. Sesha Aiyer, 1937. p. 36.

3 *A Comprehensive History of India*, Edited by K.A. Nilakanta Sastri, pp.506, 507.

4 *Cera Kings of the Sangam Period*, pp.37, 51.

5 குன்று நிலை தளர்க்கும் உருமிற்சீறி
ஒரு முற்றிருவர் ஓட்டிய ஒள்வாள்
செருமிகுதானை வெல்போரோயே (7ஆம் பத்து 3 : 10-12)
ஒருமுற்று ஒன்றாகச் சேர்த்து முற்றுகையிட்டு இருவர் -சோழ பாண்டியர்.

6 இடஞ் சிறிதென்னும் ஊக்கந் துரப்ப
ஓடுங்கா வுள்ளத் தோம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலல் மண்டிலம் (*புறம்* 8 : 3-6)
நாடு பதிபடுத்து நண்ணார் ஓட்டி
வெருவரு தானை கொடுசெருப் பலகடந்து

ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி
(7ஆம் பத்து, பதிகம் அடி 4-7)

7 வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கடன் இறுத்த வெல்போர் அண்ணல்
(7 ஆம் பத்து 10 : 20-22)

8 *The Chronology of Early Tamils*, 1932, p.124.

9 *Cera Kings of the Sangam Period*, 1937, p.44.

10 *சேரன் செங்குட்டுவன், மயிலை சீனி. வேங்கடசாமி,* 'சேர அரசர் பரம்பரை' காண்க. பக்கம். 25.

11 இவன் 'புரோசு மயக்கினான்' (7ஆம் பத்துப் பதிகம்); 'புரோசு மயக்கி' என்றது 'தன் புரோகிதனிலும்தான் அறநெறியறிந்த தென்றவாறு' என்று பழைய உரை கூறுகிறது.

12 அறங் கரைந்து வயங்கிய நாவிற் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்டு,
இருஞ்சேறாடிய மணல்மலி முற்றம் (7ஆம் பத்து 4 : 3-6)

13 புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகுபடை யறுத்த கொய்சுவல் புரவி
அலங்கும் பாண்டில் இழையணிந் தீமென
ஆனாக்கொள்கையை (7ஆம் பத்து 4:8-11).

14 "சிறுபுறமென நூறாயிரங்காணங் கொடுத்து நன்றா வென்னுங் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ" (7ஆம் பத்துப் பதிகத்தின் அடிக் குறிப்பு).

15 குண்டுகண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயில் தோட்டி வெளவினை ஏறோடு
கன்றுடை யாயந் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக் கயிறாடா வைகற் பொழுது நினையூஉ
ஆன்பயன் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
பதி பாழாக (8ஆம் பத்து 1:12-18)

16 வீயா விழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங் கெறிந்து
கழுவுள் காமூர் (அகம். 135:11-13).

17 பழவிறல்
ஓரிக்கொன்ற ஒரு பெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்போல்
கல்லென் றன்றால் ஊரே (நற். 320 : 4-7)

18 முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்

ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (*அகம்* 209 : 12-15)

19 'ஓரி, பல்பழம் பலவின் பயங்கெழு கொல்லி' (*அகம்* 208: 21-22) என்றும், 'கைவண் ஓரிகானம்' (*புறம்* 199:3) என்றும், 'வல்வில் ஓரி கானம்' (*நற்.* 6:9) என்றும் 'மாரி வண்மகிழ் ஓரி கொல்லி,' (*நற்.* 265:7) என்றும் கூறியுள்ளார். இவ்வாறு ஓரியின் கொல்லியைக் கூறின பரணர் இன்னொரு செய்யுளில் 'வெள்வேல் களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி' (*அகம்* 62:12-13) என்று கூறுகிறார். அது பொறையனுக்கு (பெருஞ்சேரல் இரும்பொறைக்கு) உரியதென்று கூறுகிறார். இதனால் பரணர் காலத்திலே ஓரிக்கு உரியதாக இருந்த கொல்லிக் கூற்றம் பெருஞ்சேரல் இரும்பொறைக்கு உரியதாயிற்று என்பது தெரிகிறது.

20 பல்பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர் நூறி (8ஆம் பத்து 8:7-9)
பல்வேல் தானை யதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சி தந்தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேர லிரும்பொறை
(8ஆம் பத்து, பதிகம்)

21 இது பற்றி மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதிய *மறைந்து போன தமிழ்நூல்கள்* என்னும் புத்தகத்தில் காண்க.

22 கொல் களிற்றியானை யெருத்தம் புல்லென
வில்குலை யறுத்துக் கோலின் வாரா
வெல்போர் வேந்தர் முரசுகண் போழ்ந்தவர்
அரசுவா வழைப்பக் கோடறுத் தியற்றிய
அணங்குடை மரபிற் கட்டின் மேலிருந்து
தும்பை சான்ற மெய்தயங் குயக்கத்து
நிறம்படு குருதி புறம்படின் அல்லது
மடையெதிர் கொள்ளா அஞ்சுவரு மரபில்
கடவுள் அயிரை (8ஆம் பத்து 9:10-18)

23 முழுதுணர்ந்து ஒழுகும் நரை மூதாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெருமநின் படிமை யானே (8ஆம் பத்து 4:24-28)
"நரைமூதாள னென்றது புரோகிதனை" (பழைய உரை). தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்குப் பசும்பூட் பொறையன்

என்றும் (*அகம்* 308:4) பெரும்பூட் பொறையன் என்றும் (*குறுந்.* 89:4) சிறப்புப் பெயர் உண்டு.

24 சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
விறுசால் புதல்வன் பெற்றனை (8ஆம் பத்து 4 : 19-21)

25 *A Comprehensive History of India*, Vol. II, Edited by K.A. Nilakanta Sastri, 1957, p. 506,

26 *புறத்திரட்டு*, ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை பதிப்பு, 1939, பக்கம், xiv - xivi.

27 நாரரி நறவிற் கொங்கர் கோவே (9ஆம் பத்து 8:19)
கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே
மட்டப் புகாவிற் குட்டுவர் ஏறே
எழாஅத் துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை
இரங்குநீர்ப் பரப்பின் மாந்தையோர் பொருந
வெண்பூ வேளையொடு சுரைதலை மயக்கிய
விரவுமொழிக் கட்டூர் வயவர் வேந்தே
(9ஆம் பத்து 10: 25-30)

வளைகடல் முழவின் தொ[illegible]டியோர் பொருந
(9ஆம் பத்து 8:21)

28 பாரி இறந்த பிறகு பாரி மகளிரைக் கபிலர் விச்சிக்கோவிடம் அழைத்து வந்து அவர்களை மணஞ்செய்து கொள்ளும்படி வேண்டினார். அதற்கு அவன் இணங்கவில்லை (*புறம்* 200).

29 நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணி பழையன் பட்டெனக்
கண்டது நோனனாகித் திண்தேர்க்
கணையன் அகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூண் சென்னி
(*அகம்* 44:7-14).

30 *Ceras of Sangam Period*, K.G. Sesha Aiyar, p. 68.

31 *பெரிய புராண ஆராய்ச்சி*, பக்கம் 86-94; 'Date of Ko-Chenganan, *Journal of Madras University*, Vol. xxxi, No. 2, pp.177-82).

32 நன்மரம் துவன்றிய நாடுபல தரீஇப்
பொன்னவிர் புனைசெயல் இலங்கும் பெரும்பூண்
ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள்வேல் முத்தைத் தம்மென
....
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே (9ஆம் பத்து 5)

இந்தச் செய்யுளின் பழைய உரை இதற்கு இவ்வாறு விளக்கங் கூறுகிறது: "இளஞ்சேரலிரும்பொறை, சென்னியர் பெருமானுடைய நாடுகள் பலவற்றையும் எமக்குக் கொண்டு தந்து அச்சென்னியர் பெருமானை எம்முன்னே பிடித்துக் கொண்டு வந்து தம்மினெனத் தம்படைத் தலைவரை ஏவச் சென்னியர் பெருமான் படையாளர் பொருது தோற்றுப் போகட்ட வெள்வேல்... கபிலன் பெற்ற ஊரினும் பல."

33 பொத்தி யாண்ட பெருஞ்சோழனையும்
வித்தை யாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று (9ஆம் பத்து பதிகம்)

34 பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தையாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்து பிறர்க்குதவி
....
அருந்திறல் மரபில் பெருஞ் சதுக்க மாந்த
வெந்திறல் பூதரைத் தந்திவண் நிறீஇ
ஆய்ந்த மரபிற் சாந்திவேட்டு (9ஆம் பத்து, பதிகம்)

35 சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோன்
(*சிலம்பு*, நடுகற் காதை 147-148)

சதுக்கப்பூதர் என்பதற்குச் சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியர், 'அமராபதியிற் பூதங்கள்' என்று உரை எழுதியுள்ளார். கொங்கு நாட்டுக் கருவூருக்கு (வஞ்சிநகர்) பிற்காலத்தில் அமராபதி என்றும் பெயர் வழங்கிற்று. இதைத்தான் அவர் அவ்வாறு எழுதினார்.

36 மையூர்கிழானைப் பற்றியும் அவன் மகள் அந்துவஞ் செள்ளையைப் பற்றியும் திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி பல யூகங்களைக் கூறித் தவறு செய்கிறார். அந்துவனுக்கு (அந்துவன் பொறையனுக்கு) மையூர்கிழான் என்று பெயர் உண்டு என்றும் அந்துவன் பொறையனே அமைச்சனான மையூர்கிழான் என்னும் பெயருடன் இருந்தான் என்றும் இல்லாததைப் புனைந்துரைக்கிறார்.
A Comprehensive History of India, Vol. II, Edited by K.A. Nilakanta Sastri, 1957, pp. 506, 507, 526.

37 *A Comprehensive History of India,* Vo. II, 1957, pp.522, 539; *A History of South India,* 1955, p.119.
சாஸ்திரியைப் போலவே கே.ஜி. சேஷையரும் எழுதியுள்ளார்.
Cera Kings of the Sangam Period, K.G. Sesha Aiyer, 1937, p.52.

38 *The Chronology of the Early Tamils*, K.N. Sivaraja Pillai, 1932, p. 136.

39 *Cera Kings of the Sangam Period,* K.G. Sesha Aiyar, 1937, p. 44.

40 'Introduction,' *The Silapadikaram,* English Translation by V.R. Ramachandra Dikshidar, 1939, p. 12, 13.

41 *சேரன் செங்குட்டுவன்*, சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு, மயிலை சீனி. வேங்கடசாமி, *Annals of Oriental Research*, University of Madras, Vol. xxi, Part I, 1966, பக்கம் 24.

42 *சேரன் வஞ்சி* , திவான்பகதூர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், 1946, பக்கம் 121, 122.

43 *1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்* என்னும் பெயரினால் ஆங்கிலத்தில் முதன்முதலாகத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை எழுதியவர் கனகசபைப் பிள்ளையவர்கள். அவர் காலத்தில் சங்க இலக்கியங்கள் அச்சில் வராமல் ஏட்டுச்சுவடிகளாக இருந்தன. ஆகவே, சங்க இலக்கியங்களை ஏட்டுச்சுவடியில் படித்து அந்நூலை எழுதினார். அதில் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, சேரன் செங்குட்டுவனுடைய மகன் என்று பிழையாக எழுதினார். அவர் அறியாமல் செய்த தவற்றை அவருக்குப் பிறகு வந்த டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்காரும் அப்படியே எழுதிவிட்டார். அவரைப் பின்பற்றி பானர்ஜி என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய *ஜூனியர் ஹிஸ்டரி ஆப் இந்தியா* என்னும் நூலில் 94ஆம் பக்கத்தில் அதே தவற்றைச் செய்துவிட்டார். கே.ஜி. சேஷையர் அவர்கள் யானைக்கட்சேய் மாந்தரம் சேரல் இரும்பெறையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். 'The last Cera of the Sangam Period' by K.G. Sesha Aiyer, *Dr. S.K. Aiyengar Commemoration Volume*, pp. 217-221.

44 *I.A*, xxix, N.2, p. 250, *The Colas*, Vol I, K.A.Nilakanta Sastri, 1935, p. 49-50.

45 தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் யரஞ்செய் யவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங்
கடிமரந் தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பில் கடிமனை இயம்ப
ஆங்கினி திருந்த வேந்தனொ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே (*புறம்* 36:5-13)
இந்தச் செய்யுளின் அடிக்குறிப்பு "சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் முற்றியிருந்தானைப் பாடியது" என்று கூறுகிறது.

46 வேந்து புறங்கொடுத்த வீய்ந்துகு பறந்தலை
மாட மயங்கெரி மண்டிக் கோடிறுபு
உருமு எறி மலையின் இருநிலஞ்சேர (*புறம்* 373:19-21)

47 எழு சமங்கடந்த எழுவுறழ் திணிதோள்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ
யாங்ஙன மொழிகோ யானே ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்டு

இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி நாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே (*புறம்* 39: 11-18)

இமயஞ்சூட்டிய ஏமவிற்பொறி—சேர அரசரின் முன்னோன் ஒருவன் இமயமலை யுச்சியில் பாறை யொன்றின்மேல் பொறித்து வைத்த வில்லின் அடையாளம். வானவன்—சேர அரசர் பரம்பரைக்குப் பொதுப் பெயர். வாடாவஞ்சி — வஞ்சிமாநகரமாகிய கருவூர்.

48 சேரலர்

சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி யார்ப்பெழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை யடுபோர்ச் செழியன் (*அகம்* 149:7-13)

49 கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுறை முசிறி முற்றிக்
களிறுபட வெருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் ணுறுநர் (*அகம்* 57:14-17)

50 *The Secret Chamber*, V.T. Indo Chudan, 1969, pp. 83, 84.

51 மூவன்

முழுவலி முள்ளயிறு அழுத்திய கதவில்
கானலந்தொண்டிப் பொருநன் வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன் (*நற்*. 18 - 2-5)

52 களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய
உதியன் கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட அவனும்
(*கலிங்கத்துப்பரணி*, இராசபாரம்பரியம் தாழிசை 18)

உதியன்—சேரன், இங்குக் கணைக்காலிரும்பொறையைக் குறிக்கிறது. கால்வழித்தளை—காலில் இடப்பட்ட விலங்கு.

53 போர் அல்லது போஒர் என்பது சோழ நாட்டுக் காவிரிக் கரை மேல் இருந்த ஓர் ஊர். அவ்வூரிலிருந்த பழையன் என்பவன் சோழரின் சேனைத் தலைவன் (*அகம்* 186 :15-16; 326 : 9-12; *நற்*. 10:7-8). போர் என்னும் ஊரில் வேறு சில போர்களும் நடந்திருக்கின்றன (*புறம்* 62, 63, 368 இவற்றின் அடிக்குறிப்புக் காண்க).

செங்கட் சோழன், கணைக்கால் இரும்பொறை காலம்

செங்கட் சோழனும் கணைக்கால் இரும்பொறையும், கடைச்சங்க காலத்தின் இறுதியில், கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர்கள் என்று கூறினோம். இவர்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்தவர்கள் என்று சில சரித்திரக்காரர்கள் தவறாகக் கூறியுள்ளதை இங்கு விளக்கிக் காட்ட விரும்புகிறோம். சோழன் செங்கணான் கி.பி. 6ஆம் நூற்றாண்டில், பல்லவ அரசர் காலத்தில் இருந்தான் என்று இவர்கள் எழுதியுள்ளனர். இவர்கள் இவ்வாறு கருதுவதற்குச் சான்று கிடையாது. இவர்கள் காட்டும் ஒரே சான்றும் தவறானது. அதாவது, சங்க காலப் புலவரான பொய்கையாரும் பக்தி இயக்கக் காலத்தில் இருந்த பொய்கையாழ்வாரும் ஒருவரே என்று இவர்கள் தவறாகக் கருதுவதுதான்.

தமிழர் வரலாறு என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய பி.தி. சீனிவாச அய்யங்கார் முதன்முதலாக இந்தத் தவறு செய்தார். *களவழி* பாடிய பொய்கையாரும் விஷ்ணு பக்தரும் பல்லவர் காலத்திலிருந்தவருமான பொய்கையாழ்வாரும் ஒருவரே என்று தவறாகக் கருதிக்கொண்டு, பொய்கையாரால் *களவழியில்* பாடப்பட்ட சோழன் செங்கணான் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்தவன் என்று எழுதினார்.[1] இதே காரணத்தைக் கூறி மு.இராகவையங்காரும், *களவழி நாற்பது* பாடிய பொய்கையாரும் *முதல் திருவந்தாதி* பாடிய பொய்கையாழ்வாரும் ஒருவரே என்று எழுதினார். டிவி. மகாலிங்கமும் தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தென்னிந்தியப் பழைய வரலாற்றில் காஞ்சீபுரம்* என்னும் நூலில், இவர்கள் கூறியதை அப்படியே ஏற்றுக்கொண்டு, சோழன் செங்கணான் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கூறியதோடு அல்லாமல் அவன் சிம்மவிஷ்ணு பல்லவன் காலத்தில் இருந்தவன் என்றும் எழுதிவிட்டார்.[2] இவர்கள் இப்படி எழுதியிருப்பது 'கங்காதரா மாண்டாயோ' என்னும் கதை போலிருக்கிறதே தவிர உண்மையான சான்றும் சரியான ஆதாரமும் இல்லாத கருத்தாகும்.

பொய்கையார் என்னும் பெயர் பொய்கையூரில் பிறந்தவர் என்னும் காரணப் பெயர். பொய்கையூர்கள் வெவ்வேறு நாடுகளில் இருந்திருக்கலாம். குளப்பாக்கம், குளத்தூர், ஆற்றூர், ஆற்றுப்பாக்கம் என்னும் பெயர்கள் போல. வெவ்வேறு ஊரிலிருந்த பொய்கையார்களை ஒரே பொய்கையார் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? *களவழி* பாடிய பொய்கையாரும், *முதல் திருவந்தாதி* பாடிய பொய்கையாரும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகளில் இருந்தவர்கள். *களவழி நாற்பது* பாடிய பொய்கையார் மேற்குக் கடற்கரையில் இருந்த தொண்டிப் பட்டினத்தில் சேர நாட்டில் கடைச் சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்தவர். *முதல் திருவந்தாதி* பாடிய பொய்கையாழ்வார் கிழக்குக் கடற்கரையைச் சேர்ந்த தொண்டை நாட்டில் பிறந்து பக்தி இயக்கக் காலத்தில் (பல்லவ ஆட்சிக் காலத்தில்) இருந்தவர். (பக்தி இயக்கக் காலம் என்பது கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் உள்ள காலம்.)

பக்தி இயக்கக் காலத்தில், ஏறத்தாழ கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்த பொய்கையாழ்வார் மானிடரைப் பாடாமல், விஷ்ணுவையே பாடித் தொழுதுகொண்டிருந்தவர். அவர் எந்த அரசனையும் வணங்கித் துதித்துப் பாடியவர் அல்லர். 'வாய் அவனை அல்லது வாழ்த்தாது' (11) என்றும் 'மால் அடியை அல்லால் மற்றும் எண்ணத்தான் ஆமோ' (31) என்றும் 'நா நாளும் கோள் நாகணை யான் குரைகழலே கூறுவதே' (63) என்றும் 'நாடிலும் நின் அடியே நாடுவன் நாள்தோறும் பாடிலும் நின் புகழே பாடுவன்' (83) என்றும் 'மாயவனை அல்லாமல் இறையேனும் ஏத்தாது என் நா' (94) என்றும் உறுதி கொண்டிருந்த பொய்கையாழ்வார் மனிதரைப் பாடாத திருமால் பக்தர்.

ஆனால், கடைச்சங்க காலத்தில் இருந்த பொய்கையாரோ, மனிதனாகிய செங்கட்சோழன் மேல் *களவழி நாற்பது* பாடிய புலவர். மேலும் அவர், சேரமான் கோக்கோதை மார்பனையும், பொறையனையும் புகழ்ந்து பாடியுள்ளார். 'தெறலருந்தானைப் பொறையன் பாசறை'யைப் பாடியுள்ளார் (*நற்.* 18). மேலும், சேரமான் கோக்கோதைமார்பனை அவர்,

> கள் நாறும்மே கானலத் தொண்டி
> அஃதெம் ஊரே, அவன் எம் இறைவன் (*புறம்* 48)
> (அவன் - கோதை மார்பன்)

> நாடன் என்கோ ஊரன் என்கோ
> பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ
> யாங்கன மொழிகோ ஓங்குவாள் கோதையை (*புறம்* 49)

என்றும் பாடியுள்ளார். செங்கண் சோழனையும், கொங்கு நாட்டுப் பொறையனையும் சேரமான் கோக்கோதை மார்பனையும் பாடிய இந்தப் பொய்கையார், திருமாலையோ அல்லது வேறு கடவுளையோ பாடியதாக ஒரு செய்யுளேனும் கிடைக்கவில்லை.

எனவே, மனிதரை (அரசரைப்) பாடிக்கொண்டிருந்த பொய்கையாரும், மானிடரைப் பாடாமல் திருமாலையே பாடிக்கொண்டிருந்த பொய்கையாழ்வாரும் ஒருவராவரோ? வெவ்வேறு காலத்திலிருந்த வெவ்வேறு பொய்கையார்கள் எப்படி ஒரே பொய்கையார் ஆவர்? பெயர் ஒற்றுமை மட்டும் இருந்தால் போதுமா? எனவே, பொய்கையார் வேறு பொய்கையாழ்வார் வேறு என்பது நன்றாகத் தெரிகிறது.

இனி டி.வி. மகாலிங்கம் கூறுவதை ஆராய்வோம். தொண்டை நாட்டை யரசாண்ட பல்லவ அரசர் மரபைச் சேர்ந்த சிம்மவர்மனுடைய மகனான சிம்மவிஷ்ணுவின் காலத்தில், *புறநானூற்றிலும் களவழி* நாற்பதிலுங் கூறப்பட்ட செங்கணான் இருந்தான் என்று இவர் எழுதுகிறார்.[3] சிம்மவிஷ்ணு சோழ நாட்டின் மேல் போருக்குச் சென்றபோது அவனை எதிர்த்தவன் செங்கட் சோழன் என்று கூறுகிறார். செங்கட் சோழனும் சிம்மவிஷ்ணுவும் 6ஆம் நூற்றாண்டில் இருந்தவர்கள் என்றும், செங்கணான் சேரனை (கணைக்காலிரும்பொறையை) வென்ற பிறகு அவனுடைய கடைசிக் காலத்தில் சிம்மவிஷ்ணு செங்கணானை வென்றான் என்றும் எழுதுகிறார்.[4] இவர் கூறுவது இவருடைய ஊகமும் கற்பனையும் ஆகும். பல்லவ சிம்மவிஷ்ணு சோழ நாட்டை வென்றான் என்று பல்லவரின் பள்ளன்கோவில் செப்பேடு கூறுகிறது (சுலோகம் 5). சிம்மவிஷ்ணு இன்னொரு சிம்மவிஷ்ணு என்பவனை வென்றான் என்று அதே சாசனம் (சுலோகம் 4) கூறுகிறது. இதிலிருந்து சோழ நாட்டை யரசாண்ட சிம்மவிஷ்ணுவைத் தொண்டை நாட்டையரசாண்ட பல்லவ சிம்மவிஷ்ணு வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினான் என்பது தெரிகிறது. ஆனால், மகாலிங்கம், பல்லவ சிம்மவிஷ்ணு, சோழன் செங்கணானுடன் போர் செய்து சோழ நாட்டை வென்றான் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? சாசனம் கூறுகிற பெயரை மாற்றி இவர் தம் மனம் போனபடி கூறுவது ஏற்கத்தக்கதன்று.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டையரசாண்டவர் களப்பிர அரசர்கள். களப்பிரருக்குக் கீழ்ச் சோழ அரசர் அக்காலத்தில் சிற்றரசராக இருந்தார்கள். ஆகவே, சுதந்தரமும் ஆற்றலும் படைத்திருந்த செங்கட் சோழன், களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குக் கீழடங்கிச் சிற்றரசனாக வாழ்ந்திருக்க முடியாது. அவன், களப்பிரர் ஆட்சிக் காலத்துக்கு முன்பு சோழர்கள் சுதந்தரர்களாக ஆட்சி செய்துகொண்டிருந்த காலத்தில்

தான் வாழ்ந்திருக்க வேண்டும். கடைச்சங்க காலத்துக்குப் பிறகு (கி.பி. 250க்குப் பிறகு) சோழ நாடு களப்பிரர் ஆட்சிக்குக் கீழடங்கியிருந்தது. ஏறத்தாழ கி.பி. 575இல் பல்லவ சிம்மவிஷ்ணு சோழ நாட்டைக் களப்பிரரிடமிருந்து வென்று கைப்பற்றினான். பிறகு, சோழ நாடு கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் பல்லவர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் சோழர்கள் மறுபடியும் சுதந்திரம் பெற்றுப் பேரரசர் களாக அரசாண்டார்கள். ஆகவே, கி.பி. மூன்றாம் நூற்றாண்டி லிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் சோழர்கள் களப்பிர ருக்கும் பின்னர் பல்லவருக்கும் கீழடங்கிச் சிற்றரசர்களாக இருந்த காலத்தில் சோழன் செங்கணான் இருந்திருக்க முடியாது. செங்கணான், களப்பிரர் சோழ நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னரே கி.பி. 250க்கு முன்பு இருந்தவனாதல் வேண்டும்.

பள்ளன்கோவில் செப்பேடு கூறுகிறபடி, பல்லவ சிம்ம விஷ்ணு வென்ற சோழ நாட்டுச் சிம்மவிஷ்ணு களப்பிர அரசன் என்பது சரித்திர ஆசிரியர்கள் முடிவு செய்துள்ள உண்மையாகும். சரித்திரக் காரர்களின் இந்த முடிவுடன் மகாலிங்கம் புதிதாகக் கற்பனையாகவும் ஊகமாகவும் கூறுகிற செய்தி முரண்படுகிறது.

பொய்கையாரைப் பொய்கையாழ்வாருடன் இணைத்துக் குழப்புவதும், பிறகு பொய்கையார் களவழியில் பாடிய செங்கணானைக் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று இணைத்துக் குழப்புவதும், பிறகு அந்தச் செங்கணானைப் பல்லவ சிம்மவிஷ்ணுவின் சமகாலத்தவன் என்று ஊகிப்பதும், பிறகு செங்கணானைச் சோழ நாட்டில் அரசாண்ட சிம்மவிஷ்ணுவுடன் (களப்பிர அரசனுடன்) இணைத்துக் குழப்புவதும் உண்மையான சரித்திரத்துக்கு உகந்ததன்று. முதற்கோணல் முற்றுங்கோணல் என்னும் பழமொழி போல, பொய்கையாழ்வாரில் தொடங்கிய தவறு பல தவறுகளில் வந்து முடிந்தது.

எனவே, நாம் தொடக்கத்தில் கூறியதுபோல, சோழன் செங்கணானும் அவன் வென்ற கணைக்கால் இரும்பொறையும் அவர்கள் காலத்திலிருந்த பொய்கையாரும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தார்கள் என்பதே சரியாகும்.

குறிப்புகள்

1 *History of the Tamils*, P.T. Srinivasa Iyengar, 1929, pp. 608 - 610.
2 *Kanchipuram in Early South Indian History*, T.V. Mahalingam, 1969, pp.49, 58-59.
3 *K.E.S.I.H.*, p. 49
4 *K.E.S.I.H*, pp. 58,59.

வேறு கொங்குச் சேரர்

சங்க இலக்கியங்கள், அரசர் வரலாறுகளைத் தொடர்ச்சியாகவும் வரன்முறையாகவும் கூறவில்லை. அவ்வாறு கூறுவது அச்செய்யுள்களின் நோக்கமும் அன்று. ஆகையால், அவை கூறுகிற அரசர் வரலாறுகளைச் சான்றுகளுடன் சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ந்து கொள்ளவேண்டும். இந்த முறையில் கொங்கு நாட்டுச் சேர அரசர் பரம்பரையை ஆராய்ந்தோம். சங்க இலக்கியங்களில் காணப்படாத கொங்குச் சேரர் சிலர் அக்காலத்துப் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றனர். கொங்கு நாட்டுப் புகழியூரில் ஆறு நாட்டார் மலைக் குகையில் எழுதப்பட்டுள்ள இரண்டு பிராமி எழுத்துச் சாசனங்கள் மூன்று கொங்குச் சேர அரசர்களின் பெயரைக் கூறுகின்றன. இந்தப் பெயர்கள் புதியவை. இரண்டு சாசனங்களும் ஒரே விஷயத்தைக் கூறுகின்றன. இளவரசனாக இருந்த இளங்கடுங்கோ என்பவன், அமணன் ஆற்றூர்ச் செங்காயபன் என்னும் முனிவருக்கு ஆறு நாட்டார் மலைக்குகையில் கற்படுக்கைகளை யமைத்துத் தானஞ்செய்ததை இவை கூறுகின்றன. தானங் கொடுத்த இளங்கடுங்கோவின் தந்தை பெருங்கடுங்கோவையும் அத்தந்தையின் தந்தையாகிய கோ ஆதன் சேரலிரும்பொறையையும் இந்தச் சாசனங்கள் கூறுகின்றன. இச்சாசனங்களின் வாசகங்கள் இவை:

1 அமணன் ஆற்றூர் செங்காயபன் உறைய கோ ஆதன் சேரலிரும்பொறை மகன் பெருங் கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ இளங்கோ ஆக அறத்த கல்.

2 அமணன் ஆற்றூர் செங்காயபன் உறைய கோ ஆதன் சேரலிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் கடுங்கோ இளங்கடுங்கோ ஆக அறுத்த கல்.

இவ்விரண்டு கல்வெட்டுகளும் ஒரே செய்தியைக் கூறுகின்றன. இவற்றில், பாட்டனான கோ ஆதன் சேரலிரும் பொறையும் தந்தையான பெருங்கடுங்கோனும் அவனுடைய மகனான இளங்கடுங்கோனும் கூறப்படுகின்றனர். இளங் கடுங்கோ, இளவரசனாக இருந்தபோது இந்தத் தானத்தை இம் முனிவருக்குச் செய்தான். இந்த மூன்று அரசர்களைப் பற்றிப் புகழியூர்க் கல்வெட்டில் கூறியுள்ளோம்.

ஆதனவினி

கொங்குச் சேர அரசர் பரம்பரையைச் சேர்ந்தவன் ஆதனவினி. இவன் கொங்கு நாட்டின் ஒரு சிறுபகுதியை யரசாண்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. *ஐங்குறுநூறு* முதலாவது மருதத்திணையில், வேட்கைப் பத்து என்னும் முதற்பத்தில் இவன் பெயர் கூறப்படுகிறது.

வாழி யாதன் வாழி யவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க

வாழி யாதன் வாழி யவினி
விளைக வயலே வருக விரவலர்

வாழி யாதன் வாழி யவினி
பால்பல வூறுக பகடுபல சிறக்க

வாழி யாதன் வாழிய வினி
பகைவர் புல்லார்க பார்ப்பா ரோதுக

வாழி யாதன் வாழி யவினி
பசியில் லாகுக பிணிசேண் நீங்குக

வாழி யாதன் வாழி யவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக

வாழி யாதன் வாழி அவனி
அறம்நனி சிறக்க அல்லது கெடுக

வாழி யாதன் வாழி யவினி
யரசுமுறை செய்க களவில் லாகுக

வாழி யாதன் வாழி யவினி
நன்று பெரிது சிறக்க தீதிலலாகுக

வாழி யாதன் வாழி யவினி
மாரி வாய்க்க வளநனி சிறக்க

இவ்வாறு இவன் பத்துச் செய்யுட்களிலும் வாழ்த்தப் படுகிறான். இதன் பழைய உரை, "ஆதனவினி யென்பான் சேரமான்களிற் பாட்டுடைத் தலைமகன்" என்று கூறுகிறது. இவ்வரசனைப் பற்றி வேறொன்றுந் தெரியவில்லை.

ஐங்குறுநூறு யா.க.சே.மா.சேரல் இரும்பொறையின் காலத்தில் தொகுக்கப்பட்ட நூலாகையால், அந்நூலில் கூறப்படுகிற ஆதன் அவினி, இவ்வரசன் காலத்திலோ அல்லது இவனுக்கு முன்போ இருந்தவனாதல் வேண்டும்.

கொங்குச் சேரர் பரம்பரை

1. சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை.
அந்துவன்பொறையன் = பொறையன் பெருந்தேவி
(7ஆம் பத்து, பதிகம்) (ஒருதந்தையின் மகள்)

|

2. செல்வக்கடுங்கோ வாழியாதன் = வேளாவிக் கோமான் பெருந்தேவி. 7ஆம் பத்தின் தலைவன். 25 ஆண்டு ஆண்டான். சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன் இவனே. இவனுக்கு இரண்டு மக்கள் 'இளந் துணைப் புதல்வர்' இருந்தார்கள் (7ஆம் பத்து 10 : 21)

|

3. பெருஞ்சேரல் இரும் பொறை (தகடூர் எறிந்தவன்) 17ஆண்டு அரசாண்டான். 8ஆம் பத்தின் தலைவன்

|

5. யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (பெருஞ் சேரல் இரும்பொறையின் மகன் எனத் தோன்று கிறான். 10ஆம் பத்தின் தலைவன் இவனாக இருக் கலாம்.

|

6. சேரமான் கணைக்கால் இரும்பொறை (இவன் யானைக்கட்சேயின் மகனா, இளஞ்சேரல் இரும் பொறையின் மகனா என்பது தெரியவில்லை)

குட்டுவன் இரும்பொறை = வேண்மாள் அந்துவஞ் செள்ளை, மையூர்கிழான் மகள் (9ஆம் பத்து, பதிகம்)

|

4. இளஞ்சேரல் இரும் பொறை. 16 ஆண்டு அரசாண்டான் (9ஆம் பத்துத் தலைவன்)

சேர அரசர் பரம்பரை

மூத்தவழி (சேர நாடு)

- உதியன் சேரல்
  - குடக்கோ நெடுஞ்சேரலாதன் (2 ஆம் பத்து, 58 ஆண்டு அரசாண்டான்)
    - களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் (4ஆம் பத்து, 25 ஆண்டு அரசாண்டான்)
    - சேரன் செங்குட்டுவன் (5ஆம் பத்து, 55 ஆண்டு அரசாண்டான்
      - குட்டுவன் சேரல்
    - ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் (6ஆம் பத்து, 38 ஆண்டு அரசாண்டான்)
    - இளங்கோ அடிகள் (சிலப்பதிகார (ஆசிரியர்)
  - பல்யானைச் செல்கெழுகுட்டுவன் (3 ஆம் பத்து, 25 ஆண்டு அரசாண்டான்)

இளைய வழி (கொங்கு நாடு)

- அந்துவன் பொறையன்
  - செல்வக்கடுங்கோ வாழியாதன் (7ஆம் பத்து, 25 ஆண்டு அரசாண்டான்)
    - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை (8ஆம் பத்து, 17 ஆண்டு அரசாண்டான்)
      - யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை
        - கணைக்கால் இரும்பொறை
    - குட்டுவன் இரும்பொறை
      - இளஞ் சேரல் இரும்பொறை (9ஆம் பத்து, 16 ஆண்டு அரசாண்டான்

இரும்பொறை அரசர்களின் கால நிர்ணயம்

இனி, கொங்கு நாட்டைக் கடைச்சங்க காலத்தில் அரசாண்ட சேர மன்னர்களின் காலத்தை நிர்ணயிக்க வேண்டியது கடமையாகும். (காலத்தைக் கூறாத சரித்திரம் சரித்திரம் ஆகாது.) இந்த அரசர்களில் மூன்று பேர் (7, 8, 9ஆம் பத்து) ஒவ்வொருவரும் இத்தனையாண்டு அரசாண்டனர் என்பதைப் பதிற்றுப்பத்துப் பதிகக் குறிப்புகள் கூறுகின்றன. 7ஆம் பத்தின் தலைவனான செல்வக்கடுங்கோ வாழியாதன் 25 ஆண்டும், இவன் மகன் 8ஆம் பத்துத் தலைவனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை 17ஆண்டும், இவனுடைய தம்பி மகன் 9ஆம் பத்துத் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறை 16 ஆண்டும் அரசாண்டனர் என்று அந்தக் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால், இவர்களுக்கு முன்னும் பின்னும் அரசாண் டவர் ஒவ்வொருவரும் எத்தனையாண்டு அரசாண்டனர் என்பது தெரியவில்லை. கிடைத்துள்ள குறிப்புகளைக் கொண்டு இவர்களின் காலத்தை ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

இந்தக் கால நிர்ணயத்திற்கு அடிப்படையான கருவியாக இருப்பது செங்குட்டுவன்—கஜபாகு சமகாலம் ஆகும். செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்து விழாச் செய்தபோது, அவ்விழாவுக்கு வந்திருந்த அரசர்களில் இலங்கை யரசனான கஜபாகுவும் (முதலாம் கஜபாகு) ஒருவன். முதலாம் கஜபாகு இலங்கையை கி.பி. 171 முதல் 191 வரையில் அரசாண்டான் என்று மகாவம்சம், தீபவம்சம் என்னும் நூல்களில் அறிகிறோம். சரித்திரப் பேராசிரியர்கள் எல்லோரும் இந்தக் கால நிர்ணயத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (கஜபாகு, செங்குட்டுவனைவிட வயதில் இளயவன்). செங்குட்டு வன் பத்தினிக் கோட்ட விழாச் செய்தபோது அவனுடைய ஆட்சியாண்டு ஐம்பது. அவன் ஆட்சிக்கு வந்தபோது (இளவரசு ஏற்றபோது) அவன் இருபது வயதுடையவனாக இருந்தான் என்று கொள்வோமானால், அவனுடைய ஐம்பதாவது ஆட்சியாண்டில் அவனுக்கு வயது எழுபது இருக்கும். செங்குட்டுவன் தன்னுடைய ஐம்பதாவது ஆட்சியாண்டில் (அதாவது தன்னுடைய 70ஆம் வயதில்) கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து விழாக் கொண்டாடினான்.

வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை

(*சிலம்பு*, நடுகல். 129-132)

கஜபாகு வேந்தன் தன்னுடைய எத்தனையாவது ஆட்சி யாண்டில் பத்தினிக் கோட்டத்துக்கு வந்தான் என்பது தெரியவில்லை. அவனுடைய ஆட்சிக் காலத்தின் இடைப்பகுதியில் உத்தேசமாகக் கி.பி. 180இல் கஜபாகு பத்தினிக் கோட்டத்துக்கு வந்தான் என்று கொள்ளலாம். அப்போது செங்குட்டுவனின் ஆட்சி யாண்டு ஐம்பது. அவன் 55 ஆண்டு ஆட்சி செய்தான் என்று *பதிற்றுப்பத்து* ஐந்தாம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. ஆகவே, அவன் உத்தேசம் கி.பி. 185ஆம் ஆண்டில் காலமானான் என்று கருதலாம். அதாவது, சேரன் செங்குட்டுவன் உத்தேசமாக கி.பி. 130 முதல் 185 வரையில் அரசாண்டான் என்று நிர்ணயிக்கலாம். செங்குட்டுவனுடைய ஆட்சிக் காலத்தை உத்தேசமாக நிர்ணயித்துக்கொண்டபடியால், இதிலிருந்து கொங்கு நாட்டுச் சேர அரசர் அரசாண்ட காலத்தை (ஏறத்தாழ) எளிதில் நிர்ணயித்துக்கொள்ள முடியும். இதற்குச் *சிலப்பதிகாரக்* காவியம் நமக்கு மீண்டும் உதவி செய்கிறது.

9ஆம் பத்தின் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறை, கொங்கு நாட்டைப் பதினாறு யாண்டு அரசாண்டான் என்று பதிகக் குறிப்புக் கூறுகிறது. இளஞ்சேரல் இரும்பொறை, சேரன் செங்குட்டு வனின் தாயாதிச் சகோதரனுடைய மகன் என்பதை அறிவோம்.

செங்குட்டுவன் சேர நாட்டை யரசாண்ட காலத்தில் இளஞ்சேரலிரும்பொறை கொங்கு நாட்டை யரசாண்டான். ஆனால், செங்குட்டுவனுடைய ஆட்சிக் காலத்திலேயே, அவன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்ட விழாக் செய்வதற்கு முன்னமேயே, இவன் இறந்து போனான். அதாவது, செங்குட்டுவனுடைய 50ஆவது ஆட்சி யாண்டுக்கு முன்பே, (செங்குட்டுவனுடைய 70ஆவது வயதுக்கு முன்னமே, உத்தேசம் கி.பி. 180க்கு முன்னமே) இளஞ்சேரல் இரும்பொறை இறந்து போனான். இதைச் *சிலப்பதிகாரத்திலிருந்து* அறிகிறோம்.

சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோன் ஆயினும்
மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்

(*சிலம்பு*, நடுகல் 147-150)

சதுக்கப்பூதர் என்னும் தெய்வங்களை வஞ்சியில் (கொங்கு நாட்டுக் கருவூர் வஞ்சியில்) அமைத்தவன் இளஞ்சேரல் இரும்பொறை யாவன். இதை இவனைப் பாடிய 9ஆம் பத்துப் பதிகமுங் கூறுகிறது.

அருந்திறல் மரபில் பெருஞ்சதுக் கமர்ந்த
வெந்திறல் பூதரைத் தந்திவண் நிறீஇ
ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை
(9ஆம் பத்துப் பதிகம்)

இதனால் கொங்கு நாட்டை யரசாண்ட இளஞ்சேரலிரும் பொறை, சேர நாட்டை யரசாண்ட செங்குட்டுவனின் ஆட்சிக்காலத்திலேயே (பத்தினிக் கோட்டம் அமைப்பதற்கு முன்பே) இறந்து போனான் என்று திட்டமாகத் தெரிகிறது. கி.பி. 175க்கு முன்னமே இறந்துபோனான் என்று தெரிவதால் (உத்தேசம்) கி.பி. 170இல் இவன் இறந்து போனான் என்று கருதலாம். இவன் பதினாறு யாண்டு அரசாண்டான் என்று தெரிகிறபடியால் (170—16=154) கி.பி. 154இல் இவன் சிம்மாசனம் ஏறினான் என்பது தெரிகிறது. எனவே, இளஞ்சேரல் இரும் பொறை உத்தேசமாக கி.பி. 154 முதல் 170 வரையில் அரசாண் டான் என்று கொள்ளலாம்.

சேரன் செங்குட்டுவன் ஆட்சிக் காலத்திலேயே இளஞ்சேரல் இரும்பொறை இறந்து போனான் என்பதை யறியாமல், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியும் கே.ஜி. சேஷையரும் அவன் செங்குட் டுவன் காலத்துக்குப் பிறகு இருந்தான் என்று எழுதியுள்ளனர். இளஞ்சேரல் இரும்பொறை ஏறத்தாழ கி.பி. 190இல் இருந்தான் என்று அவர்கள் கூறுகிறார்கள். இது முழுவதும் தவறு. செங்குட்டுவனுக்கு முன்னே இறந்து போனவன் அவனுக்குப் பின்னே எப்படி வாழ்ந்திருக்க முடியும்?

இளஞ்சேரல் இரும்பொறைக்கு முன்பு கொங்கு நாட்டை யரசாண்டவன் அவனுடைய பெரிய தந்தையாகிய தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்று அறிந்தோம். அவன் பதினேழு ஆண்டு அரசாண்டான் என்று 8ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. எனவே, அவன் உத்தேசமாகக் கி.பி. 137 முதல் 154 வரையில் அரசாண்டான் என்று நிர்ணயிக்கலாம். இவனுடைய ஆட்சிக் காலமும் சேரன் செங்குட்டுவனுடைய ஆட்சிக் காலத்திலேயே அடங்கிவிட்டது.

பெருஞ்சேரல் இரும்பொறையின் தந்தையாகிய செல்வக் கடுங்கோவாழியாதன் இருபத்தைந்து ஆண்டு அரசாண்டான்

என்று 7ஆம் பத்துப் பதிகக் குறிப்புக் கூறுகிறது. ஆகவே, இவன் உத்தேசமாக கி.பி. 112 முதல் 137 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

செல்வக் கடுங்கோவின் தந்தையாகிய அந்துவன் பொறையன் எத்தனை யாண்டு அரசாண்டான் என்பது தெரியவில்லை. இருபது ஆண்டு அரசாண்டான் என்று கொள்வோம். அப்படியானால் அவன் உத்தேசமாக கி.பி. 92 முதல் 112 வரையில் அரசாண்டான் என்று கருதலாம்.

இளஞ்சேரல் இரும்பொறைக்குப் பிறகு கொங்கு நாட்டையரசாண்டவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்று அறிந்தோம். அவன் எத்தனைக் காலம் அரசாண்டான் என்பது தெரியவில்லை. இருபது ஆண்டு ஆட்சி செய்தான் என்று கொண்டால் அவன் உத்தேசமாகக் கி.பி. 170 முதல் 190 வரையில் அரசாண்டான் என்று நிர்ணயிக்கலாம்.

யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலுக்குப் பிறகு அரசாண்ட கணைக்கால் இரும்பொறையும் இருபது ஆண்டு அரசாண்டான் என்று கருதலாம். இவன் உத்தேசம் கி.பி. 190 முதல் 210 வரையில் இவன் அரசாண்டான் எனக் கொள்ளலாம். இவனுக்குப் பிறகு, கொங்கு நாட்டு அரசாட்சி சோழர் கைக்குச் சென்றது. சோழன் செங்கணான் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அரசாண்டான். ஏறக்குறைய 120 ஆண்டுக் காலம் கொங்கு நாடு, சேர பரம்பரையில் இளைய பரம்பரையைச் சேர்ந்த பொறையர் ஆட்சியில் இருந்தது.

மேலே ஆராய்ந்தபடி கொங்கு நாட்டுச் சேர அரசரின் காலம் (உத்தேசமாக) இவ்வாறு அமைகிறது:

அந்துவன் பொறையன்	(உத்தேசமாக)	கி.பி.	92	முதல்	112	வரையில்
செல்வக்கடுங்கோ வாழியாதன்	”	”	112	முதல்	137	”
பெருஞ்சேரலிரும் பொறை	”	”	137	முதல்	154	”
இளஞ்சேரலிரும் பொறை	”	”	154	முதல்	170	”
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை	”	”	170	முதல்	190	”
கணைக்காலிரும்பொறை	”	”	190	முதல்	210	”

இரும்பொறை அரசரின் ஆட்சி முறை

தமிழ்நாட்டில் மட்டுமன்று, பாரத நாடு முழுவதிலும் அந்தப் பழங்காலத்தில் அரசர்கள் ஆட்சி செய்வதற்குத் துணையாக ஐம்பெருங் குழுவினர் இருந்தார்கள். ஐம்பெருங்குழு என்பது அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் என்பவர்கள். ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர் சிலர் இருந்தார்கள். புரோகிதர் என்பவர் மதச் சார்பான காரியங்களைக் கவனித்தனர். அக்காலத்தில் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்று நான்கு வகையான சேனைகள் அரசர்களுக்கு இருந்தன. கொங்கு நாட்டு அரசருக்குச் சிறப்பாக யானைப்படை இருந்தது. ஒவ்வொரு படைக்கும் ஒவ்வொரு தலைவனும், அவர்களுக்குத் தலைவனாக சேனாபதியும் இருந்தனர். தூதுவர்கள் அரசன் கட்டளைப்படி அரச காரியங்களை வேற்றரசரிடஞ் சென்று காரியங்களை முடித்தார்கள். ஒற்றர்கள் மாறுவேடம் பூண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடக்கும் அரசியல் இரகசியங்களைத் தெரிந்து வந்து அரசனுக்குக் கூறினார்கள். தமிழ்நாட்டு அரசர்களிடத்திலும் இவ்வாறு ஐம்பெருங்குழுக்கள் இருந்து அரசாட்சி செய்தன. கொங்கு நாட்டிலும் ஐம்பெருங் குழுவைக் கொண்டு அரசாட்சி நடந்தது. ஆனால், கொங்கு நாட்டு ஐம்பெருங் குழுவைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் அமைச்சர் அரிசில்கிழார் என்னும் புலவர். சிறந்த புலவராக இருந்த இவர் இவ்வரசன் மேல் 8ஆம் பத்துப் பாடினார். இச்செய்திகளை 8ஆம் பத்துப் பதிகத்தினாலும் அதன் அடிக்குறிப்பினாலும் அறிகிறோம். இப்புலவரின் செய்யுட்கள் சில தகடூர் யாத்திரை என்னும் நூலில் காணப்படுகின்றன.

இளஞ்சேரல் இரும்பொறைக்கு அமைச்சராக இருந்தவர் மையூர்கிழான் என்பவர். இவர் இவ்வரசனுடைய தாய்மாமன் ஆவர்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை தன்னுடைய வயது சென்ற அரண்மனைப் புரோகிதனைத் தவஞ் செய்யக் காட்டுக்கு அனுப்பினான்.[1] இளஞ்சேரலிரும்பொறை

தன்னுடைய அமைச்சனான மையூர்கிழானைத் தன்னுடைய புரோகிதனைக் காட்டிலும் அறநெறியுடையவனாகச் செய்தான்.[2]

பெருஞ்சேரல் இரும்பொறையின் மறவன் (சேனைத் தலைவன்) பிட்டங்கொற்றன் (*புறம்* 172:8-10; *அகம்* 77:15-16, 143:10-12). அரசன் பகையரசர்மேல் போருக்குச் சென்றால், அவன் கீழடங்கிய சிற்றரசர்கள் தங்களுடைய சேனைகளை அழைத்துக் கொண்டு அவனுக்கு உதவியாகச் சென்றனர்.

குடிமக்களிடமிருந்து இறை (வரி) தண்டுவதற்குச் சிலர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். கொங்கு நாட்டில் வரி வசூல் செய்தவர் கோசர் என்பவர். அவர்கள் கண்டிப்புள்ளவர். அவர்கள் ஊர்ஊராகப் போய்ப் பொது அம்பலத்தில் (ஆலமரம், அரச மரங்களின் கீழே) தங்கிச் சங்குகளை முழங்கியும் பறையடித்தும் தாங்கள் இறை வசூல் செய்ய வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். பிறகு, ஊராரிடத்தில் இறைத் தொகையை வசூல் செய்துகொண்டு போய் அரசனிடங் கொடுத்தார்கள். இந்தச் செய்தியைக் கொங்கு நாட்டில் வாழ்ந்திருந்த ஔவையார் கூறுகிறார்.[3]

இரும்பொறையரசர்களின் ஆட்சி முறை பற்றி அதிகமாகத் தெரியவில்லை. அவர்களுடைய ஆட்சி சேர சோழ பாண்டியரின் ஆட்சியைப் போலவே இருந்தது என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்

1 முழுதுணர்ந்து ஒழுகும் நரைமூ தாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெருமநின் படிமை யானே (8ஆம் பத்து 4 : 24-28)

2 மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி
(9ஆம் பத்து, பதிகம் அடி 11-12)

புரோசு—புரோகிதன்.

3 பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர் கோசர் நன்மொழி போல
வாயாகின்றே (*குறுந்.* 15 : 1-4)

கொங்கு நாட்டுச் சமய நிலை

ஏனைய தமிழ் நாடுகளில் இருந்ததுபோலவே கொங்கு நாட்டிலும் அக்காலத்தில் சிவன், திருமால், முருகன், கொற்றவை முதலிய தெய்வ வழிபாடுகள் நடந்தன. முருகன் வழிபாடு அக் காலத்தில் சிறப்பாக இருந்தது. குன்றுகளிலும் மலைகளிலும் முருகனுக்குக் கோயில்கள் இருந்தன. கொங்கு நாட்டுத் திருச்செங் கோடுமலை அக்காலத்தில் முருகன் கோயிலுக்குப் பேர் பெற் றிருந்தது. திருமால் (மாயோன்) வழிபாடும் இருந்தது. செல்வக் கடுங்கோ வாழியாதன் மாயவண்ணனாகிய திருமாலை வழிபட் டான். அவன் திருமால் கோயிலுக்கு ஒகந்தூர் என்னும் ஊரைத் தானங் கொடுத்தான்.[1] ஆயர்கள் திருமாலைக் கண்ணன் உருவில் வழிபட்டனர்.

வெற்றிக் கடவுளாகிய கொற்றவை வீரர்களின் தெய்வம். அயிரை மலைக் கொற்றவையைச் சேர அரசர், தங்களுடைய குல தெய்வமாக வணங்கினார்கள். கொங்கு நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடையில் இருக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அயிரை மலையில் கொற்றவைக்குக் கோயில் இருந்தது. அயிரை மலைக் கொற்றவையைச் சேர அரசரும் கொங்குச் சேரரும் குலதெய்வமாக வழிபட்டார்கள்.

பூதம் என்னும் தெய்வ வழிபாடும் கொங்கு நாட்டில் அக்காலத்தில் இருந்தது. கொங்கு நாட்டின் தலைநகரமான வஞ்சிக் கருவூரில் இளஞ்சேரல் இரும்பொறை பூதங்களுக்குக் கோயில் கட்டித் திருவிழாச் செய்தான்.[2] *சிலப்பதிகாரம்* நடுகற் காதையிலும் இச்செய்தி கூறப்படுகிறது.[3]

தமிழ்நாட்டின் வேறு ஊர்களிலும் பூதவழிபாடு அக்காலத்தில் இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்தின் நடுவிலே, பட்டினப்பாக்கத்துக்கும் மருவூர்ப்பாக்கத்துக்கும் மத்தியில் இருந்த நாளங்காடித் தோட்டத்தில் பூதசதுக்கம் என்னும் இடத்தில் பூதத்துக்குப் பேர்போன கோயில் இருந்தது. அது நகரத்தின் காவல் தெய்வம் (*சிலம்பு* 5 : 65-67). *சிலப்பதிகாரம்* இந்திரவூரெடுத்த காதையில் அவ்வூரார் இந்தப் பூதத்தை வணங்கின சிறப்புக் கூறப்படுகிறது (அடி 59-88).

பூதம் என்றால் இந்தக் காலத்தில் துர்த் தேவதை என்றும் இழிந்தவர் வழிபடும் சிறுதெய்வம் என்றும் கருதப்படுகிறது. ஆனால், சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் பூதம் என்றால் சிறந்த தெய்வமாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் மனிதருக்குப் பூதத்தின் பெயர் சூட்டப்பட்டது. சங்கப் புலவர் சிலர் பூதன் என்னும் பெயர் கொண்டிருந்ததைக் காண்கிறோம். இளம்பூதனார், ஈழத்துப் பூதன் தேவனார், கரும்பிள்ளை பூதனார், கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதனார், காவன் முல்லைப் பூதனார், காவிரிப்பூம்பட்டனத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார், குன்றம்பூதனார், கோடை பாடிய பெரும்பூதனார், சேந்தம் பூதனார், மருங்கூர்பாகை சேந்தன் பூதனார், பூத பாண்டியன், வெண்பூதனார் முதலியோர் பூதன் என்னும் பெயர் பெற்றிருந்ததை அறிகிறோம். பிற்காலத்தில் பூதத்தாழ்வார் என்று பெயர் பெற்ற வைணவப் பக்தர் இருந்தார்.

பூதம் என்னும் தெய்வ வழிபாடு பிற்காலத்தில் மறைந்து போயிற்று. சங்க காலத்தில் தமிழ்நாடாக இருந்த துளு நாட்டிலும், அக்காலம் முதல் இக்காலம் வரையில் பூத வழிபாடு நடந்து வருகிறது.. அங்குள்ள பூதக் கோயில்களுக்குப் *பூததான* என்று இக்காலத்தில் பெயர் கூறப்படுகிறது (*பூததான*— பூதஸ்தானம்). துளு நாட்டுப் *பூததானக்* கோவில்களில் பூதத்தின் உருவம் இல்லை. அத்தெய்வத்தின் ஊர்திகளான புலி, பன்றி, மாடு முதலியவற்றின் உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. சில *பூத தானங்களில்* வாள் இருப்பதும் உண்டு. பூசாரி தெய்வம் ஏறி மருள் கொண்டு ஆடும்போது அந்த வாளைக் கையில் ஏந்தி ஆடுவார். பூதங்களின் மேல் *பாடதான* என்னும் பாட்டு (துளு மொழியில்) பாடப்படுகிறது. *பாடதான* என்பதற்குப் பிரார்த்தனைப் பாட்டு என்பது பொருள். துளுவ மொழி திராவிட இனத்து மொழி. அம்மொழியில் சிதைந்து போன பல தமிழ்ச் சொற்கள் இன்றும் வழங்கிவருகின்றன. துளு மொழியில் உள்ள *பாடதானத்தைப்* பற்றி *இந்தியப் பழமை* என்னும் ஆங்கில வெளியீட்டில் காண்க.[4] துளு நாட்டிலும் இப்போது பூத வணக்கம் மறைந்து வருகிறது.

சங்க காலத்தில் கொங்கு நாட்டிலே வழிபடப்பட்டு வந்த பூதத் தெய்வ வணக்கம் பிற்காலத்தில் மறைந்து போயிற்று.

பத்தினித் தெய்வமாகிய கண்ணகியார் வீடுபேறடைந்தது கொங்கு நாட்டில் என்று கருதப்படுகின்றது. இது பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. இது எப்படியானாலும் கொங்கிளங் கோசர், கொங்கு நாட்டில் கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபட்டது உண்மை. செங்குட்டுவன் சேர நாட்டு வஞ்சி

மாநகரத்தில் பத்தினிக் கோட்டம் அமைத்து விழாச் செய்வதைக் கண்ட கொங்கிளங் கோசர், பத்தினித் தெய்வத்துக்குக் கொங்கு நாட்டில் கோயில் கட்டி வழிபட்டதைச் *சிலப்பதிகாரம்* உரைபெறு கட்டுரை கூறுகிறது.[5] கொங்கிளங் கோசர் பத்தினித் தெய்வத்துக்குத் திருச்செங்கோடு மலைமேல் கோயில் அமைத்தனர் என்றும், அந்தக் கோயில் பிற்காலத்தில் (*தேவாரக் காலத்திலேயே*) அர்த்தநாரீசுவரர் கோயில் என்று மாற்றப்பட்டது என்றும் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

சங்க காலத்திலும் அதற்குப் பிறகும் கொங்கு நாட்டுக் கருவூரில் ஆண்டுதோறும் நடந்த பேர் போன திருவிழா உள்ளிவிழா என்பது. அவ்விழாவில் கொங்கர் மணிகளை அரையில் கட்டிக்கொண்டு கூத்தாடினார்கள்.[6]

பௌத்தர், ஜைனர் ஆகிய மதத்தாரும் அக்காலத்தில் கொங்கு நாட்டில் இருந்தார்கள். அந்த மதங்களின் துறவிகள் ஊர்களில் தங்காமல் காடுகளிலே மலைக் குகைகளில் இருந்து தவஞ் செய்தார்கள். அவர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் அதிகமாகக் காணப்படவில்லை. அக்காலத்துத் துறவிகள் குன்றுகளிலும் மலைகளிலும் தங்கியிருந்து தவஞ் செய்ததைச் சங்கச் செய்யுளிலிருந்து அறிகிறோம்.

பொரியரை ஞெமிர்ந்த புழற்காய்க் கொன்றை
நீடிய சடையோ டாடா மேனிக்
குன்றுறை தவசியர் போலப் பலவுடன்
என்றூழ் நீளிடைப் பொற்பத் தோன்றும்
அருஞ்சுரம் (*நற்றிணை* 141 : 3-7)

(ஞெமிர்ந்த—பரந்த. கொன்றை—சரக்கொன்றை மரம். புழற்காய்—துளை பொருந்திய. ஆடாமேனி—அசையாத உடம்பு, அசையாமல் தியானத்தில் அமர்ந்திருத்தல்; நீராடாத உடம்பையுடையவர் என்றும் பொருள் கூறலாம். ஜைன முனிவர் நீராடக்கூடாது என்பது அவர்கள் கொள்கை. தவசியர்—தவம் செய்வோர்.)

ஆனால், கொங்கு நாட்டு மலைக்குகைகள் சிலவற்றில் காணப்படுகிற கற்படுக்கைகளும் அங்கு எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக்களும் அக்காலத்தில் அங்கே பௌத்த, சமண சமய முனிவர்கள் தங்கியிருந்ததைத் தெரிவிக்கின்றன. அந்த முனிவர்கள் கல்லின் மேலே படுப்பது வழக்கமாகையால் ஊரார் மலைக் குகைகளிலுள்ள கரடுமுரடான பாறைகளைச் சமப்படுத்திப் பாயுந் தலையணையும்போல வழவழப்பாக அமைத்துக் கொடுத்தார்கள். அவைகளை அமைத்துக் கொடுத்தவர்களின் பெயர்கள் அப்படுக்கைகளின் அருகில் பிராமி எழுத்தினால்

எழுதப்பட்டன. அந்தக் கற்படுக்கைகளும் எழுத்துக்களும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆர்க்கியாலஜி, எபிகிராபி சான்றுகளினாலே அக்காலத்தில் கொங்கு நாட்டிலும் சமண, பௌத்தர்கள் இருந்தனர் என்பது தெரிகின்றது. இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்களைப் பற்றி இந்நூலில் வேறு இடத்தில் காண்க.

கரூர் தாலுகாவைச் சேர்ந்த புகழூருக்கு 2 கல் தூரத்தில் ஆறுநாட்டார்மலை என்னும் மலையில் கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக்கள் உள்ளன. இவ்வெழுத்துக்கள், இக்குன்றில் பௌத்த அல்லது ஜைன மதத் துறவிகள் அக்காலத்தில் தங்கியிருந்து தவஞ் செய்ததைக் குறிக்கின்றன.

ஆறுநாட்டார்மலைக்கு ஏழு கல்லுக்கப்பால் உள்ள அர்த்தநாரிபாளையம் என்னும் ஊர் இருக்கிறது. இவ்வூரின் பழைய பெயர் தெரியவில்லை. இவ்வூர் வயல்களின் மத்தியில் கற்பாறைக் குன்றும் அதில் நீர் உள்ள சுனையும் இருக்கின்றன. இங்குள்ள பொடவில் ஐந்து கற்படுக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. இங்குக் கடைச்சங்க காலத்தில் சமண அல்லது பௌத்த சமயத் துறவிகள் தங்கியிருந்தனர் என்பதை இக்கற் படுக்கைகள் சான்று கூறுகின்றன. இக்குன்று இக்காலத்தில் பஞ்ச பாண்டவ மலை என்றும் இங்குள்ள சுனை ஐவர் சுனை என்றும் பெயர் பெற்றுள்ளன.[7]

கோயம்புத்தூர் மாவட்டம் ஈரோடு தாலுக்காவில் ஈரோடுக் குப் போகிற சாலையில் உள்ளது அரசலூர் மலை. இம்மலையில் ஓரிடத்தில் இயற்கையாக அமைந்த குகையில் சில கற்படுக்கை களும் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் உள்ளன. இவை, கடைச் சங்க காலத்தில் இங்கு சமண முனிவர்கள் இருந்ததைத் தெரிவிக்கின்றன.[8]

திருச்செங்கோட்டு மலைமேல் ஓரிடத்தில் சமண முனிவர்கள் இருந்து தவஞ் செய்தனர் என்பதற்குச் சான்றாக அங்குக் கற்பாறைகளில் கற்படுக்கைகள் காணப்படுகின்றன.

கொங்கு நாட்டிலிருந்த கடைச்சங்க காலத்துச் சைவ வைணவக் கோயில்கள் எவை என்பது தெரியவில்லை. திருச்செங்கோட்டுமலை மேல் உள்ள முருகன் (சுப்பிரமணியர்) கோயில் மிகப் பழமையானது. இங்குள்ள அர்த்தநாரீசுவரர் கோயில் என்று இப்போது பெயர் பெற்றுள்ள கோயில் ஆதிகாலத்தில் கண்ணகிக் கோயிலாக இருந்து பிற்காலத்தில் சிவன் கோயிலாக மாற்றப்பட்டது என்பது பேராசிரியர் முத்தமிழ்ப் புலவர் விபுலாநந்த அடிகள் போன்ற அறிஞர்கள் கண்ட முடிவு.

பொதினி (பழனி) மலையில் உள்ள முருகப் பெருமான் கோயிலும் மிகப் பழமையானது. பழனி மலைகள் சங்க காலத்தில் கொங்கு நாட்டின் தென் பகுதியைச் சேர்ந்திருந்தன.

குறிப்புகள்

1 *மாயவண்ணனை மனனுறப் பெற்று அவற்கு*
ஒத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்து (7ஆம் பத்து. பதிகம்)

2 *அருந்திறல் மரபில் பெருஞ் சதுக்கமர்ந்த*
வெந்திறல் பூதரைத் தந்திவண் நிறீஇ
ஆய்ந்த மரபில் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசைமுரசின் இளஞ்சேரல் இரும்பொறை
(9ஆம் பத்து, பதிகம்)

3 *சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து*
மதுக்கொள் வேள்வி வேட்டோன் (நடுகற்காதை 147-148)

4 *Indian Antiquary*, xxiii, p.19.

5 *அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழிலென்று மாறாதாயிற்று* (உரைபெறு கட்டுரை)

6 *கொங்கர்*
மணியரை யாத்து மறுகின்ஆடும்
உள்ளி விழவு (*அகம்* 368:16-18)
மதுரை ஆவணி அவிட்டமே உறையூர் பங்குனி உத்திரமே கருவூர் உள்ளிவிழாவேயென இவை (*இறையனார் அகப் பொருள்* 17ஆவது சூத்திர உரை)

7 *Annual Report on South Indian Epigraphy*, 1927-28. Part II, Para I,

8 *சுதேசிமித்திரன்*, 1961, ஜூன் 4 தேதி; *Annual Report on S. I. Epigraphy*, 1961-62, p. 10.

பயிர்த் தொழில், கைத்தொழில், வாணிபம்

மற்றத் தமிழ் நாடுகளில் இருந்தது போலவே கொங்கு நாட்டிலும் பல வகையான தொழில்கள் நடந்து வந்தன. கொங்கு நாடு கடற்கரை இல்லாத உள்நாடு. ஆகையால், கடல்படு பொருள்களாகிய உப்பும் உப்பிட்டு உலர்த்திய மீன்களும் சங்குகளும் நெய்தல் நிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன. அவை மேற்குக் கடற்கரை, கிழக்குக் கடற்கரைப் பக்கங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன. உமணர் (உப்பு வாணிகர்) உப்பு மூட்டைகளை மாட்டு வண்டிகளில் ஏற்றிக் கொண்டு உள்நாடுகளில் வந்து விற்றனர். கொங்கு நாட்டில் வாழ்ந்தவரான ஔவையாரும் இதைக் கூறுகிறார் ('உமணர் ஒழுகைத்தோடு'— *குறுந்*. 388 : 4). உப்பு வண்டி மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணி ஓசை காட்டுவழிகளில் ஒலித்தது.[1] உப்பு வண்டிகளில் பாரம் அதிகமாக இருந்தபடியால், சில சமயங்களில் வண்டிகள் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கும்போது அச்சு முறிந்து விடுவதும் உண்டு. அதற்காக அவர்கள் சேம அச்சுகளை வைத்திருந்தார்கள்.[2]

கடற்கரைப் பக்கங்களில் சங்கு கிடைக்கும் இடங்களில் கடலில் முழுகிச் சங்குகளைக் கொண்டு வந்து வளையல்களாக அறுத்து விற்றனர். அக்காலத்தில் தமிழ்நாட்டு மகளிர் எல்லோரும் சங்கு வளைகளைக் கைகளில் அணிந்திருந்தனர். சங்கு வளைகளை அணிவது நாகரிகமாகவும் பண்பாடாகவும் மங்கலமாகவும் கருதப்பட்டது. குடில்களில் வாழ்ந்த ஏழைப் பெண்கள் முதலாக அரண்மனைகளில் வாழ்ந்த அரசியர் வரையில் எல்லாப் பெண்களும் சங்கு வளையல்களை அணிந்திருந்தார்கள். செல்வச் சீமாட்டிகளும் அரசிகளும் பொன்வளையல்களை அணிந்திருந்ததோடு சங்குவளையல் களையும் கட்டாயமாக அணிந்திருந்தனர். செல்வம் படைத்தவர்கள் வலம்புரிச் சங்குகளை அணிந்தார்கள். சாதாரண மகளிர் இடம்புரிச் சங்கு வளையல்களை அணிந்தார்கள். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழி யனுடைய அரசி, கைகளில் பொன் தொடிகளை அணிந்

திருந்தாள்.[3] கோவலனுடைய மனைவி கண்ணகியார் பொன்தொடி முதலான நகைகளை எல்லாம் விற்ற பிறகும் சங்கு வளையை மட்டும் கடைசி வரையில் அணிந்திருந்தார். அவர் கோவலனை இழந்து கைம்பெண் ஆனபோது கொற்றவை கோயிலின் முன்பு தன்னுடைய சங்கு வளையை உடைத்துப் போட்டார்.[4] கைம்பெண்களைத் தவிர ஏனைய மகளிர் எல்லோரும் முக்கியமாக மணமானவர்கள் எல்லோரும் சங்கு வளைகளை அணிந்திருந்தார்கள். இதைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். தமிழ்நாட்டு மகளிர் மட்டுமல்லர். ஏனைய பாரத நாட்டு மகளிர் எல்லோரும் அந்தக் காலத்தில் சங்குவளைகளை அணிந்தனர். இந்த வழக்கம் மிகப் பிற் காலத்தில் மறைந்துபோய், கண்ணாடி வளையல் அணியும் வழக் கம் ஏற்பட்டுவிட்டது. பாரத நாட்டில் முஸ்லிம்கள் தொடர்பு ஏற்பட்ட பிறகு இந்த மாறுதல் உண்டாயிற்று. இப்போதுங்கூட வடநாடுகளில் சில இடங்களில் மகளிர் சங்கு வளைகளை அணிந்து வருகின்றனர். கொங்கு நாட்டு மகளிரும் அந்தக் காலத்தில் சங்கு வளைகளை அணிந்தனர். சங்கு வளைகள் கடற்கரை நாடுகளிலிருந்து கொங்கு நாட்டுக்குக் கொண்டு வரப் பட்டன. பெண்களுக்கு ஆடை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமாகச் சங்கு வளைகளும் இருந்தன. ஆகையால், சங்கு வளை வாணிகம் அக்காலத்தில் பெரிதாக இருந்தது.

கொங்கு நாட்டில் பெரும்பாலும் மலைகள் உள்ள குறிஞ்சி நிலங்களும், காடுகள் உள்ள முல்லை நிலங்களும் இருந்தன. நீர்வளம், நிலவளம் பொருந்தின மருத நிலங்களும் இருந்தன. குறிஞ்சி நிலங்களில் வாழ்ந்த மக்கள் மலைகளிலும் மலைச் சாரல்களிலும் தினை அரிசியையும் ஐவனநெல் என்னும் மலை நெல்லையும் பயிரிட்டார்கள். மலைகளில் வளர்ந்த மூங்கிலிலி ருந்து மூங்கில் அரிசியும் சிறிதளவு கிடைத்தது. மூங்கிலரிசியைச் சமைத்து உண்டனர். அதை அவலாக இடித்தும் உண்டனர். மலைகளில் மலைத்தேன் கிடைத்தது. மலைச்சாரல்களில் பலா மரங்கள் இருந்தன. அகில், சந்தனம், வேங்கை முதலிய மரங்களும் இருந்தன.

முல்லை (காட்டு) நிலத்தில் வாழ்ந்தவர்கள் வரகு, கேழ்வரகு ஆகிய தானியங்களைப் பயிரிட்டார்கள். அவர்கள் பசுக்களையும் ஆடுகளையும் வளர்த்தார்கள் . அவைகளிலிருந்து பால், தயிர், வெண்ணெய், நெய் கிடைத்தன. அவரை, துவரை முதலிய தானியங்களும் விளைந்தன.

மருத நிலங்களில் வயல்களிலே நெல்லும் கரும்பும் பயிராயின. கரும்பை, ஆலைகளில் சாறு பிழிந்து வெல்லப் பாகு காய்ச்சினார்கள். கொங்கு நாடு கரும்புக்குப் பேர்போனது. ஆதிகாலத்தில் தமிழ்நாட்டில் கரும்பு இல்லை. கொங்கு நாட்டுத் தகடூரை யரசாண்ட அதிகமான் அரசர் பரம்பரையில்,

முற்காலத்திலிருந்த ஒரு அதிகமான் கரும்பை எங்கிருந்தோ கொண்டுவந்து தமிழகத்தில் நட்டான் என்று ஔவையார் கூறுகிறார் (*புறநானூறு* 99 : 1-4, 392 : 20-21). கரும்புக்கு பழனவெதிர் என்று ஒரு பெயர் உண்டு (பழனம்—கழனி. வெதிர்—மூங்கில்). மூங்கிலைப் போலவே கரும்பு கணுக்களையுடையதாக இருப்பத னாலும் கழனிகளில் பயிர் செய்யப்படுவதாலும் பழனவெதிர் என்று கூறப்பட்டது. மருத நிலங்களில் உழவுத் தொழிலுக்கு எருமைகளையும் எருதுகளையும் பயன்படுத்தினார்கள். குறிஞ்சி, முல்லை நிலங்களில் இருந்தவர்களைவிட மருத நிலத்து மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தார்கள்.

பருத்திப் பஞ்சும் கொங்கு நாட்டில் விளைந்தது. பருத்தியை நூலாக நூற்று ஆடைகளை நெய்தார்கள். நூல் நூற்றவர்கள் பெரும்பாலும் கைம்பெண்களே.

அக்காலத்தில் பண்டமாற்று நடந்தது. அதாவது, காசு இல்லாமல் பண்டங்களை மாற்றிக்கொண்டார்கள். உப்பை நெல்லுக்கு மாற்றினார்கள். குளங்களிலும் ஏரிகளிலும் மீன் பிடித்துவந்து அந்த மீன்களை நெல்லுக்கும் பருப்புக்கும் மாற்றி னார்கள். பால், தயிர், நெய்களைக் கொடுத்து அவற்றிற்கு ஈடாக நெல்லைப் பெற்றுக்கொண்டார்கள். இவ்வாறு பண்டமாற்று பெரும்பாலும் நடந்தது. அதிக விலையுள்ள பொருட்களுக்கு மட்டும் காசுகள் வழங்கப்பட்டன. வெளிநாடுகளில் இருந்து, அதாவது உரோம தேசத்திலிருந்து வந்த யவனக் கப்பல் வாணிகர், வெள்ளிக்காசு, பொற்காசுகளைக் கொடுத்து இங்கிருந்து விலையுயர்ந்த பொருள்களை வாங்கிக் கொண்டு போனார்கள்.

குறிப்புகள்

1 உமணர், கணநிரை மணியின் ஆர்க்கும் (*அகம்* 303:17-18)

2 எருதே இளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே
அவல் இழியினும் மிசை ஏறினும்
அவணதறியுநர் யாரென உமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச்சு (*புறம்* 102:1-5)

3 பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
(*நெடுநல்வாடை* 141-142.)

4 ‘கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்து’ (*சிலம்பு*, கட்டுரைகாதை 181). இங்குப் பொற்றொடி என்றது பொன் வளையலையன்று, சங்கு வளையை. “பொற்றொடி பொலி வினையுடைய சங்குவளை. துர்க்கை கோயில் வாயிலிலே தன் கை வளையைத் தகர்த்து” என்று பழைய அரும்பத வுரையாசிரியர் எழுதுவது காண்க.

அயல் நாட்டு வாணிகம்

சங்க காலத் தமிழகம் வெளிநாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது போலவே கொங்கு நாடும் அயல்நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. ஆனால், கொங்கு நாட்டின் கடல் வாணிகத் தொடர்பைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் யாதொரு செய்தியும் காணப்படவில்லை. சங்கச் செய்யுள்களில் முசிறி, தொண்டி, நறவு, கொற்கை, புகார் முதலிய துறைமுகப்பட்டினங்களில் யவனர் முதலியவர்களின் கப்பல்கள் வந்து வணிகஞ் செய்த செய்திகள் கூறப்படுகின்றன. ஆனால், கொங்கு நாட்டுடன் அயல்நாட்டு வாணிகர் செய்திருந்த வாணிகத்தைப் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. ஆனாலும், கிரேக்க உரோம நாட்டவராகிய யவனர்கள் எழுதியுள்ள பழைய குறிப்புகளிலிருந்து கொங்கு நாட்டுக்கும் யவன நாட்டுக்கும் இருந்த வாணிகத் தொடர்பு தெரிகின்றது.

முசிறி, தொண்டி, நறவு முதலிய மேற்குக் கடற்கரைப் பட்டினங்களில் யவனர்கள் முக்கியமாக மிளகை ஏற்றுமதி செய்துகொண்டு போனார்கள். பாண்டியரின் கொற்கைத் துறைமுகப்பட்டினத்திலிருந்து யவனர் முக்கியமாக முத்துக்களை வாங்கிக்கொண்டு போனார்கள். சோழ நாட்டுப் புகார்த் (காவிரிப்பூம்பட்டினம்) துறைமுகப்பட்டினத்திலிருந்து, சாவக நாடு எனப்பட்ட கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து கிடைத்த சாதிக்காய், இலவங்கம், கர்ப்பூரம் முதலிய வாசனைப் பொருள்களையும், பட்டுத் துணிகளையும் யவனர் வாங்கிக் கொண்டு போனார்கள். உள்நாடாகிய கொங்கு நாட்டிலிருந்து அக்காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்த நீலமணிக் கற்களை யவனர் வாங்கிக்கொண்டு போனார்கள். யானைத் தந்தங்களையும் யவனர் வாங்கிக்கொண்டு போனார்கள். கொங்கு நாட்டிலிருந்தும் யானைத் தந்தங்கள் அனுப்பப்பட்டன. கொல்லிமலையில் இருந்தவர் யானைக் கொம்புகளை விற்றார்கள்.[1]

கொங்கு நாட்டு நீலமணிக் கற்களை யவனர் வாங்கிக் கொண்டு போனதைப் பற்றிக் கூறுவதற்கு முன்பு, யவனர்

தமிழ்நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்ட வரலாற்றை யறிந்து கொள்வது முக்கியமாகும். கிரேக்க நாட்டாரும் உரோம நாட்டாருமாகிய யவனர்கள் வருவதற்கு முன்னே, அதாவது கிருஸ்து சகாப்தத்துக்கு முன்னே, அரபி நாட்டு அராபியர் தமிழ்நாட்டுடனும் வடஇந்திய நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் முக்கியமாக இந்தியத் தேசத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்களுக்குத் தங்களுடைய சிறிய படகுகளில் வந்து வாணிகஞ் செய்தார்கள்.

அந்தக் காலத்தில் தெரிந்திருந்த உலகம் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்கள் மட்டுமே. ஆப்பிரிக்கா கண்டத்தில் எகிப்து தேசமும் சில கிழக்குப் பகுதி நாடுகளும் தெரிந்திருந்தன. ஆப்பிரிக்காவின் தெற்கு மேற்குப் பகுதி நாடுகள் உலகம் அறியாத இருண்ட கண்டமாகவே இருந்து வந்தன. அந்தக் காலத்தில், ஐரோப்பாக் கண்டமாகிய மேற்குத் தேசங் களையும் ஆசியாக் கண்டமாகிய கிழக்குத் தேசங்களையும் தொடர்புபடுத்தியது எகிப்து நாட்டு அலக்சாந்திரியத் துறைமுகப்பட்டினம். அலக்சாந்திரியம், கிழக்கு நாடுகளையும் மேற்கு நாடுகளையும் இணைத்து நடுநாயகமாக விளங்கிற்று. பல நாட்டு வாணிகரும் அந்தத் துறைமுகத்துக்கு வந்தார்கள். எல்லா நாட்டு வாணிகப் பொருள்களும் அங்கு வந்து குவிந்தன. நீலநதி, மத்தியதரைக் கடலில் கலக்கிற புகர் முகத்துக்கு அருகில், அக்காலத்து உலகத்தின் நடுமத்தியில், அலக்சாந்திரியம் அமைந்திருந்தது. அங்குக் கிரேக்கர், உரோம நாட்டார், பாபிலோனியர், பாரசீகர், அராபியர், இந்தியர், சீனர் முதலான பல நாட்டு மக்களும் வாணிகத்தின் பொருட்டு வந்தனர்.

பாரத தேசத்தின் மேற்குக் கடற்கரைப் பட்டினங்களிலிருந்து இந்திய வாணிகர் அலக்சாந்திரியம் சென்றனர். ஆனால், காலஞ் செல்லச்செல்ல அராபியர் இந்திய நாட்டுப் பொருள்களைத் தாங்களே வாங்கிக் கொண்டுபோய் அலக்சாந்திரியத்தில் விற்றார்கள். இதற்குக் காரணம் அலக்சாந்திரியத்துக்கும் பாரத நாட்டுக்கும் இடைமத்தியில் அரபுநாடு இருந்ததுதான். இரண்டு நாடுகளுக்கும் மத்தியில் இருந்த அரபு நாட்டு அராபியர் கப்பல் வாணிகத்தைத் தங்கள் கையில் பிடித்துக்கொண்டார்கள். மேலும் கிரேக்க, உரோம நாட்டு யவன வாணிகர் இந்திய நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு வராதபடியும் அவர்கள் செய்து விட்டார்கள். கிரேக்க, உரோம நாட்டு யவனர்கள் இந்திய நாட்டுடன் நேரடியாக வாணிகத் தொடர்பு கொண்டால் தங்களுக்குக் கிடைத்த பெரிய ஊதியம் கிடைக்காமற் போய்விடும் என்று அராபியர் அறிந்தபடியால், யவனர்களை

இந்தியாவுக்கு வராதபடி தடுத்துவிட்டார்கள். அந்தக் காலத்தில் கப்பல்கள் நடுக்கடலில் பிரயாணஞ் செய்யாமல் கடற்கரை யோரமாகவே பிரயாணஞ் செய்தன. அவ்வாறு வந்த யவனக் கப்பல்களை அராபியர் கடற்கொள்ளைக்காரரை ஏவிக் கொள்ளையடித்தனர். அதனால், யவனக் கப்பல்கள் இந்தியாவுக்கு வருவது தடைப்பட்டது. அராபியர் மட்டும் இந்தக் கப்பல் வாணிகத்தை ஏகபோகமாக நடத்திப் பெரிய இலாபம் பெற்றார்கள். அவர்கள் சேர நாட்டில் உலகப் புகழ் பெற்றிருந்த முசிறித் துறைமுகப்பட்டினத்தின் ஒரு பகுதியில் தங்கி வாணிகஞ் செய்தார்கள். முசிறியில் அவர்கள் இருந்து வாணிகஞ் செய்த இடம் பந்தர் என்று பெயர் பெற்றிருந்தது. பந்தர் என்பது அரபு மொழிச் சொல். அதன் பொருள் அங்காடி, பண்டசாலை, துறைமுகம் என்று பொருள். சென்னை மாநகரில் 'பந்தர் தெரு' என்னும் பெயருள்ள ஒரு கடைத் தெரு இருக்கிறது. இங்கு முன்பு முஸ்லீம்கள் அதிகமாக வாணிகஞ் செய்திருந்தார்கள். அதனால் அந்தத் தெருவுக்கு இப்பெயர் ஏற்பட்டது. முசிறித் துறைமுகத்தில் அராபியர் பந்தர் என்னும் இடத்தில் வாணிகஞ் செய்திருந்ததைப் *பதிற்றுப்பத்துச்* செய்யுளினால் அறிகிறோம்.[2]

உரோமாபுரி சாம்ராச்சியத்தை யரசாண்ட அகஸ்தஸ் (Augustus) சக்கரவர்த்தி காலத்தில் யவன வாணிகர் நேரடியாகத் தமிழ்நாட்டுக்கு வரத்தொடங்கினார்கள். அகஸ்தஸ் சக்கரவர்த்தி கி.மு. 29 முதல் கி.பி. 14 வரையில் அரசாண்டான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் அலக்சாந்திரியம் உட்பட எகிப்து தேசமும் மேற்கு ஆசியாவில் சில நாடுகளும் உரோம சாம்ராச்சியத்தின் கீழடங்கின. அரபு நாட்டின் மேற்குக் கரையில் இருந்த (செங்கடலின் கிழக்குக் கரையிலிருந்த) அரபுத் துறைமுகங்களை இந்தச் சக்கரவர்த்தி தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்தான். பிறகு யவனக் கப்பல்கள் இந்திய தேசத்தின் மேற்குக் கடற்கரைப் பட்டினங்களுக்கு நேரடியாக வந்து வாணிகஞ் செய்யத் தலைப்பட்டன. இவ்வாறு கிரேக்க, உரோமர்களின் வாணிகத் தொடர்பு கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது. அப்பொழுது யவனக் கப்பல்கள் நடுக்கடலின் வழியாக வராமல் கடற்கரையின் ஓரமாகவே பிரயாணஞ் செய்தன. கரையோரமாக வருவதனால் மாதக் கணக்கில் தாமதம் ஏற்பட்டது. ஆனால், ஏறத்தாழ கி.பி. 47இல் ஹிப்பலஸ் என்னும் கிரேக்க மாலுமி, பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடலின் ஊடே கப்பலைச் செலுத்தி விரைவாக முசிறித் துறைமுகத்துக்கு வந்தான். அந்தப் பருவக்காற்றுக்கு யவன மாலுமிகள், அதைக் கண்டுபிடித்தவன் பெயரையே வைத்து ஹிப்பலஸ் என்று பெயர் சூட்டினார்கள்.

இதன் பிறகு, யவனக் கப்பல்கள் அரபிக்கடலின் ஊடே முசிறி முதலிய துறைமுகங்களுக்கு விரைவாக வந்து போயின. இதனால் அவர்களுக்கு நாற்பது நாட்கள் மிச்சமாயின.

தொடக்கக் காலத்தில் யவனர் செங்கடலுக்கு வந்து வாணிகஞ் செய்தபோது அந்தக் கடலுக்கு எரித்ரைக் கடல் என்று பெயர் கூறினார்கள். எரித்ரைக் கடல் என்றால் செங்கடல் என்பது பொருள். பிறகு, அவர்கள் செங்கடலுக்கு இப்பால் பாரசீகக் குடாக்கடலுக்கு வந்தபோது, இந்தக் கடலுக்கும் எரித்ரைக் கடல் என்று அதே பெயரிட்டார்கள். பிறகு, அரபிக் கடலில் வந்து வாணிகஞ்செய்தபோது அரபிக்கடலுக்கும் அப்பெயரையே சூட்டினார்கள். பின்னர் இந்து சமுத்திரம், வங்காளக்குடாக் கடல்களில் வந்து வாணிகஞ் செய்தபோது இந்தக் கடல்களுக்கும் எரித்ரைக் கடல் என்றே பெயரிட்டார்கள். இந்தக் கடல்களில் எல்லாம் வந்து எந்தெந்தத் துறைமுகப் பட்டினங்களில் யவனர் வாணிகஞ் செய்தார்கள், என்னென்ன பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்தார்கள் என்பதைக் குறித்து யவன நாட்டார் ஒருவர் கி.பி. 89ஆம் ஆண்டில், பழைய கிரேக்க மொழியில் ஒரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலின் பெயர் *பெரிப்ளஸ் மாரிஸ் எரித்ரை* (*The Periplus Maris Erythrai*) என்பது.

அகஸ்தஸ் சக்கரவர்த்தி யவன—தமிழ வாணிகத்தைப் பெருக்கினான். தமிழ்நாட்டு மிளகும் முத்தும் இரத்தினக் கற்களும் யானைத் தந்தங்களும் யவன நாட்டுக்கு ஏற்றுமதியாயின. மிளகு பெரிய அளவில் ஏற்றுமதியாயிற்று. அதற்காக அகஸ்தஸ் சக்கரவர்த்தி பெரிய மரக்கலங்களைக் கட்டினான். மேலும், மிளகு முதலிய பொருள்களை வாங்குவதற்குப் பொன் நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் அனுப்பினான். இவ்வாறு, கி.பி. முதல் நூற்றாண்டில் யவன—தமிழக் கடல் வாணிகம் சிறப்பாக நடக்கத் தொடங்கிற்று.

தமிழகத்தில் வந்த யவனர்கள் ஏற்றுமதி செய்துகொண்டு போன பொருள்களில் முக்கியமானது மிளகு. இதற்காகவே முக்கியமாகப் பெரிய கப்பல்கள் கட்டப்பட்டன என்றும், பொற்காசுகளும் வெள்ளிக் காசுகளும் அனுப்பப்பட்டன என்றும் உரோம நாட்டுச் சரித்திரத்திலிருந்து அறிகிறோம். இந்தச் செய்தியைச் சங்கச் செய்யுள்களும் கூறுகின்றன. சேர அரசர்களின் முறிசித் துறைமுகப்பட்டினத்தில் அழகான யவனக் கப்பல்கள் வந்து பொன்னைக் (பொற்காசை) கொடுத்துக் கறியை (கறி—மிளகு) ஏற்றிக்கொண்டு போயின என்று சங்கப் புலவர் தாயங்கண்ணனார் கூறுகிறார்.

சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி (*அகம்* 149 : 7-11)

முசிறித் துறைமுகம் யவனர்களின் பெரிய மரக்கலங்கள் வந்து தங்குவதற்குப் போதுமான ஆழமுடையதாக இல்லை. ஏனென்றால், அங்குக் கடலில் கலந்த பெரியாறு மண்ணை அடித்துக் கொண்டுவந்து ஆழத்தைத் தூர்த்துவிட்டது. அதனால், ஆழமில்லாமற் போகவே யவன மரக்கலங்கள் துறைமுகத்துக்கு அப்பால் கடலிலே நங்கூரம் பாய்ச்சி நின்றன.

மிளகு மூட்டைகளைத் தோணிகளில் ஏற்றிக்கொண்டு போய்க் கடலில் நின்றிருந்த யவன மரக்கலங்களில் ஏற்றிவிட்டு அதற்கு ஈடாக யவனப் பொற்காசுகளைத் தோணிகளில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள் என்று பரணர் என்னும் சங்கப் புலவர் கூறுகிறார்.

மனைக் குவைஇய கறிமூடையாற்
கலிச்சும் மைய கரை கலக்குறுந்து
கலந்தந்த பொற் பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
....
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடல் முழவின் முசிறி! (*புறம்* 343 : 3-10)

யவன மரக்கலங்கள் மிளகை ஏற்றுமதி செய்துகொண்டு போனதை. இப்புலவர்கள் நிகழ் காலத்தில் கூறுவதைக் காண்க. அக்காலத்தில் மிளகு கிரேக்கர், உரோமர் முதலிய மேலைத் தேசத்தவர்க்கு முக்கியமான உணவுப் பண்டமாக இருந்த படியால் மிளகு வாணிகம் முதன்மை பெற்று இருந்தது. யவனர் மிளகை விரும்பி அதிகமாக வாங்கிக்கொண்டு போன காரணத்தினாலே சமஸ்கிருத மொழியில் மிளகுக்கு *யவனப் பிரியா* என்று பெயர் கூறப்பட்டது.

அந்தக் காலத்தில்தான் கொங்கு நாட்டுக்கும் யவன நாட்டுக்கும் வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. கொங்கு நாட்டிலே சிற்சில சமயங்களில் கதிர் மணிகள் உழவர்களுக்குக் கிடைத்தன என்று பழஞ் செய்யுள்களிலிருந்து அறிகிறோம். கொங்கு நாட்டின் வடக்கிலிருந்த புன்னாட்டில் நீலக்கல் சுரங்கம் இருந்தது என்று பிளினி என்னும் யவனர் எழுதியிருக்கிறார்.[3] படியூரிலும் இந்தக் கதிர்மணிகள் கிடைத்தன (சேலம் மாவட்டத்துப் படியூர்). கோயம்புத்தூர் மாவட்டத்து வாணியம்

பாடியிலும் நீலக்கற்கள் கிடைத்தன. அந்தக் காலத்தில் இந்த நீலக்கற்கள் உலகத்திலே வேறு எங்கேயும் கிடைக்கவில்லை. கொங்கு நாட்டில் மணிகள் கிடைத்ததைக் கபிலர் கூறுகிறார்.[4] அரிசில்கிழாரும் இதைக் கூறுகிறார்.[5] யவனர் இங்கு வந்து இவற்றை வாங்கிக்கொண்டு போனார்கள். உரோம சாம்ராச்சியத்திலிருந்த சீமாட்டிகள் இந்தக் கற்களைப் பெரிதும் விரும்பினார்கள். உரோம சாம்ராச்சியத்தில் இந்த நீலக் கற்கள் *ஆக்வா மரினா* (*aqua marina*) என்று பெயர் பெற்றிருந்தது. யவன வாணிகர்கள் கொங்கு நாட்டுக்கு வந்தது, முக்கியமாக இந்தக் கதிர்மணிகளை வாங்குவதற்காகவே. யவனர்கள் கொங்கு நாட்டுக்கு வந்து பொற்காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் கொடுத்து நீலக்கற்களை வாங்கிக்கொண்டு போனதற்கு இன்னொரு சான்று, அவர்களுடைய பழைய நாணயங்கள் கொங்கு நாட்டில் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தான். கொங்கு நாட்டைச் சேர்ந்த பொள்ளாச்சி, வெள்ளலூர், கரூர் முதலிய ஊர்களில் பழைய காலத்து உரோம நாணயங்கள் பெருவாரியாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சேர நாடு, பாண்டி நாடு, புதுக்கோட்டை முதலிய இடங்களிலும் பழங்காலத்து உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு நம்முடைய ஆராய்ச்சிக்குரிய கொங்கு நாட்டில் கிடைத்த உரோம சாம்ராச்சியப் பழங்காசுகளை மட்டுங் கூறுவோம்.

பொள்ளாச்சி (கோயம்புத்தூர் மாவட்டம்): இங்கு ஒரு பானை நிறைய உரோமாபுரி வெள்ளிக்காசுகள் 1800ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன. 1809ஆம் ஆண்டிலும் ஒரு புதையல் கண்டெடுக்கப்பட்டது. இந்தப் புதையலில் கிடைத்த காசுகள் பொற்காசுகளா, வெள்ளிக்காசுகளா என்பது தெரிய வில்லை. 1888ஆம் ஆண்டிலும் உரோமாபுரிக் காசுப் புதையல் கண்டெடுக்கப்பட்டது.

வெள்ளலூர் (கோயம்புத்தூர் அருகில் போத்தனூருக்குச் சமீபம்): இவ்வூரிலும் உரோம தேசத்துப் பழங்காலக் காசுப் புதையல்கள் கிடைத்தன. 1842ஆம் ஆண்டில் கண்டெடுக் கப்பட்ட புதையலில் 378 வெள்ளிக் காசுகளும் 1850ஆம் ஆண்டில் கிடைத்த புதையலில் 135 வெள்ளிக் காசுகளும் 1891ஆம் ஆண்டில் கிடைத்த புதையலில் 180 வெள்ளிக் காசு களும் இருந்தன. 1931ஆம் ஆண்டில் கிடைத்த புதையலில் 121 காசுகள் இருந்தன. இவற்றில் 23 நாணயங்களில் முத்திரையில் லாமல் வெறுங்காசாக இருந்தன. முத்திரையிடுவதற்கு முன்பு அவசரமாக இவை தங்கசாலையிலிருந்து அனுப்பப்பட்டன என்று தெரிகிறது.

கரூர்* (கோயம்புத்தூர் மாவட்டம்): இங்கு 1800ஆம் ஆண்டில் உரோம தேசத்துப் பொற்காசு ஒன்று கிடைத்தது. 1806ஆம் ஆண்டிலும் இன்னொரு பொற்காசு கிடைத்தது. 1878ஆம் ஆண்டில் 500 வெள்ளிக் காசுகள் உள்ள புதையல் கண்டெடுக்கப்பட்டது. இவற்றில் 117 காசுகள் தேய்மான மில்லாமல் புதியவையாக இருந்தன. இவை ஒவ்வொன்றும் 3.76 கிராம் எடையுள்ளவை.

கலயமுத்தூர் (பழனிக்கு மேற்கே ஆறு கல் தொலைவில் உள்ளது): இவ்வூரில் 1856ஆம் ஆண்டில் உரோம தேசத்துப் பழங்காசுகள் கிடைத்தன.

இவையில்லாமல் , ஏறக்குறைய 1000 வெள்ளிக் காசுகளைக் கொண்ட உரோமாபுரி நாணயங்கள் ஒரு பெரிய மட்பாண்டத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இவை மதராஸ் படியில் ஐந்து, ஆறு படி கொண்ட நாணயங்கள். இக்காசுகள் உருக்கிவிடப்பட்டனவாம். இவை கொங்கு நாட்டில் கிடைத்தவை. இடம் குறிப்பிடப்படவில்லை. போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நடுவதும், இறந்தவரைத் தாழியில் இட்டுப் புதைப்பதும் சங்க காலத்து வழக்கம். அவ்வாறு புதைக்கப்பட்ட ஒரு பண்டவர் குழியில் (கொங்கு நாட்டில்) ஒரு உரோம தேசத்து வெள்ளிக் காசு கண்டெடுக்கப்பட்டது (1817).[6]

கொங்கு நாட்டில் இன்னும் பல உரோம தேசத்து நாணயப் புதையல்கள் இருக்கக்கூடும். கிடைத்துள்ள காசுகள் எல்லாம் பொற்காசுகளும் வெள்ளிக் காசுகளுமாக உள்ளன. செப்புக் காசுகள் மிகச் சில. இக்காசுகள் எல்லாம் உரோம சாம்ராச்சி யத்தை யரசாண்ட உரோமச் சக்கரவர்த்திகளின் தலையுருவம் பொறிக்கப்பட்டவை. சில காசுகளில் அவ்வரசர்களின் மனைவியரின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கின்றன. கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரையில் உரோம சாம்ராச்சியத்தை யரசாண்ட அரசர்களின் உருவங்களும் முத்திரைகளும் இக்காசுகளில் பொறிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காலம் நம்முடைய ஆராய்ச்சிக்குரிய கடைச்சங்க காலத்தின் இறுதியாகும். இந்தக் காசுகள், அக்காலத்தில் தமிழ்நாட்டுக்கும் உரோமாபுரி நாட்டுக்கும் நடந்த வாணிகத் தொடர்பை உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காட்டுகின்றன.

---

* திருச்சி மாவட்டத்தில் இருந்த கரூர், தற்போது கரூர் மாவட்டம் என்ற பெயரில் தனி மாவட்டமாக உள்ளது. இங்கு தவறுதலாக கோவை மாவட்டத்தைச் சார்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-ர்)

கிடைத்துள்ள இந்தக் காசுகளிலே கீழ்க்கண்ட உரோமச் சக்கரவர்த்திகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை: துருஸஸ் (Drusus the Elder— கி.மு. 38 முதல் கி.பி. 9வரையில் அரசாண்டான்), அதஸ்தஸ் (கி.மு. 29 முதல் கி.பி. 14 வரையில் அரசாண்டான்), தைபிரியஸ் (கி.பி. 14 முதல் 37 வரையில் அரசாண்டான்), கெலிகுலா (கி.பி.37 முதல் 41 வரையில் அரசாண்டான்), கிளாடியஸ் (கி.பி 41 முதல் 54 வரையில் அரசாண்டான்), நீரோ (கி.பி. 54 முதல் 68 வரையில் அரசாண்டான்), டொமிஷியன் (கி.பி. 81 முதல் 96 வரையில்), நெர்வா (கி.பி. 96 முதல் 98 வரையில்), திராஜன் (98 முதல் 117), ஹேத்திரியன் (117 முதல் 138 வரையில்), கம்மோடியஸ் (180 முதல் 193 வரையில்). மற்றும், துருஸஸின் மனைவியான அந்தோனியாவின் முத்திரை பொறிக்கப்பட்டதும், ஜர்மனி கஸின் மனைவியான அக்ரிப்பைனாவின் உருவ முத்திரை பொறிக்கப்பட்டதுமான காசுகளும் கிடைத்திருக்கின்றன.[7]

தமிழ்நாட்டுக்கு வந்த பொருள்களை வாங்கிக்கொண்டு போன யவனக் கப்பல் வியாபாரிகள் காசுகளைக் கொடுத்தே பொருள்களை வாங்கிக்கொண்டு போனார்கள். இந்தச் செய்தியைச் சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. அக்காலத்திலிருந்த பிளைனி (Pliny) என்னும் உரோமாபுரி அறிஞரும் இதைக் கூறியுள்ளார். பரணர், தாம் பாடிய *புறம்* 343ஆம் செய்யுளில்,

மனைக் குவைஇய கறிமூடையாற்
கலிச்சும் மைய கரை கலக்குறுந்து
கலந்தந்த பொற் பரிசம்
கழித்தோணியாற் கரை சேர்க்குந்து (*புறம்* 343 : 3-6)

என்று கூறுகிறார்.

சேர நாட்டு முசிறித் துறைமுகத்தில் யவனக் கலங்கள் (மரக்கலங்கள்) பொற்காசுகளைக் கொண்டு வந்து நின்றபோது, தோணிகளில் கறி (மிளகு) மூட்டைகளை ஏற்றிக்கொண்டு போய் யவன மரக்கலங்களில் இறக்கிவிட்டு அதற்கு விலையாக அவர்கள் கொடுத்த பொற்காசுகளைத் தோணிகளில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள் என்பது இதன் பொருள்.

புலவர் தாயங்கண்ணனாரும் இதைக் கூறுகிறார்.

சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி (*அகம்* 149 : 7-11)

இதில், யவனருடைய மரக்கலங்கள் முசிறித் துறைமுகத்துக்கு வந்து கறியை (மிளகை) ஏற்றிக்கொண்டு பொன்னைக் (பொன், வெள்ளிக் காசுகளை) கொடுத்துவிட்டுச் சென்றது கூறப்படுகிறது.

உரோமாபுரியிலிருந்த பிளைனி (Pliny) என்னும் அறிஞர் கி.பி. 70ஆம் ஆண்டில் உரோமாபுரிச் செல்வம் கிழக்கு நாடுகளுக்குப் போவதைக் குறித்துக் கவலை தெரிவித்துள்ளார். ஆண்டுதோறும் நூறாயிரம் ஸெஸ்டர் (11,00,000 பவுன்) மதிப்புள்ள பொன்னும் வெள்ளியும் வாணிகத்தின் பொருட்டுக் கிழக்கு நாடுகளுக்குப் போய்விடுவதை அவர் கண்டித்திருக்கிறார். உரோம நாட்டுச் சீமான்களும் சீமாட்டிகளும் வாசனைப் பொருள்கள், நகைகள் முதலியவைக்காக உரோம நாட்டுப் பொன்னை விரயஞ் செய்ததாக அவர் கூறியுள்ளார். சங்கப் புலவர்கள், யவன வாணிகர் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்துப் பொருள்களை வாங்கிக்கொண்டு போனார்கள் என்று கூறியது போலவே பிளைனியும் உரோமாபுரிப் பொன் கிழக்கு நாடுகளுக்குப் போய் விடுகிறது என்று கூறியிருப்பது காண்க.

உரோமாபுரிச் சாம்ராச்சியத்தில் அக்காலத்தில் ஸ்பெய்ன் தேசமும் அடங்கியிருந்தது. அந்த ஸ்பெய்ன் தேசத்தில் தங்கச் சுரங்கம் இருந்தபடியால், அங்கிருந்து உரோமாபுரிச் சக்கரவர்த்திகளுக்கு ஏராளமாகப் பொன் கிடைத்தது. அகஸ்தஸ் சக்கரவர்த்தி இந்தப் பொன்னைக் கொண்டு நாணயங்கள் அடித்து வெளிப்படுத்தினார். அந்த நாணயங்களைக் கொண்டுவந்த யவன மாலுமிகள், அதிகச் சரக்குகளை (முக்கியமாக மிளகை) ஏற்றிக் கொண்டு போவதற்காகப் பெரிய மரக்கலங்களைக் கொண்டு வந்தார்கள்.

இவ்வாறு கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் நடைபெற்ற யவன—தமிழ வாணிகத்தினால் கொங்கு நாடு கதிர் மணிகளை யவன நாட்டுக்கு விற்றுப் பெரும் பொருள் ஈட்டியது. அந்த யவன நாட்டுப் பழங்காசுகளில் சிறு அளவுதான் இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள உரோம நாணயங்கள். இன்னும் புதையுண்டிருக்கிற உரோம நாணயங்கள் எவ்வளவென்று நமக்குத் தெரியாது.

கொங்கு நாட்டிலிருந்து யவன வாணிகர் வாங்கிக் கொண்டுபோன இன்னொரு பொருள் யானைத் தந்தம். கொங்கு நாட்டைச் சார்ந்த யானைமலைக் காடுகளிலும் ஏனைய காடுகளிலும் யானைக் கொம்புகள் கிடைத்தன. சேர நாட்டு மலைகளிலும் யானைக் கோடுகள் கிடைத்தன. யவன வாணிகர் யானைக் கோடுகளை வாங்கிச் சென்றார்கள். கொங்கு நாட்டுக்

கொல்லி மலை ஓரிக்கு உரியது. கொல்லி மலையில் வாழ்ந்த குடிமக்கள், விளைச்சல் இல்லாமல் பசித்தபோது தாங்கள் சேமித்து வைத்திருந்த யானைக் கொம்புகளை விற்று உணவு உண்டார்கள் என்று கபிலர் கூறுகிறார்.[8]

சேரன் செங்குட்டுவன் வேனிற்காலத்தில் சேர நாட்டுப் பெரியாற்றுக் கரையில் சோலையில் தங்கியிருந்தபோது அவனிடம் வந்த குன்றக் குறவர் பல பொருள்களைக் கையுறையாகக் கொண்டு வந்தனர். அப்பொருள்களில் யானைக் கொம்பும் அகிற் கட்டைகளும் இருந்தன.[9] சேர நாட்டு, கொங்கு நாட்டு மலைகளில் யானைக் கொம்புகள் கிடைத்தன என்பது இதனால் தெரிகிறது. யவனர் வாங்கிக்கொண்டு போன பொருள்களில் யானைக் கொம்பும் கூறப்படுகிறது.

கொங்கு நாடு உள்நாடாகையால் அதற்குக் கடற்கரை இல்லை; ஆகையால் துறைமுகமும் இல்லை. ஆனால், கொங்கு நாட்டை யரசாண்ட 'பொறையர்' சேர அரசரின் பரம்பரையா ராகையால், அவர்கள் சேர நாட்டுத் துறைமுகங்களில் இரண்டைத் தங்களுக்கென்று வைத்திருந்தார்கள். அவற்றின் பெயர் தொண்டி, மாத்தை என்பன. கொங்கு நாட்டுப் பொறையர் மேற்குக் கடற்கரைத் தொண்டியைத் தங்களுக்குரிய துறைமுகப்பட்டினமாக வைத்துக்கொண்டு வாணிகஞ் செய்தனர். கொங்கு நாட்டை யரசாண்ட இளஞ்சேரலிரும் பொறை 'வளைகடல் முழவில் தொண்டியோர் பொருநன்' என்று கூறப்படுகிறான் (9ஆம் பத்து 8 : 21). 'திண்டேர்ப் பொறையன் தொண்டி' (*அகம்* 60 : 7). யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, 'தண் தொண்டியோர் அடுபொருநன்' என்று கூறப்படுகிறான் (*புறம்* 17 : 13). *குறுந்* தொகை 128ஆம் செய்யுள் 'திண்டேர்ப் பொறையன் தொண்டி' என்று கூறுகிறது (*குறுந்.* 128 : 2). யவனர் தொண்டியைத் திண்டிஸ் என்று கூறினார்கள்.

இதனால், கொங்கு நாடு சேர அரசர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம் வரையில், தொண்டித் துறைமுகம் கொங்கு நாட்டின் துறைமுகப்பட்டினமாக அமைந்திருந்தது என்று கருதலாம். பிற்காலத்தில் சோழர், கொங்கு நாட்டைக் கைப்பற்றி யரசாண்டபோது தொண்டி, கொங்குத் துறைமுகமாக அமையவில்லை.

குறிப்புகள்

1 காந்தளஞ் சிலம்பில் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத் துண்ணும்
வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை (*குறுந்.* 100 : 3-5)

2 இன்னிசைப் புணரி யிரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்
கமழுந்தாழைக் கானலம் பெருந்துறை
(6ஆம் பத்து. 5 : 3-5)

கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு,
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் (7ஆம் பத்து. 7 : 1-2)
கொடு மணம்பட்ட வினைமான் அருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம் (8ஆம் பத்து, 4 : 5-6)

3 Pliny, *Nat. Hist*, BK.xxxvii, Cap. v.

4 இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு (7ஆம் பத்து 6 : 19-20.)

5 கருவிவானந் தண்டளி சொரிந்தெனப்
பல்விதை யுழவர் சில்லே றாளர்
பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்
கழுவுறு கலிங்கங்க டுப்பச்சூடி
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு (8ஆம் பத்து 6 : 10-15)

6 *M.J.L.S.*, xiii. p. 214.

7 *M.J.L.S.*, Vol. xiii, 'Roman Coins found in India,' *J.R.A.S.*, xxiii, *J.B.B.R*, A.S.I., 1843, p.294, Num. chrn. 1891, *Roman History from Coins*, Michael Grant, 1968.

8 காந்தளஞ் சிலம்பில் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக்கோடு நொடுத் துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை (*குறுந்.* 100:3-5)
(வேழத்துக்கோடு—யானைக் கொம்பு. நொடுத்து—விலை கூறி விற்று.)

9 யானைவெண் கோடும் அகிலின் குப்பையும் (*சிலம்பு, காட்சி.* 37.

TAMIL NADU DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY MADRAS-

கொங்கு நாட்டுப் புலவர்கள்

புலவர் நிலை

சங்க காலத்துக் கொங்கு நாட்டின் கல்வி நிலை ஏனைய தமிழ் நாட்டிலிருந்தது போலவே இருந்தது. புலவர்களுக்கு உயர்வும் மதிப்பும் மரியாதையும் இருந்தன. புலவர்கள் ஒரே ஊரில் தங்கிக் கிணற்றுத் தவளைகளைப் போலிராமல், பல ஊர்களிலும் பல நாடுகளிலும் சென்று மக்களிடம் பழகி நாட்டின் நிலை, சமுதாயத்தின் நிலைகளை நன்கறிந்திருந்தார்கள். மக்களிடையே கல்வி பரவாமலிருந்தாலும், கற்றவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு இருந்தபடியால், வசதியும் வாய்ப்பும் உள்ளவர் முயன்று கல்வி கற்றனர். ஆண்பாலார், பெண்பாலார், அரசர், வாணிகர், தொழிலாளர் முதலியவர்கள் அக்காலத்தில் புலவர்களாக இருந்தார்கள். அந்தப் பழங் காலத்திலே இருந்த அந்தப் புலவர்கள் இரண்டு பொருள்களைப் பற்றிச் சிறப்பாகச் செய்யுள் இயற்றினார்கள். அவற்றில் ஒன்று அகப் பொருள், மற்றொன்று புறப்பொருள். அகப்பொருள் என்பது காதல் வாழ்க்கையைப் பற்றியது. புறப்பொருள் என்பது பெரும்பாலும் வீரத்தையும் போர்ச் செயலையும் பற்றியது. சங்க இலக்கியங்களில் சிறப்பாக இவ்விரு பொருள்கள் பேசப்படுகின்றன. பலவகையான சுவைகள் இச்செய்யுட்களில் காணப்படுகிற படியால், இவற்றைப் படிக்கும்போது இக்காலத்திலும் மகிழ்ச்சியளிக்கின்றன. மேலும், சங்கச் செய்யுட்கள், அக்காலத்து மக்கள் வாழ்க்கை வரலாற்றை யறிவதற்குப் பேருதவியாக இருக்கின்றன.

புலவர்கள் பொதுவாக அக்காலத்தில் வறியவராக இருந்தார்கள். அவர்கள் செல்வர்களையும் அரசர்களையும் அணுகி அவர்களுடைய சிறப்புகளைப் பாடிப் பரிசு பெற்று வாழ்ந்தார்கள். புலவர்கள் பொதுவாக யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் (வண்டிகள்) பரிசாகப் பெற்றார்கள். பரிசாகப் பெற்ற இவைகளை விற்றுப் பொருள் பெற்றனர். சில சமயங்களில் அரசர்கள் புலவர்களுக்கு நிலங்களையும் பொற்காசுகளையும் பரிசாகக் கொடுத்தார்கள். பொருள் வசதியுள்ளவர்கள்—அரசர், வாணிகர் பெருநிலக்கிழார்

போன்றவர்கள்—கல்வி இன்பத்துக்காகவே கல்வி பயின்று புலவர்களாக இருந்தார்கள். அவர்களும் அகப்பொருள் புறப்பொருள்களைப் பற்றிச் செய்யுள் இயற்றினார்கள். ஆனால், அக்காலத்தில் கல்வி கற்றவர் தொகை மிகக் குறைவு. பொதுவாக நாட்டு மக்கள் கல்வியில்லாதவர்களாகவே இருந்தார்கள்.

பொதுவாகப் புலவர்களுடைய வாழ்க்கை வறுமையுந் துன்பமுமாக இருந்தது. பிரபுக்கள் எல்லோரும் அவர்களை ஆதரிக்கவில்லை, சிலரே ஆதரித்தார்கள். அவர்கள் பெற்ற சிறு பொருள், வாழ்க்கைக்குப் போதாமலிருந்தது. ஆகவே, புலவர்கள் புரவலர்களை நாடித் திரிந்தனர். அவர்களில் நல்லூழ் உடைய சில புலவர்கள் பெருஞ்செல்வம் பெற்று நல்வாழ்வு வாழ்ந்தார்கள். கொங்கு நாட்டுப் புலவர் வாழ்க்கையும் இப்படித்தான் இருந்தது.

சங்க காலத்தில் இருந்த கொங்கு நாட்டுப் புலவர்களைப் பற்றிக் கூறுவோம்.

அஞ்சியத்தைமகள் நாகையார்

இவர் பெண்பால் புலவர். நாகை என்பது இவருடைய பெயர். அஞ்சி யத்தைமகள் என்பது சிறப்புச் சொல். தகடூர் அதிகமான் அரசர்களில் அஞ்சி என்னும் பெயருள்ளவர் சிலர் இருந்தார்கள். அந்த அஞ்சியரசர்களில் ஒருவருடைய அத்தை மகள் இவர். ஆகையால் அஞ்சி யத்தை மகள் நாகையார் என்று பெயர் கூறப்பெற்றார். அத்தை மகள் என்பதனால் அஞ்சியினுடைய மனைவி இவர் என்று சிலர் கருதுகின்றனர். அஞ்சியின் அவைப் புலவராக நெடுங்காலம் இருந்த ஔவையாரிடம் இந்த நாகையார் கல்வி பயின்றவராக இருக்கலாமோ?

இவருடைய செய்யுள் ஒன்று அகநானூற்றில் 352ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. குறிஞ்சித் திணையைப் பாடிய இந்தச் செய்யுள் இனிமையுள்ளது. பாறையின்மேல் இருந்து ஆடுகிற மயிலுக்குப் பின்னால் பெரிய பலாப்பழத்தை வைத்திருக்கிற கடுவன் குரங்கு, ஊர்த்திருவிழாவில் விறலி யொருத்தி பரதநாட்டியம் ஆடும்போது அவளுக்குப் பின்னாலிருந்து முழவு கொட்டும் முழவன்போலக் காட்சியளித்ததை இவர் இச்செய்யுளில் கூறுகிறார். மணப்பெண் ஒருத்தி தன்னுடைய தோழியிடம் தன்னுடைய மனநிறைந்த மகிழ்ச்சியைக் கூறியதாக இவர் கூறியுள்ளது படிப்பவருக்குப் பேருவகை தருகின்றது. அஞ்சியரசன் மேல் புலவர் பாடிய செய்யுளுக்கு இசையமைத்துப் பாடும் பாணனுடைய இசையில், இசையும் தாளமும் ஒத்திருப்பது போலவும் காதலன்—காதலியின் திருமண நாள் போலவும் அந்த மணப்பெண் நிறை மனம் பெற்றிருந்தாள் என்று இவர் கூறுவது படித்து இன்புறத்தக்கது.

கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த தயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே

இதனால் இப்புலவர் இசைக் கலையைப் பயின்றவர் என்பது தெரிகின்றது.

அதியன் விண்ணத்தனார்

அதியன் என்பது குலப்பெயர். விண்ணத்தன் என்பது இவருடைய இயற்பெயர். அதியன் (அதிகன், அதிகமான்) என்பது தகடூர் நாட்டை யரசாண்ட அரச பரம்பரையின் குலப்பெயர். இப்புலவர் அந்த அரச குலத்தைச் சேர்ந்தவர் என்று தோன்றுகிறார். எனவே, இவர் கொங்கு நாட்டுப் புலவர் என்பதில் ஐயமில்லை. இவருடைய செய்யுள் ஒன்று *அகநானூற்றில்* 301ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

அரிசில்கிழார்

இந்தப் புலவரின் சொந்தப் பெயர் தெரியவில்லை. அரிசில் என்னும் ஊரின் தலைவர் என்பது இவர் பெயரால் தெரிகிறது. அரிசில் என்னும் ஊர் சோழ நாட்டில் இருந்தது என்று சிலர் கூறுவர். அரிசில் என்னும் பெயருள்ள ஊர் கொங்கு நாட்டிலும் இருந்தது. அரிசில்கிழார் கொங்கு நாட்டில் வாழ்ந்தவர்.

இப்புலவர் அகப்பொருள் துறையில் பாடிய ஒரு செய்யுள் (193) *குறுந்தொகையில்* தொகுக்கப்பட்டிருக்கிறது. வையாவிக் கோப்பெரும் பேகனை அவனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக இவர் ஒரு செய்யுள் பாடினார் (*புறம்* 146). இதே காரணம் பற்றி வையாவிக் கோப்பெரும்பேகனைக் கபிலரும் (*புறம்* 143), பரணரும் (*புறம்* 141, 142, 144, 145) பெருங்குன்றூர்க் கிழாரும் (*புறம்* 147) பாடியுள்ளனர். இதனால், இப்புலவர்கள் காலத்தில் அரிசில்கிழாரும் இருந்தார் என்பது தெரிகின்றது. இவர் பாடிய புறப்பொருட்டுறை பற்றிய செய்யுட்கள் *புறநானூற்றில்* தொகுக்கப்பட்டுள்ளன (*புறம்* 281, 285, 300, 304, 342).

பெருஞ்சேரல் இரும்பொறை, அதிகமான் நெடுமானஞ் சியின் தகடூரின் மேல் படையெடுத்துச் சென்று முற்றுகையிட்டுப் போர் செய்தபோது அரிசில்கிழார், போர்க்களத்தில் இருந்து அந்தப் போர் நிகழ்ச்சியை நேரில் கண்டார். பொன்முடியாரும் அப்போர் நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர். தகடூர்ப் போரைப்

பற்றித் தகடூர் யாத்திரை என்னும் ஒரு நூல் இருந்தது. அந்த நூலில் இப்புலவர்கள் பாடிய செய்யுட்களும் இருந்தன. அந்த நூல் இப்போது மறைந்துவிட்டது. சில செய்யுட்கள் மட்டும் *புறத்திரட்டு* என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தகடூர் மன்னனாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் அவைப் புலவரான ஔவையாரும் இவர்கள் காலத்திலிருந்தார். அதிகமான் நெடுமானஞ்சியின் மகனான எழினி, தகடூர்ப் போர்க் களத்தில் வீரப்போர் செய்து இறந்தபோது அரிசில்கிழார் அவனுடைய வீரத்தைப் புகழ்ந்து பாடினார் (*புறம்* 230).

தகடூர் யாத்திரையில் அரிசில்கிழாருடைய செய்யுள்களும் இருந்தன என்று கூறினோம். *தொல்காப்பியம்* பொருளதிகாரம் புறத்திணையியலின் உரையில், உரையாசிரியர் நச்சினார்க் கினியர், *தகடூர் யாத்திரையிலிருந்து* அரிசில்கிழாரின் செய்யுட்கள் சிலவற்றை மேற்கோள்காட்டுகிறார். புறத்திணை யியல் 'இயங்குபடையரவம்' எனத் தொடங்கும் 8ஆம் சூத்திரத்தின் 'பொருளின்று உய்த்த பேராண் பக்கம்' என்பதன் உரையில் "மெய்ம்மலி மனத்தினம்மெதிர் நின்றோன்"என்னும் செய்யுளை மேற்கோள் காட்டி "இஃது அதிகமானால் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் (பெருஞ்சேரலிரும்பொறை) முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில்கிழார் கூறியது" என்று எழுதுகிறார்.

புறத்திணையில் 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்' என்று தொடங்கும் 12ஆம் சூத்திரத்தில் 'அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்' என்பதன் உரையில் நச்சினார்க்கினியர் 'கலையெனப் பாய்ந்த மாவும்' என்னுஞ் செய்யுளை மேற்கோள் காட்டி, "இது சேரமான் (பெருஞ் சேரலிரும்பொறை) பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன் படை பட்ட தன்மை கூறக் கேட்டோற்கு அவர் கூறியது" என்று விளக்கங் கூறியுள்ளார்.

தகடூர்ப் போரை வென்ற பெருஞ்சேரல்ரும்பொறை மேல் அரிசில்கிழார் பத்துச் செய்யுட்களைப் பாடினார் (*பதிற்றுப் பத்து*, எட்டாம் பத்து). அச்செய்யுள்களில் அவ்வரசனுடைய வெற்றிகளையும் நல்லியல்புகளையும் கூறியுள்ளார். அவற்றைக் கேட்டு மகிழ்ந்த அவ்வரசன் அவருக்கு ஒன்பது லட்சம் பொன்னையும் தன்னுடைய அரண்மனையையும் தன்னுடைய சிம்மாசனத்தையும் அவருக்குப் பரிசிலாகக் கொடுத்தான். புலவர் அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் அரசனுக்கு அமைச்சராக இருந்தார். இவைகளை எட்டாம் பத்துப் பதிகத்தின் அடிக்குறிப்பினால் அறிகிறோம். அக்குறிப்பாவது:

"பாடிப் பெற்ற பரிசில் தானும் கோயிலாளும் புறம் போந்து நின்று கோயிலுள்ள வெல்லாம் கொண்மி னென்று காணம்

ஒன்பது நூறாயிரத்தோடு அரசுகட்டிற் கொடுப்ப அவர் யான் இரப்ப இதனை ஆள்கவென்று அமைச்சுப் பூண்டார்." (கோயிலாள்—இராணி. கோயில்—அரண்மனை. காணம்—அக்காலத்தில் வழங்கின பொற்காசு. அரசு கட்டில்—சிம்மாசனம். அமைச்சு—மந்திரி பதவி)

இது, புலவர் வேறு எவரும் அடையாத பெருஞ் சிறப்பாகும். அரிசில்கிழாரைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

உம்பற்காட்டு இளங்கண்ணனார்

உம்பற்காடு என்பது கொங்கு நாட்டு ஊர். இளங்கண்ண னார் என்பது இவருடைய பெயர். யானை மலைப் பிரதேசமாகிய உம்பற் காட்டில் வாழ்ந்தவராகையால் இப்பெயர் பெற்றார். இவர் பாடின செய்யுள் ஒன்று *அகநானூற்றில்* 264ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

ஒளவையார்

ஒளவை (அவ்வை) என்பது உயர்குலத்துப் பெண் பாலார்க்கு வழங்கப்படுகிற பெயர். இது இவருக்குரிய இயற்பெயர் அன்று. உயர்வைக் குறிக்கும் சிறப்புப் பெயர். ஒளவையார் என்று சிறப்புப் பெயர் பெற்ற பெண்பாற் புலவர் சிலர் இருந்தனர். அவர்களில் இவர், காலத்தினால் முற்பட்டவர். கொங்கு நாட்டில் வாழ்ந்த இவர், கொங்கு நாட்டுத் தகடூரை யரசாண்ட அதிகமான் நெடுமானஞ்சியின் புலவராக இருந்தார். தகடூர், இப்போதைய சேலம் மாவட்டத்தினின்றும் பிரிந்து தர்மபுரி மாவட்டம் என்று பெயர் வழங்கப்படுகின்றது.

ஒளவையார் முதன்முதலாக நெடுமானஞ்சியிடம் பரிசில் பெறச் சென்றபோது அவன் பரிசு தராமல் காலந் தாழ்த்தினான். அப்போது இவர் ஒரு செய்யுளைப் பாடினார் (*புறம்* 206). பிறகு, அதிகமான் பரிசில் வழங்கி இவரை ஆதரித்தான். அதிகமான் அஞ்சியை ஒளவையார் அவ்வச் சமயங்களில் பாடியுள்ளார். அதிகமான் நெடுமான் அஞ்சிக்கு மகன் பிறந்தபோது அவன் போர்க்களத்திலிருந்து வந்து மகனைப் பார்த்தான். அவ்வமயம் அவன் இருந்த காட்சியை ஒளவையார் பாடியுள்ளார். கையில் மேலும் மெய்யில் வியர்வையும் காலில் வீரக்கழலும் மார்பில் அம்பு தைத்த புண்ணும் உடையவனாக வெட்சிப்பூவும் வேங்கைப்பூவும் விரவித் தொடுத்த மாலையை யணிந்துகொண்டு புலியுடன் போர் செய்த யானையைப் போல அவன் காணப்பட்டான் என்று கூறுகின்றார் (*புறம்* 100). அவனுடைய மகன் பெயர் பொகுட்டெழினி.

அதிகமான் ஒரு சமயம் ஒளவையாரைத் தொண்டைமான் இளந்திரையனிடம் தூது அனுப்பினான். இவரை வரவேற்றுத்

தொண்டைமான் தன்னுடைய படைக்கலச் சாலையைக் காட்டினான். போர்க் கருவிகள் எண்ணெயிடப்பட்டு மாலைகள் சூட்டி வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அது கண்ட ஔவையார், தன்னுடைய அதிகமான் அரசனின் போர்க் கருவிகள் பழுது தீர்க்கப்படுவதற்காகக் கொல்லனுடைய உலைக்களத்தில் இருக்கின்றன என்று ஒரு செய்யுள் பாடினார் (*புறம்* 95). அதாவது, அதிகமான் தன்னுடைய ஆயுதங்களைப் பயன்படுத்திக்கொண்டே யிருந்தபடியால் அவற்றை அவன் ஆயுதச் சாலையில் வைக்கவில்லை என்பது கருத்து.

எளிதில் கிடைக்காத அருமையான நெல்லிக்கனி நெடுமானஞ்சிக்குக் கிடைத்தது. அதனை அருந்தியவர் நெடுங்காலம் வாழ்ந்திருப்பார்கள். அந்தக் கனியை அவன் அருந்தாமல் ஔவையாருக்குக் கொடுத்து உண்ணச் செய்தான். உண்ட பிறகுதான் அக்கனியின் சிறப்பை ஔவையார் அறிந்தார். அப்போது, அதிகமானுடைய தன்னலமற்ற பெருங்குணத்தை வியந்து வாழ்த்தினார் (*புறம்* 91). நெடுமான் அஞ்சியை ஔவையார் வேறு சில பாடல்களிலும் பாடியுள்ளார். அவை *புறநானூற்றில்* தொகுக்கப்பட்டுள்ளன (*புறம்* 87, 88, 89, 90, 91, 94, 97, 98, 101, 103, 104, 315, 320).

நெடுமானஞ்சியின் மகனான பொகுட்டெழினியையும் ஔவையார் பாடியுள்ளார். அவன் அக்காலத்து வழக்கப்படி, பகைவருடைய நாட்டில் சென்று ஆனிரைகளைக் கவர்ந்து வந்ததைப் பாடியுள்ளார் (*குறுந்*. 80 : 4-6). அவனுடைய வீரத்தையும் நல்லாட்சியையும் பாடி இருக்கிறார் (*புறம்* 102). அவன் பகைவருடைய கோட்டையொன்றை வென்றபோது ஔவையாருக்குப் புத்தாடை கொடுத்து விருந்து செய்தான் (*புறம்* 392).

ஔவையார் காலத்தில் பாரிவள்ளல் இருந்தான். மூவேந்தர் பாரியின் பரம்புமலைக் கோட்டையை முற்றுகையிட்டிருந்த போது, கிளிகளைப் பழக்கிக் கோட்டைக்கு வெளியேயிருந்த நெற்கதிர்களைக் கொண்டு வந்த செய்தியை ஔவையார் கூறுகிறார் (*அகம்* 303:10-14).

ஔவையார் காலத்தில் தகடூர்ப் போர் நிகழ்ந்தது. கொங்கு நாட்டில் தங்கள் இராச்சியத்தை நிறுவிய இரும்பொறை யரசர்கள் தங்கள் இராச்சியத்தை விரிவுபடுத்திக்கொண்டிருந் தார்கள். அவர்களில் பெருஞ்சேரல் இரும்பொறை தகடூரின் மேல் படையெடுத்து வந்து, கோட்டையை முற்றுகையிட்டுப் போர் செய்தான். அந்தப் போரில் இரு தரப்பிலும் பல வீரர்கள் மாண்டார்கள். அதிகமான் நெடுமான் அஞ்சியின் மார்பில் அம்பி னால் புண் உண்டாயிற்று. அப்போது ஔவையார் அவனைப் பாடினார் (*புறம்* 93). பிறகு அப்புண் காரணமாக அவன் இறந்து

போனான். அப்போதும் அவனை ஔவையார் பாடினார் (*புறம்* 235, 231). அவனுக்கு நடுகல் நட்டு நினைவுக்குறி யமைத்தார்கள். அச்சமயத்திலும் ஔவையார் ஒரு செய்யுளைப் பாடினார் (*புறம்* 232).

ஔவையார், அதிகமான் நெடுமான் அஞ்சியாலும் அவன் மகன் பொகுட்டொழினியாலும் ஆதரிக்கப்பட்டவர். தகடூரில் அதிகமானுடன் போர் செய்த பெருஞ்சேரல் இரும்பொறை யையும் அவனுடைய தாயாதித் தமயனான சேரன் செங்குட்டுவ னையும் அரிசில்கிழாரும் பரணரும் பாடியிருக்கிறார்கள். ஔவையாரின் காலத்திலிருந்த பாரியைக் கபிலர் பாடியுள்ளார். ஆகவே, இவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் ஔவையாரும் வாழ்ந்தார் என்பது தெரிகின்றது. பாரியைப் பாடின கபிலர், செங்குட்டுவனின் தாயாதிச் சிற்றப்பனான செல்வக்கடுங்கோ வாழியாதன் மீது 7ஆம் பத்துப் பாடினார். செங்குட்டுவனும் செல்வக்கடுங்கோ வாழியாதனும் ஏறத்தாழ சமகாலத்தில் இருந்தவர். மேலும் கபிலரும் பரணரும் சமகாலத்தில் இருந்தவர் என்பது தெரிந்த விஷயம். ஆகவே, இவர்கள் எல்லோரும் சமகாலத்தவர் என்பது தெரிகின்றது. மேலும், செங்குட்டுவனுக் குத் தம்பியாகிய இளங்கோவடிகளும் இவர்களின் நண்பராகிய சீத்தலைச் சாத்தனாரும் ஔவையார் காலத்தில் இருந்தவர்கள்.

ஔவையாரின் செய்யுட்கள் தொகை நூல்களில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இவருடைய, செய்யுள்கள் *அகநானூற்றில்* நான்கும், *குறுந்தொகையில்* பதினைந்தும், *நற்றிணையில்* ஏழும், *புறநானூற்றில்* முப்பத்து மூன்றும் ஆக மொத்தம் ஐம்பத்தொன்பது செய்யுட்கள் கிடைத்திருக்கின்றன. இவருடைய செய்யுட்களில் சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படு கிற செய்திகள் காணப்படுகின்றன.

அதிகமான் நெடுமான் அஞ்சியின் முன்னோர்களில் ஒருவன் கரும்பைக் கொண்டு வந்து தமிழகத்தில் முதல்முதலாகப் பயிர் செய்தான் என்று ஔவையார் கூறுகிறார் (*புறம்* 99, 392).

கருவூர்க் கண்ணம்பாளனார்

இவர் கொங்கு நாட்டுக் கருவூரில் இருந்தவர். இவருடைய செய்யுட்கள் *அகநானூற்றிலும்* (180, 263) *நற்றிணையிலும்* (148) தொகுக்கப்பட்டுள்ளன. *அகம்* 263இல்

> ஒளிறு வேல் கோதை ஓம்பிக் காக்கும்
> வஞ்சியன்ன வளநகர் விளங்க

என்று இவர் கூறுகிறார். இதில் கோதை என்பது தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைக் குறிப்பதாகலாம். பெருஞ்சேர லிரும்பொறைக்குக் 'கோதை' என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. வஞ்சி என்பது கருவூரின் இன்னொரு பெயர்.

கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்

கொங்கு நாட்டுக் கருவூரில் இருந்த இவர் *அகம்* 309, *நற்.* 343, *புறம்* 168 ஆகிய மூன்று செய்யுட்களைப் பாடியிருக்கிறார். கதப்பிள்ளையார் என்னும் இன்னொரு புலவர் *குறுந்தொகை* (64, 265, 380), *நற்றிணை* (135), *புறம்* (380) ஆகிய செய்யுட்களைப் பாடியுள்ளார். இவ்விருவரையும் ஒருவர் என்று பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் கருதுகிறார். இவர்கள் வெவ்வேறு புலவர்கள் என்று தோன்றுகின்றனர்.

கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் *புறம்* 168இல் குதிரைமலைப் பிட்டங்கொற்றனைப் பாடுகிறார். பிட்டங் கொற்றன், கொங்கு நாட்டில் குதிரைமலை நாட்டில் இருந்தவன். இவன் கொங்குச் சேரரின்கீழ் சேனைத் தலைவனாக இருந்தான்.

கருவூர்க் கலிங்கத்தார்

கலிங்க நாட்டில் (ஒரிசா தேசம்) சென்று நெடுங்காலந் தங்கியிருந்து மீண்டும் கருவூருக்கு வந்து வாழ்ந்திருந்தவர் இவர் என்பது இவருடைய பெயரிலிருந்து அறிகிறோம். (கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தமிழ வாணிகர் கலிங்க நாட்டுக்குச் சென்று அங்கு வாணிகஞ் செய்து வந்தனர் என்பதைக் கலிங்க நாட்டில் காரவேலன் என்னும் அரசன் ஹத்தி கும்பா குகையில் எழுதியுள்ள சாசனத்திலிருந்து அறிகிறோம்.) கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த இவர் வாணிகத்தின் பொருட்டுக் கலிங்க நாடு சென்றிருந்தார் போலும். பாலைத் திணையைப் பாடிய இவருடைய செய்யுள் ஒன்று அகம் 183ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

கருவூர் கிழார்

இவர் இருந்த ஊரின் பெயரே இவருடைய பெயராக அமைந்திருக்கிறது. இவரைப் பற்றிய வரலாறு தெரியவில்லை. இவர் இயற்றிய செய்யுள் ஒன்று *குறுந்தொகையில்* 170ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

கருவூர்க் கோசனார்

கோசர் என்பது ஒரு இனத்தவரின் பெயர். சங்க காலத்தில் கோசர், போர் வீரர்களாகவும், அரச ஊழியர்களாகவும் தமிழகமெங்கும் பரவியிருந்தார்கள். கொங்கு நாட்டில் இருந்த கொங்கிளங் கோசர், சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்துக்கு விழாச் செய்தது போலவே, இவர்களும் கொங்கு நாட்டில் பத்தினித் தெய்வத்துக்கு விழாச் செய்தார்கள் என்று *சிலப்பதிகாரத்தினால்* அறிகிறோம். கோயம்புத்தூர் என்பது

கோசர் (கோசர்-கோயர்) என்னும் பெயரினால் ஏற்பட்ட பெயர். கோசர் இனத்தைச் சேர்ந்த இந்தப் புலவர் கொங்கு நாட்டுக் கருவூரில் இருந்தபடியால் கருவூர்க் கோசனார் என்று பெயர் பெற்றார். பாலைத் திணையைப் பாடிய இவருடைய செய்யுள் ஒன்று *நற்றிணையில்* (214) தொகுக்கப்பட்டிருக்கிறது.

கருவூர் சேரமான் சாத்தன்

சாத்தன் என்னும் பெயருள்ள இவர் சேரமன்னர் குலத்தைச் சேர்ந்தவர். இவர் இருந்த கருவூர் கொங்கு நாட்டுக் கருவூர் என்று தோன்றுகிறது. இவருடைய செய்யுள் ஒன்று *குறுந்தொகையில்* 268ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

கருவூர் நன்மார்பனார்

நன்மார்பன் என்னும் பெயருள்ள இப்புலவர் கருவூரில் வாழ்ந்தவர். இவருடைய வரலாறு தெரியவில்லை. இவருடைய செய்யுள் ஒன்று *அகநானூற்றில்* 277ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. வெயிற்காலத்தில் செந்நிறமாக மலர்கிற (கலியாண) முருக்க மலர்க்கொத்து, சேவற்கோழி வேறு சேவலுடன் போர் செய்யும்போது சிலிர்த்துக்கொள்ளும் கழுத்து இறகு போல இருக்கிறது என்று இவர் உவமை கூறியிருப்பது மிகப் பொருத்தமாகவும் வியப்பாகவும் இருக்கிறது.

அழலகைந் தன்ன காமர் துதை மயிர்
மனையுறை கோழி மறனுடைச் சேவல்
போர்புரி எருத்தம் போலக் கஞலிய
பொங்கழல் முருக்கின் ஒண்குரல் (*அகம்* 277:14-17)

கருவூர்ப் பவுத்திரனார்

பவுத்திரன் என்பது இவருடைய பெயர். இவர் பாடிய செய்யுள் ஒன்று *குறுந்தொகையில்* 162ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. பசுக்கூட்டம் ஊருக்குத் திரும்பி வருகிற மாலை வேளையில் முல்லை முகைகள் பூக்குந் தருவாயிலிருப்பதைக் கண்டு தலைமகன் கூறியதாக அமைந்த இந்தச் செய்யுள் படிப்பதற்கு இன்பமாக இருக்கிறது.

கருவூர்ப் பூதஞ்சாத்தனார்

பேய், பூதம், சாத்தன் என்னும் பெயர்கள் சங்க காலத்தில் மக்களுக்குப் பெயராக வழங்கப்பட்டன. பேய், பூதம் என்னும் பெயர்கள் அந்தக் காலத்தில் தெய்வம் என்னும் பொருளில் உயர்வாக மதிக்கப்பட்டன. பிற்காலத்திலுங்கூட இப்பெயர்கள் வழங்கப்பட்டன. பேயாழ்வார், பூதத்தாழ்வார் என்னும்

பெயர்களைக் காண்க. மிகப் பிற்காலத்தில், பேய் பூதம் என்னும் பெயர்கள் சிறப்பான உயர்ந்த பொருளை இழந்து தாழ்வான பொருளைப் பெற்றன. கொங்கு நாட்டுக் கருவூரில் பூதம் என்னுந் தெய்வத்துக்குக் கோயில் இருந்தது. இந்தப் புலவருக்கு அந்தத் தெய்வத்தின் பெயரை இட்டனர் போலும்.

கருவூர்ப் பூதஞ் சாத்தனார் இயற்றிய செய்யுள் ஒன்று *அகநானூற்றில்* ஐம்பதாம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதனாதனார்

இவர் கருவூரில் பெருஞ்சதுக்கம் என்னும் இடத்தில் இருந்தவர் என்று தோன்றுகிறார். இவருடைய பெயர் பூதன் ஆதன் என்பது. இவருடைய வரலாறு தெரியவில்லை. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து (பட்டினி நோன்பிருந்து) உயிர்விட்டபோது அவன் மீது இவர் கையறுநிலை பாடினார். அந்தச் செய்யுள் *புறநானூற்றில்* 219ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

கொல்லிக் கண்ணனார்

கண்ணன் என்பது இவருடைய பெயர். கொல்லி என்பது இவருடைய ஊர்ப்பெயர். கொல்லி என்னும் ஊரும் கொல்லி மலைகளும் கொல்லிக் கூற்றத்தில் இருந்தன. ஓரி என்னும் அரசன் கொல்லிக் கூற்றத்தை யரசாண்டான் என்றும் பெருஞ்சேரல் இரும்பொறை அவனை வென்று அவனுடைய நாட்டைத் தன்னுடைய கொங்கு இராச்சியத்தில் சேர்த்துக் கொண்டான் என்றும் அறிந்தோம். கொல்லிக் கண்ணனார், கொல்லிக் கூற்றத்துக் கொல்லி என்னும் ஊரிலிருந்தவர் என்பது தெரிகிறது.

இந்தப் புலவரைப் பற்றிய வரலாறு ஒன்றுந் தெரியவில்லை. இவர் பாடிய செய்யுள் ஒன்று *குறுந்தொகையில்* 34ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. மருதத்திணையைப் பற்றிய இந்தச் செய்யுளில் 'குட்டுவன் மாந்தை'யைக் கூறுகிறார். மாந்தை என்பது கொங்குச் சேரருக்குரிய மேற்குக் கரையிலிருந்த துறைமுகப்பட்டினம். குட்டுவன் என்னும் பெயருள்ள அரசர் பலர் இருந்தனர். அவர்களில் இவர் கூறுகிற குட்டுவன் யார் என்பது தெரியவில்லை.

சேரமான் கணைக்காலிரும்பொறை

கொங்கு நாட்டை யாண்ட இவன் கொங்குச் சேரரின் கடைசி அரசன் என்று கருதப்படுகிறான். இவன் புலவனாகவும்

திகழ்ந்தான். இவன் பாடிய செய்யுள் *புறநானூற்றில்* 74ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்யுளை இவனுடைய வரலாற்றுப் பகுதியில் காண்க.

பாலை பாடிய பெருங்கடுங்கோ

சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்றும் இவரைக் கூறுவர். கொங்கு நாட்டுச் சேரர்களில் கடுங்கோ என்னும் பெயருள்ளவர் சிலர் இருந்தனர். செல்வக் கடுங்கோ (வாழியாதன்), மாந்தரன் பொறையன் கடுங்கோ, பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ என்று சிலர் இருந்தனர். கடுங்கோ என்பது இவருடைய பெயர். இவருக்குப் பிறகு இளங்கடுங்கோ ஒருவர் இருந்தார். பாலைத் திணையைப் பற்றிய செய்யுட்களைப் பாடினபடியால் இந்தச் சிறப்பையுஞ் சேர்த்துப் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று பெயர் பெற்றார்.

கொங்கு நாட்டைச் சேர்ந்த புகழூர் ஆறுநாட்டார்மலையில் உள்ள இரண்டு பழைய பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள் பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோக்களைக் கூறுகின்றன. 'அமணன் ஆற்றூர் செங்காயபன் உறையகோ ஆதன் சேரலிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ இளங்கோவாக அறுத்த கல்' என்பது அந்தக் கல்வெட்டின் வாசகம்.

இந்தக் கல்வெட்டில் கூறப்படுகிற பெருங்கடுங்கோன், பாலை பாடிய பெருங்கடுங்கோவாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அப்படியானால், இவருடைய தந்தை, கோஆதன் சேரலிரும்பொறையாவான். கோஆதன் சேரலிரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோனுக்கு இளங்கடுங்கோ என்று பெயருள்ள ஒரு மகன் இருந்தான் என்பதை இந்தக் கல்வெட்டு எழுத்தினால் அறிகிறோம். இந்த இளங்கடுங்கோவும் மருதம் பாடிய இளங்கடுங்கோவும் ஒருவராக இருக்கலாமோ?

பாலை பாடிய பெருங்கடுங்கோவின் அறுபத்தெட்டுச் செய்யுட்கள் சங்கத் தொகைநூல்களில் தொகுக்கப் பட்டிருக்கின்றன. *அகநானூற்றில்* பன்னிரண்டும் (*அகம்* 5, 99, 111, 155, 185, 223, 261, 267, 291, 313, 337, 379), *கலித்தொகையில்* முப்பத்தைந்தும் (பாலைக்கலி முழுவதும்), *குறுந்தொகையில்* பத்தும் (*குறுந்.* 16, 37, 124, 135, 137, 209, 231, 262, 283, 398), *புறநானூற்றில்* ஒன்றும் (*புறம்* 282), *நற்றிணையில்* பத்தும் (நற். 9, 48, 118, 202, 224, 256, 318, 337, 384, 391) ஆக அறுபத்தெட்டுச் செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவருடைய செய்யுட்கள்

அழகும் இனிமையும் பொருள் செறிவும் சொற்செறிவும் உடையவை. இவர் காட்டும் உவமைகளும் உலகியல் உண்மைகளும் அறிந்து மகிழத் தக்கவை.

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் (அகம் 155:1-3)

என்று இவர் கூறியது என்றும் மாறாத உலகியல் உண்மையாகும்.

உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை யிரவினும் இளிவெனச்
சொல்லிய வன்மைத் தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி (குறுந் 283:1-4)

இது எல்லோரும் கொள்ளவேண்டிய பொன்மொழி யன்றோ?

திருவிழாவின்போது உயரமான கம்பத்தில் இராத்திரியில் பல விளக்குகளை ஏற்றிவைப்பது அக்காலத்து வழக்கம். இந்தக் கம்ப விளக்கை, மலைமேல் வளர்ந்த இலையுயர்ந்த இலவ மரம் செந்நிறப் பூக்களுடன் திகழ்வது போல இருக்கிறது என்று உவமை கூறியிருப்பது இயற்கையான உண்மையைத் தெரிவிக்கின்றது.

அருவி யான்ற வுயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவம் (அகம் 185:10-12)

நம்பியும் நங்கையும் காதலரானார்கள். நங்கை நம்பியுடன் புறப்பட்டு அவனுடைய ஊருக்குப் போய்விட்டாள். அவள் போய்விட்டதையறிந்த செவிலித்தாய் அவளைத் தேடிப் பின் சென்றாள். அவர்கள் காணப்படவில்லை. தொடர்ந்து நெடுந் தூரஞ் சென்றாள். அவர்கள் காணப்படவில்லை. ஆனால், துறவிகள் சிலர், அவ்வழியாக வந்தவர் எதிர்ப்பட்டனர். அவர்களை அவ்வன்னை 'நம்பியும் நங்கையும் போவதை வழியில் கண்டீர்களோ' என்று வினவினாள். அவர்கள், நங்கையின் அன்னை இவள் என்பதை யறிந்தனர். அவர்கள் அன்னைக்குக் கூறினார்கள்: 'ஆம், கண்டோம். நீர் மனம் வருந்த வேண்டா. நங்கை நம்பியுடன் கூடி வாழ்வதுதான் உலகியல் அறம். அந்த நங்கை நம்பிக்குப் பயன்படுவாளே தவிர உமக்குப் பயன்படாள். மலையில் வளர்ந்த சந்தன மரம் மலைக்குப் பயன்படாது; கடலில் உண்டாகும் முத்து கடலுக்குப் பயன்படாது; யாழில் உண்டாகிற இன்னிசை வாசிப்பவருக் கல்லாமல் யாழுக்குப் பயன்படாது. உம்முடைய மகளும் உமக்கு

அப்படித்தான்' என்று கூறி அன்னையின் கவலையைப் போக்கினார்கள் என்று பாலை பாடிய பெருங்கடுங்கோ உலகியல் அறத்தை அழகும் இனிமையும் உண்மையும் விளங்கக் கூறுகிறார். அவை:

புலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் தனையளே

இவ்வாறு பாலை பாடிய பெருங்கடுங்கோவின் செய்யுட்களில் பல உண்மைகளையும் அழகுகளையும் இனிமையையும் கண்டு மகிழலாம். இவர் போர் செய்திருக்கிறார் என்றும் அப்போரில் வெற்றி பெற்றிருக்கிறார் என்றும் பேய்மகள் இளவெயினியார் இவர்மேல் பாடிய செய்யுளினால் அறிகிறோம்.

பேய்மகள் இளவெயினி

பேய் என்பது இவருடைய பெயர். பேய், பூதம் என்னும் பெயர்கள் சங்க காலத்திலும் அதற்குப் பிறகும் தெய்வங்களின் பெயராக வழங்கி வந்தன. பேயாழ்வார் பூதத்தாழ்வார் என்னும் பெயர்களைக் காண்க. எயினி என்பதனாலே இவர் எயினர் (வேடர்) குலத்துப் பெண்மணி என்று தெரிகிறார். இவர் சிறந்த புலவர். பெரும்புலவரும் அரசருமாக இருந்த பாலை பாடிய பெருங்கடுங்கோவைப் பாடி இவர் அவரிடம் பரிசு பெற்றார். இவர் பாடிய பாடல் *புறநானூறு* 11ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்யுளில் இவர் பாலை பாடிய பெருங்கடுங்கோவை,

விண்பொரு புகழ் விறல் வஞ்சிப்
பாடல் சான்ற விறல் வேந்தனும்மே
வெப்புடைய அரண் கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே

என்று கூறுகிறார்.

இவரும் பாலை பாடிய பெருங்கடுங்கோவும் கொங்கு நாட்டில் சமகாலத்தில் இருந்தவர்கள் என்பது தெரிகின்றது.

பொன்முடியார்

கொங்கு நாட்டுப் புலவராகிய இவர் சேலம் மாவட்டத்துத் தகடூர் நாட்டைச் சேர்ந்த பொன்முடி என்னும் ஊரினர். இவ்வூர்ப் பெயரே இவருக்குப் பெயராக வழங்கியது. இவருடைய சொந்தப் பெயர் தெரியவில்லை. இவரைப் பெண்பாற் புலவர் என்று சிலர் கருதுவது தவறு. அதிகமான் நெடுமான் அஞ்சியின் தகடூர்க் கோட்டையைப் பெருஞ்சேரல் இரும்பொறை முற்றுகையிட்டுப் போர் செய்த காலத்தில் பொன்முடியார் அந்தப் போர்க்களத்தை நேரில் கண்டவர். அரிசில்கிழார் என்னும் புலவரும் அந்தப் போர் நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர். இவர்கள் காலத்திலே, அதிகமான் நெடுமானஞ்சியின் அவைப் புலவரான ஔவையாரும் இருந்தார். எனவே, இவர்கள் எல்லோரும் சமகாலத்தில் இருந்தவர்கள். பொன்முடியாரின் வரலாறு தெரியவில்லை. இப்புலவருடைய பாடல்கள் *புறநானூற்றிலும் தகடூர் யாத்திரையிலும்* தொகுக்கப்பட்டுள்ளன.

புறநானூறு 209, 310, 312ஆம் பாட்டுகள் இவர் பாடியவை. இவை, முறையே குதிரைமறம், நூழிலாட்டு, மூதின்முல்லை என்னுந் துறைகளைக் கூறுகின்றன. இவர் பாடிய "ஈன்று புரந்தருதல் என்தலைக் கடனே" என்று தொடங்கும் மூதின்முல்லைத் துறைச் செய்யுள் (*புறம்* 312) பலரும் அறிந்ததே.

தகடூர்ப் போர் நிகழ்ச்சியைக் கூறுகிற *தகடூர் யாத்திரை* என்னும் நூலில் பொன்முடியாரின் பாட்டுகளும் தொகுக்கப்பட்டிருந்தன. ஆனால், அந்நூல் இப்போது மறைந்துபோனபடியால் இவர் பாடிய எல்லாப் பாடல்களும் கிடைக்கவில்லை. அந்த நூற் செய்யுட்கள் சில *புறத்திரட்டு* என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. *தொல்காப்பியப் புறத்திணையியல்* உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொன்முடியாருடைய செய்யுட்கள் சிலவற்றை மேற்கோள் காட்டியுள்ளார். புறத்திணையியல் 'இயங்குபடையரவம்' என்னுந் தொடக்கத்து 8ஆம் சூத்திரத்தில் 'வருவிசைப் புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமையானும்' என்னும் அடிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், 'கார்த்தரும்' எனத் தொடங்கும் பாட்டை மேற்கோள் காட்டி (*புறத்திரட்டு* 1369ஆம் செய்யுள்) "இது பொன்முடியார் ஆங்கவளைக்(?) கண்டு கூறியது" என்று எழுதியுள்ளார்.

புறத்திணையியலில் 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்' எனத் தொடங்கும் 12ஆம் சூத்திரத்தின் 'தொல் எயிற்கு இவர்தலும்' என்பதன் உரையில் நச்சினார்க்கினியர் (பக்கம் 11-12) 'மறனுடைய மறவர்' என்று தொடங்கும் செய்யுளை

மேற்கோள் காட்டி 'இது பொன்முடியார் பாட்டு' என்று எழுதுகிறார்.

மேற்படி சூத்திரத்தின் 'அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்' என்பதன் உரையில் 'கலையெனப் பாய்ந்த மாவும்' என்னுஞ் செய்யுளை மேற்கோள் காட்டி "இது சேரமான் (பெருஞ்சேரல் இரும்பொறை) பொன்முடியாரையும் அரிசில் கிழாரையும் நோக்கித் தன் படை பட்ட தன்மை கூறக் கேட்டோற்கு அவர் கூறிய விளக்கம்" என்று கூறியுள்ளார்.

மேற்படி சூத்திரம் 'உடன்றோர் வருபகை பேணார் ஆர்எயில் உளப்பட' என்னும் அடிக்கு உரை எழுதியவர் "இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறியது" என்று விளக்கங் கூறுகிறார்.

பொன்முடியாரின் செய்யுட்கள் இவ்வளவுதான் கிடைத்திருக்கின்றன. இவர் பாடியவை எல்லாம் புறத்துறை பற்றிய செய்யுட்களே.

பெருந்தலைச் சாத்தனார்

இவர் ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனாரென்றும் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனாரென்றுங் கூறப்படுகிறார். இவருடைய பெயர்க் காரணத்தைப் பற்றிப் "பெரிய தலையையுடையராதலிற் பெருந்தலைச் சாத்தனார் எனப்பட்டார் போலும்" என்று பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் *நற்றிணை* பாடி னோர் வரலாற்றில் எழுதுகிறார். இது ஏற்கத்தக்கதன்று. சாத்தனார் என்னும் பெயருள்ள இப்புலவர் பெருந்தலை என்னு மூரில் இருந்தது பற்றிப் பெருந்தலைச் சாத்தனார் என்று பெயர் பெற்றார் என்று கருதுவது பொருத்தமானது. கொங்கு நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோபிசெட்டிப்பாளையம் தாலுகாவில் பெருந்தலையூர் என்னுமூர் இருக்கிறது. இப்புலவர் அவ்வூரினராக இருக்கலாம். பெருந்தலையூர்ச் சாத்தனார் என்பது சுருங்கிப் பெருந்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பட்டது.

அகநானூற்றில் 13, 224ஆம் செய்யுள்கள் இவர் பாடியவை. அகம் 13ஆம் செய்யுளில் 'தென்னவன் மறவனாகிய கோடைப் பொருநன்' என்பவனைக் குறிப்பிடுகிறார். இவன் பாண்டியனுடைய சேனைத் தலைவன் என்பதும் கோடைக் கானல் மலைப்பகுதியை இவன் ஆண்டான் என்பதும் தெரிகின்றன. *நற்றிணை* 262ஆம் செய்யுளும் இவர் பாடியதே. இவர் பாடிய ஆறு செய்யுட்கள் *புறநானூற்றில்* தொகுக்கப் பட்டிருக்கின்றன.

புறம் 151ஆம் செய்யுளின் கீழ்க்குறிப்பு, “இளங்கண்டீரக் கோவும் இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக்கோவைப் புல்லி இளவிச்சிக்கோவைப் புல்லாராக, என்னை என் செயப் புல்லீரா யினீரென, அவர் பாடியது” என்று கூறுகிறது. கண்டீரக்கோ, விச்சிக்கோ என்பவர்கள் கொங்கு நாட்டுச் சிற்றரசர்கள். கொங்கு நாட்டுக் குதிரை மலை நாட்டை யரசாண்ட குமணனை அவன் தம்பி காட்டுக்கு ஒட்டிவிட்டுத் தான் அரசாண்டான். வறுமையினால் துன்புற்ற பெருந்தலைச் சாத்தனார் காட்டுக்குச் சென்று அங்கிருந்த குமணனைப் பாடினார் (*புறம்* 164). இச்செய்யுளில் இவருடைய வறுமைத் துன்பம் பெரிதும் இரங்கத்தக்கதாக உள்ளது. அப்போது குமணன் என் தலையை வெட்டிக் கொண்டுபோய் என் தம்பியிடங் கொடுத்தால் அவன் உமக்குப் பொருள் தருவான் என்று கூறித் தன்னுடைய போர் வாளைப் புலவருக்குக் கொடுத்தான். அந்த வாளைப் பெற்றுக் கொண்ட புலவர் இளங்குமணனிடம் வந்து குமணன் கொடுத்த வாளைக் காட்டிப் *புறம்* 165ஆம் செய்யுளைப் பாடினார். கோடைமலைப் பொருநனாகிய கடிய நெடுவேட்டுவனைப் பாடியுள்ளார் (*புறம்* 205). இவனை இவர் தம்முடைய *அகம்* 13 ஆம் செய்யுளில் குறிப்பிட்டுள்ளதை முன்னமே கூறினோம். மூவன் என்பவனிடம் சென்று பரிசில் பெறுவதற்குப் *புறம்* 209ஆம் செய்யுளைப் பாடினார். *புறம்* 294ஆம் செய்யுளில் ஒரு போர்வீரனுடைய தானைமறத்தைப் பாடியுள்ளார்.

மருதம் பாடிய இளங்கடுங்கோ

இவர் பெயர் கடுங்கோ என்பது. பெருங்கடுங்கோ என்று ஒருவர் இருந்தது பற்றி இவர் இளங்கடுங்கோ என்று பெயர் பெற்றார். மருதத் திணை பற்றிய செய்யுள்களைப் பாடினபடியால் மருதம் பாடிய இளங்கடுங்கோ என்று இவர் அழைக்கப் பெற்றார். பாலை பாடிய பெருங்கடுங்கோவின் மகனாக இவர் இருக்கக்கூடுமோ? அல்லது தம்பியாக இருக்கக்கூடுமோ? (பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னுந் தலைப்புக் காண்க.). இவர் கொங்கு நாட்டிலிருந்த அரசர் மரபைச் சேர்ந்த புலவர். இவர் பாடிய செய்யுட்கள் *அகநானூற்றில்* இரண்டும் (*அகம்* 96, 176) *நற்றிணையில்* ஒன்றும் (*நற்.* 50) தொகுக்கப்பட்டுள்ளன.

பாலை பாடிய பெருங்கடுங்கோ, அவரைப் பாடிய பேய்மகள் இளவெயினி ஆகிய இவர்கள் காலத்தில் இப்புலவர் இருந்தார். அவர்களுக்கு இவர் வயதில் இளைஞர்.

கொங்கு நாட்டுச் சங்க நூல்கள்

பதிற்றுப்பத்து

கடைச்சங்க காலத்து நூல்களில் *பதிற்றுப்பத்தும்* ஒன்று. இதில் சேர நாட்டுச் சேர அரசர்கள் அறுவரும் கொங்கு நாட்டுச் சேர அரசர் நால்வரும் பாடப்பட்டுள்ளனர். ஆகையால், இந்நூலின் பிற்பகுதி கொங்கு நாட்டுப் பொறையரைப் பற்றியது.

இவற்றில் ஏழாம் பத்து, கொங்கு நாட்டை யரசாண்ட செல்வக் கடுங்கோ வாழியாதன் மேல் கபிலர் பாடியது. இதற்குக் கபிலர் நூறாயிரம் (ஒரு லட்சம்) காணம் பரிசாகப் பெற்றார். மற்றும், கொங்கு நாட்டிலுள்ள நன்றா (இப்போது திருநணா?) என்னும் மலை மேலிருந்து கண்ணுக்குத் தெரிந்த நாடுகளின் வருவாயை இவ்வரசன் கபிலருக்குக் கொடுத்தான் என்று 7ஆம் பத்துப் பதிகத்தின் அடிக்குறிப்புக் கூறுகிறது.

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்து, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை மேல் அரிசில்கிழார் பாடியது. இதற்காக இவர் பெற்ற பரிசு ஒன்பது நூறாயிரம் (ஒன்பது இலட்சம்) காணமும் அமைச்சுப் பதவியுமாம். தகடூர்ப் போர் நடந்தபோது அரிசில்கிழார் போர்க்களத்தில் இருந்து அப்போரை நேரில் கண்டவர். அக்காலத்தில் இவர் பாடிய செய்யுட்கள் *தகடூர் யாத்திரை* என்னும் நூலில் தொகுக்கப் பட்டிருந்தன.

பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்து, இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது. இதற்கு இவர் 32 ஆயிரம் காணமும் ஊரும் மனையும் நிலங்களும் பரிசாகப் பெற்றார் என்று பதிகச் செய்யுளின் அடிக்குறிப்புக் கூறுகிறது.

பதிற்றுப்பத்தின் பத்தாம் பத்து இப்போது மறைந்து விட்டது. இது, சேரமான் (யானைக்கட்சேய்) மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பொருந்தில் இளங்கீரனார் பாடியது என்று கருதப்படுகிறது. இப்படிக் கருதுவதற்குக் காரணம் *புறநானூறு* 53ஆம் செய்யுள். சேரமான் யானைக்கட்சேய் மாந்தரம் சேரல் இரும்பொறை விளங்கில் என்னும் ஊரில் பகைவருடன் போர் செய்து வென்றான். அப்போது அவன் தன்னைப் பாடுவதற்கு

இக்காலத்தில் கபிலர் இல்லையே என்று கவலையடைந்தான். (இவனுடைய பாட்டனாகிய செல்வக் கடுங்கோ வாழியாதனை 7ஆம் பத்தில் பாடிய கபிலர் முன்னமே இறந்து போனார்.) அரசன் கவலைப்படுவதை அறிந்த பொருந்தில் இளங்கிரனார் கபிலரைப் போன்று உம்மை நான் பாடுவேன் என்று கூறினார்.

செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்றநின்
ஆடுகொள் வரிசைக் கொப்பப்
பாடுவல் மன்னாற் பகைவரைக் கடப்பே (*புறம்* 53 : 11-15)

இவ்வாறு இந்தப் புலவர் பாடியிருக்கிறபடியால் இவரே இவ்வரசன் மேல் பத்தாம் பத்துப் பாடியிருக்கலாம் என்று கருதுவது தவறாகாது.

பதிற்றுப்பத்தில் 7, 8, 9, 10ஆம் பத்துகள் கொங்குச் சேரர் மேல் பாடப்பட்டவை என்பதும், ஆகவே அவை கொங்கு நாட்டு இலக்கியம் என்பதும் தெரிகின்றன.

பதிற்றுப்பத்துச் செய்யுட்கள் வெறும் இயற்றமிழ்ச் செய்யுட்கள் மட்டுமன்று. இச்செய்யுட்கள் இசையுடன் பாடப்பட்டன என்பது தெரிகிறது. ஒவ்வொரு செய்யுளின் அடிக்குறிப்புகளிலிருந்து இதனையறிகிறோம். ஆகவே, புலவர்கள் இயற்றின இந்தச் செய்யுட்களை அந்தந்த அரசர் முன்னிலையில் பாடியபோது பாணரைக் கொண்டு இசையுடன் பாடப்பட்டன என்பது தெரிகிறது.

ஒவ்வொரு செய்யுளின் அடியிலும் துறை, தூக்கு, வண்ணம் என்னும் தலைப்பில் இசைக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. துறை என்பதில் காட்சி, வாழ்த்து, செந்துறைப் பாடாண்பாட்டு, பரிசிற்றுறைப் பாடாண்பாட்டு, வஞ்சித் துறை பாடாண்பாட்டு முதலான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. தூக்கு என்பதில் செந்தூக்கு, செந்தூக்கும் வஞ்சித் தூக்கும் என்று தூக்கு (தூக்கு —தாளம்) குறிப்பிடப்பட்டுள்ளன. வண்ணம் என்பதில் ஒழுகு வண்ணம், சொற்சீர் வண்ணம் என்பவை குறிப்பிடப் பட்டுள்ளன. இவை இசைத்தமிழைப் பற்றிய குறிப்புகள்.

தகடூர் யாத்திரை

கொங்கு நாட்டில் தகடூரை அரசாண்டவர் அதிகமான் பரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் என்றும் அவர்கள் தகடூரைச் சூழ்ந்து கோட்டை மதிலைக் கட்டி அரண் அமைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் கொங்கு நாட்டின் தென் பகுதிகளை அரசாண்ட பெருஞ்சேரலிரும்பொறை, தன் காலத்திலிருந்த அதிகமான் நெடுமான் அஞ்சியின் மேல்

படையெடுத்துச் சென்று தகடூரை முற்றுகையிட்டுப் போர் செய்தான் என்றும் அந்தப் போர் பல காலம் நடந்து கடைசியில் பெருஞ்சேரலிரும்பொறை அதைக் கைப்பற்றினான் என்றும் கூறினோம். அந்தத் தகடூர்ப் போரைப் பற்றி ஒரு நூல் அக்காலத் திலேயே செய்யப்பட்டிருந்தது. அது சிலப்பதிகாரத்துக்கு முன்னரே இயற்றப்பட்ட நூல் என்பது ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. அதுதான் *தகடூர் யாத்திரை* என்னும் நூல்.

அக்காலத்தில் அரசர்கள் போர் செய்யும்போது புலவர்களும் போர்க்களத்துக்குச் சென்று எந்தெந்த வீரன் எந்தெந்த விதமாகப் போர் செய்கிறான் என்பதை நேரில் கண்டு அவர்களின் வீரத்தைப் புகழ்ந்து பாடுவது அக்காலத்து வழக்கமாக இருந்தது. தகடூர்ப் போரிலும் சில புலவர்கள் போர்க்களஞ் சென்று போர்ச் செயலைக் கண்டு பாடினார்கள். அவர்கள் பாடிய அந்தப் பாடல்களின் தொகுப்புதான் *தகடூர் யாத்திரை* என்னும் நூல். இப்போது நூல் முழுவதும் கிடைக்காதபடியால் அந்நூலில் எந்தெந்தப் புலவர்களின் செய்யுள்கள் இருந்தன என்பது இப்போது தெரியவில்லை. ஆனால், பொன்முடியார், அரிசில்கிழார் என்னும் புலவர்களின் செய்யுள்களும் அந்நூலில் இருந்தன என்பது திண்ணமாகத் தெரிகிறது.

சரித்திரச் செய்தியைக் கூறுகிற *தகடூர் யாத்திரை* இப்போது மறைந்துவிட்டது. அந்நூலின் சில செய்யுட்கள் மட்டுமே இப்போது கிடைத்துள்ளன. இந்நூல் சென்ற 19ஆம் நூற்றாண்டில், திருநெல்வேலி தெற்குப் புதுத்தெருவில் இருந்த கிருஷ்ண வாத்தியார் வீட்டில் இருந்தது. பிறகு, இந்தச் சுவடி மறைந்துபோயிற்று. இது பற்றி டாக்டர் உ.வே. சாமிநாதையர் *என் சரித்திரம்* என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்.

"அங்கே தொல்காப்பிய உரைச் சுவடி ஒன்றில், 'நாங்குனேரியிலிருக்கும் ஒருவருக்கு என்னிடமிருந்த தகடூர் யாத்திரைப் பிரதி ஒன்றைக் கொடுத்துவிட்டு, இப்பிரதியை இரவலாக வாங்கிக் கொண்டேன்' என்று எழுதியிருந்தது. யாரிடமிருந்து வாங்கியது என்று குறிப்பிடவில்லை...பிற் காலத்தில் நாங்குனேரியில் நான்கு முறை ஏடு தேடியபோது தகடூர் யாத்திரை கிடைக்கவே யில்லை. பழைய நூல்கள் பல இந்த உலகத்தைவிட்டு யாத்திரை செய்துவிட்டதைப் போல இந்த அருமையான நூலும் போய்விட்டதென்றுதான் நினைக்கிறேன்."

கொங்கு நாட்டு அரசர்கள் இருவர் நடத்திய போரைக் கூறுவது *தகடூர் யாத்திரை* என்னும் நூல். இதில் அக்காலத்திலிருந்த புலவர்கள் இந்தப் போரைப் பற்றிப் பாடிய செய்யுட்கள் தொகுக்கப்பட்டிருந்தன. எனவே, இந்த நூல் கொங்கு நாட்டில் உண்டான நூல்களில் ஒன்றாகும்.

இந்நூலைத் தொகுத்தவர் யார், தொகுப்பித்தவர் யார் என்பதும் தெரியவில்லை. நூலே மறைந்துவிட்டபோது இச்செய்திகளை எவ்வாறு அறியமுடியும்? *மறைந்துபோன தமிழ்நூல்கள்* என்னும் புத்தகத்தில், *தகடூர் யாத்திரை* என்னுந் தலைப்பில் இந்நூலைப் பற்றிய ஏனைய விஷயங்களை அறியலாம்.

ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு, எட்டுத்தொகை நூல்களில் மூன்றாவது தொகை நூல். அகவற் பாக்களினால் அமைந்த இந்நூல் மிகக் குறைந்த அடிகளைக் கொண்டது. மூன்று அடி சிற்றெல்லை யையும் ஆறடி பேரெல்லையையுங் கொண்டது. ஐந்து அகப் பொருள் துறைகளைப் பற்றிக் கூறுகிறது. இக்காரணங் களினாலே இந்நூல் *ஐங்குறுநூறு* என்று பெயர் பெற்றுள்ளது. ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதல் ஆந்தையார், பேயனார் என்னும் ஐந்து புலவர்கள் இந்நூற் செய்யுள்களைப் பாடியவர்கள்.

> மருதம் ஓரம்போகி, நெய்தல் அம்மூவன்,
> கருதுங் குறிஞ்சி கபிலன்—கருதிய
> பாலை ஓதலாந்தை, பனிமுல்லை பேயனே,
> நூலையோ தைங்குறு நூறு

என்னும் பழைய செய்யுளால் இதனையறியலாம்.

இந்த நூலைத் தொகுப்பித்தவர், கொங்கு நாட்டை யரசாண்ட யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. தொகுத்தவர், இவ்வரசனால் ஆதரிக்கப்பெற்றவராகிய புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். புலவர் கூடலூர்கிழார், இவ்வரசன் இறந்த பிறகும் வாழ்ந்திருந்தார். இவ்வரசன் இறந்தபோது இவன்மேல் கையறுநிலை பாடினார் (*புறம்* 229). அச்செய்யுளின் அடிக்குறிப்பு, "கோச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இன்ன நாளில் துஞ்சுமெ௭ன அஞ்சி, அவன் துஞ்சியவிடத்துப் பாடியது" என்று கூறுகிறது.

*ஐங்குறுநூறு*க்குப் பிற்காலத்திலே கடவுள் வாழ்த்துப் பாடியவர், பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்தப் பெருந்தேவனாரே ஏனைய தொகை நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடினார். *ஐந்குறுநூற்*றுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அந்த உரையாசிரியரின் பெயர் தெரியவில்லை.

இந்நூல் 1903ஆம் ஆண்டில் முதல்முதலாக அச்சுப் புத்தகமாக வெளி வந்தது. இதன் பதிப்பாசிரியர் உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் அவர்கள். திருவாவடுதுறை ஆதீனத்தாரும்

திருமயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளையவர்களும் ஜே.எம். வேலுப்பிள்ளையவர்களும் ஆழ்வார் திருநகரி தே. இலக்குமணக் கவிராயர் அவர்களும் தங்களுடைய கையெழுத்துப் பிரதிகளைக் கொடுத்து இந்நூலைப் பதிப்பிக்க உதவி செய்தனர்.

இந்நூல் மருதத்திணை, வேட்கைப் பத்து, வேழப் பத்து, கள்வன் பத்து, தோழிக்குரைத்த பத்து, புலவிப் பத்து தோழிகூற்றுப் பத்து, கிழத்தி கூற்றுப் பத்து, புனலாட்டுப் பத்து, புலவி விராய பத்து, எருமைப் பத்து என்னும் பத்துப் பகுதிகளையுடையது.

நெய்தல்திணை, தாய்க்குரைத்த பத்து, தோழிக்குரைத்த பத்து, கிழவற்குரைத்த பத்து, பாணற்குரைத்த பத்து, ஞாழற் பத்து, வெள்ளாங்குருகுப் பத்து, சிறுவெண் காக்கைப் பத்து, தொண்டிப் பத்து, நெய்தற் பத்து, வளைப் பத்து என்னும் பத்துப் பகுதிகளையுடையது.

குறிஞ்சித்திணை, அன்னாய் வாழிப் பத்து, அன்னாய்ப் பத்து, அம்மவாழிப் பத்து, தெய்யோப் பத்து, வெறிப் பத்து, குன்றக் குறவன் பத்து, கேழற் பத்து, குரக்குப் பத்து, கிள்ளைப் பத்து, மஞ்ஞைப் பத்து என்னும் பத்துப் பகுதிகளையுடையது.

பாலைத்திணை, செலவழுங்குவித்த பத்து, செலவுப் பத்து, இடைச்சுரப் பத்து, தலைவியிரங்கு பத்து, இளவேனிற்பத்து, வரவுரைத்த பத்து, முன்னிலைப் பத்து, மகட்போக்கியவழித் தாயிரங்கு பத்து, உடன் போக்கின்கண் இடைச்சுரத்துரைத்த பத்து, மறுதரவுப் பத்து என்னும் பத்துப் பிரிவுகளையுடையது.

முல்லைத்திணை, செவிலிகூற்றுப் பத்து, கிழவன் பருவம் பாராட்டுப் பத்து, விரவுப் பத்து, புறவு அணிப் பத்து, பாசறைப் பத்து, பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து, தோழி வற்புறுத்த பத்து, பாணன் பத்து, தேர்வியங்கொண்ட பத்து, வரவுச் சிறப்புரைத்த பத்து என்னும் பத்துத் துறைகளைக் கொண்டுள்ளது.

நெய்தற்றிணையில், கிழவற்குரைத்த பத்தில் 9ஆம் 10ஆம் செய்யுட்கள் மறைந்து போய்விட்டன. முல்லைத் திணையில் கிழவன் பருவம் பாராட்டுப் பத்தில் ஆறாம் செய்யுளின் இரண்டாம் அடியிலும் தேர்வியங்கொண்ட பத்தின் பத்தாம் செய்யுளின் இரண்டாம் அடியிலும் சில எழுத்துகள் மறைந்துள்ளன.

*ஐங்குறுநூற்*றைப் பாடிய புலவர் எல்லோரும் கொங்கு நாட்டவர் அல்லர். கபிலர் மட்டுங் கொங்கு நாட்டில் வாழ்ந்திருந்தவர். இந்நூலைத் தொகுத்த கூடலூர் கிழார், கொங்கு நாட்டுப் புலவர்.

சங்க காலத்துத் தமிழெழுத்து

கடைச்சங்க காலத்தில் வழங்கி வந்த தமிழ் எழுத்தின் வரிவடிவம் எது என்பது இக்காலத்தில் ஒரு கேள்வியாக இருக்கிறது.

தமிழகத்தில் பழங்காலத்தில் வழங்கி வந்தது வட்டெழுத்து தான் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு கருதி வந்தனர். அக்காலத்தில் பிராமி எழுத்து தமிழகத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை. பிறகு, பிராமி எழுத்துக்கள் தமிழ்நாட்டு மலைக் குகைகளில் எழுதப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டன. பாண்டி நாடு, புதுக்கோட்டை, தொண்டை நாடு, கொங்கு நாடு ஆகிய நாடுகளில் மலைக்குகைகளில் கற்பாறைகளிலே பொறிக்கப்பட்ட பிராமி எழுத்துக்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை யல்லாமல், அரிக்கமேடு, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், உறையூர் முதலிய இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தபோது அவ்விடங்களில் கிடைத்த மட்பாண்டங்களிலும் பிராமி எழுத்துக்கள் காணப்பட்டன. இவ்வெழுத்துகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. இந்தச் சான்றுகளைக் கொண்டு சிலர் சங்க காலத்தைக் கணக்கிடுகிறார்கள். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பாரத தேசத்தை யரசாண்ட அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் வட இந்தியாவிலிருந்து பிராமி எழுத்தைப் பௌத்தப் பிக்குகள் தமிழகத்தில் கொண்டு வந்தார்கள் என்றும் இந்தப் பிராமி எழுத்து வந்த பிறகு இதைத் தமிழர் நூல் எழுதப் பயன்படுத்திக்கொண்டனர் என்றும் அதற்கு முன்பு தமிழில் எழுத்து இல்லை என்றும் இப்போது ஒரு சிலர் கூறுகின்றனர். பிராமி எழுத்து தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்பு இங்கு எழுத்தே கிடையாது என்பது இவர்கள் கூற்று. இது தவறான கருத்து. பிராமி எழுத்து தமிழகத்துக்கு வருவதற்கு முன்பு ஏதோ ஒரு வகையான எழுத்து வழங்கி வந்தது. அந்த எழுத்தினால் சங்க நூல்கள் எழுதப்பட்டன.

பிராமி எழுத்தின் தோற்றத்தைப் பற்றி வெவ்வேறு அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன. அசோகச் சக்கரவர்த்தி காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பிராமி எழுத்து

இருந்து வந்தது. ஆகவே, அசோகர் காலத்துக்கு முன்னமே தமிழ்நாட்டில் பிராமி எழுத்து வழங்கி வந்தது என்பது ஒரு கருத்து. பிராமி எழுத்து தென் இந்தியாவில் தோன்றி வளர்ந்து பிறகு வட இந்தியாவுக்குச் சென்றது என்பது இன்னொரு கருத்து. தமிழ்நாட்டில் பிராமி எழுத்து வருவதற்கு முன்பு ஏதோ ஒரு வகையான எழுத்து இருந்து வந்தது. பிராமி எழுத்து தமிழ்நாட்டுக்கு வந்து வேரூன்றிய பிறகு பழைய தமிழ் எழுத்து பையப்பைய மறைந்துவிட்டது என்பது வேறொரு கருத்து.

பிராமி எழுத்துக்கு முன்பு தமிழில் வேறு எழுத்து இல்லை என்பதற்குச் சான்று இல்லை. பிராமி எழுத்துக்கு முன்பு ஏதோ ஒரு வகையான தமிழ் எழுத்து வழங்கியிருக்க வேண்டும். வேறு வகையான எழுத்து இருந்ததா இல்லையா என்பதற்குச் சான்று வேண்டுமானால், சங்க காலத்திலே நடப்பட்ட நடுகற்களைக் (வீரகற்களைக்) கண்டுபிடிக்க வேண்டும். சங்க காலத்து நடுகற்கள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. சங்க காலத்து நடுகற்கள் போரில் இறந்துபோன வீரர்களின் நினைவுக் குறியாக நடப்பட்டவை. அந்த நடுகற்களில் இறந்த வீரனுடைய பெயரையும் சிறப்பையும் எழுதியிருந்தபடியால், அந்த நடுகற்களைக் கண்டுபிடித்தால், அவற்றில் எழுதப்பட்ட எழுத்து பிராமி எழுத்தா அல்லது வேறு வகையான எழுத்தா என்பது விளங்கிவிடும். ஆனால், அந்தக் காலத்து வீர கற்கள் இதுவரையில் ஒன்றேனும் கண்டுபிடிக்கப்படவில்லை.

கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக்கள் தமிழ்நாட்டு மலைக் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற படியால், அக்காலத்து நடுகற்களிலும் பிராமி எழுத்துதானே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று சிலர் கருதக்கூடும். இப்போது தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய பிராமி எழுத்துக்கள், பௌத்த, சமண முனிவர்கள் தங்கித் தவஞ் செய்வதற்காக அமைக்கப்பட்ட மலைக் குகைகளிலே எழுதப்பட்டவை. ஆனால், பௌத்த, சமணர் அல்லாத துறவிகள் மலைக் குகைகளில் தங்கித் தவஞ் செய்யவில்லை. பௌத்த, சமணங்களுக்காக அமைக்கப்பட்ட மலைக் குகைகளிலே பிராமி எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கிறபடியால் இவ்வெழுத்துக் களைப் பௌத்த மதத்தாரும் சமண மதத்தாரும் மட்டும் உபயோகித்திருக்க வேண்டும். பௌத்த, சமண மதத்தாரல்லாத அரசர் முதலியோர் அக்குகைகளைத் தானஞ் செய்திருந்தாலும், அவை வடநாட்டு மதங்களைச் சார்ந்த பௌத்த, சமணருக்காக அமைக்கப்பட்டபடியால் அவற்றில் பிராமி எழுத்தை எழுதியிருக்க வேண்டும். பௌத்த, சமணரல்லாத ஏனைய மதத்தாரும் நாட்டு மக்களும் அக்காலத்தில் பிராமியல்லாத

ஏதோ ஒரு பழைய தமிழ் எழுத்தை வழங்கி இருக்கக்கூடும். இதன் உண்மையை யறிவதற்குத்தான் பழைய காலத்து நடுகற்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

கடைச்சங்க காலத்துக்கு முன்னே, பிராமி எழுத்து வருவதற்கு முன்பு, ஏதோ ஒரு வகையான எழுத்து தமிழ்நாட்டில் வழங்கியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பிராமி எழுத்து வந்த பிறகு தமிழர் புதிய பிராமி எழுத்தை ஏற்றுக்கொள்ளாமல் பழைய எழுத்தையே வழங்கியிருக்க வேண்டும். அப்போது பௌத்த, சமணர் பிராமியையும், மற்றத் தமிழர் பழைய தமிழ் எழுத்தையும் ஆக இரண்டெழுத்துக்களும் சில காலம் வழங்கியிருக்க வேண்டும். மிகப் பழைய காலத்தில் கால்டியா போன்ற தேசங்களில் சமய குருமார் எழுதிவந்த எழுத்து வேறாகவும் அதே சமயத்தில் பாமர மக்கள் எழுதிவந்த எழுத்து வேறாகவும் இருந்ததுபோல, கடைச்சங்க காலத் தமிழகத்திலும் (தொடக்கக் காலத்தில்) ஜைன, பௌத்த மதத்தவர் வழங்கின பிராமி எழுத்து வேறாகவும் மற்றவர் வழங்கின பழைய எழுத்து வேறாகவும் இருந்தன என்று தோன்றுகிறது. பௌத்த, சமண மதங்கள் தமிழகத்தில் வேரூன்றிய பிறகு அவர்கள் பள்ளிக் கூடங்களைத் தங்கள் பள்ளிகளில் அமைத்துப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தபோது பிராமி எழுத்தைப் பிரசாரஞ் செய்தனர். பிராமி எழுத்து பிரசாரஞ் செய்யப்பட்ட பிறகு, பழைய தமிழ் எழுத்து பையப்பைய மறைந்து போயிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. எந்தக் கருத்தானாலும் உண்மை தெரியவேண்டுமானால், முன்பு கூறியதுபோல, பழைய நடுகற்களைக் கண்டுபிடிக்க வேண்டும். நூற்றுக் கணக்காக நடப்பட்ட சங்க காலத்து நடுகற்கள் பூமியில் புதைந்து கிடக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்தால் அவற்றில் எழுதப்பட்டுள்ள அக்காலத்து எழுத்தின் வரிவடிவம் நன்கு விளங்கும்.

இப்போது நமக்குத் தெரிந்திருக்கிற வரையில் பிராமி எழுத்தே தமிழகத்தில் வழங்கிவந்த பழைய எழுத்து என்பதில் ஐயமில்லை. பிராமி எழுத்தில் எழுதப்பட்ட கல்வெட்டெழுத்துகள் கொங்கு நாட்டிலுங் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை இங்கு ஆராய்வோம்.

கொங்கு நாட்டுப் பிராமி எழுத்துச் சாசனங்கள்

அரசலூர்

கோயம்புத்தூர் மாவட்டத்து ஈரோடு தாலுகாவில் உள்ளது அரசலூர். இது ஈரோடு நகரத்திலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இங்குள்ள மலைக்கு நாகமலை என்றும் அரசலூர் மலையென்றும் பெயர் உண்டு. இந்த மலையில் தரை மட்டத்திலிருந்து அறுபதடி உயரத்தில் ஆண்டிப்பாறை என்னுங் குகையும் அக்குகையில் கற்படுக்கைகளும் கல்வெட்டு எழுத்துகளும் உள்ளன. கல்வெட்டெழுத்துக்களில் ஒன்று பிராமி எழுத்து. மற்ற இரண்டு வட்டெழுத்து. இங்கு நம்முடைய ஆய்வுக்குரியது பிராமி எழுத்து மட்டுமே.

இங்குக் கல்வெட்டெழுத்துக்கள் இருப்பதை 1961 ஆண்டின் தொடக்கத்தில் இந்நூலாசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி, ஈரோடு புலவர் செ. இராசு மற்றுஞ் சில நண்பர்கள் சென்று கண்டு, இவ்வெழுத்துக்களைக் காகிதத்தில் மைப்படி எடுத்துச் *சுதேசமித்திரன்*,[1] *செந்தமிழ்ச் செல்வி* பத்திரிக்கைகளில் வெளி யிட்டு உலகத்துக்கு அறிமுகப்படுத்தினார்கள். இந்த விவரம் தெரிந்த பிறகு அரசாங்கத்து எபிகிராபி இலாகா இம்மலைக்குச் சென்று இந்தச் சாசனங்களைக் கண்டு 1961-62 *ஆண்டு அறிக்கை* யில் வெளியிட்டது.[2] இந்த இலாகாவின் 1961-62ஆம் ஆண்டின் 280-282 எண்களுள்ள சாசன எழுத்துகளாக இந்த கல்வெட் டெழுத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எபிகிராபி இலாகாவின் 1963-64ஆம் ஆண்டின் 4362-4364ஆம் எண்ணுள்ள *போட்டோ* (நிழற்பட) *நெகிடிவாகவும்* பதிவு செய்யப் பட்டிருக்கிறது.

இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்தை (280 of 1961-62) ஆராய்வோம். இந்தப் பிராமி எழுத்துக்கள் இரண்டு வரிகளாக எழுதப்பட்டுள்ளன. முதல் வரியில் பதினான்கு எழுத்துகளும் இரண்டாவது வரியில் பதிமூன்று எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த எழுத்துக்களை எபிகிராபி இலாகா இவ்வாறு படித்திருக்கிறது :



அரசலூர் பிராமி எழுத்து

எழுத்துப் புணர்(ரு)த்தான் மா(லை)ய்
வண்ணக்கன் (தேவ)ன் (சாத்த)ன்

ஐராவதம் மகாதேவன் அவர்கள் இவ்வெழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்.[3]

ஏழு தானம் பண்வ (வி)த்தான் மணிய்
வண்ணக்கன் (தே(வ)ன் சா(த்த)ன்

மணிக்கல் வாணிகனாகிய தேவன் சாத்தன் இந்த ஏழு படுக்கைகளைச் (ஆசனங்களை) செய்வித்தான் என்று இதற்கு இவர் விளக்கங் கூறுகிறார். இவர் 'ஏழு படுக்கைகள்' என்று கூறுவது தவறு. இக்குகையில் மூன்று படுக்கைகள் மட்டும் இருக்கின்றன. ஆகவே, இவர் ஏழு படுக்கைகள் என்று கூறுவது பிழைபடுகிறது. கல்வெட்டில் 'எழுத்தும்' என்னும் வாசகம் தெளிவாகத் தெரிகிறது.

டி.வி. மகாலிங்கம் அவர்கள் இவ்வெழுத்துக்களை வேறு விதமாக வாசித்துள்ளார்.[4]

சித்தம், தீர்த்தம் பூண தத்தான் மாளாய
வண்ணக்கன் தேவன் சாத்தன்

என்று இவர் படிக்கிறார்.

இந்தச் சாசன எழுத்துகளில் இரண்டாவது வரியின் வாசகம் வண்ணக்கன் தேவன் சாத்தன் என்பதில் யாருக்கும் யாதொரு ஐயமும் இல்லை. இதை எல்லோரும் கருத்து மாறுபாடு இல்லாமல் சரியாகவே வாசித்திருக்கிறார்கள். முதல் வரி எழுத்துக்களை வாசிப்பதில் மட்டும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வாசித்துள்ளனர். இதுபற்றி ஆய்ந்து பார்த்து இதன் சரியான வாசகம் இன்னதென்பதை நாம் காண்போம்.

முதல் வரியின் முதல் எழுத்து வட்டமாகவும் நடுவில் புள்ளியுடனும் காணப்படுகிறது. இது 'சித்தம்' என்னும் மங்கலச் சொல்லின் குறியீடு என்று டி.வி. மகாலிங்கம் கருதுகிறார். சாசன எழுத்து இலாகா இதை எ என்று வாசித்திருக்கிறது. ஐ. மகாதேவன் அவர்கள் ஏ என்று வாசித்துள்ளார். மகாலிங்கம் கூறுவதுபோல இது 'சித்தம்' என்பதன் குறியீடு அன்று. பிராமி

எழுத்தில் எ என்பதாகும். முக்கோண வடிவமாகவுள்ளது பிராமி எ என்னும் எழுத்து. அது கல்வெட்டில் வட்டமாகவும் சில சமயங்களில் எழுதப்படுகிறது. உதாரணமாக, மதுரைக்கு அடுத்துள்ள யானைமலைப் பிராமி எழுத்தில் எகர எழுத்து ஏறக்குறைய வட்டமாக எழுதப்பட்டிருப்பது காண்க. இந்த எழுத்து எகரம் என்பதில் ஐயமேயில்லை. ஐ. மகாதேவன் அவர்கள் இதை ஏ என்று வாசிப்பது சரியன்று. ஏனென்றால், இந்த எழுத்தின் உள்ளே ஒரு புள்ளி தெளிவாகக் காணப்படுகிறது. புள்ளியிருப்பதனாலே ஏகாரமன்று, எகரமே என்பது தெளிவாகத் தெரிகிறது. மெய்யெழுத்துகளும் எகர ஒகரக் குற்றெழுத்துகளும் புள்ளி பெறும் என்று இலக்கணம் கூறுகிறது. ஆகவே, அந்த இலக்கணப்படி இது ஏகாரம் அன்று, எகரமே என்பது திட்டமாகத் தெரிகின்றது. (புள்ளி பெற வேண்டிய எழுத்துக்களுக்குப் பெரும்பாலும் புள்ளியிடாமலே ஏட்டுச்சுவடியிலும் செப்பேட்டிலும் கல்லிலும் எழுதுவது வழக்கம். அபூர்வமாகத்தான் புள்ளியிட்டெழுதப்படுகின்றன. இந்த எகர எழுத்துக்குப் புள்ளியிட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.)

அடுத்த இரண்டாவது எழுத்தைப் பார்ப்போம். இதை டி.வி. மகாலிங்கம் அவர்கள் தி என்று வாசிக்கிறார். இது ழு என்பது தெளிவு. சாசன எழுத்து இலாகாவும் ஐ. மகாதேவனும் இதை ழு என்றே சரியாக வாசித்திருக்கிறார்கள். முதல் இரண்டு எழுத்தும் சேர்ந்து எழு என்றாகிறது.

இனி அடுத்த 3ஆவது 4ஆவது எழுத்துகளைப் பார்ப்போம். இவை த்து என்பவை. சாசன எழுத்து இலாகா த்து என்றே வாசித்திருக்கிறது. மகாலிங்கம் த்த என்று வாசிக்கிறார். ஐ. மகாதேவன் தாந என்று வாசிக்கிறார். இப்படி வாசிப்பதற்கு யாதொரு காரணமும் இல்லை. இவ்வெழுத்துக்கள் த்து என்பதே.

ஐந்தாவது எழுத்து ம அல்லது ம் என்பது. புள்ளியில்லை யானாலும் ம் என்றே வாசிக்கலாம். ஐ. மகாதேவனும் டி.வி. மகாலிங்கமும் ம் என்றே சரியாக வாசித்துள்ளனர். சாசன எழுத்து இலாகா இந்த எழுத்தை ப் என்று படித்திருக்கிறது. இவ்வெழுத்து ம் என்பதில் ஐயமில்லை. முதல் ஐந்து எழுத்துக்களையும் சேர்த்துப் படித்தால் எழுத்தும் என்றாகிறது.

இனி அடுத்த ஆறு எழுத்துக்களைப் (6 முதல் 11 வரை) பார்ப்போம். 6ஆவது எழுத்து பு என்பது. 7ஆவது எழுத்து ண என்பது. 8ஆவது எழுத்து ரு என்பது. சாசன இலாகா இதை ர என்றும் ர் என்றும் வாசிக்கிறது. டி.வி. மகாலிங்கம் த என்றும், ஐ. மகாதேவன் வ(வி) என்றும் வாசிக்கிறார்கள். இது பிராமி ரு என்பதில் ஐயமில்லை. ர் என்று இருக்கவேண்டிய இது ரு என்று

எழுதப்பட்டிருக்கிறது. 9ஆம் பத்தாம் எழுத்துக்கள் த்தா என்பன. 11ஆவது எழுத்து ன் என்பது. இந்த எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்தால் புணருத்தான் என்றாகிறது. ஐ. மகாதேவன் இவற்றைப் பண்வித்தான் என்றும் டி.வி. மகாலிங்கம் பூணதத்தான் என்றும் வாசிப்பது சரியாகத் தோன்றவில்லை. சாசன இலாகா படித்துள்ள புணர்த்தான் அல்லது புணருத்தான் என்பதே சரியென்று தெரிகிறது. ஆகவே, முதல் பதினொரு எழுத்துக்களைச் சேர்த்து வாசித்தால் எழுத்தும் புணர்த்தான் என்றாகிறது.

இனி முதல் வரியில் உள்ள கடைசி மூன்று எழுத்துக்களைப் பார்ப்போம். பன்னிரண்டாவது எழுத்து ம என்பது.

இதற்கு அடுத்த (13ஆவது) எழுத்து சரியாக எழுதப்படாததால் பலவித ஊகங்களுக்கு இடமளிக்கிறது. எழுத்தைப் பொறித்த கற்றச்சனுடைய கவனக் குறைவினால் ஏற்பட்ட தவறு இது. இதை ணி என்று கொள்வதே பல விதத்திலும் பொருத்தமாகத் தோன்றுகிறது. இந்தச் சாசனத்தில் வேறு மூன்று ணகர எழுத்துக்கள் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த ணி எழுத்தைக் கற்றச்சன் செம்மையாகப் பொறிக்காமல் விட்டுவிட்டான்.

கடைசி (14ஆவது) எழுத்து ய அல்லது ய் என்பது. இதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை. இந்த மூன்று எழுத்துக்களையும் சேர்த்து மணிய் என்று வாசிக்கலாம்.

இந்தப் பிராமி எழுத்தின் முழு வாசகமும் இவ்வாறு அமைகிறது :

எழுத்தும் புணரு(ர்)த்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன் (முனிவருக்கு இக்குகையைத் தானஞ் செய்தது மட்டும் அல்லாமல், இந்த எழுத்துக்களையும்) புணர்த்தினான் (எழுதினான், பொறித்தான்) என்பது இதன் கருத்து.

விளக்கம்: மணிய் வண்ணக்கன் என்பது மணிக்கல் வண்ணக்கன் என்று பொருளுள்ளது. இகர ஈற்றுச் சொல்லுடன் யகரமெய் சேர்த்து மணிய் என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்படி எழுதுவது அக்காலத்து வழக்கம். கொங்கு நாட்டில் விலையுயர்ந்த மணிக்கற்கள் அக்காலத்தில் அதிகமாகக் கிடைத்தன.

வண்ணக்கன் என்பது பொன், வெள்ளி நாணயங்களின் பரிசோதனை என்னும் பொருள் உள்ள சொல். சங்க இலக்கியங்களில் சில வண்ணக்கர்கள் கூறப்படுகின்றனர்.

புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழான் என்னும் புலவர் *நற்றிணை* 294ஆம் செய்யுளைப் பாடியவர். வடம வண்ணக்கன் தாமோதரனார் *குறுந்தொகை* 85ஆம் செய்யுளைப் பாடியவர். வண்ணக்கன் சோருமருங்குமரனார் என்பவர் *நற்றிணை* 257ஆம் செய்யுளைப் பாடியுள்ளார். அரசலூர் மலைக் குகையில் தவஞ் செய்த முனிவருக்குக் கற்படுக்கையைத் தானஞ் செய்த தேவன் சாத்தன் மணிக்கல் வண்ணக்கன்.

மணிக்கல் வண்ணக்கனான தேவன் சாத்தன் இம்மலைக் குகையில் முனிவருக்கு இடங்களைத் தானஞ் செய்ததோடு இந்தச் சாசன எழுத்துக்களையும் பொறித்தான் என்பது இதன் கருத்தாகும். எழுத்தும் புணர்த்தான் என்பதிலுள்ள உம் என்னும் இடைச்சொல், இவனே சாசன எழுத்தையும் பொறித்தான் (எழுதினான்) என்பதைக் குறிக்கிறது.

புகழியூர் (புகளூர்)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் தாலுகாவில் புகளூர் இருக்கிறது. இந்த ஊர், திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப் பாதையில் ஒரு நிலையமாக இருக்கிறது. புகளூருக்கு இரண்டு கல் தொலைவில் வேலாயுதம்பாளையம் என்னும் கிராமத்துக்கு அருகில் ஆறுநாட்டார் மலை என்னும் பெயருள்ள தாழ்வான குன்றுகளில், இயற்கையாக அமைந்துள்ள குகைகள் இருக்கின்றன. இக்குகைகளின் பாறையில் கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் காணப்படுகின்றன. பிராமி எழுத்துக்கள் கி.பி. 300க்கு முற்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கி வந்தபடியால் இவை கடைச்சங்க காலத்திலே எழுப்பப் பட்டவை என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த இடங்கள் கடைச்சங்க காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதிகளாக இருந்தவை.

பௌத்த மத, ஜைன மதத் துறவிகள் ஊருக்கு அப்பால் மலைக்குகைகளில் இருந்து தவம் செய்வது அக்காலத்து வழக்கம். அவர்கள் படுப்பதற்காகக் கல்லிலேயே பாய் தலையணை போல அமைத்துக் கொடுப்பது ஊரார் கடமையாக இருந்தது. அந்த முறையில் இந்தக் குகைகளிலே, கற்படுக்கைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இங்குள்ள பிராமி எழுத்துகள் இந்தப் படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவர்களின் பெயரைக் கூறுகின்றன..

ஆறு நாட்டார் மலையில் உள்ள பிராமி எழுத்துகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். சாசன எழுத்து (எபிகிராபி) இலாகாவின் 1927-28ஆம் ஆண்டின் 343ஆம் பதிவு எண்ணுள்ள எழுத்துக்கள் இவை (343 of 1927-28). இந்த எழுத்துக்கள் இரண்டு

வரியாக எழுதப்பட்டுள்ளன. முதல் வரியில் பத்து எழுத்துகளும், இரண்டாம் வரியில் ஒன்பது எழுத்துகளும் இருக்கின்றன. இந்தக் கல்லில் புள்ளிகளும் புரைசல்களும் இருப்பதனால் சில எழுத்துகள் செம்மையாகத் தெரியவில்லை. ஆனாலும், கூர்ந்து பார்த்து அவற்றைப் படிக்க இயலும் (படம் காண்க).



திரு டி.வி. மகாலிங்கம் இவ்வெழுத்துக்களை இவ்வாறு படிக்கிறார்:[5] 'கருவூர் பொன் வாணிகள், நேர்த்தி அதிட்டானம்.' இவ்வாறு படித்து, நேர்த்தி என்றால் நேர்ந்து கொள்ளுதல் (பிரார்த்தனை செய்துகொள்ளுதல்) என்று விளக்கங் கூறுகிறார். கருவூர் பொன் வாணிகள் நேர்ந்துகொண்டு அமைக்கப்பட்ட அதிஷ்டானம் என்று கருத்துத் தெரிவிக்கிறார்.

திரு. ஐராவதம் மகாதேவன் இதைக் கீழ்க்கண்டவாறு படிக்கிறார்:[6]

கருவூர் பொன் வாணிகன், நத்தி அதிட்டானம்

வாணிகன் நத்தி என்பதை வாணிகன் +அத்தி என்று பிரித்து, 'கருவூர் பொன் வாணிகன் அத்தியினுடைய அதிட்டானம் (இடம்)' என்று பொருள் கூறுகிறார்.

இவர்கள் 'கருவூர் பொன் வாணிகன்...அதிட்டானம்' என்று வாசித்தது முழுவதும் சரியே. தவறு இல்லை. ஆனால், இரண்டாவது வரியின் முதல் மூன்று எழுத்துகளை வாசித்ததில் தவறு காணப்படுகிறது. இந்த எழுத்துகளில் கல் பொளிந்து எழுத்துகளின் சரியான உருவம் தெரியவில்லை. இக்காரணத்தினால் மகாலிங்கம் அவர்கள் இவ்வெழுத்துகளை நேர்த்தி என்று வாசிக்கிறார். மகாதேவன் அவர்கள் நத்தி என்று வாசிக்கிறார். இப்படிப் படிப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. இரண்டாவது வரியின் முதலெழுத்தை உற்றுநோக்கினால் அது பொ என்று தோன்றுகிறது. அடுத்துள்ள இரண்டு எழுத்துகளையும் சேர்த்து வாசித்தால் பொத்தி என்று படிக்கலாம். அதாவது கருவூர் பொன் வாணிகனுடைய பெயர் 'பொத்தி' என்பது. ஆகவே, இந்த எழுத்துகளின் முழு வாசகம் இது:

கருவூர் பொன் வாணிகன்
பொத்தி அதிட்டானம்

கருவூரில் பொன் வாணிகம் செய்த பொத்தி என்பவர் இந்த அதிட்டானத்தை (முனிவர் இருக்கையை) அமைத்தார் என்பது இதன் கருத்து. இருக்கையை யமைத்தார் என்றால், குகையிலுள்ள பாறைகளைச் செப்பஞ் செய்து கற்படுக்கைகளை அமைத்தார் என்பது பொருள்.

விளக்கம்: கருவூர், கொங்கு நாட்டை யரசாண்ட சேர அரசர்களுக்குச் சங்க காலத்தில் தலைநகரமாக இருந்தது என்பதை அறிவோம். அவ்வூர் அக்காலத்தில் பேர்போன வாணிகப் பட்டணமாக இருந்தது. இங்கு, கிரேக்க ரோமர்கள் (யவனர்கள்) வந்து வாணிகஞ் செய்தார்கள். இவ்வூரில் பொன் வாணிகஞ் செய்தவர்களில் ஒருவர் பெயர் பொத்தி என்பது. பொத்தன், பொத்தி என்னும் பெயர் சங்க காலத்தில் வழங்கி வந்தது. பொத்த குட்டன் என்னுந் தமிழன் ஒருவன் இலங்கை அநுராதபுரத்திலே செல்வாக்குள்ளவனாக இருந்தான். அவன், தான் விரும்பியபடியெல்லாம் இலங்கை மன்னர்களைச் சிம்மாசனம் ஏற்றினான் என்று *மகாவம்சத்தின்* பிற்பகுதியான *சூலவம்சம்* என்னும் நூல் கூறுகிறது. பொத்தி என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் பொத்தியார் என்று கூறப்படுகிறார். அவர் இயற்றிய செய்யுட்கள் *புறநானூற்றில்* (*புறம்* 217, 220, 221, 222, 223) உள்ளன.

எனவே, இந்த எழுத்துகளில் காணப்படுகிற பொன் வாணிகனுடைய பெயர் பொத்தி என்பதில் ஐயமில்லை. மகாதேவன் நெத்தி என்று படிப்பது தவறு. நெத்தி என்னும் பெயர் இருந்ததாகச் சான்று இல்லை. டி.வி. மகாலிங்கம் நேர்த்தி என்று படிப்பதும் பொருத்தமாக இல்லை.

அதிட்டானம் என்பது அதிஷ்டானம் என்னும் சொல்லின் தமிழாக்கம். இங்கு இது இந்தக் குகையைக் குறிக்கின்றது.

* * *

புகழூர்ச் சாசனம் இன்னொன்றைப் பார்ப்போம். இது சாசன எழுத்து இலாகாவில் 1927-28ஆம் ஆண்டு தொகுப்பில் 346ஆம் எண்ணாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஒரே வரியில் இருபத்தொரு பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. பாறைக் கல்லில் புரைசல்களும் புள்ளிகளும் கலந்திருப்பதால் சில எழுத்துக்களின் சரியான வடிவம் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது. ஆனாலும் வாசிக்கக் கூடியதாக இருக்கிறது. இதில் காணப்படுகிற பிராமி எழுத்துகளின் வரிவடிவம் இது. புள்ளியிட்டுக் காட்டப்பட்டிருப்பவை பாறையில் உள்ள புரைசல்கள்.



இதன் இப்போதைய எழுத்து வடிவம் இது:

ந ள ளி வ ஊ ர ப பி ட ந தை ம க ன கீ ர ன
கொ ற ற ன

இவ்வெழுத்துக்களுக்குப் புள்ளியிட்டுப் படித்தால் இவ்வாறாகிறது.

நள்ளிவ் ஊர்ப் பிடந்தைமகன் கீரன் கொற்றன்

திரு . டி.வி. மகாலிங்கம் அவர்கள் இதை இவ்வாறு படிக்கிறார்:

நாளாளபஊர் பிடந்தை மகன் கீரன்கொற்றன்

இவ்வாறு படித்துப் பின்னர்க் கீழ்க்கண்டவாறு விளக்கங் கூறுகிறார். ஆதன் + தந்தை =ஆந்தை என்பது போல, பிடன் + தந்தை = பிடந்தை என்றாயிற்று. பிடன் = படாரன், பட்டரான். தந்தை = பெரியவன், மேலானவன், உயர்ந்தவன், புனிதமானவன்.[7] 'பிடன் தந்தை மகன் கீரன் கொற்றன்' என்றும், 'நாளாளப ஊர்' என்றும் இவர் கூறுவது சரியெனத் தோன்றவில்லை.

திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இந்த எழுத்துக்களைக் கீழ்வருமாறு வாசிக்கிறார்:

நல்லிய் ஊர்ஆ பிடந்தை மகள் கீரன்கொற்ற...

இவ்வாறு வாசித்த இவர் 'நல்லியூர் பிடந்தையின் மக்களான கீரன், கொற்ற(ன்)' என்று விளக்கங் கூறுகிறார். மகள் என்பதை மக்கள் என்று கூறுகிறார்.[8]

திரு. மகாலிங்கம் நாளாளப ஊர் என்று படிப்பது தவறு. திரு. மகாதேவன் நல்லி ஊர் என்று படிப்பது ஓரளவு சரி. 7ஆவது எழுத்தை மகாலிங்கம் அடியோடு விட்டுவிட்டார். மகாதேவன் அவர்கள் அதைப் பிராமி அ என்று வாசித்துள்ளார். அது பிராமி ப் என்னும் எழுத்தாகும். மகாலிங்கம் 'மகன்' என்று படிப்பது சரி. மகாதேவன் 'மகள்' என்று வாசித்து 'மக்கள்' என்று பொருள் கூறுவது சரியெனத் தோன்றவில்லை. மகன் என்பதே சரியானது. கீரன் கொற்றன் என்பது ஒரே ஆளின் பெயர் என்று மகாலிங்கம் கூறுவது சரி. கீரன், கொற்றன் என்று இரண்டு ஆட்கள் என்று மகாதேவன் கூறுவது சரியெனத் தோன்றவில்லை.

இந்த எழுத்துக்களை நாம் படித்துப் பொருள் காண்போம்.

நள்ளிவ்ஊர்ப் பிடந்தை மகன் கீரன் கொற்ற(ன்)

என்பது இதன் வாசகம். கொற்றன் என்பதில் கடைசி எழுத்தாகிய ன் சாசனத்தில் இல்லை.

இதை விளக்கிக் கூறுவோம்.

முதல் மூன்று எழுத்துகளை நள்ளி என்று படிப்பதே சரியாகும். பிராமி எழுத்துகளில் ல, ள எழுத்துகளுக்கு மிகச் சிறு வேற்றுமைதான் உண்டு. லகரத்தின் வலது பக்கத்தின் கீழே, கீழாக வளைந்த கோடு இட்டால் ளகரமாகிறது. இந்தச் சாசன எழுத்தின் நிழற்படத்தை உற்று நோக்கினால் ளகரமாகத் தோன்றுவதைக் காணலாம். ஆகையால், நள்ளி என்று வாசிப்பதுதான் சரி என்று தெரிகிறது. மேலும், நல்லி என்ற பெயர் சங்க காலத்தில் காணப்படவில்லை. நள்ளி என்ற பெயர் காணப்படுகிறது. கடையெழு வள்ளல்களில் நள்ளி என்னும் ஒரு அரசன் கூறப்படுகிறான்.

"நளிமலை நாடன் நள்ளி" (*சிறுபாண்.* 107), "கழல் தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி" (*அகம்* 238:14), "திண்தேர் நள்ளி கானம்" (*குறுந்.* 210:1), "வல்வில் இளையர் பெருமகன் நள்ளி" (*அகம்* 152:15), "கொள்ளார் ஓட்டிய நள்ளி" (புறம் 158 : 28) என்பன காண்க. கண்டீரக்கோப் பெருநள்ளி சங்கச் செய்யுட்களில் கூறப்படுகிறான். இவன் கொங்கு நாட்டில் கண்டீரம் என்னும் ஊரின் அரசன். இவன் பெயரால் அக்காலத்தில் நள்ளி ஊர் என்னும் ஊர் இருந்திருக்க வேண்டும் என்பது இந்தக் கல்வெட்டெழுத்தினால் தெரிகிறது.

இனி, இதற்கு அடுத்தபடியாக உள்ள நான்கு எழுத்துக்களைப் பார்ப்போம். கல்வெட்டில் இவ்வெழுத்துகள் வ்ஊர்ப் என்று காணப்படுகிறது. இதில் முதல் எழுத்தை மகாலிங்கம் அவர்கள் ப என்று படித்து முதல் மூன்று எழுத்துகளுடன் சேர்த்து 'நாளாளப' என்று படித்துள்ளார். மகாதேவன் அவர்கள் ய் என்று படித்து முதல் மூன்று எழுத்துக்களுடன் சேர்த்து 'நல்லிய்' என்று படித்துள்ளார். இந்த எழுத்தை உற்று நோக்கினால் வ் என்று தோன்றுகிறது. இதனுடன் அடுத்துள்ள ஊகார எழுத்தைச் சேர்த்தால் வ்ஊ என்றாகும். வூ என்னும் எழுத்துதான் இவ்வாறு வ்ஊ என்று எழுதப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் எழுத்துகள் சாசனங் களில் இவ்வாறு எழுதப்பட்டிருப்பதைக் கல்வெட்டெழுத்து களிலும் செப்பேடுகளிலும் காணலாம். இந்த நான்கு எழுத்துகளை (வ்ஊர்ப்) முன் மூன்று எழுத்துகளுடன் கூட்டினால் நள்ளிவ்வூர்ப் என்றாகிறது.

பிறகு, இதற்கு அடுத்த நான்கு எழுத்துகளைப் பார்ப்போம் (8 முதல் 11 எழுத்துகள்). அது பிடந்தை என்றிருக்கிறது. இதை மகாலிங்கமும் மகாதேவனும் பிடந்தை என்று சரியாகவே

வாசித்திருக்கிறார்கள். ஆனால், பிடந்தை என்பதை பிட்டன் + தந்தை என்று பிரித்து, பிட்டனுடைய தந்தை என்றும் பிடன் என்பதற்குப் படாரன், பட்டாரன் என்றும் மகாலிங்கம் அவர்கள் விளக்கங் கூறுவது சரியாகவும் இல்லை, பொருத்த மாகவும் இல்லை.

பிட்டன் என்னும் பெயருள்ள சேனைத் தலைவன் ஒருவன் சங்க இலக்கியங்களில் கூறப்படுகிறான் (*அகம்* 77, 143; *புறம்* 172, 186; *புறம்* 169, 171 செய்யுள்களின் அடிக்குறிப்பு). அவன் பிட்டங்கொற்றன் என்றுங் கூறப்படுகிறான். காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் *புறம்* 171ஆம் செய்யுளில் பிட்டங்கொற்றனைக் கூறுகிறார். அச்செய்யுளில் அவர் பிட்டங்கொற்றனை எந்தை என்று கூறுகிறார் (*புறம்* 171 : 12). புலவர் ஒரு அரசனை எந்தை என்று கூறவேண்டியதில்லை. அப்படிக் கூறிய மரபும் இல்லை. பிட்டனுக்குப் பிட்டெந்தை என்னும் பெயர் இருந்திருக்க வேண்டுமென்று இதனால் தெரிகிறது. பிட்டெந்தை என்னும் பெயரே இந்தச் சாசன எழுத்தில் பிடந்தை என்று எழுதப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

இதற்கு அடுத்துள்ள மூன்று எழுத்துக்கள் மகன் என்பது. இதை மகாதேவன் ‘மகள்’ என்று படித்து அது ‘மக்கள்’ என்னும் பொருளுடைய சொல். என்று கருதுகிறார். மகன் என்பதே சரியான வாசகம்.

கடைசியாக உள்ள ஏழு எழுத்துக்கள் ‘கீரன் கொற்றன்’ என்று முடிகின்றன. இவற்றை மகாலிங்கமும் மகாதேவனும் சரியாகவே வாசித்திருக்கிறார்கள். ஆனால் மகாதேவன், கீரன், கொற்றன் என்று இரண்டு பெயரைக் குறிக்கின்றன இவை என்று கருதுகிறார். இது தவறு என்று தெரிகிறது. பிட்டந்தையாகிய பிட்டனுக்குக் கொற்றன் என்றும் பெயர் உண்டு என்பதைச் சங்கச் செய்யுள்களிலிருந்து அறிந்தோம். பிட்டங்கொற்றன் என்னும் பெயரை எடுத்துக் காட்டினோம். அதுபோலவே, அவன் மகனான கீரனும் கொற்றன் என்று இதில் கூறப்படுகிறான். ஆகவே, கீரன் கொற்றன் என்பது ஒரே ஆளைக் குறிக்கிறது.

பிடந்தை மகன் கீரன் கொற்றன் நள்ளியூரில் இருந்தான் என்பதும் அவன் புகழூர் மலைக்குகையில் கற்படுக்கைகளை முனிவர்களுக்காக அமைத்துக் கொடுத்தான் என்பதும் இந்தக் கல்வெட்டெழுத்துக்களினால் அறியப்படுகின்றன. நள்ளியூர் என்று எழுதப்படவேண்டிய சொல் நள்ளிவ்ஊர் என்று வகர ஒற்றுச் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை நள்ளியூர் என்று திருத்திப் படிக்க வேண்டும்.

* * *

புகழூரில் இன்னொரு சாசனம் மேலே சொன்ன சாசனத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இது, சாசன எழுத்து இலாகாவின் 1963-64ஆம் ஆண்டின் 296ஆம் எண்ணுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வெட்டெழுத்தை திரு.டி.வி. மகாலிங்கம் அவர்கள் தம்முடைய நூலில் ஆராயாமலும் குறிப்பிடாமலும் விட்டுவிட்டார். இதன் காரணம் தெரியவில்லை. ஆனால் திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இதைத் தம்முடைய கட்டுரையில் ஆராய்கிறார்.[9] இது இரண்டு வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது. முதல் வரியில் பதினைந்து எழுத்துகளும், இரண்டாம் வரியில் பதினொரு எழுத்துக்களும் உள்ளன (படம் காண்க).



இதை இவர் கீழ்க்கண்டவாறு படிக்கிறார்:

1. நல்லிஊர் ஆ பிடன் குறும்மகள்
2. கீரன் நோறி செயிபித பளி

இவ்வாறு படித்த பிறகு, நல்லியூர் பிடன் மக்களாகிய கீரனும் ஓரியும் செய்வித்த பள்ளி என்று விளக்கங் கூறுகிறார். கீரனும் ஓரியும் என்று இரண்டு மக்கள் இருந்தனர் என்று கூறிய இவர், இன்னொரு இடத்தில் கீரன் நோரி என்பவன் ஒரே மகன் என்று எழுதியுள்ளார்.[10] இதில் மூன்றாவது எழுத்தாகிய லி மாற்றி எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தக் கல்வெட்டெழுத்தை இவர் நேரில் பார்த்துக் கையால் எழுதியிருக்கிறதாகத் தோன்றுகிறது. பார்த்து எழுதியதில் இவர் எழுத்துக்களைத் தவறாக எழுதியிருக்கிறார் என்பது தெரிகின்றது. இந்த 296ஆம் எண்ணுள்ள சாசனம், 346ஆம் எண்ணுள்ள சாசனத்தோடு தொடர்புடையது என்பதை இவர் அறியவில்லை (296 of 1963-64, 346 of 1927-26).

இவர் காட்டியபடி முதல் வரியின் மூன்றாம் எழுத்து முறைதவறி எழுதப்பட்டிருக்கிறது. இவர் படிக்கிற நல்லி என்பது நள்ளி என்பதாகும். இந்த ல, ள வித்தியாசத்தை மேல் சாசனத்தில் விளக்கிக் கூறியுள்ளேன். முதல் வரியில் 6ஆவது எழுத்தை இவர் பிராமி ஆ என்று வாசித்திருக்கிறார். இது பிராமி ப் என்னும் எழுத்து. அடுத்து வரும் பிடன் என்பதுடன் இவ்வெழுத்தைச் சேர்த்தால் 'நள்ளி ஊர்ப்பிடன்' என்றாகிறது. பிடன் என்பது பிட்டன் ஆகும். (பழங்காலத்தில் ட எழுத்து ட்ட என்று

வாசிக்கப்பட்டது என்று தோன்றுகிறது. வட்டதளி என்பது வட தளி என்று எழுதப்பட்டது காண்க). மேல் சாசனத்தில் கூறப்படுகிற பிடந்தையும் இந்தப் பிடனும் (பிட்டன்) ஒருவரே என்பது தெளிவாகத் தெரிகிறது.

அடுத்து உள்ள 'குறும்மகள்' என்பதில் மகர ஒற்று மிகையாகக் காணப்படுகிறது. அது 'குறுமகள்' என்றிருக்க வேண்டும். இளம் பெண் என்னும் பொருளுடைய குறுமகள் என்னுஞ்சொல் சங்கச் செய்யுள்களில் அதிகமாகக் காணப் படுகிறது. அவற்றில் சிலவற்றைக் காட்டுவோம். 'நோவல் குறுமகள்' (*அகம்* 25:16), 'ஒள்ளிழைக் குறுமகள்' (*நற்.* 253:5), 'மேதையங் குறுமகள்' (*அகம்* 7:6), 'பொலந்தொடிக் குறுமகள்' (*அகம்* 219:9), 'வாணுதற் குறுமகள்' (*அகம்* 230:5), 'பெருந்தோட் குறுமகள்' (*நற்.* 221:8), 'ஆயிழை குறுமகள்' (*அகம்* 161:11), 'மாண்புடைக் குறுமகள்' (*நற்.* 352:11), 'மெல்லியற் குறுமகள்' (*நற்.* 93:8), 'வாழியோ குறுமகள்' (*நற்.* 75:4), 'மடமிகு குறுமகள்' (*நற்.* 319:8), 'எல்வளைக் குறுமகள்' (*நற்.* 167:10), 'அணியிற் குறுமகள்' (*நற்.* 184:8) முதலியன. குறும் மகள் என்பதை மகாதேவன் அவர்கள் குறும்மக்கள் என்று படிக்கிறார்.

இச்சாசனத்தில் குறும்மகன் என்று இருப்பதாக ஐ. மகாதேவன் எழுதுகிறார். குறும்மகன் என்பது பிழை என்றும் அது குறுமகன் என்று இருக்க வேண்டும் என்றும் எடுத்துக் காட்டுகிறார். குறுமகன் என்பதற்கு இளையமகன் என்றும் பொருள் கூறுகிறார்.[11] இது முற்றிலும் தவறு. குறு மகன் என்பதற்கு இளையமகன் என்பது பொருள் கிடையாது. அதற்குக் கீழ்மகன் என்பது பொருள். ஆனால், குறுமகள் என்றால் இளையமகள், இளம்பெண் என்பது பொருள். இப்பொருளில் இச்சொல் சங்க இலக்கியங்களில் பயின்று வந்திருப்பதை மேலே எடுத்துக் காட்டினோம். குறுமகன் என்பதற்கு இளையமகன் என்பது பொருள் அன்று; கீழ்மகன், இழிந்தவன் என்பதே பொருள் உண்டு. உதாரணங் காட்டுவோம்.

குறுமகன் (*சிலம்பு* 15 : 95), குறுமகனால் கொலையுண்ண (*சிலம்பு* 29. உரைப்பாட்டுமடை), கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்ப (*சிலம்பு* 29. காவற்பெண்டரற்று), உருகெழுமூதூர் ஊர்க் குறு மாக்கள் (*சிலம்பு* 30:109). பழைய அரும்பதவுரை யாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் குறுமகன் என்பதற்குக் கீழ்மகன் என்று உரை எழுதியிருப்பதைக் காண்க. இதன் பொருளை யறியாமல் ஐ. மகாதேவன், குறுமகள் என்பதன் ஆண்பாற் பெயர் குறுமகன் என்று கருதுகிறார். சில பெண்பாற் பெயர்களுக்கு நேரான ஆண்பாற் பெயர்கள் இல்லை என்பதும் அப்படி வழங்குகிற ஆண்பாற் சொற்களுக்குத் தாழ்ந்த இழிவான

பொருள் உள்ளன என்றும் அறிஞர்கள் அறிவார்கள். உதாரணமாக, இல்லாள்—இல்லான் என்னுஞ் சொற்களை எடுத்துக்கொள்வோம். இல்லாள் என்றால் வீட்டரசி, மனைவி, இல்லற வாழ்க்கையை நடத்துகிறவள் என்பது பொருள். இல்லாள் என்னுஞ் சொல்லுக்கு ஆண்பாற் சொல் கிடையாது. இல்லான் என்னுஞ் சொல் புருஷன், கணவன், இல்லறத்தை நடத்துகிறவன் என்னும் பொருள் உடையதன்று. மாறாக வறுமையாளன், தரித்திரமுடையவன் என்பது பொருள். "இல்லானை இல்லாளும் வேண்டாள்" (*நல்வழி* 34) என்பது காண்க. இது போலவே, குறுமகள் என்பதற்குப் பொருள் வேறு, குறுமகன் என்பதற்குப் பொருள் வேறு. ஐ. மகாதேவன், இச்சாசனத்தில் வருகிற குறுமகள் என்பதைக் குறுமகன் என்று தவறாகப் படித்து அதற்கு எக்காலத்திலும் இல்லாத இளைய மகன் என்று பொருள் கூறியிருப்பது பொருந்தாது. இச்சாசனத்தில் உள்ள சொல் குறும்மகள் (குறுமகள்) என்பதே ஆகும்.

(முந்திய சாசனத்தில் கீரன் கொற்றன் கூறப்பட்டது போல இந்தச் சாசனத்தில் கீரன் கொற்றி கூறப்படுகிறாள். முன் சாசனத்தில் கூறப்பட்ட கீரன் கொற்றன் பிடந்தையின் மகனாக இருப்பதுபோல, இச்சாசனத்தில் கூறப்படுகிற கீரன் கொற்றியும் பிடன் (பிடந்தை) மகள் என்று கூறப்படுகிறாள். எனவே, கீரன் கொற்றனும் கீரன் கொற்றியும் தமயன் தங்கையர் என்றும் இவர்கள் பிடன் (பிடந்தையின்) மக்கள் என்றும் தெரிகின்றனர். பிடனாகிய பிட்டன், 'கொற்றன்' என்று கூறப்பட்டது போலவே இவர்களும் கீரன் கொற்றன், கீரன் கொற்றி என்று கூறப்படுவதும் இதனை வலியுறுத்துகிறது. இந்தச் சான்று களினாலே, புகழூர்க் குகையில் தமயனும் தங்கையுமான இவர்கள் இருவரும் சேர்ந்து முனிவர்களுக்கு இவ்விடத்தைத் தானஞ் செய்தார்களென்பது தெரிகின்றது. மேல் இரண்டு பிராமி எழுத்துகளைக் கொண்டு இக்குகையில் கற்படுக்கைகளைத் தானம் செய்தவர் பரம்பரையை இவ்வாறு அமைக்கலாம்:

பிடந்தை(பிடன், பிட்டன்)

கீரன் கொற்றன்	கீரங்கொற்றி
(மகன்)	(மகள்)
(346 of 1927-28)	(296 of 1963-64)

குறிப்பு: பக்கம் 223, 228இல்* பிராமி எழுத்துகளின் படத்தில் முதல் எழுத்துக்கள் ∸ என்று எழுதப்பட்டுள்ளது தவறு; அந்த எழுத்துகள் ⊥ என்று எழுதப்பட வேண்டும். ஓவியரின் தவறு இது.

புகழூருக்கு அடுத்த வேலாயுதம்பாளையம் என்னுங் கிராமத்து ஆறுநாட்டார் மலைக் குகையில் ஒரு பிராமி எழுத்து இருக்கிறது. இது, சாசன எழுத்து (எபிகிராபி) இலாகாவின் சாசனத் தொகுப்பில் 1927-28ஆம் ஆண்டு 344ஆம் எண் உள்ளது (No.344 of 1927-28). இந்த எழுத்தின் படம் காண்க.



இந்தப் பிராமி எழுத்துகள் பெரும்பாலும் தெளிவாகக் காணப்படுகிற போதிலும் சில எழுத்துக்கள் புரைசல்களுடன் சேர்ந்து காணப்படுகின்றன.

இந்த எழுத்தின் வாசகத்தைத் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள்,

1. கொற்றந்தை ளவன்
2. மூன்று

என்று படித்து, கொற்றந்தை (இ)ளவன்...மூன்று...(ஒரு முற்றுப் பெறாத சாசனம்) என்று விளக்கங் கூறியுள்ளார்.[12] முதல் வரியில் நான்காவது எழுத்து புரைசல்களுடன் சேர்ந்து காணப்படுகிறது. அதை இவர் ந் (தந்தகரம்) என்று வாசிக்கிறார். அதற்கு அடுத்துள்ள எழுத்தும் (ஐந்தாவது எழுத்து) புரைசல்களுடன் காணப்படுகிறது. அதை இவர் தை என்று வாசிக்கிறார். முதல் வரியில் கடைசி இரண்டு எழுத்துக்களை இவர் வன் என்று வாசிக்கிறார். இரண்டாவது வரியில் முதல் எழுத்து புரைசல்களுடன் சேர்ந்திருக்கிறது. இதை இவர் மு என்று வாசிக்கிறார். இவ்வாறு இவர் வாசித்திருப்பது தவறு என்று தோன்றுகிறது. முதல் வரியின் கடைசி இரண்டு எழுத்துகள் இவர் படிப்பதுபோல வன் அல்ல. அவை எயி என்னும் எழுத்துகள். இரண்டாவது வரியில் முதல் எழுத்து புரைசலுடன் சேர்ந்து மு போலக் காணப்பட்டாலும் அது ம என்னும் எழுத்தே.

திரு. டி.வி. மகாலிங்கம் அவர்கள் இந்த எழுத்துக்களைப் படித்து ஏறக்குறைய சரியான முடிவுக்கு வந்திருக்கிறார். ஆனால்,

---

* இந்தப் பதிப்பில் பக்க எண்கள் 367, 370 பார்க்க. (ப-ர்)

இதன் கருத்தைத் தெளிவாகவும் நன்றாகவும் விளக்காமல் விட்டுவிட்டார்.[13] இந்தச் சாசனத்தின் முதல் வரியில் ஐந்தாவது எழுத்து புரைசல்களுடன் சேர்ந்து இன்ன எழுத்து என்று தெளிவாகத் தெரியவில்லை. ஞை என்றும் தை என்றும் சொ என்றும் படிக்கும்படி இது காணப்படுகிறது. ஐராவதம் மகாதேவன் அவர்கள் இதைத் தை என்று வாசித்திருப்பதை மேலே சுட்டிக்காட்டினோம். டிவி. மகாலிங்கம் அவர்கள் இதை எ என்று வாசித்திருப்பது சரிதான். இதை எ என்றும் ஏ என்றும் வாசிக்கலாம். கடைசி எழுத்தை மகாதேவன் அவர்கள் ன் என்று வாசித்துள்ளார். மகாலிங்கம் அவர்கள் யி என்று வாசிக்கிறார். இது ய போலவும் தோன்றுகிறது. இந்த யகரத்தின் கீழே ஒரு கோடு ர கரத்தைக் குறிப்பது போன்று காணப்படுகிறது. இதை மகாலிங்கம் கவனித்திருக்கிறார். ஆனால், இது கல்லில் இயற்கையாக உள்ள புரைசல் என்று தோன்றுகிறது. இரண்டாவது வரியில் உள்ள மூன்று எழுத்துகளை மகாலிங்கம் அவர்கள் சரியாகவே மன்று என்று வாசித்துள்ளார்.

1. கொற்றக் கொள எயி
2. மன்று

என்று வாசித்துக் கொற்ற என்பதற்கு 'அரசனுக்குரிய' அல்லது 'வீரமுடைய' என்று விளக்கங்கூறி, மன்று என்பது மண்டபத்தைக் குறிக்கிறது என்று கூறி முடிக்கிறார். ஆனால், இவர் படித்த கொள என்பதற்கு இவர் விளக்கங்கூறவில்லை. அதைப் பற்றி ஒன்றுமே கூறாமல் விட்டுவிட்டார். எயி என்று இருப்பது எயினரைக் குறிக்கிறது என்று கூறுகிறார். இவர் படித்துள்ள வாசகமும் தெளிவு இல்லாமல் குழப்பமாகவே இருக்கிறது.

இந்த எழுத்துக்களை நாம் படிப்போம்.

முதல் வரியில் முதல் நான்கு எழுத்துகளில் ஐயம் ஒன்றும் இல்லை. அவை கொற்றக் என்னும் எழுத்துகள். ஐந்தாவது எழுத்து அதிகப் புரைசல்களுடன் சேர்ந்து காணப்படுகிறது. அதைத் தை என்றும் கொ என்றும் படித்தார்கள். அதைக் க என்று படிப்பதே பொருத்தமும் சரியும் ஆகும். ககரத்தை யடுத்துக் கல்லில் புரைசல் இருக்கிறது. அதனுடன் அடுத்த ள கரத்தைச் சேர்த்துக் கள என்று வாசிக்கலாம். இதற்கு அடுத்த எழுத்துகள் எயி என்பவை. இதன் பக்கத்தில் ஒரு எழுத்து இருக்க வேண்டும். அது இந்தப் படத்தில் காணப்படவில்லை. அது ல் ஆக இருக்கலாம். அதைச் சேர்த்துப் படித்தால் கடைசி மூன்று எழுத்துகள் எயில் என்றாகிறது. இரண்டாவது வரியில் உள்ள மூன்று எழுத்துகளின் வாசகம் மன்று என்பது. (மகரத்தின் கீழேயுள்ள புரைசல் மு போலத் தோன்றுகிறது.) எனவே, இந்த எழுத்துகளை,

1. கொற்றக்களஎயி(ல்)
2. மன்று

என்று வாசிக்கலாம்.

கொற்றக் களத்து (கொற்றக்களம்—வெற்றிக்களம்) எயிலைச் சேர்ந்த மன்று என்பது இந்த வாசகத்தின் கருத்து. கொற்றக்களம் என்பது ஒரு இடத்தின் பெயர். கொற்றக்களம் என்னும் ஊரில் இருந்த எயிலுக்கு (கோட்டைக்கு) உரியது இந்த மன்று (குகை). அதாவது, கொற்றக்களத்து எயிலைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்தை முனிவர்களுக்குத் தானமாகக் கொடுத்தார்கள் என்பது இதன் திரண்ட பொருளாகும்.

* * *

புகழூரில் உள்ள இன்னொரு கல்வெட்டெழுத்தைப் பார்ப்போம். இதுவும் மேற்சொன்ன இடத்திலேயே இருக்கிறது. இது சாசன எழுத்து இலாகாவில் 1927-28ஆம் ஆண்டில் 347ஆம் எண்ணுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த எழுத்து எழுதியுள்ள பாறையில் புரைசலும் புள்ளியும் கலந்திருப்பதனால் சில எழுத்துக்கள் தெளிவாகத் தெரியவில்லை (படம் காண்க).



இந்த எழுத்துகளை ஐ. மகாதேவன் அவர்கள்,

...ணாகன் மகன்(இ)ளங்கீரன்

என்று வாசிக்கிறார்.[14]

இந்தப் பிராமி எழுத்தின் இன்னொரு படம் இவ்வாறு காணப்படுகிறது.



திரு. டி.வி. மகாலிங்கம் அவர்கள் இதை இவ்வாறு வாசித்திருக்கிறார்.[15] 'ணாகன் மகன் பெருங்கீரன்'. இவர் இவ்வாறு படிப்பது சரியான வாசகமே.

நாகன் என்று இருக்கவேண்டியது ணாகன் என்று டண்ணகரத்தில் தொடங்கப்பட்டிருப்பது பிராகிருத பாஷையின் சாயல் என்று இவர் கூறுகிறார். எழுத்தைப் பொறித்த கற்றச்சனுடைய பிழை என்றும் கருதலாம். பிராமி எழுத்துக்களில் ந கரத்துக்கும் ண கரத்துக்கும் மிகச் சிறு வேறுபாடுதான் உண்டு. இந்த வேறுபாட்டைச் சிற்பி உணராதபடியால் இத்தவறு ஏற்பட்டிருக்கிறது.

நாகன், கீரன் என்னும் பெயர்கள் சங்க காலத்தில் மனிதருக்குப் பெயராக வழங்கி வந்தன. இப்பெயர்கள் சில அடைமொழிகளுடன் சேர்த்து வழங்கி வந்தன. இளநாகன், இளிசந்தநாகன், வெண்ணாகன், நன்னாகன், மூப்பேர்நாகன் முதலிய பெயர்களைக் காண்க. அல்லங்கீரன், இளங்கீரன், புல்லங்கீரன், கழார்க்கீரன், கீரங்கீரன், குறுங்கீரன், நக்கீரன், மோசிகீரன், மூலங்கீரன் முதலிய பெயர்களைக் காண்க. இந்தக் கல்வெட்டெழுத்தில் கூறப்பட்டவன் பெருங்கீரன் என்பவன். இவன் நாகனுடைய மகன். நாகனுடைய மகன் பெருங்கீரன் இந்தக் குகையில் கற்படுக்கையை அமைத்ததாக இந்தச் சாசனம் கூறுகிறது.

கீழ்க்கண்டவை புகழூர் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளில் சரித்திர ஆராய்ச்சிக்கு மிக முக்கியமானவை. 1927ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இவை, எபிகிராபி இலாகாவின் 1927-28 ஆம் ஆண்டு அறிக்கையில் கூறப்படுகின்றன.[16] ஒரே கருத்துள்ள இந்தச் சாசனம் இரண்டு இடங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு சாசனங்களாகக் கருதப்பட்டாலும் உண்மையில் இவை இரண்டும் ஒன்றே. இரண்டின் வாசகமும் ஒன்றே. இரண்டாவது சாசனத்தில் சில எழுத்துகள் மறைந்துவிட்டன. ஆனால், இரண்டு சாசன எழுத்துகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, விடுபட்டுள்ள எழுத்துகளைச் சேர்த்துப் படித்துப் பொருள் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இந்தச் சாசன எழுத்துக்கள் இவை:



இவற்றின் வாசகம் இது:

தி அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய
கோ ஆதன் சேல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகனிளங்
கடுங்கோ ளங்கோ ஆக அறுத்த கல்

இரண்டாவது பிராமி எழுத்தின் படம் சிதைந்திருப்பதனால் அந்தப் படம் இங்குக் கொடுக்கப்படவில்லை.

இந்த இரண்டு சாசனக் கல்வெட்டுகளும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. அமணன் யாற்றூர் செங்காயபன் உறையகோ ஆதன் சே(ர)லிரும் பொறை மகன் பெருங்கடுங்கோன் மகனிளங்கடுங்கோ இளங்கோ ஆக இருந்தபோது அறுத்த கல் என்பது இதன் பொருள்.

இடையில் எழுத்து மறைந்துபோன இரண்டாவது சாசனத்திலும் இதே செய்தி கூறப்படுகிறது. இரண்டு சாசனங்களின் கடைசிச் சொற்களில் மட்டும் சிறு வேறுபாடு காணப்படுகிறது. அது, முதல் சாசனத்தில் அறுத்த கல் என்றும், இரண்டாவது சாசனத்தில் அறுபித (அறுபித்த) கல் என்றும் காணப்படுகின்றன.

இவ்விரண்டிலும் மூன்று அரசர்களின் பெயர்கள் கூறப் படுகின்றன. கோ ஆதன் சே(ர)லிரும்பொறையும் அவன் மகனான பெருங்கடுங்கோனும் அவன் மகனான இளங்கடுங்கோனும் கூறப்படுகின்றனர். பேரனான இளங்கடுங்கோன் இளவரசனாக இருந்தபோது அமண முனிவராகிய ஆற்றூர் செங்காயபன் என்பவர் (மலைக்குகையில்) வசிப்பதற்கு அறுத்துக் கொடுத்த கல் (மலைக்குகை) என்று இச்சாசனங்கள் கூறுகின்றன.

சமண முனிவர்கள் மலைக்குகைகளில் வசித்துக் கற்பாறை களில் படுத்து உறங்குவது அக்காலத்து வழக்கம் என்று அறிவோம். அரச பரம்பரையைச் சேர்ந்த இளங்கடுங்கோ மலைக்குகையின் கற்றரையைச் செம்மையாக அமைத்து முனிவருக்குத் தானமாகக் கொடுத்தான் என்பது இதன் கருத்து.

இந்தச் சாசன எழுத்துக்களை ஐ. மகாதேவன் ஆராய்ந்திருக்கிறார்.[17] டி.வி.மகாலிங்கம் ஆராய்ந்திருக்கிறார்.[18] ஐராவதம் மகாதேவன் அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.[19]

முதல் வரியில் முதல் எழுத்தாக இருப்பது தி. இது தா என்று வாசிக்கும்படியும் இருக்கிறது. ஐ. மகாதேவன் இதை தா என்று படித்து இதற்கு முன்பு இ என்னும் எழுத்தை இட்டு இதா என்று வாசிக்கிறார். இதா என்று வாசித்து 'இதோ' என்று பொருள் கூறுகிறார். ஆனால், இங்குக் காணப்படுவது தி என்னும் ஒரு எழுத்துதான். இதன் பொருள் திரு என்பது. இந்தச் சாசனம் எழுதப்பட்ட சமகாலத்தில் வெளியிடப்பட்ட சாதவாகன அரசர்களின் நாணயங்களில் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றில் முதல் எழுத்து தி என்றும் த்ரி என்றும் எழுதப்பட்டுள்ளன. இது திரு (ஸ்ரீ) என்பதைக் குறிக்கிறது என்பது இங்குக் கருதத்தக்கது. ஆகவே, இச்சாசனத்தின் முதலில் உள்ள தி என்பது திரு என்னும் சொல்லாக இருக்கலாம். இதைவிட வேறு பொருள்

கொள்வதற்கு இல்லை. 'இதோ' என்று கூறுவதாக மகாதேவன் கருதுவது பொருத்தமாக இல்லை. அமணன் என்று இருக்க வேண்டிய சொல் அமண்ணன் என்று ணகர ஒற்று இடப்பட்டிருக்கிறது. இது கற்றச்சனின் தவறாக அல்லது எழுதியவரின் தவறாக இருக்கலாம். யாற்றூர், செங்காயபன் என்னும் சொற்களில் யாதொரு கருத்து வேறுபாடும் இல்லை.

முதல் வரியின் கடைசியில் உறைய என்னுஞ் சொல் இருக்கிறது. இதை மகாதேவன் உறைய் என்று வாசித்துள்ளார். இது தவறு என்று தோன்றுகிறது. உறைய என்பதே இதன் வாசகம். "ஆற்றூர் செங்காயபன் உறைய.... அறுத்த கல்" என்று வாக்கியம் செம்மையாக முடிகிறது காண்க. இதற்கு மாறாக வாசிப்பது தவறு என்று தோன்றுகிறது.

இனி இந்தச் சாசனங்களில் வருகிற அரசர்களின் பெயர்களைப் பார்ப்போம். முதல் சாசனத்தில் கோ ஆதன் சேரல்லிரும்பொறை என்று பெயர் காணப்படுகிறது. இரண்டாவது சாசனத்தில் இது (சே)ல்லிரும்புறை என்று எழுதப்பட்டிருக்கிறது. இரும்பொறை என்பதே சரியான வாசகம். சேரலிரும்பொறை என்னும் பெயரில் இரண்டாவது எழுத்தாகிய ரகரம் கல்வெட்டில் விடப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியங்களில் சேரலிரும்பொறை என்னும் பெயரைக் காண்கிறோம். குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை, அஞ்துவஞ்சேரல் இரும்பொறை, கோப்பெருஞ்சேர லிரும்பொறை, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் பெயர்களைக் காண்க. இதனால், சேரலிரும்பொறை என்னும் பெயர் இந்தச் சாசனங்களில் சேல்லிரும்பொறை என்று தவறாக எழுதப்பட்டிருப்பது நன்கு தெரிகின்றது.

ஆனால், ஐராவதம் மகாதேவன் செல்லிரும்பொறை என்று படிக்கிறார். இதற்குச் சான்றாக இவர் காட்டுகிற சான்றுகளாவன: செல்லிக்கோமான் (*அகம்* 216), செல்வக் கோமான் (*பதிற்று*. 67), செல்வக்கடுங்கோ (*பதிற்று*. பதிகம் 8), சேரமான் இக்கற் பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன் (*புறம்* 387). செல்லிக்கோமான், செல்வக்கோமான், செல்வக்கடுங்கோ என்னும் பெயர்களில் செல் இருக்கிறபடியால், இந்தக் கல்வெட்டில் வருகிற பெயர் செல்லிரும்பொறை என்று இவர் எழுதுகிறார். இது பற்றி வாதிக்கவேண்டுவதில்லை. இவர் கூறுவதில் உள்ள செல், செல்வம் என்னும் சொல் இச்சாசனத்தில் இடம் பெறவில்லை. சேரல் என்பதே தவறாக சேலிரும்பொறை என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் சாசனங்களில் கூறப்படுகிற அரசர்கள் யார் என்பது பற்றிப் பார்ப்போம். திரு. ஐ. மகாதேவன், இச்சாசனங்களில் கூறப்படுகிற அரசர்களைப் *பதிற்றுப்பத்து* 7, 8, 9ஆம் பத்துக் களின் தலைவர்களுடன் பொருத்திக் கூறுகிறார். 'கோ ஆதன் செல்லிரும்பொறை' என்று கல்வெட்டில் கூறப்படுகிறவன் 7ஆம் பத்தின் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழியாதன் என்றும், கடுங்கோன் என்று கல்வெட்டில் கூறப்படுகிறவன் 8ஆம் பத்தின் தலைவனாகிய தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்றும், இளங்கடுங்கோ என்று கல்வெட்டில் கூறப்படுகிறவன் 9ஆம் பத்தின் தலைவனான இளஞ்சேரலிரும்பொறை என்றும் பொருத்திக் கூறுகிறார்.

கல்வெட்டில் கூறப்படுகிற முதல் அரசன் பெயர் கோ ஆதன் சே(ர)ல்லிரும் பொறை என்பது. ஐ. மகாதேவன் 'செல்லிரும் பொறை' என்று வாசிப்பது தவறு. 7ஆம் பத்தின் தலைவன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்று கூறப்படுகிறான். இதில் வருகிற கடுங்கோ என்னும் பெயர் இந்த கல்வெட்டுகளில் கூறப் படவில்லை. கல்வெட்டுகள் கூறுகிற கோ ஆதன் சே(ர)லிரும் பொறைக்குக் கடுங்கோ என்னும் பெயர் இருந்திருந்தால் அப்பெயரைச் சாசனங்கள் கூறியிருக்குமன்றோ? மற்ற இரண்டு அரசர்களைப் பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோன் என்றும் கல்வெட்டுகள் சிறப்பாகக் கூறுகின்றன. முதல் அரசனுக்கு கடுங்கோ என்னும் பெயரைக் கல்வெட்டுக்கள் கூறாதபடியால், சேரலிரும்பொறையும் செல்வக் கடுங்கோவாழியாதனும் வெவ்வேறு அரசர் என்பதும் இருவருக்கும் யாதொரு பொருத்த மும் இல்லை என்பதும் வெளிப்படை. திரு. மகாதேவன் செல் என்னும் பிழையான பொருளற்ற சொல்லை வைத்துக்கொண்டு செல்வக் கடுங்கோவுடன் பொருத்துவது ஏற்கத்தக்கதன்று. 'செல்லிரும் பொறை' என்று எந்த அரசனுக்கும் பெயர் இருந்ததில்லை என்பதைச் சங்க இலக்கியம் பயின்றோர் நன்கறிவார்கள்.

கல்வெட்டுகள் இரண்டாவது அரசனாகக் கூறுகிற பெருங்கடுங்கோனைப் *பதிற்றுப்பத்தின்* 8ஆம் பத்துத் தலைவனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையுடன் திரு. மகாதேவன் பொருத்திக் கூறுவதும் தவறு. இவ்விரண்டு அரசர்களுக்கும் யாதொரு பொருத்தமும் இல்லை. ஏனென்றால், 8ஆம் பத்தில் பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடுகிற அரிசில்கிழார் அவனுடைய அமைச்சனாக இருந்தவர். மேலும், அவன் செய்த தகடூர்ப் போரில், போர்க்களத்தில் உடன் இருந்தவர். அவர் இவ்வரசனைப் பாடிய செய்யுட்களில் இவனைக் கடுங்கோன் என்று ஒரிடத்திலாவது கூறவில்லை.

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்குக் கடுங்கோன் என்று பெயர் இருந்திருக்குமானால் அந்தச் சிறப்பான பெயரை அவர் கூறாமல் விட்டிருப்பாரா? ஆகவே சாசனங்கள் கூறுகிற பெருங்கடுங்கோன் *பதிற்றுப்பத்து* 8ஆம் பத்துத் தலைவனாகிய பெருஞ்சேரலிரும்பொறை யல்லன் என்பது வெளிப்படை. ஐ. மகாதேவன் இருவரையும் ஒருவராக இணைத்துப் பிணைப்பது ஏற்கத்தக்கதன்று.

கல்வெட்டுகள் கூறுகிற இளங்கடுங்கோவைப் *பதிற்றுப் பத்து* 9ஆம் பத்தின் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறையுடன் திரு. மகாதேவன் பொருத்திக் கூறுவதும் தவறாக இருக்கிறது. இளஞ்சேரலிரும்பொறை மீது 9ஆம் பத்துப் பாடின பெருங்குன்றூர்கிழார் அச்செய்யுட்கள் ஒன்றிலேனும் அவனைக் கடுங்கோ அல்லது இளங்கடுங்கோ என்று கூறவே இல்லை. இந்தச் சிறப்புப் பெயர் அவனுக்கு இருந்திருக்குமானால் இதனை அவர் கூறாமல் விட்டிருப்பாரா? இப்பெயர் இவனுக்கு இல்லாதபடியால் அவர் இப்பெயரைக் கூறவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

மேலும், சாசனங்கள் பெருங்கடுங்கோவின் மகன் இளங்கடுங்கோ என்று கூறுகின்றன. திரு. மகாதேவன், பெருங்கடுங்கோவைத் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்றும், இளங்கடுங்கோவை அவன் மகனான இளஞ்சேரல் இரும்பொறை என்றும் கூறுகிறார். இதிலும் இவர் தவறு படுகிறார். தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் மகன் இளஞ்சேரலிரும்பொறை என்று இவர் கூறுவது தவறு. பெருஞ்சேரலிரும்பொறையின் தம்பியாகிய குட்டுவன் இரும்பொறையின் மகன் இளஞ்சேரலிரும்பொறை என்று *பதிற்றுப்பத்து* கூறுகிறது.

செல்வக்கடுங்கோ வாழியாதன்
(7ஆம் பத்து)

பெருஞ்சேரலிரும்பொறை (8ஆம் பத்து)

குட்டுவன்இரும்பொறை
→ இளஞ்சேரலிரும்பொறை (9ஆம் பத்து)

எனவே, கல்வெட்டுகளில் கூறப்படுகிற அரசர்களைப் *பதிற்றுப்பத்து* 7, 8, 9ஆம் பத்து அரசர்களுடன் பொருத்துவது பொருத்தமாக இல்லை; தவறாகவே இருக்கிறது. (பாலை பாடிய) பெருங்கடுங்கோ, (மருதம் பாடிய) இளங்கடுங்கோ என்னும்

இரண்டு சேர அரசர்களைச் சங்க இலக்கியங்கள் கூறுவதை திரு. மகாதேவன் அறியவில்லை. இவ்விரு பெயர்களும் சாசனப் பெயர்களுடன் பொருந்துவது வெளிப்படை. இப்பெயர்களுடன் அவர் பொருத்திக் கூறாமல் அல்லது மறுத்துக் கூறாமல் விட்டது இந்தப் பெயர்களை அவர் அறியாததுதான் காரணம். சங்க காலத்துக் கல்வெட்டுக்களை அறிவதற்குச் சங்க காலத்து இலக்கியங்கள் மிகவும் பயன்படுகின்றன.

பாலை பாடிய பெருங்கடுங்கோவும் மருதம் பாடிய இளங் கடுங்கோவும் இக்கல்வெட்டுகளில் கூறப்படுகிற பெருங்கடுங் கோவும் இளங்கடுங்கோவுமாக இருக்கக்கூடுமோ? கல்வெட்டு களில் கூறப்படுகிற இவர்கள், தந்தையும் மகனும் என்று கூறப்படுகின்றனர். அன்றியும், 'பாலை பாடிய', 'மருதம் பாடிய' என்னும் அடைமொழிகள் சாசனங்களில் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்கள் கூறுகிற இவர்கள் தந்தையும் மகனுமா என்று தெரியவில்லை. பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ இருவரையும் சாசனங்கள் கூறுகிற பெருங் கடுங்கோ இளங்கடுங்கோவுடன் பொருத்திக் கூறலாம் என்று தோன்றுகிறது. ஆனால், உறுதியாகத் துணிந்து கூற இயலவில்லை.

எனவே, புகழூர்ச் சாசனங்கள் குறிப்பிடுகிற கோ ஆதன் சேரலிரும்பொறை, அவன் மகன் பெருங்கடுங்கோன், அவன் மகன் இளங்கடுங்கோன் ஆகிய மூவரையும் *பதிற்றுப்பத்து* 7, 8, 9ஆம் பத்துகளின் அரசர்களாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, இளஞ்சேரலிரும் பொறை என்பவர்களுடன் பொருத்துவதற்குப் போதிய சான்று இல்லை. அது போலவே, சாசனங்கள் கூறுகிற பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோன் என்பவரைப் பாலை பாடிய பெருங் கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோவுடன் பொருத்து வதற்கும் சான்று இல்லை. வேறு சான்றுகள் கிடைக்கிற வரையில், இவர்களைப் பிணைத்துப் பொருத்திச் சரித்திரத்தில் குழப்பம் உண்டாக்காமலிருப்பதே இப்போதைக்குச் சரி என்று தோன்றுகிறது.

இந்தச் சாசனங்களில் காணப்படுகிற அரசர்கள் கொங்கு நாட்டை யரசாண்ட இரும்பொறையரசர் மரபைச் சேர்ந்தவர் என்பதும் இவர்களும் கொங்கு நாட்டை யரசாண்டவர்கள் என்பதும் திட்டமாகத் தெரிகின்றன. ஆனால், இவர்களின் வரலாறு தெரியவில்லை.

கொங்கு நாட்டு மலைகளில், இன்னும் சில பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் இருக்கும் என்று தோன்றுகிறது. அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். முக்கியமாகக் கொங்கு நாட்டவர் இதுபற்றி முயற்சி செய்வார்களாக.

குறிப்புகள்

1 1961ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 தேதி ஞாயிற்றுக் கிழமை சுதேசமித்திரன், (உள்ளூர்) சென்னைப் பதிப்பு.
2 *Annual Report on Indian Epigraphy* for 1961-62, p.10.
3 'Corpus of Tamil Brahmi Inscriptions' by Iravatham Mahadevan, *Seminar on Inscriptions*, 1966, p. 67.
4 *Early South Indian Palaeography* by T.V. Mahalingam, 1967, pp. 290-298.
5 *Early South Indian Palaeography,* 1967, p. 281-82.
6 *Seminar on Inscriptions*, 1966, No. 66, 67.
7 *Early South Indian Palaeography*, 1967, Page, 283-84.
8 *Seminar on Inscriptions,* 1966. 'Historical Tamil Inscriptions', Iravatham Mahadevan. Paper read at the Tamil Conference Seminar held at Kula Lumpur, 1966, No. 58, p. 66.
9 *Seminar on Inscriptions,* 1966. 'Historical Tamil-Brahmi Inscriptions,' I. Mahadevan. Paper read at the Tamil Conference Seminar held at Kula Lumpur. 1966, No.59, Page 66.
10 'Historical Tamil Brahmi Inscriptions', Kula Lumpur, 1966.
11 Historical Tamil Brahmi Inscriptions.
12 'Corpus of the Tamil-Brahmi Inscriptions', *Seminar on Inscriptions,* 1966, No. 65, page 67.
13 *Early South Indian Palaeography,* 1967, pp. 282-83.
14 'Corpus of the Tamil-Brahmi Inscriptions', *Seminar on Inscriptions,* 1966, No. 67, p. 67.
15 *Early South Indian Palaegraphy*, 1967, p. 284.
16 *Annual Report on S.I. Epigraphy,* 1977-1978, Pt.II, Para 1.
17 Corpus of the Tamil Brahmi Inscriptions.
18 *Early South Indian Palaeography*, p. 279-80.
19 'Historical Tamil-Brahmi Inscriptions,' I. Mahadevan, Paper read at the Tamil Conference Seminar held at Kula Lumpur, 1966.

BIBLIOGRAPHY

1. *The Silappadikaram*, English Translation by V.R. Ramachandra Dikshitar, 1939.
2. *Mysore and Coorg from Inscriptions*, Lewis. Rice, 1909.
3. *Indian Culture.*
4. Roman Trade with Deccan, Dr. B.A., Salitore, *Proceedings of the Deccan History Conference*, Hydrabad Session, 1945.
5. *Epigraphia Carnatica.*
6. *Ancient Karnataka: History of Tuluva*, Baskar Anand Saletore, 1936.
7. *Ancient India and South Indian History and Culture*, Dr. S. Krishnaswami Aiyengar.
8. *Cera Kings of the Sangam Period*, K.G. Sesha Aiyer, 1937.
9. *A Comprehensive History of India,* Vol.II, Edited by K.A. Nilakanta Sastri, 1957.
10. *The Chronology of Early Tamils*, K.N. Sivaraja Pillai, 1932.
11. *The Colas*, Vol I, K.A. Nilakanta Sastri.
12. *The Secret Chamber*, V.T. Indo-Chudan, 1969.
13. *The History of the Tamils*, P.T. Srinivasa Iyengar, 1929.
14. *Kanchipuram in Early South Indian History*, T.V. Mahalingam, 1969.
15. 'Historical Tamil Brahmi Inscriptions,' Iravatham Mahadevan, 1966.
16. *Early South Indian Palaeography*, T.V. Mahalingam, 1967.
17. *Mahavamso*, English Translation, W. Geiger, 1912.
18. *Dipavamso*, Edited and Translated by H. Oldenberg, 1879.
19. *South Indian Epigraphy, Annual Report on*, Madras.
20. *Indian Antiquary.*
21. *The Journal of the Numismatic Society of India.*
22. *Journal of Bombay Branch of Royal Asiatic Society.*
23. *Roman History from Coins*, Michael Grant, 1968.
24. *The Commerce Between Roman Empire and India*, Warmington, 1928.
25. 'Roman Coins found in India', R. Sewell, pp. 591-637, *I.R.A.S.*, 1904.
26. 'Corpus of Tamil Brahmi Inscriptions', Iravatham Mahadevan, *Seminar on Inscriptions*, 1966.
27. *Salem Manual.*
28. *Salem Gazeteer.*
29. *Coimbatore Manual.*
30. *Coimbatore Gazeteer.*

தமிழ் நூல்கள்

1. *அகநானூறு (அகம்)*
2. *புறநானூறு (புறம்).*
3. *நற்றிணை (நற்)*
4. *குறுந்தொகை (குறுந்)*
5. *ஐங்குறுநூறு (ஐங்)*
6. *பதிற்றுப்பத்து (பதிற்று)*
7. *சிலப்பதிகாரம் (சிலம்பு)*
8. *முதல் திருவந்தாதி (நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்),* பொய்கையாழ்வார்
9. *களவழிநாற்பது,* பொய்கையார்
10. *சேரன் செங்குட்டுவன்,* மயிலை சீனி. வேங்கடசாமி
11. *சேர மன்னர் வரலாறு,* ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
12. *சேரன் செங்குட்டுவன்,* மு. இராகவையங்கார்
13. *சேரவேந்தர் செய்யுட்கோவை,* மு. இராகவையங்கார்
14. *சேரன் வஞ்சி,* டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்
15. *கவிராஜ மார்க்கம்* (கன்னட மொழிச் செய்யுளிலக்கணம்), நிருபதுங்கவர்மன்
16. *கேரளம் ஐந்தும் ஆறும் நூற்றாண்டுகளில்* , எளங்குலம் குஞ்சன் பிள்ளை (மலையாளம்)
17. *புறத்திரட்டு,* வையாபுரிப்பிள்ளை பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம்
18. *துளு நாட்டு வரலாறு,* மயிலை சீனி. வேங்கடசாமி
19. *கொங்கு மண்டல சதகம்,* கார்மேகக் கோனார்
20. *கொங்கு நாடு,* புலவர் குழந்தை, 1968
21. *சேரர் வரலாறு,* துடிசைகிழார்
22. *கொங்குநாடு,* கி. அ. முத்துசாமிக்கோனார்
23. *தேவாரம்,* அப்பர் - சம்பந்தர்
24. *பெரிய திருமொழி (நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்),* திருமங்கையாழ்வார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகுதியாகப் பார்க்கப்படாத
அல்லது புறக்கணிக்கப்பட்ட பகுதிகள் குறித்த
ஆய்வுகளில் மயிலையார் தனி ஈடுபாடு
கொண்டிருந்தார் என்பதை இம்மூன்று நூல்களும்
உறுதிப்படுத்துகின்றன.

மக்கள் வெளியீடு